தென்னிந்திய திருச்சபை

திருநெல்வேலி திருமண்டலம்

அருளுரைகள்

2007

தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், வல்லமையும் உள்ளதாய்..... இருக்கிறது.

எபிரேயர் 4:1

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

தென் இந்தியத் திருச்சபை
திருநெல்வேலித் திருமண்டலம்

அருளுரைகள்
2007

(ஞாயிற்றுக் கிழமைகளுக்கும், திருநாட்களுக்கும், சிறப்பு தினங்களுக்குமான பிரசங்கங்கள்)

பதிப்பாசிரியர்

அருள்திரு. M. இராஜசேகரன்
தூய திரித்துவப் பேராலயம், பாளையங்கோட்டை

மேலாளர்

திரு. B. ஜெயம் பொன்னையா
திருமண்டலப் பொருளாளர்
திருமண்டல அலுவலகம், பாளையங்கோட்டை

திருநெல்வேலி திருமண்டலப் பதிப்பாளர்
குழுவினரால் வெளியிடப்படுகிறது

தென் இந்தியத் திருச்சபை
திருநெல்வேலி திருமண்டலம்
எஸ். ஜெயபால் டேவிட்
நெல்லைப் பேராயர் & NCCI தலைவர்

Telephone : (+91) 0462 2578744
Email : bishop@csitirunelveli.org
Web site : www.csitirunelveli.org
Bishopstowe, Post Box 118,
Palayankottai - 627 002

பேராயர் முன்னுரை

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

"உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன்" சங்கீதம் 119:92.

திருமறை நம்முடைய வாழ்வின் அடிப்படை. நாம் எதைச் செய்ய வேண்டும், எவ்வாறு செய்ய வேண்டும் என்று நமக்கு போதிப்பது நமக்கு கிடைத்த மிக அரிய சொத்தான திருமறையாகும். இத்திருமறையோடு தனக்குள்ள உறவை தாவீது அரசன் பலவிதங்களில் சுட்டிக் காண்பிக்கிறார். அவற்றில் ஒன்றுதான் மேல் குறிப்பிட்ட வேத வசனமாகும்.

நமக்கு ஆறுதல் அளிப்பதாகவும், துக்கமான நேரங்களிலே மகிழ்ச்சி அளிப்பதாகவும், ஆலோசனை தேவைப்படும் நேரங்களில் தகுந்த ஆலோசனை அளிப்பதாகவும் திருமறை விளங்குகிறது. குறிப்பாக, இத்திருமறை நமக்கு மகிழ்ச்சியை தராதிருந்தால் துக்கமானது நம்முடைய மனதை ஆட்கொண்டு விடுகிறது. இத்துக்கத்தில் இருந்து நம்மை விடுவிக்க வல்லமை பெற்றது திருமறை. எனவே, இத்திருமறையின் ஆழ்ந்த கருத்துக்களை முறையாக மக்களுக்கு போதிப்பது மிகமிக அவசியமாகும்.

அவ்விதமாக, முறையாக போதிக்க உறுதுணையாகவும், வழிகாட்டியாகவும் இருப்பது நம் திருமண்டலத்தின் மூலமாக வெளியிடப்படும் அருளுரை 2007 என்ற இப்புத்தகமாகும். ஊழியர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இப்புத்தகத்தை பயன்படுத்தி பயனடைய அன்புடன் அழைக்கிறேன்.

இப்புத்தகத்தில் அடங்கியுள்ள அருளுரை குறிப்புகளை மிகுந்த ஜெபத்துடன் எழுதின ஊழியர்களை அன்புடன் பாராட்டுகிறேன். குறிப்பாக இப்புத்தகத்தின் பதிப்பாசிரியராக இருந்து அனைத்து காரியங்களையும் ஒருங்கிணைத்த அருள்திரு M. ராஜசேகரன் ஐயரவர்கள் மற்றும் பேராலய உதவிகுரு டீக்கன் J. பர்னபாஸ் அப்பாத்துரை அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

ஆண்டவரின் அருள் உங்களோடிருப்பதாக.

கிறிஸ்துவின் பணியில்

Jeyapaul David. +

பேராயர்

பதிப்பாசிரியர் உரை

2007ம் ஆண்டுக்கான அருளுரை குறிப்புகளைத் தொகுத்து புத்தகமாக வெளியிட உதவிசெய்த எல்லாம் வல்ல இறைவனுக்கு துதி செலுத்துகிறேன். பதிப்பாசிரியராக பணிபுரிய வாய்ப்பு நல்கிய பேராயர் அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

அருளுரை நம் திருச்சபை ஆராதனை முறைகளில் முக்கிய இடம் பெறுகிறது. இறை மக்களும் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். "பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று" (1கொரி.1:21). கடவுள் தாமாகவே, தம்மை மனிதருக்கு வெளிப்படுத்துகிறார். திருமறை வார்த்தைகள் மூலமாகவே கர்த்தருடைய வெளிப்பாட்டை புரிந்து கொள்கிறோம். என்றும் மாறாத கடவுளின் சத்தியங்களை மாறிவரும் கால சூழ்நிலைக்கேற்ப எடுத்துரைப்பது ஒவ்வொரு அருளுரையாளரின் கடமை. கடவுள் அந்த வரங்களை அருளுரையாளர்களுக்குத் தந்திருக்கிறார். அதை ஏற்றவாறு பயன்படுத்துவது நமது கடமை. "ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும் வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே விசுவாசமும் ... அளிக்கப்படுகிறது" (1கொரி.12:8-10). இப்படிப்பட்ட வரங்களைப் பெற்ற அருளுரையாளர்களைக் கொண்டு இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்புத்தகம் மூலம் அனைவரும் நிச்சயமாக ஆவிக்குரிய நன்மைகளை பெற முடியும் என்று நம்புகிறேன்.

இந்த ஆண்டிலும் தென்னிந்திய திருச்சபை திருநெல்வேலி திருமண்டல அருளுரைகள் 2007 என்ற அருளுரைத் தொகுப்பிற்கு அருளுரைகளை வழங்கி உதவி புரிந்த நமது திருமண்டலத்தின் குருக்கள், பிரதிநிதிகள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு எனது உளமார்ந்த நன்றியை சமர்ப்பிக்கின்றேன்.

மேலும் இந்த நூல் வடிவம்பெற எனக்கு உறுதுணையாக இருந்த பேராயரின் உதவியாளர், அருள்திரு. A. ராஜா கிறிஸ்டோபர், டீக்கன் J. பர்னபாஸ் அப்பாத்துரை அவர்களுக்கும், பதிப்பாளர் குழுவினருக்கும், ஆசியுரையும் அருளுரைகளும் வழங்கிய நமது மதிப்புமிகு பேராயர் அருட்பெருந்திரு அறிவர். S. **ஜெயபால் டேவிட்** அவர்களுக்கும் எனது பணிவான நன்றியைத் தெரிவிக்கிறேன்.

"உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள் என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும்" சங்கீதம் 119:103

கிறிஸ்துவின் பணியில்

Rev. M. இராஜசேகரன்

பேராலயம், பாளையங்கோட்டை

பொருளடக்கம்

அருளுரைகள்

எண்	நாள்	தலைப்பு	பக்கம்
1.	01.01.2007	சட்டவாக்கியம்	1
2.	01.01.2007	உடன்படிக்கையின் நாள் விருத்தசேதனத் திருநாள்	4
			7
4.	06.01.2007	பிரசன்னத் திருநாள்	9
5.	07.01.2007	கிறிஸ்தவ அர்ப்பணிப்பு	11
6.	14.01.2007	சமாதானமும் ஐக்கியமும்	13
7.	21.01.2007	சீடத்துவம்	15
8.	25.01.2007	புனிதர் பவுலடியார் திருநாள்	17
9.	26.01.2007	குடியரசு தினம்	19
10.	28.01.2007	சுதந்திரமும் பொறுப்புணர்வும்	21
11.	01.02.2007	மாதத்தின் முதல்நாள்	
12.	02.02.2007	கிறிஸ்து திருமுன்னிலைப்படுத்தப்பட்ட திருநாள்	23
12.	04.02.2007	திருச்சபையிலும் சமுதாயத்திலும் பெண்கள்	25
13.	11.02.2007	மனுக்குல வீழ்ச்சி	27
14.	18.02.2007	இரட்சிப்பு	30
15.	21.02.2007	சாம்பற்புதன்	33
16.	24.02.2007	புனிதர் மத்தியா திருநாள்	35
17.	25.02.2007	உலகமும் ஆன்மீகமும்	37
18.	01.03.2007	மாதத்தின் முதல்நாள்	39
19.	04.03.2007	மனித உறவுகள்	41
20.	11.03.2007	பார்வையற்றோரின் மீது கரிசனை	44
21.	18.03.2007	சமுதாய மாற்றுருவாக்கம்	46
22.	25.03.2007	சிலுவையும் திருச்சபையும்	49
23.	25.03.2007	மங்களவாக்குத் திருநாள்	51

24. 01.04.2007 மாதத்தின் முதல்நாள் 53
25. 01.04.2007 இயேசு ராஜாவின் பவனி 55
26. 02.04.2007 உயிர். திரு. முன் திங்கள் 57
27. 03.04.2007 உயிர். திரு. முன் செவ்வாய் 59
28. 04.04.2007 உயிர். திரு. முன் புதன் 61
29. 05.04.2007 கட்டளை வியாழன் 63
30. 06.04.2007 புனித வெள்ளி 65
31. 06.04.2007 சிலுவை . தியானங்கள் 67
32. 08.04.2007 கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் 85
33. 15.04.2007 கிறிஸ்துவே ஆண்டவர் 88
34. 22.04.2007 கிறிஸ்துவோடு பயணம் செய்தல் 90
35. 25.04.2007 புனிதர் மாற்கு திருநாள் 92
36. 29.04.2007 இருளிலிருந்து ஒளிக்குள் 94
37. 01.05.2007 மாதத்தின் முதல்நாள் 96
38. 01.05.2007 புனிதர்கள் பிலிப்பு, யாக்கோபு
ஆகியோர் திருநாள் 97
39. 01.05.2007 தொழிலாளர் தினம் 99
40. 06.05.2007 இளைஞர் -
எதிர்கால நம்பிக்கையின் அடையாளம் 101
41. 13.05.2007 இறைமக்களுக்கு பணிசெய்தல் 104
42. 17.05.2007 விண்ணுக்கெழுந்த திருநாள் 107
43. 20.05.2007 கர்த்தரைப் போற்றுவோம் 109
44. 27.05.2007 தூய ஆவியானவர் 110
45. 01.06.2007 மாதத்தின் முதல்நாள் 113
46. 03.06.2007 திரியேகர் 115
47. 10.06.2007 கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானம் 117
48. 11.06.2007 புனிதர் பர்னபா திருநாள் 119
49. 17.06.2007 ஆவிக்குள்ளான வாழ்வு 121
50. 24.06.2007 பாடுகளின் மூலம் சாட்சி 123

126
51. 24.06.2007 புனிதர் யோவான் ஸ்நானகன் திருநாள் 129
52. 29.06.2007 புனிதர் பேதுரு திருநாள் 131
53. 01.07.2007 கிறிஸ்தவ ஈகை 134
54. 01.07.2007 மாதத்தின் முதல்நாள் 136
55. 08.07.2007 வளர்ந்து பெருகும் திருச்சபை 138
56. 11.07.2007 மாம்பழச் சங்கம் 140
57. 12.07.2007 திருமண்டல ஆண்டு விழா 142
58. 15.07.2007 ஆயர் திருப்பணி 145
59. 22.07.2007 ஐக்கியம் 148
60. 22.07.2007 புனித மகதலேனா மரியாள் திருநாள் 150
61. 25.07.2007 புனிதர் யாக்கோபு திருநாள் 152
62. 29.07.2007 திருச்சபையில் சிறுவர்கள் 154
63. 01.08.2007 மாதத்தின் முதல்நாள் 155
64. 05.08.2007 இறைமக்களின் அருட்பணி 158
65. 06.08.2007 கிறிஸ்து மறுரூபமானத் திருநாள் 161
66. 12.08.2007 கிறிஸ்தவ பண்பு 164
67. 15.08.2007 சுதந்திர தினம் 166
68. 19.08.2007 உலகத்திலிருந்தாலும் உலகத்தாரல்ல 168
69. 24.08.2007 புனிதர் பர்தொலொமேயு திருநாள் 170
70. 26.08.2007 காதுகேளாதோர் மீது கரிசனை 173
71. 01.09.2007 மாதத்தின் முதல்நாள் 175
72. 02.09.2007 நற்செய்தியின் மாண்பு 177
73. 09.09.2007 நற்செய்திப் பணி 180
74. 16.09.2007 ஜெபம் 183
75. 21.09.2007 புனிதர் மத்தேயு திருநாள் 185
76. 23.09.2007 பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை 187
77. 27.09.2007 தென்னிந்திய திருச்சபை தோன்றிய தினம் 187
78. 29.09.2007 தூய மிகாவேல் முதலான
சகல தேவதூதர்களின் திருநாள் 189

79. 30.09.2007 முதியோரை அன்புடன் கவனித்தல் 191
80. 01.10.2007 மாதத்தின் முதல்நாள் 194
81. 07.10.2007 தெய்வீக அறிவில் வளருதல் 196
82. 14.10.2007 குணமாக்கும் திருப்பணி 198
83. 18.10.2007 புனிதர் லூக்கா திருநாள் 200
84. 21.10.2007 நீதியும் சமாதானமும் 203
85. 28.10.2007 திருச்சபையில் ஆண்கள் 206
86. 28.10.2007 புனிதர்கள் சீமோன், யூதா திருநாள் 208
87. 01.11.2007 மாதத்தின் முதல்நாள் 210
88. 01.11.2007 சகல பரிசுத்தவான்கள் திருநாள் 212
89. 02.11.2007 சகல ஆத்துமாக்கள் திருநாள் 215
90. 04.11.2007 பெண் குழந்தைகளின் நலன் 217
91. 11.11.2007 ஒரே மேய்ப்பன் ஒரே மந்தை 219
92. 18.11.2007 மனவளர்ச்சி குன்றியோர் மீது கரிசனை 221
93. 25.11.2007 ஆயத்த நிலை 223
94. 30.11.2007 புனிதர் அந்திரேயா திருநாள் 225
95. 01.12.2007 மாதத்தின் முதல்நாள் 228
96. 02.12.2007 இறையாட்சியின் நற்செய்தி 230
97. 09.12.2007 திருமறை 233
98. 16.12.2007 இறைவன் நம்முடன் 236
99. 21.12.2007 புனிதர் தோமா திருநாள் 239
100. 23.12.2007 கிறிஸ்து வருகையின் மகிழ்ச்சி 241
101. 25.12.2007 கிறிஸ்து பிறந்த திருநாள் 244
102. 26.12.2007 புனிதர் ஸ்தேவான் திருநாள் 246
103. 27.12.2007 புனிதர் யோவான் திருநாள் 248
104. 28.12.2007 குற்றமில்லாப் பாலகர் திருநாள் 250
105. 30.12.2007 கர்த்தருக்கு ஸ்தோத்திரம் 251
106. அறுப்பின் பண்டிகை 253
107. ஆலயப் பிரதிஷ்டை 255
108. எக்காளப் பண்டிகை 258

புதிய வருடம்

01.01.2007

சட்டவாக்கியம்

"கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப் போல் இருப்பார்கள்" சங்கீதம் 125:1.

வருஷத்தை நன்மையால் முடிசூட்டுகிற ஆசீர்வாதத்தின் ஊற்றாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

முன்னுரை :

திருமறையில் அடங்கிய வாக்குத்தத்தங்கள் யாவும் இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். ஒன்று ஆண்டவர் தரும் ஆசீர்வாதம் மற்றொன்று அவ்வாசீர்வாதத்தை பெற நாம் செய்ய வேண்டிய கட்டளை. அவ்வாறே இவ்வாண்டு சட்டவாக்கியமும் அமைந்துள்ளது.

1) ஆண்டவர் தரும் ஆசீர்வாதம் நிலையான வாழ்வு

2) நாம் செய்ய வேண்டிய காரியம் ஆண்டவரின் மீது நம்பிக்கை

நாம் ஆண்டவரின் மீது நம்பிக்கை வைக்கும்போது நாம் பெறும் நன்மைகள் என்னென்ன என்பதை சிந்திப்போம்.

1. நிலைவரமான தன்மை (EMOTIONAL STABILITY)

ஆண்டவரை நம்பும்போது நாம் பெறும் முதலாவது நன்மை கலவரப்படாத **உறுதியான மனதைரியமாகும்**. ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன்னை நம்புகிறவர்களுக்கு சொல்வது என்னவென்றால் நீங்கள் கவலைப்பட வேண்டாம். கவலைப் படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? (மத்.6:27). கர்த்தரை நம்புகிறவர்கள் கலங்கி அதைரியம் அடைய வேண்டாம் என்று உறுதியாக கூறுகிறார். யாக்கோபு நிருப ஆக்கியோன் கூறும்போது கர்த்தரிடத்தில் எதையாகிலும் கேட்கிறவன் "எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான் (யாக்.1:6).

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப் படுத்துங்கள் (பிலி.4:4,6).

கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள், சந்தோஷ மாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்.

ஆண்டவரின் மீது அசையாத நிலையான நம்பிக்கை வைக்கும் போது நிலையான மன சமாதானம் நமக்கு கிடைக்கும் என்பது திண்ணம். விசுவாசிக்கிறவன் பதறான்.

2. கர்த்தரை நம்புகிறவர்கள் நம்பிக்கைகுரியவர்களாக இருப்பார்கள் : (STABILITY OF CHARACTER)

ஒரு கிராமத்தைச் சேர்ந்த இருவர் நண்பர்களாக இருந்தார்கள். ஒருவரோடொருவர் நெருக்கமாக பழகினார்கள். அவர்களில் ஒருவனுக்கு வேலை கிடைத்து வெளிநாட்டிற்கு சென்றான். சென்றவன் தன் நண்பனிடம் தொடர்பு கொண்டு நான் உன் பெயருக்கு பணம் அனுப்புகிறேன் அதில் நீ என் வயதான தாயை அழைத்துச் சென்று அவர்கள் பெயருக்கு சில நிலங்களை வாங்கி வைத்துவிடு என்று சொன்னான். அவனும் சரி என்று சொல்லி பணத்தை பெற்று வந்தான். அவனுடைய வயதான தாய்க்கு ஏதோ கொஞ்ச ரூபாய் செலவுக்கு கொடுத்து விடுவான். நிலத்தையோ தன் பெயருக்கு முடித்து விட்டான். இவ்விதமாய் நம்பிக்கைத் துரோகம் செய்தான். இரு வருடங்கள் கழித்து நண்பன் விடுமுறைக்கு வரும் நேரத்தில் வெளியூருக்கு சென்று விட்டான். இப்படி நம்பிக்கைக்கு பாத்திரமில்லாத அநேகரை இவ்வுலகில் காண்கிறோம். கர்த்தரை நம்புகிறவர்களோ நம்பிக்கைக்கு உரியவர்களாக நடந்து கொள்வார்கள். சிலருடைய உண்மையான குணம் திருமணத்திற்கு பின்பே தெரிகின்றது. "தேன்போல் பேசுகின்ற வாயும் நஞ்சான நெஞ்சமும் உடையவர்கள் உண்டு. நமது குணாதிசயம் எப்படிப்பட்டது.

"அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும் அவன் சம்பத்துக்குறையாது. அவள் உயிரோடிருக்கும் நாளெல்லாம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மையையே செய்கிறாள்"

(நீதி.31:11,12) என்று குணசாலியான ஸ்திரியைப் பற்றி வாசிக்கிறோம். நாமும் குணசாலியான நபராய் வாழ வேண்டும்.

3. எதிர்நோக்குகளை குறித்த நிச்சயம்

எதிர்காலத்திற்காக திட்டமிடுங்கள் என்று பல விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றன ஆயுள் காப்பீட்டுத் திட்டம், ஓய்வூதியத் திட்டம் என பலவற்றை நாம் ஆராய்ந்து தெரிந்து கொள்ளுகிறோம். இன்று என்னுடைய நாள் எப்படியிருக்கும் என வார ராசி பலன், ஜோதிடம் இவற்றை நாடிச் செல்வோர் அநேகர். கிறிஸ்தவர்களும் கடவுளிடம் நம்பிக்கை வைக்காமல் எனது எதிர்காலத்தை குறித்து யாராவது தரிசனம் சொல்ல மாட்டார்களா என்று நாடி ஓடுகின்றனர்.

ஆனால் எதிர்கால நம்பிக்கையை நமக்கு கொடுக்கிறவர் நமதாண்டவர். நாம் எதிர் நோக்கியிருக்கிற காரியங்களை நமக்கு வாய்க்கப் பண்ணுகிறவரும் அவரே.

கர்த்தர் தம்மிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிற மக்களுக்கு அவர்களுடைய எதிர்பார்ப்பை நிறைவேற்றுகிறவராக இருக்கிறார்.

"அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக" சங்கீதம் 20:4.

பவுல் அப்போஸ்தலன் தன்னுடைய வாழ்வைக் குறித்து கூறும்போது "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயத்துமிருக்கிறேன்" (1தீமோ.1:12).

சங்கீதக்காரன் ஆண்டவரிடம் மன்றாடும்போது இவ்விதமாக குறிப்பிடுகிறார்.

"கர்த்தாவே, நாங்கள் உம்மை நம்பியிருக்கிறபடியே உமது கிருபை எங்கள் மேல் இருப்பதாக" (சங்.33:22).

நாம் ஆண்டவரிடம் வைத்துள்ள நம்பிக்கைக்குத்தக்கதாக ஆண்டவர் நமக்கு அளவில்லாத கிருபைகளையும், நன்மை களையும் இவ்வாண்டு முழுவதுமாக அருளிச் செய்வாராக.

பேராயர் S. ஜெயபால் டேவிட்
நெல்லைத் திருமண்டலம்

01.01.2007

உடன்படிக்கையின் நாள்
விருத்தசேதனத் திருநாள்

பாடங்கள் : ஆதி.17:1-8; கொலோ.2:9-15; யோவா.6:66-69

வசனம் : *"நான் உங்கள் நடுவிலே உலாவி, உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்" (லேவி.26:12).*

உடன்படிக்கை :

கடவுள் தம் ஜனத்தின் மீது அன்பு கொண்டதினால் உடன்படிக்கையை ஏற்படுத்தி தம் அன்பை வெளிப்படுத்துகிறார். உடன்படிக்கை என்பது இருவர் ஒருவருக்கொருவர் செய்து கொள்கிற ஒப்பந்த ஏற்பாடு பெரித் என்ற எபிரெய வார்த்தை உடன்படிக்கை என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இது கடவுளுக்கும் அவர் ஜனத்துக்கும் உண்டாயிருக்கிற உறவு, தொடர்பை விளக்கிக் காட்டுகிறது. பெரியவர் ஒருவர் சிறியவர் ஒருவரோடு செய்கிற உடன்படிக்கையைக் குறிக்கிறது. கடவுள் தாமே இஸ்ரவேலரைத் தெரிந்தெடுத்து உடன்படிக்கை செய்து கொண்டார். (லேவி.26:9,12; உபா.6:3-7) நான் உங்கள் தேவன் நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள். கடவுள் செய்த உடன்படிக்கை அவரது அன்புக்கு அடையாளம் (உபா.7:7,8).

புதுவருடம் உடன்படிக்கையின் நாள். உறவை அன்பைப் புதுப்பித்துக் கொள்ளும் நாள். ஆண்டவருக்கு இயேசு என்ற பெயரிடப்பட்ட விருத்தசேதனத் திருநாள். இந்நாளில் ஞானஸ்நானத்தில் ஆண்டவருடன் செய்து, திடப்படுத்தலில் உறுதி செய்யப்பட்ட உடன்படிக்கையைத் திரும்பப் புதுப்பித்துக் கொள்வது அவசியம்.

1. கிருபையின் உடன்படிக்கை (ஆதி.17:1-7)
(The Covenant of Grace)

இப்பகுதியில் விருத்தசேதனமும் உடன்படிக்கையும் இணைத்துப் பேசப்படுகிறது. கடவுள் தரிசனமாகி ஆபிராமோடு நித்திய உடன்படிக்கை செய்கிறார். இதன்படி யாவே என்றென்றும் ஆபிராமுக்கும் அவரின் சந்ததிக்கும் இறைவனாய் இருப்பார்.

மூன்று முக்கிய வாக்குறுதிகளை ஆபிராமுக்கு தருகிறார். 1) பல இனத்தவரின் தந்தை, 2) உனக்கும் உன் சந்ததிக்கும் கடவுள் நான், 3) கானான் வாக்களிக்கப்படுகிறது.

இதைப் பெற்றுக் கொள்ள கடவுள் முன் நீதியாய் நடந்து கொள்ள வேண்டும். அவருடைய உடன்படிக்கையை கைக்கொள்ள வேண்டும். உடன்படிக்கையின் புற அடையாளமாக விருத்த சேதனம் குறிப்பிடப்பட்டுள்ளதையும் பார்க்கிறோம். கடவுளாகவே தாமே முன்வந்து ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்ததினால் இது கிருபையின் உடன்படிக்கை எனலாம்.

2. வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கை (ஆதி.17:8,9)

(The Covenant of Promises)

இந்த கிருபையின் உடன்படிக்கை மாற்றப்படவோ, திரும்ப எடுத்துக் கொள்ளப்படவோ மாட்டாது. இது ஆபிரகாமோடு மட்டுமல்ல, அவரின் மாம்ச சந்ததியோடும் மட்டுமல்ல, ஆவிக்குரிய சந்ததிக்கும் அளிக்கப்படுகிற வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய உடன்படிக்கை. இதன் சிறப்பம்சம் கடவுள் அவர்கள் தேவனாயிருந்து மனித வாழ்வுக்கு தேவையான அனைத்தையும் அதாவது உணவு, உறைவிடம், பாதுகாப்பு, பராமரிப்பு, ஞானம் எல்லாவற்றையும் தருகிறார் என்பதாகும் (ஆதி.17:8,9). மேலும் ஆபிராம் என்ற பெயர் ஆபிரகாம் என மாற்றப்படுகிறது. கடவுளின் நண்பன் என்று அழைக்கப்பட்ட ஆபிராம் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாக ஆபிரகாம் என்று அழைக்கப்படுகிறார். உன்னிலே ஜாதிகளை உண்டாக்குவேன். உன்னிடத்தில் இராஜாக்கள் தோன்றுவார்கள் என்ற வாக்குத்தத்தம் கொடுக்கப்படுகிறது (ஆதி.17:5,6).

3. விருத்தசேதனத்தின் உடன்படிக்கை (ஆதி.17:10-14)

(The Covenant of Circumcision)

விருத்தசேதனம் உடன்படிக்கையின் அடையாளமாகக் கொள்ளப்பட்டது (ரோ.4:11; அப்.7:8). விருத்தசேதனம் இல்லாத காலத்தில் விசுவாசத்தினாலே அடைந்த நீதிக்கு முத்திரையாக விருத்தசேதனமாகிய அடையாளத்தைப் பெற்றான். நியாயப் பிரமாணத்தின்படி இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை (எபி.9:22; யாத்.24:8). உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று மோசே இரத்தத்தைத் தெளித்தான். இயேசு இரத்தம் சிந்தினதினாலே இரத்தம் சிந்துதலின் நியமனங்கள் அனைத்தும் நீக்கப்பட்டுவிட்டன. அதன்படி விருத்தசேதனம் திருமுழுக்குக்கு இடம் அளிக்கிறது. விருத்தசேதனம் கிறிஸ்து பலியிடப்படாத காலத்தில் நுனித்தோலின் மாம்சம் மூலமாக, உடன்படிக்கையின் அடையாளமாக அது செய்யப்பட்டிருக்கலாம். கிறிஸ்து

பலியிடப்பட்டதினாலே கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தின் மூலமாய் திருமுழுக்கு பெறுவோர் உள்ளத்தில் விருத்தசேதனம் பெற்றவராகிறார்.

விருத்தசேதனம் உடன்படிக்கையின் அடையாளம். புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இயேசு இருக்கிறபடியால் இயேசு கிறிஸ்துவுக்குள் வாழும் வாழ்வு உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்ளும் வாழ்வு. அவருக்குள் விருத்தசேதனமும், விருத்தசேதனம் இல்லாமையும் ஒன்றும் இல்லை, புதுச் சிருஷ்டியாயிருக்கிறான். 2கொரி.5:17 கிறிஸ்து விருத்தசேதனம் பெற்ற நாள் புதுப்படைப்பிற்கு வித்திட்ட நாள், புதியவானம் புதிய பூமி புதியப்படைப்பு. இனிப் பழையவைகள் நினைக்கப் படுவதுமில்லை ஏசா.65:17). இயேசுகிறிஸ்துவின் உடன் சிற்பாசாரியர்களாக புத்துலகு படைக்கிறோம் என்னும் உணர்வில் பழையனவற்றைக் களைந்து கிறிஸ்துவுக்குள் புதுபடைப்பாக மாற உடன்படிக்கை செய்வோம்.

கையால் செய்யப்படாத விருத்த சேதனத்தைக் கிறிஸ்துவுக்குள் பெற்றிருக்கிறோம் கொலோ.2:11 ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம் ரோ.2:28,29 அதாவது மறுபிறப்பின் அனுபவம். இயேசு கிறிஸ்துவும் மறுபடியும் பிறந்தவன் ஆவியினால் பிறந்தவன் என்றார் (யோவா.3:8) ஆவியினால் பிறப்பது மறுபடியும் பிறக்கும் உள்மன அனுபவம். இதனைத் தருகிறவர் தூய ஆவியானவர் திருமுழுக்கு, திருவிருந்து, ஜெபம், வேதம் வாசிப்பு என்கிற திருமறைகளில் கண்ணும் கருத்தாய் இருப்பர்கள் கூட ஆவியினால் பிறவாதவர்களாக கூட இருக்கலாம். இன்று திருச்சபையில் காணப்படும் அன்பில்லாமை, சாதி வேற்றுமை, கோர்ட்டு வழக்குகள், தேர்தல் சண்டைகள் மலிந்திருப்பதற்குக் காரணம் நம்முடைய நிறுவனத் திருச்சபைகள் மறுபடியும் பிறவாதவர்களால் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது.

ஞானஸ்நானத்திலே அவரோடு கூட அடக்கம் பண்ணப்பட்டவர் களாகவும் . . . தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினால் அவரோடு எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். பாவத்திலும் அக்கிரமங்களிலும் மரித்த நம்மை உயிர்ப்பித்து மன்னித்துச் சிலுவையில் வெற்றி சிறந்த கிறிஸ்துவுக்குள் (கொலோ.2:12-14) வாழ புது உடன்படிக்கையைப் புதுப்பிப்போமா.

அருள்திரு எம். இராஜசேகரன்
பாளையங்கோட்டை

06.01.2007

பிரசன்னத் திருநாள்

பாடங்கள் : எசா.60:1-5; அப்.10:30-48; மத்.2:1-12

வசனம் : *"அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது. இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை" (யோவா.1:4,5).*

முன்னுரை :

மனிதன் இருளுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிற நிலையில் ஒளியின் வாழ்க்கையை காணும்படியாக அதாவது ஜீவனுள்ள வாழ்க்கைக்கான சுதந்திரத்தை மனிதன் பெறும்படியாக கிறிஸ்து தம்மை மானிட உருவில் பிரசன்னமாக்கின நாள்தான் பிரசன்னத் திருநாள். பிரசன்னம் என்று கூறப்படும் கிரேக்கபதம் வெளிப்பாடு என்ற பொருளில் கூறப்படுகிறது. ஒளி உலகில் பிரவேசித்த நாள் அதாவது கிறிஸ்து உலகிற்கு வெளிப்பட்டது. (ஞானியருக்கு) ஜனவரி 6ஆம் நாள் ஆகும். பிரசன்னத் திருநாளாகிய இன்று நாம் விரிவாகத் தெரிந்து கொள்ளும்படியாக, ஏற்றுக் கொள்ளும்படியாக சிந்திப்போம்.

வழிகாட்டும் ஒளி :

மத்.2:1-12 கிழக்கிலிருந்து ஞானிகள் இயேசு பாலகனை சந்திக்கிறார்கள் அவர்கள் யூதரல்லர். புறஜாதியராகிய மேதிய வம்சத்தினர் என்று கூறப்படுகிறது. ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர் பயணம் செய்து யூதேயாவுக்கு வருகின்றனர். இயேசு பாலகனைக் கண்டபோது மகிழ்ச்சியடைகிறார்கள். ஆராதித்து காணிக்கையும் செலுத்தி கனம் பண்ணுகிறார்கள். ஒரு புதிய நட்சத்திரம் உதித்ததால் அது வழிகாட்டும் புதிய அரசனைத் தேடி வந்தவர்கள். ஒளியின் மூலமாக இயேசுவின் பிறப்பிடத்திற்கு வழி அறிந்து அவரைச் சந்தித்தார்கள். ஞானிகளுக்கு விண்மீன் வழி காட்டியது. இயேசுவை சந்தித்த பின்னர் வந்தவழியே போகாமல் வேறு வழியாகத் திரும்பிச் சென்றனர். அந்த புதிய வழியே செல்ல அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அது அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட பாதை. இயேசுவின் பிறப்பை நட்சத்திரம் ஒளியாக வெளிப்படுத்துவதை புரிந்து கொண்டவர்கள் அந்த ஞானியர், இயேசுவைத் தரிசித்த பின்னர் புதிய வழியே செல்கின்றனர். நம் வாழ்க்கையிலும் நாம் இதனை சிந்திக்க வேண்டும். ஒளியான அவர்

நமக்கு காட்டும் பாதையில் செல்ல வேண்டும். இதுவே நாம் ஒளிமயமானவருக்கு கீழ்ப்படிதலைக் காட்டும் வாழ்க்கையாகும்.

இரட்சிப்பை அருளும் ஒளி :

லூக்.19:1-9 இயேசு எரிகோவில் பிரவேசிக்கையில் அவரைக் காணவந்தவன் சகேயு. இவன் ஆயக்காரருக்குத் தலைவன், ஐசுவரியவான் தன் வாழ்வில் பணமே பிரதானம் என்று எண்ணியிருந்தவன் இயேசுவின் சகேயுவே என்ற கருணையான அன்பின் அழைப்பில் இயேசுவின் ஒளியைக் கண்டு கொண்டவன். அவனது வாழ்க்கையே மாறிற்று. இதை இயேசுவே கூறுகிறார். இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். ஏசா.9:2 உலகில் இருளுக்குள்ள வாழ்க்கையில் ஜீவித்த சகேயு இயேசு தரும் ஒளியின் வாழ்க்கையை ஏற்றுக் கொள்கிறான். ஒளியின் வாழ்வில் பிரவேசிக்கிறான். இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது என்ற உயர்வைப் பெறுகிறான். பிரசன்னத் திருநாள் தரும் அழைப்பு இதுவே.

பிறருக்கு வழிகாட்டும் ஒளியின் அழைப்பு :

பரி.லூக்கா 10ஆம் அதிகாரம் ஒளியின் வாழ்வு எப்படிப்பட்டது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. ஒரு யூதனுக்கு பிறன் ஒரு யூதன் என்றல்ல. ஒரு சமாரியனுக்கு பிறன் ஒரு யூதன் என்று பிறனை நேசிக்கிற ஒளியின் வாழ்வை இயேசு தெளிவுபடுத்துகிறார். இரக்கம் செய்கிறவனே வாழ்வில் நிலைத்திருக்கிறவன். நம் வாழ்வு ஒளியின் வாழ்வு என்றால் கிறிஸ்தவன், கிறிஸ்தவன் அல்லாதவன், தெரிந்தவன், தெரியாதவன் என்ற நிலையில் அல்ல. ஒளியின் வாழ்வைக் காட்டும் இயேசுவின் ஒளிக்குள் வாழ்வதே தேவை. இதையே நம்மிடம் இயேசு எதிர்பார்க்கிறார்.

இதனையெல்லாம் ஏற்றுக் கொள்ளவே இயேசு நம்மை அழைத்துக் கொண்டிருக்கிறார். வாழ்க்கையில் நாம் சந்திக்கும் அனைவரிடத்தும் ஒளியின் பிள்ளைகளாக சாட்சியோடு காணப்பட நம்மை எதிர் பார்க்கிறார். நாம் சந்திக்கிற அனைவரிடமும் எவ்வித வேறுபாடும் இல்லாத ஒளியின் வாழ்க்கையில் கிறிஸ்துவின் பிரசன்னத்தை உணர்ந்து ஒருமித்து வாழ எப்போதும் வழிகாட்டிக் கொண்டேயிருக்கிறார். இதனை நாம் உணர்ந்து ஒளியின் பிள்ளைகளாக வாழ்ந்து பிறருக்கு வழி காட்டுவோமாக.

அருள்திரு R. வெல்கம் அற்புதராஜ்
தேவர்குளம்

07.01.2007

கிறிஸ்து பிறந்த திருநாளுக்குப் பின்வரும் 2ஆம் ஞாயிறு

(பிரசன்ன 1)

பொருள் : **கிறிஸ்தவ அர்ப்பணிப்பு**

பாடங்கள் : நீதி.23:24-35; கலா.5:16-21; மத்.21:26-46

வசனம் : *"அந்த பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை" அப்போஸ்தலர் 26:19பி.*

முன்னுரை :

அர்ப்பணிப்பு என்ற சொல்லுக்கு ஆங்கில அர்த்தம் Dedication / Commitment / Commitment என்று கொடுக்கப்பட்டுள்ளது. பரி.பவுலடியாருடைய மேற்கண்ட அறிக்கை இயேசு கிறிஸ்து மேல் உள்ள பற்றைக் குறிக்கிறது (Declared attachment to Jesus Christ and His course - Direction Pursued)

தீவிரவாத இயக்கங்களில் காணப்படும் அர்ப்பணிப்பு (Commitment) அழிவுக்குரியதாய் இருக்கிறது. அவ் அர்ப்பணிப்பில் தீவிரவாதிகள் உண்மையுள்ளவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்தவ அர்ப்பணிப்பு ஜீவனுக்குரியதாய் இருக்கிறது. நாம் அதன் உண்மைத்துவத்தை வெளிப்படுத்துவதில் பின்தங்கி இருக்கிறோம்.

கிறிஸ்தவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதக சமர்த்தனுமாயிருக்க வேண்டும். அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும் இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டை பண்ணாதவனும், பண ஆசையில்லாதவனுமாயிருந்து, தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். (அப்.3:2-4). இதுவே கிறிஸ்தவ அர்ப்பணிப்பின் எதிர்பார்ப்பு.

காலேப், யோசுவாவின் அர்ப்பணிப்பு :

மோசே 12 கோத்திரங்களின் எண்ணிக்கைபடி 12 நபரைத் தெரிந்து கொண்டு, கர்த்தர் அவர்களுக்கு வாக்குப்பண்ணின கானான் தேசத்தைச் சுற்றிப் பார்த்து மதிப்பீடு கொடுக்கும்படி அனுப்பினான். அதில் 10 பேர் எல்லாம் கெட்டது என்ற மனப்பான்மை (pessimistic) உடையவர்களாதலால் துர்ச் செய்தியை அறிவித்தார்கள். ஆனால் காலேபும், யோசுவாவும் (Optimist

எல்லாம் நன்மைக்கே என்று திட நம்பிக்கையுள்ளவர்களாக நற்செய்தியை அறிவித்தார்கள். இவ்வறிக்கையின் மூலம் அவர்களுடைய அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினார்கள். எண்.14:6-8 கர்த்தர் அந்த தேசத்தை நமக்குக் கொடுப்பார். இந்த அர்ப்பணிப்பின் மூலமாக காலேப்பும், யோசுவாவுடைய சந்ததி மட்டும் கானானைச் சென்று அடைந்தது. ஏனைய 10 பேரின் சந்ததிகள் அப்பாக்கியத்தைப் பெறவில்லை.

தானியேலின் அர்ப்பணிப்பு :

யூத மார்க்க கலாச்சாரம் ஊற்றி வளர்க்கப்பட்ட தானியேலும் அவனுடைய நண்பர்களும் பாபிலோன் தேசத்திற்கு நேபுகாத்நேச்சாரின் அரசின் மூலமாக அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்டனர். மூவருக்கும் ராஜபோஜனம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. தானி.1:8இன்படி தானியேல், ராஜாவின் போஜனத்தினாலும், அவர் பானம் பண்ணும் திராட்சரத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தல் ஆகாதென்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக் கொண்டு தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக் கொண்டான். இந்த அர்ப்பணிப்பை தேவன் கனப்படுத்தினார். உலகப் பிரகாரமாக அடிமையாயிருந்தாலும் உள்ளத்தில் சுயாதீனமாயிருந்தான்.

பரி. பவுலின் அர்ப்பணிப்பு :

பரம தரிசனம் என்று பவுல் குறிப்பிடுவது அப்.9ஆம் அதிகாரத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னை வெளிப்படுத்திய அநுபவம், சற்றும் எதிர்பாராது, அதிகார தோரணையோடும், கொலை வெறியுள்ள ஒரு வாலிபனாகவும், தன் மார்க்கமே சரியானதென்ற உணர்வுடன் சென்று கொண்டிருந்த சவுலை இயேசு சந்தித்தார். முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்ற முன் எச்சரிப்பின் குரல் கேட்டு, கிறிஸ்துவுக்கு தன் வாழ்வை அர்ப்பணித்தான். பிலி.1:21ஆம் வசனத்தின்படி கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் என்று தன் வாழ்நாள் முழுவதும் பரம தரிசனத்திற்கு உண்மையுள்ளவனாக இருந்து இரத்த சாட்சியாக தன் ஜீவனை அர்ப்பணித்தான்.

காலேப் யோசுவா, தானியேல், பவுலடியார் இவர்களின் வாழ்க்கை நமக்கு முன் உதாரணங்களாக வேதாகமத்தில் வைக்கப்பட்டுள்ளது. நமது அர்ப்பணிப்பில் குறைவுண்டென்று உணருவோமானால் அதை சரி செய்து, தேவநாம மகிமைக்காக வாழ தேவன் நமக்கு உதவி செய்வாராக.

அருள்திரு CJV டேனியல்
திருநெல்வேலி நகர்

14.01.2007

கிறிஸ்து பிறந்த திருநாளுக்குப் பின் 3ஆம் ஞாயிறு
(பிரசன்ன 2)

பொருள் : **சமாதானமும் ஐக்கியமும்**

பாடங்கள் : **ஏசா.57:19-21; ரோ.15:30-33; யோவா.14:23-31**

வசனம் : *பிலிப்பியர் 2:2*

முன்னுரை :

ஒரு இயக்கம் அல்லது ஸ்தாபனம் சிறப்பாக செயல்பட வேண்டுமானால் அதற்குள்ளாக ஒற்றுமையும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளுதலும் அவசியம். அப்படி இருக்கும்போது சமாதானம், மகிழ்ச்சி அங்கே காணப்படுவது இயல்பு. மேலும் ஐக்கியத்தோடு செயல்படுகின்ற இடங்களில் பலவிதமான முன்னேற்றங்களையும் நாம் காண முடியும். ஆகவே பரி.பவுல் பிலிப்பு சபையை சேர்ந்த கிறிஸ்தவர்களுக்கு அறிவுரையாக ஒற்றுமை (சமாதானம்)யை பற்றி கூறுகிறார். "Paul expects unity, they are to be bound together in one spirit like a band of brothers".

1. சுயநலமும் ஐக்கியமின்மையும் (Selfish ambition and disunity)

பிலிப்பியர் 2ஆம் அதிகாரத்தை நாம் வாசிக்கும்போது அங்கு சபைக்குள்ளாக இருந்த பிரிவினைகளை நாம் அறியலாம். பிலி.2:3 வசனத்தில் "ஒன்றையும் வாறினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல்" என்றும் 2:4 வசனத்தில் "அவனவன் தனக்கானவைகளை அல்ல" என்றும் நாம் காண்கிறோம். இறைவனின் சரீரமாகிய திருச்சபை இப்படிப்பட்ட நிலமையிலிருந்ததினால் முற்றிலும் ஐக்கியமற்ற சூழ்நிலை உருவானது. கிரேக்க வார்த்தையான "காய்னோனியா" (Koinonia) என்ற சொல் "பகிர்ந்து கொள்ளுதல்" என்ற பொருளில் வருகின்றது. பிலிப்பு சபையினரை பவுல் பிலி.2:2 வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி "நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் (One in Spirit) ஒன்றையே சிந்தித்து (One in Purpose) என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள் என்று கூறுகிறார். இங்கே Koinonia - பகிர்ந்து கொடுத்தல்' என்பது அன்பை பகிர்தல், சிந்தையை (like minded) பகிர்தல் என பொருள்படும். நாமும் சபைக்குள்ளாகவும் மற்ற மக்களிடமும் இந்த அன்பை பகிர்ந்து நம்முடைய சிந்தையை நல்ல காரியங்களோடு வருபவர்களுடன் இசைந்து செல்லும்போது ஒற்றுமை or ஐக்கியம் வலுபெறும் என்பதில் சந்தேகமில்லை. மாறாக சுயநல நோக்கத்தோடு செயல்படுவோமாகில் நாம் ஐக்கிய குறைபாடுகளை திருச்சபையில் உருவாக்குகிறவர்களாவோம்.

2. சமாதனமற்ற சூழலில் சமாதானம்

(Peace in the midst of Peaceless)

ஐக்கியத்தை இழந்த குடும்பம், திருச்சபை, தனி நபரின் மனதும் நிச்சயமாக சமாதானமாக இருக்கவே முடியாது. ஆனால் ஓர் நிச்சயம் நமக்கு உண்டு. இறைவன் இவ்வுலகத்தில் சமாதான பிரபுவாக வந்தார். உலகம் கொடுக்கவும் எடுக்கவும் முடியாத நிலையான சமாதானத்தை நமக்கு தருவார் என்பதே. பவுல் ரோமருக்கு எழுதும் கடிதத்திலே "சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பாராக" என்கிறார். எங்கு பார்த்தாலும் போர், வன்முறை, பிரிவினைகள், போராட்டங்கள், கொள்ளை நோய்கள் இந்த பயங்கரமான வேளையில் எப்படி சமாதானத்தை பெறுவது. இன்று கொடுக்கப்பட்ட பழைய ஏற்பாடு பாடத்தில் "துன்மார்க்கனுக்கு சமாதானமில்லை" என்று ஏசாயா கூறுகிறார் (ஏசா.57:21). அப்படியானால் இந்த சமாதானம் நீதிபரராகிய இயேசு நீதிமான்களுக்கு கொடுக்கிறதை நாம் நம்பலாம். மேலும் உலகத்தில் பயங்கரமான காரியங்கள் நடைபெற்றாலும் அதின் மத்தியிலும் இறைவனின் சமாதானத்தை பெற்றவர்கள் மனரம்மியமாக கலங்காமலும் பயப்படாமலும் இருக்கும்படிக்கு தேவன் உதவி செய்கிறார் (யோவா.14:27).

ஒருமுறை ஒரு அரசன் தன் அரண்மனை சுவரில் சமாதானம் என்ற தலைப்பில் ஓவியம் ஒன்றை வரையும்படிக்கு தன் நாட்டின் ஓவியர்களை அழைத்தான். பல ஓவியர்கள் வந்து தங்கள் கைவண்ணங்களை காண்பித்தார்கள். ஒரு ஓவியன் மேய்ப்பன் ஆடுகளை பசும் புல்வெளிகளில் மேய்பது போலவும், மற்றொருவர் பயங்கரமான கோடைவெயிலில் ஒரு சிறுவன் ஒரு மரத்தின் அடியில் தூங்கிகொண்டிருப்பது போலவும் வரைந்தான். ஆனால் இன்னொரு ஓவியன் கடற்கரையில் கொந்தளிக்கும் புயல்காற்று போன்று சித்தரிக்கப்பட்ட காட்சி உயர்ந்த அலைகள் பாறையில் மோதிக் கொள்வது போலவும், காற்றினால் மரங்கள் வளைந்து ஆடுவது போலவும், வானம் இருளடைந்து, மின்னல் அடிப்பது போலவும் ஒரு பெரும் புயலை சித்தரிக்கும் தெளிவான தோற்றம். இருப்பினும் கடற்கரை பாறையின் ஓர் பிளவில் ஒரு புறா ஒன்று அமைதியாக அதன் கூட்டில் உறங்கி கொண்டிருப்பது போல வரைந்தார். பெரும்புயலின் மத்தியில் சமாதானம். ஏன் அந்த பாறையை அடைகலாக கொண்டு நம்பியிருந்தது. ஆகவே நாமும் இறைவனை நம் அடைக்கல பாறையாக கொள்வோம். சமாதானமாக வாழ்வோம்.

Dn. பர்னபாஸ் அப்பாதுரை
பாளையங்கோட்டை

21.01.2007

கிறிஸ்து பிறந்த திருநாளுக்குப் பின்வரும் 4ஆம் ஞாயிறு
(பிரசன்ன 3)

பொருள் : **சீடத்துவம்**

பாடங்கள் : ஏசா.42:1-7; 1பேது.4:12-19; லூக்.14:25-33

வசனம் : *1பேதுரு 4:14மு*

முன்னுரை :

சீஷனைக் குறிப்பதற்கு 'மதற்றேஸ்' என்ற கிரேக்கச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மதற்றேஸ் என்றால் 'கற்றுக் கொள்' என்று பொருள்படும். சீஷன் என்றால் கற்றுக்கொண்டு செயல்படுபவன். தன்னிடம் கற்றுக்கொண்டு உலகில் செயல்படும்படியாக இயேசு சீடர்களைத் தெரிந்து கொண்டார்.

சீடத்துவம் அல்லது சீடனின் குணங்கள் என்ன :

A) கிறிஸ்துவுக்காய் முழுமையான அர்ப்பணிப்போடு பின்பற்றுவது (லூக்கா 14:25-33)

'அக்கலூதெயின்' என்ற கிரேக்க சொல்லின் பொருள் 'பின்பற்று' அல்லது 'பின் செல்' என்பதாகும்.

மனுக்குலம் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கு முழு அர்ப்பணிப்போடு கிறிஸ்துவை பின்பற்றுவது.

தேவனுடைய இராஜ்யம் விரிவாய் கட்டப்பட வேண்டும் என்ற தாகம். இதற்கும் முழு அர்ப்பணிப்பு அவசியம்.

(உ.ம்) ராக்லண்டு ஐயர், டேவிட் லிவிங்ஸ்டன் போன்றவர்கள் தங்களை கிறிஸ்துவுக்கு முழுவதும் அர்ப்பணித்தவர்களாக தங்கள் சொந்த தேசத்தையும் விட்டு நம் பாரத மக்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள, தேவனுடைய இராஜ்யம் கட்டப்பட வேண்டும் என்ற நோக்கோடு இங்கு வந்தார்கள்.

முழு அர்ப்பணிப்போடு பின்பற்றுவது சீடத்துவம்.

B) கிறிஸ்துவுக்காய் பாடுகளை சகிப்பது சீடத்துவம் (1பேதுரு 4:12-19)

பேதுரு அப்போஸ்தலன் தனது நிருபத்தில் எழுதும்போது முழுமையான அர்ப்பணிப்போடு கிறிஸ்துவுக்காய் செயல்படும்

போது பாடுகளை சகிக்க வேண்டும். இதன் மூலம் தேவனை மகிமைப்படுத்துகிறோம் என்கிறார்.

(உ.ம்.) பரி.பவுல் கொலோ.1:24இல் 'நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்' என்கிறார்.

பவுல் தன்னை முழுவதும் கிறிஸ்துவுக்காய் அர்ப்பணித்து செயல்படும்போது பாடுகளைச் சகிக்கிறார். முன்பு பவுலோடு இருந்தவர்களாலே அவருக்கு பாடுகள் உண்டாகிறது. போதகர் உம்பிராண்ட் கிறிஸ்துவுக்காய் சிறையில் அடைக்கப்பட்டு பல பாடுகளைச் சகித்தார்.

கிறிஸ்துவுக்காய் பாடுகளைச் சகிப்பது சீடத்துவம்.

C) சீடத்துவத்துக்கு எடுத்துக்காட்டு "இயேசு கிறிஸ்து" ஏசாயா 42:1-7

மனுக்குலத்துக்கு தன்னை முழுவதும் அர்ப்பணித்தவராக, அனைத்து மனுக்குல பாவங்களுக்காக பாடுபடும் தாசனாக, நித்திய வாழ்வுக்கு வழிகாட்டியாக, ஒளி விளக்காக இந்த பூமியில் வந்தாரே. சீடத்துவத்தின் மாதிரியை இயேசு கிறிஸ்துவில் நாம் காண்கிறோம்.

(உ.ம்.) சாது சுந்தர்சிங் ஒரு கிராமத்தின் வழியாக நடந்து சென்றபோது அவரைக் கண்ட ஒரு சிறுமி தன் பெற்றோரிடம் கூறினாள். "இயேசு நடந்து போகிறார்" என்று கிறிஸ்துவுக்காய் தன்னை முழுவதும் அர்ப்பணித்து, கிறிஸ்துவுக்காய் பாடுகளைச் சகித்து, கிறிஸ்துவைப் போல வாழ்ந்து காட்டினார்.

சீடத்துவத்துக்கு எடுத்துக்காட்டாய் மனிதரில் உலகில் வாழ்ந்தார் சாதுசுந்தர்சிங்.

சீடத்துவத்தின் பலன் என்ன?

1பேது.4:14 - கிறிஸ்துவை மாதிரியாக வைத்து, கிறிஸ்துவுக்கு முழுவதுமாக தன்னை அர்ப்பணித்து செயல்படுவதால், பாடுகளை சகிப்பதால் பாக்கியவான்கள் கொடுத்து வைத்தவர்கள்.

கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக!

அருள்திரு R. ஜெபசிங்
மடத்துப்பட்டி

25.01.2007

புனிதர் பவுலடியார் திருநாள்

பாடங்கள் : எரே.1:4-10; அப்.9:1-20; மத்.19:27-30

முன்னுரை :

பவுல் பிறந்த காலம் கி.பி.5-10, அந்நேரத்தில் அகஸ்டஸ் சக்கரவர்த்தியாக இருந்தார். ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்படும்போது தான் வாலிபனாக இருந்ததை குறிப்பிடுகிறார் (அப்.7:58). பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர் (ரோ.11:1). இவருடைய யூதப் பெயர் சவுல். தான் எங்கு பிறந்தவர் என்பதை அவர் குறிப்பிடவில்லை. ஆனால் தர்சு பட்டணத்தின் குடியுரிமை பெற்றவர். பவுலுக்கு ஆதிகால கிறிஸ்தவ திருச்சபையோடு (Early Christian Community) தொடர்பு இருந்தது. அவர்களுடைய உபதேசத்தை கேட்டும் இருந்தார். இதன் விளைவாக கிறிஸ்தவர்களை துன்புறுத்துகிறவராக மாறினார்.

திருச்சபையை அழிக்க தீவிரமாக, துணிகரமாக செயலாற்றிய சவுலை தேவன் திருச்சபையை கட்டும் சிறந்த அப்போஸ்தலனாக மாற்றினார். துன்புறுத்திய பவுல் திருச்சபையை துரிதப்படுத்துகிறார். விசுவாசிகளை பயமுறுத்தியவர், ஊழியராக மாறுகிறார். ஒரு பெருமை நிறைந்த பரிசேயன் கிறிஸ்துவின் அடிமையாக மாறுகிறான். ஒரு யூதன் மனம் மாறுகிறான். பவுலும் தன்னுடைய மனமாற்றத்தை தானே நிருபங்களில் குறிப்பிடுகிறார் (கலா.1:15-16, 2:19-21, 6:14; பிலி.3:7-11; தீத்து 3:3).

பவுலின் திருநாளில், பவுலின் இறையியல் சிந்தனையை தியானிப்போம்.

கிறிஸ்துவுக்குள் வாழ்வு (Life in Christ)

நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் நீதிமானக்கப்படுதல் யூதர்களின் நம்பிக்கை. இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையின் வழியாக நாம் நீதிமானாக்கப்படுகிறோம் (ரோ.3:24). நீதிமானாக்கப்படுதல் தேவனுடைய கிருபையினால் உண்டாகிறது. இது ஒரு இலவச ஈவு. எந்த ஒரு மனிதனுடைய நற்செயல்களையோ, நன்மைகளையோ சார்ந்தது அல்ல (ரோ.4:1-5; 5:16; 8:33). பாவம் மனிதனை தேவனுக்கு முன்பாக

பிரிக்கிறது. கிறிஸ்துவின் மூலம் ஒப்புரவாக்கப்படும்போது நாம் தேவனோடு ஐக்கியமாகிறோம். ஒப்புரவாகுதல் (Reconciliation) என்கிற வார்த்தை பவுலின் நிருபங்களில் மட்டுமே காணப்படுகிறது. இதனை ரோமர், 2கொரிந்தியர் நிருபங்களில் பயன்படுத்துகிறார். இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவனுக்கும், மனிதனுக்குமுள்ள பகைமை நீக்கப்படுகிறது (ரோ.5:10). பவுல் ஒவ்வொரு கிறிஸ்தவனையும் பரிசுத்தவான்களாக கருதுகிறார் (1கொரி.1:2). இயேசு கிறிஸ்துவின் மூலம் நாம் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரங்கொடுக்கிறார். .....சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார் (எபே.1:6). புத்திரசுவிகாரம் (Adoption) இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் 5 முறை மட்டுமே வருகிறது. அதுவும் பவுலின் நிருபத்தில்தான் (ரோ.8:15,23; 9:4; கலா.4:5-7; எபே.1:6). இயேசு கிறிஸ்துவின் மூலமாக தேவனுடைய பிள்ளைகள் என்கிற புதிய அந்தஸ்தை பெறுகிறோம். ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் (2கொரி.5:17).

2. கிறிஸ்துவுக்குள் வாழ்தல் (Living in Christ)

இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவின் சாயலை (image) பிரதிபலிக்கிறவராக மாற வேண்டும் என பவுல் முக்கியப்படுத்துகிறார் (ரோ.8:29). இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் (கலா.2:20). கிறிஸ்துதான் நமக்கு ஜீவன் என்கிறார் (பிலி.1:21). நான் கிறிஸ்துவை உடையவன், நீங்களும் என்னைப் போல கிறிஸ்துவை உடையவர்களாகும்படி இருக்க வேண்டும் என்று பிரியப்படுகிறார் (1கொரி.11:1). கலாத்தியர் சபையிலே, மனமாற்றமடைந்த ஒவ்வொருவருக் குள்ளும் கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன் என்று எழுதுகிறார் (கலா.4:19).

ஒவ்வொரு விசுவாசியும் ஊழியனாக வரவேண்டும் என பவுல் எதிர்பார்க்கிறார். ஒவ்வொருவரும் கிறிஸ்துவுக்காக செயல்படு கிறவுர்களாக வளரவேண்டும். என்னால் இயன்ற மட்டும் இந்த ஊழியத்திற்கு நான் கடனாளியாயிருக்கிறேன் என்கிறார் பவுல். நாம் எப்படி?

டீக்கன் K. சாமுவேல் பீட்டர்
பொட்டல்பட்டி

26.01.2007

குடியரசு தினம்

பாடங்கள் : நெகே.2:1-10; அப்.15:1-21; மாற்.12:13-17

வசனம் : *மாற்கு 12:17*

குடியரசு ஆட்சி என்றால் என்ன? Republic என்பது பிரெஞ்சு மொழியில் இரண்டு வார்த்தைகளின் இணைப்பாகும். (உ.ம்.) Re-thing or affair ஒரு காரியம் அல்லது பொருள் என்றும் விளக்கப்படுகிறது. குடியரசு ஆட்சி மக்களுக்கு அதிகபட்சம் அதிகாரம் வழங்கப்பட்டு முடியாட்சியின் அதிகாரத்திற்கு நேர் மாறான செயல் என்பது பொருள்படுகிறது. இந்தியாவில் குடியாட்சி 1950ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் தேதி உருவானது. இதன் மூலம் இன, சமய, பால் என வேறுபாடின்றி அதிகாரம் ஒற்றை முறை ஆட்சியில் உருவாக்கப்பட்டது. இந்திய நாட்டினுடைய குடியரசு தலைவராக ஜனாதிபதி நியமிக்கப்பட்டார். இவர் பாராளுமன்றத்தில் இரு சபைகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜனாதிபதியினுடைய அதிகாரம் நாட்டின் பிரதமர் மூலம் அமைச்சர்கள் வழியாக செயல்பட்டு வருகிறது.

1. கிறிஸ்தவனும் குடியரசும் :

கிறிஸ்தவம் ஒரு சமய நிறுவனம். எனவே சமய அமைப்பாக இந்த நாட்டிற்கு ஆற்ற வேண்டிய கடமையை தவறாது ஆற்ற வேண்டும். குடிமக்களாக நாட்டில் அமைந்துள்ள இதர குடிமக்களோடு தங்களை ஒன்றுபடுத்துவது கிறிஸ்தவர்கள் இந்த நாட்டிற்கு ஆற்ற வேண்டிய கடமைகளில் சிறப்பானதாகும். நாட்டிற்கு ஆற்ற வேண்டிய கடமைகளில் அருளுரை வசனம் குறிப்பிடுவது போல இராயனுடையதை இராயனுக்கு செலுத்த வேண்டும். அத்துடன் கிறிஸ்தவர்களாக சிறப்பான சேவையும் ஆற்ற வேண்டும்.

2. குடியாட்சிக்கு கிறிஸ்தவர்களின் பங்கு சாக்கிரமெந்து தன்மை சார்ந்ததாகும்

திருச்சபையில் ஒரு கிறிஸ்தவனின் அங்கத்துவம் திருமுழுக்கு, திருவிருந்து ஆகிய இரண்டு நியமனங்கள் மூலம் உறுதிபடுத்தப்படுகிறது. திருமுழுக்கு சமுகத்தில் கிறிஸ்தவனின் ஈடுபாட்டையும் தனித் தன்மையையும் காண்பிக்கிறது. திருவிருந்து மக்களுக்காக ஆற்ற வேண்டிய தியாக செயலுக்கு அடையாளமாக இருக்கிறது. இதன் அடிப்படையில் ஓர் கிறிஸ்தவன் சுய நலவாதியாகவும் தன்னை தீமையிலிருந்து தப்பித்துக் கொள்பவனாகவும் இருக்க முடியாது. (யோவா.17:15).

பொதுவாக சமுதாயத்தில் தீமை வரும்போது மனிதன் அந்த சூழ்நிலையில் இருந்து தன்னை தப்பித்துக் கொள்கிற சோதனைக்கு உட்படுகிறான். ஆனால் ஒரு கிறிஸ்தவ குடிமகன் இந்த சோதனையிலிருந்து விடுபட வேண்டும். உதாரணமாக சமுதாயத்தில் சிறுபான்மையோர் என்று கருதப்படுகின்ற

மருத்துவர்களும், பொறியியல் வல்லுநர்களும் இன்னும் சிறப்பு தகுதி பெற்றவர்களும் தாங்கள் சிறுபான்மையோர் என்ற தாழ்வு நிலைக்கு தள்ளப்படாமல் பெரும்பான்மையோர் செய்ய தவறிய காரியங்களை நிறைவேற்ற தகுதி பெற வேண்டும். இன்று இந்திய நாட்டின் சூழ்நிலையில் கிறிஸ்தவர்களுக்கு சிறுபான்மையோர் என்ற தகுதியின் அடிப்படையில் சலுகைகளை பெற வாய்ப்புகள் கொடுக்கப்பட்டாலும் தங்களுடைய தன்னலமற்ற சேவையின் மூலமாகவே சரியான இந்திய குடிமக்களாக விளங்க முடியும்.

3. திருச்சபை கடவுளின் சமாதான தூதுவர்

சமாதானம் என்பது பிரச்சனையில்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்குதல் என்பது பொருள் அல்ல. "Shalom" என்று திருமறையில் பயன்படுத்தப்படுகின்ற வார்த்தை ஒருங்கிணைந்த வாழ்வு என்ற கருத்தை கொடுக்கின்றது. மக்களுக்கு சரி சமமாக நீதி வழங்கப்படாமல் அவர்களின் மனித தன்மைக்கு ஆபத்து உண்டாக்க அரசு உட்படுமானால் அதை அகிம்சை முறையில் எதிர்த்து போராட திருச்சபை முன் வர வேண்டும். இதுவே குடியாட்சிக்கு ஆற்ற வேண்டிய சமாதான செயலாகும்.

அருளுரை வசனத்தில் பரிசேயர்களிடத்திலும், வேதபாரகர்களிடத்திலும் இதைத் தான் ஆண்டவர் கற்று கொடுத்தார். அன்றைய இராயனுடைய ஆட்சிக்கு விரோதமாக செயலாற்றுபவர் என்று இயேசு கிறிஸ்துவை குறித்து குற்றம் சாட்ட அவர்கள் முற்பட்டபொழுது அவர் இராயனுடைய ஆட்சிக்கு செலுத்த வேண்டியதை செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இன்றைக்குரிய பழைய ஏற்பாட்டு வேத பகுதியில் (நெகே.2:1-10) நெகேமியா தன் பிதாக்களின் கல்லறைகள் இருக்கும் பாழாக்கப்பட்ட நகரம் எடுத்துக் கட்டப்பட வேண்டும் என்பது தான் தனது மகிழ்ச்சிக்கு அடிப்படையாக இருக்க முடியும் என்று தைரியமாகக் கூறினார். இந்திய நாட்டின் பழம் பெருமைவாய்ந்த கலாச்சார பாரம்பரியம் புதுப்பிக்கப்பட்டு கட்டப்படுவதில் கிறிஸ்தவர்கள் முன்னணியில் இருக்கிறார்கள் என்பதை இது காட்டுகிறது.

ஆதித் திருச்சபையில் ஆலோசனை மன்றம் (அப்.15:1-21) கூடி பிற இனத்தவராகிய கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துவில் பூரண சுதந்தரம் வேண்டும் என்று தீர்மானித்தது. இதன் அடிப்படையில் இந்திய நாட்டிலும் ஒரு குறிப்பிட்ட இனத்தவர் மட்டும் கிறிஸ்துவில் சுதந்தரத்தையும் சிலாக்கியங்களையும் பெற்றுக் கொள்வது சரியல்ல என்ற போதனை கிடைக்கிறது. திருச்சபையின் தலைவர்கள் கிறிஸ்துவில் தாங்கள் பெற்றுள்ள சுயாதீனத்தை அனைத்து மக்களுக்கும் சரி சமமாக இறையாட்சியை நிறுவுவதில் கடமை உணர்சியுடன் செயலாற்ற வேண்டும். இதுவே குடியாட்சியின் சிறப்பும் திருச்சபையின் மறுமலர்ச்சியும் ஆகும்.

அருள்திரு ஞா. ஸ்டீபன் லயனால், பாளையங்கோட்டை

28.01.2007

கிறிஸ்து பிறந்த திருநாளுக்குப் பின்வரும் 2ஆம் ஞாயிறு

தொழுநோயாளிகள் ஞாயிறு (பிரசன்ன 4)

பொருள் : **சுதந்திரமும் பொறுப்புணர்வும்**

பாடங்கள் : யாத்.20:1-17; கலா.5:1-6; லூக்.4:16-30

வசனம் : *"நாம் பிள்ளைகளானால் சுதந்திரருமாமே; தேவனுடைய சுதந்திரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூடப் பாடுபட்டால் அப்படியாகும்" ரோ.8:17.*

தேவன் தரும் சுதந்திரம் :

மனிதர்கள் சுதந்திரமாய் வாழ விரும்புகின்றார்கள். ஆனால் அநேகர் மற்றவர்களை அடிமைகளாக நடத்த விரும்புகின்றனர். நாடுகள் மற்ற நாடுகளை அடிமைப்படுத்த முயற்சி செய்கின்றன. தேவன் நமக்கு மெய்யான சுதந்திரத்தையும், விடுதலையையும், ஆவிக்குரிய வாழ்க்கையில் தருகிறார்.

யாத்திராகமம் 6:6இல் ஆதலால், இஸ்ரவேல் புத்திரரை நோக்கி; நானே கர்த்தர்; உங்கள் மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி நான் உங்களை விடுவித்து, உங்களை அவர்கள் அடிமைத்தனத்திற்கு நீங்கலாக்கி, ஓங்கிய கையினாலும், மகா தண்டனைகளினாலும் உங்களை மீட்பேன் என்று கர்த்தர் சொல்லுகின்றார். நீங்கள் சுதந்திரமாய் வாழ வேண்டுமென தேவன் விரும்புகிறார். தேவனுடைய தாசனாகிய தாவீது கர்த்தர் தன்னை தன்னுடைய சத்துருக்களுக்கு விலக்கி விடுவிக்கிறவர் 2சாமு.22:49 என்று சொல்கின்றார்.

பாவம் செய்கிறவன் பாவத்திற்கு அடிமையாய் இருக்கிறான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து "சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்று யோவா.8:32இல் கூறுகின்றார். நம்முடைய சுதந்திரம் உண்மையாகவே பாவத்திலிருந்து விடுதலை பெறுவதில்தான் உள்ளது. எரே.7:9,10இல் நீங்கள் திருடி, கொலை செய்து விபச்சாரம் பண்ணி, பொய் ஆணையிட்டு, பாகாலுக்கு தூபங்காட்டி, நீங்கள் அறியாத அந்நிய தேவர்களைப் பின்பற்றி, பிற்பாடு வந்து என் நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயத்திலே எனக்கு முன்பாக நின்று; இந்த அருவருப்புகளையெல்லாம் செய்வதற்காக விடுதலை பெற்றிருக்கிறோமென்று சொல்வீர்களோ? என்று கர்த்தர் கேட்கிறார்.

தேவனுடைய வீடு எல்லாருக்கும் ஜெபவீடு. அதை கள்ளர் குகையாக மாற்றாதீர்கள். கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலை உண்டு.

சத்தியத்தால் விடுதலையடைந்து பரிசுத்த ஆவியானால் சுதந்திரமாய் வாழ ஆண்டவர் அருள் செய்வாராக.

சுதந்திரம் பெற்றவர்களின் பொறுப்புணர்வு :

நம்முடைய ஆசீர்வாதங்கள் அனைத்தையும் சுதந்தரித்துக் கொள்ள விரும்புகின்ற அநேக கிறிஸ்தவர்கள் அநேக வேளையில் தங்களுடைய பொறுப்புகள் அனைத்தையும் தட்டிக் கழித்து விடுகின்றனர். ஜெபிக்கத் தெரியாதவர்கள் கிறிஸ்தவர்கள் என்ற நிலைமாற ஜெபிப்போம்.

கலாத்தியர் 5:13இல் சகோதரரே நீங்கள் சுயாதீனத்திற்கென்று அழைக்கப்பட்டீர்கள்; இந்த சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யுங்கள் என்று பவுல் சொல்கின்றார். சுதந்திரம் பெற்ற நாம் அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியம் செய்வது தேவன் விரும்புகின்ற காரியம். நியாய ஸ்தலத்தில் அநியாயமும், நீதி ஸ்தலத்தில் அநீதியும் காணப்படலாம். மனுஷ குமாரன் வரும்போது விசுவாசத்தைக் காண்பாரோ? சண்டாளர் உயர்த்தப்பட்டிருக்கும் போது துன்மார்க்கர் எங்கும் சுற்றித்திரிவார்கள். ஆனாலும் இயேசு மரண பரியந்தம் அன்பினால் ஊழியம் செய்ததைப் பின்பற்றி ஆசீர்வாதத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வோம். (யாத்.20:1-17) நம்முடைய கடமையை கற்பிக்கின்ற ஒரு பகுதி.

சுதந்திரத்தைப் பொறுப்புணர்வோடு செயல்பட்டோரின் ஆசீர்வாதம் :

நீங்கள் தேவனால் விடுதலைபெறும்போது நீங்கள் தேவனுடைய பிள்ளைகள் ரோ.8:14,15. அடிமைகள் அல்ல. கெட்ட குமாரன் தான் பாவம் செய்ததை அறிக்கையிடும் போது தகப்பன் அவனை மறுபடியும் மகனாக ஏற்றுக் கொள்கிறான். நாம் பிள்ளைகளானால் கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரராமே (ரோ.8:17). தாவீது கர்த்தர் என் சுதந்திரம் என்று சொல்கின்றான் (சங்.16:5). சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை லூக்.4:18 கூற வந்த இயேசுவைப் பின்பற்றி நாமும் அறிவித்தால் அநேகர் தேவனுடைய பிள்ளைகள் ஆவார்கள். எலியா சரெப்தா ஊரிலிருந்து ஒரு விதவையினிடத்தில் அனுப்பப்பட்டான். எலிசாவின் காலத்தில் சீரியா தேசத்தானாகிய நாகமான் குஷ்டரோகத்திலிருந்து சுத்தமானான். கர்த்தர் அனைவரையும் ஆசீர்வதிக்க விரும்புகிறார். தாலந்து உவமையிலே பொறுப்பை உணர்ந்து செயல்பட்டவர்கள் மாத்திரமே ஆசீர்வதிக்கப்பட்டார்கள் என்று காண்கிறோம் (மத்.25:14-30). நம்முடைய சுதந்திரத்தில் பொறுப்புணர்ந்து செயல்படுவோம். தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்.

அருள்திரு J. ஞானதுரை ராஜரத்தினம்
மாவடி

01.02.2007

மாதத்தின் முதல் நாள்

வசனம் : *"ஆண்டவரே நீரே என்னைக் காக்கும் கேடயம்" (திருப்பாடல் 3:3).*

முன்னுரை :

இவ்வுலகில் நம்மைப் பாதுகாப்பவர், பாதுகாக்கக் கூடியவர் ஆண்டவர் ஒருவரே. பலவிதமான ஆபத்துக்கள், தீங்குகள், தீமைகள், வியாதிகள், தீய மனிதர்களின் எதிர்ச் செயல்கள், சாத்தானுடைய தந்திர முயற்சிகள் - இவைகளிலிருந்து நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வது இயலாத ஒரு காரியம்.

இச்சங்கீதம் தாவீது அரசன் ஆண்டவர் மேல் தான் வைத்திருந்த தளராத நம்பிக்கையை வெளிப்படுத்திச் செய்யும் ஒரு ஜெபம். தனது அனுபவத்தின் வாயிலாக அவன் கூறும் ஒரு அனுபவ சாட்சி. திருப்பாடல் புத்தகத்தில் கீழ்க்காணும் வசனங்களில் 'ஆண்டவரே கேடகம்' என்று அறிக்கை செய்யப்படுகிறது (சங்கீதம் 18:2; 59:11; 84:9,11; 115:9-11; 144:2).

இவ்வுலகில் நமக்குப் பலவிதமான போராட்டம் உண்டே (எபே.6:12). கேடயம் எதிரியின் தாக்குதலிலிருந்து நம்மைப் பாதுகாக்கும் ஓர் சிறந்த போராயுதம். ஆண்டவரே அந்தக் கேடயம். யாருக்கு அவர் கேடயமாயிருக்கிறார் என்று இந்தத் தியானத்தின் வழியாகச் சிந்திப்போம்.

1. உத்தமாய் நடக்கிறவர்களுக்கு (நீதி.2:7பி)

உத்தமமாய் நடக்கிறவர்கள் என்பதற்கு இணையாக மாசற்றோர், நாணயமாக நடந்து கொள்வோர் என்ற வாசகங்கள் திருவிவிலியத்தில் பயன்படுத்தப்படுகின்றன. ஆங்கில வேதாகமங்களில் Blameless, Perfect, Integrity போன்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அ) எந்தச் சூழ்நிலையிலும் உத்தமம். யோபுவை உத்தமன் என்று ஆண்டவரே அறிவிக்கிறார். தன்னுடைய கொடிய துக்கம், பாடுகள், வேதனைகள் இவற்றின் மத்தியிலும் உத்தமமாக இருந்தார். மனைவி மற்றும் நண்பர்கள் பரிகாசம் செய்த போதிலும் 'என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்' (யோபு 27:5) என்று உறுதிபடக் கூறினார். சாத்தான் யோபுவின் விசுவாச வாழ்வை அழித்து விடாதிருக்க ஆண்டவர் அவருக்குக் கேடயமாயிருந்தார்.

ஆ) ஆண்டவரோடுள்ள உறவில் உத்தமம். நோவா உத்தமனாயிருந்தான். தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான். Noah Walked with God (ஆதி.6:9). எனவே ஜலப்பிரளயத்தால் அழிந்து விடாதபடி நோவாவையும் அவன்

குடும்பத்தாரையும் ஆண்டவர் பாதுகாத்தார். உத்தமமாய் நடக்கிறவன் பத்திரமாய் நடக்கிறான் (நீதி.10:9).

2. தம்மை நம்புகிற அனைவருக்கும் (சங்.18:30பி)

கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பைக் கண்ட சீடர்கள், ஆண்டவர் தங்களோடு இருந்தபோதும் அவர் தங்களைக் காப்பார் என்ற நம்பிக்கை அற்றவர்களாய்ப் பயந்து அலறினர். மாறாக ஆண்டவருடைய பாதுகாப்பையே முற்றும் நம்பியிருந்த சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களை அக்கினிச் சூளையிலிருந்தும், தானியேலைச் சிங்கங்களின் வாயிலிருந்தும் ஆண்டவரே தப்புவித்துக் காத்தார்.

'ஆண்டவரே . . . நீரே என் நம்பிக்கை' என்று பாடுகிறார் தாவீது (சங்.39:7). அவரைப் போல நாமும் 'கர்த்தரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார்' (சங்.37:5) என்றும் 'கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்' (சங்.138:8) என்றும் நமபிக்கையுடன் கூற முடியுமா? பவுலைப் போல நம்மை பெலப்படுத்துகிறவர் ஆண்டவராகிய கிறிஸ்துவே (பிலி.4:13) என்ற நம்பிக்கை உண்டா? முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருக்கிறோமா? (நீதி.3:5).

3. தம்மை அண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு (நீதி.30:5)

தம்மை அடைக்கலமாகக் கொண்டவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார் என்று திருவிவிலியம் மொழி பெயர்க்கிறது. He is like a shield for all who seek his protection (Good News Bible) அவரை அண்டிக் கொள்வது எப்படி? ஆண்டவரோடு நெருங்கிய உறவு கொள்வதின் மூலம்; அவர் சமுகத்தில் தரித்திருப்பதன் மூலம் (By being in closer communion / fellowship with God). அவரை நோக்கிக் கூப்பிடுவதன் மூலம் (By calling upon Him for help). ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு (சங்.50:15). பிலிப்பி பட்டணத்துச் சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டிருந்த பவுலும், சீலாவும் நடு இரவில் ஜெபம் பண்ணினார்கள். தேவனைத் துதித்துப் பாடினார்கள். சிறைக் கதவுகள் தாமாகவே திறந்து கொண்டன. ஆண்டவர் அவர்களை விடுவித்தார்.

ஆண்டவருக்கும் நமக்கும் நெருக்கமான தொடர்பு உண்டா? தேவனிடத்தில் சேருங்கள். அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார் (யாக்.4:8). நமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் எதுவும் இல்லாத இவ்வுலக வாழ்வில் ஒவ்வொரு நொடியும் நம்மைப் பாதுகாக்க வேண்டியவரான ஆண்டவரிடம் 'கர்த்தாவே நீர் என் கேடகம்' என்று அறிக்கை செய்வதும் என் கேடகமாயிரும் என்று விண்ணப்பம் செய்வதும் நமது அன்றாடக் கடமையாகவும் அனுபவமாகவுமிருக்கட்டும்.

திரு. S. சுந்தர்ராஜ்
கதீட்ரல் மேல்நிலைப்பள்ளி

02.02.2007

கிறிஸ்து திருமுன்னிலைப்படுத்தப்பட்ட திருநாள்

பாடங்கள் : 1சாமு.1:20-28; ரோ.11:13-12:2; லூக்.2:22-40

வசனம் : *"இயேசுவைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுத்தார்கள்" லூக்.2:23.*

முன்னுரை :

"Presentation" என்ற சொல்லைத் திருமுன்னிலைப்படுத்தல் என்பதோடு, ஒப்புக்கொடுத்தல், படைத்தல், அர்ப்பணித்தல் எனவும் மொழியாக்கம் செய்யலாம்.

சுத்திகரிப்பின் நாட்களைக் குறித்த மோசேயின் நியாயப்பிரமாணம் லேவி.12ஆம் அதிகாரத்தில் அடங்கியுள்ளது. முதற்பேறான ஆண் உயிர்கள் அனைத்தும் கர்த்தருக்குரியது என யாத்.13:12இல் வாசிக்கிறோம். இவற்றின்படி இயேசுநாதர் பிறந்து எட்டாம் நாளிலே, அவருக்கு விருத்தசேதனம் செய்ய, பெயரிட, பலி செலுத்த, காணிக்கை படைக்க அவருடைய பெற்றோர் அவரை எருசலேம் தேவாலயத்துக்குக் கொண்டு வருகின்றனர். அப்போது அவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்த இருவர், மகிழ்ச்சியோடு வரவேற்பதை லூக்.2:21 முதல் வாசிக்கிறோம்.

இந்த இருவரில் ஒருவர் சிமியோன். நீதியும் தேவபக்தியும் உள்ளவர். ஆலயத்தில் காத்திருந்தவர். பரிசுத்த ஆவியில் நிறைந்தவர். அடுத்தவர் அன்னாள் என்னும் விதவை. 84 வயதுப் பெண். இரவும், பகலும் உபவாசித்து, ஜெபம் பண்ணி, ஆலயத்திலேயே ஆராதனை செய்து ஆண்டவரின் வருகைக்காகக் காத்திருந்தவள்.

இவர்கள் இருவரின் முன்னிலையில் இயேசு நாதர் ஆலயத்தில் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்டார். இந்நிகழ்ச்சியின் மூலம் இத்திருநாளில் நாம் கற்றுக் கொள்ளும் மூன்று உண்மைகளைக் கீழே காண்போம்.

1. பாலகனாகவே படைக்கப்பட்டார்

நியாயப்பிரமாணத்தின்படி பலிப்பொருட்கள் படைக்கப்பட வேண்டியவை. அதோடு பாலகன் இயேசுவையும் படைத்தார்கள். பாலகனாகவே படைத்தார்கள், கர்த்தருக்குரியதை, கர்த்தருக்கென்று படைத்தார்கள், கர்த்தரிடம் பெற்றுக் கொண்டதைக் கர்த்தருக் கென்று படைத்தார்கள்.

சாமுவேல் பால் மறந்தவுடன், அவனை வாக்குப் பண்ணியபடி, கர்த்தருடைய ஆலயத்தில் அவனது பெற்றோர் கொண்டு வந்து ஒப்புக்கொடுப்பதை 1சாமு.1:28இல் வாசிக்கிறோம். சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருவதற்கு இடங்கொடுங்கள். அவர்களைத் தடைபண்ணாதிருங்கள் என்று இயேசு நாதர் தம் சீடரிடம் சொன்னதை நினைவுகூர்க.

குழந்தைகள் திருமுழுக்கிற்கு இந்நிகழ்வு ஒரு நல்ல அங்கீகாரம் குழந்தைகளைப் பாலகனாகவே படையுங்கள், வீண் காலதாமதம் வேண்டாம் விரைந்து வருக.

2. பலியாகப் படைக்கப்பட்டார் :

பலிப்பொருட்களோடு படைக்கப்பட்ட இயேசுநாதர் பலியாகவே படைக்கப்பட்டார். ஜீவ பலியாகவே படைக்கப்பட்டார் ரோ.12:1,2இல் ஜீவ பலியாகப் படைக்க, தூய பவுலடிகளார் நம்மை அழைப்பதை நினைவிற்கொள்க. பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுள்ள ஜீவ பலி. இதுவே புத்தியுள்ள வழிபாடு. பொருளுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை.

3. பணியாளாகப் படைக்கப்பட்டார் :

"உம்முடைய இரட்சண்யத்தை என் கண்கள் கண்டன" எனச் சிமியோன் பாடுபவதை லூக்.2:32இல் வாசிக்கிறோம். இயேசு நாதரை விடுதலை அளிக்கிறவராக, பரமனின் பணியைச் செய்கிறவராகச் சிமியோன் தமது விசுவாசக் கண்களால் கண்டார். இயேசு நாதர் செய்ய வேண்டிய இரட்சண்யப் பணியைச் சிறுவயதிலேயே நினைவூட்டி, அவரை ஆண்டவராக அங்கீகரித்து ஏற்றுக்கொண்டார்.

நம் பிள்ளைகளை அரசர்களாக அல்ல, அரசரின் அடிமைகளாக ஒப்புக்கொடுப்போம். நாமும் அர்சர்களாக அல்ல, அரசரின் பணியாட்களாகப் பணிபுரிவோம். வாழ்வோம், வாழ்நாள் முழுவதும் கிறிஸ்துவுக்காக, கிறிஸ்துவோடு வாழ்வோம்.

அன்னாளைப் போல, கர்த்தரைப் புகழ்ந்து, கர்த்தரைக் குறித்துப் பேசி, இரவும் பகலும் எந்நேரமும் அவருக்கு ஆராதனை செய்வோம். அவர் அருளும் சமாதானத்தைப் பெற்றுக் கொள்வோம்.

அருள்திரு மதுரம் டேவிட் சாமுவேல்
மிலிட்டரி லைன்ஸ்

04.02.2007

கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளுக்கு முன்வரும் 9ஆம் ஞாயிறு

(செப்துவகெசிமா)

பொருள் : **திருச்சபையிலும் சமுதாயத்திலும் பெண்கள்**

பாடங்கள் : **நீதி.31:10-31; கலா.3:18-29; யோவா.11:17-45**

வசனம் : *நியாயாதிபதிகள் 5:7*

முன்னுரை :

ஆதியில் தேவன் ஆதாமுக்கு துணையாக ஒரு மனுஷியை சிருஷ்டித்தார். பெண்ணும் உலகத்திற்கு தேவை என்ற நோக்கத்தோடு உருவாக்கினார். பெண்கள் பயனற்றவர்களாக அல்ல.

சமுதாயப் பணியில் பெண்கள் :

சமுதாயம் விரும்பும் பெண். குணசாலி என அழைக்கப்படுகிறாள். அவள் சுறுசுறுப்பானவள். கடும் உழைப்பாளி. ஏழைகளுக்கு இறங்குகிறள். அவள் வாய் ஞானமுள்ள வார்த்தைகளை பேசும். அவள் கர்த்தருக்கு பயப்படுகிறவள்.

முக்கிய தலைவர்களை உருவாக்கும் பணியில் பெண்கள் முக்கிய இடம் பெற்றிருக்கிறார்கள். மோசே, இஸ்ரவேலின் தலைவனாக தெரிந்து கொள்ளப்பட்டவன். மோசேயின் தாய் அவனை மூன்று மாதம் ஒளித்து வைத்தாள். மோசேயின் சகோதரி மிரியாம் மோசே நைல் நதியில் வைக்கப்பட்டபோது பாதுகாக்கிறாள். பார்வோன் குமாரத்தி தன் தகப்பனுடைய சட்டங்கள், செயல்பாடுகளை அறிந்திருந்தும் ஒரு எபிரேய குழந்தையை வளர்த்து ஆளாக்கினாள். இவ்விதமாக பெண்கள் தெய்வத்திட்டத்தில் பயன்படுத்தப்பட்டனர்.

மிரியாம் : யாத்திராகமம் 15

ஒரு கூட்ட பெண்களுக்கு தலைவியாக பாட்டிலும், நடனத்திலும், வழிநடத்தினாள். அந்நாட்களில் ஒருசில பெண்களே இவ்விதமாக தலைமை வகிக்கும் சுதந்திரம் பெற்றிருந்தார்கள். பொதுவாக எபிரேய கலாச்சாரம் பெண்களுக்கு எதிராகவே இருந்தது. இவ்வித சுவர்களை தகர்த்து தீர்க்கதரிசி என்ற பெயர் பெற்றாள் மிரியாம். திருமணம் ஆகாதவள். மோசேயுடன் வனாந்தர பிரயாணத்தை மேற்கொண்டாள்.

தெபோராள் :

"நான் இஸ்ரவேலிலே தாயாக எழும்பும் வரை கிராமங்கள் பாழாய்ப் போயின" (நியாயா.5:7). இவளுடைய காலம் பெண்களுக்கு சிந்தனையில்

பேச்சில் செயலில் சுதந்தரம் கிடைத்த நாட்கள். பவுல் சொல்லுகிறபடி "தேவனுடைய பிள்ளைகளின் மகிமையான சுதந்திரம்" தெபோராளும் தீர்க்கதரிசி என்ற பெயர் பெற்றவள். அவள் இஸ்ரவேலரை நியாயம் விசாரித்த நியாயதிபதி. மோசேயின் சட்டங்களையும், முறைகளையும், திறமையுடன் கற்றிருந்தாள். இத்தகைய திறமையுடனும், தகுதியுடனும் பெத்தேலுக்கும் ராமாவுக்கும் இடையில் பேரீச்ச மரத்தடியில் தன் அலுவலகத்தை அமைத்துக் கொண்டாள். இஸ்ரவேலர் நியாயத்திற்காக வழக்குகளை அவளிடம் கொண்டு வந்தார்கள். அவளது ஞானமான ஆலோசனைகளில் திருப்தியடைந்தார்கள்.

இவ்விதமாக சமுதாயத்திற்கென்று உழைத்த பெண்கள் பலர் உண்டு. இன்றைய உலகில் பெண்கள் தொழில் அதிபர்களாகவும், அரசாங்க அதிகாரிகளாகவும் பல உயர்ந்த பதவிகளில் தியாகத்துடன் சமுதாயத்திற்கு நற்பணி செய்கிறார்கள். மதர் தெரசாவின் சமுதாயப் பணியை மறுக்க முடியாது.

மேரி ஸ்லசெர் இருண்ட கண்டமாகிய ஆப்பிரிக்காவிற்கு மிஷனெரியாகச் சென்றாள். பின் நைஜீரியா நாட்டில் நைஜீரியா அரசாங்கத்தால் Judgeஆக நியமிக்கப்பட்டாள். டாக்டராக மருத்துவ பணி செய்தாள். கட்டடங்கள் கட்டினாள்.

இந்திய கலாச்சார சூழ்நிலையில் பெண்கள் தலைமைப் பொறுப்பேற்று அரிய பெரிய காரியங்களை நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறதை நாம் அறிவோம்.

திருச்சபையில் பெண்கள் :

இயேசு கிறிஸ்துவின் காலத்தில் அவரோடு இணைந்து உழைத்த பெண்கள் பலர். லூக்.8:1-3. சிலுவை வரை இயேசுவை பின் சென்றவர்கள் பெண்கள். இயேசு உயிர்தெழுந்தார் என்ற செய்தியை முதலில் அறிவித்தவர்கள் பெண்கள்.

அப்போஸ்தலர் 1:14 திருச்சபை உருவாகும் முன் ஒருமனப்பட்டு ஜெபத்தில் தரித்திருந்த குழுவில் பெண்களும் இருந்தார்கள்.

ஆதித்திருச்சபையில் விதவைகள் விசாரிக்கப்படுவதற்காக பரிசுத்தாவியும் ஞானமும் நற்சாட்சியும் பெற்ற ஏழு பேர் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். பெண்களை பற்றிய கரிசனை திருச்சபைக்கு இருந்தது.

பேதுரு சிறைச்சாலையில் இருக்கும்போது அவருடைய விடுதலைக்காக இராமுழுவதும் ஜெபித்த குழுவிலும் பெண்கள் இருந்தார்கள்.

பிலிப்பி பட்டணத்தில் ஒரு ஆற்றினருகே பெண்கள் வழக்கமாய் கூடி வந்தார்கள். லீதியாள் இரத்தாம்பரம் விற்கிறவள். தன் இருதயத்தில் வேத வசனத்தை ஏற்றுக் கொண்டாள்.

ரோமர் 16:1 கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய (Deaconess) நம்முடைய சகோதரி பெபேயாள். திருச்சபையின் தலைவியாக பெபேயாள் பணி செய்திருக்கிறாள்.

நம்முடைய திருநெல்வேலி திருச்சபை ஒரு பெண்ணினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தியத் திருச்சபையில் எமிகார் மைக்கேல், ஐடா ஸ்கடர், சாராள் டக்கர், ஆஸ்க் வித் போன்ற எத்தனையோ பெண்கள் சமுதாயத்திற்கும் திருச்சபைக்கும் சேவை செய்திருக்கிறார்கள்.

வேதாகமத்தில் சில புத்தகங்களை எழுதவும் பெண்கள் தேவனால் பயன்படுத்தப்பட்டுள்ளார்கள்.

முடிவுரை :

இயேசு கிறிஸ்துவை தம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தங்கள் வாழ்க்கையை அவருடைய சித்தத்திற்கு அர்ப்பணித்து கீழ்ப்படிந்து நடக்கிற நபர் யாராயினும் தேவன் பயன்படுத்துகிறார். ஆண் என்றோ பெண் என்றோ இல்லை.

Rev. Sis. பிரேமா
பாளையங்கோட்டை

********* ********* *********

11.02.2007

உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் 8ஆம் ஞாயிறு
(செக்சகெசிமா)

பொருள் : **மனுக்குல வீழ்ச்சி**

பாடங்கள் : **ஆதி.3:1-7; ரோ.5:12-21; யோவா.3:1-16**

வசனம் : *பிரசங்கி 7:29*

முன்னுரை :

மனிதனின் வாழ்க்கை சரிதம் மிக உன்னதமானது. கடவுள் மனிதனை மட்டும் மிக, உன்னத நிலையில் படைத்திருந்தார். அவன் அற்பமானவனாகக் காணப்பட்டாலும் அவனுக்குள் இருக்கும் மகிமை மேன்மையானது.

மனிதன் சிருஷ்டிப்பின் மகுடம் (ஆதி.1:27,28; 2:7)

"தேவன் தமது சாயலாக மனிதனை சிருஷ்டித்தார். அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்".

"ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான்".

நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும், ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்".

Man in crown of creation என்று ஆங்கிலத்தில் கூறும் வாசகத்தை நாம் கேட்டிருக்கலாம். "மனிதன் சிருஷ்டிப்பின் மகுடம்". சிருஷ்டிகளில் எல்லாம் கிரீடமாயும், மகுடமாயும், மகிமையாயும் மனிதன் படைக்கப்பட்டான் என்பதை மேற்கண்ட வசனங்கள் மூலம் அறிகிறோம்.

"பகலில் குளிர்ச்சியான வேளையில் தேவன் தோட்டத்தில் உலாவினார்" ஆதி.3:8.

தேவன் மனிதனோடு ஒட்டி உறவாடி ஐக்கியம் கொண்டிருந்தார். இந்த மாபெரும் மாட்சிமை வேறொரு சிருஷ்டிக்கும் கொடுக்கப் படவில்லை. மனிதனுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருந்தது.

மனிதன் மகிமையை இழந்தான் (ஆதி.3:1-24)

இந்த மாபெரும் மகிமையை மனிதன் தனது கீழ்ப்படியாமை யினால் இழந்தான். அனைத்தையும் ஆளவேண்டிய அவன், அவனால் ஆளப்படவேண்டிய அனைத்துக்கும் அடிமையானான். அவன் நிமித்தம் பூமி சபிக்கப்பட்டது. உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதன் பலனைப் புசிக்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டான். பூமியானது முள்ளையும், குருக்கையும் பிறப்பித்தது. தனது ஆதிமேன்மை, மகிமை எல்லாவற்றையும் இழந்தான். ஆதாமும் ஏவாளும் மட்டுமல்ல அவர்கள் மூலம் மனுக்குலம் முழுவதுமே சாபத்துக்குள்ளாகிவிட்டது.

கடவுளின் ஐக்கியத்தை இழந்தான்
தேவனுடைய ஜீவனை இழந்தான்
தேவனுடைய சாயலை இழந்தான்
நித்திய மரணத்தை சுதந்தரித்துக் கொண்டான்

இவ்வாறு தனது மேன்மை, மகிமை, உயர்வு, நித்திய ஜீவன், தேவனுடைய ஐக்கியம் அனைத்தையும் இழந்து நரகத்தின் மக்களாய் சாத்தானின் வலைக்குள் அகப்பட்டுக் கொண்டான்.

வீழ்ச்சியின் விளைவு (எபே.4:17-19; ரோ.6:23)

இந்த கீழ்ப்படியாமையின் விளைவால் மனிதன் பாவத்திற்கு அடிமையாகிவிட்டான். அவன் இருதயம் இருளடைந்தது. தேவனுடைய ஜீவனுக்கு அந்நியனாகி விட்டான். கேடான சிந்தையால் ஆட்கொள்ளப்பட்டான். எல்லாவற்றுக்கும் மேலாக பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை சம்பாதித்துக் கொண்டான்.

தேவனுடைய மகிமையையும், ஐக்கியத்தையும், நித்திய ஜீவனையும் இழந்து விட்டான். தேவனுடைய ஐக்கியத்தை இழந்து, தனது சுயாதீனத்தை இழந்து, பாவத்தின் அடிமைத்தனத்திற் குள்ளாக்கப்பட்ட படியால் அவன் விரும்புவதை செய்யாமல் அவன் விரும்பாத தீமையையே செய்து சாபத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறான் (ரோ.7:14-25).

கிறிஸ்துவில் புது வாழ்வு :

பாவத்தின் விளைவினால் தேவ துரோகியாய் இருந்தாலும், மனதின்படி தேவனுக்கு சத்துருவாயிருந்தாலும், நமது செயல்களும், கிரியைகளும் தேவனுக்கு விரோதமாயிருந்தாலும், தேவன் நம்மைத் தள்ளாமலும், புறக்கணியாமலும், ஆக்கிணைக்குள்ளாகத் தீர்க்காமலும், நமது பாவங்களைப் போக்கும் பலியாகத் தமது ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நமக்காக அனுப்பிக் கொடுத்து, அவர் தமது ஜீவனை நமக்காகக் கொடுத்து, அவரது இரத்தத்தால் நமது பாவங்களை மன்னித்து, கிறிஸ்துவுக்குள் நம்மை அவரோடு ஒப்புரவாக்கி, பாவத்தினால் இழந்து போன அனைத்து தேவ ஆசீர்வாதங்களையும் கிறிஸ்துவுக்குள் நிறைவாய்த் தருகிறார். கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக்குகிறார் (2கொரி.5:17).

நிறைவுரை :

கீழ்ப்படியாமையினால் வீழ்ந்து போன மனுக்குலம், கிறிஸ்து இயேசுவுக்குள் தூக்கி எடுக்கப்பட்டு, நிலைநிறுத்தப்பட்டு, இழந்து போன எல்லாவற்றையும் நாம் பெற்றுக் கொள்ளும் வழியை உருவாக்கியுள்ளது.

இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார் (லூக்.19:10).

அருள்திரு T. தேவசகாயம் சாமுவேல்
கரிசல்

18.02.2007

கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் 7ஆம் ஞாயிறு
(கின்குவகெசிமா)

பொருள் : **இரட்சிப்பு**

பாடங்கள் : **யாத்.15:22-27, ரோமர் 12:1-8; லூக்.3:3-18**

வசனம் : *"நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளை செய்வாயாக" வெளி.2:5மு.*

முன்னுரை :

இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் (மத்.1:21) ஊழியத்தில் (லூக்.19:10), சிலுவை மரணத்தில் (கொலோ.1:14) அவருக்குள் அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு உண்டாயிருக்கிறது. இந்த நற்செய்தி அப்போஸ்தலர் மூலமாக சகல ஜனங்களுக்கும் அறிவிக்கப் படுகிறது. பேதுருவும், யோவானும் அப்.4:12இல் "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை என்றனர். பிறப்பின் நற்செய்தியிலும் மேய்ப்பர்களுக்கு (லூக்.2:11)இல் "இன்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் என தேவதூதன் மூலமாக உரைக்கப்பட்டது. இரட்சிப்பு கர்த்தருடையதாக இருந்தாலும் இரட்சிக்கப்பட மனுக்குலம், பாவங்களிலிருந்தும் அக்கிரமங்களிலிருந்தும், இருளின் அந்தகாரக் கிரியைகளிலிருந்தும், விடுதலை பெறவேண்டும், மனந்திரும்ப வேண்டும். மனந்திரும்பி, பாவமன்னிப்பாகிய மீட்பை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும். எனவே, யோவான் ஸ்நானகன் மூலமாக அழைப்பு கொடுக்கும்பொழுது சுவிசேஷப்பகுதி லூக்.3:3-17 குறிப்பாக லூக்.3:6இல் பாவமன்னிப்புக் கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தை குறித்து பிரசங்கித்தார். இயேசு கிறிஸ்துவும் "மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என பிரசங்கித்தார். அப்போஸ்தலர்கள் மூலமாக இந்த செய்தி சொல்லப்படும்பொழுது அப்.3:20இல் "உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யும் பொருட்டு, நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள் என்றனர். பவுல், சிறைச்சாலைக்காரன் கேள்விக்கு பதிலுரைக்கும்பொழுது அப்.16:31இல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி போதித்தார்கள். எனவே

இரட்சிக்கப்பட மனுக்குலத்தின்படி நிலைகள் பல உண்டு என்பதை நாம் ஆராய வேண்டும். திருச்சபை, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்டெடுக்கப்பட்ட மனுக்குலம் அடங்கியதாகும். இரட்சிக்கப்படுகிறவர்களைதான் கர்த்தர் சபையில் சேர்த்து வந்தார். இரட்சிக்கப்பட நாம் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வியை நாம் கேட்கும்பொழுது :

1. முதலாவது (ACCEPT)

நாம் நமது உண்மையான நிலையை ஒத்துக் கொள்ள வேண்டும், நமது நீதிகளெல்லாம் கர்த்தருக்கு முன்பாக அழுக்கான கந்தை போல் உள்ளன (ஏசா.64:6) ஒருவேளை வெளிப்படையான தீய செயல்கள் நம்மிடத்தில் காணப்படாமல் இருக்கலாம். ஆனால் மனிதனின் இருதயத்திலிருந்துதான், பொல்லாத சிந்தனைகள், பொருளாசை, பொறாமை, பெருமை முதலானவை வெளிவருகின்றன (மாற்.7:22) ரோ.3:23இன்படி, நாம் எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்கள், "நான் பாவி" என் ஒத்துக்கொண்டு, பரிசேயனைப் போலல்ல ஆயக்காரனைப் போல லூக்.18:13இன்படி "பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று ஒத்துக் கொள்வோம். லூக்.5:8இன்படி பாவியான மனுஷன்" என்போம். சகேயுவுப் போல் பாவத்தை ஒத்துக்கொள்வோம்.

2. இரண்டாவது (Belive) :

நமது பாவத்திற்கு பரிகாரி இயேசு கிறிஸ்துதான் என்று விசுவாசிப்போம். 1யோவா.1:7 இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் லூக்.5:24இன்படி "பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை அறிந்து விசுவாசிப்போம், "உன் விசுவாசமே உன்னை இரட்சித்தது" என கிறிஸ்துவின் குரலை கேட்போம், விசுவாசிப்போம் இரட்சிக்கப்படுவோம்.

3. மூன்றாவது (Confess) :

நமது உள்ளத்தின் நம்பிக்கையை அறிக்கையிட வேண்டும். "இயேசுவே ஆண்டவர்" என வாயார அறிக்கையிட்டு நமது உள்ளத்தினால் நம்பினால் மீட்பு பெறுவோம் (ரோ.10:9). நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப் படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைப் பண்ணப்படும். தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான் (நீதி.28:13).

இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப் போமானால் தண்டனைக்கு எப்படி தப்பித்துக் கொள்வோம்.

இரட்சிப்பின் அனுபவம் :

1) மனந்திரும்புதலுக்கேற்ற கனி கொடுப்பது (லூக்.3:8)

நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் (லூக்.3:9).

ஆவியின் கனி கொடுக்க, நற்கிரியைகளை செய்ய அழைக்கப் படுகிறோம்.

2) பரிசுத்த வாழ்வு வாழ்தல் (ரோ.12:1,2)

நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தத் தேவனுக்கு பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும். மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகும் அனுபவம் நமது அனுபவமாகட்டும் தேவன் நம்மை அசுசத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கென்றே அழைத்திருக்கிறார். நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாய் இருக்கிறது (1தெச.4:3,7).

3) நிலைத்திருத்தல் (மத்.24:13)

"முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான், இரட்சிப்பின் அனுபவத்தில் நிலைத்திருத்தல் அவசியம், பின்வாங்கிப் போகக் கூடாது. யோவா.15:9இன்படி அன்பில் நிலைத்திருக்க வேண்டும். யோவா.15:7இன்படி வார்த்தையில் நிலைத்திருக்க அழைக்கப்படுகிறோம். திருவசனமாகிய வெளி.2:4,5இன்படி, எபேசு சபையின் குறையை ஆவியானவர் சுட்டி காண்பிக்கிறார். வெளி.3:4 ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்கு குறையுண்டு. ஆகவே அழைப்பு கொடுக்கப்படுகிறது. 5ஆம் வசனத்தின்படி நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியையை செய்வாயாக.

மேற்கண்ட தியானத்திலிருந்து இரட்சிக்கப்பட A, B, C என்ற மூன்று படி நிலையில் 1) Accept, 2) Believe, 3) Confess இரட்சிப்பின் அனுபவமாகிய 1) மனந்திரும்புதலுக்கேற்ப கனிகொடுப்போம், 2) பரிசுத்த வாழ்வு வாழ்வோம், 3) நிலைத்திருப்போம்.

நிலையான இரட்சிப்பாக நிலையான வாழ்வை சுதந்தரித்துக் கொள்வோம்.

அருள்திரு J. கிங்ஸ்லி ஜாண்
சங்கரன்கோவில்

21.02.2007

சாம்பற்புதன்

பொருள் : **ஆயத்தம்**

பாடங்கள் : ஏசா.58:1-8; 1கொரி.9:19-27; மாற்.8:34-38

வசனம் : *"ஒருவன் என் பின்னே வரவிரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" (மாற்.8:34பி).*

முன்னுரை :

இயேசுவின் பின்செல்ல ஆயத்தப்பட வேண்டும். தனி நபராக, நம்மை நாமே சுத்திகரிக்க வேண்டும். ஏசா.1:15இல் ஏன் சுத்திகரிப்பு செய்ய வேண்டுமென, கர்த்தர் சொன்னார், உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை, உங்களை விட்டு மறைக்கிறேன்; நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன். உங்களை கழுவி சுத்திகரியுங்கள், உங்கள் கிரியைகளின், பொல்லாப்பை, என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, தீமை செய்தலை விட்டு ஓயுங்கள். இந்த தபசு நாட்களில் தேவன் நம்மில் இவற்றை எதிர்பார்க்கிறார். ஆமோ.5:19இன்படி சுத்திகரியாது தப்பித்துக்கொள்ள வழியில்லை, ஆமோஸ் கூறுகிறார், சிங்கத்துக்கு தப்பினவனுக்கு கரடி எதிர்பட்டது; வீட்டினுள்ள சுவர்மேல் தன் கையை வைத்தபோது பாம்பு கடித்தது போலவும் தண்டனைத் தீர்ப்பு தொடர்ந்து பின்வரும், என்கிறார், ஆக தகனபலி, போஜனபலி, ஸ்தோத்திரபலி இவற்றை நான் நோக்கேன் என கர்த்தர் சொல்லுகிறார். ஆதலால் நாம் இன்று ஆரம்பிக்கும் தபசுநாட்களில், நாமும் நமது குடும்பமும், சுத்திகரிப்பு, ஆயத்தம் என்னும் வாசல் வழியாய் உட்பிரவேசிக்க முயற்சி செய்ய வேண்டும்.

1. தபசு கால ஆயத்தம் எதற்காக?

நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும், அழுகையோடும், புலம்பலோடும், உங்கள் முழு இருதயத்தோடும் தேவனிடத்தில் திரும்புங்கள், ஆக இங்கே நாம் இதயத்தை கிழித்து தேவனாகிய கர்த்தரிடம் திரும்ப வேண்டும் (யோவே.2:12-13). ஆகவே தேவன் நமக்கு செய்வேன் என்ற தீங்கில் இருந்து விலக்க, குறிப்பாய் நம்மேல் மனஸ்தாபபட ஆயத்தம் அத்தியாவசியம் தேவையானது (யோனா 3:10). எனவே ஆயத்தம் செய்ய அர்ப்பணிக்க வேண்டும், தாவீது ராஜா தன்னை கீழ்ப்படுத்தி என்னை கழுவியருளும். அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன் என்றார். நமது அக்கிரமங்கள் நீங்க ஆயத்தப்பட வேண்டும், நிலைவரமான

பரிசுத்த ஆவியை நமது உள்ளத்தில் புதுபிக்க ஆயத்தம் அவசியம் (சங்.51). புறம்பேயிருந்து மனுஷருக்குள்ளே போகிறதொன்றும் தீட்டுப்படுத்தாது, அதுவோ அவன் இதயத்தில் போகாமல் வயிற்றிலே போகிறது, அதேவேளை மனுஷருக்கு உள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்துவிடும். அதாவது இதய சிந்தை, மதிகேடு, உணர்வில்லாமை இவைகள் நம்மை அசுத்தப்படுத்தும், எனவே நாம் நம்மை ஆயத்தப்படுத்த வேண்டும். அதன் பின்னர் மற்றவரையும் ஆயத்தப்பட தூண்ட வேண்டும்.

2. தபசு காலத்தில் ஆயத்தப்படுதற்கான அறிகுறிகள் எவை?

இஸ்ரவேல் சந்ததியார், மறுஜாதியாரை விட்டு பிரிந்து, தனியே நின்று, பாவங்களையும், தம் பிதாக்களுடைய அக்கிரமங்களையும் அறிக்கையிட்டார்கள், உபவாசித்து இரட்டுடுத்தி, புழுதியை தங்கள் மேல் போட்டு, தரைமட்டும் தாழ்த்தினார்கள். இஸ்ரவேலர் எழுந்திருந்து தங்கள் நிலையில் நின்றார்கள். ஒரு ஜமாமம் மட்டும் நியாயப்பிரமாணம் விடாமல் வாசிக்கப்பட்டது. பின்னர் மறு ஜாமம் முழுவதும், தங்கள் தங்கள் பாவங்களை தேவசமூகத்தில் அறிக்கையிட்டனர். கர்த்தரோ மதிகேட்டால் தவறினோரை தப்பவிடாது நிர்மூலமாக்கினார். அப்பொழுது கூறப்பட்டதாவது, சீயோன் குமாரத்தியே நதியவ்வளவாய் கண்ணீர்விடு, ஓய்ந்திராதே, உன் கண்ணின் கறுப்பு விழி, சும்மாயிருக்கவொட்டாதே, எழுந்திரு. முதற்சாமத்தில் கூப்பிட்டு, இதயத்தை ஊற்றிவிடு, உன் கைகளை ஏறெடு, யாருக்கு கர்த்தாவே இந்த பிரகாரமாய் செய்தீரென நோக்கிப்பாரும் என ஸ்திரி, புருஷர், வாலிபர், சிறியோர், முதலானோர் ஆயத்தப்பட்டதற்கான அறிகுறிகள் உள்ளன (புல.2). ஆதலால் பவுல் எது புத்தியுள்ள ஆராதனை என்றார். சரீர சுத்திகரிப்பு அதாவது பரிசுத்தமான ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பது, தேவ இரக்கங்களை முன்னிட்டு, சர்வாங்க தகனபலியாக, நமது ஆன்ம ஈடேற்றத்திற்காக அர்பணிப்பது தான் உண்மையான ஆயத்தத்திற்கான அறிகுறியாகும்.

3. தபசு கால ஆயத்தம் செய்துவிட்டோம் என்றால் என்ன?

தபசு காலம் நம்மை வருத்தி உபவாசிக்கையில் மனுஷர் காண என்று செய்யாது, பிதா ஒருவர் காண ஆராதிப்பது (மாற்.6). இதற்கு கடவுளின் வெளியரங்கமான ஆசீர்வாதம் உடனே கிடைக்கின்றது. ஆயக்காரன் தன்னை தூரத்தில் நிறுத்தி தேவனோடு அளவளாவி சம்பாஷித்தான், ரத்தின சருக்கமான ஆயத்தம் செய்தான், தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாய் இரும் என்கிறான். இதிலே பாருங்கள் ஆயக்காரன் நீதிமானாய் வீடுதிரும்பினான். ஆயத்தப்பட தாழ்மை அவசியம் (லூக்.18). ஆத்துமாவை ஒடுக்குவது என்பது சுய இச்சையில் சாராது, உள்ளத்தில் உண்மை இருக்க விரும்புவது, தெய்வீக ஞானத்தின்படி செய்ய அர்ப்பணிப்பது, சுய நீதியை,

அகற்றும் ஆயத்தம் செய்து விட்டோம். தெய்வ சமூகத்தில் ஒப்புரவாகி விட்டோம். கிறிஸ்துவின் ஒளியில், மாசற்ற வாழ்வுக்கு நேராய் நம்மை திசை திருப்பியது திருவசனம். அதனை காத்து நடந்த விதம், நம்மை தேவசாயலாக மாற்றியது. அவரது திருரத்தத்தினாலாகிய மீட்பின் பாதைவழியே பயணமானால், கிறிஸ்து இயேசுவில் நித்திய வாழ்வும், சமாதானமும் நமக்கு கிடைக்கின்றது.

முடிவுரை :

ஆயத்தம் செய்துவிட்டால் போதாது. தெய்வீக விசுவாசத்தில் உறுதியாயிருந்து, பிசாசுக்கு எதிர்த்து நிற்க வேண்டும். தெளிந்த புத்தியுள்ளோராய் விழித்திருக்க வேண்டும் (1பேது.5). கிறிஸ்து இயேசு கர்த்தர் என்று அறிக்கை செய்வதும், இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் மக்களின் மனதை குருடாக்கிவிடாதபடிக்கு தற்காத்துக் கொள்ள வேண்டும். தேவன், இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள, தமது மகிமையின் அறிவாகிய ஒளியை தோன்றப்பண்ணும் பொருட்டாக, நமது உள்ளான மனுஷனை, நாளுக்கு நாள் புதிதாக்க மேற்படி ஆயத்தம் மூலம் ஏதுவாக்குகின்றார்.

அருள்திரு J. சாமுவேல் ஜோசப் நீல்
அம்பாசமுத்திரம்

********** ********** **********

24.02.2007

புனிதர் மத்தியா திருநாள்

பாடங்கள் : 1சாமு.16:1-13; அப்.1:15-26; மத்.11:25-30

வசனம் : *அப்போஸ்தலர் 1:26பி*

முன்னுரை :

மத்தியா என்பதற்கு "கர்த்தரின் கொடை" என்று பொருள். இவர் யூதாஸ்காரியோத்திற்கு பதிலாக தெரிந்தெடுக்கப்பட்ட பன்னிரெண்டாவது சீஷன் ஆவார். அவரைக் குறித்து அவர் கொண்டுள்ள குணாதிசயங்களை குறித்து தியானிப்போம்.

உண்மையுடன் இயேசுவை பின்பற்றிய தேவமனிதன் :

அப்.1:21,22 யோவான் ஞானஸ்நானங் கொடுத்த நாள் முதற்கொண்டு உயிர்த்தெழுந்த நாள் வரையிலும் இயேசுவை உண்மையுடன் பின்பற்றினான் மத்தியா. அவனுக்கென்று ஒரு அந்தஸ்து அல்லது பதவி கொடுக்கப்படவில்லை, ஆனால் அவன் என்னைத்தான் சீஷனாக தெரிந்தெடுக்கவில்லையே நான் ஏன் அவரை பின்பற்ற வேண்டும் என எண்ணவில்லை. "தன்னைத் தான் வெறுத்து" அவருக்குப் பின்சென்றான்

(யோவா.6:6பி). அவருடைய சீஷரில் அநேகர் பின்வாங்கிப் போனார்கள். இன்றைக்கு நம்முடைய திருச்சபையிலும் கூட அநேகர் பின்வாங்கி போகிறோம். இத்தனை வருடம் திருச்சபையில் இருந்தேனே, எனக்கு என்ன பதவி கிடைத்தது என்று ஆலயம் வருவதை நிறுத்தி கொள்கின்றோம். மத்.16:24 ஒருவன் என்னை பின்பற்றி வரவிரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னை பின்பற்றக்கடவன். 1கொரி.15:19 இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் எல்லா மனிதரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்பட்டவராயிருப்போம். நாம் யாராக இருந்தாலும் சரி, என்ன பதவியில் இருந்தாலும் சரி, இருக்கின்ற பணியிலே உண்மையுள்ள வர்களாக காணப்பட்டால் அநேகத்தின் மேல் அதிகாரியாக உயர்த்தப்படுவோம்.

2. தேவ சித்தத்திற்கு காத்திருந்த தேவமனிதன் :

சாதாரண மனிதனாக அவருக்கு பின் சென்றாலும் அவருடைய சித்தம் நிறைவேறக் காத்திருந்தான். அப்.1:5படி தானும் காத்திருந்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டான். நம்மில் அநேகருக்கு காத்திருக்க முடியவில்லை, ஐயோ ஊழியனாக எத்தனை வருடமாக இருக்கின்றேன். ஆண்டவர் இன்னும் என்னை பயன்படுத்தவில்லையே என ஏங்குகின்றோம். ஆனால் 1பேது.5:6இன்படி "ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் என்றப்படி நாம் அவருடைய பலத்த கையினுள் அடங்கியிருப்போம். கர்த்தர் ஏசா.60:22இன்படி ஏற்ற காலத்தில் நம்மை உயர்த்துவார். மத்தியாவும் ஏற்ற காலத்தில் தேவன் தன்னை உயர்த்தும்படி இயேசுவின் பின்னாக சென்றான். எனவே தான் தேவன் அவன் இருதயத்தின் சிந்தைகளை அறிந்து அவனை உயர்த்தினார். அநேக தேவ மனிதர்களும் கூட காத்திருந்தே ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டனர் (ஏசா.64:4).

3. அர்ப்பணிப்போடு பணிபுரிந்த தேவமனிதன் :

1தீமோ.6:5படி "தேவ பக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணாமல்" முழு அர்ப்பணிப்போடு எத்தியோப்பியா தேசத்தில் மத்தியா கடைசி வரையிலும் பணிபுரிந்து இரத்த சாட்சியாக மரித்ததாக திருச்சபை வரலாறு கூறுகிறது. நாமும் யூதாசைப் போல் அழைக்கப்பட்ட அழைப்பை விட்டு பின்வாங்காமல் 2தீமோ.2:12இன்படி "அவரோடே கூட பாடுகளை சகித்தோமானால் அவரோடு கூட ஆளுகையும் செய்வோம்". 2தீமோ.2:3இன்படி "நல்ல போர்ச் சேவகனாய்" அப்பணிப்போடு பணிபுரிவோம். எப்படியாக ஒரு போர்ச் சேவகன். தன் அதிகாரிகளின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவானோ, அதுபோல நாமும் முழு அர்ப்பணிப்போடு பணிபுரிவோம் ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக.

அருள்திரு A. ஜேக்கப் செல்லையா, குலவணிகர்புரம்

25.02.2007

கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் 6ஆம் ஞாயிறு

(லெந்து 1)

பொருள் : **உலகமும் ஆன்மீகமும்**

பாடங்கள் : 1இராஜா.21:1-16; 1யோவா.2:15-17; மாற்.1:29-45

வசனம் : *"அவர்களுடைய முடிவு . . . சிந்திக்கிறார்கள்" (பிலி.3:19).*

ஜெபம் :

அன்பின் ஆண்டவரே இந்த உலகத்தை படைத்து அதில் மனிதர்களை மகுடமாக வைத்து எல்லாவற்றை பெற்று மகிழ்ந்து களிகூறும்படியாக வைத்திருக்கிறீர் உமக்கு நன்றி. உலகில் வாழும் நாங்கள் ஆன்மீக வாழ்வில் வளர பெருக இந்த லெந்துகாலம் ஆசீர்வாதமாக இருக்க இயேசுவின் மூலம் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.

முன்னுரை :

மீன் கடலிலுள்ள பாசி, சிறுமீன்கள், மற்றும் அதிலுள்ள உணவு பொருட்களை உண்டு வாழுகிறது. மனிதனுக்கு அது உணவாகவும் பயன்படுகிறது. ஆனால் கடலின் உப்புதன்மை மீனில் ஒட்டுவதில்லை. அது தனித்தன்மையுடன் வாழ்கிறது. அதுபோல கடல்போன்ற உலகில் வாழும் நாம், இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட நாம் உலகின் இச்சையோடு நம்மை இணைத்துக் கொள்ளாது தனித்தன்மையோடு இயேசுவோடு இணைந்து வாழ கர்த்தர் நம்மை அழைக்கிறார். உலகமும் ஆன்மீகமும் என்ற தலைப்பில் இதை நாம் சிந்திப்போம்.

1. உலகமா? விசுவாசமா? :

1யோவா.4:4இல் "உலகத்தை விட உங்களில் இருப்பவர் பெரியவர்" நம் ஆண்டவர் பெரியவர் தம்மை விசுவாசிக்கிற பிள்ளைகளை ஒருபோதும் கைவிடாதிருப்பவர்.

மத்.6:33 "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் நீதியும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்".

ஆண்டவரை விசுவாசிக்கிற பிள்ளைகள் எல்லாவற்றையும் பெற்றுக் கொள்வார்கள்.

1யோவா.2:15-17இல் உலகத்தில் அன்பு செலுத்துகிறவன் பிதாவின் அன்பை விட்டு தூரமாகிறான். உலகம் அதன் இச்சை ஒழிந்து போகக் கூடியது. கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து இறை சித்தத்தை செய்கிறவன் என்றும் நிலைத்திருப்பான்.

ஆதி.3:6,7இல் ஆதாம் உலக இச்சையில் விழுந்தபடியினால் நல்ல வாழ்வை மகிழ்ச்சியின் வாழ்வை இழந்து போனதை நாம் காண்கிறோம்.

கிறிஸ்துவோடு உறவு கொண்டு வாழும் விசுவாச வாழ்க்கை மகிழ்வை, நிறைவை, ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும்.

2. உலகமா? இறைவன் தந்த பொறுப்பா? (கடமையா) : (1இராஜா.21:1-16)

அரசன் இறைவனின் பிரதிநிதியாக இஸ்ரவேலர்களை ஆளும்படியாக வைக்கப்பட்டிருக்கிறான். நீதியோடு, நியாயத்தோடு, நேர்மையோடு, அரசாண்டு மக்களை பாதுகாக்க வேண்டிய அரசன் தனது பொறுப்பை மறந்து நாபோத்தின் திராட்சை தோட்டத்தின் மீது ஆசை கொண்டு அதைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கிறான். மக்களை பாதுகாக்க வேண்டிய ஆகாப் அவனை கொலை செய்து இச்சித்ததைப் பெற்றுக் கொள்ளுகிறான். கடமையை, பொறுப்பை நிறைவேற்றாத அரசனாகிறான். ஆசீர்வாதத்தை இழந்து சாபத்தைப் பெற்று கொள்ளுகிறான்.

லூக்.3:10-14 வரை பார்க்கின்றபொழுது ஞானஸ்நானம் பெற்று முழுக்கு முனிவரிடம் தங்களின் பொறுப்பு, கடமை என்ன என்று கேட்கின்றபொழுது அவள் கூறிய அறிவுரை சிந்திப்பது ஆன்மீக வாழ்வுக்கு முக்கியமானது. கர்த்தர் நமக்கு இந்த உலகில் தந்த பொறுப்புகளை சரியாக செய்வோம். லஞ்சம், கடமை, தவறுதல் போன்ற காரியங்களை செய்து உலகோடு செல்லாது கடமையை சரியாகச் செய்து ஆன்மீக வாழ்வில் வளருவோம். மத்.4:8-11 சோதனைக்காரனை இயேசு வெற்றிக் கொண்டு இறைவன் அனுப்பிய நோக்கம் நிறைவேற முன்னேறிச் சென்றது போல நாமும் சோதனைகள் வந்தாலும் சகித்து ஆன்மீக வாழ்வை நோக்கி முன்னேறிச் செல்வோம்.

3. உலகம் உபவாசம் :

உலகம், ஆன்மீகம் இந்த இரண்டிற்கும் எப்பொழுதும் போராட்டம் இருந்து கொண்டே இருக்கும், உலகை எப்படி மேற்கொண்டு ஆன்மீக வாழ்வில் வளர்வது என்று சிந்திக்கின்றபொழுது உபவாசம் நமக்கு மிகவும் உதவியாக அமைகிறது. இயேசுவின் உபவாசம் பிசாசை, உலகின் இச்சையை வெற்றி கொள்ள உதவியது. அடிக்கடி இயேசு ஜெபத்தில் தரித்திருந்தார். எனவே தனது ஊழியத்தின் பணியை வெற்றியாக நிறைவேற்றினார். பிதாவோடு எப்பொழுதும் தொடர்பு கொண்டிருந்தார். இந்த லெந்து கால நாட்களிலே ஜெபத்திற்கு, உபவாசத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து இறை உறவில் நாம் வளர்வோம்.

அருள்திரு MGR சுகுமார்
சாந்திநகர்

01.03.2007
மாதத்தின் முதல் நாள்

பாடம் : ஆகி.12:1-8

வசனம் : *"இன்று முதல் நான் உங்களை ஆசீர்வதிப்பேன்" ஆகாய் 2:19*

முன்னுரை :

இன்று மாதத்தின் முதல்நாள். ஆண்டவருடைய ஆலயத்தில், அவருடைய ஆசீர்வாதத்தை நாடி, அவருடைய பிரசன்னத்தில் அமர்ந்திருக்கிற உங்கள் எல்லாரையும் பார்த்து, 'இன்று முதல் நான் உங்களை ஆசீர்வதிப்பேன்' என்று வாக்குக் கொடுக்கிறார். ஆண்டவர் மாறாதவர். வாக்கு மாறாதவர், உங்களை ஆசீர்வதிப்பேன் என்று வாக்குக் கொடுத்தவர் கட்டாயம், தவறாமல் உங்களை ஆசீர்வதிப்பார். உங்களை ஆசீர்வதிப்பதே அவருக்குப்பிரியம். ஆதாம், ஏவாளை, "நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்புங்கள்" என்று ஆசீர்வதித்தார். ஆபிரகாம், ஈசாக்கு, இஸ்ரவேல், யோசேப்பு, தாவீது, சாலமோன் ஆகிய நம் முற்பிதாக்களை ஆசீர்வதித்தார். அவர்கள் கேட்ட நன்மைகளை அருளிச் செய்தார். அதே ஆண்டவர், அவருடைய பிள்ளைகளாக, அவருடைய திருவீட்டிலே கூடிவந்திருக்கிற உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பார். இதை நம்புங்கள். விசுவாசியுங்கள். அவர் உங்களை நிச்சயம் ஆசீர்வதிப்பார். இன்றே ஆசீர்வதிப்பார். இன்று முதல் ஆசீர்வதிப்பார். இப்பொழுதே ஆசீர்வதிப்பார். நிறைவாக ஆசீர்வதிப்பார். குறைவின்றி ஆசீர்வதிப்பார், சமாதானம், சந்தோஷம், நீடிய வாழ்வு தந்து ஆசீர்வதிப்பார். இன்று முதல் - என்று முதல்???

1. கீழ்ப்படியும்போது ஆசீர்வாதம் :

இஸ்ரவேலரை ஆலய அஸ்திபார வேலையை ஆண்டவர் தொடங்கச்சொன்னார். அவர்கள் கீழ்ப்படிந்தபோது அவர்களை ஆசீர்வதித்தார். ஆபிரகாமை உன் இனத்தை விட்டு நான் காட்டும் நாட்டிற்குப் போ என்றார். அவன் கீழ்ப்படிந்தபோது அவனை ஆசீர்வதித்தார். ஒரே மகனைப் பலியிடு என்றார். கீழ்ப்படிந்தபோது ஆசீர்வதித்தார். நாகமானைத் தீர்க்கன் நதியில் ஏழுதரம் முழுகச் சொன்னார். கீழ்ப்படிந்தபோது ஆசீர்வாதம் - சுகம் பெற்றான். சீடர்களைப் பின்பற்ற அழைத்தார். கீழ்ப்படிந்தபோது மீன் பிடிக்கிறவர்கள் மனுஷர்களைப் பிடிக்கிற ஆசீர்வாதம் பெற்றனர். சீமோன் பேதுருவை ஆழத்தில் தள்ளிக்கொண்டு போய் வலைகளைப் போடச் சொன்னார். அவன் கீழ்ப்படிந்தபோது, இராமுழுவதும் கிடைக்காத ஆசீர்வாதம் படகுகள் நிரம்பக் கிடைத்தது.

அன்பானவர்களே, கர்த்தருடைய கருணையின் அழைப்பிற்குக் கீழ்ப்படிவீர்களா? அவரைப் பின்பற்றுவீர்களா? அவர் உங்களை ஆசீர்வதிப்பார்.

2. ஜெபிக்கும் போது ஆசீர்வாதம் :

யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவைச் சந்திக்கவரும் வழியில், கடவுளை நோக்கி, "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய நான் உம்மைப் போகவிடேன்" என்று போராடி ஜெபித்தான். அன்றே, அப்பொழுதே ஆண்டவர் அவனை ஆசீர்வதித்தார். தாவீது தன் வீட்டை ஆசீர்வதிக்கும்படி ஜெபித்தார். அவரது குடும்பத்தையும், ஆட்சியையும், ஆண்டவர் ஆசீர்வதித்தார். எசேக்கியா அரசன் ஜெபித்தான். ஆண்டவர் அவனது ஆயுசு நாட்களைக் கூட்டிக்கொடுத்து ஆசீர்வதித்தார். அன்னாள் ஜெபித்தாள். மலடியான அவளது கர்ப்பத்தில் சாமுவேலைப் பிறக்கச் செய்து ஆசீர்வதித்தார். எஸ்தரும், தோழிகளும் ஜெபித்தனர். யூத மக்களுக்கே ஆசீர்வாதம் கிடைத்தது.

அன்பர்களே நாம் ஆசீர்வதிக்கப்படும்படியாக ஜெபிப்போம். ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்வோம்.

3. கொடுக்கும்போது ஆசீர்வாதம் :

சாறிபாத் ஊர் விதவையிடம் பானையில் ஒருபிடிமாவும், கலயத்தில் கொஞ்சம் எண்ணெயும் மாத்திரம் இருந்தது. ஆனால் அவள் அதைக்கொண்டு ஒரு சிறய அடையைப் பண்ணித் தீர்க்கனாகிய எலியாவுக்குக் கொடுத்தபோது, பஞ்சகாலம் முழுவதும் சாப்பிடத்தக்கதாகப் பானையில் மாசெலவழிந்து போகாத, கலயத்தில் எண்ணெய் குறைந்து போகாத ஆசீர்வாதம் கிடைத்தது. ஏழைச்சிறுவன் தன்னிடம் உள்ள ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் இயேசுவிடம் கொடுத்தபோது, ஐயாயிரம் பேர் உணவுபெற்ற அற்புதமும், இன்றளவும் நினைக்கப்படுகிற ஆசீர்வாதமும் கிடைத்தது. ஏழை விதவை தன்னிடமுள்ள இரண்டு காசுகளையும் ஆலயத்தில் கொடுத்தபோது, இன்றளவும் நினைவுகூரப்படுகிற பேராசீர்வாதத்தைப் பெற்றாள்.

அன்பானவர்களே, நாமும் நம்மிடத்தில் உள்ளதைமட்டுமல்ல, நம்மையே கொடுப்போம். ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வோம். உள்ளதைக் கொடுப்போம். உற்சாகமாய்க் கொடுப்போம். முழுஉள்ளத்தோடு கொடுப்போம். ஆசீர்வாதத்தை அளவில்லாமல் பெற்றுக்கொள்வோம்.

இன்று முதல் கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக.

அருள்திரு மதுரம் டேவிட் சாமுவேல்
மிலிட்டரி லைன்ஸ்

04.03.2007

உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் 5ஆம் ஞாயிறு
(லெந்து 2)

பொருள் : **மனித உறவுகள்**

பாடங்கள் : **1சாமு.18:1-4,19-20 பிலோமோ.8-16; மத்.5:43-48**

வசனம் : *பிலோமோன் 1:17*

முன்னுரை :

ஆண்டவரோடு அதிகமாய் ஐக்கியப்படும்படியாக நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற இந்த ஆவிக்குரிய வசந்தகாலத்தில், மனித உறவுகளைக்குறித்து வேதத்தின் அடிப்படையிலே தியானிப்பது மிகச் சிறந்தது. தேவனோடு நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்கிற நாம், தேவ சாயலிலே உருவாக்கப்பட்ட மனிதர்களிடத்திலும் நல்ல உறவுகளை உருவாக்கிக் கொள்ளவும், ஏற்படுத்தப்பட்ட உறவுகளை கிறிஸ்துவுக்குள் பேணிக்காப்பதுவும், ஆண்டவருடைய பிள்ளைகளின் ஆவிக்குரிய வாழ்விற்கு அவசியம். மனித உறவுகளைக்குறித்து திருமறை காட்டும் வழிகளை நோக்குவோம்.

சகோதர உறவு : (1சாமு.18:1-4)

தாவீதுக்கும், யோனத்தானுக்கும் இருந்த நெருங்கிய, ஆழமான நட்பு, வேதத்தில் குறிக்கப்பட்ட சிறந்த மனித உறவுகளில் ஒன்று இருவருடைய ஆத்துமாவும் இசைந்ததாயிருந்தது. அவர்கள் தங்கள் உறவை முதலாவது, "கர்த்தருக்காக" என பொருத்தனையோடு வைத்திருந்தார்கள். கர்த்தருக்கு முன்பாக உடன்படிக்கை செய்திருந்தார்கள் (1சாமு.20:16,42; 23:18).

இரண்டாவதாக, தங்கள் உறவுக்கிடையில், தாங்கள் செய்யும் பணிகளோ, குடும்பப்பிரச்சனைகளோ குறுக்கிட அனுமதிக்கவில்லை.

மூன்றாவதாக, தங்கள் உறவும், நட்பும் சோதிக்கப்படுகையில், அது இன்னும் அதிகமாக ஒருவரையொருவர் நெருங்கிச் சேர உதவியாயிருக்கும்படி இருவரும் நடந்து கொண்டனர்.

நான்காவதாக, இறுதிமட்டும் அவர்கள் நண்பர்களாகவே இருந்தனர்.

இளவரசன் யோனத்தான், அடுத்த அரசனாக சவுலுக்குப்பின் பதவி ஏற்க, தான் அல்ல, தன் நண்பன் தாவீதே பொருத்தமானவன் என உணர்ந்து கொண்டான் (1சாமு.23:17) அதை அறிந்தும், தாவீதினிடத்தில் அன்பு கூறுவதில் குறையவில்லை. தாவீதினுடைய அன்பிற்காக தன் ராஜ்ய பாரத்தையும் இழக்க தயாராயிருந்தான்.

தாவீதை கொன்றுபோட நினைத்த தன் தகப்பன் சவுல் கையினின்று அவனை தப்பிக்க வைக்கிறான். மேலான அன்பும், தியாக உணர்வும் ஆழமான மனித உறவின் வெளிப்பாடாகவும், செயல்பாடாகவும் அமைவதை நாம் காணமுடியும். நம் உறவுகளை கர்த்தருக்குப் பிரியமானதாக, பரிசுத்தமானதாக காத்துக் கொள்வோம். அது அநேக நன்மைகளை நமக்குக் கொண்டு வரும்.

மனித நல்லுறவு குறித்த இயேசுவின் போதனை : (மத்.5:43-48)

இயேசுக்கிறிஸ்துவின் உன்னதமான போதனைகளில் மனித நல்லுறவு குறித்து மத்.5:44இல் குறிக்கப்பட்டுள்ளது. இந்த ஒரே வசனத்தில் மட்டும் நாம் செய்யவேண்டிய நான்கு முக்கியமான காரியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

1) உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்; இது ஒரு கடினமான செயலாக இருந்தாலும், இதைக் கற்றுக் கொடுத்த, செய்துகாட்டிய ஆண்டவர் இயேசுவின் துணையோடு நாம் இதை செயல்படுத்த முடியும். இது நம் அடிப்படை குணநலனில் மாற்றத்தை கொண்டு வருகிறது.

2) சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; இதை நாம் செய்ய முற்படும்போது, இது நம் ஆவிக்குரிய வாழ்வின் வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் வெளிப்படுத்தும் செயலாக அமைகிறது.

3) உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; இச்செயல் நம்மை கிறிஸ்தவர்களாக அடையாளம் காட்டுவதோடு, பொது வாழ்வில் சமுதாய உறவுகளில் மாற்றங்களை கொண்டுவர ஏதுவாகிறது.

4) உங்களை நிந்திப்போர், துன்பப்படுத்துவோருக்காக ஜெபம் பண்ணுங்கள்;

இது தேவன் நம் மீது வைத்த அன்பின் வெளிப்பாடாக அமைந்து, நம்மிடையே தூய்மையான உறவுகளை உருவாக்கவும்,

பெலப்படுத்தவும், செய்வதோடு, நாம் எத்தகைய தன்மையுடையவர்கள் என பிறர் விளங்கிக்கொள்ள வழி வகை செய்கிறது.

இப்படிச்செய்கிற அனைவரும் பரலோகத்திலிருக்கிற பிதாவிற்கு பிள்ளைகளாயிருப்பதோடு (வச.45) சமாதான உறவுகளில் பிரியம் கொள்பவராகவும் (வச.9) பூரண சற்குணராகவும் இருப்பர் (வச.48).

மனித உறவுகள் புதுப்பிக்கப்பட பவுல் காட்டும் வழி : (பிலமோன் 8-17)

தன் எஜமான் பிலமோன் வீட்டிலிருந்து ஓடிப் போன அடிமை ஒநேசிமுவுக்காக, பவுல் அப்போஸ்தலன் பிலமோனுக்கு ஒரு பரிந்துரை கடிதம் எழுதுகிறார். பவுலின் ஊழியம் மூலமாக கிறிஸ்துவுக்குள் வந்த பிலமோனுக்கு, ஒரு சகோதரன் போலிருந்து ஒரு அடிமைக்காக பரிந்து மன்றாடுகிறார். ஒநேசிமுவினிடத்தில் காணப்பட்ட நற்பண்புகள் அத்தனையையும் சுட்டிக்காட்டி, அவனை ஏற்றுக்கொள்ள, முன்புபோல அடிமையானவனாக அல்ல, பிரியமான சகோதரனாக, தன்னைப்போல ஏற்றுக் கொள்ள வேண்டும் என வேண்டுகிறார் (17). அடிமையானவனுடைய கடன்களை தன் கணக்கிலே வைத்துக் கொள்ளும் என கேட்டுக் கொள்கிறார். இதனால் கிறிஸ்துவுக்குள்ளாக வந்த ஒரு மனிதனைக்குறித்த பவுலின் பாரத்தை நாம் பார்க்க முடிகிறது. ஒரு புது உறவு உருவாக, தூண்டுகோலாக, இணைப்பு பாலமாக இருந்து செயல்படுகிறார். நல்ல பல, புது உறவுகளை உருவாக்குகிறவர்களாக இருப்போம். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுவோம்.

முடிவுரை :

சகோதர சிநேகிதம் நிலைத்திருக்கக்கடவது (எபி.13:1) ஆண்டவரிடத்திலே நல்லுறவு கொள்வோம். அது நம்மை சகமனிதர்களிடத்திலே நல்லுறவு வைக்க உதவும். இந்த உறவுகளில் பெலப்படவும், உறுதிப்படவும், புது உறவுகள் உருவாக்கப்படவும், புதுப்பிக்கப்படவும் ஆண்டவர் நம்மை பயன்படுத்துவாராக. அதன்மூலம் கர்த்தர் நாமம் மகிமைப்படுவதாக. ஆமென்.

டீக்கன் D. பால் ஏசுதாசன்
கொங்கந்தான்பாறை வடக்கு

11.03.2007

உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் முன்வரும் 5ஆம் ஞாயிறு
(லெந்து 3)

பொருள் : பார்வையற்றோர் மீது கரிசனை

பாடங்கள் : ஏசா.61:1-8; யோவா.9:13-27; பிலி.2:1-11

வசனம் : *யோபு 29:15*

முன்னுரை :

இவ்வுலகப் பார்வையில் பார்வையற்றோர் பாரமாகவும், அற்பமாகவும் கருதப்படுகின்றனர்; 'பாவிகள்' என்றும் 'திறனற்றோர்' என்றும் ஒதுக்கப்படுகின்றனர். ஆனால், உண்மையில் இப்படிப்பட்ட கருத்துக்கள் தவறானவையாகும். பார்வையற்றோரும் கடவுளின் படைப்பே (யாத்.4:11).

கண்பார்வையின்மை பாவத்தின் விளைவல்ல :

பிறவியிலேயே பார்வையிழந்திருந்த ஒரு சகோதரனைக் கண்ட சீடர்கள், ஆண்டவரிடம் "இவ்வாறு இவன் பிறந்தது இவனது பெற்றோரின் பாவமா? அல்லது இவனது பாவமா?" என்று வினவினர். அப்போது ஆண்டவர் இது இவனது பாவமுமல்ல, இவனது பெற்றோரின் பாவமுமல்ல; கடவுளின் செயலாற்றல் இவனில் வெளிப்படவே இவன் இவ்வாறு பிறந்தான் என்று கூறி அவனை சுகப்படுத்துகிறார் (யோவா.9:1-7).

முதுமையினால் வரும் பார்வைக்குறைவு :

முதியோரில் சிலர் தங்களுக்கு வருகிற பார்வைக்குறைவு தங்களது பாவத்தின் விளைவோ என்று அஞ்சி சோர்வடைகின்றனர். முதியோருக்கு வரும் பார்வைக்குறைவு முதுமையின் விளைவேயாகும். ஈசாக்கு தன் முதிர்வயதில் ஏற்பட்ட பார்வைக்குறைவால் யாக்கோபை ஏசா எனக் கருதி ஆசீர்வதித்தார். முதுமையில் உண்டாகும் இப்படிப்பட்ட பார்வைக்குறைவு இயற்கையானதே. மானிட வாழ்வின் வளர்ச்சியில் இயற்கையாகவே வருகின்ற இந்த பலவீனத்தை ஏற்க மனம் பக்குவப்படல் வேண்டும். இப்படிப்பட்ட பலவீனத்தை நீக்க, தற்போது விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள நவீன சிகிச்சைகளை பயன்படுத்திக் கொள்ளல் நன்று.

பார்வையற்றோர் வித்தியாசமான திறன்பெற்றவர்கள் :

பார்வையற்றோரில் பலர், பின்னல் வேலைகள், இசைக்கருவிகள் மீட்டல், நெய்தல் போன்ற நுட்பமான வேலைகளை செய்ய திறமை

பெற்றுள்ளனர். நல்ல பாடகர்கள் அவர்களிடையே உண்டு. ஓர் இரவு வேளையில், பேருந்து நிலையம் ஒன்றில் பேருந்துக்காக சில பார்வையற்ற சகோதரர்கள் காத்து நின்றனர். அங்கே வந்து கிராமத்து வாலிபர்கள் இருவர் கண் பார்வையற்றவர்கள் தங்கள் கைகளில் கைக்கடிகாரங்கள் அணிந்திருப்பதைக் கண்டு பரிகசித்தனர். அந்நேரத்தில் மின்சாரத்தடை ஏற்பட்டு எங்கும் இருளானது. அப்போது "கரண்ட் போய்விட்டதே, நேரம் எவ்வளவு என்று தெரியவில்லையே" என்று அந்த இரு கிராம வாலிபர்களும் பேசிக்கொண்டனர். அப்போது, அவர்கள் அருகே நின்று அவர்கள் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த பார்வையற்ற நண்பர்களில் ஒருவர், தன் கரத்தால் தான் அணிந்திருந்த கடிகாரத்தை தடவி, நேரம் இவ்வளவு என்று துல்லியமாகச் சொன்னார். அதைக் கேட்ட கிராமத்து வாலிபர்கள் வியந்து நின்றனர். ஆம், பார்வையுடையவர்கள் வெளிச்சத்தில் மட்டுமே செயல்படும் திறனுடையவர்கள். பார்வையில்லாதவர்களுக்கோ, 24 மணி நேரமும் எவ்வித சிரமமுமின்றி செயல்படும் திறன் உள்ளது. பார்வையற்றவர்களும் கல்விச் செல்வம் பெற வேண்டுமென்ற நோக்கில், அவர்களுக்காக பிரெய்ல் எழுத்துக்களை வடிவமைத்த பிரெய்லி என்ற விஞ்ஞானிக்காக ஆண்டவரைத் ஸ்தோத்தரிப்போம்.

கரிசனையில்லாத மானிடரும் கரிசனைமிக்க ஆண்டவரும்:

தனக்கு பார்வை கிடைக்க வேண்டுமென்ற நோக்கில், ஆண்டவரை நோக்கி சத்தமிட்டுக் கூப்பிட்ட பர்திமேயுவை, மக்கள் கூட்டம் பேசாதிருக்கும்படி அதட்டுகிறது. பிறவிலேயே பார்வையில்லாத ஒருவர் ஆண்டவரது அருளால் பார்வை பெற்றார்; அதற்காக மகிழவும், ஆண்டவரை மகிமைப்படுத்தவும் கடமைப்பட்ட சமய தலைவர்கள், பார்வை பெற்றவரை, பல கேள்விகளால் சங்கடப்படுத்துகின்றதுமன்றி அவரை சபைக்குப் புறம்பாக்குகின்றனர். ஆண்டவரோ அந்த சகோதரன் மீது அன்புகூர்ந்து, அவருக்குத் தம்மை வெளிப்படுத்துகின்றார். அதனால், பார்வையில்லாதிருந்து பார்வை பெற்றவர், ஆண்டவரை யாரென்று அறிந்து அவரைப் பணிந்து கொண்டார். தங்களுக்கு பார்வையுண்டு என்ற பெருமையுடையவர்களோ ஆண்டவரை அறியமுடியாமல் இடறலடைந்தனர். காண்பவர் காணாதபடிக்கும், காணாதவர் காணும்படிக்கும், செய்ய ஆண்டவர் இவ்வுலகில் அவதரித்தது, பார்வையற்றோர்பால் அவருக்கு இருந்த கரிசனைக்கு ஓர் சான்றாகும். (சங்.146:8).

ஆண்டவரால் நேசிக்கப்படுகின்ற பார்வையில்லாதவர்கள் மீது நாமும் கரிசனை காட்டுவோம்.

அருள்திரு SACR டேனியல்
நான்குநேரி

18.03.2007

உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் 3ஆம் ஞாயிறு

(லெந்து 4)

பொருள் : சமுதாய மாற்று உருவாக்கம்

பாடங்கள் : மீகா.6:6-8; எபே.4:25-32, மத்.12:15-21

வசனம் : *ஏசாயா 40:4*

முன்னுரை :

சமுதாய மாற்று உருவாக்கம் என்கிற தலைப்பு மிகப் பெரிய எல்லையையும் கருத்துக்களையும் கொண்டது. (Vast Subject) இருப்பினும் கொடுக்கப்பட்டுள்ள திருமறை வசனங்களை மையப்படுத்தி சில கருத்துக்களைச் சிந்திப்போம். சமுதாயம் என்கிற நவீன காலத்து கருத்து வேதாகமத்தின் அடிப்படையில் தனிமனிதனாகிய ஆதாமை மையமாகக் கொண்டது. தனி மனிதன் வளர்ச்சி அடைந்தான். ஆதாமின் சந்ததியார் என்கிற சமுதாயம் உருவாகிற்று. இன்றை சமுதாய மாற்று உருவாக்கத்தில் கல்வி பொருளாதாரம், அரசியல், வாழ்க்கைத் தரம், சுற்றுப்புறச் சூழல் ஆகியவை அதிகம் இடம் பெறுகின்றன. இன்றைய சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகளும் அதிகம் காணப்படுகின்றன. செய்தித் தாள்கள் இன்றும் கொத்தடிமைகளை வெளிக்காட்டுகின்றன. பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் ஜனங்களில் அடிமை வாழ்வின் கஷ்டங்களிலிருந்து இன்பக் கானானுக்கு அழைத்துச் செல்லப்பட்டது. சமுதாய மாற்று உருவாக்கமாகும். இந்தச் சமுதாய மாற்று உருவாக்கம் தெய்வத்தால் நடைபெற்றதையே வேதபுத்தக வரலாற்றில் அறிகிறோம்.

1. விசுவாசம் சமுதாயத்தை மாற்று உருவாக்கம் செய்யும் :

சிறுபான்மையினரான இஸ்ரவேலர் கடவுளின் ஜனங்கள் என உரிமை பெற்றனர். காரணம் அவர்களிடம் காணப்பட்ட விசுவாசம் ஏனைய ஜனங்கள் விக்கிரகவழிபாட்டிற்கும் அந்நிய தெய்வ வழிபாட்டிற்கும் உடந்தையாய் இருந்தவேளையில் கர்த்தரையே தெய்வமாகக் கொண்டு பின்பற்றினார்கள். ஏசாயா சொல்லுகிற "சமுதாய மாற்று உருவாக்கம் ஏசா.11:6 கன்றுக் குட்டியும், பாலசிங்கமும் காளையும் ஒருமித்திருக்கும். சிறுபையன் அவைகளை நடத்துவான். 2இராஜாக்கள் 5ஆம் அதிகாரம் சீரியா நாட்டு படைத் தலைவனான நாகமான், சிறுபெண் மற்றும் உடன் ஊழியர்களின்

தாண்டுதலினால் விசுவாசம் தழைக்கப்பெற்று மாற்றம் பெற்றான். சமுதாயம் அவனோடு மகிழ்ச்சி அடைந்தது. தானி.3:29பி "இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை என்பதை பறைசாற்றி சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் விசுவாசத்தையே தனது குடிகள் பின்பற்ற இராஜா வழிவகுத்தான்". தானி.6:26 "அவர் ஜீவனுள்ள தேவன் அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர், அவர் இராஜ்யம் அழியாதது. அவர் கர்த்தத்துவம் முடிவு பரியந்தம் நிற்கும்" என்கிற இராஜாவின் விசுவாச அறிக்கையையும் பார்க்கிறோம். ஏசா.40:4 "பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல மலையும், குன்றும் தாழ்த்தப்பட்டு கோணலானவை செவ்வையாகி, கரடுமுரடானது சமமாக்கப்படும் என்கிற சமுதாய உருமாற்றத்தை ஏசாயா கூறுகிறார். மீகா 6:8ன்படி நன்மை செய்வதினாலும், நியாயம் செய்வதினாலும் இரக்கம் காட்டுவதினாலும், மனத் தாழ்மையாய் நடப்பதினாலும், தெய்வத்தை முன்வைத்து செயல்படுவதினாலும் சமுதாயம் மாற்று உருவாக்கம் பெறும் என ஆலோசனை தருகிறார்.

2. சத்தியம் உங்களை விடுதலையாக்கும் :

சத்தியத்தினால் சமுதாயம் மாற்றுஉருபெறும். குமாரனை அறிவீர்கள். குமாரன் விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள். குமாரனாகிய கிறிஸ்து சமுதாயத்தை மாற்றி அமைக்கிறார். மீன்பிடித்த செம்படவர்களை தமது சீடராக்கி மனிதரைப் பிடிக்கிறவர்களாக மாற்றி அமைத்தார். மத்.12:13,14 "என்னுடைய வீடு ஜெபவீடு எனப்படும். அப்பொழுது குருடரும், சப்பாணிகளும் தேவாலயத்திலே அவரிடத்துக்கு வந்தார்கள். அவர்களை சொஸ்தமாக்கினார். இவர்கள் மாற்றம் பெற்று முழு அங்கத்தினர்களாக சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள். சகேயு, சமாரியா ஸ்திரீ ஆகியோர் மாற்றம் பெற்றதால் சமுதாயத்தில் முக்கிய நபர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள். சமுதாயத்தில் மாற்றம் விரும்பாத மற்றும் கேடு செய்த வேதபாரகர்களையும், பரிசேயரையும் இயேசு வன்மையாகக் கண்டித்தார். மத்.12:15 திரளான ஜனங்கள் அவருக்குப் பின் சென்றார்கள். அவர்களைச் சொஸ்தமாக்கினார். மத்.12:22 பிசாசு பிடித்த குருடும், ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டு வரப்பட்டான். குருடும், ஊமையுமானவன் பார்க்கவும், பேசவும் தக்கதாக அவனைச் சொஸ்தமாக்கினார்.

3. சிலுவையை நோக்கிப் பார்த்தவர்கள் மாற்று உருவாக்கம் பெறுகிறார்கள் :

லெந்து காலங்கள் ஆனபடியால் சிலுவையை மறந்துவிட முடியாது. சிலுவை மானிட வர்க்கத்திற்கு மிகவும் முக்கியமானது. சிலுவை தன்

பணியைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. சிலுவைக்கு எதிரிடையாகச் செயல்பட்ட சவுலாகிய பவுல் சிலுவையினால் மனமாற்றம் பெற்று சமுதாயத்தில் "சிலுவை எனக்கு மேன்மை" என மேன்மை பாராட்டினார். சிலுவையின் உபதேசத்தினால் திருச்சபையைக் கட்டியெழுப்பி சமுதாயத்தை மாற்றியமைத்தார். மக்கதோனியா சபையாரின் கொடுத்துதவும் தன்மையை பவுல் பெரிதும் புகழ்ந்துள்ளார். லூக்.23:47 நூற்றுக்கு அதிபதி சிலுவையின் சம்பவத்தை நேரடியாகப் பார்த்து இந்த மனிதன் நீதிபரனாக இருந்தான் என்று தேவனை மகிமைப்படுத்தினான். எபே.2:16 சிலுவை பகைமையை அகற்றி இருதிறத்தாரையும் ஒன்றாக்கி சமூக உருமாற்றம் பெறச் செய்கிறது. சிலுவை அநீதியையும், அக்கிரமத்தையும் மாற்றியமைக்கும் தன்மை கொண்டது. சிலுவை உயிர்த்தெழுதலாகிய புதிய சமுதாயத்தையும், நித்திய ஜீவனையும் தந்து புதுப் படைப்பை உருவாக்கிறது. எபே.4:25 சமுதாய மாற்று உருவாக்கம் மெய்மையைக் கடைப்பிடிப்பதினால் வரும். கோபம், எரிச்சல் கூடாது. இது புது சமுதாயம் உருவாகத் தடையாக இருக்கும். நல் வார்த்தைகளைப் பேசுவது, கருணை, காருண்யம், அன்பு, மன்னிப்பு, இவைகள் சமுதாயத்தை மாற்றி அமைக்கும்.

முடிவுரை :

தனி மனிதனில் ஆரம்பிக்கிற மாற்று உருவாக்கம் சமுதாயத்தை மாற்றி அமைக்கிறது. ஆடுகளின் பின்னால் சென்ற தாவீது அரசனாக உயர்த்தப்பட்ட பின்பு சமுதாயத்தில் பொற்காலத்தை உருவாக்கி மேன்மையடையச் செய்தான். யோனாவின் பிரசங்கத்தினால் நினிவே பட்டணம் காக்கப்பட்டு சமுதாய மாற்று உருவாக்கம் பெற்றது. சமுதாயம் மாற்று உருவாக்கம் பெற அன்பு அடிப்படையானது. சமுதாயம் மாற்று உருவாக்கம் பெற நீதி நியாயம் கட்டாயம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். நவீன கால கட்டத்திலும், முதிர் வயதில் இறந்த தகப்பனின் ஈமச் சடங்கு தீயில் உடன்கட்டை ஏறின 60 வயதுக்கு மேற்பட்ட தாயை தடுக்காத தமையன்களும் மாற்றம் பெறாமல் இருக்கத்தான் செய்கிறார்கள். அன்னை தெரசா, கிரகாம் ஸ்டெயின், எமி கார்மைக்கேல் அம்மையார் போன்ற தனி நபர்களும் மற்றும் திருச்சபை IMS, N.M.S. போன்ற ஸ்தாபன ஊழியங்கள் இருக்கிற வரையிலும் சமுதாயம் மாற்று உருவாக்கம் பெற்றுக் கொண்டே இருக்கும்.

"கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக".

அருள்திரு P. சுவாமிநாதன்
பார்வதியாபுரம்

25.03.2007

உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் 2ஆம் ஞாயிறு
(லெந்து 5)

பொருள் : **சிலுவையும் திருச்சபையும்**

பாடங்கள் : **யாத்.1:8-14; 1பேது.3:8-22; மத்.10:36-42**

வசனம் : *1பேதுரு 3:7*

முன்னுரை :

இயேசு கிறிஸ்துவுக்கு சிலுவை மரணம் என்பது உலகத் தோற்றத்திற்கு முன் நியமிக்கப்பட்டது (வெளி.13:8). சிலுவையை அவர் மீது சுமத்துவதற்கு 2 காரணங்கள் :

1) நியாயப்பிரமாணத்தை மீறுகிறார் என்று பரிசேயர் அவர் மீது குற்றம் சாட்டினார்கள். உதாரணமாக இயேசு ஓய்வு நாளில் தேவாலயத்திற்கு சென்று சூம்பின கையையுடைய மனிதனை குணமாக்கினார். ஆகவே பரிசேயர் அவரை கொலை செய்ய ஆலோசனை பண்ணினார்கள் (மாற்.3:1-6).

2) சமுதாய அமைப்பை எதிர்த்து போதித்தார் (மாற்.12:1-9) இந்த உவமை தங்களைக் குறித்துச் சொன்னார் என்று அப்போது இருந்த சமுதாயத் தலைவர்கள் கோபங் கொண்டார்கள்.

சமயம் சார்ந்த தீமைகளையும் சமுதாயக் கொடுமைகளையும் எதிர்த்து இயேசு போராடினார். ஆகவே அவர் மீது சிலுவை சுமத்தப்பட்டது. ஆனால் திருச்சபைக்கு ஏன் இந்த சிலுவை?

1) திருச்சபைக்கு வரும் பாடுகள் என்ற சிலுவையில் இறையன்பு வெளிப்படுகிறது

யாத்.1:8-14 வசனங்களில் இஸ்ரவேல் மக்கள் எகிப்து தேசத்தில் பாடுகளை அனுபவித்தார்கள் (யாத்.1:11,13). இந்தக் கொடுமைகளைப் பார்த்து கர்த்தர் அமைதியாக இருந்துவிடவில்லை. கர்த்தர் அவர்களைப் பார்த்து பரிதாபப்படுகிறார் (யாத்.3:7). ஆகவே கர்த்தர் அவர்களைச் சந்திப்பதற்கு இறங்கினார். கர்த்தர் தமது அன்பாலே அவர்களை எகிப்திலிருந்து மீட்டுக் கொண்டார். இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய அன்பையும் அவருடைய ஆதரவையும் உணர்ந்தார்கள் (யாத்.4:31) எப்பொழுதெல்லாம் திருச்சபைக்கு துன்பம் வருகிறதோ அப்பொழுதெல்லாம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அன்பும் ஆதரவும் திருச்சபையிலே வெளிப்படுகிறது. கர்த்தர் துன்பத்தைப் பார்த்து அமைதியாக இருப்பதில்லை. ஆகவே தான் திருத் தூதுவனாகிய பவுல் திருச்சபையை

துன்பபப்படுத்தினபொழுது நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்பதாக அவர் சொல்லுகிறார். ஆகவே கிறிஸ்துவின் அன்பையும் திருச்சபையையும் பிரிக்க முடியாதது போல திருச்சபையையும் சிலுவையையும் பிரிக்க முடியாது. திருச்சபை துன்பத்தின் நடுவே வளர்ந்து ஒளி விளக்காய் திகழ்கிறது.

2. திருச்சபைக்கு வரும் பாடுகள் என்ற சிலுவையில் கிறிஸ்தவத் தன்மை வெளிப்படுகிறது

1பேது.3:8-22 வசனங்களில் திருச்சபைக்கு பாடுகள் உண்டு என்பதை தெளிவாக நாம் பார்க்கிறோம். பாடுகள் வரும் வேளைகளில் சோர்ந்து போய் இருப்பது கிறிஸ்தவத் தன்மை அல்ல. கிறிஸ்தவத் தன்மை என்பது பாடுகளை அனுபவித்து ஆசீர்வதிக்கப்படுகிற ஆசீர்வதிக்கிற வாழ்க்கை 1பேது.3:9. பாடுகளை அனுபவித்து நன்மை செய்கிற வாழ்க்கை (1பேது.3:11). பாடுகளை அனுபவித்து கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்கிற வாழ்க்கை (1பேது.3:15. பாடுகளை அனுபவித்து நல் மனச்சாட்சியுடைய வாழ்க்கை (1பேது.3:16).

ஆகவே திருச்சபைக்கு வரும் பாடுகளில் கிறிஸ்தவத் தன்மை வெளிப்பட வேண்டும். இவ்விதமான துன்பங்களின் நடுவே திருச்சபை எவ்விதமாக செயல்படுகிறது. திருச்சபை உப்பாக, ஒளியாக, சாட்சியாக இருக்கவே அழைக்கப்பட்டிருக்கிறது.

3. திருச்சபைக்கு வரும் பாடுகள் என்ற சிலுவையில் கர்த்தருடைய சித்தம் வெளிப்படுகிறது

மத்.10:36-42 வசனங்களில் கர்த்தருடைய சிலுவையின் சித்தம் என்ன என்பதை பார்க்கிறோம்.

கர்த்தருடைய சித்தம் என்ன? இயேசுவின் சிலுவையை சுமப்பது, இயேசுவுக்காக தன் ஜீவனை இழப்பது. ஆகவே திருச்சபை இயேசுவின் சித்தத்தை நிறைவேற்றுகிறதாக இருக்க வேண்டும். சிலுவையை சுமப்பது என்பது எளிதான காரியமல்ல. நம்முடைய ஜீவனைக் காப்பதும் எளிதான காரியம் அல்ல. இயேசுவின் சித்தத்திற்கு நாம் நம்மை அர்ப்பணிக்கும் போது கர்த்தர் நம்மைப் பாதுகாக்கிறார், பெலப்படுத்துகிறார். கர்த்தர் நம்மை பாக்கியவான்களாக மாற்றுகிறார்.

திருச்சபைக்கு சிலுவை நியமிக்கப்பட்டிருக்கிறது. அதை நாம் விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டு அவருக்குப் பிரியமானவர்களாக நாம் நடக்கும்போது அந்த சிலுவை நமக்கும் திருச்சபைக்கும் வெற்றியின் சின்னமாக சிலுவையாக இருக்கிறது என்பது நிச்சயம்.

அருள்திரு T.E.V. சாமுவேல்
சீவலசமுத்திரம்

25.03.2007

மங்களவாக்குத் திருநாள்

பாடங்கள் : ஏசா.7:10-15; லூக்.1:26-38

வசனம் : *"நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்" லூக்.1:30*

முன்னுரை :

இயேசு மேசியாவாக இவ்வுலகில் பிறக்க, தேவன் தெரிந்து கொண்ட பாத்திரமே பரிசுத்த கன்னிமரியாள். காபிரியேல் என்னும் தூதன் கலிலேயாவிலுள்ள நாசரேத் என்னும் ஊரில் பரிசுத்த கன்னி மரியாளிடம் தோன்றி கிறிஸ்து பிறப்பின் வாழ்த்துச் செய்தியை கூறினான். அந்த நாளை மங்களவாக்குத் திருநாள் என்று கூறுகிறோம். இத்திருநாளில் கன்னிகையாகிய மரியாள் யார்? என்பதை லூக்கா ஆக்கியோன் எழுதியுள்ள கூற்றின்படி சில உண்மைகளை இங்கு நாம் ஆராய்வோம்.

1. வாழ்த்துதலைப் பெற்றவள் (லூக்.1:28)

"வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள்". இந்த மூன்று வாழ்த்துதல்களும் காபிரியேல் தூதன் மரியாளைப் பார்த்து, கூறிய வாழ்த்துதல்கள். இது இறைவனின் வாழ்த்துதல் என்று கூறினால் தவறாகாது. மரியாள் வாழ்த்துதலைப் பெறக் காரணம் என்ன? மேசியா என் வயிற்றில் பிறக்க வேண்டும் என்று காத்திருந்தவர்கள் அநேக கன்னிகைகள். அவர்களில் கன்னிகையாகிய மரியாள் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டாள். இது தேவ கிருபையே. எனவே தான் காபிரியேல் கிருபை பெற்றவளே என்று அழைப்பதை வாசிக்கிறோம். வாழ்த்துதலைப் பெற்ற மரியாள் தேவ கிருபை பெற்றவள் என்பது தெளிவாகிறது அல்லவா. தேவ கிருபையைப் பெற்றவர்கள், பிறரை வாழ்த்துவார்கள், பிறருக்குப் பிரயோஜனமான பாத்திரமாக வாழ்வார்கள். பிறராலும் வாழ்த்தப்படுவார்கள் என்பது உண்மை. தூதனிடம் வாழ்த்துதலைப் பெற்ற மரியாள் தன் உறவினளாகிய எலிசபெத்தை வாழ்த்துகிறாள். (லூக்.1:40) தன் உறவினளாகிய எலிசபெத்தாலும் வாழ்த்தப்படுகிறாள் (லூக்.1:42,45).

இன்று நாம் இறைவனிடத்தில் வாழ்த்துதலைப் (ஆசீர்வாதங்களை) பெறும்போது, பிறரை வாழ்த்த வேண்டும் அல்லது ஆசீர்வதிக்க வேண்டும் என்ற வாஞ்சை நம்மில் உண்டா?

2. வாழ்த்துதலைக் கண்டு கலங்கியவள் (லூக்.1:29)

காபிரியேல் தூதனின் வாழ்த்துதலைக் கண்டு அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று மரியாள் சிந்தித்துக்

கொண்டிருப்பதாக லூக்கா ஆக்கியோன் எழுதுகிறார். ஏன் இந்தக் கலக்கம் மனிதர்கள் பிறர் நம்மைப் புகழ வேண்டும் என்று எண்ணுவது சாதாரணமான மனிதத் தன்மையாகும். பிறர் நம்மைப் புகழும்போது அப்புகழ்ச்சியை, ஏற்றுக் கொள்ள தயங்குவது தெய்வீகத் தன்மை. ஏனெனில் புகழ்ச்சிக்குக் காரணமானவர் நம்மை உருவாக்கிய ஆண்டவரே. எனவே இங்கு மரியாள் தன்னிடத்திலுள்ள தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்துகிறாள் என்று கூறினால் அது தவறாகாது.

இரண்டாவதாக கலக்கமடைந்து சிந்தித்த மரியாளுக்குள்ளே போராட்டம் இருந்திருக்க வேண்டும். இந்தப் போராட்டமான சூழ்நிலைக்குள்ளே இவள் தனக்குள்ளே சிந்திப்பது இவளுடைய தைரியமான ஆள் தத்துவத்தை வெளிப்படுத்துகிறது. தன் போராட்டத்தைப் பிறரிடம் அதிகமாக பேசி, பாவத்திற்குள்ளாகாதபடி (நீதி.10:19) இறைவன் அவளிடத்தில் தனித்துப் பேச இடங்கொடுத்தாள் (உ.ம். போரில் உனக்கு வெற்றி தருவேன் என்று தேவன் வாக்களித்தும், கலங்கிய பாராக் தன் கலக்கத்தைத் தீர்க்கதரிசியாகிய தெபோராளிடம் வெளிப்படுத்துகிறான் (நியாயா.4:8).

இன்று போராட்டமான சூழ்நிலையில், நம் கலக்கங்களை இறைவன் பாதத்தில் மாத்திரம் வைக்கிறோமா?

3. வாழ்வை ஆண்டவருக்கு அர்ப்பணித்தவள் (லூக்1:38)

கேள்விகளோடு காணப்பட்ட மரியாளுக்குத் தேவ தூதன் கூறிய பதில்களை லூக்.1:32-37 வரை வாசிக்கிறோம். இறைவனுடைய இப்பதில்களை அல்லது வார்த்தைகளை மரியாள் புரிந்து கொண்டாள். கன்னிகையாகிய அவள் பரிசுத்த ஆவியால் கர்ப்பம் தரித்து மேசியாவைப் பெற்றெடுக்கும் தாயாக மாற வேண்டும் என்ற இறைவனின் செயலைப் புரிந்து கொண்டாள். இத்திட்டம் செயலாற்றத் தனக்கு வரும் நிந்தை, அவமானம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், இறைவனின் திட்டத்தை நிறைவேற்றுவதே தன் தலையாய கடமை என்று தன் வாழ்வை அர்ப்பணித்தாள். இன்றும் உலகில் பெண்களில் பலர் இறைவன் தங்களுக்குள் கொடுக்கும் தரிசனத்தை நிறைவேற்றுவதில் சூழ்நிலைகளைப் பாராது தங்களை அர்ப்பணித்துச் செயல்படுகின்றனர். (உ.ம்) அன்னை தெரசா, ஆதிப் பெண் மிஷனெரிகள்.

நம் வாழ்வில் இறைவன் வித்தியாசமான சூழ்நிலையைத் தரும்போது அவர் சித்தத்தையே நிறைவேற்ற வேண்டும் என்ற அர்ப்பணிப்பு நம்மில் உண்டா?

திருமதி ஜெஸி ஆனந்
பாளையங்கோட்டை

01.04.2007

மாதத்தின் முதல் நாள்

பாடங்கள் : ஆபகூக் 2:1-4; மத்.6:31-34

வசனம் : *"தாமதித்தாலும் காத்திரு; நிச்சயமாய் வரும்" ஆபகூக் 2:3பி.*

முன்னுரை :

ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்கும் அர்த்தம் உண்டு; ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் பல கனவுகள், ஆசைகள் உண்டு. ஆண்டவரும் மனிதனை ஒரு நோக்கத்திற்காகவே படைத்திருக்கிறார். "இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்கு பிரியம்" என்கிறது வேதம். நம்மை ஆசீர்வதிக்கவே ஒவ்வொரு நாளும், மாதமும் கர்த்தர் தமது வார்த்தைகளைக் கொண்டு ஆலோசனையும், உற்சாகமும் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அதை நாம் சிந்திப்போம்.

1. தாமதித்தாலும், காத்திரு :

இன்று நாம் ஒரு அவசரக் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எல்லாம் உடனுக்குடன் நடக்கவேண்டும் என்பது மனிதனின் எதிர்பார்ப்பு. ஆனால் கர்த்தர் ஆபகூக் மூலம் இஸ்ரவேல் மக்களுக்கு தரிசனம் தந்து தாமதித்தாலும் காத்திருக்கும்படியாக அழைக்கிறார் தானி.12:12. "காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்" என்கிறது. தாமதம், காத்திருத்தல் என்பது அநேகருக்கு சற்று விசனமானதாக இருக்கலாம். சிலருக்கு ஒருஎளிய சொல்லாக இருக்கலாம். ஆனால் கிறிஸ்துவின் போர்வீரன் பல ஆண்டுகள் கற்றபின் தான் இந்நிலையை அடைகிறான். வேகமாக நடத்தல், ஓடுதல் என்பது அனைவருக்கும் எளிதானது. ஆனால் எபி.12:1 பொறுமையுடன் ஓட ஆலோசனைத் தருகிறது. இது சற்று கடினமானது.

ஆண்டவரை சேவிக்க வேண்டும், அவர் தரும் வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என ஆவல் கொண்டுள்ள ஆத்துமா எவ்வாறு அதில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென அறியாத நிலையில் இருப்பதுதான் குழப்பத்தை உண்டாக்கும். அவ்வாறான நேரங்களில் என்ன செய்ய வேண்டும்?

* மனசோர்வடைந்து தன்மீது எரிச்சல் கொள்வதா?
* கோழையாக பின்னிட்டு ஓடிவிடுவதா?
* குருட்டுத் துணிவுடன் முன்னேறி செல்வதா?

ஆபகூக் 2:1 நான் என் காவலிலே தரித்து . . . அவர் எனக்கு என்ன சொல்லுவாரென்று . . . கவனித்துப் பார்ப்பேன் என்கிறது. ஆகவே, ஏதும் செய்யாமல் காத்திருக்க வேண்டும். நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள். சங்.46:10.

2. நிச்சயமாய் வரும் (It will certainly come)

ஆண்டவருடைய வாக்குத்தத்தங்களுக்கு காத்திருக்கிறவர்களுக்கு அவர் தரும் வார்த்தை உறுதியான மொழியில் கூறப்பட்டுள்ளது. அதைக் குறித்து சந்தேகப்படவோ, குழப்பமடையவோ தேவையில்லை. மாறாக

அ) ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும் :

ஆண்டவரிடம் சென்று நிலைமையை விவரிக்க வேண்டும். நமது கஷ்டங்களை எடுத்துரைத்து அவர் வாக்குசெய்துள்ள உதவிகளுக்காக கெஞ்ச வேண்டும். ஆதி.32:24இல் யாக்கோபு இதை நடைமுறைப்படுத்துகிறேன்.

ஆ) விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டும் :

கர்த்தர் மீது கொண்டுள்ள அசைக்கமுடியாத உறுதியை அவரிடம் கூறு சங்.42:5

நடுநிசிவரை காத்திருக்க வைத்தாலும் அவர் சரியான நேரத்தில் வந்து சேருவார்; காத்திரார்; காட்சி தருவார் மத்.25:6. எனவே நம்பிக்கையில் நிலைத்திருப்போம்.

இ) அமைதியான பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்:

மோசேக்கு விரோதமாக இஸ்ரவேல் மக்கள் முறுமுறுத்தது போல இடைக்காரணங்களுக்காக முறுமுறுக்காதே. காரியங்களை அப்படியே ஏற்றுக்கொள். "உன்னுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள உன் ஆண்டவரின் கரத்தில் உன் விருப்பம் எதையும் அதனுடன் இணைக்காமல் காரியங்களை ஒப்படைக்க வேண்டும்" ஆதி.17:17-19.

முடிவுரை :

நான், நானே கர்த்தர். நான் மாறாதவர் என்றவர் ஜீவனுள்ளவராக உலகத்தின் முடிவுமட்டும் நம்மோடு இருக்கிறவராகவே இருக்கிறார். ஆகவே அவர் வார்த்தைகள் மாறாதது. நிச்சயமாகவே முடிவு உண்டு: உன் நம்பிக்கை வீண்போகாது என்றவர் இம்மாதத்தில் உங்கள் நம்பிக்கையின்படி பலமடங்கு உங்களை ஆசீர்வதிப்பாராக!

திரு. Y. அகஸ்டின் சாமுவேல்
கலந்தபனை

01.04.2007

கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் ஞாயிறு

(குருத்தோலை ஞாயிறு)

பொருள் : **இயேசு இராஜாவின் பவனி**

பாடங்கள் : சக.9:9-12; அப்.4:23-31; மத்.21:1-11

வசனம் : *"இதோ உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார். அவர் நீதியுள்ளவரும், இரட்சிக்கிறவரும், தாழ்மையுள்ளவரும், கழுதையின் மேலும் கழுதைக் குட்டியாகிய மறியின்மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்" சகரியா 9:9பி.*

முன்னுரை :

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பெத்பகே பெத்தானியா பட்டணங்களில் இருந்து எருசலேமிற்கு கழுதைக்குட்டியின் மேல் ஏறி பவனியாக சென்ற அந்த நாளை நினைவு கூர்வதே குருத்தோலை ஞாயிறு. இந்த நிகழ்ச்சி நான்கு நற்செய்தி நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. இந்தப் பவனி சகரியா தீர்க்கதரிசியின் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல் ஆகும்.

இன்றைய நவீன உலகில் பற்பல கோரிக்கைகளை வலியுறுத்தி நாள்தோறும் ஊர்வலங்கள், பேரணிகள் நடத்தப்படுகின்றன. ஆனால், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் இயேசு ராஜாவின் தலைமையில் நடந்த பவனியின் நோக்கமும், கோரிக்கையும் வித்தியாசமாக இருந்தது. இப்பவனியில் திரளான மக்கள் குருத்தோலைகளைப் பிடித்துக் கொண்டு வழியிலே வஸ்திரங்களை விரித்து ஓசன்னா! என்று இயேசு ராஜாவை மகிமைப்படுத்தி ஆர்ப்பரித்தார்கள்.

இந்த பவனியின் தலைவராக சென்ற இயேசு ராஜாவைப் பற்றி, இந்த அருளுரை வசனத்தின் அடிப்படையில் சிந்திப்போம்.

1) நீதியுள்ள இராஜா :

(லூக்கா 23:47, அப்.3:14, 1யோவா.2:1) இயேசு ராஜா நீதியுள்ளவர் (செப்.3:5) மகாநீதிபரர் (யோபு 37:23) உலகப் பிரகாரமான நீதியைக் காட்டிலும், இயேசு கிறிஸ்துவின் நீதி வித்தியாசமானது. எப்படியெனில், யோவா.8:3-11ஆம் வசனம் வரையுள்ள திருமறைப்பகுதியில், விபசாரத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஸ்திரீக்கு தண்டனை வழங்காமல், அவர் பாவநிலைமையை உணர்த்தி அவள் பாவத்தை மன்னித்து நீ போ இனி பாவம் செய்யாதே என்று நீதி செய்தார்.

ஏழை எளிய மக்களுக்கும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் ஆண்டவர் நீதி செய்தார். எரே.23:6 "அவருக்கு இடும் நாமம் நீதியாய் இருக்கிற கர்த்தர் என்பதே!" இத்தகைய நீதியுள்ள ராஜா கழுதையின் மேல் ஏறி பவனியாக சென்றார்.

2) இரட்சிக்கிற இராஜா :

(லூக்கா 1:74, யோவான் 3:17, 12:47)

இயேசு என்றாலே இரட்சகர் என்று பொருள். "அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (மத்.1:21)

பேதுரு தண்ணீரில் அமிழ்ந்து போகையில், கர்த்தாவே இரட்சியும் என்று கூப்பிட்டார். உடனே, இயேசு தமது கையை நீட்டி அவனைத் தூக்கியெடுத்தார்.

சகேயுவின் பாவத்தை மன்னித்து அவன் வீட்டாருக்கும் இரட்சிப்பு அருளினார். (லூக்கா 19:9).

இத்தகைய இரட்சிக்கிற இராஜா கழுதையின் மீது பவனியாக சென்றார்.

3) தாழ்மையுள்ள இராஜா :

இயேசு ராஜா வாழ்நாள் முழுவதும் தாழ்மையாகவே நடந்தார். "அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலி.2:8). அவர் பவனியாக செல்ல கழுதைக்குட்டியை தெரிந்தெடுத்ததும், தாழ்மையைக் குறிக்கிறது. இயேசு தாழ்மைக்கு முன்மாதிரியாக சீஷர்களின் கால்களைக் கழுவினார்.

ஆயக்காரனின் ஜெபம் ஆண்டவர் சமூகத்தில் தன்னை தாழ்த்தின. ஆயக்காரனே, நீதிமானாக்கப்பட்டான். (லூக்.18:14பி) "தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்". இத்தகைய தாழ்மையின் ராஜா கழுதைக்குட்டியின் மீது பவனியாக சென்றார்.

முடிவுரை :

அன்று பவனியாக சென்ற இயேசு ராஜாவை போல் பிறருக்கு நீதி செய்வோம். அநேகரை இரட்சிப்பின் பாதையில் வழி நடத்துவோம், தாழ்மையின் சிந்தையைத் தரித்துக் கொள்ளுவோம் என்று இந்த குருத்தோலை ஞாயிற்றில் தீர்மானம் செய்வோம். கர்த்தர் தாமே நம்மையும், நம்முடைய குடும்பத்தினரையும் ஆசீர்வதிப்பாராக ஆமென்.

திரு. A. ஜாண் அகஸ்டின்
பெருமாள்புரம்

02.04.2007

உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் திங்கள்

பொருள் : **அத்திமரம் சபித்த நாள்**

பாடங்கள் : ஏசா.49:1-3; எபி.10:19-25; மாற்.11:12-19

முன்னுரை :

சிறப்பான, விளங்கிக் கொள்ள மிகக் கடினமான ஒரு பகுதி இது. இலைகளுள்ள ஒரு அத்திமரத்தைக் கண்ட அவருக்குப் பசி உண்டானதால் அதில் கனி இருக்குமோ எனத் தேடிச் சென்று, அதில் இலைகளையல்லாமல் கனி ஒன்றும் இல்லாததால் அதைச் சபித்தார். மறுநாளிலே, அந்த அத்திமரம் பட்டுப் போயிருந்ததைப் பேதுரு பார்த்து முந்தின நாள் இயேசு சொன்னதை நினைவு கூர்ந்தார். இந்த நிகழ்ச்சி நமக்குத் தருகிற படிப்பினை என்ன என்பதைக் காணுவது நல்லது என நினைக்கிறேன்.

1. நாம் கனி கொடுக்க எதிர்பார்க்கிறார் :

தேவன் தாம் படைத்த மனுக்குலத்தை ஒரு சிறப்பான நோக்கத்தோடு படைத்தார். படைக்கப்பட்ட மனிதன் கனி தரவேண்டும். ஏசாயா 5ஆம் அதிகாரத்தில் என் நேசருக்கேற்ற ஒரு பாட்டைப் பாடுவேன் என்று சொல்கிறவர். அது நல்ல திராட்சைப் பழங்களைத் தருமென்று நான் காத்திருக்க அது கசப்பான பழங்களைத் தந்ததென்ன? என்கிறார். எனவே சேனைகளின் கர்த்தருடைய திராட்சத் தோட்டம் இஸ்ரவேலின் வம்சமே என்கிறார் (ஏசா.5:7மு) மேலும் யோவான் 5ஆம் அதிகாரத்தில் நானே மெய்யான திராட்சைச் செடி நீங்கள் கொடிகள், என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார் என்கிறார். ஆம், நாம் கனி தர வேண்டுமென்று ஆண்டவர் நம்மை உருவாக்கியிருக்கிறார். அவர் விரும்புகிற அன்பின் கனிகளை நாம் அவருக்காய்க் கொடுப்போம். கலா.5:22,23இல் ஆவியின் கனியைக் குறித்துப் பவுல் கூறும்போது ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம் இச்சையடக்கம் எனபவைகளே என்கிறார். நாம் இப்படிப்பட்ட கனி கொடுக்கும் வாழ்க்கை வாழத் தேவன் விரும்புகிறார்.

2. கனியற்ற வாழ்வில் சோர்ந்து போகிறார் :

அவர் அதினிடத்தில் வந்தபோது அதில் இலைகளையல்லாமல் வேறொன்றையும் காணவில்லை. கனியற்ற வாழ்வு என்பது, அதில் இலைகள் இருந்தது, ஆனால் கனியில்லை. இது மாய்மாலமான வாழ்வைக் குறிக்கிறது. அத்திமரத்தில் இலைகள் வரத் துவங்கும் போது அதனோடே கனிகளும் சேர்ந்து வருவதே இயற்கை. இலைகள் உள்ள அத்திமரத்தில் கனிகள் கண்டிப்பாய் இருக்க வேண்டும். ஆனால் அதில் கனி காணப்படவில்லை. நாமும் கனி இருப்பது போன்ற தோற்றத்தைப் பிறருக்குக் கொடுத்து உள்ளே

கனியற்றவர்களாயிருக்கிறோமா? உதடுகளால் என்னைக் கனம் பண்ணுகிற இவர்களின் உள்ளமோ எனக்குத் தூரமாயிருக்கிறது என்று ஏசா.29:13; மத்.15:7; மாற்.7:6இல் வாசிக்கிறோம். மேலும் மாய்மாலமான வாழ்க்கையை இயேசுவானவர் மத்தேயு 23ஆம் அதிகாரம் முழுவதுமாய்க் கடிந்து கொள்வதைப் பார்க்கிறோம். இந்த அத்தி மரம் இலைகளோடிருந்தும் அதனிடம் வருகிறவர்கள் அதில் நிச்சயமாய்க் கனி இருக்குமென்று வந்தால் ஏமாந்து விடக் கூடிய அளவுக்கு ஒரு மாய்மாலமான தோற்றத்தைத் தந்தது. நம் வாழ்வில் இதுபோன்று மாய்மாலம் உண்டோ? நாம் இயேசுவுக்குச் சரியான தோற்றத்தைக் காண்பிப்போம். இல்லையானால் இதில் சொல்லப்படுகிற எச்சரிப்பு நமக்கும் உரியது.

3. கனியற்ற வாழ்வைச் சபிக்கிறார் :

இயேசுவானவர் ஆசீர்வதிக்கிறவர். பவுலும் ரோ.12:14இல் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள். ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றிச் சபியாதிருங்கள் என்கிறார். இயேசுவானவர் மத்.5:44 உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் என்கிறார். எனவே ஆசீர்வதிக்கச் சொன்ன அவர் எப்படிச் சபிப்பார் என்று கேள்வி கேட்கலாம். ஆனால் தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களை நாம் செய்யும்பொழுது நமக்கு ஐயோ என்கிறார். மத்.23ஆம் அதிகாரத்தில் மாயக்காரரைப் பார்த்து பல இடங்களில் இயேசுவானவர் ஐயோ னென்று சொல்கிறார். மேலும் லூக்.26ஆம் அதிகாரத்தில் திராட்சைத் தோட்டத்தைக் குத்தகைக்குக் கொடுத்த எஜமான் தன் பணியாளர்கள் பலரை அனுப்பி அவர்கள் விரட்டி விடப்பட்டார்கள். கடைசியாகத் தன் குமாரனை அனுப்பினார். அவர்கள் அவனைப் பார்த்த மாத்திரத்தில் இவன் சுந்திரவாளி, சுதந்திரம் நம்முடையதாகும்படிக்கு இவனைக் கொல்லுவோம் வாருங்கள் என்று சொல்லிக் கொன்று போட்டபிறகு திராட்சத் தோட்டத்து எஜமான் என்ன செய்வார்? அவன் வந்து அந்த தோட்டக்காரரைச் சங்கரித்து (லூக்.20:16) என்கிறார். எருசலேமை நோக்கி கண்ணீர் விட்டழுது, அதற்குச் சாபத்தை அளித்தார் (லூக்.19:43,44) கலியாணத்துக்கு அழைக்கப்பட்டவர்களில் கலியாண வஸ்திரம் தரித்திராத மனிதனுக்கு ஆண்டவர் பயங்கரமான தண்டனை தருகிறார் (மத்.22:13). மேலும் மன்னிக்காத ஊழியக்காரனுக்கும் ஆண்டவர் கடுமையான தண்டனை வழங்குகிறார் (மத்.18:34) அவரைப் பற்றி ஆபகூக் கூறும்போது அவர் தீமையைக் காணாத சுத்தக் கண்ணர் (ஆப.1:13) என்கிறார். உபாகமத்தில் அவரைப் பற்றி கூறும்போது அவர் பட்சிக்கிற அக்கினி (உபா.4:24) என்கிறார். எனவே அவர் தவறு செய்பவர்களுக்கு நிச்சயமாக தண்டனையளிப்பார். எனவே அவர் மன்னிக்கிற தேவனாக மட்டுமல்ல நாம் தவறு செய்யும் போது நம்மைத் தண்டிப்பார் என்பதை மறந்து போகக்கூடாது.

Rev. D.J

03.04.2007

உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் செவ்வாய்

பொருள் : **கேள்வி நாள்**

பாடங்கள் : எரே.*11:16-20*; 1பேது.*2:17-25*; மாற்.*11:20-33*

முன்னுரை :

உயிர்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் செவ்வாய்கிழமை கேள்வியின் நாள் அன்று அழைக்கப்படுகின்றது. இயேசுவை எப்படியாவது அகப்படுத்தும் நோக்கில் சதுசேயர்கள், வேதபாரகர் பல கேள்விகளை கேட்கிறார்கள். இயேசுவும் அவர்களுக்கேற்ற விதத்தில் அவர்களது சிந்தனையைத் தூண்டும் விதத்தில் பேசுகின்றார்.

1. அதிகாரம் பற்றிய கேள்வி

பிரதான ஆசாரியர், வேதபாரகர், மூப்பர் இயேசுவினிடத்தில் வந்து "நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இவைகளைச் செய்வதற்கு அதிகாரத்தை உமக்கு கொடுத்தவர் யார்? எவைகள் என்று பார்க்கும்போது மாற்.11:15,16இன்படி ஆலயத்தை சுத்திகரித்ததை கூறியிருக்கலாம் என்று தெரிகிறது. இயேசு இப்படி ஆலயத்திலுள்ள வியாபார ஸ்தலங்களை கவிழ்த்துப் போடவும், இப்படிப்பட்ட அதிகாரத்தை இவருக்கு கொடுத்தவர் யார் என்று பிரதான ஆசாரியர் கேள்வி எழுப்புகின்றனர். அவர்கள் இயேசுவின் அதிகாரத்தை அறிந்திருக்க வாய்ப்பில்லை. இயேசுவின் சீடர்கள் அவருடைய அதிகாரத்தை உணர்ந்திருந்தனர் (மாற்.4:39-41). இயேசுகிறிஸ்துவும் மத்.28:18இல் வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறுகின்றார். எனவே அவரது அதிகாரத்திற்கு கீழ்ப்படிந்து அவர் சித்தம் செய்வோம்.

2. அரசியல் சார்ந்த கேள்வி

இராயனுக்கு வரி கொடுக்கிறது நியாயமோ அல்லவோ? நாம் கொடுக்கலாமோ? கொடுக்கக் கூடாதோ (மாற்.12:14).

இயேசுவை அரசியல் குற்றவாளியாக சிக்கவைத்து விடலாம் என்று இக்கேள்விகளைக் கேட்கிறார்கள். ரோமர்களின் கைக்கூலியாக இருந்து கொண்டு செயல்பட்ட இவர்கள் "நாம்" கொடுக்கலாமா என்று இயேசுவையும் தங்கள் பக்கம் இழுக்கின்றார்கள். இக்கேள்விக்கு இயேசு பதிலளிக்கும்போது இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார். அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டியதை

சரியாக செலுத்த வேண்டும் என்பதில் இயேசு சரியாக இருந்தார் (மத்.17:24-27). நாமும் அரசுக்குரியதை அரசுக்கும் ஆண்டவருக்கு செலுத்த வேண்டிய காணிக்கைகளை ஆண்டவருக்கும் சரியாக கொடுப்போம்.

3. அறிவியல் சார்ந்த கேள்வி

உயிர்த்தெழுதலில் . . . எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள் (மாற்.12:23). இந்த கேள்வியைக் கேட்டவர்கள் உயிர்த்தெழுதலில் நம்பிக்கையில்லாத சதுசேயர்கள் ஆவர். உயிர்த்தெழும்போது அனைவரும் தேவதூதர்கள் போல காணப்படுவோம் என்று அங்கே கணவன், மனைவி என்ற எந்த உறவுமுறையும் இல்லை என்றும் பதிலளிக்கிறார். உயிர்தெழுதலில் நாம் அனைவரும் தேவசாயலாக இருப்போம் என்று கூறுவது, படைக்கப்பட்ட மனிதன் பாவமில்லாத வனாக, பரிசுத்தமானவனாக காணப்படுவான் என்று புரிந்து கொள்ளலாம். ஆதி.1:27 நாம் இழந்த அந்த தேவசாயலை மீண்டும் பெற்றுக் கொள்வோம்.

4. அன்பின் பிரமாணம் சார்ந்த கேள்வி

கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எது? (மாற்.12:28). வேதத்தை நன்றாக அறிந்து அதைப் போதிக்கிற வேதபாரகனின் கேள்வி இது. இக்கேள்விக்கு இயேசுகிறிஸ்து பதிலளிக்கும்போது பத்து கற்பனைகளையும், உபாகமச் சட்டங்கள் அனைத்தையும் சுருக்கி இரண்டு கற்பனைகளாகத் தருகின்றார். 1) கடவுளிடத்தில் அன்பு கூருவாயாக. 2) பிறனிடத்தில் அன்பு கூருவாயாக. இவை இரண்டுமே பிரதான கற்பனைகள் என்று கூறி அவனுடைய வாயையும் அடைத்தார். அன்பின் பிரமாணமே முக்கியம் என்பதை இயேசு தெளிவாக விளக்குவதைக் காண்கிறோம்.

இயேசுகிறிஸ்துவிடம் கேள்விகேட்டு அவரை எப்படியாவது குற்றத்தில் அகப்படுத்திட திட்டமிட்ட மூடர்களான பிரதான ஆசாரியர், வேதபாரகர், சதுசேயர் ஆகியோருக்கு அவர்களது மதியீனத்தின்படியே உத்தரவு கொடுத்து அவர்களை ஞானிகளாகவிடவில்லை. நீதி.26:5இல் நாமும் நம்மிடம் குற்றம் கண்டுபிடிக்க நினைப்பவர்களிடம் சர்ப்பத்தைப் போல வினாவுள்ளவர்களாக காணப்பட்டு எதிரி விரிக்கும் வலையில் இருந்து தப்பிக்கொள்ள ஆண்டவர் ஞானம் தருவாராக.

அருள்திரு தி. செல்லதாஸ் ஜோசப்
கூடன்குளம்

04.04.2007

உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன் புதன்

பொருள் : **தைலாபிஷேகம்**

பாடங்கள் : ஏசா.63:1-9; எபி.5:5-10; மாற்.14:1-9

முன்னுரை :

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். மாற்.14:1-9 வரையுள்ள பகுதியில் ஒரு பெண் இயேசுகிறிஸ்துவின் சிரசில் பரிமள தைலம் ஊற்றுகின்ற நிகழ்ச்சியைப் பார்க்கிறோம். ஆனால் அதற்கான காரணம் கொடுக்கப்படவில்லை. ஆனால் இயேசுகிறிஸ்து அச்சம்பவத்திற்கான விளக்கத்தைக் கொடுக்கிறார். மேலும் அக்கால மக்களின் சிந்தனைகளையும் அறியமுடிகிறது.

மக்களின் சிந்தனை :

மாற்.14:4ஆம் வசனத்தில் "வீண் செலவு" என்று கூறுகிறார்கள். மாற்.14:5ஆம் வசனத்தில் "தரித்திரருக்கு கொடுக்கலாமே" என்று கூறுகின்றார்கள். தரித்திரர் மேல் பரிதாபப்படுவது போல் நடிக்கின்றார்கள். ஆனால் இயேசுகிறிஸ்து எல்லாருடைய இருதய சிந்தனைகளையும் அறிகிறவர். அவருடைய கண்களுக்கு ஒன்றும் மறைவாய் இருக்க முடியாது.

மக்களின் செயல்பாடு :

அந்த பெண்ணை தொந்தரவு செய்கிறார்கள். அந்த பெண் செய்யும் நற்கிரியையை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இயேசுகிறிஸ்துவின் விளக்கம் :

மாற்.14:6இல் என்னிடத்தில் நற்கிரியையை செய்திருக்கிறாள் என்று கூறுகின்றார். மனித சிந்தனைக்கும் இயேசுவின் சிந்தனைக்குமுள்ள வேறுபாட்டைப் பார்க்க முடிகிறது. இயேசுகிறிஸ்து எப்பொழுதும் மேலானவைகளையே சிந்திக்கிறார். இந்த உலகில் இயேசுகிறிஸ்துவுக்காக மனிதன் செய்யும் ஒவ்வொரு செயலும் நற்கிரியை என்பதை அறிந்து கொள்கிறோம்.

மாற்.14:8ஆம் வசனத்தில் தன்னால் இயன்றதைச் செய்தாள் என்று கூறுகின்றார். இன்றைக்கும் ஆண்டவர் நம்மிடத்தில் நம்மால் இயன்றதைத்தான் செய்யச் சொல்லுகிறார். மேலும் இவ்வசனத்தில் என்னை அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமான செயல் என்று கூறுகின்றார். உலக மக்கள் ஒவ்வொருவரும் சாவை விரும்பாது வாழ வேண்டும் என்று விரும்பும்போது ஆண்டவராகிய

இயேசுகிறிஸ்து தன்னுடைய மரணத்தைக் குறித்து பேசுகின்றார். இது மக்களுக்காக தன் ஜீவனை கொடுக்க விரும்பும் மீட்பின் செயலை காட்டுகிறது.

மேலும் மாற்.14:8ஆம் வசனத்தில் என் சரீரத்தில் தைலம்பூச முந்திக் கொண்டாள் என்று கூறுகின்றார். இவ்வுலகில் இயேசுவுக்காக செய்யும் நற்செயல்களை உடனடியாக செய்ய வேண்டும் என்று விரும்புகின்றார். காலதாமதம் செய்யக்கூடாது. ஆத்துமாக்கள் அழிந்து போகும் முன்பே ஆத்துமாக்களை ஆண்டவரண்டை சேர்க்க முந்திக் கொள்ள வேண்டும். ஒருவருக்கொருவர் கனம் பண்ணுகிறதிலே முந்திக் கொள்ளுங்கள் என்று ரோ.12:10ஆம் வசனம் கூறுகிறது.

இயேசுகிறிஸ்துவின் செயல்பாடு :

மாற்.14:6ஆம் வசனத்தில் அவளை விட்டுவிடுங்கள்; ஏன் அவளை தொந்தரவுபடுத்துகிறீர்கள் என்று சொல்லி அந்த பெண்ணுக்கு பாதுகாப்பு கொடுக்கிறார். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன் ஊழித்தில் பெண்களின் முன்னேற்றத்திற்கு பல நிலைகளில் உதவி செய்கிறார்.

மாற்.14:9ஆம் வசனத்தில் அப்பெண்ணுக்கு உயர்வான ஆசீர்வதத்தைக் கொடுக்கிறார். உலகெங்கிலும் இவள் செய்தது சொல்லப்பட்டு நினைவு கூறப்படுவாள் என்று இயேசு கூறுகின்றார். இன்றைக்கும் நாம் இப்பெண்ணை நினைவு கூறுகிறோம். இதேபோல் உலகெங்கிலும் இப்பெண் நினைவு கூறப்படுகிறாள். மனித வாழ்க்கையில் உலக ஆசீர்வாதங்களைப் பெறுவதைவிட அழியாத ஆசீர்வாதங்களைப் பெறுவதே சிறந்ததாகும்.

இச்சம்பத்தை சிந்திக்கின்ற நம்முடைய வாழ்க்கையிலும் இயேசுவுக்காக நற்செயல்களைச் செய்யவும், இயேசுவுக்காக நற்செயல்களைச் செய்யும் மக்களை ஏற்றுக் கொள்ளவும் தீர்மானம் எடுப்போம். மேலும் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்ட இயேசுகிறிஸ்து, அண்ட சராசரங்களையும் படைத்த தேவனுக்கு சமமாயிருக்கிற இயேசுகிறிஸ்து, உலகத்தை இரட்சிக்க மனிதனாக உருவெடுத்த இயேசுகிறிஸ்துவின் தாழ்மையை நாமும் ஏற்றுக்கொள்ள தீர்மானம் எடுப்போம்.

"தம்மைத் தாமே தாழ்த்தினதினால் இயேசுகிறிஸ்து உயர்த்தப்பட்டார்".

அருள்திரு T. ஞானக்கண்
மஞ்சுவிளை

05.04.2007

கட்டளை வியாழன்

பாடங்கள் : யாத்.12:1-8,11-14; 1கொரி.11:23-34; மாற்.14:22-26

வசனம் : *"என்னை நினைவு கூரும்படி இதை செய்யுங்கள்" 1கொரி.11:25.*

முன்னுரை :

Maundy என்பதன் பொருள் கழுவப்படுதல் என்பதாகும். கழுவப்பட்ட, புதிய நினைவுகள் நமதாகட்டும். கிறிஸ்துவை நினைவுகூரவும், புது உடன்படிக்கைக்காக நன்றி கூறவும், அவர் பிரசன்னம் முன்னிருப்பதை உணர்ந்து கொள்ளவும், நம் ஆண்டவரே, திருவிருந்து என்னும் சாக்கிரமெந்தை ஏற்படுத்தியுள்ளார். இந்த தனிச்சிறப்பான நாளில் திருவிருந்து எதனை அடையாளப்படுத்துகிறது என சிந்திப்போம்.

1. திருவிருந்து - பஸ்கா பலியின் அடையாளம் (1கொரி.5:7)

திருவிருந்தினை, நாம் கல்வாரி பலியின் ஒளியில் புரிந்து கொள்வது மிகவும் அவசியம். இயேசுகிறிஸ்து திருவிருந்தை பழைய ஏற்பாட்டின் பஸ்கா பலியுடன் தொடர்புபடுத்தி ஏற்படுத்தினார் என்பதில் ஐயமில்லை. சரீரம், இரத்தம் என்பவை பலி சார்ந்த சொற்கள். இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்பட உள்ளனர் என்பதன் அடையாளமாக பஸ்காபலியை ஆசரிக்க மோசே கேட்டுக் கொண்டார் (யாத்.12:1-14). புதிய மோசேயாகிய இயேசுவும், தம் அடியவர்கள் பாவ அடிமைத்தனத்தினின்றும், பிசாசின் கட்டுகளில் இருந்தும் சமய சமூக கட்டுகளிலிருந்தும் பலவித பய உணர்வில் இயேசுவின் பலி மூலம் முழு விடுதலை பெற உள்ளனர் என்பதனால், புதிய இஸ்ரவேலர் உருவாக உள்ளனர் என்பதனால் புதிய பஸ்கா பலியை ஆசரிக்க கேட்டுக் கொண்டார். புதிய பஸ்கா அவரே என்பதற்காக அவர் மொழிந்ததை ஏற்று அப்பம் உடைக்கிறோம். அப்பம் பிட்குதலின்போது முழு விடுதலையை, இறையரசை எதிர்நோக்கி பாடுபட நம்மை ஜீவபலியாக்குகிறோம் என்ற உணர்வுடன் ஒப்படைப்புடன் செயல்படுவோமாக.

2. திருவிருந்து - விருந்து சூழலின் அடையாளம் (மாற்.14:23)

"அவர்களெல்லாரும் அதில் பானம்பண்ணினார்கள்" என்ற வாசகம் கூட்டுறவை, விருந்து சூழலை விவரிக்கிறது. யூத ரபிமார்கள் தமது சீடர்குழாமுடன் விருந்துண்ணும் பழக்கம் உடையவராய் இருந்தனர். இயேசுவும் தமது சீடர்களுடன் பல விருந்து நிகழ்ச்சியில் பங்கு பெற்றார். விருந்து என்பது உறவுக்கு அடையாளம். யாருடன் விருந்து உண்கிறோமோ அவர்களுடன் உள்ள உறவை கொண்டாடுகிறோம் எனலாம். இயேசு

இறையரசின் பங்காளிகளுடன் விருந்து உண்டமை இங்கு அடையாளப்படுத்தப்படுகிறது. இறையரசை மனமுவந்து ஏற்பவருடனும் இறையரசுக்கு சொந்தமானோருடனும் கொள்ளும் உறவுக்கு அடையாளமாக திருவிருந்து உள்ளது. மேசியா விருந்து இறுதிக்கால அடையாளம் (ஏசா.25:6-8) இயேசு விருந்தளித்தமையும், விருந்தானதுவும் இயேசுவே மேசியா என்பதனையும் இறுதிக்காலம் துவக்கமாயிற்று என்பதனையும் அடையாளப்படுத்துகிறது. திருவிருந்து கடந்த கால மீட்பை குறிப்பது மட்டுமல்ல எதிர்கால வெற்றியையும் எதிர்பார்க்கிறது. "கர்த்தாவே உமது மரணத்தை நினைவுகூறுகிறோம். உமது உயிர்த்தெழுதலை அறிக்கையிடுகிறோம். நீர் திரும்பி வர காத்திருக்கிறோம்" என்ற நம் திருவிருந்து ஆராதனை வரிகள் மேசியா விருந்தை நினைப்பூட்டுகின்றன (தி.வெ.19:9). எனவே திருவிருந்து இறைஉறைவை நன்றியுடன் கொண்டாடுதல் எனலாம்.

3. திருவிருந்து - இறைபிரசன்னத்தின் அடையாளம் (1கொரி.10:16)

கடவுள்-மனிதன் உடன்படிக்கை தான் திருமறையின் மையப்பொருள். மனுக்குலம் சார்பாக இயேசு செய்த உடன்பாட்டிற்கு அங்கீகாரம் திருவிருந்து. அவர் ஏற்படுத்திய புதிய உடன்பாட்டில் நம்மை பங்கேற்க அழைக்கிறார் இந்த விருந்தின்மூலம். அப்பமும், ரசமும் இறை பிரசன்னத்தின் அடையாள பொருட்கள். அவ்வண்ணமே மானுடமகன் கிறிஸ்தேசுவும் பூரண இறைவெளிப்பாட்டின் அடையாளம். என்னைக் கண்டவன் பிதாவை கண்டான் (யோவா.14:6,7) என இயேசு மொழிந்தது நினைவு கூர்க. மாற்.14:22இல் "இது என் சரீரம், இது என் இரத்தம்" என அப்பத்தையும், திராட்சை ரசத்தையும் காட்டி மொழிந்தமை "இது நான், நானே" (This is I myself) என்று பொருள் கொள்ள வாய்ப்புள்ளது. அரமேய மொழியில் "is" (இருக்கிறது) என்று பொருள்தரக்கூடிய சொல் இல்லை. எனவே திருவிருந்து "இறைவனாம் இயேசுவின் பிரசன்னமாகுதல் எனலாம். எங்கெல்லாம் திருவிருந்து ஆசரிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் இயேசுவே எழுந்தருளியாகிறார் எனலாம். இயற்கையில் பிரசன்னமாகிற இறைவன் இயேசுவாம் மானிட மகனின் முழுமையாக பிரசன்னமாகிறார். அவர் வழியாய் திருப்பொருள்களில் பிரசன்னமாயிருக்கிறார் எனலாம். எனவே திருவிருந்து இறைபிரசன்னத்தின் உடன்படிக்கை அங்கீகாரத்தின் அடையாளம். எனவே அபாத்திரராய், உடன்பாடின்றி உடன்படிக்கை திருவிருந்தில் இறைவனுடன் ஐக்கியப்படுவது தகாது. புது உடன்படிக்கை பேணவும், மனுமகன் இயேசு வழிநின்று இறையரசுக்காய் பாடுபடுவதில் உடன்படவும் அழைக்கப் படுகிறோம்.

அருள்திரு S. சாமுவேல் துரைராஜ்
சேரன்மகாதேவி

06.04.2007

புனித வெள்ளி

பாடங்கள் : எசா.53:4-12; எபி.10:11-18; மத்.26:31-27:35

சிலுவையில் தொங்கும் இயேசு என் இரட்சகர் :

நீதிபரரை சிலுவையில் அறையும்படி பொந்தியு பிலாத்து தீர்ப்பளித்து விட்டார். பிலாத்துவின் அரண்மனை கோட்டைக்குள் விசாரணை அரங்கத்தில் ஒலித்த கடைசிக் கூச்சல் "இராயனே அல்லாமல் எங்களுக்கு வேறே இராஜா இல்லை" என்பதுதான். இதோ உங்கள் இராஜா" என்று பிலாத்து அப்பொழுது கூறியதை யூத ஜனங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. மெய்யாகவே எருசலேமின் இராஜா அவர்தான் என்பது உலக மக்களின் பெரும்பான்மையோரின் இன்றைய நம்பிக்கை.

பிலாத்து நியாயாசனத்திலிருந்து எழுந்து தன்னுடைய கையைக் கழுவிவிட்டு இயேசுவையோ யூத ஜனங்களின் இஷ்டத்திற்கு ஒப்புக் கொடுத்துவிட்டு புறப்பட்டு சென்று விட்டான். இயேசு தனது சிலுவைப் பவனியை துவக்குகிறார். பாவத்தில் மூழ்கி கிடந்த மானிடத்தை பரிசுத்தம் செய்யும் மாபெரும் சிலுவைப் பவனி. தம்முடைய சொந்த இரத்தத்தினாலே, முழு ஜனத்தையும் பரிசுத்தம் செய்யும்படியாக எருசலேம் நகர வாசலுக்கு புறம்பே, பாடுபட புறப்பட்டுச் செல்கிறார். இவரே உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி என அறிமுகம் செய்து வைக்கப்பட்டவர், ஒழுங்கீன உலகை ஒழுங்குபடுத்தி புதிய உலகை உருவாக்க இயேசு புறப்பட்டு செல்கிறார். நாமும் அவ்விடத்திற்கு புறப்பட்டுச் சென்று புதிய மனிதர்களாகும்படி சிலுவையில் தொங்கும் இயேசுவைப் பார்ப்போம்.

ஒரு யூதனுக்கு குறைந்த பட்சம் 6 உடமைகள் இருந்தன. ஒரு பெரிய கச்சை, ஒரு ஜோடு காலனி, இடுப்புக் கச்சை, ஒரு தலைப்பாகை, முழங்கால்வரை அணியும் உள்ளாடை இயேசுவுக்கோ அரையை மறைக்கும் துணி மட்டுமே மீந்து விடப்பட்டன. எனினும் "என் நேசர் வெண்மையும் சிவப்புமானவர்; பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்" என காண்கிறேன். அவரது அலங்கோலத்திற்கு காரணம் நானே. மெய்யாகவே அவர் நமது பாவங்களை சிலுவையின் மேல் சுமந்தார். பாவம் அறியாத அவர்

நமக்காக பாவமானார். இயேசுவை கொல்கதா மலைமேல் சிலுவையில் அறைந்தார்கள். காலை 9:00 மணியளவில் அவர் வெள்ளிக்கிழமையன்று சிலுவையில் அறையப்பட்டார். மதியானவேளை 3:00 மணி வரை சிலுவையில் தொங்கினார். பகல் 12:00 மணி முதல் பகல் 3:00 மணி வரையில் தாங்கொணா வேதனையின் மத்தியில் இயேசு 7 தடவை பேசினார் என்று திருச்சபை மக்கள் நாம் நம்புகிறோம். அவர் பேசின வார்த்தைகளின் பொருள் என்ன. என்பதை மீண்டும் ஒருமுறை அறிந்து கொள்ள நாம் கொல்கதா மலைக்குச் செல்லுவோம் வாருங்கள்.

சிலுவை தரும் சிந்தனை :

சிலுவையின் காட்சி எப்பொழுதும் நம்முன் இருக்க வேண்டும் (கலா.3:1). இல்லாவிடில் நாம் வழி விலகிச் செல்ல நேரிடும். வழி விலகுகிற, மறுதலிக்கிற கிறிஸ்தவன் மறுபடியும் கிறிஸ்துவை சிலுவையில் அறைகிறான். ஏனெனில் ஒருதரம் பிரகாசிப்பிக்கப் பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும் . . . மறுதலித்துப் போனவர்கள் தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால் மனந்திரும்புவதற்கு ஏதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம் (எபி.6:4-6). எனவே சிலுவை எப்பொழுதும் முன் நிற்கட்டும். கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதன் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் (கலா.5:24). தீமையை கிறிஸ்து சிலுவையில் வென்றார் (கொலோ.2:13-15; 1கொரி.2:8). தீமையானவை வாழ்க்கை யினின்று அறவே அகற்றி, சிலுவையில் மடிய செய்தவன் புதிய வாழ்க்கையை நடத்துபவன் அவனே கிறிஸ்தவன். கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டேன், இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் வாழ்கிறார் என்றார் பவுல் (கலா.2:19,20).

ஆதலால், நாமும் இக்காலத்தில் படும்பாடுகள், இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல (ரோ.8:18) என்று எண்ணுகிறேன்.

இப்புனித வெள்ளியில் இயேசுபிரான் சிலுவையில் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் அர்த்தமுள்ளவை. அதை புரிந்துகொள்ள சிலுவை நோக்கிப் பார்த்து ஜெபத்தோடு தியானம் செய்ய இறைவன் அருள் புரிவாராக ஆமென்.

ஒன்றாம் வசனம்

"பிதாவே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக்.23:34).

கிறிஸ்தவ சமயத்தினுடைய மிகவும் சிறப்பான அருள்மொழி இது. கிறிஸ்தவ சமயத்தின் சிறப்பான போதனை தகுதியற்றவர்கள் மேல், பாவிகள் மேல், பகைவர்கள் மேல் கடவுள் செலுத்தும் மன்னிப்பின் அன்பு. இந்த வார்த்தை யாரைக் குறித்து கூறப்பட்டது என்பது கேள்வி?

இயேசுவை கொலைகளத்திற்கு கொண்டு நிறுத்தியவர்கள் யூத சமயத் தலைவர்களும், அவர்களுடன் ஒத்துப்போன அரசியல் தலைமையும், போர்ச் சேவகர்களும் ஆவர். போர்ச்சேவகர்கள் தங்கள் கடமைகளைச் செய்கிறோம் என்று அநீதிக்கு உடன்பட்டார்கள். சமயமும் அரசியலும் இணைந்து செயல்பட்டது. இயேசுவை விரோதித்தவர்கள் சொந்த மதத்தினர். யூதர்கள் அந்நியர் அல்லர். ஆனால் இயேசுவை பகைக்கக் காரணம் என்ன? ரோம பிலாத்துவிடம் இயேசுவை கொலை குற்றம் சாட்டினர் ஏன்? இயேசுவின் சமய சீர்திருத்தம், ஓய்வு நாளுக்கு ஆண்டவர் தந்த விளக்கம், இன்னும் பல புதிய சிந்தனைகள் அவர்களைப் பாதித்தது (மாற்.2:27; 3:6).

இயேசுவின் கால சமயத் தலைவர்கள் உபா.13:1-18இல் குறிப்பிட்டுள்ள சமய கடமைகளை நிறைவேற்றுவதாக எண்ணியிருக்கலாம். சமய வெறி யூத சமயத் தலைவர்களின் கண்களை குருடாக்கியது. இவர்களைப் பார்த்து பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்கிறார். தவறுகளை பக்தியில் அறியாமையில் கலந்துவிட்டால் அது பக்திநோக்கையே தலைகீழாக மாற்றிவிடும். தாங்கள் எதிர்பார்ப்பதற்கு மாறாகவும் இறைவன் செயல்படலாம் என்னும் உண்மையை யூதர்களால் அன்று ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனவே தான் இயேசு கூறிய உண்மைகள் அவர்களுக்கு புரட்டு உபதேசங்களாகக் காணப்பட்டன. ஆனால் இயேசு இச்சூழலில் மக்கள் "அறிந்து" செய்யும் தவறுகளை அறியாமையின் வெளிப்பட்ட செய்கைகளாகக் கருதி அவர்களுக்கு மன்னித்து வாழ்வளிக்கிறார்.

1. மன்னிப்பு பலவீனம் அல்ல :

மன்னிப்பு பல வேளைகளில் சிலரது பலவீனம் என எண்ணுகின்றவர்களும் உண்டு. மன்னிப்பவரை தவறாக எடை போடுவதும் உண்டு. இதற்கு காரணம் உறவையும் மானிட வளர்ச்சியைக் குறித்த அக்கரையற்ற நிலையுமாகும். ஏனெனில், மன்னிப்பு உறவை

பலப்படுத்துவதுடன் மனித ஆள்தத்துவத்தை வளர்க்கிறது. இதை உணராதோர் மன்னிப்பைத் தவறாகப் புரிந்து கொள்கின்றனர். மன்னிப்பு சமயப் போதனை மட்டுமல்ல; மானிட வாழ்விற்கு தேவையான ஒன்று. இயேசு கிறிஸ்து இதன் தேவையை உணர்ந்து தனது பணித்துவக்கத்தில் மனம் திரும்புங்கள், மன்னிப்புப் பெறுங்கள் என அறைகூவி அழைத்தார். அழைத்தது மட்டுமல்ல, மன்னிப்பவராய் வாழ்ந்து காட்டினார். உதாரணமாக, கல்லெறிந்து கொல்லப்பட்ட விரட்டப்பட்ட பெண்மணியை மன்னித்து வாழ்வளிக்கின்றவராய்ச் செயல்பட்டார். எனவே, கிறிஸ்துவின் கண்ணோட்டத்தில் மன்னிப்பு மனித நலனை நோக்காகக் கொண்டது.

கிறிஸ்து தனக்கும் பிதாவிற்குமிருந்த உறவுநிலையில் மன்னிப்பின் மனநிலையைச் செயல்படுத்தினார். இதனால் தான் சிலுவையிலும் மன்னியும் என்று கூற முடிந்தது. இறைவனின் மனநிலையே மன்னிக்கும் மனநிலை என்பதும், எச்சூழலிலும் இம் மனநிலை செயல்பட முடியும் என்பதையும் சிலுவையில் அவர் கூறிய வாக்கியம் உணர்த்துகின்றது.

விரோதிகளையும் நேசியுங்கள் அவர்களுக்காக வேண்டுதல் செய்யுங்கள் (மத்.5:44). மனிதனின் சாதாரண தப்பிதங்களையும் மன்னியுங்கள் (மத்.6:14,15) என்று போதித்தார். இவற்றை நோக்கும்போது இதை ஒரு கோட்பாடாகக் கொள்ளாமல் மனித ஆள்தத்துவத்தில் நிலைத்து விடும் ஓர் மனநிலையான கிறிஸ்து கொண்டிருந்தார் எனலாம். தெய்வீக மன்னிப்பு என்று கூறும்போது அது இறைவனுக்கே உரித்தானது, மனிதனுக்கு அவர் அருளால் கிட்டுவது என்பதாகும். எனவே மன்னிக்கும் மனநிலை பொருளாலோ, புண்ணியத்தாலோ சம்பாதிக்கப்படும் ஒன்று அல்ல. இறைசார்ந்த வாழ்வில் அவர் அருளால் பெற்றுக் கொள்ளப்படும் ஒரு ஈவு.

2. மன்னிப்பு அளவு அல்ல; ஓர் மனநிலை
(Not Quantity but Quality)

பேதுரு தவறுகளை எத்தனை தடவை மன்னிக்க வேண்டும் என்று கேட்டபோது, ஏழு எழுபது தடவை என்றார். இது மன்னிப்பு அளவு அல்ல கிறிஸ்தவ வாழ்க்கையில் இருக்க வேண்டிய ஓர் மனப்பாங்கு என்பதை வெளிப்படுத்துவதாகும். மன்னிப்பு சுயநலத்திற்காக அல்ல உலக மீட்பிற்காக ஏனென்றால் மன்னிப்பு அன்பு உறவின் வெளிப்பாடு. தொடர்ந்து உறவுகளை வளர்க்க உதவும் ஓர் மனநிலை. இதனால் கிறிஸ்துவில் வெளிப்பட்ட மன்னிப்பு, கோட்பாடு, சட்டம், சமயம் இவற்றையெல்லாம் கடந்து செயல்பட்டு மனிதனை மீட்க எல்லைகளையும் கடக்கிறது எனலாம். மன்னிப்பு, நிபந்தனையையும் தாண்டுகிறது. உதாரணமாக, சவுல் அரசனின் தீர்மானப்படி கொல்லப்பட்டிருக்க வேண்டிய யோனத்தான் மக்களின்

வேண்டுதலால் மீட்கப்படுகிறான். (1சாமு.14:45) இங்கு நிபந்தனை அழிக்கப்படுவதுடன், மீட்பும் புது உறவும் உருவாகிறது. ஆனால் தண்டனை இல்லை என்று பொருளல்ல. உதாரணமாக, தாவீது பாவம் செய்தபோது மன்னிப்பும் தண்டனையும் இணைந்து இருந்தது. மன்னிப்பில் மீட்பு எதிர்பார்க்கப்படுகிறது இறைவன் கிறிஸ்துவில் ஏற்படுத்தியிருக்கும் மன்னிப்பு அதை ஏற்றுக்கொள்பவருக்கு மீட்பை அளிக்கிறது. ஆனால் இறைவன் அவருக்காக எதையும் எதிர்பார்பதில்லை. மனிதனது மீட்பு நிறைவேறுகிற காரணத்தால் அவனது வாழ்வு சீரடைகிறது. இது கடவுளுக்கும் மனுக்குலத்திற்கும் மகிழ்ச்சியூட்டுவதாகும்.

3. மன்னிப்பு ஆற்றல் வாய்ந்தது

உதாரணமாக, ஸ்தேவான் கொலை செய்யப்பட்டபோது அவனது மன்னிப்பை சிலுவையில் கண்ட பலர் மீட்கப்பட்டனர். முதல் நூற்றாண்டில் துன்பம் சகித்து மன்னிப்பின் மனநிலையை உடையவர்களாக வாழ்ந்த காரணத்தால் பலர் கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக் கொள்ளவும், கிறிஸ்தவ வாழ்வு வாழவும் தங்களை அர்ப்பணித்தனர். உலகெங்கும் மன்னிப்பின் ஆற்றல் செயல்பட்டது வரலாற்று உண்மையாகும். சமயமும், சமுதாயமும் மாற்ற முடியாத தீமைகளையும் கட்டுப்பாடுகளையும் பாவத்தன்மையையும் கிறிஸ்துவின் மன்னிப்பு மாற்றிற்று. சாதி, மொழி அனைத்து வேற்றுமைகளையும் மாற்றிற்று. இதையே கொலோ.3:12-14இல் சிலுவை பகைமையை அழித்து மனுக்குலத்தை நட்புறவாக்கிற்று என்று பவுல் கூறுகின்றார்.

கிறிஸ்து மன்னிக்கும் மனநிலை உடையவராய் பிறரது வாழ்வில் மன்னிக்கும் மனப்பாங்கை உருவாக்குபவராய் மக்களை அழைத்து மன்னிப்பின் மனநிலையை ஈவாக வழங்குகிறார். இந்த மன்னிப்பையும், மன்னிப்பின் மனநிலையையும் அவரைப் பற்றிக் கொள்ளும் மனிதன் கிருபையாகப் பெற்றுக் கொள்கிறான். அம்மனிதன் அவரது பணியாளனாகின்றான். பணியின் நிறைவேற்றம் கிறிஸ்து தரும் மன்னிப்பும் அதனால் வரும் மன்னிப்பின் மன நிலையையுமே சார்ந்துள்ளது. மன்னிப்பை ஏற்று மன்னிக்கும் மனநிலை பெற்று வாழ்வோம்.

ஜெபம் :

பிதாவே இவ்வுலக மக்களை மன்னித்து ஏற்றுக் கொள்ளும். நாங்களும் மன்னிக்கும் மன நிலையுடன் வாழ கிருபை செய்யும்.

இயேசு அவனை நோக்கி : 'இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்' என்றார் (லூக்.23:43).

இறையன்பின் அடுத்த நிலையை இங்குக் காண்கிறோம். 'தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் உண்மையாத் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார்' (சங்.145:18).

இயேசுநாதரின் வலது இடது புறங்களில் இரு குற்றவாளிகள் சிலுவையில் அறையப்பட்டிருந்தனர். மாற்.15:32இன்படி, 'அவரோடுகூடச் சிலுவைகளில் அறையப்பட்டவர்களும் அவரை நிந்தித்தார்கள். ஆனால் லூக்காஅப்போஸ்தலர், அந்த இரு கள்வர்களில் மனந்திரும்பின ஒருவரைப் பிரித்துக் காட்டுகிறார். இங்கு ஒருவன் 'நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள்' என்று அவரை இகழ, மற்றவன் இகழ்ந்தவனைக் கடிந்து கொண்டு, இயேசுநாதரை நோக்கி, 'ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்' என்றான். இந்த மன்றாட்டுக்குப் பதிலாக இயேசுநாதர் 'இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்' என்றார். 'மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்' (லூக்.15:7) என்பதற்கிணங்க இயேசுநாதரின் மறுமொழி இறைவனின் மகிழ்ச்சியைக் காட்டுவதாக உள்ளது.

மனந்திரும்புதலின் இரண்டு முக்கிய அம்சங்களை நாம் இங்குக் காண்கிறோம். ஒன்று தன் பாவ உறவுகளை விட்டு விலகுவது. இக்கள்வன் சிலுவையில் அறையப்படுவதற்காகக் கொண்டுவரப்பட்டதிலிருந்தே இயேசுநாதரைக் கவனித்து வந்திருக்க வேண்டும்; ஒருவேளை அதற்கு முன்னாலேயே அவரைப்பற்றியும் அவரது போதனையையும் கேள்விப்பட்டிருக்கலாம். அவன் படிப்படியாக அவர் போதனை உண்மையென்பதையும், அவர்தான் மேசியா என்பதையும் உணர்ந்து கொள்கிறான்; அவர் குற்றமற்றவராகப் பாடுபடுகிறார் என்பதைக் கண்டுகொள்கிறான்; அவர் முன்னால் தன் தகுதியற்ற நிலையையும் அறிக்கையிடுகிறான் : "நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம். இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே" என்று தன் முன்னாள் தொழில் நண்பனைக் கடிந்து கொள்கிறான். அதன் மூலம் அவனோடுள்ள தவறான

உறவிலிருந்தும், தன் கடந்தகால வாழ்க்கையிலிருந்தும் பிரித்துக் கொள்கிறான். இது மனந்திரும்புதல் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான அனுபவம். கடந்தகால பாவ வாழ்க்கையை விட்டு விலகல் கிறிஸ்தவ வாழ்க்கையின் தொடக்கம்.

மனந்திரும்புதலின் இரண்டாவது அம்சம், வருங்காலத்தை இறைவனோடு இணைத்து அமைத்துக்கொள்ளல்; பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடுதல். முன்னேறிச் செல்ல விளையும்போது இறையருள் இல்லாமல் நம்மால் எதையும் சாதிக்க முடியாது : "ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்." 'நினைத்தருளும்' என்பதற்கு இங்கே 'என்மேல் கிருபை கூர்ந்தருளும்' என்பதே பொருள். மனந்திரும்பிய பாவிக்கு இறையருள் தேவை; இந்த அருளை இயேசுநாதர் இக்கள்வனுக்கு உடனடியாக வழங்குகிறார்.

"இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்". இதன் பொருளைக் குறித்து அறிஞர்கள் பலவாறான கருத்தைக் கொண்டுள்ளனர். 'பரதீசு' என்பதைப் பரலோக ராஜ்யமாகக் கொண்டால், எப்படி இயேசுநாதர் அன்றிரவே பரலோகத்திற்குச் சென்றார் என்ற கேள்வி எழலாம். அன்று 'பாதாளத்திற்கு இறங்கினார்' என்பதல்லவா விசுவாச அறிக்கையின் அம்சம். ஆகையால் சிலர் வசனத்தைச் சற்று மாற்றிப் படிக்க முயல்வர். 'நீ என்னுடன் பரதீசிலிருப்பாய் என்று இன்று நான் உனக்குச் சொல்கிறேன்' என்பதாக.

'பரதீசு' என்பது பாரசீக மொழியிலிருந்து கடன் வாங்கப்பட்ட ஒரு சொல். இது உலகில் பாவம் வருவதற்கு முன் இருந்த ஒரு ஆதிச்சூழலைக் குறிக்கும். இப்படியாக ஏதேன் தோட்டம் பரதிசு என்று கொள்ளப்பட்டது. ஏசா.11:1-9இல் ஒரு பரதீசின் சூழல் விளக்கப்படுகிறது. 'என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை; கேடு செய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்' (வச.9). ஏதேனின் ஆதிச்சூழலையும், ஏசாயாவின் காட்சியையும் ஒப்பிட்டுக் காணும்போது பரதீசு என்பது ஒரு குறிப்பிட்ட இடமில்லை. ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைச் சூழல்; கடவுளோடும் அவரது இதர படைப்புக்களோடும் இணைந்து, இசைந்து வாழும் வாழ்க்கையைக் குறிக்கிறது என்று காணலாம். பரதீசின் வாழ்க்கை மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவுக்குள் வாழும் ஒருவருக்கு இன்றே, இங்கேயே தொடங்குகிறது. இறைவனின் அன்புகொண்டு, தன் அயலானிலும் அன்பு கொண்டு இறைவனின் படைப்பினை அழிக்காது, அதனைப் பேணி, பாதுகாத்து வாழ்வதே பரதீசின் வாழ்வு. 'கடவுளின் அரசு நாம் கண்ணால் காணும் வகையில் வராது. இதோ, இங்கே அல்லது அதோ, அங்கே என்றும்

யாரும் சொல்ல மாட்டார்கள். ஏனென்றால், கடவுளின் அரசு உங்களுக்குள்ளேயே இருக்கிறது' (லூக்.17:21) என்பதின் பொருள் இதுவே.

மனந்திரும்புகிற ஒவ்வொரு பாவியும் கிறிஸ்துவுக்குள் வாழ்கிறார்; கிறிஸ்துவின் அரசுக்குள் பங்குபெறுகிறார். இறைவனோடும், இறைமக்களோடும், இறைவனின் இதரப் படைப்புக்களோடும் இசைந்த உறவுகொண்டு வாழ்கிறார். இந்த வாழ்வில் சிலுவையும், சிலுவையோடு இணைந்த துன்பங்களும் இல்லையென்பது பொருளல்ல; பாவத்தின் விளைவுகள் உலகில் நீடிக்கும் வரையிலும் உடல்சார்ந்த துன்பங்கள் வரவே செய்யும். மன்னிப்புப்பெற்ற கள்வன் சிலுவையிலிருந்து தப்பவில்லை, தப்ப முயற்சிக்கவுமில்லை. சிலுவை சுமந்தும் கிறிஸ்துவோடு வாழும் வாழ்வே பரதீசின் வாழ்வு. இத்தகைய வாழ்வுக்கே இயேசுநாதர் நம்மை அழைத்துள்ளார். அவர் அழைப்பை ஏற்று அவரைப் பின்பற்ற ஆயத்தமா?

மூன்றாம் வசனம்

"அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி : ஸ்திரீயே அதோ, உன் மகன் என்றார்"

"பின்பு அந்தச் சீஷனை நோக்கி : அதோ உன் தாய் என்றார். அந்நேர முதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக் கொண்டான்" (யோவா.19:26-27).

இயேசுநாதரின் உறவின் நாட்டம் பகைவர்களாகிய வெளிவட்டத்தில் தொடங்கி, மனந்திரும்பிய பாவிகளைக் கொண்ட நடுவட்டத்தைக் கடந்து உறவினர்கள், நண்பர்களாகிய உள் வட்டத்தை அடைகிறது. "இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்று கொண்டிருந்தார்கள்" (வச.25). பெரும்பாலான விளக்கவுரையாளர்களும் இயேசுநாதரின் இந்த வார்த்தைகளில், அவர்தம் தாயைக் குறித்துக் கொண்டிருந்த அக்கறையைச் சிறப்பித்து விளக்குவார்கள்.

இயேசுநாதர் பெற்றோரைக் கனம்பண்ணுவதில் கவனமாயிருந்தார்; தாம் சாகும் தருவாயிலும் தம் தாயைக் கவனிப்பதற்கான ஒழுங்கினைச் செய்தார் என்பது பொருத்தமாக இருந்தாலும், மனித உணர்ச்சிகளின் அடிப்படையிலும் உறவுகளின் அடிப்படையிலும்

காணும்போது இந்த விளக்கம் நிறைவைத் தருவதாக இல்லை. தன் அருமை மகனைச் சாகக் கொடுத்து நிற்கும் ஒரு அபலைத் தாயின் முன் இன்னொரு வாலிபனைக் (அவன் எவ்வளவு சிறந்தவனாக இருப்பினும்) கொண்டு நிறுத்தி 'அதோ உன் மகன்' என்று கூறினால் அந்தத் தாய் ஆறுதலடைவாளா? அந்த உறவு, மகன் உறவுக்கு ஈடுசெய்ய முடியுமா? ஒருவேளை, பின்னால் உள்ள வாழ்க்கையில் அந்தத் தாயைக் கவனிப்பதற்கான ஒரு நல்ல ஒழுங்காக அது அமையலாம்; ஆனால் அது இழந்த உறவை ஈடு செய்யாது.

இயேசுநாதரின் இந்த மூன்றாவது அருள்மொழியின் உட்பொருளை நாம் உணர வேண்டுமானால், இயேசுநாதர் தம் உலக வாழ்க்கையின்போது தம் தாயோடு நடந்து கொண்ட விதத்தைக் குறித்துத் திருமறை தரும் ஒரு சில தகவல்களைக் கவனிக்க வேண்டும்.

கானா ஊர் கல்யாண வீட்டில் திராட்சரசம் குறைவுபடுகிறது என்பதைச் சுட்டிக்காட்டி வீட்டாருக்காகப் பரிந்து பேசிய தாயாரைப் பார்த்து 'ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை' என்றார் (யோவா.2:4). ஒரு முறை அவர் ஜனங்களோடு பேசிக் கொண்டிருக்கும்போது அவருடைய தாயாரும், சகோதரரும் வந்து அவரைத் தேடிக் கொண்டிருக்க, சீஷர்கள் அதனை அவருக்கு அறிவித்தார்கள். அவர்களுக்கு விடையாக அவர் 'என் தாயார் யார்? என் சகோதரர் யார்?" என்று சொல்லி, தம்மைச் சூழ உட்கார்ந்திருந்தவர்களைச் சுற்றிப் பார்த்து; 'இதோ, என் தாயும், என் சகோதரரும் இவர்களே! தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், எனக்குச் சகோதரியும், எனக்குத் தாயுமாய் இருக்கிறான் என்றார்' (மாற்.3:31-35). இயேசுநாதர் சிலுவை சுமந்து கொல்கொதாவுக்கு நேராகச் செல்லும் போது அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகள் அவருக்குப் பின்னாகச் சென்றார்கள். இயேசுவின் தாயும் நிச்சயம் அவர்களுடன் இருந்திருக்க வேண்டும். "இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பி : எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்' என்றார் (லூக்.23:27,28).

இவற்றையெல்லாம் கவனிக்குமிடத்து இயேசுநாதர் உறவுசார்ந்த உணர்ச்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை

என்பதைக் காணலாம். கடவுள் அரசின் உறவுகள் குடும்ப உறவுகளைக் கடந்தவை என்ற ஒரு அடிப்படை உண்மையை இங்குக் காண்கிறோம். தேவனுடைய சித்தத்தின்படி செயல் படுதலே உண்மை மனித குடும்பத்திற்கு அடிப்படை. குடும்ப உறவுகளும், கோத்திர உறவுகளும் முக்கியம்தான்; அவை அன்பையும், கடமையையும் அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும். ஆனால் அவை பிற உறவுகளுக்குப் பாதகமாக அமையக் கூடாது. இன்று நாம் பல இடங்களிலும், குடும்ப உறவுகள் கோத்திர உறவுகளாக, சாதி உறவுகளாக, இன உறவுகளாக மாறி மக்களிடையில் பிரிவினைகளையும், சண்டைகளினால் இன்று ஆயிரக்கணக்கான தாய்மார் (இலங்கை, எல்சல்வடோர் போன்ற இடங்களில்) தங்கள் பிள்ளைகளைப் பிரிந்து இழந்து தவிக்கின்றனர்; ஆயிரக்கணக்கான பிள்ளைகள் பெற்றோரை இழந்து தவிக்கின்றனர். இந்தத் தாய்மாருக்குப் பிள்ளைகள் யார்? இந்தப் பிள்ளைகளுக்குப் பெற்றோர் யார்? இரத்த உறவுகளையும், இன உறவுகளையும் கடந்து இப்படிப்பட்டோரைத் தந்தையராகவும், தாய்மாராகவும், பிள்ளைகளாகவும் ஏற்று நேசிப்பதும், ஆதரிப்பதும்தான் கிறிஸ்துவின் சித்தம். இதுவே இயேசுநாதரின் இந்த அருள் மொழியின் உட்பொருள்.

பெற்றோர் தம் பிள்ளைகளை நேசிப்பதும், பிள்ளைகள் பெற்றோரை நேசிப்பதும் இரத்த உறவின் இயல்பான செயல்பாடு. இது பாராட்டப்பட வேண்டியதே. ஆனால், இயேசுநாதர் இவற்றையும் கடந்த விரிந்த உறவுகளுக்கு நம்மை அவைக்கிறார். ஆதரவு வேண்டி நிற்கும் எந்தத் தாயும் என் தாயே, ஆதரவு வேண்டி நிற்கும் எந்தக் குழந்தையும் என் குழந்தையே என்பதே கிறிஸ்தவ அன்பின் நியதி, கடவுள் அரசின் அடிப்படை. இப்படிப்பட்டதோர் தமது விரிந்த குடும்பத்தின் அங்கத்தினர்களாக இருக்க இயேசுநாதர் நம்மை அழைக்கிறார்.

இன்று உலகெங்கும் எண்ணிறந்த அகதிகள் : பிள்ளைகளை இழந்த பெற்றோர், பெற்றோரை இழந்த பிள்ளைகள்! இவர்களுக்காகக் கிறிஸ்துவின் சபை என்ன செய்கிறது? கிறிஸ்தவர்கள் என்ன செய்கிறார்கள்? பெற்றோருக்குப் பெற்றோராக, பிள்ளைகளுக்குப் பிள்ளைகளாக இவர்களை நாம் ஏற்று ஆதரிக்கிறோமா?

"என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?"

மாற்கு 15:34; மத்தேயு 27:46

சிலுவையின் மொழிகளில் மத்தேயுவுக்கும் மாற்குவுக்கும் இந்த ஒன்று மட்டுந்தான் முக்கியமாகத் தெரிந்திருக்கிறது. மற்றவற்றை அவர்கள் குறிப்பிடவில்லை. இன்று பலரைத் திணற வைப்பது இயேசுவின் இந்தச் சொற்கள். இயேசுவுக்கு இந்தக் கதி என்பது இறைப்பற்றுள்ள அனைத்துச் சமயத்தவரையும் இடற வைத்துள்ளது. ஆனால் கிறிஸ்தவ நம்பிக்கையின் ஆழ்ந்த உண்மை இதில் தான் அடங்கியிருக்கிறது. இதனால்தான் மத்தேயுவுக்கும் மாற்குவுக்கும் இது மட்டும் அதி முக்கியமாகப்பட்டுள்ளது.

இயேசு இவ்வாறு ஓலமிடுமுன் சிலுவையைச் சுற்றி நடந்தவற்றைக் கவனித்தல் மிகவும் தேவை. தேவாலயத்தை இடித்து மூன்று நாட்களுக்குள் கட்டுவதாகக் கூறிய வாக்கு எங்கே? உண்மையில் இறைமைந்தனாக இருந்தால் ஏன் தன்னை விடுவித்துக் கொள்ளக் கூடாது? இஸ்ரவேலரின் அரசன் என்றால் இப்போது இறங்கி வரட்டுமே! இறைமைந்தனென்று தன்னைச் சொல்லிக் கொண்ட இவனது இறை நம்பிக்கை எங்கே? கடவுள் இவனிடம் உண்மையில் பிரியமாயிருந்தால் இப்போது அவர் மீட்டு விடட்டுமே! இப்படி எத்தனையோ குரல்கள்; கூடவே தொங்கின குற்றவாளிகள் கூட நிந்தித்திருக்கிறார்கள். இங்ஙனம் இயேசுவின் முன்னறிவிப்பு, அதிகாரம், ஆற்றல் இறைப்பற்று அனைத்தும் கேள்வி கேட்கப்பட்ட நேரத்தில் "என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கதறுகிறார்.

ஆற்றலுக்கு இங்கே ஒரு புது விளக்கம் : இறைப் பற்றுடன் வாழ்வதிலிருக்கும் ஐயப்பாடுகளையும் கடினத்தையும் வெளிப் படையாக வெளியிடுவதில் தான் உண்மையின் ஆற்றல் வெளிப்படுகிறது. ஆம், அவரின் பலவீனம் மனித பலம் அனைத்திலும் அதிகப் பலமுள்ளது.

இறை வேண்டலுக்கு இங்கே ஒரு புது விளக்கம் : கேட்பதெல்லாம் கிடைப்பதில்தான் ஜெபத்தின் வெற்றி அடங்கியிருக்கிறது என்ற தவறான எண்ணத்தை இயேசு இங்கு முறியடிக்கிறார். உலகிலே ஏறெடுக்கப்பட்ட அனைத்து வேண்டுதல்களிலும் இவ்வேண்டலே வல்லமையுடையது. ஆனால் அந்த வேண்டல்தான் பதிலளிக்கப்படாமலிருக்கிறது.

அன்புக்கு இங்கே ஒரு புது விளக்கம். இணை பிரியாத நிலைதான் அன்பு என்பது பாரம்பரிய எண்ணம். ஆனால் உயர்ந்த ஒரு நோக்கை நிறைவேற்ற பிரிந்து விடுவது போன்ற உணர்வைப் பெறுவதில்தான் அன்பின் ஆழம் விளங்குகிறது. எவரையும் இறைவன் இங்ஙனம் எளிதில் விட்டுவிட முடியாது. இதை அன்பு மாறாத அருமை மைந்தனுக்குத்தான் செய்ய முடியும். ஆம் கடைசி வரையிலும் காப்பாற்றப்படும் உணர்வைப் பெறுகிறவர்களைவிட கைவிடப்பட்ட உணர்வைப் பெறுபவர்களே பற்றுமிக்க இறையன்பர்கள்.

வேதனைக்கு ஒரு புது விளக்கம் : கடவுளோடு உறவு கொண்டு வாழ்வோர் எதனையும் தாங்கிக் கொள்வர். ஆனால் கடவுள் தன்னைக் கைவிட்டு விட்டார் என்ற உணர்வைத்தான் அவர்கள் தாங்கவியலாது. இறையுறவில் முழுமையுடன் விளங்கிய இயேசு இந்த வேதனையையும் சுவைத்தார்.

மூவரில் ஒருவரான கடவுள் முழுமையாக அடையும் சிலுவை அனுபவம் இது. பாவத்தினால் கடவுளிடமிருந்து தன்னைப் பிரித்துக் கொண்ட மனுக்குலம் அடைந்த இழி நிலையைக் கடவுள் இவ்வண்ணமாகச் செயல்பட்டுத் தானாக அனுபவித்துக் கொண்டார். கைவிடப்பட்ட உணர்வால் திருமைந்தன் வேதனையடைந்தார்; கைவிட்டு விடவேண்டிய கட்டாயத்தை முன்னிட்டு தந்தை வேதனையடைந்தார்; இவ்வித அன்பிணைப்பு படும் பாட்டையுணர்ந்து தூய ஆவியானவர் துக்கமுற்றார். இவ்வாறு திரியேகக் கடவுள் பாவத்தின் கசப்பை முழுமையாகச் சுவைத்ததால் அவர் மூவரில் ஒருவராக வெளிப்பட்டதின் பொருள் இங்குதான் தெளிவுபடுகிறது.

நியாயப்படி கடவுளால் கைவிடப்பட வேண்டிய உலகமே, நீ கடவுளை அண்டிக் கொள். ஊழியப் பாதையில், உண்மையான வாழ்வில் கடவுளால் கைவிடப்படும் உணர்வைப் பெறும் கடவுளின் பிள்ளையே, கலங்காதே உன் இறைப்பற்றின் ஆற்றல் இதில் தான் இருக்கிறது.

மன்றாட்டு :

பரம தந்தையே, பலவீனத்தில் விளங்கும் உம் பலத்தையும் வேதனையில் விளங்கும் உம் அன்பையும் ஆழமாக அறிந்து கொள்ளும்படி பிரகாசமுள்ள மனக்கண்களைத் திறந்தருளும் ஆமென்.

"அதன் பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து வேத வாக்கியம் நிறைவேறத்தக்கதாக : தாகமாயிருக்கிறேன் என்றார்" யோவான் 19:28.

தாகம் கொண்ட மனநிலை

வாழ்க்கையில் கலக்கம் ஏற்படும்போது தளர்ச்சியும் அத்தளர்ச்சியிலிருந்து விடுபட குடிப்பதற்கு அல்லது அருந்துவதற்கு ஏதாவது தேவை என்ற ஒரு தாகநிலை ஏற்படுவது இயல்பு. வேலை செய்து களைத்து வந்த தாய் களைப்பை ஆற்ற தண்ணீர் கேட்கிறார். அது போலவே கிறிஸ்துவின் தாகநிலையும் ஓர் நோக்கத்திற்காக செயல்பட்டதால் (ஒப்புக் கொடுத்ததால்) கலக்கமுற்ற நிலையில் உண்டான தாகமே. இரு நிலைகளில் அவரது தாகத்தைக் குறிப்பிடலாம்.

1) உடல் களைப்பால் ஏற்பட்ட தாகம் ஏனெனில் அவர் இறைமைந்தன்.

2) மனுக்குலத்தின் மேல் தனக்கிருந்த தாகங் கொண்ட மனப்பாங்கு.

இந்த இரு கருத்தையும் உள்ளடக்கியதே ஐந்தாம் வார்த்தையான "தாகமாயிருக்கிறேன்" என்பது (யோவா.19:28).

வேதவாக்கியம் நிறைவேறும்படி என்றதால் அவரது தாகம் மனுக்குல மீட்பைப் பற்றியதாகவே இருக்க வேண்டும். ஏனெனில் அவர் வாழ்ந்த காலத்தில் மக்களின் தேவையை உணர்ந்து செல்பட்டார். இதனால் நிறைவு பெற்றவராக முழு மனுக்குலமும் நிறைவான வாழ்வை அடைய வேண்டும் என்ற விருப்புடையவராக சீடர்களையும் அனுப்பினார். எனவே தாகம் தீர்க்கப்படுதல் அவருடைய பணியை நிறைவேற்றுவதின் மூலமே நிறைவு செய்யப்பட முடியும்.

இயேசுவின் எதிர்பார்ப்பு மக்கள் மீட்கப்படுதல். ஆனால் பல வேளைகளில் இதை நாம் உணர்வதில்லை. அன்று சிலுவை ஓரத்தில் நின்றவர்களும், இயேசு கூறியதைப் புரிந்து கொள்ளாமல் கடற்காளானை காடியில் தோய்த்து கொடுத்தனர். இது அவரது தாகத்தைத் தீர்ப்பதற்குப் பதிலாக வேதனையையும் மன வருத்தத்தையும் தந்திருக்கக் கூடும். இன்றும் பல வேளைகளில் கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுவின் மெய்யான தாகத்தைத் தீர்ப்பதற்கு பதிலாக, அவருக்கு விருப்பமில்லாத வழிகளில் செயல்பட்டு விடுகின்றோம். இதை உணர்ந்து இயேசுவின் நோக்கு என்ன என்று அறிந்து மக்களின் தேவைகளை நிறைவு செய்வதன் மூலம் இயேசுவின் தாகம் தீர்க்க அழைக்கப்படுகிறோம்.

இயேசு தனது போதனையின் போது என்னை விசுவாசிக்கிறவனின் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் புறப்பட்டு ஓடும் என்று

கூறினார். ஆனால் இன்று 'தாகமாயிருக்கிறேன்' என்கிறார். ஏனெனில் தனது நோக்கம் முழுமையாக நிறைவேறும் போது மட்டுமே தாகம் தீர்க்கப்படும். அதாவது முழு உலகமும் மீட்கப்படும் போதுதான் இறைவனது வேட்கை தீர்க்கப்படும். இதற்கு ஒவ்வொரு மனிதனும் அவரைப் போன்று பிறரை வாழ வைக்கின்ற தாகம் கொண்ட மனநிலை பெற வேண்டும்.

அவரது தாகம் தீர்க்கப்படல் என்பது அவரது சித்தம் செய்வதாகும். ஒரு மனிதன் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும்போது அவரில் அவன் திருப்தி காண்கிறான். அதாவது தாகம் தீர்க்கப்படுகின்றான். ஆனால் அவனது வாழ்வில் பிறரைப் பற்றியதாக நிலை ஏற்படுகிறது. இது ஒரு மனநிலையாகும். எனவே கிறிஸ்து சாதாரண தண்ணீர் தேவை என்று மட்டும் அல்ல மனுக்குலத்தைக் குறித்த தாகம் கொண்டவராய் இருந்தார் எனத் திட்டமாய்க் கூறலாம். ஏனெனில் அவர் நோக்கு மனித மீட்பே.

எந்த மனிதனுக்கும் கடவுளைச் சந்திக்க வேண்டும். அனுபவிக்க வேண்டும் என்ற தாகம் இருந்து கொண்டே இருக்கிறது. இதை நிறைவு செய்ய சுகம் அளிக்கும் கூட்டங்கள், புண்ணிய யாத்திரைகள், திருவிழாக்கள், சிறப்பு வழிபாடுகள் இவைகளுக்குச் செல்கின்றனர். அதிலும் திருப்தியடையாதபடி பலர் அங்கலாய்ப்பதைக் காணுகின்றோம். காரணம் பிறரைக் குறித்து கவலைப்பாடது தங்களைக் குறித்து மட்டுமே கவலைப்படுவதாகும். கிறிஸ்துவின் வாக்குப்படி அவரைப் பற்றிக் கொண்டு பிறரைக் குறித்த தாகம் கொண்ட மனநிலையோடு வாழும்போது நிறைவைக் கண்டுகொள்ள முடியும். ஏனெனில் மனிதன் சமுகத்தில் வாழுகின்றான். எந்த மனிதனும் தனியாக ஒதுங்கி நின்று பூரணப்பட முடியாது மாறாக, பிறரோடு சார்ந்து பிறரது வாழ்வில் பங்கு கொள்வதின் மூலமே மனிதன் முழுமையடைய முடியும். இதனால் கிறிஸ்து பிறரை மனதில் கொண்டு வாழும்படி நம்மை அழைக்கிறார்.

சிலுவையில் கிறிஸ்து தாக நிலை கொண்டதை உணர்ந்து கொள்ளும் மனிதன் பிறருக்காக வாழ தன்னை ஒப்புக் கொடுக்கிறான். மத்.25ஆம் அதிகாரத்தில் "தாகமாய் இருந்தேன் என தாகத்தைத் தீர்த்தீர்கள்" என்று சொல்லப்பட்டிருக்கும் வாக்கியம், பிற மனிதன் மேல் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய அக்கரையையும் அந்த அக்கரை மனுக்குலத்தின் ஓர் மன நிலையாக அமைய வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டுவதாகும். அங்கு தாகம் தீர்த்தோர் ஏசு கிறிஸ்துவுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். ஆனால் தாகம் தீர்க்காதபடி சொல்லளவில் பக்தி என்ற பெயரில் கடவுளே! கடவுளே!! என்று இறைவனை மட்டும் தேடிக் கொண்டிருந்தவர்கள் அவரால் வெளியே தள்ளப்பட்டார்கள் என்பதையும் காண்கின்றோம். மோசே இஸ்ரவேல் மக்களை நடத்தி வந்தபோது தன்னை மறந்து பிறருக்காக வேண்டுதல்

செய்தான். காரணம், பிறருக்காக பணியாற்றவே தன்னை அர்ப்பணித்திருந்தான். அவனது கூற்று "அவர்கள் பாவத்தை தேவரீர் மன்னித்தருளும் இல்லையெனில் உமது ஜீவ புஸ்தகத்திலிருந்து என் பெயரைக் கிறுக்கிப் போடும்" என்பதாகும். ஆனால் நாம் இன்று எவ்வாறு வேண்டுகிறோம். இறைவனே! என்னை மோட்சத்தில் சேர்த்துக் கொள்ளும். எனது தேவைகளையெல்லாம் நிறைவாக்கும் என்று ஜெபிக்கிறோம் அல்லவா. ஏனெனில் பிறரைக் குறித்த அக்கறையையே இல்லாமல் போனதே. ஆனால் மோசே பிறரைக் குறித்து எண்ணங்கொண்டதால் அவனும் காப்பாற்றப் பட்டான் மக்களும் காப்பாற்றப்பட்டனர். நமக்கு இப்படிப்பட்ட மன நிலை உண்டா?

இயேசு மனிதனாக தாகம் அடைந்தவராகவும், இறைவனாகத் தனி மனிதன் மேலும் சமுகத்தின் பாலும் தாகம் கொண்டவராகத் தாகமாய் இருக்கிறேன்' என்றார். இதன் அடிப்படையில் மீட்கப்பட்ட தனி மனிதனும் திருச்சபையும் இம் மனநிலைக் கொண்டதாக அமைய இவ்வாக்கியம் அறைகூவி அழைக்கிறது. திருச்சபை ஏற்படுத்தப்பட்டிருப்பது தொழுகைக்கு மட்டுமல்ல தொழுகையின் மூலம் பிற மக்களுக்குப் பணியாற்றும் பெலனை பெற்றுக் கொள்ளவே. இதனை உணராமல் தொழுகையோடு மட்டும் நின்று விடுவோமேயானால் தொழுகை பயனற்ற செயலாக மாறும். பிறர் வாழ்வை மனதில் கொள்ளும்போது தான் தொழுகை வாழ்வின் நடுவாக மாறும், பயனுள்ளதாக மாறும்.

இன்று பல கிறிஸ்தவர்களின் தாகம் ஆலயம், என்பதே. இது வாழ்வாய் அமையும் கிறிஸ்துவை நாடுவதற்குப் பதிலாக அவரை ஆலயக் கட்டிடத்திற்குள் மட்டும் கண்டு கொள்ளவும் அவரை பூசாரி நிலைக்கு தாழ்த்தவும் செய்கிறது. பல வேளைகளில், அருளுரைஞர்களும் இயேசுவை சுட்டிக் காட்டுவதற்குப் பதிலாக அவரை பல ஆடைகளால் சுற்றி (அலங்கார விளக்க உரைகள்) மறைத்து விடுகின்றனர். இதனால் கிறிஸ்து மனிதனின் மனநிலையைப் பாதிக்கின்றவராக அமையாமல், நிலையாக நின்று கொண்டிருக்கும் ஓர் உருவமாக விளக்கம் பெறுகிறார். இந்த நிலைமாறவே இன்று கிறிஸ்து நம்மைப் பார்த்து நான் மனிதன், இறை மைந்தன், உங்கள் மனநிலைகளைப் பாதிக்கின்றவன். இதோ, தாகமாய் இருக்கிறேன், வாருங்கள், தாகம் கொண்ட மனநிலையுடன் வாருங்கள் என்கிறார்.

ஜெபம் :

இறைவனே நாங்கள் மனிதர்களாகப் பிற மனிதர்களைப் புரிந்து கொண்டு அவர்களது வாழ்வின் தாகம் தீர்க்க, தாகம் கொண்ட மனநிலையுடையவர்களாக வாழ உதவி புரியும்.

"முடிந்தது" (யோவா.19:30)

நிறைவு பெற்ற மனநிலை

தாகம் கொண்ட மனிதன் தண்ணீர் குடிக்கும் போது ஓர் நிறைவை அடைகின்றான். இங்கும் இயேசு கலக்கம் அடைந்து மக்கள் தமது தாகத்தை தீர்ப்பார்கள் என்ற நல் எதிர் நோக்குடன் தனது பணி நிறைவு பெற்றிருக்கிறது என்பதை அறிவிக்கும் நிலையில் *"முடிந்தது" என்று சொல்லி ஆவியை ஒப்புக் கொடுத்தார் (யோவா.19:30).*

"தேர்வு எழுதிய ஓர் மாணவன் தேர்வின் இறுதி நாளில் தேர்வை முடித்துவிட்டு திருப்தியோடு வீடு திரும்புவது இயல்பு. ஆனால் அது ஓர் முடிந்த முடிவு அல்ல. அனைப் பொறுத்தமட்டில் அது ஓர் முடிவு. ஆனால் அது அவனது வளர்ச்சிப்படியில் ஓர் தொடர்ச்சி. இவ்வாறே மனித ஆள் தத்துவத்தின் மன நிலையில் நிறைவும், அதைத் தொடர்ந்த ஓர் எதிர்பார்ப்பும் மிக முக்கியமானதாகும். எத்தனை ஆண்டு வாழ்ந்தோம் என்பதல்ல எவ்வகையான வாழ்வு வாழ்ந்தோம் என்பதும், அதன் நிறைவும் மிக முக்கியமானதாகும். கிறிஸ்துவின் மனிதவாழ்வு மூப்பத்துமூன்றரை ஆண்டுகள். இறுதி மூன்றரை ஆண்டுகள் மிக முக்கியமானது. அதிலும் முடிந்தது என்று அவர் கூறியது நிறைவை அவருக்கு கொடுத்தது என்பதை சுட்டிக்காட்டுகிறது. நன்மை செய்பவராகச் சுற்றித்திரிந்து பிறருக்காக வாழ்ந்தார். பிறரை வாழ வைப்பதுதான் நிறைவான வாழ்வு எனலாம். தந்தை பல கஷ்டங்களை அனுபவித்து பிள்ளையைப் படிக்க வைத்து வேலையில் அமர்த்தி அவன் பெருவாழ்வு வாழ்வதைக் கண்டு நிறைவு அடைகின்றார். இங்கு அவரது வாழ்வில் ஓர் நிறைவைக் காணுகின்றார். அவ்வாறே கிறிஸ்துவும் முழு உலகிற்காக தனது வாழ்வையே அர்பணித்து நிறைவு பெறுவதில் முழுமை காண்கின்றார். நமது வாழ்விலும் பிறருக்காக வாழ அமைக்கப்படும்போது கிறிஸ்துவின் வாழ்வே உரைகல்லாய் அமைய வேண்டும். கிறிஸ்துவைப் பொறுத்த மட்டில் அவரது மனித வாழ்வு முடிந்து விட்ட ஒன்று. இனிமேல் அவரை நம்மைப் போன்று மனிதனாகக் காண முடியாது. மாறாக முழு உலகிற்கும் இறைவனாகி விட்டார். பாலஸ்தீன எல்லைக்குள் அவரைக் குறித்த சிந்தனைக்கு ஓர் முடிவு. மாறாக அகில உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்படும் சிந்திக்கப்படும் மீட்பராகி விட்டார். மரியாளுக்கும் யோசேப்புக்கும் மகன் என்பதற்கு முடிவு.

அவர் அனைத்துலக தந்தையாகி விட்டார். யூதக்குலத்தவர் என்பதற்கும் முடிவு. அனைத்துலக மானிடத் தன்மையை அளக்கும் அளவுகோலாகி விட்டார். ஆள் தத்துவாக எண்ணப்பட்டவர் ஆவித் தன்மையில் எண்ணப்படும் நிலைக்கு உயர்த்தப்பட்டார். எனவே முடிந்தது என்பது அகில உலக அளவிலும் ஓர் நிறைவாகும்.

சிலுவையில் முழுஉலகிற்கும் மீட்பு அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது நிறைவேற்றப்பட்டுள்ளது அதன் பயன் அதை ஏற்றுக் கொள்வதைச் சார்ந்தது. எனவே முடிந்தது என்பது மீட்பாகிய உணவு சமைக்கப்பட்டாயிற்று என்பதாகும். அதைக் கீழ்காணும் முறையில் விளங்கிக் கொள்ளலாம். எவரெஸ்ட் சிகரம் மிக உயரமானது. டென்சிங், ஹில்லரி என்ற இருவரும் அதின் கொடு முடியில் ஏறி, கொடி நாட்டி வந்தனர். அவர்களைப் பொறுத்த மட்டில் அது முடிந்தது. இனி எவரும் ஏறலாம், அதை அடையலாம் என்ற முடிவைத் தந்தனர். ஆனால் அங்கு செல்ல சேர அவர்களைப் போன்று செயல்படுவது தேவை. அது போலவே கிறிஸ்துவும் கொல்கதா. பாதையில் நடந்து மீட்புக் கொடியை சிலுவையின் ஊடே நாட்டி விட்டார். அது அன்புக் கொடியாகக மாற்றப்பட்டு விட்டது. எந்த மனிதனும் அதைப் பெற்றுக் கொள்ளாலம். இலவசம், ஆனால் அவர் நடந்த பாதை வழி நடக்க ஒப்படைப்பும் துணிவும் தேவை. கிருஷ்ணபிள்ளை சிலுவை வார்த்தையின் முடிந்தது என்ற சொல்லை பயன்படுத்தி ஏசு மனுக்குலத்திற்காக முடித்தவைகளாகச் சிலவற்றைக் குறிப்பிடுகின்றார். கலக்கம், பாடுகள், வறுமை, நோய் தவறான சிந்தனைகள் தீர்க்கர் உரை. முன்பு சொல்லப்பட்ட நிகழ்ச்சிகள் அனைத்துமே கிறிஸ்துவில் நிறைவு பெற்றன. ஆனால் மானிட வாழ்வின் மீட்பு துவங்குகிறது என்கிறார். ஓர் முடிவு அதே வேளையில் ஓர் தொடர்ச்சி.

அன்றொருநாள் யோவான் ஸ்நானகன் இயேசுகிறிஸ்துவை சுட்டிக்காட்டி இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக் குட்டி என்றான். அதை இவ்வாறு கூறலாம். உலகுக்கு மீட்புப்பணியைச் செய்து முடிக்கிற தேவாட்டுக் குட்டி. எனவே முடிந்தது என்ற சொல் யோவான்ஸ்நானகின் (முழுக்கு முனிவரின்) எதிர் நோக்கின் நிறைவாகும். கிறிஸ்து முடித்தார். ஆனால் அதை நிறைவேற்றும் பொறுப்பு மனிதனிடம் கொடுக்கப்படுகிறது. இறைவன் முடித்துவிட்டார் என மனிதன் வாளாவிருக்க இயலாது. அவரோடு இணைந்து உழைக்க வேண்டும். ஓர் நோயாளிக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மருத்துவர் அறுவை சிகிச்சையை முடித்தவுடன் வெளியே வந்து முடிந்தது என்று

திருப்தியோடு சொல்கிறார். மருத்துவரைப் பொறுத்த மட்டில் அது முடிந்தது. ஆனால் நோயாளியைப் பொறுத்த மட்டில் செய்ய வேண்டியவை அதிகம். அதிலும் மருத்துவருடன் ஒத்துழைப்பும், பொறுப்புணர்ச்சியும், பிறர்பாதுகாப்பும் தேவை. எனவே ஓர் தொடர்ச்சியைக் காணுகின்றோம். கிறிஸ்துவின் முடிந்தது என்ற திருவசனம் மனிதனின் புது வாழ்வின் துவக்கம் எனலாம். இறைவனை ஏற்றுக் கொள்ளும் மன நிலையும். நிறைவு பெறும் மனநிலைக்கு நேராக மனித வாழ்க்கையை அமைத்துக் கொள்வதுமம் சமுதாயத்தின் நிறைவை ஏற்படுத்த (பொருளாதாரம் கல்வி etc) உழைப்பதும் ஒப்படைப்பாகும். இதனால் தான் திருச்சபை மக்களுக்குப் பணியாற்றுகின்ற பணியாளனாய் அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அன்றொரு நாள் இயேசு தன் பெற்றோரைப் பார்த்து பிதாவுக்கு அடுத்த காரியங்களில் இருக்க வேண்டும் என்பதை அறியவில்லையா என்றார் (லூக்.2:49). இன்று முடிந்தது என்கிறார். இது வாழ்வின் துவகத்தையும் நிறைவான மனநிலையையும் வெளிப்படுத்துகின்றது. இதே மனநிலையை ஒவ்வொரு கிறிஸ்தவனும் பெற வேண்டும் என்பதே அவரது ஆவல். அதே மனநிலையை நம்மில் உருவாக்கவும் அவர் செயல்படுகின்றார். நமது அனுபவம் எத்தகையது நமக்கு நிறைவின் மனநிலை உண்டா?

நமது வாழ்க்கையில் பதவி பெற்றுக்கொள்ள ஆசிக்கின்றோம். ஆனால் பணி செய்ய ஆரம்பிக்கும்போது நிறைவு பெறும் மனநிலையை அடைகின்றோமா? அல்லது பிறர் மீது பழி சுமத்தி நாம் தப்பித்துக் கொள்கின்றோமா? கிறிஸ்து பொறுப்புகளைத் தருவது பிறருக்காக பணியாற்றி அதன் மூலம் நிறைவு பெறும் மன நிலையைப் பெற்று அவருக்காக வாழ்வதே ஆகும். பேராயர் ஒருவர் இப்படி ஜெபித்தார், "இறைவனே! நன்மைசெய்ய வேண்டும் என்ற மனநிலையைத் தாரும். செய்து முடித்த பின் நன்மை செய்தோம் என்ற திருப்தியையும், நாங்கள் செய்தோம் என்று எண்ணாது இருக்கும் மனநிலையையும் தாரும்" இங்கு நிறவு வேண்டும் என்ற எதிர் நோக்கைக் காணுகின்றோம். இறைவன் நோக்கும் அதுவே. நன்மை செய்து திருப்தியுடன் நிறைவு பெற்ற மனநிலையை அடைவோம்.

ஜெபம் :

இறைவனே! மீட்பின் அனுபவத்துடன் பிறருக்காக வாழ்ந்து நிறைவு பெறும் மனநிலையைத்தாரும்.

'பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்' என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார் (லூக்.23:46).

உண்மையான இறைப்பற்றின் (பக்தியின்) நாலாவது படியை, உச்சநிலையை இங்குக் காண்கிறோம். கைவிடப்பட்ட நிலையில் வெறுமையும் தனிமையும் அனுபவித்து இறைவனுக்காக ஏக்கங்கொண்டு, இறைச் சித்தத்தில் தாகங் (நாட்டங்) கொண்டு, அவர் சித்தத்தைச் செய்து நிறைவேற்றி முடித்து இயேசுநாதர் இங்குத் தந்தையோடு இணையும் நிலையைக் காண்கிறோம். இந்த இணைவு இந்து சமய வேதாந்த நெறியில் காணப்படும் இருமையற்ற இணைவல்ல. மைந்தர் தந்தைக்குத் தம்மைத் தாமாக ஒப்புக் கொடுத்தலாகிய இணைவு. இயல்பாகவோ அல்லது கட்டாயத்தின் பேரிலோ ஏற்படும் இணைவல்ல; சுயவிருப்பத்தின்படி கருத்தொருமித்தலால் ஏற்படும் இணைவு.

இங்கும் இயேசுநாதர் சங்கீதம் ஒன்றின் ஒரு வசனத்தை எடுத்தாள்கிறார்; 'உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்' (சங்.31:5மு). இங்குச் சங்கீதக்காரர் என்ன சூழலில் இதைக் கூறுகிறார் என்பது அவர் தொடர்ந்து கூறும் வார்த்தைகளிலிருந்து தெரியவருகிறது : "சத்தியபரனாகிய கர்த்தாவே, நீர் என்னை மீட்டுக் கொண்டீர். வீண் மாயைகளைப் பற்றிக் கொள்ளுகிறவர்களை நான் வெறுத்து, கர்த்தரையே நம்பியிருக்கிறேன்" (சங்.31:5பி,6). 'வீண் மாயைகளுக்கு' எதிராகச் சங்கீதக்காரர் கர்த்தரைப் பற்றிக் கொள்ளுதலை இவ்வார்த்தைகள் இங்குச் சுட்டிக்காட்டுகின்றன. இந்த அடிப்படையில் காணும்போது, இயேசு நாதர் தம் சோதனையுடன் தொடங்கின (லூக்.4:2-13) உலக மாயைகளுக்கெதிரான தன்னுடைய போராட்டத்தை வெற்றியுடன் முடித்து தந்தையை முழுமையாகப் பற்றிக் கொள்ளுதலை இவ்வார்த்தைகள் குறிக்கலாம்.

கடவுளுடைய கரம் வல்லமை பொருந்திய கரம், விடுதலையளிக்கும் கரம் (சங்.136:1,12) என்பது திருமறை

மீண்டும், மீண்டும் வலியுறுத்தும் ஒரு உண்மை. ஒடுக்குவோருக்கு எதிரான வல்லமையுமுள்ள கரமும்கூட. இந்த உண்மையை நாம் பல வேளைகளிலும் சரிவர உணர்வதில்லை. உலகப் பிரகாரமான இடுக்கண்களிலும், துன்பத்திலும் இருக்கிற மக்களை விடுவித்து, அவர்களை கடவுள் அரசின் சுததந்திரத்திற்குள் கொண்டுவர வேண்டுமானால், அந்த இடுக்கண்களுக்கும் துன்பத்திற்கும் காரணமான ஆற்றல்களையும், அமைப்புகளையும் எதிர்த்துப் போராடாமல் இருக்க முடியாது. இக்கருத்தில் தான் கடவுளுடைய வார்த்தை இரு பக்கமும் கருக்குள்ள பட்டயமாகச் செயல்படுகிறது. எகிப்தின் அடிமைத்தனத்திற்குள்ளாக அல்லலுற்ற இஸ்ரவேலரை மீட்டு, அரவணைத்த கடவுளின் அன்பின் கரம், கிருபையின் கரம், அதே வேளையில் அன்னாரை ஒடுக்கித் துன்புறுத்தின எகிப்தியருக்கு எதிராகவும், பார்வோனுக்கு எதிராகவும் செயல்பட்ட வல்லமையுள்ள நீதியின் கரமுமாகும். இவ்வுண்மை திருச்சபையின் இருபுற, இருவகைச் செயல்பாட்டை, செயல் பொறுப்பை நினைவுபடுத்துவதாகும்.

இந்தக் கிருபையின் கரங்களில் நம்மை ஒப்புக்கொடுத்து, இறைவனோடு நம்மை ஐக்கியப்படுத்திக்கொள்வது இறைவனோடு சேர்ந்து செயல்பட நம்மை ஒப்புக் கொடுப்பதுமாகும். கிறிஸ்துவுக்குள்ளாகவும், இறைவனுக்குள்ளாகவும் இணைந்து வாழும் பக்தர் கிறிஸ்துவின் கரங்களாக இவ்வுலகில் செயல் படுகிறார்; அவரது நீதியின் செயல்களிலும், மீட்பின் செயல்களிலும் பங்கு கொள்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம் நமக்கு ஒரு அறைகூவலாக அமைகிறது. கிறிஸ்தவர் ஒருவருக்கு மரணம் அச்சம் தரும் ஒரு முடிவல்ல; அது இவ்வுலக வாழ்வின் நிறைவு; இறைவனோடு நிறைவேறும் இணைவு. கிறிஸ்துவுக்குள் மரிக்கும் ஒருவர் அப்போஸ்தலனாகிய பவுலுடன் சேர்ந்து 'கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்' என்று கூறக்கூடும் (பிலி.1:21). ஏனெனில் கிறிஸ்துவுக்குள்ளாக மரிக்கிறவர்கள், கிறிஸ்துவுக்குள்ளாக நிலைத்து வாழ்கிறவர்கள்; அவருடைய உயிர்த்தெழுதலிலே பங்கு கொள்கிறவர்கள். உயிர்த்தெழுந்த நாதருடன் இணைந்து வாழ தேவன் தாமே நமக்கு அருள்செய்வாராக. ஆமென்.

08.04.2007

கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள்

(ஈஸ்டர் பண்டிகை)

பொருள் : **கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்**

பாடங்கள் : **யாத்.14:5-30; கொலோ.3:1-11; மத்.28:1-10**

வசனம் : *"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து, நித்திரையடைந்த வர்களில் முதற் பலனானார்" (1கொரி.15:20).*

முன்னுரை :

மரணத்துக்குப்பின் மனிதனுக்குச் சம்பவிப்பதென்ன? - மண்ணோடு மண்ணாக மட்கிப்போவதே மண்ணில் இருந்துவந்த மனிதனின் முடிவு - என்பது சிலரது வாதம் - மீண்டும், மீண்டும் பிறவியெடுத்து இந்த உலகினில் வாழவேண்டுவதே மனுக்குலத்தின்கடமை என்பார் சிலர் - பெருஞ்சுடலிருந்து பிரிந்து வந்து பிறவியெடுத்த மனிதனின் மரணம் என்பது மீண்டும் அப்பெருஞ்சுடரோடு ஒருங்கிணைவதே என்பார் அநேகர் - ஆன்மா தூங்கி அதிவிரைவில் "நிர்வாணா" நிலைமை பெற்று அறிவிக்க முடியாத சாந்தியும் சந்தோஷமும் அடைகிறது என்பார் வேறுசிலர்.

இப்படிப்பல கருத்துக்கள் நிலவும் இந்தியாவில் மரணத்துக்குப்பின் உயிர்த்தெழுதல் உண்டு என்கின்ற நற்செய்தியை கிறிஸ்தவம் அறிவிக்கிறது. கிறிஸ்தவ மதத்தின் தனிப்பெரும் சிறப்பே உயிர்த்தெழுதல் தான்.

"கிறிஸ்து உயிரோடு எழுந்திருக்கவில்லையென்றால் எங்கள் பிரசங்கம் விருதா, உங்கள் விசுவாசம் விருதா" என்று பவுல் கூறுகிறார்.

ஆம் கிறிஸ்து உயிர்த்தெழுந்தநாள், மரணத்தின் மீதும், பாதாளத்தின் மீதும் வெற்றி பெற்றநாள். யூதமதத்தலைவர்களும், ரோம அரசியல் தலைவர்களும் இயேசுவின் வாழ்க்கை இத்துடன் முடிந்தது என்று நினைத்திருந்தனர். ஆனால் அடக்கம்பண்ணப்பட்ட ஆண்டவர் மூன்றாம்நாள் உயிரோடு எழுந்தார்; கல்லறையோ? காவலரோ! மரணமோ! அவருக்கு முடிவுகட்ட முடியவில்லை. உயிர்த்தெழுந்த இயேசுவை உள்ளத்தால் விசுவாசிப்பவர்கள் பெறுகின்ற வெற்றிகளை தியானிப்போம்.

1. மரணத்தின் மேல் வெற்றி :

கிறிஸ்து உயிர்த்தெழுதலின் முதற்பெலன். அவருக்குள் மரித்த ஒவ்வொருவரும் உயிர்த்தெழுந்து அவரோடுகூட ஜீவிப்பார்கள். இதுவே நாம் பெற்றிருக்கிற நம்பிக்கை. இயேசுவை ஏற்றுக்கொண்ட ஒருவனுக்கும் மரணபயம் கிடையாது. ஐசுவரியவான், லாசரு உவமையில் இருவரும்

மரித்தார்கள். அடக்கம் பண்ணப்பட்டார்கள். அதோடு அவர்கள் வாழ்க்கை முடிந்துவிட்டதா? இல்லை. கிறிஸ்தவ வாழ்க்கை என்கின்ற ஈரங்கநாடகத்தில் ஓர் அங்கம் முடிந்தது. அடுத்த அங்கம் தொடங்கியது. லாசரு, ஆபிரகாம் மடிக்குச் சென்றான். ஐசுவரியவான் அக்கினி கடலுக்குச் சென்றான். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களுக்கு சாவு ஆதாயம். கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு சாவு ஆக்கினை. பாவத்திற்கு மரித்து வாழ்ந்தால் மோட்சம். பாவத்திலே மரித்தால் நரகம்.

"ஒருதரம் பிறந்தவன் இருமுறை மரிக்கிறான்.
இருமுறை பிறந்தவன் ஒருதரம் மரிக்கிறான்"

இரண்டு பிறப்புகள் :

(i) மாம்சத்தில்பிறப்பது அதாவது தாயின் வயிற்றில் பிறப்பது

(ii) ஆவியினால் பிறப்பது அதாவது மறுபடியும் பிறப்பது

இப்படி இருமுறை பிறந்தவன் ஒரே ஒருதரம் மட்டும் மரிக்கிறான். அது மாம்சீக மரணம். மீண்டும் அவனுடைய ஆவி மகிமையின் சரீரத்தை பெற்று தேவனோடு நித்திய காலமாய் வாழும்.

இரண்டு மரணங்கள் :

மாம்சத்தில்மட்டும் அதாவது தாயின் வயிற்றில் மட்டும் ஒருதரம் பிறக்கிறவன் இரண்டுதரம் மரிக்கிறான்.

(i) சரீர மரணம் அதாவது மாம்சீக சரீரத்தை ஆவிபிரித்து உயிர்போவது.

(ii) இரண்டாம் மரணம் அதாவது கந்தகமும் அக்கினியும் நிறைந்த எரியும் அக்கினி கடலாகிய இரண்டாம் மரணம்.

பாதாளத்தில் இறங்கிய இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததினால் கிறிஸ்தவனுக்கு பாதாள நடுக்கம் இல்லை. இரண்டாம் மரணத்தைக் குறித்த அச்சமில்லை. உலகில் மாம்ச சரீரத்திலிருக்கிறான். உன்னதத்தில் மகிமையின் சரீரத்தோடு இருப்பான். மாம்ச சரீரத்திலிருந்து மனிதனை, மகிமையின் சரீரத்திற்குள் மாற்ற மகாதேவன் பயன்படுத்தும் மயக்கமருந்தே மரணம். கிறிஸ்து உயிர்த்தெழுந்ததினால் மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே என்று வெற்றி முழக்கமிடலாம்.

2. பாடுகளின் மேல் வெற்றி :

உயிர்த்தெழுந்த ஆண்டவர் மகதலேனா மரியாளுக்கு தரிசனமாகி ஏன் அழுகிறாய்? என்றார். இந்தவார்த்தை எவ்வளவாய் அவளை ஆறுதல்படுத்தியிருக்கும் எவ்வளவாய் அவளைப் பரவசப்படுத்தி இருக்கும். உயிரோடிருக்கும் நேசரை முகமுகமாய் தரிசிக்கிறாள் கண்ணீர் எல்லாம்

மறைந்தது எத்தனை மகிழ்ச்சி எத்தனை சந்தோஷம். என்னை பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பண்ணின இயேசு மரித்துவிட்டாரே! இனி எனக்கு உதவி செய்ய யார் இருக்கிறார்கள்! என்று கண்ணீரோடு இருந்த மரியாளை இயேசு சந்தித்து நீ ஏன் அழுகிறாய் நான் உயிரோடு தான் இருக்கிறேன், என்று கூறி அவள் கண்ணீரைத் துடைத்தார். நம் கண்ணீரையும் துடைக்க உயிர்த்தெழுந்த ஆண்டவர் வருகிறார்.

ஒருமுறை கம்யூனிச தேசத்திலுள்ள ஒரு சிறு சபையை போலீசார் சுற்றி வளைந்து கொண்டார்கள். அந்த போதகரை கைது செய்தார்கள். போதகருடைய கைகளில் விலங்குகளை மாட்டி, அவரை வெளியே இழுத்துச் செல்லுகின்றபோது, அந்த போதகர் தன்னுடைய விசுவாசிகளோடு கூட தான் பேசுவதற்கு 10 நிமிடம் அவகாசம் தரும்படி போலீஸ் அதிகாரிகளிடம் கேட்டார். அவர்கள் மறுத்துவிட்டார்கள். ஐந்து நிமிடமாவது அனுமதி கொடுங்கள் என்று கெஞ்சினார். அதற்கும் அனுமதி கொடுக்கவில்லை. முடிவிலே 1 நிமிடமாவது தாருங்கள் என்று மன்றாடினார். அதுவும் கொடுக்கப்படவில்லை. கடைசியில் அந்த போலீஸ் அதிகாரிகள் மூன்றே மூன்று வார்த்தைகள் மட்டும் பேசலாம் என்றனர். மூன்று வார்த்தைகள் என்ன பேசுவது? அந்த வார்த்தைகள் வல்லமை உடையதாக இருக்க வேண்டுமே! அது விசுவாசிகளை பெலப்படுத்த வேண்டுமே! அது விசுவாசிகளை ஆறுதல்படுத்த வேண்டுமே! அது அவர்களுடைய வாழ்க்கையில் மறக்க முடியாததாக இருக்க வேண்டுமே!

முடிவில் உற்சாகமான முகத்தோடு புன்முறுவலோடு விசுவாசிகளை நோக்கிப்பார்த்து அவர் பேசின மூன்று (3) வார்த்தைகள் என்ன தெரியுமா?

"என் மீட்பர் உயிரோடிருக்கிறார்" அவர் சத்தத்தை உயர்த்தி கெம்பீரமான குரலில், "என் மீட்பர் உயிரோடிருக்கிறார்" என்று முழங்கிய போது அந்த வார்த்தை வல்லமையான மின்சாரம் தாக்கியதுபோல் ஒவ்வொரு விசுவாசிகளின் உள்ளத்திலும் இறங்கியது. அவர்களும் "அல்லேலூயா" எங்கள் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்று பதிலுக்கு முழங்கினார்கள். இந்த வார்த்தைகள் அவர்களைத் தேற்றியது. இந்த வார்த்தைகள் அவர்கள் விசுவாசத்தைப் பலப்பட செய்தது.

தீய மனுஷர் நமக்கு எதிர்கொண்டு வருகிறார்களா? பொல்லாத மனுஷர் நம்மைப்பார்த்து சீறுகிறார்களா? நியாயங்கள் புரட்டப்படுகிறதா? தைரியமாய் சொல்வோம் என் மீட்பர் உயிரோடிருக்கிறார். அவர் ஜீவிக்கிற தேவன் என்பதை விசுவாசிக்கும்பொழுது பாடுகளில் இருந்து வெற்றி பெறுகிறோம்.

அருள்திரு T.D. ஜெபகுமார்
ஆரைக்குளம்

15.04.2007

உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 1ஆம் ஞாயிறு

பொருள் : கிறிஸ்துவே ஆண்டவர்

பாடங்கள் : செப்.3:14-20; அப்.3:12-20; யோவா.20:19-29

வசனம் : *'தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக : என் ஆண்டவரே! என் தேவனே! என்றான்' யோவா.20:28.*

முன்னுரை :

இயேசுகிறிஸ்து தாம் உயிரோடு இருந்த காலத்தில் மரித்து மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்திருப்பேன் என்று தம் சீடரோடு சொல்லியிருந்தார். அவ்விதமாக மரித்து மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்ததை பார்த்த பெண்கள் சிலர் சீடர்களிடம் அறிவித்ததை அவர்கள் நம்ப மறுத்தார்கள். பின்பு உயிர்த்தெழுந்த இயேசு தம் சீடர்களுக்கு தம்மை உயிருள்ளவராக காண்பித்தார். அப்பொழுது அவருடைய சீடருள் தோமா இல்லாததால் தோமாவுக்கு சீடர்கள் அதை அறிவித்ததை அவர் நம்பவில்லை. எனவே மீண்டும் சீடர்கள் எல்லாரும் இருக்கும்போது இயேசு தாம் உயிருள்ளவராக அவர்களுக்கு காட்சியளித்தார். அப்பொழுது இயேசு தோமாவைப் பார்த்து நீ உன் விரலை நீட்டி என் கைகளைப்பார், உன் கையை நீட்டி என் விலாவிலே போடு அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். அப்பொழுதுதான் தோமா இயேசுவை பார்த்து "என் ஆண்டவரே என் கடவுளே" என்றான். இவ்விதமாக தோமா இயேசுவை பார்த்து கூற காரணங்கள் என்ன என்பதை சிந்திப்போம்.

1. இயேசு உயிர்த்தெழுந்தார் :

செத்துபோன மனிதன் உயிரோடு மீண்டும் வருவது மனித வாழ்க்கையிலே நடைபெறாத ஒன்று. ஆகவேதான் தோமா இவ்வளவு தூரம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை மறுத்திருக்கிறார். ஆனால் இயேசுவே நேரடியாக தோமாவை பார்த்து என் கையையும் விலாவையும் பார் என்று காண்பிக்கும்போது திகைப்போடு கூடிய ஆச்சரியத்தில் இவ்வார்த்தையை சொல்லுகிறார். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதற்கு சீஷர்கள் மட்டும் சாட்சி அல்ல. அக்காலத்தில் வாழ்ந்த யூதர்களும் தான் சாட்சி. எப்படியென்றால் "மத்.28:11-15இல்" யூதர்களுக்குள்ளே இயேசுவின் சரீரத்தை சீஷர்கள் களவாய் கொண்டு போய் விட்டார்கள் என்ற பேச்சு இருந்தது. ஆனால் பேதுரு பிரசங்கம் செய்யும்போது (அப்.2:37) இயேசு உயிர்த்தெழுந்தார் நாங்கள் சாட்சி என்றபோது 3000 பேர் ஏற்றுக் கொண்டு

ஞானஸ்நானம் பெற்றவர்கள் அல்லவா! இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதற்கு இன்றைய வளர்ந்துவரும் திருச்சபையும் சாட்சி. இதை விசுவாசிக்கிறவர்கள் அனுதினமும் சபையில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

2. இயேசு எண்ணங்களை அறிகிறார் :

இயேசுகிறிஸ்து நம் எண்ணங்களை அறிந்து செயல்படுகிறார் தோமா. நான் கையால் தொட்டு பார்த்தாலொழிய நம்ப மாட்டேன் என்று சொன்னபோது அவன் எண்ணத்திற்கு மதிப்பளித்து அவனுக்கு தரிசனமாகி தொட்டு பார்க்க சொன்னார். நம் ஆண்டவர் நாம் நினைப்பதற்கும் நாம் வேண்டி கொள்வதற்கும் அதிகமாய் கிரியை செய்கிறார் (எபே.3:20). இயேசு இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் தம்மிடம் வந்த வியாதியஸ்தர்களை அவர்களுடைய விருப்பத்திற்கேற்ப சுகமளித்தார். சுகம்பெற தடையாயிருக்கும் அவிசுவாசத்தையும் நீக்கி அவர்களுக்கு சுகமளித்தார் (மாற்.9:17-27). ஆண்டவர் நம் எண்ணங்களையும் நிறைவேற்றி நம்மை மகிழ்விக்க வல்லவராயிருக்கிறார்.

3. இயேசு குறைவுகளை நிறைவாக்குகிறார் :

இயேசு தோமாவின் நம்பிக்கையற்ற தன்மையை அறிந்து அதை நீக்கி விசுவாசத்தை விருத்தியடைய செய்தார். இயேசு தோமாவை பார்த்து அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்று சொல்லி அவன் விசுவாசத்தை வர்த்திக்க செய்தார். என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைகளையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையில் நிறைவாக்குவார். கானாவூர் திருமண வீட்டில் குறைவுகளை நிறைவாக்கியவர் நம் வாழ்வின் குறைகளையும் நிறைவாக்கி மகிழ்விப்பாராக.

இயேசுவின் உயிர்த்தெழுதலை நம்ப மறுத்த தோமாவே உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்து நம் தாய் நாட்டிலும் குறிப்பாக தமிழகத்திற்கு வந்து சுவிசேஷத்தை அறிவித்து இரத்த சாட்சியாக மரித்தார். அவருடைய நினைவிடம் இன்றும் சென்னை அருகில் St. தாமஸ் மவுண்ட் என அழைக்கப்படுகிறது. அவர் நிறுவிய திருச்சபை இன்றும் மார்தோமா திருச்சபை என்று அழைக்கப்படுகிறது.

உயிர்த்தெழுந்த ஆண்டவரை விசுவாசிக்கிற நாமும் உயிருள்ள ஜீவ பலியாக அர்ப்பணித்து வாழுவோம் ஆண்டவரும் நம் குறைவுகளை நிறைவாக்குவாராக.

அருள்திரு J. இஸ்ரவேல் தனசிங்
இடையன்குளம்

22.04.2007

உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 2ஆம் ஞாயிறு

பொருள் : **கிறிஸ்துவோடு பயணம் செய்தல்**

பாடங்கள் : யாத்.13:17-22; எபி.11:1-12; லூக்.24:13-31

வசனம் : *யாத்திராகமம் 13:21*

முன்னுரை :

உலகத்தில் மனிதன் பிறந்தது முதல் பயணம் செய்கிறவனாக இருக்கிறான். ஊர் விட்டு ஊர், தேசம் விட்டு தேசம், கண்டம் விட்டு கண்டம் பயணப்படுகிறான். பயணத்திற்கு மிருகங்கள், சாதாரண வண்டிகள் பயன்படுத்தினவன், பலவிஞ்ஞான கண்டுபிடிப்புகளால் ஈர்க்கப்பட்டு விரைவு பயணம் தொடங்கி விட்டான். உலகில் மனிதனின் பயணம் முடியவில்லை. ஓர் கிறிஸ்தவனுக்கு கிறிஸ்துவுடன் செல்லும் பயணம்தான் இலக்கு நோக்கி (நித்திய ஜீவன்) செல்லும் பயணமாக முடிவடையும் பயணமாக இருக்கிறது.

1. இஸ்ரவேலரின் விடுதலை பயணம் (யாத்.13:17-22)

ஓர் கிறிஸ்தவனுக்கு, மனிதனுக்கு அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பயணம் ஓர் சவாலை ஏற்படுத்துகிறது. தனித்து விடுதலை பெற முடியாமல் தவித்த இஸ்ரவேல் ஜனங்களை பார்வோனின் அடிமைதனத்திலிருந்து இரட்சகனாக மோசே முன்நின்று "இருக்கிறவராக இருக்கிறேன்" யோகோவா என்னும் நாமம் உள்ளவர் துணையுடன் அடிமை தழைகள், அடிமை சங்கிலிகள் உடைக்கப்பட்டு, விடுதலையுடன் இஸ்ரவேல் ஜனங்கள் கானானுக்கு அழைத்து சென்றார். அவர்கள் ஆர்ப்பரிப்புடனும், மகிழ்ச்சியுடனும், துதியின் சத்தத்துடனும் விடுதலை பயணம் ஆரம்பம் செய்தனர். யேகோவா என்னும் நாமம் உள்ளவர், பகலில் மேக ஸ்தம்பமாகவும், இரவில் அக்கினி ஸ்தம்பமாகவும் முன்நின்று வழிநடத்தினார். இருக்கிறவராக இருக்கிறவரின் சமூகம் முன்செல்லும் சமூகமாகவும் பின் செல்லும் சமூகமாக முன்நின்று நடத்தியது. இன்னும் இருக்கிறவராக இருக்கிறவர். உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு நான் மரித்தேன். ஆனாலும் இதோ, சதாகாலமும் உயிருடன் இருக்கிறேன் என்று திருஉள்ளம் பற்றி பாவ, ரோக, பிசாசின் அடிமை தழைகளை உடைத்து விடுதலை ஆவியுடன் நம்மை பரம கானானுக்கு வழிநடத்துகிறார்.

2. விசுவாசிகளின் விசுவாச பயணம் (எபி.11:1-12)

விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெற போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது கீழ்ப்படிந்து தான் போகும்

இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டு போனான் (எபி.11:8) கிறிஸ்துவோடு பயணம் என்பது விசுவாச பயணம். விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமா யிருக்கிறது. விசுவாசிகளில் தகப்பனாகிய ஆபிரகாம் கீழ்ப்படிந்தான் பின் சென்றான். "விசுவாசிகளின் தகப்பன்" என பெயர் பொருள் வாக்குத்தத்தத்தை சுதந்தரித்துக் கொண்டான். நீதிமான் ஆக்கப்பட்டார். இந்த பயணம் விசுவாச பயணமாகும். காணப்படுகிறவைகளையல்ல காணப்படாதவைகளை நோக்கி இருக்கிற நமக்கு அதி சீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாத வைகளோ நித்தியமானவைகள்.

3. **உயிர்த்த இயேசுவோடு சீஷர்களின் பயணம் (லூக்.24:13-31)**

பயந்து கலங்கிபோயிருந்த சீஷர்கள் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த சங்கதியை ஸ்திரிகள் அறிவித்தார்கள். இவர்களுடைய வார்த்தை அவர்களுக்கு வீண்பேச்சாக தோன்றினதினால் அவர்கள் இவர்களை நம்பவில்லை. அன்றையதினமே அவர்களில் இரண்டு பேர் எருசலேமிலிருந்து எம்மாவு என்னும் கிராமத்திற்குப் போனார்கள். அவர்கள் துக்கமுகம் உள்ளவர்களாய் வழிநடந்து செல்லுகையில் இயேசுதாமே சேர்ந்து அவர்களுடனே கூட நடந்து போனார். கிறிஸ்தவ வாழ்க்கை பயணத்தில் துக்கம் துயரம் சந்திக்கும் வேளையில் உயிர்த்தெழுந்த இயேசு நம்முடன்கூட நடந்து செல்லுவார். அவரே இஸ்ரவேலில் மீட்டு இரட்சிக்கிறவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம் என கூறின சீஷர்களில் அகக்கண் திறக்கும்படி அவர்களை நோக்கி தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்கு புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே கிறிஸ்து இவ்விதமாக பாடுபடவும் தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையோ என சொல்லி மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லா வற்றிலும் தம்மைக்குறித்து சொல்லியவைகளை விவரித்து காண்பித்தார். அவரை வருந்தி அழைத்தபொழுது அவர்களுடனே பந்தியிலிருக்கையில் அவர் அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து அதைபிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்பொழுது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு அவரை அறிந்தார்கள்.

முடிவுரை :

ஒரு விசுவாசியின் உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன் பயணம் கண்கள் திறக்கப்பட்ட பயணமாக இருக்கும். நித்தியமான நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ளும் பயணமாக இருக்கும். வாழ்க்கை பயணத்தில் மேக தூண்கள் வருபவரே உம்மை யார் என்று அறிவேன். அல்லேலூயா.

அருள்திரு S. ஜாண் செல்லையா, சமாதானபுரம்

25.04.2007

தூய மாற்கு திருநாள்

பாடங்கள் : ஓசி.6:1-6; 2தீமோ.4:1-11; மாற்.14:43-52

வசனம் : *"மாற்கு . . . ஊழியத்தில் பிரயோஜனமுள்ளவன்" 2தீமோ.4:11.*

முன்னுரை :

இவரை நாம் திருமறையில் யோவான் மாற்கு என்று அழைக்கப்படுவதை காணலாம். யோவான் இவரது யூதப் பெயரையும் மாற்கு இவரது ரோமப் பெயரையும் குறிக்கிறது. இவரது தகப்பனார் ரோம அரசாங்கத்தில் பணிபுரிந்த ஒரு ரோமர். தாய் மரியாள் யூத இனத்தைச் சேர்ந்தவர். இவர் பர்னபாவின் சகோதரியாவார். மாற்குவின் தந்தையின் மரணத்திற்கு பின் இவரது குடும்பம் எருசலேமில் குடியேறினார்கள். இவர்கள் வசதியும் செல்வாக்கும் உடையவர்களாக வாழ்ந்தார்கள்.

1. திருப்பணியும் - மாற்கும் :

திருப்பணியில் அதிகப் பற்று உடையவர். பயனுடையவர். பவுல் பர்னபாவுக்கு ஊழியத்தில் உதவி செய்தவர். பேதுருவுக்கும் எழுத்துப் பணியில் அவரது எழுத்தாளராக செயல்பட்டவர். மாற்கு ஊழியத்தில் பிரயோஜனமாயிருக்க மாட்டான் என்று பவுல் சொன்னது உண்டு. ஆனால் அதே பவுல் மாற்கு தனக்கு ஊழியத்தில் பிரயோஜனமுள்ளவன் என்று பவுல் குறிப்பிடுகிறார். பேதுருவும் மாற்குவை தனது ஆவிக்குரிய குமாரன் என்று குறிப்பிடுகிறார்.

பயனற்றவன் என்று பவுலால் குறிப்பிடப்பட்டபொழுதும் பின்னால் பயனுள்ளவன் என பெயர் பெற காரணம் கிறிஸ்துவே தனது வாழ்வின் எல்லாம் என்று அறிக்கை செய்யும் எந்த ஒரு பாவியுமான பயனற்ற மனிதனையும் கிறிஸ்து பயனுள்ள பாத்திரமாக வனைந்து அவரது பணிக்காக செயல்படுத்த முடியும் என்பதை இவரது வாழ்வு நமக்கு ஒரு சாட்சியாக அமைகின்றது.

2. திருச்சபையும் - மாற்கும் :

கி.பி.55 அல்லது கி.பி.61இல் எகிப்தின் பெரிய பட்டணமாய் திகழ்ந்த அலெக்சாந்திரியாவுக்கு சுவிசேஷத்தை மிகவும் மனம் தளராமல் கொண்டு சென்றார் சபையை ஸ்தாபித்தார். இதற்கு முதல் பேராயராக இருந்து சிறப்பு பணி செய்தார். விக்கிரகங்களை வழிபட்டு வந்த மக்கள் தங்கள் தெய்வங்களை அழிக்க இவர் வந்திருக்கிறார் என்று பல எதிர்ப்புகளை கொடுத்தார்கள். ஆனால் மாற்கு திருச்சபைகளை உருவாக்குவதிலும் அதனை கண்காணிப்பதிலும் மிகவும் தீவிரமாக செயல்பட்டார். அவரால்

அந்தப் பட்டணத்தில் கிறிஸ்துவை முதன்முதலாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட "அனியானஸ்" என்பவரை அவருக்கு பின் பேராயராக அபிஷேகம் செய்துவிட்டு, அவருக்கு உதவியாக மூன்று போதகர்களையும், ஏழு டீக்கன்மார்களையும் நியமனம் செய்தார். பின்பு ரோமாபுரி சென்றார்.

கிறிஸ்துவின் அன்பினால் ஆளுகை செய்யப்பட்டவன், அவரது அன்பின் பணியை செய்யும்படி மக்களை ஊழியர்களாக பயிற்றுவிப்பதிலும், கிறிஸ்துவின் நற்சாட்சிகளாக நிலைநிறுத்தவும் தங்களை அர்ப்பணித்தவர்கள். அப்படி ஊழியர்களை எழுப்புவதில் தலைசிறந்தவராக திகழ்ந்தவர்களில் மாற்கும் ஒருவரே.

3. தியாகமும் - மாற்குவும் :

மாற்குவின் தியாகத்தை நாம் சொல்ல வேண்டுமானால் நேரம், திறமை, தாலந்து, மற்றும் செல்வத்தை கிறிஸ்துவுக்காக செலவழித்தவர்களில் இவரும் ஒருவர் ஆவார். எல்லாவற்றிக்கும் மேலாக தனது உயிரையே தியாகமாக ஒப்புக் கொடுக்க முன் வந்த இவரது தீர செயல் மிகவும் சிறந்ததாகும்.

காரணம் மாற்கு 14:51,52இன்படி இயேசுவின் கடைசி நேரத்தில் அவரது பின்சென்ற சீஷர்கள் அவரை விட்டு ஓடினபோது, அவருக்கு பின்னாக சென்று பின்னர் ரோம போர்ச்சேவகர்கள் அவனை பிடித்தபொழுது அவர்களை விட்டு ஓடிப்போனவன் மாற்குதான் என்று நம்பப்படுகின்றது. ஆனால் அவரது வாழ்வின் கடைசி நேரத்தில் கிறிஸ்துவின் மீது மிக்க அன்பு கொண்டவராக, கிறிஸ்துவுக்காக அவர் ஸ்தாபித்த திருச்சபைகளை காண அலெக்சாந்திரியாவுக்கு போன்பொழுது கி.பி.68ஆம் ஆண்டு அந்த பட்டணத்தில் "பாகாலிஸ்" என்ற இடத்தில் புதிதாக கட்டப்பட்ட தேவாலயத்தை பார்த்து தேவனுக்கு நன்றி செலுத்தினார். ஈஸ்டர் பண்டிகையின்போது அத்தேவாலயத்தில் ஆராதனை நடந்து கொண்டிருந்தபொழுது, அப்பட்டணத்தில் இருந்த விக்கிரக வணக்கத்தார் அந்த ஆலயத்திற்குள் சென்று மாற்குவை பிடித்து கழுத்தில் கயிற்றைக் கட்டி தெருக்களின் வழியே இழுத்து சென்றார்கள். அன்றைய தினமே விக்கிரக வணக்கத்தார் அவர்களது "ஸெராபிஸ்" பண்டிகையை கொண்டாடினபடியால் அன்று இரவே அவர்களது பண்டிகையின் உச்சக்கட்டமாக மாற்குவை தீக்கொழுத்தினார்கள். மாற்கு இரத்த சாட்சியாக மரித்தார்.

மாற்குவின் திருப்பணியும், திருச்சபை கட்டுதலும், தியாகமும் அவரது திருநாளை நினைவு கூறும் கிறிஸ்துவின் அடியவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சவாலே.

அருள்திரு D. பாஸ்கர் கனகராஜ்
அதிசயபுரம்

29.04.2007

உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 2ஆம் ஞாயிறு

பொருள் : **இருளிலிருந்து ஒளிக்குள்**

பாடங்கள் : *ஏசா.60:19-22; 1யோவா.1:1-7; யோவா.8:12-20*

வசனம் : *1தெசலோனிக்கேயர் 5:4பி,5*

முன்னுரை :

உலகத்தில் எந்த ஒரு மனிதனும் இருளிலேயே இருக்க வேண்டும் என்று நினைக்க மாட்டான். இருளில் இருக்கிற மனிதர்கள் யார் என்று காண்கையில் பிர.2:14இல் முடவன் இருளில் நடக்கிறான். மத்.25:30இல் பிரயோஜனமற்றவனை இருளிலே போடுவார்கள் என்று வேதம் சொல்லுகிறது. மனிதர்கள் பலவிதமான இருளில் இருக்கிறார்கள். உதாரணமாக, அறியாமை என்னும் இருள், வியாதி என்னும் இருள், அடிமைத்தனம் என்னும் இருள் இன்னும் பல இருள் காணப்படுகின்றது. இப்படிப்பட்ட இருளிலிருந்து மனிதன் விடுதலை பெற்று ஒளியைப் பெற்றுக் கொள்ள என்ன செய்ய வேண்டும். ஒளிக்குள் வந்த மனிதன் என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் சிந்திப்போம்.

எப்படி ஒளிக்குள் வருவது :

நம்முடைய வாழ்வில் ஒளியைக் கொடுப்பவர் ஒருவரே. அவரே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. ஏசா.60:19,20 வசனங்களில் கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாவார் என்று கூறுகின்றது. சங்கீதக்காரனாகிய தாவீதும் 18ஆம் சங்கீதம் 28ஆம் வசனத்தில் என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார் என்று கூறுகின்றார். யோவா.1:9இல் உலகத்திலே வந்து எந்த மனிதனையும் பிரகாசிப்பிக்கிற ஒளி என்று இயேசுகிறிஸ்துவை யோவான் அறிமுகப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்து யோவா.8:12இல் என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்று கூறுகின்றார். எனவே இயேசுகிறிஸ்துவை பின்பற்றுகின்ற மனிதர்களாக ஒளியில் நடப்போம்.

இயேசுகிறிஸ்துவை பின்பற்றுவது மாத்திரமல்ல யோவா.12:16இல் என்னில் விசுவாசமாயிருக்கிறவர் இருளில் இராதபடிக்கு நான் உலகத்தில் ஒளியாக வந்தேன் என்று இயேசுகிறிஸ்து கூறுகின்றார். நாம் இயேசுகிறிஸ்துவை முழுமையாக விசுவாசிக்கும்போது அவர் நமக்கு ஒளியாக காணப்படுகின்றார். நான் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறேன், நான் கிறிஸ்தவன் என்று நாம் சொல்லிக் கொண்டு ஒருவேளை பாவவாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்போமானால் நம்மிடத்தில் உண்மை இல்லை. நாம்

பொய்யர்கள் என்று 1யோவா.1:6இல் கூறுகின்றது. தொடர்ந்து நாம் ஒளியில் நடக்கும்படி வேதாகமம் நமது பாதைக்கு வெளிச்சமாயிருக்கிறது (சங்.119:105). எனவே வேதத்தை அனுதினம் வாசித்து, ஆராய்ந்து, அதன்படி நடக்கிறபோது நம்முடைய வாழ்க்கையில் இருள் மறைந்து ஒளி வீசுகிறவர்களாக காணப்படுவோம். ஒருபாடல் (கீதங்கள் 88) இவ்வாறு சொல்லுகிறது.

"இரவு போயிற்று பகல் சமீபமாயிற்று
இருளின் செய்கை தள்ளி ஒளியின் கவசம் தரிப்போம்"

ஒளிக்குள் வந்த நாம் என்ன செய்ய வேண்டும்?

நாம் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்து அவரைப் பின்பற்றி இருளிலிருந்து ஒளிக்குள் அழைக்கப்பட்டிருக்கிறோம். இனி நம்முடைய பணி என்ன என்று பார்க்கும்போது 1பேது.2:9 சொல்வது போல நம்மை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினித்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாக இருக்கிறோம். இயேசு கிறிஸ்துவினால் ஒளியைப் பெற்ற நாம் அந்த ஒளியைக் குறித்து அறிவிக்கும்படி அழைக்கப் பட்டிருக்கிறோம். அதாவது இயேசுகிறிஸ்துவை இந்த உலகத்திலுள்ள மக்களுக்கு எடுத்துச் சொல்லும்படி அழைக்கப்படுகின்றோம். நாம் ஒளியைப் பெற்றிருக்கிறோமேயொழிய நாம் ஒளி அல்ல. யோவா.1:8 நாம் ஒவ்வொருவரும் இயேசுகிறிஸ்துவால் ஒளியூட்டப்பட்ட தீபங்களாக இந்த உலகில் வாழ்வோம். "இயேசு கற்பித்தார் ஒளி வீசவே" என்ற பாடலில் முதலில் அவர்க்காய் (இயேசுவுக்காய்) ஒளி வீசுவோம், இரண்டாவது பிறர் நன்மைக்காய் ஒளிவீசுவோம் என்று கூறப்படுகின்றது.

எனவே இந்த உலகில் நாம் அங்கும், இங்கும், எங்கும் பிரகாசிக்கின்றவர்களாக வாழ்வோம். ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக.

ஒளியென உலகினில் வந்தார் நம்மை
ஒளியென விளங்கிட அழைத்தார்
ஒளிதரும் தீபங்களாக என்றும்
ஒளிர்ந்திட ஓடியே வாரீர்

பெருகுவோம் வளர்ந்து
பெருகுவோம் தேவன்
அருளும் ஆவியின்
அருமையாம் ஒளியில் - வளர்ந்தே பெருகுவோம்

அருள்திரு தி. செல்லதாஸ் ஜோசப்
கூடன்குளம்

01.05.2007

மாதத்தின் முதல் நாள்

பாடங்கள் : ஏசா.58:8-14; எசே.36:28-38

வசனம் : ***"... உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும், கர்த்தருடைய மகிமை உன்னை பின்னாலே காக்கும்" (ஏசா.58:8பி).***

MY PEOPLE WILL BE PROSPERED

முன்னுரை :

ஒவ்வொரு மனிதனும் தனது சுகமான வாழ்க்கைக்காக, தனது பிள்ளைகளின் சுகமான வாழ்வுக்காக படித்து, கடல் கடந்து சென்று சம்பாதிக்கிறான். பலருக்கு எவ்வளவோ உழைத்தும் அவர்களுடைய சுகவாழ்வு அவர்களுக்கு கிடைக்கவில்லை. அப்படிப்பட்டவர்களுக்காக ஆண்டவர் கொடுக்கும் வார்த்தை தான் "நீ சீக்கிரத்தில் துளிர்ப்பாய் என்பது".

1. நீ பட்டுப்போன மரத்தைப்போல் காணப்படுகிறாயோ? உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்விடும் :

யோபு 30:15 ஐயோ என் சுகவாழ்வு மேகத்தைப் போல் கடந்து போயிற்றே என்று புலம்புகிறான். நாமும் யோபுவைப் போல புலம்பி நம்முடைய வாழ்கையின் சுகவாழ்வு இல்லாதது போல் காணப்படலாம். ஆனால் இப்புதிய மாதத்தின் ஆரம்பத்தில் கர்த்தர் சொல்லுகிறார் எசே.17:24 'நானே பட்டுப்போன விருச்சத்தை தழைக்கப்பண்ணுகிறவர்' என்று கர்த்தர் சொல்கின்றார். இஸ்ரவேலர் அடிமைகளாக சென்ற நாட்களில் அவர்களை சுற்றி இருந்த புறஜாதிகளும் அப்படித்தான் நினைத்திருப்பார்கள். ஆனால் தேவன் இஸ்ரவேலரைப் பார்த்து கவலைப்படாதிருங்கள் நான் உங்கள் வாழ்க்கையில் மீண்டும் சுகவாழ்வு கொடுப்பேன் என்று ஏசாயா மூலம் கூறுகின்றார். எசே.36:34-36 'Nobody will be able to see that once it was barren' அப்படியே நானே அதை ஏதேன் தோட்டத்தைப் போல் செழிப்பாக்குவேன் என்றார். அதை அவர்களுடைய வாழ்விலும் அப்படியே செய்தார். அதைப்போல் உங்கள் வாழ்வும் இந்த மாதமுதல் துளிர்விட ஆரம்பிக்கும்.

2. நீ பூத்து, காய்த்து பலன் கொடுப்பாய் :

(You will blossom and bear fruit)

ஏசா.27:6இல் ஏசாயா மூலம் கர்த்தர் சொன்னது என்னவென்றால், நீ துளிர்பதோடு மாத்திரமல்ல இஸ்ரவேலே நீ பூ பூத்து, காய்த்து பலன் கொடுப்பாய் என்று கர்த்தர் சொன்னார். எவ்வளவு ஆறுதலான வசனம்

பாருங்கள், உங்கள் வாழ்வை குறித்து எள்ளி நகைத்தவர்கள் எல்லாருக்கும் முன்பதாக உங்கள் வாழ்வு செழிக்கப்போகிறது. உங்களிலிருந்து வருகின்ற கனியின் மூலம் மற்றவர்களும் பலன் பெறப் போகிறார்கள். அவர் சொன்னது போலவே இஸ்ரவேல் ஜனங்களுக்குச் செய்தார். அவர் நமக்கும் அப்படியே செய்வார்.

3. அவர் உன்னை நித்தமும் நடத்துவார் :
(He wil guide you continuously)

ஏசா.58:11 சொல்லுகிறது கர்த்தர் நம்மை நித்தமும் நடத்துகின்றவர் என்று. பாருங்கள் நம்மை துளிர்க்கவிட்டு, பூ பூக்கவிட்டு, அதின் பலனை கொடுக்க வைத்து நிறுத்தி விடுகிறவர் அல்ல நம்மை நித்தமும் நடத்துகின்றார். அனுதின தேவைகளையும் தொடர்ந்து நான் கொடுப்பேன் என்று சொல்லுகிறார். ஒரு மரம் தொடர்ந்து செழிப்பாக இருக்க வேண்டுமானால் அதற்குரிய அடிப்படைத் தேவையான தண்ணீர், சூரிய ஒளி, கார்பன்-டை-ஆக்ஸைடு, ஆக்ஸிஜன் மற்றும் உரம் அவற்றிற்கு கிடைக்க வேண்டும். அதுபோலவே நம்முடைய வாழ்க்கையிலேயும் நாம் செழித்து வளர பல அடிப்படை தேவைகள் உள்ளன. அவற்றை ஆண்டவர் தாமே கொடுத்து வழி நடத்துவார், அதை நீங்கள் இந்த மாதம் முதற்கொண்டு காண்பீர்கள். நீங்கள் நீர்பாய்ச்சல் உள்ள தோட்டத்தைப் போல இருப்பீர்கள். கர்த்தரில் நீங்கள் வற்றாத (குறையாது) ஆசீர்வாதத்தைப் பெறுவீர்கள்.

திரு. V. ஜாண் சாமுவேல்
மணக்காடு

********* ********* *********

01.05.2007

தூய பிலிப்பு, தூய யாக்கோபு திருநாள்

பாடங்கள் : எரே.3:14-19; அப்.8:4-13; யோவா.6:1-14

வசனம் : *"இயேசு . . . பிலிப்புவைக் கண்டு நீ எனக்குப் பின் சென்றுவா என்றார்" யோவா.1:43.*

தூய பிலிப்பு :

"இயேசு . . . பிலிப்புவைக் கண்டு நீ எனக்குப் பின் சென்றுவா என்றார்" யோவா.1:43.

நண்பரை வழி நடத்துதல் :

பிலிப்புவின் சொந்த ஊர் பெத்சாயிதா பட்டணம். அந்திரேயா பேதுரு இவர்களும் இதே பட்டணத்தைச் சேர்ந்தவர்கள். பிலிப்பு இயேசு அழைத்த

போது கீழ்ப்படிந்தார். நாத்தான்வேலை ஆண்டவரிடம் வழிநடத்தினார். யோவா.1:44-50.

புறஜாதிகளை வழி நடத்துதல் :

பிலிப்பு என்ற கிரேக்கச் சொல்லுக்குக் குதிரைப் பிரியன் (Hourse Lover) என்ற பொருளாகும். யோவா.12:20-22 சில கிரேக்கர்கள் கிரேக்கப் பெயருடைய பிலிப்புவிடம் வந்து இயேசுவைக் காண விரும்புவதைத் தெரிவித்தார்கள். பிலிப்புவும் அந்திரேயாவும் அவர்களை இயேசுவிடம் வழி நடத்தினார்கள். நாம் அநேகரை ஆண்டவரிடம் வழி நடத்துகிறோமா?

பிதாவையும் அறிந்தவர் :

இயேசுவை அறிந்தும் அறியாதவர்களாகக் காணப்படுகின்ற உலக வாழ்வில் பிதாவுக்கும் கிறிஸ்துவுக்குமுள்ள ஒற்றுமையைப் பிலிப்பு உணர்ந்தார் யோவா.14:8,9 என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்.

ஆண்டவரால் திருப்தியடைதல் :

யோவா.6:5-7 அப்பங்களை எங்கே கொள்ளலாம் எனப் பிலிப்புவை சோதிக்கும்படி கேட்டார். பிலிப்பு இப்பகுதியைச் சேர்ந்தவரானபடியால் இப்படி கேட்டாரென்று கூறுவதுண்டு பணத்தால் முடியாதது. தேவனுடைய வார்த்தையால் ஐயாயிரம் பேர்களுக்கு மேலானவர்கள் போஷிக்கப்பட்டு திருப்தியடைந்தார்கள். இவ்விதமாகப் பரிசுத்த பிலிப்பு சீஷராக ஆண்டவரின் சிறந்த சேவைகளைச் செய்துள்ளார். நாமும் ஆண்டவரின் சீஷனாக சிறந்த சேவை செய்கிறோமா?

தூய யாக்கோபு :

புதிய ஏற்பாட்டில் யாக்கோபு என்ற பெயரில் அநேகர் உண்டு. சீடர்களிலும் இருவர் உள்ளனர். நாம் தியானிப்பது அல்பேயுவின் குமாரன் யாக்கோபு. இவர் பன்னிரு சீடர்களில் ஒருவர். கப்பர் நகூமை சேர்ந்தவர். மத்தேயுவின் சகோதரர். தந்தை பெயர் கிளியோபாஸ் என்றழைக்கப்பட்ட அல்பேயு. தாய் மரியாள். இயேசுவின் தாயாகிய மரியாளின் நெருங்கிய உறவினர். லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

அழைப்பைப் பெற்றவர் :

ஆரம்பத்தில் தீவிரவாதிகளான செலோத்தே பிரிவில் சேர்ந்தார். பின் பக்திமார்க்கத்தில் (நாசரைட்) சேர்ந்து துறவியைப் போல் வாழ்ந்தார். இயேசுவின் அழைப்பை ஏற்றுச் சீடரானார். எத்தனை புகழ் பெற்றவர்களாக இருந்தாலும் ஆண்டவரின் ஊழிய அழைப்பை பெறுவது மேலானது. ஆண்டவர் நம்மை அழைத்திருக்கிறார். இதைவிடப் பெரிய தகுதி, பதவி வேறென்ன வேண்டும்.

மாதிரியானவர் :

தோற்றத்தில் இயேசுவைப் போல் இருந்தார். இதனால்தான் யூதாஸ் காரியோத் முத்தத்தினால் இயேசுவைக் காட்டிக் கொடுக்க வேண்டியதாயிற்று. ஆண்டவருடைய பிள்ளைகளான நமக்கு ஆண்டவருடைய சாயல், மகிமை, பிரகாசம் காணப்படுகிறதா? இயேசுவின் மாதிரியைப் பின்பற்றுகிறோமா?

சிறந்த ஊழியர் :

இவருடைய ஊழியத்தைப் பற்றிய குறிப்புகள் அதிகம் தெரியாவிட்டாலும் ஒன்றை அறிகிறோம். அப்.8:4 சிதறிப் போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். லூக்.10:20 பரலோகத்தில் இவருடைய பெயர் இருக்கும் சிலாக்கியம் பெற்றுள்ளார்.

இரத்தச் சாட்சி :

சீரியத் திருச்சபையில் முதல் பேராயராகப் பணிபுரிந்தார் என்று அசீஸ் எஸ் அடியா என்ற வரலாற்று ஆசிரியர் கூறுகின்றார். கிறிஸ்துவைப் பற்றி போதித்தபடியால் கல்லெறிந்து இரத்தச் சாட்சியாக மரித்து எருசலேமில் அடக்கம் செய்யப்பட்டார். பின் இவரது எலும்புகள் கான்ஸ்டான்டி நோபுள் பட்டணத்தின் ஆலயத்தில் பத்திரப்படுத்தப்பட்டு கி.பி.572இல் ரோம் நகருக்கு கொண்டு வரப்பட்டு ஆலயம் எழுப்பப்பட்டதாக வரலாறு கூறுகிறது. சிறந்த ஊழியங்கள் செய்த பரிசுத்தவான்களின் தைரியமான ஊழியப் பாதைகளைப் பின்பற்றுவோம்.

அருள்திரு P. அருள்வேதநாயகம்
வாகைக்குளம்

********* ********* *********

01.05.2007

தொழிலாளர் தினம்

பாடங்கள் : சக.9:9-12; அப்.4:23-31; மத்.21:1-11

வசனம் : *"ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலை செய்து சாப்பிட்டோம்" (2தெச.3:8).*

முன்னுரை :

குடும்பம், திருச்சபை, தேசம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு முதுகெலும்பு தொழிலாளர்கள். உழைக்காமல் உலகில் எவரும் ஒன்றும் செய்யமுடியாது. தேவன் உலகத்தை படைத்து அதை மனிதனிடம் ஆளுகை செய்யும்படியாக கொடுத்திருக்கிறார். ஆளுகை என்பது மனித உழைப்போடுதான்

சம்பந்தப்பட்டது. உலகை, நிலத்தை பண்படுத்தி, பாதுகாத்து பலனை அனுபவிப்பது உழைப்பின் வெளிப்பாடு. தொழிலாளர் தினம் ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் நாள். நம் கையின் பிரயாசத்தை சாப்பிட உதவி செய்கிற ஆண்டவருக்கு நன்றி படைப்போம்.

2தெச.3:5-12 வரையுள்ள பகுதியில் பவுல் உழைப்பின் மேன்மையை ஆழமாக விளக்குகிறார்.

1. உழைப்பு = ஒழுங்கு

வச.7இல் உழைப்பு ஓர் ஒழுங்குமுறை என்று கூறுகிறார். வச.11இல் வேலை செய்யாமலிருப்பது, வீணாக சுற்றிதிரிவது ஒழுங்கு அல்ல என்றும், வேலை செய்து சாப்பிடுவதுதான் ஒழுங்கு என்றும் வாசிக்கிறோம். பிறர் உழைப்பில், பெற்றோர் உழைப்பில், பிறறை ஏமாற்றி அல்லது பிச்சை எடுத்தாவது சாப்பிடலாம் என நினைக்க கூடாது. உழைப்பு ஒரு நடைமுறை ஒழுங்கு, உழைக்காமல் உண்ண நினைப்பது ஆண்டவரின் படைப்பு ஒழுங்குக்கு (திட்டத்திற்கு) எதிரானது. (நீதி.6:6-11; நீதி.9:15).

2. உழைப்பு = சுமையை குறைக்கும்

வச.8இல் பவுல் பிறருக்கு பாரமாக (சுமை) இருக்க விரும்பவில்லை அவர்கள் உணவை உண்பதற்கும், தன்பாரத்தை அவர்களிடம் வைப்பதற்கும் அதிகாரம் பவுலுக்கு உண்டு. ஆனால் அதை அவர் விரும்பவில்லை. உழைப்பு கடினமாக இருப்பினும் தன்தன் பாரத்தை சுமக்க வேண்டும். இன்று அநேகர் (இளைஞர், உடல் நலமுடன் இருப்பவர்கள்) பிறருக்கு பாரமாக இருப்பதற்கு காரணம் உழைப்புக்கு தன் உடலை ஈடுபடுத்தாததுதான் காரணம். எல்லாரும் உழைத்துதான் வாழவேண்டும் என்று நினைத்தால் திருப்தியான வாழ்வு (உணவு) கிடைப்பதில் சந்தேகமில்லை.

3. உழைப்பு = பிறருக்கு மாதிரி

வச.9இல் தான் உழைப்பது பிறருக்கு முன் மாதிரி என கூறுகிறார். பெற்றோரின் கடினமான உழைப்பு தன் பிள்ளைகளுக்கு உழைக்க வேண்டும், சம்பாதிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை தூண்டுகிறது. நீதி.6:6இல் சோம்பேறிக்கு ஒரு சாதாரண எறும்பே உழைப்புக்கு மாதிரியாக மாறிவிடுகிறது. முன் கலப்பை எப்படியோ, அப்படியே பின் கலப்பையும் செல்லும், குடும்பத்தில், திருச்சபையில் பொறுப்புள்ளவர்கள் தங்கள் பொறுப்பை (உழைப்பு) சரியாக செய்யும் போது அது பிறருக்கு மாதிரியாகவும், முன் உதாரணமாகவும், ஊக்கமாகவும் அமைகிறது. அதைதான் ஆண்டவர் விரும்புகிறார்.

அருள்திரு V. ஞானப்பிரகாசம்
புளியங்குடி

06.05.2007

உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 4ஆம் ஞாயிறு
(வாலிபர் ஞாயிறு)

பொருள் : **இளைஞர் – எதிர்கால நம்பிக்கையின் அடையாளம்**

பாடங்கள் : **தானி.5:10-28; 1தீமோ.4:1-16; மத்.19:14-26**

வசனம் : *தானியேல் 1:8பி*

முன்னுரை :

பத்தொன்பது வயது இளைஞனான புரூஸ் நெல்சன் 1961ஆம் ஆண்டு, தன் இளவயதில் படித்தறிந்த தென் அமெரிக்கக் காடுகளில் குடியிருக்கும் ஒரு பழங்குடி இனமான மோடிலோன் மக்களிடையே கிறிஸ்துவின் அன்பை அறிவிக்க யாருடைய துணையுமின்றி புறப்பட முடிவு செய்தான். விமானத்தில் பறந்து 70 டாலர் பணத்துடன் (சுமார் ரூ.28,000/-) வெனிசுலாவின் தலைநகரில் இறங்கினான். உதவியின்றித் தவித்ததால் பணம் செலவாகி ரூ.10/- தான் மிஞ்சியது. போராட்டத்தின் நடுவில் 3 மாதங்களில் ஸ்பானிய மொழியைக் கற்றான். மோடிலோன் மக்களைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டான். எந்தக் குழுவும் அல்லது படையும் நெருங்க இயலாதது என அறிந்து ஜெபத்துடன் சந்தித்தான். பல தடைகள், சுகவீனங்கள் மற்றும் மோடிலோன் இனமக்களின் அம்புகளினிமித்தமும் பாதிக்கப்பட்ட ஓல்சன் 28 ஆண்டுகள் போராட்டத்துடன் அம்மக்களை மூன்றே ஆண்டுகளில் தேவ ஜனங்களாக மாற்றினார். 1969ஆம் ஆண்டு அவருக்காக கொரில்லாக்களின் பிடியில் சிக்கியிருந்த அவரை மீட்டிட மோடிலோன் இன மக்களே முன் வந்தனர்.

“முந்நூறு ஆண்டுகளாகப் பல்வேறு அரசுகளால் செய்ய முடியாத மாற்றத்தை ஓல்சன் மூன்றே ஆண்டுகளில் செய்து காட்டி விட்டார்” என்று கொலம்பிய அரசு அதிகாரி ஒருவர் கூறினார்.

ஆம் அருமையான கர்த்தரின் பிள்ளைகளே, வேதத்தின் அடிப்படையில் தன் பணியைத் துவக்கிய இளம் மிஷனெரியைப் போல வேதத்தில் ஒரு இளைஞனைப் பற்றி இன்றைய வேத பகுதியில் வாசிக்கிறோம். கி.மு.604 முதல் கி.மு.539 வரை ஆண்ட மன்னர்களின் கால கட்டத்தில் சவால் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தவர்.

1. தீர்மானம் - நம்பிக்கைக்கு முதல்படி (வச.8பி)

தானியேலின் தீர்மானம், இளைஞரின் சவாலுக்கு ஒரு சிறந்த அடிப்படையாகும். இன்றையச் சூழ்நிலையில் அநேக இளைஞர்கள் போதை வஸ்துக்களுக்கு அடிமைகளாக வாழ்ந்து வருகின்றனர். ஆனால் சிலர் எந்தத் தீயப் பழக்கங்களுக்கும் உடன்படாமல் வாழ்கிறதைக் காண்கிறோம். "தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி?" (ஆதி.39:9) என்று கேட்ட யோசேப்பின் வாழ்க்கை தானியேலின் அனுபவமாக அமைகிறது. பாவம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும் தானியேலின் உறுதியான தீர்மானம் அவனையும், அவன் நண்பர்களான அனனியா, மிஷாவேல், அசரியா என்பவர்களையும் ராஜசமூகத்தில் பத்து மடங்கு சமர்த்தர்களாக உயர்த்தியது.

2. சாட்சி வாழ்க்கை - நம்பிக்கைக்கு 2ஆம் படி :

"தானியேலுக்குள் பரிசுத்த தேவர்களுடைய ஆவி இருக்கிறது" (தானி.5:11).

தானியேலின் பரிசுத்த வாழ்க்கை அவனில் தங்கியிருந்த பரிசுத்த தேவனின் செயல்பாடுகளை வெளிப்படுத்தியது. தானியேலுக்குள்ளிருந்த பரிசுத்த ஆவியானவர் தானியேலின் வாழ்க்கையை பரிசுத்தப்படுத்தி, தம்மை அவனில் வெளிப் படுத்தினார்.

அவனுடைய பரிசுத்த வாழ்வு, ஆண்டவருடன் அவனுக்கு இருந்த தனிப்பட்ட தொடர்பு சகலராலும் சாட்சி பகரக்கூடிய வகையில் அமைந்து.

இன்றையச் சூழ்நிலையிலும், பரிசுத்த ஆவியானவர், அபிஷேகம் என பல போதனைகள் இன்றைய ஆவிக்குரிய இளைஞர்களைக் கவர்வதாக அமைகின்றது. அருமையான இளைஞரே, பெற்றோரே, வாலிபர் ஜெபக்குழு தலைவர்களே, நம்மில் வாசம்பண்ணும் சத்திய ஆவியாகிய பரிசுத்த ஆவியானவர் நம்மைச் சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவார் (யோவா.16:13). சத்தியம் என்பது ஒரு உறுதியான உண்மை. அதுதான் வேதவசனம் வேதவசனத்தின்படி நாம் வாழும்போது, இயேசுவின் அருள்வாக்கைப் பின்பற்றுவோம். "நான் பரிசுத்தராயிருக்கிறதுபோல நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" என்ற இயேசுவின் வழியில் நடந்து பரிசுத்தத்தையும், சாட்சி வாழ்க்கையையும் காத்துக் கொள்வோம்.

3. பரிசுக்கு மயங்காத வாழ்க்கை - நம்பிக்கைக்கு 3வது படி

"உம்முடைய வெகுமானங்கள் உம்மிடத்திலேயே இருக்கட்டும்; உம்முடைய பரிசுகளை வேறொருவனுக்குக் கொடும்; (தானி.5:17).

பரிசுக்காக எதையும் செய்யும் மனிதர்கள் மத்தியில் நாம் வாழ்ந்து வருகிறோம். பரிசுக்காகக் கொள்கையை மட்டுமல்ல, தாங்கள் வணங்கும் தெய்வப் பிரமாணத்தையே மீறுபவர்களாக சிலரை நாமே பார்த்திருக்கிறோம்.

ஆனால் இந்த நம்பிக்கையின் அடையாளமான தானியேல் பரிசுக்கல்ல, இராஜாவின் உண்மை நிலையை எடுத்துக் கூறுவதைத் தெளிவாகக் காண்கிறோம்.

இது பரிதானத்தை வெறுக்கும் இளைஞர் சமுதாயத்திற்கு மாதிரி. கேரளப் பழங்குடிப் பெண்களில் ஒரு இனத்தவர் ஆண்களின் வன்முறைக்கு ஆளாகி, தகப்பன் யார் என்றே தெரியாத பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். திருமணத்திற்கு முன்பே பிள்ளைப் பேறு அடைந்தனர். இந்த ஆண்களிடமிருந்து இப்பெண்களை விடுவிக்க ஒரு வாலிபப் பெண் எழுந்தாள். அவளது 25வது வயதில் அவளது சேவையைப் பாராட்டி சிறப்பு விருது ஒன்று வழங்கியது. பயணப்படியும் கொடுத்து விருது வாங்க அழைத்தார்கள். ஆனால் அந்தப் பெண், "என் இனத்துப் பெண்களின் முழுமையான விடுதலையே, கடவுளும், தேசமும் எனக்குக் கொடுக்கும் பெரிய விருது" என்று அந்த விருதைப் பெற மறுத்து விட்டாள்.

ஆம், அருமையானவர்களே, இதைத்தான் பவுல் அப்போஸ்தலனும் தீமோத்தேயுக்கு எழுதுகிறார். "உன்னைக் குறித்தும், உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு" 1தீமோ.4:16.

திருச்சபையாக நாமும் நம் இளைஞர்களை புரூஸ் ஓல்சனைப் போல, தானியேலைப் போல, தீமோத்தேயு, பவுல், யோசேப்பைப் போன்ற சிறந்த நம்பிக்கையின் அடையாளங்களாக உருவாக்கிட ஜெபிப்போம், பாடுபடுவோம். கர்த்தர் தாமே நம்மையும், நம் திருச்சபையையும், நம் இளைஞர்களையும் ஆசீர்வதிப்பாராக.

அருள்திரு A. ஜெசு நேசபாண்டியன்
TDYA, பாளையங்கோட்டை

13.05.2007

உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 5ஆம் ஞாயிறு

பொருள் : இறைமக்களுக்கு பணி செய்தல்

பாடங்கள் : எசே.34:11-16; எபி.13:7-21; யோவா.10:7-18

வசனம் : *எசேக்கியேல் 3:13*

முன்னுரை :

பேராயர் வில்லியம் டெம்பிள் என்பவர் திருச்சபையைக் குறித்து சொல்லுகிறார். "உலகில் பிறருக்கென வாழுகின்ற ஒரே நிறுவனம் திருச்சபை" என்கிறார். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவரும் பிறருக்காக பணி செய்யவே அழைக்கப்பட்டிருக்கிறோம். இந்த சமுதாயத்திற்கு நம்மை காவலாளியாக ஆண்டவர் அழைத்திருக்கிறார்.

வரலாற்றுப் பின்னணி :

எசேக்கியேல் தீர்க்கதரிசி கி.மு.609இல் யோசியாவின் இறப்புக்கும் 587இல் எருசலேமின் அழிவிற்கும் இடைப்பட்ட காலத்தில் தீர்க்கத்தரிசனம் உரைத்தவர். இந்த வேளையிலே அசீரிய பேரரசுக்குப் பதிலாகப் பாபிலோன் ஒரு வல்லரசாக ஆதிக்கம் செலுத்தியது. யோசியா அரசன் பல சமய சமுதாய சீர்திருத்தங்களை செய்து வந்தார். ஆலயம் பழுதுப் பார்க்கப்பட்டது. நியாயபிரமான புத்தகம் கண்டெடுக்கப்பட்டது. மக்கள் எல்லோரும் நியாயபிரமாணத்தின்படி நடக்க வேண்டுமென்றும் கட்டளையிட்டான். மக்கள் ஆண்டவரைத் தேடினார்கள். இந்த வேளையில் யூதா எகிப்தின் கீழ் இருந்தது.

கி.மு.606இல் பாபிலோன் அரசனை நேபுகாத்நேச்சார் எகிப்தின் பார்வோன் நெக்கோலை தோற்கடித்து, பாலஸ்தீனத்தையும் வென்று தன் அரசோடு சேர்த்துக் கொண்டான். சில ஆண்டுகளுக்கு பின் யூதா நாட்டினர் கலகம் செய்ததினால் பாபிலோன் மன்னன் மீண்டும் படையெடுத்து யோயாகினை சிறைபிடித்து நாடு கடத்தினான். ஆலயத்தை கொள்ளையிட்டான். அதன் பொருள்கள் எல்லாவற்றையும் பாபிலோனுக்கு கொண்டுச் சென்றான். அதோடு யோயாகீனின் மாமனான மத்தனியாவை செதேக்கியா என்று பெயர் மாற்றம் செய்து ஆளுநராக நியமித்தான். ஆனால் மீண்டும் யூதா எகிப்தோடு சேர்ந்து சதி செய்வதாக கருதி நேபுகாத்நேச்சார்

பாலஸ்தீனத்தின் மீது மீண்டும் படையெடுத்து, செதேக்கியாவை பிடித்து கண்களை குருடாக்கி பாபிலோனுக்கு கொண்டுச் சென்றான்.

சமய சமூக பின்னனி :

இஸ்ரவேல் மக்கள் தங்கள் பாவ வாழ்க்கையிலிருந்து விடுபடவேயில்லை. எசேக்கியாவுக்கு பின் மனாசே, ஆமோன், யோசியாம் யோயாகின் செசேக்கியா இவர்களில் யோசியாவைத் தவிர மற்ற அனைவரும் கர்த்தரை மறந்து அன்னிய தெய்வங்களை வழிபட்டனர். மக்கள் நியாயப்பிரமாணத்தையும், கர்த்தரின் கட்டளைகளையும், கற்பனைகளையும் மறந்தார்கள் (எசே.5:5,6) தேசத்திலே நீதி நேர்மை இல்லை. தேசம் எங்கும் அநீதி தலைவிரித்து ஆடியது. நீதிச் சட்டம் பயன் இல்லாமல் போயிற்று. தீயோர் நல்லோரை கொடுமைப்படுத்தினார்கள். ஏழை எளிய மக்கள் மிகவும் நசுக்கப்பட்டார்கள். இறை அச்சம் என்பதே மக்களிடம் இல்லை.

எரேமியாவின் பணி :

இந்தச் சூழ்நிலையில் ஆண்டவர் எரேமியாவை அழைக்கிறார். அவனுடைய பணியினை விளக்குகிறார். கலக வீட்டாராகிய இஸ்ரவேல் மக்களுக்கு நீ பயப்பட வேண்டாம். அவர்கள் கடின முகமும், முரட்டாட்டமான இருதயம் உள்ளவர்கள் (எசே.2:4).

நீ சொல்லுவதை அவர்கள் கெட்டாலும் சரி, கேட்காவிட்டாலும் சரி எச்சரிப்பு செய்ய வேண்டியது உனது பணி (எசே.2:6-8) உனது வார்த்தைக்கு செவி கொடுக்கவில்லை என்று கலங்க வேண்டாம்.

ஏனெனில் அவர்கள் என் (கர்த்தர்) வார்த்தைக்கு செவிகொடுப்பது இல்லை. அவர்கள் கடினமானவர்கள் (எசே.2:6-8). ஆனாலும் எச்சரிக்கும் பணியை எரேமியாவிடம் கொடுக்கிறார். ஒரு வேளை அவர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்படுவார்கள் இல்லை என்றால் அந்த குற்றப்பழி உன்னைச் சுமராது என்கிறார். (எசே.2:17,21) சீர்கெட்ட சமுதாயத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்கும் அநீதி, பெருகியிருக்கின்ற வேளையில் எச்சரிப்பது நமது கடமை. நீதிக்காக தைரியமாக போராட அழைக்கப்பட்டிருக்கிறோம். அநீதியை எதிர்க்கவில்லை என்றால் குற்றம் நம்மீது சுமரும். அழிவுக்கு செல்லுகின்ற மக்களை எச்சரித்து கர்த்தரின் வழிக்கு திருப்புவதே நமது பணியாகும்.

ஆயரின் பணி :

ஆடு மேய்க்கும் தொழிலைச் செய்து வந்த இஸ்ரவேல் மக்கள் அத்தொழில் அடிப்படையிலான உருவங்களைப் பயன்படுத்தி வந்தனர். கடவுளையும் குறிப்பாக தம் அரசர்களையும் ஆயராக பார்த்தனர். ஓர் ஆயருக்கு இருக்க வேண்டிய பண்புகளை தம் அரசர்களில் தலைவர்களில் எதிர்பார்த்தனர். சங்.23 நல்ல ஆயரைப் பற்றிப் பேசுகிறது. நல்ல ஆயர் பாதுகாப்புத் தருவார் (சங்.23:2,4) உணவும் நீரும் மிகுதியாக உள்ள நல்ல மேய்ச்சல் நிலத்திற்குக் கூட்டிச் செல்வார். புத்துயிரும் புது ஆற்றலும் தருவார். நேர் வழி நடத்திச் செல்வார். எனவே பாலை நிலத்தில் பாதை தவறிப் பாதிப்பு ஏற்படாது. நல்ல ஆயருக்கு ஆடுகளைத் தெரியும் (யோவா.10:15) அவர்களை அவர் பெயர் சொல்லி கூப்பிடுவார். (யோவா.10:3-5) அவைகளும் அவர் குரலை கேட்டு அவரைப் பின் தொடர்கின்றன. நல்ல ஆயர் முறையாக வருபவர் வாசல் வழியாக நுழைவர். காவலரும் அவருக்கு வாயிலைத் திறந்து விடுகின்றனர். ஆடுகளின் பாதுகாப்பிற்காக அவரே வாயிலாகப் படுத்துக் கொள்ளுகிறார். ஆடுகள் அவர் வழியாகவே உள்ளே போகும், வெளியே வரும் (யோவா.19:7-9). நல்ல ஆயர் ஆடுகளின் மேல் அக்கறை உள்ளவர் (யோவா.10:13) ஆடுகளுக்கு ஆபத்து வரும்போது துணிந்து நின்று பாதுகாப்பவர் ஓநாய் வரும்போது அவர் ஆடுகளை விட்டு ஓடிப்போக மாட்டார். ஆடுகளுக்காக எந்த தியாகத்தையும் செய்வார். தம் உயிரையே தம் ஆடுகளுக்காகக் கொடுக்க முன் வருவார். ஆடுகள் வாழ்வு பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டுச் செயல்படுபவரே நல்ல ஆயர்.

முடிவுரை :

பல்சமய சூழலில் ஆண்டவர் நம்மை அழைத்து அவருடைய மக்களாக ஏற்படுத்தியிருக்கிறார். அழிவுக்கு நேராக செல்கின்ற மக்களை எச்சரிப்பது நமது கடமை. அநீதியை எதிர்த்து குரல் கொடுக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். பல வேளைகளிலே நமது சுய நலம், பேராசை, பதவி மோகம், நம்மை ஊமையாக்கி விடுகிறது. ஆனால் எச்சரிப்பது நமது பணி. அதே வேளையில் நல்ல மேய்ப்பனாக மக்களை நல்வழிப்படுத்தும் பணியினையும், நாம் பெற்றிருக்கிறோம். இந்த பணியினை தியாகத்தோடு செய்யவே அழைக்கப்பட்டு இருக்கிறோம்.

அருள்திரு A. சாமுவேல்
ஜேக்கப்புரம்

17.05.2007

விண்ணுக்கெழுந்த திருநாள்

பாடங்கள் : ஆதி.5:21-24; அப்.1:1-11; லூக்.24:44-53

முன்னுரை :

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு முதல்முதல் மகதலேனா மரியாளுக்கும், சீஷர்களுக்கும், ஒரே வேளையில் ஐநூறு பேருக்கு அதிகமான சகோதரர்களுக்கும் தரிசனமளித்தார். தேவனுடைய இராஜ்யத்திற்குரிய வைகளை பேசி, அநேக தெளிவான திருஷ்டாந்தங்களினாலே சீஷர்களுக்கு தம்மை உயிரோடிருக்கிறவராக காண்பித்தார். இயேசு கிறிஸ்து சீஷர்களுக்கு கட்டளைகளை கொடுத்து ஆசீர்வதிக்கையில் உயர எடுத்துக் கொள்ளப்பட்டார்.

இயேசுகிறிஸ்து பரமேறுவதின் நோக்கம் :

1. "ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்". "நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக் கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்" "என் நாமத்தினாலே நீங்கள் எதை கேட்டாலும் அதை நான் செய்வேன்" (யோவா.14:2,12,14).
2. 1பேதுரு 3:22 அவர் பரலோகத்திற்குப்போய் தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார். (பரிந்து பேசுகிறவராக வீற்றிருக்கிறார்).

இயேசுகிறிஸ்து பரமேறுமுன் கொடுத்த கட்டளை ஒன்று :

பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக்காத்திருங்கள் (அப்.1:5).

அப்.1:8 பரிசுத்தாவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.

இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்கு கீழ்படிந்து சீஷர்கள் உன்னதத்தி லிருந்து வரும்பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். பெந்தேகொஸ்தே நாளில் பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டு ஆவியின் வரங்களை பெற்று சாட்சிகளாக வாழ்ந்தனர் (அப்.2:44-47).

எருசலேமில் சாட்சி அப்.1-7அதி
யூதேயாவிலும் சமாரியாவிலும் சாட்சி அப்.8-12 அதி
பூமியின் கடைசி பரியந்தம் சாட்சி அப்.13-28 அதி

பரிசுத்த ஆவியானவர் நம்மை சாட்சிகளாய் நிறுத்த உன்னத பெலனை தருகிறார்.

சாட்சியின் வாழ்க்கை :

சாட்சியுள்ள ஜீவியம், வாயினால் சொல்லுகிற சாட்சியல்ல, இயேசுவை அறிக்கையிடுதல், இயேசுவை அறிவித்தல், இயேசுவின் சிலுவையை சுமத்தல், இயேசுவுக்காய் பரிசுத்தமாய் நடத்தல், பாடுகளை சகித்தல், இயேசுவுக்காய் இரத்த சாட்சியாய் மரிக்கவும் ஆயத்தமாகயிருக்கும் வாழ்வே சாட்சியுள்ள வாழ்க்கையாகும்.

இயேசுகிறிஸ்து பரமேறுமுன் கொடுத்த கட்டளை இரண்டு

"நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்.16:15).

பரிசுத்த ஆவியானவரின் பெலனை பெற்று சாட்சியுள்ள ஜீவியமுடையவர்கள், சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள். இது இயேசுகிறிஸ்துவின் கட்டளை; நமது கடமை. 2தீமோ.4:5 நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று. இயேசுகிறிஸ்துவை ஏற்றுகொண்டவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து சீஷராக்குங்கள். மத்.28:20 நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைகொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்.

இயேசுகிறிஸ்து நியாயாதிபதியாக வரபோகிறார் (அப்.1:11)

விண்ணுக்கெழுந்த இயேசுகிறிஸ்து மீண்டும் இரண்டாம் வருகையில் நியாயாதிபதியாக வரப்போகிறார் (மத்.25:33). சாட்சியற்ற வாழ்க்கையுடையவர்கள், இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்கு கீழ்ப்படியாதவர்கள் பரிசுத்தமற்ற நடக்கையுள்ளவர்கள், தேவபக்தியற்றவர்கள் அனைவருக்கும் ஆக்கினை தீர்ப்பு உண்டு (கலா.5:19-21). கறையற்றவர்களும், பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள் (2பேது.3:14). ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள் (வெளி.21:27).

இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்; மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார், ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும் (வெளி.22:20).

பரிசுத்தஆவியானவரின் பெலனை பெற்று சாட்சியாய் வாழ்வோம்.
இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்கு கீழ்படிவோம்
தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்போம்

அருள்திரு TCG துரைசிங்
மருதகுளம்

20.05.2007

விண்ணுக்கெழுந்த திருநாளுக்குப் பின்வரும் ஞாயிறு

பொருள் : **கர்த்தரைப் போற்றுவோம்**

பாடங்கள் : **ஏசா.6:1-8; கொலோ.3:12-17; லூக்.1:46-55**

வசனம் : ***"கர்த்தரைத் துதியுங்கள் நம்முடைய தேவனைக் கீர்த்தனம் பண்ணுகிறது நல்லது. துதித்தலே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது" (சங்.147:1).***

முன்னுரை :

துதிகளின் மத்தியில் வாசம் பண்ணுகிறவர் நமது ஆண்டவர் நாம் துதிக்கும் போது தேவ பிரசன்னம் நம் மத்தியில் இறங்கி வருகிறது. இதை அறிந்த தாவீது 4000 பாடகர்களை தேவாலயத்தில் துதிக்கும்படியாக ஏற்படுத்தினான்.

கர்த்தரைப் போற்றுங்கள் :

கர்த்தர் சர்வ வல்லவர் பூமியனைத்திற்கும் ராஜா அவரை போற்றிப் பாடுங்கள் (சங்.47:7) கர்த்தர் பெரியவரும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார் (சங்.145:3). அவர் நம்மை படைத்தவர். பூமியும் அதின் குடிகளும் கர்த்தருடையவைகள். கர்த்தருடைய எல்லா வல்லமையான செயல்களுக்காகவும் மனிதன் கடவுளை துதிக்க வேண்டும். பகைவரிடமிருந்து மீட்கப்படுதல் (யாத்.15:11) அக்கறை காட்டி பாதுகாப்பு அளித்தல் (உபா.10:21) எளியவனுக்கு இரக்கம் காட்டுதல் (சங்.74:21) அக்கிரமங்களை மன்னித்து நோய்களை குணமாக்குதல் (சங்.103:3,4) முதலியவற்றிற்காகவும் நாம் அவரைப் போற்ற வேண்டும். கேருபீன்களும் கர்த்தரை பரிசுத்தர், பரிசுத்தர் என போற்றுகின்றனர் (ஏசா.6:3).

கிரியைகளினால் கர்த்தரைப் போற்றுங்கள் :

நம்முடைய வாழ்க்கையின் மூலமாக நாம் கர்த்தரை போற்ற வேண்டும். கிறிஸ்தவம் பேச்சில் அல்ல செயலில் வாழ்ந்து காட்டுவதாகும். இயேசு கிறிஸ்து முன் மாதிரியான வாழ்க்கையை வாழ்ந்து காட்டினார். எனவே இரக்கம், தயவு, மனத்தாழ்மை, சாந்தம், நீடிய பொறுமை, ஒருவரையொருவர் மன்னித்தல், எல்லாவற்றிற்கும் மேலாய் அன்புள்ளவர்களாய் வாழ்ந்து (கொலோ.3:12,13,14) இயேசுவை போற்றுவோம். வார்த்தையினாலும், கிரியைகளினாலும் அன்பு கூர்ந்து அவரைப் போற்றுவோம் (கொலோ.3:17) மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்களுக்கு முன்பாக பிரகாசிக்கக்கடவது (மத்.5:16).

இயேசுவை வாழ்க்கையில் காட்டுங்களேன்
பேச்சில் அல்ல செயலில் நல்ல - இயேசுவை
வாழ்வோராய் காட்டுங்களேன்

எல்லா சமயத்திலும் கர்த்தரைப் போற்றுங்கள் :

கர்த்தரை நான் எக்காளத்திலும் ஸ்தோத்தரிப்பேன் (சங்.34:1) தாவீது கர்த்தரை இன்ப துன்ப நேரத்திலும் ஸ்தோத்தரிக்க அழைக்கிறார். பவுல் சிறைச்சாலையில் இருக்கும்போதும் கர்த்தரைத் துதித்தார். மரியாளுக்கு தேவ தூதனால் செய்தி சொல்லப்பட்ட போது திருமணமாக தான் கர்ப்பவதியாய் என்றவுடன் ஆண்டவருக்கு தன்னை அர்ப்பணித்து கர்த்தரைப் போற்றுகின்றாள். (லூக்.1:46-55) யோபு தனக்குண்டான சொத்துக்கள், பிள்ளைகள் அனைத்தையும் இழந்தபோதும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான். (யோபு 1:21) பவுல் துன்பத்தில் துதித்ததால் விடுதலை பெற்றார். அவமானத்திலும் ஆண்டவரை மரியாள் துதித்ததால் ஆண்டவரின் தாய் என்று போற்றப்படும் பெண் ஆனார். யோபு இழப்பிலும் ஆண்டவரை துதித்ததால் இரட்டிப்பான நன்மை பெற்றுக் கொண்டார்.

நாமும் துதிப்போம் ஜெயம் பெறுவோம்.

அருள்திரு V. செல்வராஜ், K.T.C. நகர்

********** ********** **********

27.05.2007

பெந்தெகொஸ்தே திருநாள்

(ஆசியா ஞாயிறு)

பொருள் : தூய ஆவியானவர்

பாடங்கள் : யோவே.*2:18-32*; அப்.*2:1-13*; யோவா.*16:5-15*

வசனம் : *யோவான் 14:16*

முன்னுரை :

தூய ஆவியானவர் என்றென்றும் நம்முடன் இருந்து பெலவீனராகிய நமக்கு உதவி செய்து வாழ்வு தருபவர். அவரை விரும்பி வேண்டுவதும் அவருடன் நாம் வாழ முயற்சிப்பதும் தேவை. தூய ஆவியானவரை அறிந்து கொள்ளுதல் என்பது இயலாத காரியம். அவரை அநுபவிப்பது (Experience) அவர்தரும் கிருபையின் அனுபவம். எனவே ஒருவர் தூய ஆவியானவரை தான் விரும்புகிறபடி பயன்படுத்துவேன் என்று பேசுதல் அல்லது எண்ணம் கொள்ளுதல் தவறு. அதே வேளையில் தூய ஆவியானவர் அனைவருக்கும் உதவி செய்பவர். எடுத்துக்காட்டாக ஒரு தண்டனைக்குரிய குற்றவாளிக்காக மன்றாடும் வழக்கறிஞரைக் குறிக்கலாம்.

தூய ஆவியானவர் கடவுள் :

தேவன் ஆவியாய் இருக்கிறார். அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும். படைப்பின் தொடக்கத்திலேயே தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார். கடவுள் உருவமற்றவர் - ஆள்தத்துவமுள்ளவர். ஆவியானவர் - எங்கும் நிறைந்து வாழ்பவர். இயேசுகிறிஸ்து உலகில் வாழ்கிற போதும் தூயஆவியானவர் இருந்தார். அதற்கு முன்பும் இருந்தார். பின்பும் இருக்கிறார். அப்போஸ்தலர் நடபடிகளில் 2ம் அதிகாரத்தில் நாம் காண்பது தூய ஆவியானவரின் செயல்பாடு பெரும் அளவில் காணப்பட்டது. அது அப்போது அங்கிருந்த அனைவருக்கும் கிடைத்த மாபெரும் அனுபவம்.

தூய ஆவியானவர் புதிய ஏற்பாட்டில் ஒரு மனிதரைப் போல (mind) எண்ணம், (feeling) உணர்வு, (will) விருப்பம் ஆகிய குணாதிசயங்களையும் உடையவராக சித்தரிக்கப்படுகிறார்.

1) MIND : 1கொரி.12:11இன்படி இவைகளை அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து தமது சித்தத்தின்படி அவனவனுக்கு பகிர்ந்து கொடுக்கிறார்.

2) FEELING : 1கொரி.2:10-12இல் தேவனுடைய ஆவியேயன்றி ஒருவனும் தேவனுக்கு உரியவைகளை அறியமாட்டான்.

3) WILL : ரோ.15:22 ஆவியானவரின் அன்பினிமித்தம் எனவும் எபே.4:30 பரிசுத்தாவியைத் துக்கப்படுத்தாதீர்கள் என்பதைக் காண்கிறோம். மேலும் தூய ஆவியானவர் செயல்பாட்டை ஆள்தன்மையுடையவர் என்பதை இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களில் சுட்டிக் காண்பிப்பதை அறியலாம்.

தூய ஆவியானவர் நம்முடைய வாழ்வில் உடன் இருக்கும்படி அருளப்படுகிறார் என தலைப்பு வசனம் நமக்குத் தெரிவிக்கிறது. நம் வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் செயலாற்றுவதை சிந்திப்போம்.

1. பாவத்தைக் குறித்து உணர்த்தும் ஆவியானவர் :

தூய ஆவியானவர் தேற்றரளவாளன் உதவி செய்பவர். அப்படியிருக்க பாவத்தைக்குறித்து உணர்த்துவது உதவி செய்வதா என்ற கேள்வி பாவத்தில் வாழ்பவருக்கு அது உதவிசெய்வது எனத் தெரியாது. மாறாக அவருக்கு வேதனை கொடுப்பதாக இருக்கும். காரணம் பாவம் செய்பவன் ஆண்டவருக்கு எதிராக செயல்படுகிறான். தேவன் பாவத்தை வெறுக்கிறார். அதே வேளையில் பாவத்தைக் குறித்த உணர்வை ஆவியானவர் கொடுக்கிறார். பாவத்தையும் பாவத்தில் வாழ்வதையும் ஆவியானவர் விரும்புவதில்லை. ஏனெனில் அது வாழ்வல்ல - சாவு. எனவே பாவத்தைக் குறித்த உணர்வை தூய ஆவியானவர் செய்கிறார். பாவம் வாழ்வல்ல - பாவம் செய்கிற ஆத்துமா சாமும். பாவத்தின் சம்பளம் மரணம். நம் வாழ்வதற்கு உதவி செய்பவர் பரிசுத்த ஆவியானவர். எனவே பாவ உணர்வால் வாழ்விற்கு வழிநடத்துகிறார்.

2. நீதி நியாயத்தைக் குறித்த உணர்வு தருபவர் :

நல்லவை எவை? அதற்கு நேராக நடக்க மனிதருக்குத் தெரியவில்லையா? நியாயம்? நீதி? இவை குறித்து நமக்கு உணர்வு இல்லையா? இக்கேள்விகளுக்கு இருக்கிறதே என பலமாக பதில்வருகிறது. ஆம் மற்றவர்களைக் குறித்தும் அவர் செயல்கள் குறித்தும் பேசும்போது எத்தனை தெளிவுடன் பேசுகிறோம். நம்மைக் குறித்தோ நம் செயல்பாடுகளின் நீதி நியாயம் பற்றியோ நாம் ஒருபோதும் நினைத்துக்கூட பார்ப்பது கிடையாதே. அப்படியே நினைவு வந்தாலும் அது நான் செய்கின்ற அநியாயமே நியாயம் என்று அடித்துச் சொல்லுகின்ற போங்கு. ஆகாப் மன்னன் நாபோத்தின் நிலத்தை விரும்பியதும் யேசபேல் அரசி அத்தனை அநியாயமாய் அதை அபகரித்ததைக் குறித்தும் தங்களுக்குள்ளே நடைபெற்ற அநியாயத்தை - பயங்கரத்தை குறித்த சிந்தனை எழவில்லை. மாறாக தெய்வ ஆவியால் ஏவப்பட்ட எலியா வந்து ஆகாப்பிடம் அவன் செய்த அநியாயத்தை இறைவன் கண்டிருக்கிறார் என உணர்த்திய போது சலிப்புற்றான்.

இறைவன் நீதியையும் நியாயத்தையும் விரும்புகின்றார். அதனை நமக்குத் தெரியவைக்கும் ஆவியானவர் நமக்குத் துணை செய்கின்றார்.

3. நற்பணியாற்றவும் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாய் வாழவும் துணை செய்யும் ஆவியானவர் :

சேவை செய்தல் - இது படைப்பு அனைத்திலும் மனிதருக்குத்தான் கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற உயிரினங்களை மனிதன் சேவை செய்யப் பணிக்கிறான். படைப்பின் நோக்கத்தில் சேவையாகிய நற்பணி செய்தல் சிறந்த இடம் வகிக்கிறது. நற்பணி செய்வதால்தான் மனிதன் சிறந்த இடத்தைப் பிடிக்கிறான். நற்பணி செய்தலே கிறிஸ்துவுக்குச் சாட்சியாய் வாழ்வதற்கு அடிப்படையாகும்.

அப்போஸ்தலர் 3ஆம் அதிகாரத்தில் சீடர்களான பேதுரு யோவான் தேவாலய வாசலில் உட்கார்ந்து பிச்சை கேட்டுக் கொண்டிருந்த பிறவிச் சப்பாணியான மனிதனைக் கண்டு அவனைக் கைபிடித்துத் தூக்கி இயேசுவின் நாமத்தில் எழுந்து நடக்கச் செய்த அற்புதமான நற்செயல் கிறிஸ்துவுக்கு அவர்கள் மாபெரும் சாட்சிகளாய் விளங்கினர் என்பதைத் தெரிவிக்கிறது. தூய ஆவியானவர் நற்செயல் செய்யவும் சாட்சிகளாய் வாழும் வழிநடத்துகிறார்.

நமக்குத் துணையாக அருளப்பட்ட தெய்வ ஆவியானவர் நம் வாழ்வில் செயலாற்ற இடம் கொடுப்போம். நம் வாழ்வில் தூய ஆவியானவர் செயலாற்று வதை எண்ணிப் பார்த்து உணர்ந்து கொள்ள இந்நாள் உதவிசெய்வதாக.

அருள்திரு J.J. கிறிஸ்துதாஸ்
பாளையஞ்செட்டிகுளம்

01.06.2007
மாதத்தின் முதல் நாள்

பாடங்கள் : எரே.17:5-13

வசனம் : *"கர்த்தரை தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (எரே.17:5).*

முன்னுரை :

உலகம், மனிதன், பகைஞன் (சாத்தான்) நம்மை பார்த்து நீ நம்பியிருக்கிற உன் நம்பிக்கை என்ன? யாரை நீ நம்பியிருக்கிறாய் நீ தப்புவாயோ? என பலகேள்விகளைக் கேட்டு நம் நம்பிக்கையின் அஸ்திபாரத்தை அசைக்கிறது. யானையின் பலம் தும்பிக்கையில் என்றால் ஓர் கிறிஸ்தவனின் பெலன் கிறிஸ்துவில், கர்த்தரையே தன் நம்பிக்கையாக கொள்வதாகும்.

1. கர்த்தர் மேல் நம்பிக்கை :

எரே.17:5 கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். யூதாவை அரசாண்ட எசேக்கியா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் மேல் வைத்த நம்பிக்கையிலே அவனுக்கு பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப் போல் ஒருவனும் இருந்ததில்லை என வேத வசனம் சொல்லுகிறது. ரப்சாக்கே இஸ்ரவேலின் ராஜாவாகிய எசேக்கியாவிற்கு சொல்லி அனுப்பிய வார்த்தைகள் என்னவென்றால் நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன? யுத்தத்திற்கு மந்திராலோசனையும் வல்லமை உண்டென்று நீ சொல்லுகிறாயே அது வாய்ப்பேச்சேயன்றி வேறல்ல. நீ என்னை விரோதிக்கும்படி யார் மேல் நம்பிக்கை வைத்திருக்கிறாய்? நீங்கள் என்னிடத்தில் எங்கள் தேவனாகிய கர்த்தரையே நம்பியிருக்கிறோம் என்று சொல்லுவீர்களாகில் அசீரியா ராஜாவோடு சபதம்கூறு. இப்போதும் கர்த்தருடைய கட்டளையில்லாமல் இந்த ஸ்தலத்தை அழிக்க வந்தேனோ? இந்த தேசத்திற்கு விரோதமாய் போய் அதை அழித்துப்போடு என்று கர்த்தர் என்னோடு சொன்னாரே என்றான் ரப்சாக்கே. யூதா ஜனங்களை அவன் பயமுறுத்தி எசேக்கியா உங்களை வஞ்சியாதபடி பாருங்கள். கர்த்தர் நம்மை கட்டாயமாய் தப்புவிப்பார். இந்த நகரம் அசீரியாவின் ராஜாவின் கையில் ஒப்புக் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லி உங்களை கரத்தரை நம்பப்பண்ணுவான். அதற்கு இடங்கொடாதிருங்கள் என்றான். எசேக்கியா இரட்டு உடுத்திக்

கொண்டு அவன் அனுப்பிய நிருபத்தை ஆலயத்தில் வைத்து விண்ணப்பம் பண்ணினான். ஏசாயா தீர்க்கதரிசியினிடம் அரமனை விசாரிப்புக்காரனை அனுப்பி இன்றும் மீதியாயிருக்கிறவர்களுக்காக விண்ணப்பம் செய்வீராக என வேண்டிக் கொண்டான்.

கர்த்தர் அருளிய ஆசீர்வாதங்கள், கர்த்தர் அவனுக்கு பதில் கொடுத்தார்.

1. அசீரியா ராஜா இந்த நகரத்தில் பிரவேசிப்பதில்லை. தான் வந்த வழியே திரும்பிப்போவான் (2இராஜா.19:28-32).
2. யூதா வம்சத்தார் தப்பி மீந்திருக்கிறவர்கள் மறுபடியும் கீழே வேர்பற்றி மேலே கனி கொடுப்பார்கள் (2இராஜா.19:30).
3. இந்த வருடத்தில் தப்பி பயிராகிறதையும், இரண்டாம் வருஷத்திலே தானாய் விளைகிறதையும் சாப்பிடுவீர்கள். மூன்றாம் வருஷத்திலே விதைத்து அறுத்து திராட்சத் தோட்டங்களை நாட்டி அவைகளின் கனிகளை புசிப்பார்கள் (2ராஜா.19:29).
4. அன்று இராத்தியில் சம்பவித்தது என்னவென்றால் கர்த்தருடைய தூதன் புறப்பட்டு அசீரியரின் பாளையத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தான். அதிகாலமே எழுந்திருக்கும்போது இதோ அவர்கள் எல்லாரும் செத்த பிரேதங்களாய்க் கிடந்தார்கள் (2இராஜா.19:35).
5. அசீரியா இராஜாவாகிய சனகெரிப் பிரயாணப்பட்டு நினிவேக்கு திரும்பி போய் நிஸ்ரோகின் கோயிலே பார்த்துக் கொள்ளும்போது அவனுடைய குமாரராகிய அத்ரம்யெக்கும், சரேத்சேரும் அவனை பட்டயத்தால் வெட்டி போட்டார்கள். (2இராஜா.19:37).
6. எசேக்கியா வியாதிபட்டபோது கர்த்தரை நம்பி ஜெபித்தான். கர்த்தர் அவன் கண்ணீரை கண்டு சுமாக்கி ஆயுசுநாட்களை 15 வருடம் கூட்டிக் கொடுத்தார் (2ராஜா.20:5,6).

முடிவுரை :

உன் நம்பிக்கை கர்த்தர் மேல் இருக்கும்படி இன்றைய தினம் அவைகளை உனக்குத் தெரியப்படுத்துகிறேன். கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போல் இருப்பார்கள். ஆமென். அல்லேலூயா!

அருள்திரு S. ஜாண் செல்லையா
சமாதானபுரம்

03.06.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 1ஆம் ஞாயிறு
(திரித்துவ திருநாள்)

பொருள் : **திரியேகர்**

பாடங்கள் : **ஆதி.18:1-15; 1யோவா.5:1-13; மத்.3:13-17**

பாடங்கள் : *யோவான் 14:23*

முன்னுரை :

யெகோவா சாட்சிகள் என்ற இயக்கத்தினர் கிறிஸ்தவ விசுவாசிகளைச் சந்தித்து யெகோவாதான் கடவுள். இயேசு அவரைவிட கீழானவர், மீட்பிற்கு அவர் அவசியமில்லை என்று கூறி தங்கள் இயக்கத்துக்கு ஆட்களைச் சேர்க்க பிரயாசப்படுவர். நாம் பதிலுக்கு "பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானங் கொடுங்கள்" (மத்.28:19). "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக" (2கொரி.13:14), பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்" (1யோவா.5:7) என்ற வசனங்களைக் கூறினால் விஷயமறிந்தவரிடம் பேச முடியாது என்று இடத்தை காலி செய்துவிடுவர். புரட்டு போதனைகள் மலிவாக காணப்படும் இக்கால சூழ்நிலையில் வசிக்கும் நாம் நமது கோட்பாடுகளைக் குறித்த தெளிவுடன் வாழ்வது அவசியம்.

திரித்துவ விளக்கத்திற்கான *சில* உதாரணங்கள் :

அ) முக்கோனம் ஒன்றுதான். ஆனால் மூன்று பக்கங்கள் சேர்ந்தால் தான் முக்கோணம். ஒரு பகுதியின் கோடு இல்லாவிட்டால் அது முக்கோணமாயிருக்காது.

ஆ) புத்தகம் ஒன்று. ஆனால் அதன் உயரம், அகலம், நீளம் என மூன்று பக்கங்களாகிறது. இதில் ஏதாவது ஒன்று இல்லை என்றால் அது ஒரு புத்தகமாயிருக்க முடியாது.

இ) சூரிய வெளிச்சம் என்பது ஒன்று. ஆனால் அதிலிருந்து ஒளிக்கதிர், வெப்பக்கதிர், ரசாயணக் கதிர் என மூன்று வகையான கதிர்கள் வருகின்றன. இம்மூன்றில் ஒன்று இல்லை எனில் அது சூரிய வெளிச்சமாயிராது.

மேற்கண்ட உருவகங்கள் முழுமையான விளக்கங்களாக இல்லாவிட்டாலும், ஓரளவிற்கு திரித்துவத்தைப் பற்றிப் புரிய நமக்கு உதவிசெய்யும் இருப்பினும் இயேசு கிறிஸ்துவின் வாழ்வினடிப்படையிலும்

அப்போஸ்தலர்களின் அனுபவத்தினடிப்படையிலும் திரித்துவ தெய்வத்தைப் புரிந்து கொள்வது மிக அவசியம்.

1. இயேசுவின் வாழ்வில் திரியேகர் :

இயேசுவின் ஞானஸ்நானத்தில் ஆவியானவர் புறாவைப்போல் அவர்மீது அமர, பிதா "இவர் என்னுடைய நேசகுமாரன்" என்று கூறுவதைப் பார்க்கிறோம். மனுக்குலத்தின் மாபெரும் மீட்பின் திட்டத்திற்காக அவர் தன்னை அர்ப்பணித்த ஞானஸ்நான நிகழ்ச்சியில் திரியேகரின் செயலாற்றலைக் காணலாம். பிற்பாடு நாசரேத்தூரில் தனது முதல் அருளுரையில் "கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்" (லூக்.4:18) என்று கூறி தனது ஊழியத்தை தொடங்கியபோதும் திரியேகர் செயலாற்றுவதை காணலாம். நாசரேத் அறிக்கை மனுக்குலத்தின் மாபெரும் மீட்பின் திட்டத்தை வெளிப்படுத்துகிறது. ஆக இயேசுவின் வாழ்வில் அவர் மனுக்குல மீட்பிற்காக தன்னை அர்ப்பணித்த வரலாற்றில், திரியேகர் செயலாற்றுகிறார் (ஞானஸ்நானம் & நாசரேத் அறிக்கை) எனவேதான் இதே பணிக்காக அர்ப்பணிக்கும் ஒவ்வொரு மனிதரும், இயேசுவின் அடியாராய் இணையும் ஒவ்வொருவரும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற வேண்டுமென்ற கட்டளை திருமறையில் கொடுக்கப்படுகிறது. (மத்.28:19) ஆக இயேசுவின் வாழ்வில் செயல்படும் திரியேகர் அவரவர் வாழும் சூழ்நிலையில் தனிநபர் சமூக விடுதலைக்கான சவாலையும், அதை செய்து நிறைவேற்றுவதற்காக அழைப்பையும் நமக்குத் தருகிறார்.

2. அப்போஸ்தலரின் அனுபவத்தில் திரியேகர் :

அ) பவுலடியாரின் அனுபவத்தில்

யூத மதத்தில் வைராக்கியமுள்ள குடும்பத்தில் பிறந்த அவர் எருசலேமில் கல்வி கற்று ஒரே தெய்வமான யெகோவா மீது பக்தி வைராக்கியம் கொண்டவராய் வாழ்ந்தார். அதின் விளைவாகத்தான் இயேசுவே வழி என்றவர்களைத் துன்புறுத்தினார். ஆனால் தமஸ்குவுக்கு செல்லும் வழியில், சிலுவையிலறையப்பட்டு உயிர்த்தெழுந்த இயேசுவை அவர் சந்தித்தார். அதன்பின்னர் தன் வாழ்விலும், தன் நிருபத்திலும் தன் முன்னோரால் அறியப்பட்ட இறைவனை அல்ல, இயேசுவின் மூலமாக அறியப்பட்ட இறைவனைப் பற்றியே பேசுகின்றார். இயேசுவைக் குறிப்பிடாமல் அவரால் இறைவனைக் குறிப்பிட இயலவில்லை. மற்றொரு வார்த்தையில் கூற வேண்டுமானால் இயேசுகிறிஸ்து மூலமாக அவர் இறைவனின் தன்மையை ஆழமாக புரிந்து கொண்டார். நாமும் இயேசுவின் போதனைகள் செயல் மூலமாக இறைவனின் சிந்தையைப் புரிந்து கொள்ள அழைக்கப்படுகிறோம் (பிலி.2:5-11).

ஆ) யோவானின் அனுபவத்தில்

பிதா செய்வதை மட்டுமே இயேசு இந்த உலகத்தில் செய்வார் (யோவா.5:19) என்பதும், பிதாவும், குமாரனும் ஒன்றாயிருப்பதுபோல அவரை நம்பும் விசுவாசிகளும் ஒன்றாயிருக்க வேண்டும் (யோவா.17:21,22) என்பதும் யோவானின் திரித்துவ அனுபவத்தில் முக்கியமானவைகள். இவைகளை நிறைவேற்ற தேற்றரவாளனாகிய ஆவியானவர் நம்மோடு எப்பொழுதும் வாசம் செய்து நம்மை பலப்படுத்துவார் என்பதும் யோவானில் கூறப்படும் திரித்துவ அனுபவமாகும் (யோவா.14:26; 16:13).

திரியேகரின் அறைகூவல் :

1. அவரவர் வாழும் சூழ்நிலையில் தனிநபர், சமுதாய விடுதலை வாழ்விற்காக செயல்பட அழைப்பு

2. இயேசுவின் சிந்தனையான தாழ்மையைத் தரித்து வாழ அழைப்பு.

3. இயேசுவின் அடியவர்கள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரியேக தெய்வத்தின் பிரிக்க முடியாத உறவு போன்று ஒற்றுமையுடனும், நல்லுறவுடனும் வாழ அழைப்பு

இந்த அறைகூவல்களை நிறைவேற்ற நம் ஒவ்வொருவருக்கும் புதுபெலனை திரியேக தெய்வம் தமது கிருபையால் அருளிச் செய்வாராக.

அருள்திரு J.P.M. வசந்தகுமார்
மகாராஜநகர்

********* ********* *********

10.06.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 2ஆம் ஞாயிறு

(மாணவர் ஞாயிறு - திரித்துவ 1)

பொருள் : **கர்த்தருக்கு பயப்படுதல் ஞானம்**

பாடங்கள் : **நீதி.3:1-18; யாக்.1:5-8,16-18; மத்.18:16**

வசனம் : *யாக்கோபு 1:5*

முன்னுரை :

நமது பல நிகழ்ச்சிகளின் மையமாக சிறுபிள்ளைகள் இருக்கிறார்கள்.

(உ.ம்) a) பிள்ளைகளின் ஞானஸ்நானம் b) பிறந்தநாள் கொண்டாட்டம்

பிள்ளைகள் இறைவனால் நமக்கு கொடுக்கப்படுகின்ற பரிசு என்பது விவிலியத்தின் கூற்று. நமது நாட்டின் ஜனாதிபதி டாக்டர் அப்துல்கலாம் எங்கு சென்றாலும், பிள்ளைகளை சந்தித்து உரையாடுவது அவருக்கு பிரியமான ஒன்றாகும். ஏனென்றால், இன்றைய பிள்ளைகளை வைத்துதான்

நம் நாட்டின் எதிர்காலம் அமைந்திருக்கிறது. பிள்ளைகளை குறித்து கிறிஸ்துவின் சிந்தை என்ன என்பதை சிந்திப்போம்.

சிறுவர்கள் பெரியவர்களுக்கு முன் உதாரணம் (18:1-3)

(Chidren are models to the adults)

நாம் சிறுபிள்ளைகளுக்கு பல பெரியவர்களை முன் உதாரணமாக கூறி, அவர்களை போல் வர வேண்டும் என்று சொல்வதுண்டு. ஆனால், இயேசு இங்கே சொல்வது என்னவெனில் ஒரு சிறுபிள்ளையே நடுவே நிறுத்தி, நீங்கள் சிறுபிள்ளைகளை போல் மாறவேண்டும் என்று கூறுகிறார். அப்பொழுது மட்டுமே, பரலோக ராஜ்யத்தில் செல்ல முடியும், அப்படியென்றால் பரலோக ராஜ்யத்தில் இருக்கின்ற அனைவரும் சிறுபிள்ளைகளைப் போல் இருப்பார்கள் என்று சொன்னால் தவறில்லை என்று நினைக்கிறேன். பரலோக ராஜ்யத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்ற சீடர்களின் கேள்விக்கு சொல்லப்பட்ட பதில்தான் மேற்கூறியவை. நாம் சிறுபிள்ளைகளை போல் மாறினால் நமது வீடு குட்டி பரலோகம் தான்.

சிறுவர்களுக்கு இடறல் உண்டாக்குகிறவர்களுக்கு தண்டனை (18:6)

சிறுபிள்ளைகள் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைப்பதற்கு தடையாக இருப்பவர்களுக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டும் என்று இயேசு சொல்கிறார். சிறுவர்கள் தங்கள் காதுகளால் கேட்கிற வார்த்தையின் மூலமாகவும், கண்களினால் காண்கிற காட்சிகளின் மூலமாகவும் பல காரியங்களை கற்றுக் கொள்கிறார்கள். பெற்றோர், பெரியவர்களின் கோள் வார்த்தை, தவறான செயல்கள், கணவன் மனைவி உறவில் விரிசல், ஒழுக்கமற்ற வாழ்வு போன்றவைகள் பிள்ளைகள் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைப்பதற்கு தடையாக இருக்கிறது. இன்றைய காலகட்டத்தில் பிள்ளைகள் கிறிஸ்துவினிடம் வருவதற்கு தடையாக இருக்கின்ற மிகபெரிய சாதனம் என்னவென்றால் தொலைகாட்சி பெட்டி. தொலைகாட்சி பெட்டி பிள்ளைகளின் நேரத்தை எடுக்கிறது, பிள்ளைகள் ஆலயம் வருவதற்கும், பாடங்களை படிப்பதற்கும் தடையாக இருக்கிறது. மேலும், பிள்ளைகளின் சிந்தனையை கெடுக்கிறது, பிள்ளைகள் ஓடி, ஆடி விளையாடுவதற்கு பதிலாக T.V. பெட்டிக்கு முன்னால் இருப்பதனால், சரீரத்திற்கு கிடைக்க வேண்டிய உடற்பயிற்சி கிடைக்காமல் போகிறது. அன்பு பெற்றோரே, பிள்ளைகளே தொலைகாட்சி பெட்டியை சரியான முறையில் பயன்படுத்த கற்றுக் கொள்ளுங்கள்.

முடிவுரை :

பிள்ளைகள் இறைவனால் குடும்பத்திற்கு, திருச்சபைக்கு, நாட்டிற்கு கொடுக்கப்பட்டிருக்கும் பரிசு. பிள்ளைகளைப் போல் மாறுவோம். பிள்ளைகளுக்கு இடறல் இல்லாத வாழ்க்கை வாழ்வோம்.

அருள்திரு K. மாசில்லாமணி, வள்ளியூர்

11.06.2007

புனிதர் பர்னபா திருநாள்

பாடங்கள் : யோபு 29:7-16; அப்.11:19-26; மத்.5:13-16

முன்னுரை :

எருசலேம் என்றால் சமாதானத்தின் நகரம் என்று பொருள். சங்.122:6இல் எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக் கொள்ளுங்கள் என்று தாவீது பாடுகிறதையும், லூக்.19:42இல் உனக்கு கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும் என்று இயேசு அங்கலாய்ப்போடு கூறிய வார்த்தையையும் படிக்கும்போது, சமாதானத்தின் நகரத்திற்குள் சமதானம் இல்லை என்பது தெளிவான உண்மை. பெயருக்கும் வாழ்க்கைக்கும் சம்மந்தமில்லை.

பலர் பெயருக்கும் வாழ்வுக்கும் சம்மந்தம் இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் பர்னபாவைப் பொருத்தமட்டில் அப்படியல்ல. அவர் தாங்கியிருந்த பெயருக்கு ஏற்றார் போல் வாழ்ந்து காட்டினார் என்பதை அவரது வாழ்விலிருந்து நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. நாமும் பெயருக்கேற்ற (கிறிஸ்தவன்/ள்) வாழ்க்கை வாழ பர்னபாவின் வாழ்வு நம்மை உந்தட்டும். பர்னபா என்றால் ஆறுதலின் மகன் என்று பொருள். இவர் தனது வாழ்வில் யாருக்கெல்லாம் ஆறுதலாய் வாழ்ந்தார் என்பதை சிந்திப்போம்.

1. **அங்கிகரிக்கப்படாதவனுக்கு ஆறுதல் (அப்.9:27)**

சவுல் கர்த்தருடைய சீஷரை பயமுறுத்தி கொலை செய்ய எத்தனித்தவன். கிறிஸ்து மார்க்கத்தாரை கட்டி எருசலேமுக்கு கொண்டு வர உரிமை பெற்றவன். பரிசுத்தவான்கள் அநேகரை சிறைச்சாலைகளில் அடைத்தவன், அவர்கள் கொலை செய்யப்படுகையில் சம்மதம் தெரிவித்தவன். அநேக முறை அவர்களைத் தண்டித்தவன், தேவதூஷணஞ் சொல்ல கட்டாயப்படுத்தினவன், பரிசுத்தவான்கள் பேரில் மூர்க்க வெறி கொண்டு அவர்களை துன்பப்படுத்தினவன் (அப்.26:10,11). அப்படிப்பட்டவனை மத்தியான வேளையில் இயேசு சந்திக்கின்றார் சவுல் ஆண்டவருக்கென தன் வாழ்வை அர்ப்பணித்து விடுகின்றார். மனந்திருந்திய அவர் மற்ற சீஷர்களுடன் சேர்ந்து ஊழியம் செய்ய விரும்பினார். ஆனால் மற்ற சீடர்கள் அவரை அங்கீகரிக்க வில்லை. பவுலை தங்கள் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ள விரும்பவில்லை. மனந்திருந்தியவனுக்கு இந்த சோதனையா! என்ற வருத்தம் பவுலுக்கு நிச்சயம் வந்திருக்கும். இப்படி சீடர்களால் அங்கீகரிக்கப்படாதவனை பர்னபா பார்க்கின்றார். பர்னபா ஆறுதலின் மகனல்லவா! எனவே அங்கீகரிக்கப்படாத, புறக்கணிக்கப்பட்ட பவுலுக்கு பர்னபா ஆறுதலாக செயல்படுகிறார். எல்லாரும் பயந்த போது பர்னபா பவுலைச் சேர்த்துக் கொண்டு, மற்ற அப்போஸ்தலருக்கும் அவரை அறிமுகம் செய்து அவர்கள் பவுலை ஏற்றுக் கொள்ளச் செய்தார்.

2. பசித்திருப்போருக்கு ஆறுதல் (அப்.11:30)

உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று அகபு தீர்க்கதரிசி சொன்னபடியே கிலவுதிய ராயனுடைய நாட்களிலே உண்டாயிற்று. எருசலேமில் குடியிருந்தவர்களுக்கு சாப்பிட உணவில்லை. எனவே அந்தியோகியாவிலிருந்து சீடர்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக பணம் சேகரித்து பர்னபா, சவுல் என்பவர்களுடைய கையிலே கொடுத்து மூப்பரிடத்திற்கு அனுப்பினார்கள். பர்னபா எருசலேமில் பசித்திருந்த மக்களுக்கு ஆறுதலாக செயல்பட்டார். பர்னபா எப்போதும் கொடுக்கும் அனுபவம் உடையவராக இருந்தார் (அப்.4:37).பசித்திருப்போருக்கு வார்த்தை ஆறுதல் கொண்டு வராது. ஆனால் அப்பம் ஆறுதல் கொடுக்கும். பர்னபா சூழ்நிலைக்கு ஏற்றார் போல் செயல்பட்டவர். கொடுக்கும் அனுபவமுடைய அவர் அநேகருடைய பசிக்கு ஆறுதலாக இருந்ததினால் அப்போஸ்தலராலே ஆறுதலின் மகன் என்றழைக்கப்பட்டார் (அப்.4:36).

3. அற்பமாயெண்ணப்பட்டவர்களுக்கு ஆறுதல் (அப்.15:25,26&31)

அந்தியோகியாவுக்கு யூதேயாவிலிருந்து வந்த சிலர் இரட்சிப்பு என்பது விருத்தசேதனத்தினால் வருகிறது என்று போதகம் பண்ணினார்கள். பர்னபாவுக்கும், பவுலுக்கும் இதில் உடன்பாடு இல்லாத நிலையில் அவர்களோடு வாக்குவாதமும், தர்க்கமும் பண்ணினார்கள். இது விஷயமாக எருசலேம் சங்கம் கூடியது. கிருபையினால் புறஜாதியாருக்கு வரும் இரட்சிப்பை ஏற்றுக் கொள்ள முடியாத மனநிலையில் இருந்த பரிசேய சமய விசுவாசிகளுக்கு, பேதுரு தன்னைக் கொண்டு புறஜாதிகளுக்கு தேவன் செய்தவைகளை விவரித்துச் சொல்ல (அப்.15:7-11), பர்னபா, பவுலும் தங்களைக் கொண்டு தேவன் புறஜாதிகளுக்கு செய்ததை விவரித்துச் சொல்ல (அப்.15:22) மற்றும் யாக்கோபு அதற்கு ஆதாரமான சிமியோன், தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகளை விவரித்துச் சொல்ல முடிவில் நிருபம் ஒன்று எழுதப்பட்டு அது பர்னபா, பவுல், யூதா, சீலா ஆகியோர் மூலமாக அந்தியோகியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த நிருபத்தை அந்தியோகியாவிலுள்ள புறஜாதி விசுவாசிகள் வாசித்து ஆறுதலடைந்தார்கள். அற்பமாயெண்ணப்பட்டவர்களும் தேவ கிருபையால் இரட்சிக்கப்பட முடியும், இரட்சிப்பு அவர்களுக்கும் உரியது என்பதை எருசலேம் சங்கத்தில் ஆணித்தரமாக எடுத்துரைத்தவர்களில் பர்னபாவும் ஒருவர். அவரது முயற்சியால் அற்பமாயெண்ணப்பட்டவர்களும் ஆறுதல் அடைந்தார்கள்.

நமது வாழ்வில் நாம் சந்திக்கும் பல்வேறு மனநிலை உடைய, தேவையுள்ள மக்களுக்கு ஆறுதலாய் செயல்பட முடிகிறதா?

அருள்திரு A. பீற்றர் தேவதாஸ், வள்ளியம்மைபுரம்

17.06.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 3ஆம் ஞாயிறு
(திரித்துவ 2)

பொருள் : **ஆவிக்குள்ளான வாழ்வு**

பாடங்கள் : யாத்.13:17-22; ரோ.8:1-17; யோவா.16:12-15

வசனம் : *1கொரிந்தியர் 2:15*

இன்றையக் காலகட்டத்தில் ஓசையெவுப்பி ஜெபம் செய்தல், "அல்லேலூயா" அல்லது "Praise the Lord" என்கின்ற வார்த்தைகளைப் பயன்படுத்துதல் மட்டும்தான் ஆவிக்குள்ளான் வாழ்வு அல்லது ஆவிக்குள்ளான வாழ்வின் அடையாளங்கள் என்று தவறாக எண்ணிக் கொள்கின்றோம். ஆவிக்குள்ளான வாழ்வு என்றால் என்ன?

1. **ஆவிக்குள்ளான வாழ்வு என்பது விடுதலையின் வாழ்வு (A life freed from the vicious circle of sin & death) :**

"கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே" (ரோ.8:2).

புவி ஈர்ப்பு விசை உயரச் செல்லும் எந்த ஒரு பொருளையும் தாழ இழுத்து விடுகிறது. ஆனால் ஒரு பறவை பறந்து புவிஈர்ப்பு விசையை மேற்கொண்டு செல்ல முடிகிறது. இதற்குக் காரணம் அதன் உடல் வடிவமைப்பு மட்டுமல்ல அதற்குள் இருக்கும் ஜீவன். எந்த இடத்தில் அதன் உயிர் பிரியுமோ அதே இடத்தில் அது புவி ஈர்ப்பு விசையின் ஆளுகைக்குள் வந்து விடும். இதைப்போல் தான் பாவம் மரணம் என்னும் பிரமாணங்கள் விசைகள் மனிதனை ஈர்க்கும்போது "ஜீவன்" என்னும் மற்றொரு பிரமாணம் அதை மேற்கொள்ள அல்லது அந்தப் பிரமாணத்திற்கு அப்பாற்பட்டு விடுதலையோடு செயல்பட உதவுகிறது.

இதைத்தான் 1யோவா.5:12 குறிப்பிடுகின்றது "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்". ஆவிக்குள்ளான வாழ்வு என்பது குமாரனாகிய ஜீவனை பெற்றிருப்பதால் பெற்றுக் கொள்ளும் விடுதலையின் வாழ்வு. பறவை மிக உயரத்திலும் பறக்கலாம், தாழவும் பறக்கலாம். ஆனால் அது புவிஈர்ப்பு விசைக்கு அடிமைப்பட்டதல்ல. ஆவிக்குள்ளான மனிதனும் அப்படியே ஆவிக்குரிய உயர்ந்த உன்னத அனுபவங்களையும், உடையவராகவும் இருக்கலாம், அல்லது பகட்டற்ற எளிமையான, மற்றவர்களால் மிகவும் போற்றப்படாத தாழ்மையான அனுபவம் உடையவராயும் இருக்கலாம்.

ஆனால் அவர் ஈர்ப்பு விசைகளுக்கு அடிமைப்பட்டவரல்ல. "ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள் அப்பொழுது மாம்ச இச்சைகளை நிறைவேற்றாதிருப்பீர்கள் (கலா.5:16).

2. ஆவிக்குள்ளான வாழ்வு என்பது ஆழ்ந்த - தீர்க்கமான நோக்குடை வாழ்வு
(A life with deep insight)

"ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்" (1கொரி.2:15). ஆவிக்குரிய மனிதன் அவசரப்படுபவன் அல்ல, மற்றவர்கள் மீது உடனடி தீர்ப்பு கூறுபவனுமல்ல. எந்த ஒரு சூழ்நிலையையும் தெய்வீக கண்ணோட்டத்தோடு காண்பவன் மாற்.8:33இல் இயேசு பேதுருவை கடிந்து கொள்ளும்போது இதைத்தான் சுட்டிக் காட்டுகிறார். நீ தேவனுடைய கண்ணோட்டத்தில் காணாமல், மனித கண்ணோட்டத்தில் காண்கிறாய் என்பது தான் அதன்பொருள். ஆவிக்குள்ளான மனிதன் எதையும் தேவனுடைய கண்ணோட்டத்தில் காண்பவன். It is a purposeful life.

3. ஆவிக்குள்ளான வாழ்வு என்பது கடவுளையே மகிமைபடுத்தும் வாழ்வு : (A life that bring honour to God)

"அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" (யோவா.16:14). பரிசுத்த ஆவியானவரின் பணி கிறிஸ்துவை அறிவிப்பது மகிமைப்படுத்துவது. ஆவிக்குள்ளான மனிதனும் அதையே செய்வான். இன்று வருந்தத்தக்க செய்தி என்னவெனில் ஆவிக்குரிய கூட்டங்கள், T.V. நிகழ்ச்சிகளில் ஊழியர்களை அறிமுகப்படுத்துவதிலும் அவர்களை புகழ்வதிலுமே நேரம் போய்விடுகிறது. ஆவிக்குள்ளானவர்கள் மனிதர்களை அல்ல தேவனையே வார்த்தையாலும், நடக்கையாலும் புகழுவார்கள்.

4. ஆவிக்குள்ளான வாழ்வு என்பது கடவுளையே பிரியப்படுத்தும் வாழ்வு : (A life that pleases God)

"மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்கு பிரியமாயிருக்க மாட்டார்கள்" (ரோ.8:8). ஆவிக்குரிய வாழ்வு தேவனை பிரியப்படுத்தும் வாழ்வு 2கொரி.5:9இல் பவுல் "அவருக்கு பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்" என்று குறிப்பிடுகின்றார்.

தாவீது "உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்கு போதித்தருளும், நீரே என் தேவன்" (சங்.143:10) என்று கூறுகிறார். மோசே "எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள் மேல் இருப்பதாக" (சங்.90:17) என்று ஜெபிக்கிறார். பேதுருவும் யோவானும் "தேவனுக்கு செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்கு செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக

நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்து பாருங்கள்" (அப்.4:19) என்று கூறுகின்றார்கள். இவர்கள் அனைவரது நோக்கமும் ஒன்றுதான். தேவனுக்கு பிரியமானதை மட்டுமே செய்வது. ஆவிக்குள்ளானவர்கள் அனைவரும் இதைத்தான் சிரமேற்கொண்டு செய்வார்கள்.

முடிவுரை :

"மாம்சத்துக்கும், ஆவிக்குள்ளான வாழ்வுக்கும் நடுவில் வேறொரு வாழ்வு வாழ முடியாது. அப்படிப்பட்டவர்களை தேவன் வாந்தி பண்ணி போடுவேன் என்று சொல்கின்றார் (வெளி.3:16). இன்று நீங்கள் ஆவிக்குள்ளானவர்களா? அல்லது மாம்சத்துக்குரியவர்களா?

அருள்திரு ARGST பர்னபாஸ்
மிலிட்டரி லைன்ஸ்

********** ********** **********

24.06.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 4ஆம் ஞாயிறு
(திரித்துவ 3)

பொருள் : **பாடுகளின் மூலம் சாட்சி**

பாடங்கள் : எரே.15:10-21; 1பேது.4:12-19; யோவா.18:1-10

வசனம் : *1பேதுரு 4:13*

முன்னுரை :

கிறிஸ்தவம் பாடுகளின் மூலம் வளர்ந்தது. கிறிஸ்து தன் பரிசுத்தமான வாழ்வின் மூலம் மக்களுக்காக தன் இன்னுயிரை ஈந்தார். கர்த்தரோ அவரை உயிர்பெறச் செய்து இன்று அகில உலகத்திலும் அவரை மகிமைப்படுத்தினார். இக்கருத்தினைத்தான் பரி.பேதுரு கிறிஸ்துவுக்கும் கிறிஸ்துவைத் தெய்வமாக அதாவது தங்கள் இரட்சகராக ஏற்றுக் கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் கிடைக்கும் மேன்மையை இவ்வசனத்தில் விளக்குகிறார்.

நாம் பாடுபடுவது இரண்டு வகைகளில் 1) நமக்காக 2) கிறிஸ்துவுக்காக. நன்மை செய்யும்போது ஏற்படும் பாடுகளும் உண்டு. இயேசு இவ்வுலகத்தாருக்கு நன்மை செய்யவே மானிடரானார். அவருக்குக் கிடைத்த பாடு சிலுவை மரம். இதனை பேதுரு குறிப்பிடுவது இங்கு கவனிக்கத்தக்கது.

கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் நாம் பாக்கியவான்கள் (1பேது.4:14).

பாடுபடுகிற மக்களுக்கு திருமறை கூறும் ஆறுதலான கருத்துக்கள் பல உண்டு; அவைகளைத் தியானிப்போம்.

1. கர்த்தரின் தயவு : (சங்.30:5)

கர்த்தருடைய கோபம் ஒரு நிமிஷம்;
தயவோ நீடிய வாழ்வு
சாயங்காலத்தில் அழுகை தங்கும்;
விடியற் காலத்தில் களிப்புண்டாகும்

ஆம் இது முற்றிலும் உண்மை. தானியேலுக்குரிய பாடு சிங்கக் கெபி ஆனால் தேவ தயவோ - தானியேலோவென்றால் இராஜாவின் கொலுமண்டபத்தில் இருந்தான். தானி.2:49. மேலும் தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது (தானி.6:28).

2. தேவ விடுதலை : (சங்.34:19,20).

நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும். கர்த்தர் அவைகள் எல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.

(எ.கா.) யோபு : ஆரம்பத்தில் பல துன்பங்கள். ஆனால் இறுதியில் இரட்டிப்பான நன்மை (யோபு 42:12).

3. நம்மோடிருந்து காக்கும் கர்த்தர் : (ஏசா.43:1-4).

நாம் கர்த்தருக்கு அருமையானவர்கள். ஆகவே பாடுகள் நமக்கு ஏற்படும்போது நம்மை ஆறுதல்படுத்துகிறார்.

பயப்படாதே உன்னை மீட்டுக் கொண்டேன்; உன்னை பெயர் சொல்லி அழைத்தேன்.

i) நீ தண்ணீர்களை கடக்கும்போது நான் உன்னுடனே இருப்பேன்; தண்ணீர் உன் மீது புரளுவதில்லை.

ii) நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய், நீ என் பார்வைக்கு அருமையானவள்; ஆகையால் கனம் பெற்றாய். ஆதலால் நான் உன்னை சிநேகித்தேன். ஆகவே பயப்படாதே நான் உன்னோடே இருக்கிறேன்.

(எ.கா.) இஸ்ரவேலர்கள் - செங்கடல்
யோர்தான் - நடந்தது

4. சகலமும் நன்மைக்கே : (ரோ.8:28)

தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கிறது என்று அறிந்திருக்கிறோம். இதனைத்தான் பரி.பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதும் போது தேவன் அருளிய் சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்குத் தோத்திரம் (2கொரி.9:17).

5. **தேவ கிருபை : (2கொரி.12:9)**

கர்த்தர் கூறும் ஆறுதலான வார்த்தை. என் கிருபை உனக்குப் போதும். உன் பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும். இதனால் பக்தன் கூறும் பதில் 2கொரி.12:9இன் பின்பகுதியில் என் பெலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைப் பாராட்டுவேன்.

6. **கிறிஸ்து பாடுகளோடு ஐக்கியம் : (1பேது.4:13)**

அருளுரை வசனம் இது. பாடுகள் நமக்கு ஏற்படும்போது துவண்டுப்போகக் கூடாது. கிறிஸ்துவின் பாடுகளில் நாம் பங்குகொண்டு பாடுபடும்போது நாம் களிகூர்ந்து மகிமைப்படும் வேளையும் வரும்.

7. **பாடும் பாக்கியமும் : (1பேது.4:14)**

நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள் என்ற மாபெரும் சிலாக்கியம் பெறுவீர்கள். இயேசுவின் சீடர்கள் யாவரும் மாபெரும் பாடுபட்டார்கள். ஆனால் தற்போது பிறரை நியாயந்தீர்க்கும் மாபெரும் ஆசீர்வாதம் அதாவது பாடுகளின் மூலம் பாக்கியம் பெற்றுள்ளனர்.

8. **பாடுகளின் மூலம் மீட்பு பெற்றவர்கள் : (வெளி.7:13-17)**

பரலோக காட்சியை யோவான் தன் தரிசனத்தில் கண்டு எழுதுகிறார். அந்தக் காட்சியில் எண்ணிகைக்கு அடங்காத பரிசுத்தவான்கள் காணப்படுகிறார்கள். அந்த சமயத்தில் மூப்பர்களில் ஒருவன் யோவானிடம் கேட்கும் கேள்வியும் அதற்குரிய விடையும் நாம் கவனிப்பது நமக்கு மிகவும் தேவையான செய்தியாகும்.

கேள்வி : வெள்ளை அங்கியைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்?

பதில் : இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள். தங்கள் அங்கிகளை ஆட்டுக் குட்டியானவருடைய இரத்தத்தில் தோய்த்து வெளுத்தவர்கள்.

ஆகையால் இவர்கள் தங்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இரவும் பகலும் கர்த்தருடைய ஆலயத்தில் அவரோடுகூட இருக்கிறார்கள்; கர்த்தர் இவர்களோடேகூட வாசம் பண்ணுவார். இனி இவர்கள் பசியோ, தாகமோ அடையார்கள். வெயில், உஷ்ணம் இவர்கள் மேல் படாது. தேவன் இவர்கள் கண்ணீரைத் துடைப்பார்.

முடிவுரை :

நமக்கும் கர்த்தர் துன்பங்களிலிருந்து ஆறுதல், விடுதலை, சமாதானம் தந்தருளுவார்.

அருள்திரு இரா. தானியேல் பால்துரை
அடைக்கலப்பட்டணம்

24.06.2007

புனிதர் யோவான் ஸ்நானகன் திருநாள்

பாடங்கள் : மல்.3:1-5; வெளி.3:14-22; யோவா.3:22-36

முன்னுரை :

எல்லா மனிதர்களையும் ஆண்டவர் ஒரு நோக்கத்தோடுதான் படைக்கிறார். ஒவ்வொருவருக்கும் ஒரு திட்டத்தை முன் குறித்து வைத்திருக்கிறார். தேவன் நம் ஒவ்வொருவரையும் உண்டாக்கும் போதும், நம்மை உருவாக்கிய அச்சுருவத்தை (mould) வீசி எறிந்து விடுகிறார். ஒருவருக்கு பயன்படுத்திய அச்சை இன்னொருவருக்கு பயன்படுத்தவில்லை. ஒவ்வொருவரையும் தனித்தன்மையோடும், தனி நோக்கத்தோடும் படைக்கிறார். நம் ஒவ்வொருவரும் தேவனால் தனித் தன்மையோடு உண்டாக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் நாம் எப்படி இருக்க வேண்டும் என்று ஆண்டவர் எதிர்பார்த்து நம்மைப் படைத்தாரோ, அந்த இறைவனின் நோக்கத்தை உணர்ந்தவர்களாய் அதை ஏற்றுக்கொண்டு அதன்படி வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தவர்களில் தலைசிறந்தவராக, இயேசு கிறிஸ்துவுக்கு முன்னோடியாக இருக்க வேண்டும் என்கின்ற இறைவனின் திட்டத்தின்படி, பிறக்கும் முன்னதாகவே (லூக்.1:7-15) தூயாவியின் அருளைப் பெற்று, தேவனுடைய சித்தத்தின்படி நடப்பதைத் தவிர வேறெதுவும் தனக்கு மேலானதல்ல என்பதை தன் வாழ்வில் காட்டிய யோவான் ஸ்நானகனைக் குறித்து தியானிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்.

1. முன்னோடியாக வந்த யோவான் ஸ்நானகன் :

இயேசுவுக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானகன் இருக்க வேண்டும் என்கின்ற இறைவனின் திட்டத்தை காட்டுவதற்காகவே நற்செய்தியாளர்கள் தங்களின் நூலின் தொடக்கத்திலே யோவான் ஸ்நானகன் பற்றி கூறுகிறார்கள். அதோடு நீண்ட காலமாகவே இறைவாக்கினர் அனுப்பப்படவில்லை என்றும், தீர்க்கதரிசன வரம் எடுக்கப்பட்டு விட்டது என்கின்ற அச்சம் யூத மக்களிடையே நிலவி வந்தது (சக.13:3-5). ஒருவன் தன்னை இறைவாக்கினர் என்று சொன்னால் அவனுடையப் பெற்றோர்கள் கூட நம்ப மறுத்தனர். ஆனால் ஏசாயா மல்கியா போன்ற தீர்க்கதரிசிகள் மூலமாக

முன்னோடியான யோவான் ஸ்நானகனைக் குறித்து இறைவாக்கு அளித்திருக்கிறார் (ஏசா.40:3,4; மல்.3:1). ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்கு பின்பு யோவான் ஸ்நானகனின் (தீர்க்கதரிசியின்) குரல் வனாந்தரத்திலே ஒலிக்கிறது. இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு மக்களை உடனடியாக தாயார் செய்யவும் மீட்பின் காலத்தை துவங்கிவைக்கும் பணிக்காக தான் அனுப்பப்பட்டதை உணர்ந்துக் கொண்டு செயலாற்றினார்.

2. தைரியமுள்ள யோவான் ஸ்நானகன் :

யோவானின் போதனைகள் யூத சமுதாயத்திலே மாபெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மனமாற்றம் மிகவும் அவசியம் என்று வற்புறுத்துகிறார். ஆபிரகாம் எங்கள் தகப்பன். விருத்தசேதனம் மட்டும் போதும் என்று நினைக்காதீர்கள். மனந்திரும்பி இறைவனிடம் வர வேண்டும் என்கிறார். மனந்திரும்புதலின் செயல்களை வெளிப்படுத்துங்கள் (மத்.3:8). ஏற்கனவே அடிமரத்தில் கோடாரி வைத்தாயிற்று, நற்கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு தீயில் போடப்படும் (மத்.3:10) என்று முழங்குகிறார். சதுசேயர், பரிசேயர்களை கண்டிக்கிறார் (மத்.3:7) தவறு செய்யும் அதிகாரிக்கும், அரசுக்கும் துணை போகாமல் தைரியமாக தவறை சுட்டிக்காட்டுகிறார். அதற்காக மரணத்தையே சந்திக்க வேண்டியதாயிருந்தாலும் இறைவனின் திருச்சித்தத்தை தைரியமாக நிறைவேற்றுகிறார். அரசனின் தவறை சுட்டிக்காட்டியதோடு, ஆயக்காரரும் படைவீரர்களும் செய்ய வேண்டிய கடமைகளையும் கற்றுக் கொடுக்கிறார். யோவான் ஸ்நானகன் தைரியம் நமக்கு சவாலாக இருக்கிறது. அநீதிக்கும், ஊழலுக்கும் எதிராக குரல் கொடுக்கிறோமா? சுயநலம், பேராசை, பதவிக்காக, தீமையோடு உடன்பட்டிருக்கிறோமா? அநீதிக்கும், ஊழலுக்கும் எதிராக குரல் கொடுப்பது எனது பணியல்ல என்று அமைதி காக்கிறோமா? . . . ஆராய்ந்து பார்ப்போம்.

3. தன்னை தாழ்த்துகின்ற யோவான் ஸ்நானகன் :

மேசியாவை எதிர்பார்த்த யூதர்கள் ஜாண் இர்க்கான், கலிலேயனாகிய யூதர், தெயுதா, மெனாகெம் போன்ற பலரை மேசியா என கருதி ஏமாந்தார்கள். யோவானும் மேசியாவாக இருப்பாரோ என்று பலரும் எண்ணிக் கொண்டிருக்கையில்

(லூக்.3:15) நான் மேசியா அல்ல என்கிறார். எலியாவாக இருக்கலாம் ஏனெனில் இருவரின் போதனையிலும், வாழ்விலும், ஆடையிலும் ஒத்திருந்தார்கள். (2இராஜா.1:8) எலியா மரித்து போகாமல் விண்ணுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதால் அவர் திரும்பி வருவார் என எதிர்பார்த்தார்கள் (மல்.3:1). பஸ்கா விருந்திலே எலியாவின் வரவை எதிர்பார்த்து கதவுகளை திறந்து வைத்து அவருக்காக திராட்சரசக்கின்னம் ஒன்று ஒதுக்கி வைத்தார்கள். ஆனால் யோவான் இதையும் மறுக்கிறார். நீர்தான் வரவேண்டிய தீர்க்கதரிசியா என்ற கேள்விக்கும் இல்லை என்கிறார் (மாற்.11:32, ஏசா.18:15). நான் தண்ணீரால் ஞானஸ்நானம் கொடுப்பேன். அவரின் பாதரட்சைகளின் வாரை அவழ்க்கிறதற்கும் நான் தகுதியானவன் அல்ல என்கிறார். இப்பணி அடிமைக்குரியது. ஜோசுவா பென்வேலி என்பவர் சொல்லுகிறார். ஒரு சீடன் மிதியடி வாரை அவிழ்ப்பது தவிர மற்றெல்லாப் பணிகளையும் தன் குருவுக்கு செய்ய வேண்டும் என்கிறார். மிதியடி வாரை அவிழ்பது சீடர் செய்யக்கூடாத அடிமையின் பணி, அதற்குகூட தனக்கு தகுதி இல்லை என்று தன்னைத் தாழ்த்துகிறார். கடவுளின் செம்மறியான இயேசுவுக்கே திருமுழுக்கு கொடுத்தாலும் தன்னைத் தாழ்த்துவதன் மூலம் மனிதர்களிலே உயர்ந்து நிற்கிறார்.

முடிவுரை :

தான் எதற்காக இந்த உலகத்தில் இறைவனால் அனுப்பப்பட்டாரோ அந்த நோக்கத்தை யோவான் ஸ்நானகன் நன்கு உணர்ந்து கொண்டார். தனக்கு கொடுக்கப்பட்டத் திருபணியை திறம்பட செய்து முடித்தார். அதினால் வந்த பாடுகளையும், துன்பத்தையும் தைரியமாக எதிர்கொண்டார். இயேசுவுக்கு முன்னோடியாக வந்து உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்கின்ற தேவ ஆட்டுக்குட்டியை அறிமுகம் செய்யவும், அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும், இயேசுவாலே நற்சாட்சி பெற்றவராய் (மத்.11:11) வாழ்ந்த யோவான் ஸ்நானகனைப் போல, ஆண்டவர் என்ன நோக்கத்திற்காக நம்மை உலகத்திற்கு அனுப்பினாரோ அந்த நோக்கத்தை நிறைவுசெய்யவும், அதில் வரும் துன்பத்தை தைரியமாக எதிர்கொள்ளவும் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

அருள்திரு A. சாமுவேல்
ஜேக்கப்புரம்

29.06.2007

தூய பேதுரு திருநாள்

பாடங்கள் : எரே.16:16-21; 2பேது.3:14-18; யோவா.21:15-19

வசனம் : *"ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான்" (யோவா.21:17).*

முன்னுரை :

இயேசுவின் மீது அதிக அன்பு வைத்த சீடரில் ஒருவர் பேதுரு. இயேசுவும் அடிக்கடி எல்லா இடங்களுக்கும் பேதுருவை அழைத்துச் செல்வார். அனைத்துக் காரியங்களையும் பேதுருவிடம் எடுத்துரைப்பார்.

அப்படிப்பட்ட பேதுருவின் திருநாளில் தியானிக்கக்கூடிய காரியங்கள் மூன்று : 1) மறுதலித்த பேதுரு, 2) மனஸ்தாபப்பட்ட பேதுரு, 3) மனந்திரும்பிய பேதுரு.

1. மறுதலித்த பேதுரு :

எரே.16:16இன் படி கடவுள் மீன் பிடித்துக் கொண்டிருந்த பேதுருவை அழைத்து, மனிதர்களை பிடிக்க தெரிந்தெடுக்கின்றார். தெரிந்தெடுக்கப்பட்ட பேதுரு, இயேசுவின் பின்பாக சென்று, அவர் செய்த அனைத்துப் பணிகளையும் பார்த்து, ஆச்சரியப்பட்டு தொடர்ந்து அவர் பின்பாக செல்வேன், என்ன வந்தாலும், ஒருபோதும் அவரை நான் மறுதலிக்க மாட்டேன் என்று உரிமையோடு குரல் கொடுத்தவர் முதலில் இயேசு நீ என்னை சேவல் கூவுகிறதற்கு முன்னே, மூன்று தரம் மறுதலிப்பாய் என்று சொன்னபோதும், நான் மறுதலிக்கவே மாட்டேன் என இயேசுவுடன் போட்டிப்போட்டு தோற்றவர். மத்.26:34,35,75 அந்தத் தோல்விக்கு காரணம், ஆரம்பத்தில் தனது உயிர்க்கு பயம் என அறிந்து கொள்ள முடிகிறது.

2. மனஸ்தாபப்பட்ட பேதுரு (யோவா.21:17)

மறுதலித்த மாத்திரத்தில், உடனே இயேசு சொன்ன வார்த்தையை அவர் நினைவு கூறுகின்றார். நினைவுகூர்ந்த மாத்திரத்தில் உடனே மனஸ்தாபப்படுகின்றார். இயேசுவுடன் போட்டிப்போட்டு நான் தோற்றுவிட்டேன் என ஒத்துக் கொள்கின்றார்.

அதே நேரத்தில், இயேசுவின் அன்பு மறுபடியும் எனக்குத் தேவை. அவர் இல்லாமல் நான் உலகில் வாழமுடியாது. மறுபடியும் இயேசு என்னை அழைக்கமாட்டாரா. அழைத்தால் நான் எப்படியும் அவருக்காக சாட்சியாக வாழ்வேன் என்று உள்ளத்தில் நினைத்துக் கொண்டிருக்கும் மாத்திரத்தில், உயிர்த்தெழுந்த இயேசு பேதுருவினிடத்தில் வந்து நீ என்னிடத்தில் அன்பாய் இருக்கிறாயா என இரண்டு முறை கேட்டு, அவர் நான் உம்மை நேசிக்கிறேன் எனச் சொல்லி, மறுபடியும் மூன்றாம் முறையாக இயேசு பேதுரு சொன்ன பதிலை கேள்வியாக மாற்ற நீ என்னை நேசிக்கிறாயா எனக் கேட்கின்றார். இதை மிகுந்த ஆவலோடு, எதிர்ப்பார்த்த பேதுரு உடனே துக்கப்பட்டு ஆண்டவரே நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர். எனது பிறப்பில் இருந்து, இதுவரைக்கும் என்னைப்பற்றி எல்லாமே உமக்குத் தெரியும். அதேநேரத்தில், எனது தவறை உணர்ந்து மனஸ்தாபப்படுகிறேன் என்பதாக இயேசுவினிடத்தில் அறிக்கையிடுகின்ற பேதுருவாக இருக்கின்றார்.

3. மனந்திரும்பிய பேதுரு :

மனஸ்தாபப்பட்ட பேதுரு மனந்திரும்பிய பேதுருவாகவும் மாறுகின்றார். அதற்கு அடையாளம், உயிருக்கு பயந்த பேதுரு, உயிர்த்தெழுந்த இயேசுவை பயம் இல்லாமல், தைரியமாக நற்செய்தியாக அறிவிக்கின்றார். 'ஆடுகளை மேய்ப்பாயாக' என்கின்ற இயேசுவின் வார்த்தையை மறுதலிக்காதப்படி, அநேக மக்களை மனம்திரும்ப வைக்கின்றார் (அப்.2:41).

அவரது கடிதத்திலும், பயம் இல்லாமல், தைரியமாக அவரது வருகையை சந்திக்க நீங்கள் ஜாக்கிரதையாய் இருங்கள் என்று மக்களுக்கு எச்சரிப்பு கொடுக்கின்றார் (2பேது.3:14).

முடிவுரை :

தூய. பேதுருவின் திருநாளில் பேதுருவைப் போன்று நாம் மறுதலிக்கப்பட்டவர்களாக காணப்பட்டாலும் மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி உயிர்த்தெழுந்த இயேசுவை மரணப்பயம் இல்லாமல் அவர் வருகையை எதிர்நோக்கினவர்களாக மற்ற மக்களுக்கு சாட்சியாக நற்செய்தியை அறிவித்து மனந்திரும்ப வைப்போம். அந்த உயிர்த்தெழுந்த ஆண்டவர் நம்மோடு, சாட்சியாக நிலைத்து இன்றும், என்றும் இருக்கிறார் என்பதை மறந்து போக வேண்டாம்.

அருள்திரு J. காலேப் சாமுவேல்
புலவனூர்

01.07.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 5ஆம் ஞாயிறு
(திரித்துவ 4)

பொருள் : **கிறிஸ்தவ ஈகை**

பாடங்கள் : யாத்.36:1-7; 2கொரி.9:6-15; லூக்.21:1-4

வசனம் : *"மேலும் நாங்கள் நினைத்தபடி மாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத் தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்" (2கொரிந்தியர் 8:5).*

முன்னுரை :

இறைவன் நமக்குச் செல்வத்தை கொடுத்துவிட்டு நாம் அதை எவ்விதம் பயன்படுத்துகிறோமென்று கவனித்துக் கொண்டிருக்கிறார். இயேசு காணிக்கைப் பெட்டிக்கெதிரே உட்கார்ந்து கொண்டு மக்கள் எப்படி காணிக்கை போடுகிறார்களென்று கவனித்துக் கொண்டிருந்தார் (லூக்.21:1) நாம் எவ்வளவு கொடுக்கிறோமென்று திருச்சபை கணக்கு வைக்கும்; எவ்வளவு வைத்து கொள்ளுகிறோமென்று ஆண்டவர் கவனிப்பார்.

யாருக்கு கொடுக்க வேண்டும்? தேவையிலுள்ள எவருக்கும் உதவ வேண்டும். அவர் (பிதா) தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார் (மத்.5:45). ஏன் கொடுக்க வேண்டும்? எல்லாம் அவரால் உண்டானது 1நாளா.29:14. எவ்வளவு (or) எப்படி கொடுக்க வேண்டும்? உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (2கொரி.9:7).

1. கொடுத்தல் தேவனின் உயரிய பண்புகளில் ஒன்று :

நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை (யாத்.1:17).

இறைவன் ஒரு பெரிய கொடையாளி. அவர் யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவர். அவர் கொடுக்கும் காற்று, மழை, உணவு, வெளிச்சம் அனைத்தும் இலவசம். தேவன் தாம் கொடுப்பதை ஒரு நாள் மட்டும் ஏன் ஒரு மணி நேரம் மட்டும் நிறுத்தி வைப்பாரென்றால் நாம் அனைவரும் இல்லாமல் போய்விடுவோம். இவ்வளவாய் அவர் நம்மில் அன்பு கூர்ந்து, நம்மைத் தாங்கி, ஆதரித்து, பராமரித்து வருகிறார்.

அவரிடத்தில் ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு இல்லை. ஏழைப் பிச்சைகாரன் கூப்பிட்ட போதும் அவர் நின்று நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றார் (லூக்.18:41) நூற்றுக்கதிபதி உதவி கேட்டபோது அதையும் செய்தார்.

ஆண்டவர் பிரதிபலனை எதிர்பார்க்காமல் கொடுக்கிறவர். அவர் இரக்கமும் மனதுருக்கமும் நிறைந்தவர். வனாந்தரத்திலே பசியாயிருந்த வேளையில் அவர்கள் திருப்தியடையுமட்டும் உணவு கொடுத்தார் (யோவா.6:12) அவரிடத்தில் வந்தவர்கள் ஐசுவரியமுள்ள வாலிபன் தவிர அனைவரும் தங்கள் குறைவுகள் நிவிர்த்தி செய்யப்பட்டவர்களாய் மகிழ்ச்சியோடு புறப்பட்டு சென்றார்கள்.

தேவன் மனிதனுக்கு தமது அன்பை கொடுக்கிறார், கிருபையைக் கொடுக்கிறார், சுகத்தை கொடுக்கிறார், விடுதலையைக் கொடுக்கிறார், ஆறுதல், மகிழ்ச்சி, சமாதானம் கொடுக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக தம்மையே சிலுவையில் ஒப்புக் கொடுத்தார். மரித்து மூன்றாம் நாள் உயிரோடெழுந்த இன்றும் நம்மோடிருக்கிறார். இறைவனின் இப்பண்பை வார்த்தைகளால் விவரிக்க கூடுமோ?

ஆண்டவரின் இப்பண்பு நம்மில் காணப்படுகிறதா? நாம் அவருடைய பிள்ளைகள் எனவே அவரைப் போல் இக்குணநலம் நம்மில் காணப்பட தேவன் எதிர்பார்க்கிறார்.

2. கொடுத்தல் கிருபை வரங்களில் ஒன்று :

"அல்லாமலும், விசுவாசத்திலும், போதிப்பதிலும், அறிவிலும் எல்லாவித ஜாக்கிரதையிலும், எங்கள் மேலுள்ள உங்கள் அன்பிலும், மற்றெல்லா காரியங்களிலும் நீங்கள் பெருகியிருக்கிறது போல, இந்த தர்ம காரியத்திலும் நீங்கள் பெருக வேண்டும்" 2கொரி.8:7.

உற்சாகமாய் கொடுத்தல் என்பது நாம் கடவுளின் கிருபையால் பெறும் நற்பண்பு. ஆகவே விசுவாசம், அறிவு, ஊக்கம், அன்பு முதலிய எல்லா பண்புகளையும் கொரிந்தியர் பெற்றுப் பெருகி இருந்தது போல அவர்கள் ஈகை என்ற நற்பண்பிலும் பெருக வேண்டும் என பரி.பவுல் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார்.

மக்கதோனியா கிறிஸ்தவர்கள் இச்சத்தியத்திற்கு எடுத்துகாட்டாய் விளங்கினார்கள். அவர்கள் மிகுந்த உதாரத்துவமாய் கொடுத்தார்கள் (2கொரி.8:2). இதைப் பவுல் "அவர்கள் தங்களைத் தாங்களே கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்தார்கள்" என கூறுகிறார் (2கொரி.8:5). இவ்விதம் சக்திக்கு மிஞ்சி சபையில் ஒரு நபரோ ஒரு சிறு கூட்டமோ காணிக்கை கொடுப்பது பிற உறுப்பினர்களையும் பாதித்து இன்னும் அநேகர் அதிகமதிகமாய்த் தேவனைத் துதிக்க ஏதுவுண்டாகும் (9:11,12). கட்டாயமாய் கணக்குப்

பார்த்து அல்ல, களிப்பாய் கொடுப்போரிடம் ஆண்டவர் அலாதிப் பிரியம் கொள்கிறார் (9:7). இக்கொடுக்கும் கிருபை வரம் நம்மில் காணப்படுகிறதா?

3. கொடுத்தல் ஆசீர்வாதத்திற்கான காரணங்களில் ஒன்று:

எளியவருக்கு அள்ளிக் கொடுப்போர் மீது வரும் ஆசீர்வாதங்கள் ஏராளம். அவர்களுக்கு 'பொருளாதார' ஆசீர்வாதம் உண்டு. "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான். அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்" (நீதி.19:17) அப்படியே 'உடலுக்கடுத்த' ஆசீர்வாதமும் உண்டு. பசியுள்ளோரோடு உடுத்துவிக்கும்போது உங்கள் சுகவாழ்வு துளிர்க்கும் (ஏசா.58:8).

ஆன்மீக ஆசீர்வாதமும் உண்டு. "ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்" (2கொரி.9:9,10). எளியவரோடு ஈடுபாடு கொள்ளும்போது நமது ஆவியும் எளிமையாகிறது. இறுதியாக, "நித்திய ஆசீர்வாதம் நற்செயல்களில் செல்வந்தராகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களாகவும் இருக்கையில் "நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக" வைக்கிறோம் (1தீமோ.6:18,19).

மேலும் நமது ஆண்டவர் "கொடுங்கள்" என்ற கட்டளையோடு நிறுத்தாமல் "கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்கிறார்". இன்று அநேகர் "ஆசீர்வாதத்தை" அறுவடை செய்வதிலேயே ஆவலாய் இருக்கிறார்கள். உண்மையில் நாம் முதலில் விதைக்காமல் எப்படி அறுவடை செய்யமுடியும்? எனவே நாம் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள முதலாவது கொடுக்க வேண்டும். இன்று கொடுப்பதில் சரியான வரிசை (order of giving) இல்லாதபடியால் யாருக்கு கொடுப்பது என்று தெரியாமல் தவறான வரிசை பின்பற்றபடுகிறது. முதலாவது நாம் சார்ந்து ஆராதிக்கிற (திருச்சபைக்கு) ஆலயத்திற்கு கொடுக்க வேண்டும் (மல்.3:10). ஏனெனில் பாசவித்த தோத்திர ஜெபம் செய்வதிலிருந்து நிறைவு (அடக்க) ஆராதனை வரை பல்வேறு விதங்களில் நெருங்கிய தொடர்பு கொண்டது ஆலயம். இரண்டாவதாக ஏழைகளுக்கு 2கொரி.19:17) நம்மை சுற்றி இருக்கிறவர்களுக்கு கொடுக்க வேண்டும். மூன்றாவதாக, மிஷனெரிகளுக்கு நான்காவதாக நமது குடும்ப வட்டத்திற்கு - வயதான பெற்றோர், etc. . .

பிரியமானவர்களே, பிதாவின் உயரிய பண்பான கொடுத்தல் நம்மில் காணப்படவும், கொடுக்கும் கிருபை வரத்தில் பெருகவும், கொடுத்து ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ளவும் தேவன் உதவி செய்வாராக. ஆமென்!

அருள்திரு G. ஆசீர்வாதம் ராஜ்குமார்
பாவூர்சத்திரம்

01.07.2007
மாதத்தின் முதல் நாள்

பொருள் : **புதிதாக்குதல்**
வசனம் : *2கொரிந்தியர் 5:17*

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது அனுதினமும் புதுப்பிக்கப்பட வேண்டும். ஒரு புதிய மாதத்திற்குள் பிரவேசிக்கும்போது நமது வாழ்க்கையையும் புதுப்பிக்கப்பட வேண்டும். சிலர் புத்தாண்டு, மற்றும் லெந்து காலங்களில் சில தீர்மானங்கள் எடுப்பார்கள். இதை, அதை செய்ய மாட்டேன் என்று சொல்லி, ஆனால் பரிசுத்தவான்கள், அல்லது பெரிய பெரிய தேவ மனிதர்கள் சொல்லுகின்ற கருத்து கிறிஸ்துவை உடையவன் ஒவ்வொரு நாளும் புதிதாக்கப்பட வேண்டும் என்று சொல்லுகிறார்கள், நாமும் இந்த மாதத்தின் முதல் நாளில் நம்முடைய வாழ்க்கையை புதுப்பித்துக் கொள்வது எப்படி? சிந்திப்போமா?

1. கழித்தல் :

2கொரி.5:17பி "பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின". கொலோ.3:9,10. பழைய மனுஷனைக் களைத்து போட்டு புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள் (கலா.21:20). கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன். இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் (1கொரி.5:7,8). புதியதாய் பிசைந்த மாவாயிருக்கும்படி பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப் போடுங்கள். துர்குணம் பொல்லாப்பு என்று தேவனுக்கு பிரியமில்லாத காரியத்தை கழித்து விட்டு புளிப்பில்லாத மாவாகிய துப்புறவு உண்மை மற்றும் ஆவியின் கனிகளோடு இந்த புதிய மாதத்திற்குள் கடந்து செல்லுவோம் (எபி.12:1). பழைய மாதத்தில் நம்மை நெருக்கிக் கொண்டிருக்கிற பாவத்தையும் பாரமானவற்றையும் தள்ளிவிட்டு இயேசு கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டு பொறுமையோடே ஓடக்கடவோம். இந்த நாளில் தீர்மானம் எடுப்போம். பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின என்று புதுப்பிக்கப்பட்டவர்களாக அடியெடுத்து வைப்போம்.

2. கழுவுதல் :

1யோவா.1:7 இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். 1யோவா.2:2 நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே. எரே.4:14 எருசலேமே உன் இருதயத்தைப் பொல்லாப்பற கழுவு. சங்கீதக்காரனின் வேண்டுதல் 51:1,7,10. "என்னைச் சுத்திகரியும். என்னைக் கழுவும், சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும் நிலைவரமான ஆவியை என் உள்ளத்தில் புதுப்பியும்". தேவனுடைய வார்த்தைகள் நம்மில் இருக்கின்றது. நாம் கழுவப்பட்டிருக்கிறோமா? சிந்திப்போம்.

ஒரு வயோதிப ஏழை தாய் தன்னுடைய ஒரே மகனை செல்லமாக வளர்த்தாள். ஆனால் அந்த மகனோ கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து தன்னுடைய வாழ்க்கையை பாழ்படுத்திக் கொண்டிருந்தான். ஒரு நாளிலே அவன் சூதாட்டம் விளையாடிக் கொண்டிருக்கும்போது போலீஸ் அவனை பிடித்துச் சென்று விட்டனர். அவனுடைய நண்பர்கள் வசதியானவர் ஆனபடியால் உடனே ஜாமீனில் வெளியே வந்து விட்டார்கள். இவன் மாத்திரம் உள்ளே சிறையில் இருந்தான். அந்த ஏழைத்தாய் எல்லாரிடமும் கேட்டாள். பணம் அதிகம் செலவாகும் என்றார்கள். ஆனால் பணம்தேவைப்பட்டதால் ஏழைதாய் தான் வேலை பார்க்கும் அந்த இடத்தில் இன்னும் அதிகமான நேரம் (கல்லை உடைக்கும் வேலை) கல்கோரியில் வேலை செய்து ஒரு மாதம் பணத்தை சேர்ந்து தன்னுடைய மகனை மீட்டு வந்தாள். தாய் சொன்னது மகனே இனி இந்தப் பாவக் காரியங்களில் ஈடுபடாதே என்று கண்ணீரோடு சொல்லிவிட்டு மரித்துப் போனாள். மகன் என்னுடைய பாவ வாழ்க்கைக்கு தண்டனையாக சிறையிலிருந்து மீட்டு எடுக்க தன் தாயின் வேதனையை பார்த்து தன்னுடைய பாவத்தை அறிக்கையிட்டு இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவனாக இப்பொழுது ஊழியம் செய்து கொண்டிருக்கிறான். இந்த புதிய மாதத்தில் நாமும் நம்முடைய பாவம், தேவனுக்கு பிரியமில்லாத காரியத்தை எல்லாம் இயேசுவின் இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட நம்மை இவ்வேளையில் அர்ப்பணிப்போம்.

3. புடமிடுதல் :

முதலாவது பழைய துர்குணங்களை கழித்து இரண்டாவது இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு நாம் வாழும்போது அநேக சோதனைகள் வரும். அதற்குதான் புடமிடுதல் என்று பெயர் யோபு 23:10. கர்த்தர் என்னை சோதித்த பின் பொன்னாக விளங்குவேன். யோபு 1:13,22,23; 2:7,9,10. யோபு உத்தமன், சன்மார்க்கன் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவன். ஏழு குமாரர்கள் மூன்று குமாரத்திகள் திரளான மிருக ஜீவன்கள் கிழக்கத்திப் புத்திரர் எல்லாரிலும் பெரியவன். தனக்கு உண்டான எல்லாம் எடுக்கப்பட்டபோதும் கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்று சொன்னார். மனைவி கர்த்தரைத் தூஷித்து ஜீவனை விடும் என்று சொன்னபோதும் நன்மையைப் பெற்ற கையால் சிறிது தீமையையும் அனுபவிக்க வேண்டாமா என்றார். விசுவாசப் பரீட்சையில் யோபு வெற்றி பெற்றார் யோபு.42:10. கர்த்தர் யோபுவின் சிறையிருப்பை மாற்றி முன் இருந்த எல்லாவற்றையும் பார்க்கிலும் இரண்டத்தனையாய் தந்தருளினார். யோசேப்பு சிறைச்சாலையில், தானியேல் சிங்கக்கெபியில் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் அக்கினிச் சூளையில் புடமிடப்பட்டார்கள் வெற்றி பெற்றார்கள். இந்த புதிய மாதத்தின்

முதல்நாளில் யாக்கோபு கொடுக்கின்ற ஆலோசனை 1:2,4,12. சோதனையை விசுவாசத்துடனும் பொறுமையுடனும் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்.

முடிவுரை :

நாம் அனுதினமும் புதுப்பிக்கப்பட வேண்டும். நம்முடைய பழைய தேவனுக்கு பிரியமில்லா காரியத்தை கழித்துவிட்டு இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு அவ்வப்போது வருகின்ற சிறுசிறு சோதனைகளை பொறுமையோடு சகித்து இந்த மாதத்திற்கு கர்த்தர் நமக்கு வைத்திருக்கிற நிறைவான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள இந்த மாதத்தின் முதல் நாளில் நம்மை கர்த்தர் தெரிந்து கொண்ட புதிய பாத்திரமாக அவர் கையில் நம்மை அர்ப்பணிப்போம். ஆமென்.

G. விஜயசிங், பேர்ப்பிலான்குளம்

********* ********* *********

08.07.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 6ஆம் ஞாயிறு

(திரித்துவ 5)

பொருள் : வளர்ந்து பெருகும் திருச்சபை

பாடங்கள் : 2நாளா.30:13-22; 1பேது.2:1-10; யோவா.10:1-11

வசனம் : *1பேதுரு 2:1-10*

முன்னுரை :

நமது திருச்சபையின் எளிய ஆரம்பத்தை நாம் இந்த நாளில் நினைவு கூறுகிறோம். ஒரு விதவைப் பெண்ணாகிய குளோரிந்தா மூலம் ஒரு திருமண்டலத்தையே ஆண்டவர் ஆரம்பித்தார் என்பதை நினைத்து கடவுளுக்கு நன்றி சொல்கிறோம். அதே வேளையில் வளர்ந்து விட்ட திருச்சபை இன்னும் எவ்வாறு வளர வேண்டும் என்பதைப் பற்றி இன்று சிந்திக்கிறோம், சிந்திக்க வேண்டும். பேதுரு அப்போஸ்தலரின் இந்த மடல் திருச்சபை வாழ்வைப் பற்றிய பல உண்மைகளை நமக்கு எடுத்துரைக்கின்றது. அவற்றில் சிலவற்றை மாத்திரம் இன்று தியானம் செய்வோம்.

1. நன்றியுணர்வு :

வளர்ந்து பெருகும் திருச்சபை எப்போதும் நன்றியுணர்வுடன் வாழ வேண்டும். "முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை. இப்பொழுதுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்" (வச.10). இது எத்தனை பெரிய சிலாக்கியம் எவரும் பெற முடியாத பெரும் பேறு. இதனைப்

பற்றிய நன்றியுணர்வு நம்மில் எப்போதும் இருக்க வேண்டும். பவுல் கொலோ.2:7இல் இவ்வாறு எழுதுகிறார். "நீங்கள் போதிக்கப் பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக 'விசுவாசத்தில் நாம் பெருக, நம் சபை வளர, ஸ்தோத்திரம் துணையாக அமைந்துள்ளது.

2. குழந்தையுணர்வு :

நாம் வளர்ந்து பெருக என்ன செய்ய வேண்டும் என்று பேதுரு கூறுவதைக் சற்று கூர்ந்து கவனியுங்கள். "நீங்கள் வளரும்படி, புதிதாய் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்" (வச.3). நாம் குழந்தைகளைப் போல வளருவதற்கு ஆர்வமாயிருந்து திருமறையை ஆழ்ந்து கற்க வேண்டும். திருமறை அறிவு என்பது எந்த உண்மை எந்தப் பகுதியில் இருப்பது என்று தெரிவது மட்டுமல்ல. அப்பகுதியினை நமது சொந்தமாக்கி, நமது சத்துப் பொருளாக்கி நாம் வளர வேண்டும். நாம் வளர்ந்து விட்டோம் என்று நினைத்துவிடக் கூடாது. பவுல் கூறுவது போன்று இலக்கை நோக்கித் தொடரவேண்டும் (பிலி.3:12-14). குழந்தைகளைப் போல் ஆக வேண்டும் என இயேசு பெருமான் பலமுறை நமக்கு எடுத்துரைத்திருக்கிறார்.

3. பொறுப்புணர்வு :

கடவுளுக்கு நன்றி செலுத்தி குழந்தைகளைப் போல வளரும் ஆர்வத்தோடு நாம் திருமறை என்னும் பாலை அருந்த வேண்டும் என்று குறிப்பிட்டோம். இந்த பெரும் பேறு எதற்காக? நமது பொறுப்பை நிறைவேற்றுவதற்காக 1பேது.2:9 இதனை எடுத்துரைக்கின்றது. 'அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு" நாம் வளர வேண்டுமெனில் அறிவிக்க வேண்டும். பாருங்கள், ஆள் சேர்க்க வேண்டுமென இவ்வசனம் குறிப்பிடவில்லை. அறிவிக்க வேண்டும் என மட்டும்தான் கூறுகிறது. அப்.2:47இல் வாசிப்பது போல், இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வருகிறார். நமது பணியில் தாழ்மையோடும் பயபக்தியோடும் புண்ணியங்களை எடுத்துரைக்க வேண்டும்.

நாம் வளர்ந்து பெருகும் திருச்சபையாக விளங்க மூன்று தேவைகளை பேதுரு நம் முன் வைக்கிறார். நன்றியுணர்வு, குழந்தையுணர்வு, பொறுப்புணர்வு, இம்மூன்று பெற்று வாழ இறைவனின் அருள் நமக்கு உண்டு. அந்த அருளின் வழியில் நாம் செல்ல தயாரா?

அருள்திரு அறிவர் M. தாமஸ் தங்கராஜ்

11.07.2007

திருமண்டல பண்டிகை

(மாம்பழச் சங்கம்)

இந்த ஆராதனையின் கருத்து என்ன? (யாத்.12:26).

முன்னுரை :

பஸ்கா பண்டிகையின் கருத்து இன்னதென்பதைப் பெற்றோர் பிள்ளைகளுக்கு விளக்கிச் சொல்ல வேண்டும். கர்த்தர் நம்முடைய வீடுகளைத் தப்பப்பண்ணினார். எகிப்திலிருந்த இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளைக் கடந்து போனார். இப்படி அர்த்தமுள்ள பண்டிகையாக பஸ்கா பண்டிகை ஆசரிக்கப்பட்டது. அந்தநாள் உங்களுக்கு நினைவுகூறுதலான நாளாய் இருக்கக்கடவது (This is a day you are to commemorate) (யாத்.12:14) இந்நாள் உங்களுக்கு ஒரு நினைவுநாளாக விளங்கும். இதனை ஆண்டவரின் விழாவாக நீங்கள் தலைமுறைதோறும் கொண்டாடுங்கள். இந்த விழா உங்களுக்கு நிலையான நியமமாக இருப்பதாக (விடுதலைப் பயணம் 12:14).

மாம்பழச் சங்கம் என்னும் திருமண்டலப் பண்டிகை நெல்லை அப்போஸ்தலன் கனம் C.T.E. இரேனியஸ் காலத்திலிருந்து தோன்றியது. அவரது வாழ்க்கை வரலாறு அடங்கிய நூல்களைப் படித்து அவரது சிறப்பை அறிந்துகொள்வதும் நம் பிள்ளைகளுக்குச் சொல்லுவதும் இன்றியமையாதது.

அவரது கல்லறை பாளையங்கோட்டை முருகன்குறிச்சியில் தேசிய நெடுஞ்சாலை அருகில் உள்ளது. அக்கல்லறையில் எழுதப்பட்டுள்ள வேத வசனம் இதுவே.

"நானோ, வீணாக உழைத்தேன், வெறுமையாகவும் பயனின்றியும் என் ஆற்றலைச் செலவழித்தேன். ஆயினும் எனக்குரிய நீதி ஆண்டவரிடம் உள்ளது. என் பணிக்கான பரிசு என் கடவுளிடம் இருக்கின்றது" (எசா.49:4).

இந்த வசனம் அவரது வாழ்க்கைக்குப் பொருத்தமான சுருக்கவுரையாக உள்ளது. 2000 ஜூன் மாதம் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம் அவரைப் பற்றிய நூல் வெளியிட்டுள்ளது. இரேனியஸ் முதலாவது நெல்லைக்கு வந்தநாள் 07.07.1820 நெல்லை மாவட்ட வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டிய நாள் 1820-35 ஆகிய 15 ஆண்டுகளில் அவர் 350 சபைகளை ஏற்படுத்தினார். 107 பள்ளிகளை நிறுவினார். நெல்லை மாவட்டத்துக்கு அடிப்படைக் கல்விக்கான உறுதியான அஸ்திபாரமிட்டார். அவர் ஒரு மாபெரும் கல்வி மிஷனெரியாகவே கருதப்படுகிறார். அவர் செய்த வேலையை இன்று ஆயிரம் பேர் சேர்ந்தாலும் செய்ய முடியாதென கனம் எட்வர்ட் செல்லையா ஐயரவர்கள் இரேனியஸைப் பற்றிய தமது நூலில் குறிப்பிடுகிறார்கள்.

விதவைகள் ஆதரவுக்காக மாம்பழச் சங்கம் :

விதவைகள், ஏழைகள் மீது இரக்கம் நமக்கு இருக்க வேண்டும். இந்த உண்மையைப் பற்றிய வேத போதனைகளையும் சிந்திப்பது தகுதியானது. கிறிஸ்தவ மக்கள் குரங்கணி போன்ற இந்து விழாக்களுக்குச் சொல்லுவதை நிறுத்துவதும், விதவைகள் ஆதரவுக்கான நிதி ஏற்படுத்துவதுமே மாம்பழச் சங்கத்தின் இருமுக்கிய நோக்கங்களாக தொடக்கத்தில் இருந்திருக்கின்றன.

எலிப்பாஸ் யோபுவைக் குறை கூறுகிறான். விதவைகளை வெறுமையாய் அனுப்பிவிட்டீர் (யோபு 22:9) ஆனால் யோபு கூறுவது. விதவையின் மாட்டை ஈடாக எடுத்துக் கொள்ளுகிறார்கள். விதவைக்கு நன்மை செய்யாதே போகிறான். . . . விதவையின் இருதயத்தைக் கெம்பீரிக்கப் பண்ணினேன் (யோபு 24:3,21; 29:13).

நெல்லை அப்போஸ்தலன் தொடங்கி வைத்த பணிகளை நாமும் கர்த்தருக்கு மகிமையாகச் செய்யும்படிக்கு மாம்பழச் சங்கத்திடலில் நம்மை புதிதாக அர்ப்பணித்துக் கொள்வோமாக. இன்று உலகத் திருச்சபையில் வலியுறுத்தப்படுவது இயேசு கிறிஸ்து நாசரேத் அறிக்கையில் (Nazareth Manifesto) அறிவித்த நற்பணியே (லூக்.4:16-22) அனைவருக்கும் சுகவாழ்வு (EGALITARIANISM) என்று ஒரே சொல்லில் அடங்கும் அந்நற்பணி. ஏழைகள், பெண்கள், வாழ்க்கை வசதிகள் மறுக்கப்பட்டோர் (the marginalized) ஆகியோருக்கும் கடவுளின் நன்மைகள் சரிசமமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்பட வேண்டும். ஏனெனில் கடவுள் ஏழைகள் சார்பாகவே (pro-poor) செல்படுகிறார் என்பதே வேதத்தின் அடிப்படை தரிசனம் (Total Vision). அதாவது நீதி, மரியாதை (கண்ணியம்), தயாளம், சமன்மை (Equality) பாரபட்சமின்மை என்ற வேத சத்தியங்களை செயலில் காட்டுவதே திருச்சபைக்கு ஆண்டவர் விடுக்கும் அறைகூவல்.

உலகமெங்கும், மக்கள் நடுவில் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. அவர்கள் தங்களுக்கு வர வேண்டிய நன்மைகளைக் குறித்து வலுவாய் பேசுகிறார்கள். பொறுமையிழந்தவர்களாயிருக்கிறார்கள். (The poor are now more articulate and more impatient) கோயில்பட்டி பஸ் நிலையத்தில் பாரதிகலைக் குழுவினர் எழுதி வைத்திருந்தனர்.

"பாபருக்கு மசூதி வேண்டும்; இராமருக்கு கோயில் வேண்டும்; சாதாரண மக்களுக்குச் சுகாதாரமான கழிப்பறைகளேனும் வேண்டும்"

சாதாரண மக்களின் தேவைகளை நிறைவு செய்வதுதான் திருச்சபையின் பணி. இதுவே உலகம் திருச்சபைக்கு எழுதித்தரும் நிகழ்வு நிரல் (The world writes the agenda for the church) காதுள்ளவன் கேட்கக்கடவன் என்ற ஆண்டவரின் குரல் கேட்டு அவர் பணியை நிறைவேற்ற நம்மை இப்பண்டிகையில் புதிதாக அர்ப்பணித்துக் கொள்வோம். இறை ஆசி உங்களோடிருப்பதாக.

அருள்திரு R. ஜோசப்

12.07.2007

திருமண்டல ஆண்டு விழா

வசனம் : *"அவருடைய சகோதரர் போனபின்பு அவர் வெளியரங்கமாய் போகாமல் அந்தரங்கமாய்ப் பண்டிகைக்குப் போனார் (தானி.5:14).*

முன்னுரை :

ஆண்டவர் இயேசு, யூதர்களின் கூடாரப் பண்டிகை, தேவாலயப் பிரதிஷ்டைப் பண்டிகைக்குப் போனார். பழைய ஏற்பாட்டில் அறுப்பின் பண்டிகை, புளிப்பில்லா பண்டிகை, கூடாரப் பண்டிகை, உச்சகட்டமாக பஸ்கா பண்டிகைகளை ஆசரித்தனர். நாட்களை சிறப்பித்துக் கொள்ளுகிறவர்கள் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளுகிறார்கள். பண்டிகைகள், ஆண்டு விழாக்கள் கொண்டாடுவது ஆண்டவர் சித்தமே. எனினும் நாம் எப்படி கொண்டாடுகிறோம்.

1. ஆண்டுவிழா நன்றி செலுத்தும் பண்டிகை :

இஸ்ரவேல் மக்கள் எருசலேமை மையமாகக் கொண்டு பல பண்டிகைகளைக் கொண்டாடினார்கள். ஆண்டாண்டாக, தலையாகக் கொண்டாடும் பண்டிகை, பஸ்கா பண்டிகை. ஆண்டவர் இஸ்ரவேல் மக்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்த மாபெரும் வரலாற்று நிகழ்ச்சியை நினைவு கூர்ந்து நன்றி செலுத்தும் பண்டிகையாக அமைந்தது (யாத்.13 அதி). நமது திருமண்டலப் பண்டிகையும், ஸ்தோத்திர பண்டிகையும். நமது தாழ்வில் நம்மை நினைத்து, நம் முற்பிதாக்களை அந்தகாரத்தினின்று தமது ஆச்சரியமான ஒளியிடம் வரவழைத்து, நம்மை அரசர்களும், ஆசாரியர்களுமாக்கினதை எண்ணி நன்றி செலுத்த வேண்டும். நமது முற்பிதாக்களின் கல்வி, கலாச்சாரம், வாழ்க்கை வசதி, வேலை, பொருளாதாரம், ஆண்டவர் பற்றிய அறிவு, உலக அறிவு யாவையும் பெற்றுக் கொண்டதற்காக இதயத்தின் ஆழத்தினின்று நன்றி செலுத்தும் பண்டிகையே இத்திருமண்டல பண்டிகை. நாமும் ஆண்டவருக்கு நம் துதி, தோத்திரங்களைப் படைப்போமாக.

2. திட்டமிடும் பண்டிகை :

நம் திருமண்டல, ஒரு கால வரலாற்றை திரும்பிப் பார்க்கும் வாய்ப்பு இப்பண்டிகையில் நமக்குத் தரப்படுகிறது (Report) நமது நிறைவுகளையும், குறைவுகளையும், நமது தோற்றத்தையும்,

தோல்விகளையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். நமது தவறுகளையும் நாம் அறிக்கையிட்டு எழும்பி பிரகாசிக்க அர்ப்பணிக்கும் நாள். இந்த புதிய பத்தாயிரம் ஆண்டில் ஒவ்வொரு புத்தாண்டிலும் எந்தெந்த புதிய கோணங்களில், அறிவு சார்ந்த முறையில் நமது சபைப்பணி, சமுதாயப்பணி, நற்செய்திப்பணி அமைய வேண்டும். நமது நாட்டிற்கு இன்றை தேவைகள், சூழ்நிலை எவை என ஆராய்ந்து, தேவைகளுக்கேற்ப நமது பணிகளைத் திட்டமிடும் வேளைதான் இவ்வாண்டு விழா நிதி திரட்டுவதைக் குறிக்கோளாக வைக்காமல், நீதி, சமூக நீதி இவைகளில் நமது திருமண்டலத்தின் பங்கு என்ன என திட்டமிடும் தீர்க்கதரிசன பண்டிகை. தனிப்பட்ட நம் வாழ்விலும், நம் திருமண்டலத்திற்காக நம் உள்ளூர் திருச்சபைக்காக, நாம் வாழும் சமுதாயத்திற்காக நாம் என்ன செய்யாலம் என்று திட்டமிட்டு செயல்படுவோம்.

3. துணை நாடும் பண்டிகை :

என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று இயேசு நாதர் சொன்னார். ஆண்டவரின் துணையும், அருளும் - ஆசியுமின்றி மனிதர் எதையும் செய்ய முடியாது. நம் ஆண்டவர் எல்லாம் வல்லவர். என்னால் செய்யக்கூடாத காரியம் உண்டோ என்று ஆண்டவர் கேட்கிறார். வானத்தையும், பூமியையும் படைத்த ஆண்டவரிடமிருந்து எனக்கு ஒத்தாசை வரும். நாம் திட்டமிட்ட பின்னர் தான் ஆண்டவர் துணையைத் தேடுகிறோம். மாறாக ஆண்டவர் திட்டமிட்டுத் தரும்படி கேட்டு, அவரே அதை நிறைவேற்றித்தர மன்றாடுவோமாக. திருமண்டல அளவிலோ, சேகர அளவிலோ குடும்ப சூழ்நிலையிலோ இதே முறையைப் பின்பற்ற வேண்டும். பழைய ஏற்பாட்டில் ஆசரிப்புக் கூடாரத்தை மோசேயின் ஆலோசனைப்படி செய்யாமல் கர்த்தர் சொன்னபடியே செய்தனர்.

உத்தமனுக்குக் கர்த்தர் துணை. நாம் உண்மை உள்ளவர்களாக, ஆண்டவருக்கு முன் உத்தமர்களாக இருந்து செயல்படும்பொழுது கர்த்தர் நமக்காக யுத்தம் செய்வார். நாம் போராட்ட காலத்தில் தள்ளப்பட்டுள்ள இக்காலக் கட்டத்தில், தேவரீரேயன்றி எங்களுக்காக யுத்தம் செய்வார் ஒருவருமில்லையென்று, சேனைகளின் கர்த்தர் துணையை நாடுவோம். வரும் ஆண்டு நிறைவும் வளமும், வெற்றியும் தரும் ஆண்டாக மலரட்டும்.

அருள்திரு G. சிம்சோன் சிகாமணி

15.07.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 7ஆம் ஞாயிறு
(திரித்துவ 6)

பொருள் : **ஆயர் திருப்பணி**

பாடங்கள் : யாத்.3:1-12; 1பேது.5:1-11; யோவா.21:11-19

வசனம் : *"நான் காணாமற் போனதைத் தேடி, துரத்துண்டதைத் திரும்பக் கொண்டுவந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி, நசல்கொண்டதைத் திடப்படுத்துவேன்" (எசே.34:16).*

முன்னுரை :

ஆயர் அல்லது மேய்ப்பன் (Shepherd) என்ற பதம் பண்டைய இஸ்ரவேல் நாட்டில் மிகவும் பிரசித்திபெற்றதாயிருந்தது. ஆட்டு மந்தைகளும், கிடாக்களும் இஸ்ரவேல் மக்களின் முக்கியமான சொத்துக்களாயிருந்து வந்தது. மேலும் பெரிய மந்தைகள் அவர்களுடைய நிலையை காட்டுவதாக (Large flocks was a sign of wealth and status) இருந்தது. ஆகவே மேய்ப்பர்கள் தங்கள் ஆட்டு மந்தையை மிகவும் கவனத்துடன் மேய்த்தனர். வழிநடத்துதல், போஷித்தல் மற்றும் பொல்லாத விலங்குகளிடமிருந்து பாதுகாத்தல் போன்ற பணியினை உண்மையான மேய்ப்பர்கள் செய்து வந்தனர். ஆகவே பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் மேய்ப்பர்கள் என்ற பதத்தை மனிதர்களுக்கு மாத்திரமல்ல இறைவனையும் மேய்ப்பராக உருவகப்படுத்தி சொல்லப்பட்டிருக்கிறதை காணலாம். மேலும் போதகர் ஊழியம் என்று திருச்சபையில் ஏற்படுத்தப்பட்டது. போதகர் தன்னுடைய ஆடுகளாகிய சபையினரை ஒரு நல்ல மேய்ப்பனை போல வழிநடத்தவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறார்.

ஆயரின் முக்கியமான மூன்று பணிகள் :

1. நல் வழிகாட்டும் நற்சாட்சியுள்ள ஆயன் :

யோவா.10:4இல் "அவன் தன் ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்து போகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியால் அவனுக்கு பின் செல்கிறது". மேய்ப்பன் ஆடுகளுக்கு முன்பதாக நடந்து நல்ல வழிகளில் பாதுகாப்பாக செல்வதுபோல திருச்சபையில் ஆயர்களாக அழைக்கப்பட்டவர்கள் திருச்சபை என்னும் மந்தைக்கு தலைமை பொருப்புடன் நல் வழிகாட்டியாய் இருக்க வேண்டும். தம்முடைய

ஆடுகளாகிய சபையினரை ஒரு போதகர் தலைமை பொருப்புடன் ஏற்றுக் கொள்ளுதல் மிகவும் அவசியம். தேவனுடைய வழிகளில் தன்னுடைய சபையினரை வழிநடத்த நல்ல மேய்ப்பனாகிய இயேசுவின் மாதிரியை பின்பற்ற வேண்டும். ஆண்டவருடைய துணை அல்லது உதவி இல்லாமல் மந்தையாகிய சபையை நாம் நடத்த முடியாது. யாத்.3:12மு வசனத்தில் கர்த்தர் மோசேயிடத்தில் இந்த வேலையை கொடுக்கும்போது "நான் உன்னோடே இருப்பேன்" என்று வாக்கு கொடுத்தார். இஸ்ரவேல் மக்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசம் வரை வழிநடத்தும்போது கர்த்தர் மோசேயுடன் இருந்தார். ஆகவே மோசே ஜனங்களை சரியாய் வழிநடத்தினான். இடையிடையே பாடுகள், முறுமுறுப்புகள், தடைகள் வந்தபோதும் மோசே இறைவனிடமிருந்து பெற்ற வார்த்தைகள் மூலம் இஸ்ரவேல் மக்களை வழிநடத்துகிறதை நாம் காணலாம். இன்றை நாளிலும் போதகர்கள் கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்பதை உணர்ந்து மக்களை நல்வழியில் நடத்த வேண்டும். ஆயனும் மந்தைக்கு மாதிரியாய் செயல்பட வேண்டும் (எசே.34:3; ஏசா.40:11).

2. **காணாமற்போனதை தேடும் கரிசனையுள்ள ஆயன் :**

எசே.34:16மு "நான் காணாமற் போனதை தேடி, துரத்துண்டதை திரும்ப கொண்டு வருவேன்".

எவ்வளவு தான் மேய்ப்பன் தன் ஆடுகளை சரியாக நல்ல செழிப்பான இடத்திலே மேய்ந்தாலும் சில ஆடுகள் கவர்சியான கானல் நீர் மற்றும் சொற்பகால பசுமையான மேய்ச்சல் ஆகியவற்றை நம்பி நல்ல மேய்ப்பனை விட்டுவிட்டு காணாமற் போய்விடும். சில மக்களும் அப்படித்தான். தங்களுடைய தாய் திருச்சபையை விட்டுவிட்டு புதிதாய் முளைத்த திருச்சபைகளின் கவர்சியான காரியங்களை பார்த்து காணாமற் போய் விடுகிறார்கள். இவர்கள் நல்மேய்ப்பனாகிய இறைவனை பாராமல் மனிதர்களை பார்பதனால் இந்த நிலைக்கு ஆளாகின்றனர். (எரே.23:3,4) பேதுருவை இயேசு இந்த காணாமற் போன ஆடுகளை கண்டுபிடித்து மேய்க்க அழைக்கிறார். யோவா.21:17 "என் ஆடுகளை மேய்ப்பாயாக" மூன்று தரம் சொல்கிறார். ஏன் பேதுரு காணாமற் போன ஆட்டையும் கண்டுபிடித்து, புதிய ஆடுகளையும் மேய்க்கும் பெரிய வேலையை செய்ய வேண்டும். இயேசுவை ஓசன்னா! வாழ்க! என்று ஆர்பரித்து புகழ்ந்த ஜனங்கள் அவரை

விட்டு காணாமற் போனார்கள். ஆகவே பேதுரு "ஜீவாதிபதியை கொலை செய்தீர்கள்" என பிரசங்கிக்கிறான். அநேகர் இயேசுவை ஏற்று திருச்சபை என்னும் தொழுவத்திற்குள் வந்தனர். லூக்.15:1-7 வசனங்களில் இயேசு காணாமற்போன ஒரு ஆட்டின் மீதுள்ள கரிசனையை உவமையாக சொல்வதை காணலாம். தவறான போதனைகளும், ஆராதனை முறைகளும், குடும்ப பிரச்சனைகள் மற்றும் சோர்புகளினால் காணாமற்போன ஆடுகளை தேடும் பணியில் ஆயர்கள் செயல்படவேண்டும். இயேசுகிறிஸ்து ஆடுகளுக்காக தன் ஜீவனையும் விட்டார் என நாம் காண்கிறோம்.

3. மந்தையை போஷிக்கும் பொருப்புள்ள ஆயன் :

சங்.23:1,2 "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார் நான் தாழ்ச்சியடையேன், அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டு போய் விடுகிறார்". தாவீது இறைவனை ஒரு ஆயனாகவும் தான் ஒரு ஆடாகவும் பாவித்து இறைவன் தன்னை போஷிக்கும் விதத்தை கூறுகிறார். எசே.34:16 (திருவசனம்) "நசல் கொண்டதை திடப்படுத்துவேன்" என கூறுகிறார். ஆகவே தமது மந்தையை ஒரு போதகர் அல்லது ஆயன் போஷிக்க கூடியவராக இருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தை அவரில் தங்கியிருக்க வேண்டும். ஜெபத்திலும், தியானத்திலும் தரித்திருந்து மக்களுக்கு அதை போஷாக்காக கொடுக்க வேண்டும். போதகர் மக்களின் சரீர தேவைகளை முதலாவது சந்திக்க வேண்டும். மேலும் முக்கியமாக அவர்கள் ஆத்மீக தேவைகளை சரியாக பூர்த்தி செய்ய வேண்டும். அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் ஒரு போதகர் தெளிவுடன் எளிமையாக போதிக்கவும், பிரசங்கிக்கவும் வேண்டும். தம் சபையினருடன் ஒரு போதகர் தனிப்பட்ட முறையில் பழகி அவர்களின் தேவை அறிந்து செயல்பட வேண்டும். 2கொரி.1:3,4இன் படி ஆறுதல் செய்கிறவர்களாகவும், ஆலோசனை செய்கிறவர்களாயும் போதகர்கள் செயல்படுதல் அவசியம்.

இப்படி போதகர் செயல்படும்போது ஆயரின் திருப்பணி மக்களுக்கும் இறைவனுக்கும் மகிழ்ச்சியை கொடுக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

அருள்திரு A. ஜேக்கப் செல்லையா
குலவணிகர்புரம்

22.07.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 8ஆம் ஞாயிறு
(சிறைக்கைதிகள் ஞாயிறு – திரித்துவ 7)

பொருள் : **ஐக்கியம்**

பாடங்கள் : ஆதி.7:1-16; அப்.2:37-47; யோவா.15:1-17

வசனம் : *அப்போஸ்தலர் 2:46,47மு*

முன்னுரை :

ஆதி திருச்சபையின் ஐக்கியத்தை இவ்வசனம் பிரதிபலிக்கிறது. வேதாகமத்தில் ஐக்கியம் என்பது, ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து கொள்ளுதல், ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்தல், ஒருவரையொருவர் தாங்குதல், etc. ஐக்கியம் என்பது விசுவாசிக்கு தேவையான ஒன்றாகும். இது நம் விருப்பம் போல் தெரிந்து எடுக்கப்படும் உரிமையல்ல கட்டாயமாய் நிறைவேற்ற வேண்டிய கடமை ஆகும். இன்றை இரண்டாம்பாட பகுதி கூறுகிறது. 'அப்போஸ்தல உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும் . . . உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப்.2:42). எந்த ஒரு கிறிஸ்தவனும் யாருடனும் ஐக்கியம் இல்லாமல் நான் தனியாக இருப்பேன் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் ஐக்கியத்தில் தான் தேவ அன்பும், தேவ கிருபையும் அனுபவிக்கப்படுகிறது. ஆதி திருச்சபையில் ஐக்கியம் இருந்தபடியால்தான் ஆதி திருச்சபை செயல்படும் சபையாக விரிவடையும் சபையாக இருந்தது. தேவனுடைய திட்டத்தில் "சுயேச்சைக் கிறிஸ்தவர்கள்" என்று யாருமே கிடையாது.

ஆலயத்திற்கு தவறாமல் வருகைதரும் விசுவாசி ஒருவர் திடீரென ஆராதனைக்கு வருவதை நிறுத்தி விட்டார். சபைகுரு, சபை ஊழியருடன் சென்று அவரை சந்தித்தார். சபைகுரு அந்த சிறிய வீட்டில் விறகு வைத்து எரிந்து கொண்டிருந்த அடுப்பருகில் சென்று அமர்ந்து பேச ஆரம்பித்தார். போதகர் அடுப்பில் இருந்த ஒவ்வொரு விறகாக எடுத்து வெளியே வைத்தார். விரைவில் எல்லாம் அணைந்து சில நிமிடங்களில் குளிர்ந்து போனது. குருவானவர் தன்னை வார்த்தைகளால் கடிந்து கொள்வார் என்று எதிர்பார்த்த அந்த மனிதர் போதகர் செய்த செயலை புரிந்து கொண்டார். ஐக்கியத்தின் அவசியத்தை அறிந்து ஒழுங்காக ஆலயம் செல்ல தீர்மானித்தார். இன்றைய தினத்திலும் ஐக்கியத்தின் அவசியத்தை தியானிப்போம்.

1. ஒருவரையொருவர் தூக்கி விட அவசியமானது - ஐக்கியம் (அப்.2:46)

ஆதி திருச்சபையின் விசுவாசிகள் எல்லாவற்றையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள். புதிய விசுவாசிகள் ஒரே குடும்பமாக சகலத்தையும்

பொதுவாய் வைத்தார்கள். ஒருவருக்கு ஒருவர் உதவி, ஒருவரையொருவர் தாங்க ஐக்கியம் அவசியமாகிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கனெக்டிகட் என்னும் இடத்தில் ஒரு நீரோடை உண்டு. அதற்கு ஒரு நீண்ட இந்தியப் பெயரும் உண்டு. அதற்கு பொருள் "உன்னுடைய கரையில் நீ மீன்பிடி; என்னுடைய கரையில் நான் மீன் பிடிப்பேன்" என்பதாகும். இதுதான் உலகின் மனப்பான்மை. இன்னும் சொல்லபோனால் "நீ உன் வேலையை பார்; நான் என் வேலையைப் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்பதாகும். இது கிறிஸ்தவ ஐக்கியத்தின் மனப்பான்மை அல்ல. வேதம் காட்டும் ஐக்கியம், ஆதித் திருச்சபையில் இருந்த ஐக்கியம் தன்னலமற்ற, ஒருவரையொருவர் சார்ந்து வாழும் வழியாகும். "நீ என்னுடைய காரியங்களை கவனி, நான் உன்னுடைய காரியங்களை கவனிக்கிறேன்"; ஏனெனில் நாம் ஒருவருக்கொருவர் அவசியம் இப்படிப்பட்ட அனுபவத்துடன் நாம் இருக்க தேவன் விரும்புகிறார். அப்படியாக நாம் செல்படும் போது ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்போம். நல் ஆலோசனை சொல்வோம் செயல்படவும் அது வழிகொடுக்கும்.

ஒண்டியாய் இருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம். அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும். ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கி விடுவான். ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே. (பிர.4:9,10). ஐக்கியத்தின் உடனடி பலன் ஒருவருக்கு ஒருவர் ஆன்மீக அனலையும், ஆன்மீக பலத்தையும் தூக்கிவிடுவதே. சபைக்கு செல்வது ஆராதிக்க மட்டும் அல்ல; பிறரை விசாரிப்பதற்கும் தான்.

2. ஆசீர்வாதம் பெற கனி கொடுக்க அவசியமானது - ஐக்கியம் (யோவா.15:5)

இயேசு கிறிஸ்து திராட்செடியின் உவமையை கூறும்போது இயேசு கிறிஸ்து திராட்சை செடியாகவும், பிதா, திராட்சைத் தோட்டக்காரராகவும், விசுவாசிகளை கொடிகளாகவும் கூறுகிறார். இயேசுவாகிய திராட்சைச் செடியில் நிலைத்திருப்பன் - ஐக்கியம் கொண்டிருப்பவர்கள் கனி கொடுப்பார்கள்.

ஐக்கியத்தின் ஆசீர்வாதம் கனிகொடுக்க செய்யக் கூடியது. கோடையின் உச்சகட்ட காலத்தில், உயர்ந்த மலைகளில் படிந்திருக்கும் பனியானது உருகி வறண்ட நிலத்தை நனைத்து புத்துயிருட்டுகிறது. அதுபோல தேவனுடைய பிள்ளைகளிடையே, விசுவாசிகளிடையேயுள்ள ஐக்கியம் பிறருக்கு வாழ்வழித்து தேவமகிமைக்கு என்று கனி கொடுக்கின்றது.

ஒரு பத்திரிக்கையில் ஆப்ரிக்காவின் ஒரு சிறு கிராமத்தில் நடந்த உண்மை சம்பவம் ஒன்றை வாசித்து கொண்டு இருந்தேன். அங்கே நடந்த சம்பவம்; சிறுவன் ஒருவன் காணாமல் போய்விட்டான். கிராமமக்கள் பல

திசைகளில் சென்று தேடினார்கள். பலன் கிடைக்கவில்லை. இரவு நெருங்க நெருங்க சிறுவனின் தாய் மிகவும் கலங்கினாள். தனது மகனுக்கு காட்டு விலங்கு மூலம் பாதிப்பு வந்துவிடுமோ என்று பொழுதுவிடிந்த போதும் சிறுவனை பற்றி எந்த தகவலும் இல்லை. இறுதியாக காலையில் கூடி ஆலோசித்தார்கள். தங்கள் கைகளை கோர்த்து சேர்ந்து தேடுவது என்று. அப்படி அவர்கள் செய்தபோது சிறுவனை கண்டுபிடித்தார்கள். ஆனால் காலம் பிந்திவிட்டது. சிறுவன் மரித்தவனாக கிடந்தான். அழுது புரண்ட தாய் கூறினாள், "ஏன் நீங்கள் முதலிலேயே கைகளை கோர்த்து தேடாமல் போனீர்கள் என்று". பிரியமானவர்களே, நம்மில் ஐக்கியம் பெருகுமானால், உலகிற்கு ஆசீர்வாதம் பெருகும் தேவனுடைய மகிமைக்காகக் கனியும் பெருகும்.

3. வளர்ச்சியடைய நிலைத்திருக்க அவசியமானது - ஐக்கியம்

தொலைந்துபோன ஆட்டைக் குறித்த உவமையை அறிவோம். ஆடு காணாமல் போவது எப்படி? மந்தையை விட்டு பிரிந்து அலைவதினாலே, மந்தையைவிட்டுப் பிரிவது எப்படி? மந்தையில் ஐக்கியம் இல்லாததினாலேயே. இன்று இதுதான் "ஆவிக்குரிய சபை" என்று அங்கும் இங்கும் ஓடி நிலைத்திருக்காத பல தரமற்ற விசுவாசிகளை திருச்சபையில் இன்று நாம் காண்கிறோம். இதனால் ஆவிக்குரிய வளர்ச்சி இல்லை, சபை வளர்ச்சி இல்லை, சத்துருவின் கையில் சிக்கி விடுகிறோம். தாய்கோழியுடன் இருப்பதுதானே குஞ்சிக்கு பாதுகாப்பு. அது தனது தாயை விட்டு விலகிச் செல்லும்போது, சுய இஷ்டத்துடன் அங்கும் இங்கும் ஓடிச் சென்று இரைசேகரிக்க ஆசைப்படும்போது அதைத் தூக்கிச் செல்வது பருந்துக்கு எளிதாகிறது. ஒன்றாய் ஓங்கி ஒன்றாய் ஒளிர்வதே தமது பிள்ளைகளைக் குறித்து தேவனது திட்டமும் விருப்பமுமாய் இருக்கிறது.

எனவே ஐக்கியத்தின் அவசியம் நாம் வளர்ச்சியடைய - ஆவிக்குரிய, உலக பிரகாரமாக; விசுவாச வாழ்வில் நிலைத்திருக்க. ஒவ்வொரு விசுவாசியும் தான் சார்ந்து ஆராதிக்கிற சபையில் (Local Church) நல்ல ஐக்கியம் வைத்துக் கொள்ள வேண்டும். Fellowship என்ற வார்த்தைக்கு 'Ev. ஓவன் ராபர்ட்ஸ் கூறும் விளக்கம். "Two fellow in one ship; that is called fellowship". இருவர் ஒரு கப்பலில் சேர்ந்து பிரயாணம் செய்வதுதான் ஐக்கியம். இந்த ஐக்கியம் முதலாவது ஒவ்வொருவருக்குள்ளும், தங்கள் சபையிலும் உருவாகும் போது அந்த சபை வளர்ச்சியடையும்; அந்த விசுவாசியும் வளர்ச்சியடைந்து நிலைத்திருந்து கனி கொடுப்பான்.

ஐக்கியம் விருப்பம்போல் தெரிந்தெடுக்கும் உரிமையல்ல; ஒவ்வொரு விசுவாசியும் கட்டாயமாய் நிறைவேற்ற வேண்டிய கடமை. ஐக்கியத்தின் அவசியத்தை உணர்ந்து தரமுடைய கிறிஸ்தவ விசுவாசிகளாக திகழ ஆண்டவர் உதவி செய்வாராக ஆமென்.

அருள்திரு ஆசீர்வாதம் ராஜகுமார், பாலூர்சத்திரம்

22.07.2007

புனிதர் மகதலேனா மரியாள்

பாடங்கள் : செப்.3;14-20; 2யோவா.1:1-9; யோவா.20:11-18

முன்னுரை :

மகதலேனா மரியாள் கலிலேயாக் கடலுக்கு வடமேற்கு ஓரத்திலுள்ள மக்தலா என்னும் ஊரைச் சார்ந்தவள். இந்த மகதலேனா மரியாளிடமிருந்து இயேசு ஏழு பிசாசுகளைத் துரத்தினார். பிசாசின் பிடியிலிருந்து இயேசுவின் மூலம் அற்புதமாக விடுதலை பெற்றதால், இயேசுவோடு கூட கடைசிவரை இருந்து உயிர்த்தெழுந்த இயேசுவை முதன் முதலாக கண்டு பிறருக்கு அறிவித்தவள் இந்த மரியாள் ஆகும்.

விடுதலைப் பெற்ற மரியாள் :

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் சுகம் பெற்றவர்கள் ஏராளமானவர்கள். அவர்களில் மகதலேனா மரியாளும் ஒருவர். இவள் ஏழு பிசாசுக்களால் பீடிக்கப்பட்டு பெறும் வேதனைபட்டாள். இயேசு இவளிடமிருந்த பிசாசுக்களை துரத்தினார். எனவே அவள் தெளிந்த புத்தியுள்ளவளாய் தம் பாவ வாழ்க்கையை விட்டு இயேசுவை பின்பற்றி அவருடனே இருந்தாள் (லூக்.8:2). எனவே இவள் சமாதானம், சந்தோஷம் நிறைந்த வளர்க விடுதலையோடு வாழ்ந்தாள். மகதலேனா மரியாளுக்கு மட்டுமல்ல யார், யார் இயேசுவிடம் வருகிறார்களோ அத்தனை பேருக்கும் விடுதலை வாழ்வளிக்க இயேசு ஆவலோடு காத்திருக்கிறார். இன்றும் மக்கள் பலவித பயத்தின் ஆவி ஏமாற்றம், தோல்வி, எதிர்காலத்தை குறித்த கவலை போன்ற பிசாசின் பிடியில் சிக்குண்டு தவிக்கின்றனர். இயேசு ஒருவர் மட்டுமே இப்படிப்பட்ட பிசாசின் பிடியிலிருந்து விடுதலை தர முடியும்.

நன்றி செலுத்தும் மரியாள் :

மகதலேனா மரியாளுக்கு இயேசு கொடுத்த விடுதலையை அவள் இறுதிவரையிலும் மறக்கவில்லை. கர்த்தருக்கு நன்றியுள்ளவளாக அன்புள்ளவளாக காணப்பட்டாள் (லூக்.8:3). அநேக மக்கள் தேவனிடமிருந்து பலவகையான ஆத்தும, சரீர சுகங்களை பெற்றுக் கொள்கிறார்கள். சில நாட்களுக்குள்ளேயே அதை மறந்து பழைய பாவ வாழ்வுக்கே திரும்புகின்றனர். சிலர் எப்போதும் சுகமாக, மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்றும் துன்பங்கள், பாடுகள் வந்தால் ஓடிவிடுவதை காண்கிறோம். இயேசுவுக்கு பாடுகள் வரும்போது பேதுரு மறுதலித்தான். யூதாஸ்

காட்டி கொடுத்தான். சீஷர்கள் அனைவரும் சிதறி ஓடினார்கள். ஆனால் மகதலேனா மரியாள் துணிவோடு கடைசிவரை இயேசுவை பின்பற்றினாள். கல்வாரி பாதையில் பின் சென்றாள் (யோவா.19:25). அவர் மரிக்கும் பரியந்தம் அவருடைய தாயாரோடு ஆதரவாக நின்றாள். ஞாயிறு விடியற் காலையில் அதிக இருட்டோடே அவர் உடலுக்கு வாசனை பொருட்களை கொண்டு சென்ற பெண்களில் மரியாளும் ஒருத்தி மற்றவர்கள் திரும்பி சென்று விட்டனர். மரியாள் அங்கேயே நின்று உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை முதன் முதலில் தரிசித்தாள். மரியாள் தன் வாழ்நாள் முழுவதும் கர்த்தர் தனக்கு செய்த நன்மையை எண்ணி நன்றியோடு ஜீவித்தாள். அவளை போல நாமும் கர்த்தர் நமக்கு செய்த எண்ணிலடங்கா கிருபைகளை வாழ்நாள் முழுவதும் நினைத்து, நினைத்து ஸ்தோத்திரம் செலுத்தி நன்றியுள்ளவர்களாக காணப்பட வேண்டும்.

அறிவிக்கும் மரியாள் :

வாரத்தின் முதல் நாள் காலையில் அதிக இருட்டோடே மகதலேனா மரியாள் கல்லறைக்கு வந்து கல் எடுத்துப் போட்டிருக்கக் கண்டாள். அப்போது ஒரு தூதன் இயேசு உயிர்த்தெழுந்தார் என்று சொன்னார். எல்லாரும் தங்கள், தங்கள் இடத்திற்கு சென்றனர். ஆனால் மகதலேனா மரியாள் மட்டும் அங்கு நின்று இயேசுவை வாஞ்சையோடு தேடினாள். வாஞ்சையோடு தேடிய அவளை இயேசு 'மரியாளே' என்று அழைத்தார். அவரின் அன்பின் குரலை அடையாளம் கண்டு கொண்டாள். உடனே அவள் 'ரபூணி' என்றாள். அவளுடைய அன்பு, நேசம், உயிர்த்தெழுந்த இரட்சகரை முதன் முதலில் தரிசிக்கும் பாக்யம் கிடைத்தது. அவள் உடனே ஓடி தான் கர்த்தரைக் கண்டதை முதன், முதல் சீஷர்களுக்கு அறிவித்தாள் (யோவா.20:18). இவ்வாறு முதல் சுவிசேஷகி என்ற பெயர் பெற்றாள்.

இந்த மகதலேனா மரியாளைப் போல் நாமும் இயேசு கிறிஸ்து விடமிருந்து ஏராளமான ஆத்தும, சரீர நன்மைகளை பெற்று வருகிறோம். நன்மைகளை, பெற்ற நாம் மகதலேனா மரியாளை போல இயேசுவிடம் அன்பு கூறுகிறோமா? இயேசுவை அறியாதவர்களுக்கு இயேசுவின் அன்பை எடுத்துரைக்கிறோமா? மக்களுக்கு துரிதமாக நற்செய்தி அறிவிக்க மரியாளை போன்று விடுதலையோடு, வாஞ்சையாக ஊழியம் செய்ய இயேசு நம்மை அழைக்கிறார். அர்ப்பணிப்போமா.

திருமதி லலிதா இர்ராஜசேகரன்
பாளையங்கோட்டை

25.07.2007

புனிதர் யாக்கோபு திருநாள்

பாடங்கள் : அப்.11:27-12:13; மாற்.10:35-45

வசனம் : *மத்தேயு 20:23மு*

முன்னுரை :

வேதாகமத்தில் பல யாக்கோபுகளைப் பார்க்கிறோம். பழைய ஏற்பாட்டு யாக்கோபு, புதிய ஏற்பாட்டில் 1) செபதேயுவின் குமாரன் யாக்கோபு, 2) அல்பேயுவின் குமாரன் (மாற்.15:40), 3) யூதாசின் தகப்பன் யாக்கோபு (லூக்.6:16). 4) இயேசுவின் சகோதரன் யாக்கோபு (யோவா.7:5). இவர்களில் செபதேயுவின் குமாரனும், யோவானின் சகோதரனுமாகிய யாக்கோபே நாம் இன்று ஆசரிக்கிற யாக்கோபு.

1. இடிமுழக்கத்தின் மகன் :

பொதுவாக நாம் யாரை அதிகமாய் நேசிக்கிறோமோ, அவர்களைச் செல்லமாக ஒரு பெயர் வைத்து அழைப்போம். ஆண்டவர் இயேசு யாக்கோபையும் யோவானையும் நேசித்தபடியால் அவர்களை, "இடிமுழக்கத்தின் மக்கள்" (மாற்.3:17) என்று செல்லப்பெயரிட்டு அழைத்தார். உண்மையாகவே யாக்கோபும், யோவானும் இடிமுழக்கமாக முழங்கினார்கள். ஒரு விசை ஆண்டவர் இயேசு கிறிஸ்து தமக்கு இடத்தை ஆயத்தம் பண்ண தம் தூதர்களை அனுப்பினார். அந்த ஊரார் இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை. யாக்கோபும் யோவானும், "ஆண்டவரே, எலியா செய்தது போல வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா? என்றார்கள் (லூக்.10:54). ஆண்டவர் இயேசு அழிக்க அல்ல; இரட்சிக்கிறதற்கே வந்தபடியால் அவர்களைக் கடிந்து கொள்கிறார்.

மேலும், யாக்கோபும் அவர் சகோதரன் யோவானும், அவர்களில் ஒருவர் ஆண்டவருடைய வலது பாரிசத்திலும் ஒருவர் இடது பாரிசத்திலும் தேவனுடைய இராஜ்ஜியத்தில் அமர வேண்டுகிறார்கள். ஆண்டவர், "நீங்கள் நான் குடிக்கும் பாத்திரத்தில் பானம் பண்ணுவீர்களா? நான் பெறும் ஸ்நானத்தைப் பெறுவீர்களா? என்று கேட்டபோது, ஆம், நீர் குடித்த பாத்திரத்தில் குடிப்போம்; நீர் பெறும் ஸ்நானத்தையும் பெறுவோம்" என்று முழங்குகிறார்கள். ஆண்டவர் எதைச் செய்தாலும் தாங்களும் அதை செய்வோம் என்று சூழுரைக்கிறார்கள். அருளுரை வசனத்தில் ஆண்டவர் இயேசுவும் அதை ஆமோதிக்கிறதை நாம் வாசிக்கிறோம்.

2. இயேசுவோடுள்ள அனுபவம் :

அ) ஜெப ஆலயத் தலைவனாகிய யவீருவின் மகள் மரித்த நேரத்தில் ஆண்டவர் இயேசு அவளை உயிரோடெழுப்பி அற்புதத்தை நடத்திய போது,

யாக்கோபு, பேதுரு, யோவான் ஆகிய மூவரை மாத்திரம் இயேசு யவீருவின் வீட்டினுள் அழைத்துச் சென்றார் (மாற்.5:22-43).

ஆ) ஆண்டவர் இயேசு மறுரூபமானபோது, மறுரூபமலைக்கு, யாக்கோபு, பேதுரு, யோவான் ஆகிய மூவரையும் அழைத்துச் சென்றார் (மத்.17:1,2; மாற்.9:1,2; லூக்.9:28).

இ) அகில உலகத்தின் பாவத்தையும் இயேசு கெத்செமெனே என்னும் எண்ணெய் ஆட்டியெடுக்கும் செக்"கில் சுமந்து, துக்கப்படவும் வியாகுலப்படவும் தொடங்கியபோது, யாக்கோபு, யோவான், பேதுரு ஆகிய மூவரையும் இயேசு அழைத்துச் சென்றார் (மத்.26:37; மாற்.14:32).

ஆண்டவர் இயேசுவோடுள்ள அனுபவத்திலே யாக்கோபு, ஜெபவீரனாக, விசுவாசியாக, மேலும் உத்தம சாட்சியாக இருந்திருக்க வேண்டும். ஆகவே தான் இயேசு இம்மூன்று முக்கிய அனுபவங்களிலும் யாக்கோபைத் தம்மோடு வைத்திருந்தார் எனலாம்.

3. இயேசு குடித்த பாத்திரம்; இயேசு பெற்ற ஸ்நானம் :

கெத்செமெனே தோட்டத்தில் ஆண்டவர் இயேசு, "இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும்" என்று ஜெபித்த போது, தம்மிடம் விடவும் பாடு, மரணத்தையே, "பாத்திரம்" என்று குறிப்பிடுகிறார். ஆண்டவர் இயேசு, "நான் முழுக வேண்டிய ஸ்நானமுண்டு" என்று கூறுகிறார். நான் உடன் அடக்கம் பண்ணப்பட இருப்பதையும் மீண்டும் உயிர்தெழும்ப இருப்பதையும் குறிப்பதற்கே அவ்விதமாகக் குறிப்பிட்டார்.

யாக்கோபு ஆண்டவர் இயேசுவிடம், "நீர் குடிக்கும் பாத்திரத்தில் குடிப்பேன்" என்று கூறியது. இயேசுவைப் போல பாடுபடுவேன் என்பதையும், நீர் பெறும் ஸ்நானத்தைப் பெறுவேன்" என்று கூறியது இயேசுவைப் போல அடக்கம் பண்ணப்படுவேன் என்பதையும் குறிக்கிறது எனலாம். அப்.12:12இல் இந்த யாக்கோபு ஏரோது அகிரிப்பா 1ஆல் கி.பி.44இல் சிரச்சேதம் செய்யப்பட்டார் என்பதிலிருந்து இயேசு குடித்த பாத்திரத்தில் இவர் பானம் பண்ணினார் என்றும் இயேசு பெற்ற ஸ்நானத்தை இவர் பெற்றார் என்று அறிகிறோம்.

முடிவுரை :

யாக்கோபு இயேசுவுக்காக இடிமுழக்கமாக முழங்கியது போல நாமும் இயேசுவைக் கூறி அறிவிப்போம்; யாக்கோபு இயேசுவினால் ஜெபவீரனாக, விசுவாசியாக, உத்தம சாட்சியாகக் கண்டறியப்பட்டது போல நாமும் வாழ்வோம். யாக்கோபு இயேசுவுக்காக மரிக்க அர்ப்பணித்தது போல மரணமே நேரிட்டாலும் இயேசுவைப் பின் செல்ல அர்ப்பணிப்போம்.

அருள்திரு D. ஆண்ட்ரூ கிறிஸ்டோபர்

29.07.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 9ஆம் ஞாயிறு
(பாலர் ஞாயிறு – திரித்துவ 8)

பொருள் : திருச்சபையில் சிறுவர்கள்

பாடங்கள் : 1சாமு.3:1-21; எபே.6:1-4; மாற்.10:13-16;

வசனம் : *மத்தேயு 18:10*

சார் பெரியவங்களுக்கு உள்ள உட்கார இடமில்லை . . . ஆமா என்ன செய்றது? . . . டேய்! சின்ன பசங்களா நீங்களெல்லாம் எந்திருச்சி, வெளியில் போய் உட்காருங்கடா! இதுதான் அநேக சபைகளில் சிறுவர்களுக்கெதிராக கூறப்படும் அதட்டல் வார்த்தைகள் ஆலயத்திற்கு வெளியேயாவது சிறுவர்கள் ஆராதனைக்கான சரியான அமைப்பு, ஊழியர்கள் இருப்பார்களா என்றால் அதுவும் இல்லை! சிறுவர்களை அற்பமாய் எண்ணுவதும் அவர்கள் தங்களைக் காத்துக்கொள்ள சக்தியற்றவர்கள் என்பதால் அவர்களைக் கொடுமைப்படுத்துவதும் பாவமே. இப்படியிருக்க திருச்சபை சிறுவர்களைக் குறித்து வேதம் என்ன கூறுகிறது?

1. இறையாசியின் அடையாளங்கள் :

பொதுவாக, குழந்தைகள் இறைவனின் சிறந்த ஆசி என்று திருமறை கூறுகிறது (ஆதி.1:28). "இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்", என்று சங்கீதம் 127:4இல் காண்கிறோம். பிள்ளைகள் இறைவன் தரும் அருளாக; அருங்கொடைகளாக கருதப்பட்டனர். திருச்சபையின் சிறுவர்கள் இறை ஆசி அல்லது அருளின் அடையாளங்கள் என்பதை நாம் இன்னமும் தெளிவுபடுத்த; ஆதி.33:5, ஆதி.48:9 ஆகிய இரண்டு வசனங்களை வாசித்துப் பாருங்கள். யாக்கோபு ஏசாவினிடத்தில்; தேவன் உமது அடியானுக்கு அருளின பிள்ளைகள், என்றும் யோசேப்பு இஸ்ரவேலினிடத்தில் (யாக்கோபு) இவர்கள் தேவன் எனக்கு அருளின குமாரர் என்றும் கூறுகின்றனர். பல நேரங்களில் நமது பிள்ளைகளை 'பிசாசு' என்றும் 'கழுதை' என்றும் நாம் கூறுவது, தேவனின் கரங்களிலிருந்து நாம் பெற்றிருக்கிற அருளை உதாசினப்படுத்துகிறோம் எனலாம்.

2. இறையாசீர்வாதங்களின் அடையாளங்கள் :

சங்கீதம் 128:3 ஒலிவமரக் கன்றுகள் பிள்ளைகளின் எண்ணிக்கையை குறிக்காமல், வளமிக்கத் தன்மையை குறிக்கின்றது. ஒலிவக் கன்றுகள் நேராக, உயரமாக வளர்வதுடன், நீண்ட கால பலன் தரக் கூடியதாகும். சங்.127:4இல் வால வயதுப் பிள்ளைகள், வயதான காலத்தில் அவர்களுடைய பெற்றோர்களை பாதுகாத்து ஆதரிப்பார்கள். மேலும் அம்புகள் வெற்றியைக்

கொண்டு வருகிறது. எனவே பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களை பாதுகாத்து ஆதரிப்பதினால் ஏற்படும் வெற்றியுள்ள வாழ்விற்கு விளக்கமாக போர் வீரனின் அம்பிற்கு ஒப்பிடப்பட்டுள்ளார்கள். ஆதி.15:16; "நீ பயப்படாதே, நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்" என்ற வாக்குத்தத்தத்தை தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆபிரகாம், ஆசீர்வாதத்திற்கு அடையாளமாக, எனக்கு ஒரு குழந்தையைத் தர வேண்டும் என்று கேட்பதைக் காணமுடிகிறது (ஆதி.15:1-16). எனவே பிள்ளைகள் பல்வேறு விதங்களில் இறைவன் தரும் ஆசீர்வாதங்களின் அடையாளங்களாக விளங்குகின்றார்கள் எனலாலம்.

3. இறையரசின் அடையாளங்கள் (மாற்.10:13-16)

இங்கு பிள்ளைகள் இயல்பாகவே இறையரசின் சொந்தங்களே என்று இயேசு அழுத்தமாக கூறுகின்றார். சிறு பிள்ளைகளை இயேசு தொடும்படி, அவர்களை அவரிடம் கொண்டு வந்தனர். வைதீக யூதரின் மனப்போக்குகளைப் பிரதிபலித்த சீடர்கள், அவர்களை தடை செய்தனர். அதைக் கண்ட இயேசு மனவேதனையுற்று, "அவர்களை தடுக்காதிருங்கள்", இறையரசு இப்பேர்ப்பட்டவருக்கே கூறியது என்றார். அறிவுப் பெருக்கம், சடங்காசாரங்கள், பதவிகள், ஆலய கடமைகளை நிறைவேற்றுதல் போன்றவைகளால் மட்டும் இறையரசினுள் நுழைந்து விடலாம் என்ற யூத எண்ணம் இங்கு மறைமுகமாக மறுக்கப்படுகிறது. 'சிறு பிள்ளையைப் போல் இறையரசை ஏற்றுக் கொள்ளாத எவரும் அதில் நுழைவதில்லை. மத்.18:3 என்ற இயேசுவின் வார்த்தை நம்மை சிந்திக்கத் தூண்டுகிறது. சிறுபிள்ளைகளைப் போல், விசுவாசம், நம்பிக்கை, கசப்பை உடனடியாக வெளியேற்றுதல், தாழ்மை, சண்டையிட்டாலும் உடனடியாகவே ஏற்படுத்தும் ஐக்யம், இப்படிப்பட்ட குணங்கள் இங்கு தெளிவாக குழந்தைகள் மூலமாக வெளிப்படுத்தப்படுகிறது. எனவே பிள்ளைகள் இறையரசின் அடையாளங்களாக திருமறையில் கூறப்பட்டுள்ளனர் என்று நாம் தெளிவாக கூற முடிகிறது.

நிறைவுரை :

பாலிய திருமணம், குழந்தைத் தொழில், பெண்சிசுக் கொலை போன்ற அவல நிலைகள் காணப்படுகின்றது. பெலன் இல்லாதோர், பாதுகாப்பற்றோர் இவர்களுக்காக தேவதூதர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் இறைவனிடத்தில் பிள்ளைகளுக்காக முறையிடுவார்கள் என்றும் இயேசு எச்சரிக்கிறார். எனவே திருச்சபையின் சிறுவர்கள், இறையாசீர்வாதத்தின், இறையரசின் அடையாளங்கள் என்பதை திருமறை மூலமாக அறிந்து கொண்ட நாம், நமது பிள்ளைகளை புதுக் கண்ணோட்டத்தோடு பார்த்து அன்பு செலுத்துவோம்.

அருள்திரு H.E. சந்திரகுமார்
பாலியர் சங்கம்

01.08.2007

மாதத்தின் முதல் நாள்

வசனம் : *'உன் தேவனாகிய கர்த்தர் உன்னுடைய எல்லாக் கிரியைகளிலும், நீ கையிட்டுச் செய்யும் எல்லா காரியங்களிலும் உன்னை ஆசீர்வதிப்பார்' (உபா.15:10).*

நம்மைத் தம்முடைய கிருபையினால் மீட்டு, அழைத்து தம்முடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் கொடுத்த நம்முடைய தேவன் நம்மை ஆசீர்வதிக்கவே விரும்புகிறார். நன்மையான ஈவுகளை நம்முடைய வாழ்க்கையில் கொடுத்து எல்லாக் காரியங்களிலும் நம்மை வெற்றி சிறக்க பண்ணுகிறவராக இருக்கிறார். மட்டுமல்ல ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தையும் தந்து ஆசீர்வதிக்கிறார்.

கிரியையில் ஆசீர்வாதம் :

இன்றைக்கு உலகமக்கள் பலர் தங்கள் தொழிலில் விருத்தி இல்லை, ஆசீர்வாதம் இல்லை என்று ஏங்கித் தவிக்கிறார்கள். உலகத்து மக்களுக்கும் நமக்கும் பெரிய வித்யாசம் உண்டு. நம்முடைய ஆண்டவர் நம்மோடு கூட இருக்கிறார். அவர் நம்மோடு கூட இருக்கும்போது நமக்கு ஆசீர்வாதம் உண்டு என்பதை நாம் உணர வேண்டும். கிரியை என்று சொன்னால், திக்கற்றவர்கள், ஏழைகளுக்கு உதவி செய்வது (நீதி.31:20) என்ற வசனத்தைப் போல நம்முடைய கையில் கிரியை நேர்மை தவறாமல் இருக்கும்போது கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

காரியங்களில் ஆசீர்வாதம் :

நாம் அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கும்போது நாம் பேசுகிற காரியம், நாம் எந்த காரியத்தைச் செய்தாலும் அவர் ஆசீர்வதிப்பார் (2நாளா.26:5). யூதாவின் இராஜாவாகிய உசியா கர்த்தரை தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச் செய்தார். அவன் கீர்த்தி வெகுதூரம் பரம்பிற்று. கர்த்தர் யோசேப்போடே அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் (ஆதி.39:2,3).

மேன்மேலும் ஆசீர்வதிப்பார் :

உபா.15:5இன்படி ஆண்டவர் நம்முடைய கிரியைகள், காரியங்கள் மட்டுமல்ல. நம்முடைய அப்பத்தையும், தண்ணீரையும், ஆசீர்வதித்து, நமக்கு பரிசுத்தத்திற்கு மேல் பரிசுத்தம் கிருபைக்கு மேல் கிருபை, பெலத்தின் மேல் பெலம், மகிமையின் மேல் மகிமையும், நீதியின் மேல் நீதியும் அவர் ஒருவரே தரமுடியும். அப்படிப்பட்ட மேன்மையான ஆசீர்வாதங்களை ஆண்டவர் தாமே உங்கள் அனைவருக்கும் தருவாராக ஆமென்.

திரு ஆல்வின் பிரைட், பூக்குழி

05.08.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 10ஆம் ஞாயிறு
(திரித்துவ 9)

பொருள் : **இறைமக்களின் அருட்பணி**

பாடங்கள் : ஆமோஸ் 2:4-8; யாக்.5:1-6; மத்.25:31-46

வசனம் : *மாற்கு 6:37மு*

முன்னுரை :

நியாயமும் நீதியும் நிறைந்த எங்கள் ஆண்டவரே, அநீதி நிறைந்துள்ள உலகில் நீர் இருக்கிறபடியும் விரும்புகிறபடியும் நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்ட திருச்சபை மக்களாகிய எங்களை வைத்திருக்கிறீர். நாங்கள் எங்கள் சொல்லாலும் செயலாலும் தேவநீதி, சமூகநீதி நிலைநாட்ட நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் எங்களை தம்முடைய கரத்தில் எடுத்து பயன்படுத்துவீராக. ஆமென்.

1. தீர்க்கராகிய ஆமோஸின் அருட்பணி :

தீர்க்கராகிய ஆமோஸ் கி.மு.8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து யாவேயின் தீர்க்கராக யூதா இஸ்ரவேல் ஆகிய இரு கோத்திரத்தாருக்கும் சுற்றிலும் வாழ்ந்த இதர புறவினத்தாருக்கும் அவர்களது பாவச் செயல்களை கண்டித்துரைத்து அவர்களுக்கு வரும் தேவதண்டனைத் தீர்ப்பையும் கூறி சமூக நீதியை எடுத்துரைத்தவராவர்.

தமது அன்றாடக வாழ்க்கை அலுவலில் ஈடுபாடு கொண்டவரான இவரை யாவே அழைத்து சமூக நீதிக்காக யாவேயின் சார்பில் போராடி வெற்றிபெற அழைப்புப் பெற்றார். நாமும்கூட நம் வாழ்க்கையில் பல்வேறு துறைகளில் பணியாற்றினாலும் இறைமக்களாக இந்த அருட்பணியைச் செய்து வருவோமாக.

இவரது காலத்தில் வாழ்ந்துவந்த மக்களின் அதாவது உயர்மட்ட நிலையிலிருந்த சமுதாய அந்தஸ்து அதிகாரவர்க்கத்திலிருந்தவர்களின் கொடூர வன்செயல்கள், லஞ்ச லாவண்யம் ஏழை எளிய மக்களை நசுக்கி, ஒடுக்கிய செயல்கள் அடங்கி ஆடை அவலநிலைகள் முதலிய அனைத்தையும் நேருக்கு நேர் மோதி இடித்துரைத்து வந்தார். யாவேயின் தெய்வநீதி சமதர்ம வாழ்க்கை நிலை அனைவருக்கும் கிடைக்க இறை தொண்டராக அருட்பணியாற்றினார். கிறிஸ்தவர்களாக நாம் அழைக்கப்பட்டிருக்கும் நோக்கமும் நமது பணியும் இதுவேயாகும். இந்நினைவை அயராது நித்தமும் செயலாற்றுவோமாக.

2. கர்த்தருடைய சகோதரராகிய யாக்கோபின் அருட்பணி :

யாக்கோபு இத்திருமுகத்தில் செல்வந்தர்களுக்கு எதிராக விடுக்கும் எச்சரிக்கை யாக்.5:1-6இல் உள்ளது. செல்வம் பாவமல்ல. செல்வந்தரா யிருப்பதும் பாவமல்ல. ஆனால் செல்வந்தராக குறுக்குவழியிலும் நேர்மை யற்ற விதத்திலும் வாழ்க்கை நடத்துவதே பாவம். இப்பகுதியில் கூறப்படும் செல்வந்தர்கள் எந்தெந்த வழிமுறைகளிலெல்லாம் ஆஸ்தியைச் சேர்த்து ஏழைகளை ஒடுக்கி இரத்தத்தை உறிஞ்சி குடித்து மாம்சத்தை பிய்த்தெடுத்து தங்களை கொழுக்க வைத்துக் கொண்டார்கள் என தெளிவாகக் கூறுகிறார் அருட்தொண்டர். இந்த நூற்றாண்டிலும் இதைப் போல் வாழும் மக்கள் இருக்கின்றனரே. இவர்களுக்கு இவ் எச்சரிக்கை மிகப் பொருத்தமானதே.

ஆமோஸ் 8:4-8இல் சமுதாய அநீதி அதைச் செய்வோரின் முன்னிறுத்தப்பட்டு, இவற்றைச் செய்வோரை யாவே ஒருபோதும் அனுமதிக்கமாட்டார் எனவும், மறப்பதில்லை எனவும் கூறி தேசத்திற்கு வரும் பேரழிவும் மக்கள் அனைவரும் துக்கிப்பர் எனவும் சேர்த்தே கூறப்படுகிறது. நாம் வாழ்ந்து வரும் 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 21ம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலும் இச்செய்தி எத்துணை அளவுக்கு சால பொருத்தமானது எனவும் உயிருள்ள தேவனுடைய வார்த்தை இன்று கூட அவசியமாயுள்ளது எனவும் தெரிகிறதல்லவா?

அறிவியலிலும் அரசியலரங்கிலும் மிகமிக முன்னேறிய அமெரிக்காவில் எத்தனை பெரிய அழிவுகள் அடுத்தடுத்து கடற்சீற்றங்கள் மக்கட் சேதங்கள் உலக வணிக வளாக கட்டடம் சேதம் இன்னமும் உள்ளே பயமும் திகிலும் இஸ்லாமிய நாடுகளால் மிரட்டலும் பயமுறுத்தலும் அமெரிக்காவுக்கு பெரும் சவாலாகவே உள்ளது.

2004 டிசம்பர் 26 முதல் சுனாமி அச்சம் இன்னமும் தீர்ந்தபாடில்லை. அடுத்தடுத்து உலகில் பெருகிவரும் எய்ட்ஸ், சிக்கன்குனியா, டெங்கு காய்ச்சல், எரிமலை குழம்புகளின் பாதிப்புகள் இன்னமும் எதிர்காலத்தில் எத்தனை எத்தனை அழிவுகள் எழும்புகின்றனவோ யார் அறிவார். நற்செய்தி நூல்களில் (மத்.24, மாற்.13) ஆண்டவர் கூறிய எச்சரிப்புகள், இறுதிகால சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. காரணம் இறைவனை மறந்து வாழும்நிலை. இக்கால கட்டத்தில் கிறிஸ்தவர்களான நம் அருட்பணி மிகத் தேவை.

3. அருட்பணியில் நம்பங்கும் ஈடுபாடும் :

மத்.25:31-46இல் நம் ஆண்டவரின் இரண்டாம் வருகையில் நாம் எவ்வாறு செயலாற்ற வேண்டும் என்பது இந்த அதிகாரத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

1) புத்தியுள்ள கன்னிகைகளாக விழிப்புடன் ஆயத்தப்பட்டவர்களா யிருத்தல் வேண்டும்.

2) இறைவன் நமக்கு அருளியுள்ள திறமைகள், வரங்கள் முதலியவற்றை விருத்திசெய்து ஆக்கபூர்வமாக செயலாற்றி நம் பரம எஜமானை மகிமைப்படுத்த வேண்டும் நாமும் மகிழ்ச்சியின் வாழ்விற்குச் செல்ல வேண்டும்.

3) அடுக்குமாடி கட்டடம் போன்று மிகமிக உயரிய நிலையில் நிற்கும் உவமை நம் அருட்செய்தி பகுதியில் அடங்கியுள்ளது. அதுதான் இறைமக்களான நம் ஒவ்வொருவரின் அன்றாடக அருட்பணி தேவையில் தனிமையில் ஒடுக்குதலில் வாழ்வோரை கண்டு அவர்களுக்கு உரிய சேவை புரிதல் நம் அருட்பணியாகும். இவ்வரிய பணியைச் செய்வோருக்கு உரிய சன்மானமான நித்திய வாழ்வு அருளப்படும். அருளுபவர் இறைவன்.

இப்பகுதி நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறிய சன்மார்க்க போதனையாகும். சமநோக்கு நற்செய்தி நூல்களில் இதற்கு இணையான வேறு போதனைகள் கிடையாது. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது எல்லா நாட்டு மக்களும் ஒன்று கூடுவர் அனைவரும் இறுதி தீர்ப்புக்காக அவரின் முன் நிறுத்தப்படுவர். அதற்கு முன் இவ்வுலக வாழ்க்கையில் மனிதர் ஒருவருக்கொருவர் மனிதாபிமானம். இரக்க சிந்தையின் அடிப்படையில் செய்ய வேண்டிய அருட்பணிகள் இன்றே இப்பொழுதே தாமதமின்றி, தயக்கமின்றி செய்து இறைவனை மகிமைப்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். ஏழைகள், தேவையில் உள்ளோர், தனிமையில் வாடுவோர் எப்போதுமே உலகில் வாழ்ந்து கொண்டேதான் இருக்கின்றனர். அத்தகையவர்களுக்கு அரசும் உதவி செய்து வருகிறது. திருச்சபையும் செய்ய கடமைப்பட்டுள்ளது. தொண்டு நிறுவனங்களும் சேவை புரிந்து வருகின்றன. தனிப்பட்ட முறையில் இறைமக்களும் அருட்பணியாற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் நம் ஒவ்வொருவருக்கும் உரியதே. அப்.9:36இல் கூறப்பட்டுள்ள தபீத்தாளைப் போல் நன்மை செய்வதிலும் இரக்கச் செயல்கள் புரிவதிலும் முற்றிலுமாய் ஈடுபாடு கொண்டு வாழுவோமாக இன்றயாசியை இவ்வுலகிலும் மறுவாழ்வில் நித்திய வாழ்வையும் பெற்றனுவிப்போமாக.

முடிவுரை :

கலா.6:7-10 இதை நம் நினைவிற் கொண்டு நித்தமும் அருட்பணி புரிவோமாக. நன்மை செய்வதிலும், சமுதாயத்திலும் திருச்சபையிலும் அரசியலிலும் நீதி, நேர்மை, ஒழுக்கம் முதலியவை தழைத்தோங்க உழைப்போமாக. நாமும் உயர்வடைவோமாக.

அருள்திரு D. தேவபிச்சை, ரெட்டியார்பட்டி

06.08.2007

கிறிஸ்து மறுரூபமான திருநாள்

பாடங்கள் : யாத்.24:12-18; 2பேது.1:16-19; லூக்.9:28-36

வசனம் : *மாற்கு 9:2*

முன்னுரை :

இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் அவர் பாவிகளை இரட்சிப்பதற்காகவே இந்த உலகத்தில் வந்தார். பழைய ஏற்பாட்டுக் காலத்தின் தேவன் வெவ்வெருவிதமாக மக்களுக்குத் தம்மை வெளிப்படுத்தினார். ஏசாயாவுக்கு தரிசனம் ஆனார் (ஏசா.6:1-8). யாக்கோபுக்கு சொப்பனத்தின் மூலமாய் காட்சியளித்தார் (ஆதி.28:10-12). ஆபிரகாமுக்கு நேர்முகமாய் தரிசனம் ஆனார் (ஆதி.18). அவ்வாரே மோசேக்கும் தன்னை நேராக வெளிப்படுத்தினார் (யாத்.31:18).

இந்த மறுரூபகாட்சியின் மூலம் ஆண்டவருடைய மகிமையை வெளிப்படுத்தினார். இந்த சம்பவம் மூன்று சுவிசேஷங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது (மத்.17:1-13; மாற்.9:2-8; லூக்.9:28-36). இச்சம்பவத்திலிருந்து மூன்று காரியங்களை நாம் ஆராய்வோம்.

1. இயேசுகிறிஸ்து மறுரூபமானார் (மாற்.9:2)

இயேசுகிறிஸ்து பேதுரு, யாக்கோபு, யோவனை கூட்டிக்கொண்டு உயர்ந்த மழையின்மேல் அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். மலை உச்சி ஆண்டவரோடு நெருங்கி வாழுகிற சம்பவம் என்றும், ஆண்டவருடைய வசனத்தைக் கேட்பதற்கு ஏற்ற இடமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆண்டவர் மோசேக்கு மலையுச்சியின் மேல் தன்னை வெளிப்படுத்தினார். (யாத்.24:12-18) எலியாவுக்கும் அவ்வாறே ஓரேப் பர்வதத்தில் தன்னை வெளிப்படுத்தினதை காண்கிறோம் (1இராஜா.19:8-18).

மறுரூபக் காட்சி மகிமையான இராஜாவின் பிரசன்னத்தைக் காணுதல் மத்.16:27,28. இது தன்னுடைய சீடர்களுக்கு இயேசுவானவர் தம்முடைய தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தும் காட்சியாக உள்ளது. மேலும் இயேசுகிறிஸ்து செய்கிற கிரியைகள் தேவனுடைய கிரியைகளாக இருக்கிறதையும் காண்கிறோம்.

இங்கே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மறுரூபமாகும் போது அவருடைய முகம் சூரியனைப் போல் பிரகாசித்தது. அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப் போல் பூமியிலே எந்த வண்ணானாலும் வெளுக்கக்கூடாத வெண்மையாய் பிரகாசித்தது என்று பார்க்கிறோம்.

நாம் ஆண்டவரோடு எவ்வளவு நேரம் செலவழிப்போமோ சிந்தித்து பார்ப்போம். நம்முடைய முகம் நம்முடைய அறையிலே ஒருவேளை பிரகாசிக்காமல் இருக்கலாம். ஆனால் எவ்வளவு நேரம் ஜெபத்திலும், வேதவாசிப்பிலும் செலவிடுகிறோமோ அவ்வளவு தூரம் நம்முடைய வாழ்க்கையின் மூலம் நாம் ஆண்டவரோடு இருக்கிறவர்கள் என்று மற்றவர்கள் அறிந்து கொள்வார்கள் (அப்.4:13) சாதுசுந்தர்சிங் இங்கிலாந்திலே ஒரு வீட்டிலே தங்கியிருந்திருக்கிறார். அவர் வெளியே சென்றபின் அந்த வீட்டுப் பிள்ளைகள் பெற்றோரிடம் இயேசுவானவர் எங்கே என்று கேட்டார்களாம் (where is Jesus) காரணம் அவர் ஜெபத்திலும், வேத வாசிப்பிலும் ஆண்டவரோடு தனித்திருந்தது அவருடைய சாயல் அவரில் காணப்பட்டது.

2. மோசேயும், எலியாவும் இயேசுவோடு பேசுகிறவர்களாக காணப்பட்டார்கள் (பரி.மாற்.9:4)

இக்காட்சி மோசே நியாயப்பிரமாணத்திற்கு பிரதிநிதியாகவும், எலியா தீர்க்கத்தரிசிகளுக்கு முதன்மையானவராகவும் கருதப்படுகிறார். இயேசுவானவர் இவ்விரண்டையும் நிறைவேற்றுபவராக வந்தார் என பார்க்கிறோம். இக்காட்சியைப் பார்த்த பேதுரு ஆண்டவரே நாம் இங்கேயிருப்பது நல்லது. உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு, எலியாவுக்கு ஒரு கூடாரமாக போடுவோம் எனக் கூறுகிறார்.

நமக்கும் கூட இவ்வாறு சில சந்தர்ப்பங்களில் மேலான ஆவியின் அருள் பெரும்பொழுது அங்கேயேயிருப்போம் என நினைக்கிறோம். மலையின் கீழே வாழ்க்கையின் போராட்டங்கள், பிரச்சனைகள் ஆகியவற்றை நாம் எதிர்கொள்ள வேண்டும். ஆண்டவரோடு நாம் உறவாடுவது நல்லதுதான் அதே சமயத்தில் நாம் உலகத்தின் தேவைகளையும் நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். இயேசுவானவரும், சீடர்களும் மலையிலிருந்து இறங்கினபொழுது அசுத்த ஆவி பிடித்த ஒருவனை குணமாக்க வேண்டியது இருந்தது (பரி.லூக்.9:42).

நம்முடைய வாழ்க்கையிலே நாம் சுய நலமாக வாழ்கிறோமா அல்லது மேலான ஜீவியத்திலிருக்க வாஞ்சிக்கிறோமா. உலகத்திற்கு சேவை செய்ய மலையுச்சியிலிருந்து இறங்கிவர வேண்டும். அதோடு நாம் ஆண்டவர் அருளிய வேதத்தை ஆராய்ந்து அறிய வேண்டும். ஆண்டவரை குறித்து எழுதப்பட்டிருப்பதை புரிந்து கொள்ள வேண்டும் (யோவா.5:39).

3. மேகத்திலிருந்து ஆண்டவர் சத்தம் கேட்கப்பட்டது (பரி.லூக்.9:35)

இவர் என்னுடைய நேசக் குமாரர் இவருக்குச் செவிகொடுங்கள் என்று மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாவதைச் சீடர்கள் கேட்டார்கள்.

இயேசுவானவர் எலியாவோ அல்லது மோசேயோ அல்லது தீர்க்கத்தரிசிகளில் ஒருவர் இல்லை. அவர் தேவனுடைய நேசக்குமாரர் (God's Son) மோசே, எலியாவைக் காட்டிலும் அதிகாரம் உள்ளவரும் வல்லமையுடையவரும் ஆவார்.

இவ்வுலகத்திலே எத்தனையோ மக்கள் ஜீவிக்கிற வழியைக் காண்பிக்கிறவராகவும், கடவுளை தரிசிப்பதற்கு வழி காண்பிக்கிறவர் களாகவும் கூறுகிறார்கள். ஆனால் நாம் பரிசுத்த வேதாகமத்தின் மூலம் ஆண்டவர் தம்மை வெளிப்படுத்தினதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய ஒரே பேறான குமாரனாக இயேசுவானவர் ஆண்டவருடைய சக்தியையும், அதிகாரத்தையும் வெளிப்படுத்தினார்.

தேவன் இயேசுகிறிஸ்துவைத் தம்முடைய ஒரே பேரான குமாரனாக கூறுவதைப் பார்க்கிறோம். மோசே தேவனை முக முகமாகத் தரிசிக்கும்போது அவருடைய முகம் பிரகாசித்தது. யாத்.34:28,29. அவரைப் பார்ப்பதற்கு ஜனங்கள் மிகவும் பயந்தார்கள் என பார்க்கிறோம்.

நாமும் மறுரூபமாக வேண்டுமென்று ரோ.12:1,2 காண்கிறோம். ஆசாரியன் பலி செலுத்தும்போது அந்த மிருகத்தை துண்டு துண்டாக வெட்டி பலிபீடத்தின் மீது வைப்பார். ஆனால் இங்கே ஆண்டவர் நம்முடைய சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று பரி.பவுல் சொல்லுகிறதைப் பார்க்கிறோம். இங்கே தேவன் நம்மை இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமான சித்தம் அறியத்தக்கதாக மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் என்று சொல்கிறார்.

ஜப்பான் தேசத்திலே முஷி என்று சொல்லப்படுகிற ஒரு பயங்கரமான கொள்ளைக்காரன் இருந்தான். அவன் பெயரைச் சொன்னாலே ஜப்பான் தேசமே நடுங்கும். ஒரு சமயம் அவன் ஒரு வீட்டில் கன்னமிடும்போது போலீசார் பிடித்துக் கொண்டார்கள். சிறையிலடைத்தார்கள். சிறையிலும் அவனை கவனிப்பது மிகவும் கடினம். அச்சமயம் சில கிறிஸ்தவ பெண்கள் சிறையில் சுவிசேஷப் பங்குகளை வினியோகித்தனர். இயேசுவானவர் சிலுவையிலே தொங்கும்பொழுது தன்னோடு சிலுவையில் அறையுண்டு தொங்கின திருடன் ஆண்டவரே உம்முடைய ராஜ்யத்தில் என்னை நினைத்துக் கொள்ளும் என்று சொல்லும்போது அவனுக்குப் பரலோக பாக்கியம் கொடுத்தார். தனக்கும் அந்த பாக்கியம் வேண்டும் என்று பரி.ஞானஸ்நானம் பெற்றார். ஆம் ஆண்டவர் இன்றும் மக்களை மறுரூபப்படுத்துகிறார். எப்பேர்பட்ட பாவிகளையும் மறுரூபமாக்குகிறார்.

அருள்திரு இ. தேவபிச்சை ஸ்டீபன்

ஊத்துமலை

12.08.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 11ஆம் ஞாயிறு
(திரித்துவ 10)

பொருள் : **கிறிஸ்தவப் பண்பு**

பாடங்கள் : **1சாமு.24:1-15; எபே.6:10-18; மத்.5:13-16**

வசனம் : ***"நீ தீமையினால் வெல்லப்படாமல் தீமையை நன்மையினால் வெல்லு" (ரோமர் 12:21).***

முன்னுரை :

பழைய ஏற்பாட்டுக் காலத்தில், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், ஜீவனுக்கு ஜீவன், கைக்குக் கை, காலுக்கு கால், சூட்டுக்குச் சூடு, காயத்துக்கு காயம், தழும்புக்கு தழும்பு பழி கொடுக்க வேண்டும் என்று, இஸ்ரவேலருக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தில் யாத்.21:23-25ல் கூறப்பட்டுள்ளது. ஆனால் புதிய ஏற்பாட்டு காலத்தில் இறைமைந்தன் இயேசுகிறிஸ்துவின் போதனையானது மத்.5:39-48ல் கூறிய படி எதிர்மறையாக உள்ளது. இந்தக் கட்டளையானது அன்பின் அடிப்படையில், மன்னிப்பின் சிந்தையோடு கூறப்பட்டது. தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம். ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் இடது கன்னத்தையும் திருப்பிக் கொடு என்று ஆரம்பித்து, பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல நீங்களும் பூரண சற்குணராயிருங்கள் என்பதாக முடித்துள்ளார். எனவே நம்முடைய பிதா குமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் வாழ்ந்து காட்டிய மாதிரியைப் பின்பற்றி வாழ்வோமானால் தீமையை நன்மையினால் வெல்ல முடியும் அல்லவா. இதை விவிலியத்தில் சில பக்தர்களின் வாழ்க்கை மூலம் கற்றுக் கொள்வது சாலச் சிறந்தது என கருதுகிறேன்.

1. தீமைக்கு நன்மை செய்யும் தாவீது :

1சாமுவேல் 18ம் அதிகாரம் முதல் வாசிக்கும்பொழுது, எப்படியாவது தாவீதைக் கொன்றுவிட வேண்டும் என்ற நோக்கத்தோடு சவுல் தன் மனிதரோடு தாவீதைப் பின் தொடர்வதைக் காண்கிறோம். இரண்டு சந்தர்ப்பங்களில் கர்த்தர் சவுலைத் தாவீதின் கைகளில் ஒப்புக் கொடுக்கிறதை 1சாமு.24:4, 26:11இல் பார்க்கிறோம். தன் உயிரை வேட்டையாடத் துடிக்கும் சத்துருவைத் தன் கைகளில் ஒப்புக்கொடுத்த பொழுதிலும் கூட, தாவீது கர்த்தருக்கு பயந்ததினால், கர்த்தர் அபிஷேகம் பண்ணின என ஆண்டவன்

மேல் என் கையைப் போடும்படியான இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாதபடி கர்த்தர் காப்பாராக என்றுச் சொல்லி அவனைப் போக விடுகிறான். இதனால் தான் 1இராஜா.15:5இல், தாவீது ஏத்தியனாகிய உரியாவின் சங்கதி தவிர கர்த்தர் தனக்கு கட்டளையிட்டதிலே தான் உயிரோடு இருந்த நாளெல்லாம் ஒன்றையும் விட்டு விலகாமல் அவர் பார்வைக்கு செம்மையானதைச் செய்தான் என்று கூறப்பட்டுள்ளது. எனவேதான் இயேசு கிறிஸ்து தாவீதின் சந்ததியில் தோன்றுகிறார். தாவீதின் குமாரன் என்று அழைக்கப்படுகிறார்.

2. தீமையை நன்மையினால் வென்ற எலிசா :

2இராஜா.6:13-23இல் எலிசாவைக் கொல்லும்படியாக சீரியா இராஜா இராணுவத்தை அனுப்புகிறான். ஆனால் எலிசா செய்தது என்ன? அவர்களுக்கு கண்மயக்கம் உண்டாகும்படி செய்யும் என்று கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணுகிறான். அவர்களுக்கு கண்மயக்கம் உண்டானவுடன் அப்படியே அவர்களை இஸ்ரவேல் இராஜாவிடம் வழி நடத்துகிறான். இஸ்ரவேல் இராஜா தன் பகைவரைக் கண்டவுடன் அவர்களை வெட்டிப் போடலாமா என்று கேட்டான். அதற்கு எலிசா அவர்கள் புசித்து குடித்து தங்கள் ஆண்டவனிடம் போகும்படி அப்பமும் தண்ணீரும் அவர்களுக்கு எதிரே வையும் என்கிறான். அப்படியே அவர்களுக்குப் பெரிய விருந்து பண்ணி அவர்கள் புசித்துக் குடித்த பின்பு அவர்களை அனுப்பி விட்டான். நடந்தது என்ன? அதன் பிறகு சீரியரின் தண்டுகள் இஸ்ரவேல் தேசத்திலே வரவில்லை என வாசிக்கிறோம். ரோமர் 12:20இல் கூறியபடி உன் சத்துரு பசியாயிந்தால் அவனுக்குப் போஜனம் கொடு. அவன் தாகமாயிருந்தால் அவனுக்குப் பானம் கொடு. நீ தீமையினால் வெல்லப்படாமல் தீமையை நன்மையினால் வெல்லு என்று கூறப்பட்டபடி இந்த எலிசா செய்தபடியால் தன் தேசத்திற்கு அமைதி கிடைக்கிறது. சமாதானம் கிடைக்கிறது. தீமைக்குத் தீமை செய்யாமல் நன்மை செய்யும்பொழுது பகை மறைந்து சமாதானம் உண்டாகிறது என்பதைக் காண்கிறோம் அல்லவா.

3. தீமைக்கு நன்மை செய்த யோசேப்பு :

ஆதியாகமம் 37,39-50 அதிகாரங்களை வாசிக்கும்போது, யோசேப்பு தன் சகோதரரால் பகைப்படுவதையும், 20 வெள்ளிக்காசுக்கு இஸ்மவேலரிடம் அடிமையாக விற்கப்படுவதையும், செல்லமாக வளர்க்கப்பட்ட யோசேப்பு எகிப்திலே பலவிதமான இன்னல்களையும் பாடுகளையும் அனுபவிப்பதையும் காண்கிறோம். ஆனாலும் கர்த்தர் அவனை உயர்த்துகிறார். அவன் பார்வோனுக்கு அடுத்தபடியாக உயர்த்தப்படுகிறான்.

பார்வோன் சகல அதிகாரத்தையும் யோசேப்புக்கு கொடுத்துள்ளான். இந்த சமயத்தில் தான் தன் கதறுதலைப் (ஆதி.42:21) பொருட்படுத்தாது தன்னை துன்பத்துக்குள்ளாக்கின சகோதரர் வருவதைப் பார்க்கிறான். அவர்களைப் பார்த்த மாத்திரத்தில் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் துளியும் அவனுக்குள் வரவில்லை. மாறாக அன்பு சுரக்கிறது. பாசம் வருகிறது. அதை மறைக்க முடியாமல் மறைவில் ஓடிப்போய் அழுகிறான். அவன் நினைத்திருந்தால் அத்தனை பேரையும் கொலை செய்யும்படி கட்டளையிட்டிருக்கலாம். அவன் அவ்வாறு செய்யவில்லை. தன் சகோதரரை மன்னிக்கிறான். பாசம் காட்டுகிறான். விருந்து உபசரனை செய்கிறான். அவர்களுடைய தவறை உணர சில சந்தர்ப்பங்கள் கொடுத்த பிறகு, அவர்களுக்குத் தன்னை வெளிப்படுத்துகிறான். தன் குடும்பத்துக்கு ஒரு இரட்சகனாக விளங்குகிறான். தன் முதிர் வயதுள்ள தகப்பனை சந்திக்கும் பாக்கியத்தைப் பெறுகிறான். தன் தப்பனால் கனிதரும் திராட்சைச் செடி என ஆசீர்வதிக்கப்படுகிறான். நாமும் கூட கனிதரும் மக்களாக வாழ வேண்டுமானால் யோசேப்பின் முன்மாரியைப் பின்பற்றலாம் அல்லவா.

முடிவுரை :

அருமையானவர்களே, நாம் நம்மை சற்று ஆராய்ந்து பார்ப்போம். நாம் தீமைக்குத் தீமையையும், உதாசீனத்துக்கு உதாசீனத்தையும் சரிக்கட்டுகிறவர்களாக இருக்கிறோமா? இன்று நம் திருச்சபையில் கூட இந்தப் பழிக்குப்பழி வாங்குதல் காணப்படுகிறது அல்லவா? தேர்தல் என்பது தனி மனிதனின் உரிமை. தங்களுக்கு சரி என்று தோன்றுபவர்களுக்கு வாக்களிக்கப்பட்டது. ஒவ்வொருவரின் உரிமை. நாம் என்ன செய்கிறோம். தேர்தல் முடிந்தவுடன், நமக்கு ஓட்டு போடாதவர்களை துன்புறுத்துதல் இன்று காணப்படுகிறது அல்லவா. வேதனைக்குரிய விஷயம். நம் திருச்சபை ஆதித்திருச்சபையாக மாற வேண்டும். அதில் அன்பு, மன்னிப்பு முதலிய கிறிஸ்தவப் பண்புகள் காணப்பட வேண்டும். இதைத்தான் இறைவன் நம் திருச்சபையில் எதிர்பார்க்கிறார். தன்னை சிலுவையில் அறைந்த மக்களுக்காக மன்னிப்பு வேண்டிய நம் இறைவனின் அடியாராகிய நாம் மன்னிப்பின் சிந்தனையோடு, நம்மைப் பகைக்கிறவர்களையும், நமக்குத் தீமை செய்தவர்களையும், அவதூறு பண்ணினவர்களையும் மன்னித்து கூடுமானால் அவர்களுக்கு நன்மை செய்வோமானால், நாமும் கனிகொடுக்கும் வாழ்க்கை உடையவர்களாக இருக்க முடியும். அப்படிப்பட்ட கிருபையை கர்த்தர் தாமே நமக்குத் தந்தருள்வாராக ஆமென்.

அருள்திரு J. அகஸ்டின் ஞானராஜ்
சுவிசேஷபுரம்

15.08.2007

சுதந்திர தினம்

பாடங்கள் : ஆதி.11:1-9; 2தீமோ.2:14-26; மத்.5:38-48

முன்னுரை :

சுதந்திரம் என்பது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன்" என்று வீர முழக்கமிட்டார் பாலகங்காதர திலகர். பல போராட்டங்கள், பலருடைய தியாகத்தின் விளைவாக இந்திய நாடு சுதந்திரம் அடைந்தது. ஆங்கில ஆதிக்கத்தினின்று விடுதலை பெற்றது. இது மகிழ்ச்சியான காரியம். இந்திய குடிமகன் ஒவ்வொருவரும் விடுதலையை வாழ்வின் அனுபவமாக்கியிருக்கிறோமா? இந்திய நாட்டில் "தற்கொலை" "கொலைகள்" பெருகிக் கொண்டே இருக்கிறது. இதற்கு காரணம் தனி நபரின் மன அழுத்தமும் (Stress) சமுதாயத்திலுள்ள சீர்கேடுகளுமாமே. இப்படிப்பட்ட சூழ்நிலையில், விடுதலை (or) சுதந்தரம் பற்றி சிந்திப்பது ஒவ்வொருவரின் கடமையாகும்.

தனிப்பட்ட வாழ்வில் சுதந்திரம் (Freedom in Personal life)

ஒரு மனநிலை மருத்துவர் இவ்விதம் கூறுகிறார், "மனநிலை மருத்துவமனையில் உள்ளவர்கள் பாவமன்னிப்பையும், சமாதானத்தையும் பெற்றுக் கொண்டால் எழுபது விழுக்காடு நோயாளிகளை சுகத்தோடு வீட்டிற்கு அனுப்பி விடலாம்". தனிப்பட்ட ஒரு மனிதனுடைய வாழ்வில் தான் செய்த தவறான ஒரு காரியம் அவனை அடிமையாக்கி விடுகிறது. பாவம் செய்கிற எவனும் பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான் (யோவா.8:34). தாவீது ராஜா பத்சேபாளிடத்தில் தவறான உறவு வைத்ததினால் அவனுடைய இருதயம் மாசுபட்டது. இவர் ஒரு விசுவாச வீரர். ஆனால் அவனுடைய வாழ்க்கையில் ஒரு சறுக்கல் ஏற்பட்டது. நிம்மதி இல்லை. மன அழுத்தம் ஏற்பட்டது. இதிலிருந்து விடுதலை பெற ஆண்டவரை நோக்கி ஜெபிக்கிறான். தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும் (சங்.51:10). சிருஷ்டிப்பு என்ற வார்த்தை படைப்போடு தொடர்புடையது. சிருஷ்டிப்பில் வெளிப்பட்ட தேவ வல்லமை எனக்கு வேண்டும் என்று ஜெபித்து, அவனுடைய வாழ்வில் ஒரு விடுதலையை பெற்றுக் கொண்டான். எந்த ஒரு மனிதனுடைய வாழ்விலும் இப்படிப்பட்ட பாவங்களிலிருந்து விடுபடாவிட்டால் சமாதானமும், சந்தோஷமும் பெற முடியாது. "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் ஒருவன் என் சத்தத்தை கேட்டு கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடு போஜனம்

பண்ணுவேன். அவனும் என்னோடு போஜனம் பண்ணுவான்" (வெளி.3:20). இதயக் கதவை ஆண்டவருக்கு திறந்து கொடுத்தால் இயேசு நம்மை கழுவி சுத்திகரித்து, மெய்யான விடுதலையை பெறமுடியும். குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் (யோவா.8:36).

சமூக வாழ்வில் சுதந்திரம் (Freedom in Social life)

தனி மனிதனையும் சமூகத்தையும் பிரிக்க முடியாது. ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் வாழும் சமுதாயத்திலும் இறைவன் விடுதலை வாழ்வு அளிக்கிறார். உதாரணமாக இஸ்ரவேல் மக்கள் எகிப்திலே அடிமைகளாக நடத்தப்பட்டார்கள். மக்களாக அல்ல மிருகங்களாக மதிக்கப்பட்டார்கள். மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்க இறங்கினேன் (யாத்.3:8) என்று கர்த்தர் சொல்லுகிறார். மோசேயின் மூலமாக அவர்களை விடுவித்தார். வனாந்தரத்தில் ஆண்டவருக்கு ஆராதனை செய்ய வேண்டும் (யாத்.7:16) என்பதுதான் இவ்விடுதலையின் நோக்கம். ஆனால் விடுதலை பெற்ற மக்கள் அந்த நோக்கத்தை மறந்து விட்டார்கள். லூக்.4:16-20 வரையுள்ள வசனங்களில் இயேசு சமூக விடுதலை பற்றி தெளிவாக குறிப்பிடுகிறார்.

விடுதலை பெற்ற இந்திய திருநாட்டில் விடுதலை எழுத்திலும், பேச்சிலும் மட்டுமே உள்ளது. "ஊழலை ஒழிக்க இரண்டாவது சுதந்திர போராட்டம் தேவை" என்று ஒரு தலைவர் கூறுகிறார். ஆம் அரசியலில் ஊழல் பெருகிவிட்டது. மேலும் ஏழ்மை, அறியாமை, மூடப்பழக்க வழக்கங்கள், அநீதி, குழந்தை தொழில், பெண்கள் பலவிதங்களில் நசுக்கப்படுதல் போன்ற நிலைமைகள் இன்னும் ஏதோ அடிமைகளாக மக்கள் இருப்பதை காண்பிக்கிறது.

இயேசுவின் இரத்தத்தினால் விடுதலை பெற்ற மக்கள்தான் திருச்சபை. இந்த திருச்சபையையும், சமூகத்தையும் பிரிக்க முடியாது. நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் என்று இயேசு சொன்னார். விடுதலை நாயகர் இயேசு இன்றும் செயலாற்றுகிறார். தொடர்ந்து விடுதலையில் நிலைத்திருக்கவும், பலவித செயல்களுக்கு அடிமைப்பட்டிருப்போரை விடுவிக்கவும் நம்மை அர்ப்பணிப்போம். நமது தேசம் பெற்ற விடுதலையை பேணி காக்கவும், அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கும் நம்மை ஆளுகை செய்பவர்களுக்காக ஜெபிப்போம். தேசமே பயப்படாதே கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார்.

அருள்திரு. K. அருள்ராஜ் பிச்சமுத்து
சின்னம்மாள்புரம்

19.08.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 12ஆம் ஞாயிறு
(குளோரிந்தாள் ஞாயிறு – திரித்துவ 11)

பொருள் : உலகத்திலிருந்தாலும் உலகத்தாரல்ல

பாடங்கள் : உபா.16:16-19; கலா.6:11-18; யோவா.17:1-19

வசனம் : *1தீமோத்தேயு 6:6,7*

முன்னுரை :

தேவனாகிய கர்த்தர் வானத்தையும், பூமியையும் படைத்தார். படைப்பில் ஆணும் பெண்ணுமாக மனிதர்களை உருவாக்கினார். உலகத்திலிருக்கும் போது மனிதர்கள், சரீர வளர்ச்சி பெறவும், ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியடையவும் கிருபை அளிக்கிறார். ஆயினும், ஏராளமான நேரங்களில், உலகின் உடைமைகள், பண ஆசை போன்றவற்றைச் சார்ந்து வாழ்ந்து கடவுளிடமிருந்து விலகி வாழ்கிறோம். பணம் தான் உண்மையான மகிழ்ச்சியைத் தருகிறது என நம்புகிறோம். தங்களுக்கு இருக்கிறவைகள் போதும் எனும் நம்பிக்கை இல்லாது போகிறோம். நாம் உலகத்திலிருந்தாலும் உலகத்தாரல்ல என நினைக்காது போய்விடுகிறோம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையைப் பவுல் கண்டார். உலகத்திலிருக்கும் போதே ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஒரு திறவுகோலைக் காண்பிக்க விரும்பி, அருளுரை வசனங்களை அவர் எழுதினார். வரவிருக்கும் இரண்டாம் வருகையை மனதில் வலியுறுத்தி, "உலகத்தாரல்லாதவர்கள் நாம்" என்பதைச் சுட்டிக்காட்டும்படி, உலகின் நிலையற்ற தன்மையை எடுத்துக்கூறினார். எனவே இன்றைய தியானத்தில் 'உலகத்தாரல்லாதவர்கள்' என்ற வார்த்தை உணர்த்தும் சில தியானக்குறிப்புகளை நம்முன் நிறுத விரும்புகிறேன்.

நாம் கடவுளுடையவர்கள் :

இந்த நாளுக்குத் தரப்பட்டுள்ள முதல் திருமறைப்பகுதியான உபா.16:16-19 வரையுள்ள வசனங்களைப் பாருங்கள். இந்தப் பகுதியில் "உனக்கு அருளிய" "உனக்குக் கொடுக்கும்" (வச.17,18) என்ற வார்த்தைகளைக் காண்கிறோம். இங்கு இரண்டு காரியங்கள் கூறப்பட்டுள்ளன. முதலாவது நாமும், அதின் நிறைவும் கடவுளுடையவர்கள். ஆகையால் தேவ சந்நிதிக்கு வெறுங்கையுடன் வரயியலாது. அவர் நம்மை ஆசீர்வதித்ததற்கு தக்கபடியும், நம் தகுதிக்கு ஏற்றபடியும் காணிக்கை கொண்டு வர வேண்டும். அடுத்து, நாம் கடவுளுடையவர்களாதலால் முகதாட்சியணியம் காட்டுவதும் இலஞ்சம் வாங்கவும் இயலாது.

'உலகத்தாரல்ல' என்ற வார்த்தையில் மேற்கண்ட பகுதியில் நாம் காண்பது என்ன? பணத்தின் மீது அன்பு கூறுவதைவிட, கடவுள் மீது

அதிகமாய் அன்புகூறுவதை நம் வாழ்வு மூலம் நாம் நிறைவேற்ற வேண்டியவர்கள். அப்படிச்செய்யும்போது, கடவுளைச் சார்ந்து வாழும் வாழ்க்கை தினமும் அதிகப்பட ஆரம்பிக்கிறது. மத்.6:33இல் கூறப்பட்டுள்ளவாறு, முதலாவது தேவனுக்குரியவைகளை நாம் விரும்புகிறவர்களாக மாறுவோம். ஏனெனில் நாம் கடவுளுடையவர்கள், கர்த்தரில் மிகமிக அன்பு கூறுவதே எல்லா திருப்திக்கும் வேரானது.

இச்சைகளைத் தினமும் சிலுவையில் அறைகிறவர்கள் :

இரண்டாவது திருமறைப்பகுதியான கலா.6:11-18 வாக்கியங்களில், பவுல் 14ஆம் வசனத்தில் இவ்வார்த்தைகளைக் குறிப்பிடுகிறார். உலகத்தின் இச்சைகள், விருப்பங்கள் அழிவுக்கு நேராக நம்மை நடத்துபவைகள், அழிவிலிருந்து தப்பும்படி, பவுல் செய்தது போன்று, நம் உலக விருப்பங் களைச் சிலுவையில் அடிக்க உதவி செய்யும்படி ஆண்டவரைக் கேட்க வேண்டியவர்கள். அப்போது, நாம் வாழாது, கிறிஸ்து நம்மில் வாழ ஆரம்பிக் கிறார் (கலா.2:20). கிறிஸ்துவைச் சார்ந்து வாழுகிறவர்கள் தங்கள் உலக விருப்பங்களையும் இச்சைகளையும் சிலுவையிலறைகிறார்கள் (கலா.5:24).

'டெக்சாஸ்' மிக அழகான ஒரு பட்டணம். பிரயாணிகள் அதன் வழியாகக் கடந்து செல்லும்போது, 190அடி உயரமுள்ள ஒரு சிலுவையைக் கண்டு, உள்ளம் மகிழ்ச்சியடைவர், ஸ்டீவ் தாமஸ் என்பவர்தான் அதைக் கட்டி, அதனைக் காண்பவர் யாவரும் அதில் தொங்கி, இரட்சிப்பைத் தந்தவரைக் காண வேண்டும் எனவும்; தங்கள் விருப்பங்களை அதில் அறைந்து அழிவிலிருந்து மீட்கப்பட வேண்டும் எனவும் அதைப் பிரதிஷ்டை செய்தார். நாம் காக்கப்படவும் இதுவே வழி.

கடவுளின் வார்த்தையால் தூய்மையாக்கப்பட்டவர்கள் :

யோவா.17:1-19இல் உலகத்திலிருக்கிற சீடர்களுக்காக இயேசு ஜெபிக்கிறார். சீடர்கள் உலகத்திலிருந்தாலும், உலகத்தாரல்ல என்கிறார் என்? தாம் உலகத்தாரல்ல என வச.16இல் கூறுகிறார். எனவே அதற்கு அடுத்த வசனத்தில், கடவுளுடைய வார்த்தையே சத்தியம். ஆதலால், வார்த்தையால் தூய்மைப்படுத்தும் என்கிறார். இன்று நாம் கடவுளின் வார்த்தையால் தூய்மைப்படுத்தப்பட்டவர்கள். கடவுளின் வார்த்தை ஜீவனும், வல்லமையுமுள்ளது (எபி.4:12). அவ்வார்த்தையை நாம் விசுவாசிக்கும் போது, அதற்குக் கீழ்ப்படியும் போது, நாம் தினமும் தூய்மையாக்கப் படுகிறோம் (எபி.7:26,27). தினமும் தூய்மைப்படுத்தப்படும் அனுபவத்திற்குள் வழிநடத்தப்படுகிறோம். கடல் நீர் உப்பானது தான். ஆனால் கடலுக்குள் வாழும் மீன்கள் உப்பாயிருப்பதில்லை. நாம் உலகத்தில் வாழுகிறவர்கள் தான். ஆனால் நாம் உலகத்தாரல்ல.

Rev. Dr. M.G. மாணிக்கம், இடையன்குடி

24.08.2007

புனிதர் பர்த்தொலோமேயு திருநாள்

பாடங்கள் : ஆதி.28:10-17; எபே.4:7-16; லூக்.6:12-16

பர்த்தொலோமேயுவின் அழைப்பு :

இவருடைய இயற்பெயர் நாத்தான்வேல். இதற்கு ஆண்டவரின் கொடை என்று பொருள். இவர் கானாவூரைச் சேர்ந்தவர் பர்த்தொலொமேயு என்பதற்கு தோல்மாயின் மகன் என்று பொருள் கூறப்படுகிறது. இவர் குடும்பத்தில் இளையவர். இவருக்கு குடும்ப பொறுப்பு அதிகம் இருந்தது.

நாத்தான்வேல் திருமறையை நன்கு படித்தவர். எப்போதும் ஆண்டவரைப் பற்றியும், இறை அரசைப் பற்றியும் தியானித்துக் கொண்டும், கற்பனை செய்து கொண்டும் இருப்பார். இவர் கள்ளம் கபடு அற்ற மனதுக்காரர். ஒரு முறை இவர் அத்திமரத்தின்கீழ் அமர்ந்திருக்கும்போது அவருடைய நண்பனான பிலிப்பை பார்த்தார். பிலிப்பு இவரிடம் இயேசுவைப் பற்றி கூறும்போது மிகுந்த ஐயத்துடன் நாசரேத் ஊரிலிருந்து நல்லது எதுவும் வரக்கூடுமோ? என்கிறார். நண்பர் பிலிப்பு வந்து பார் என்று பதிலளிக்கின்றார். சிறிது நேர யோசனைக்குப் பிறகு நாத்தான்வேல் இயேசுவை வந்து பார்த்தார். இவரைப் பார்த்ததும் இயேசு "இவர் உண்மையான இஸ்ரவேலர், கபடற்றவர் என்ற நற்சான்று கூறுகின்றார். வேறு எவரைப் பற்றியும் இயேசு இவ்வாறு குறிப்பிடவில்லை. இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு அதிர்ந்து விட்டார். உடனே ரபீ நீர் கடவுளின் மகன், நீரே இஸ்ரவேலின் அரசன்" என்றார் பர்த்தொலேமேயு. கிறிஸ்துவைப் பற்றி இவ்வாறு சாட்சி பகர்ந்த முதல் சீடர் இவர்தான். இவ்வாறு மற்ற அப்போஸ்தலரைவிட வித்தியாசமான முறையில் அழைக்கப்பட்டார் கள்ளம் கபடமற்ற பர்த்தொலெமேயு.

பர்த்தொலோமேயுவின் பணிகள் :

அப்போஸ்தலராகிய பர்த்தொலேமேயு நமது நாட்டின் வடமேற்குப் பகுதிவரை வந்து ஊழியம் செய்தார் என்று சொல்லப்படுகிறது. அப்போது அவர் எபிரெய மொழியில் எழுதப்பட்ட யோவான் சுவிசேஷ நூலை அங்கு விட்டுச் சென்றார். மெசப்பொட்டேமியா, பெர்ஷியா, எகிப்து, பிரிஜியா, கருங்கடல் பகுதிகளில் கடுமையாக உழைத்து, பின்பு ஆர்மேனியா பகுதிக்குச்

சென்றதாகக் கூறப்படுகிறது. கி.பி.60இல் ஆர்மேனியாவில் தமது பணியைத் துவங்கினார். இங்கு ஏற்கனவே அப்போஸ்தலனாகிய ததேயு கி.பி.43 முதல் பணி செய்து திருச்சபையை நிறுவியிருந்தார். இவர்கள் இருவருமே ஆர்மீனிய சபையின் பிதாக்கள் என்றழைக்கப் படுகின்றனர். கி.பி.56இல் ததேயும் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களும் இரத்த சாட்சிகளாக மரித்தனர்.

பர்த்தொலோமேயு ஆர்மேனியாவில் இந்த துன்பமான சூழ்நிலையில் வந்து பணியாற்றினார். குணமாக்கும் பணிகள் அதிகம் செய்தார். அரசன் பாலிமியிஸ் என்னை இவரால் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு மனம்திரும்பினார். இதன் மூலம் பலர் இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகளாக மாறினர். கொடிய வியாதியினால் பாதிக்கப்பட்ட அரசரின் மகள் சுகம் பெற்றாள். பக்கத்துநாட்டு அரசன் எஸ்டியகஸ் கள்ளம் கபடமாய் இவரைத் தன் தேசத்திற்கு வரவழைத்தான். முதலில் போதனையைக் கேட்பது போல் நடித்து, பிறகு அவரைக் கைது செய்து மரண தண்டனை கொடுத்துவிட்டான். அப்போஸ்தலரின் தோலை உரித்து அவரை சிலுவையில் அறையும்படி கட்டளையிட்டான். இவ்வாறு கி.பி.68 மிகவும் கொடூரமான முறையில் ரத்தாட்சியாக மரித்தார். 8 ஆண்டுகள் இவர் ஆர்மீனியாவில் பணியாற்றினார். இவரை கொலை செய்த அரசன் 30 நாட்களுக்கு துன்பப்பட்டு இறந்தான். அப்போஸ்தலரால் ஆண்டவரை ஏற்றுக் கொண்ட அரசர் பாலிமியஸ் பர்த்தொலேமேயு இறந்தபிறகு 20 ஆண்டுகள் திருச்சபையில் தலைவராக இருந்து வழிநடத்திச் சென்றார்.

அப்போஸ்தலனாகிய பர்த்தொலேமேயு (நாத்தான்வேல்) வாழ்வும் பணிகளும் நமக்கு தரும் சவால்கள்.

* நம்முடைய வாழ்வும் பணியும் இயேசுகிறிஸ்துவிடமிருந்து எப்படிப்பட்ட பதிலைத் தரும்?

* நம் அழைப்பும் அர்ப்பணிப்பும் ஆண்டவருக்கு மகிழ்ச்சியைக் கொண்டு வருமா?

* இருள் நிறைந்த உலகில் இயேசு என்றும் ஒளியை ஏற்ற இறைத் தொண்டர் பர்த்தொலோமேயு போல இயேசுவுக்காய் எரிந்து பிரகாசிக்க நாம் ஆயத்தமா?

அருட்பணி தா. மேசியாதாஸ் சாமுவேல் ராஜ்
கரைச்சுத்துபுதூர்

26.08.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 13ம் ஞாயிறு
(எப்பத்தா ஞாயிறு - திரித்துவ 12)

பொருள் : **காதுகேளாதோர் மீது கரிசனை**

பாடங்கள் : *ஏசா.35:1-10; பிலி.4:1-9; மாற்.7:31-37*

வசனம் : *'உடனே அவனுடைய செவிகள் திறக்கப்பட்டு, அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்து, அவன் செவ்வையாய்ப் பேசினான்' மாற்கு 7:35.*

முன்னுரை :

சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், இருதயம் நறுங்குண்டவர்களுக்கு குணமாக்குதலையும், குருடருக்குப் பார்வையையும் அளித்திட இவ்வுலகிற்கு, பிதாவினால் அனுப்பப்பட்ட அருள்நாதர் இயேசு தம் சீடர்களைப் பார்த்து, பிதா என்னை அனுப்பினது போல நானும் உங்களை அனுப்புகிறேன் என்றார்.

அவருடைய சீடர்களாக, அவரைப் பின்பற்றும் இறைமக்களாக நாமும் அவரைப் போல விடுதலையின் பணிக்கு, அன்பின் சேவைக்கு நம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம். அவருக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும் (1யோவா.2:6) என்று யோவான் அடிகளார் கூறிப்பிடுகிறார். இயேசுவின் மனதுருக்கத்தைக் கொண்ட மக்களாக அவரைப் போன்ற கரிசனை உள்ள மக்களாக நாமும் நடக்க இந்த 'எப்பத்தா' ஞாயிறன்று நம்மை அர்ப்பணிப்போம். காதுகேளாத ஒருவன் இயேசுவிடம் அழைத்துவரப்பட்டபோது அவருடைய மனதுருக்கத்தின் செயலாற்றல் மூன்று பெரிய மாற்றங்களைக் கொண்டு வருகின்றதை மாற்கு 7:35 நமக்கு கற்பிக்கிறது. காதுகேளாதோர் மேல் நாம் கொள்ள வேண்டிய கரிசனை இந்த மூன்று காரியங்களை மையமாகக் கொண்டுதான் அமைவது அவரின் எதிர்நோக்கு.

1. அடைக்கப்பட்டவை திறக்கப்பட வேண்டும் :

அவர் திறக்கப்படுவாயாக என்றதும் அவனுடைய செவிகள் திறக்கப்பட்டது (மாற்.7:35). அவன் இயேசுவின் வார்த்தையைத் தான் முதல் முதலாகக் கேட்டிருக்க வேண்டும். இன்றும், காதுகேளா

தோருக்கு திருச்சபை ஆண்டவரின் அருள்வார்த்தைகளைக் கேட்க சமவாய்ப்புகள் திறக்கப்பட வேண்டும். நற்செய்திக் கூட்டங்களிலோ, ஞாயிறு ஆராதனைகளிலோ நமது ஆலயங்களில் காதுகேளாதோர் பயன்பெற முடியாத நிலை காணப்படுகிறது. அவர்கள் மொழியான "கைபாஷையில் அருள்வார்த்தைகள் மொழி பெயர்க்கப்பட வேண்டும். இதை நிறைவேற்ற நமது உள்ளங்கள் திறக்கப்பட வேண்டும். மிகவும் சிறிய சிறுபான்மையினர் என்று காதுகேளாதோரின் சிறப்புத் தேவைகளை நாம் திருச்சபையினராக மறந்து விட முடியாது. அருள்நாதர் இயேசு 99 ஆடுகளைக் காட்டிலும், அவருடைய அழைக்கும் குரல் கேட்க முடியாதபடி அப்பால் கிடந்த ஒரே ஒரு ஆட்டைத் தேடி அலைகின்ற நல்ல மேய்ப்பன் என்பதை நினைவுகூற நாம் அழைக்கப்படுகிறோம்.

2. அனைத்து கட்டுகளும் அவிழ்க்கப்பட வேண்டும் :

இயேசுவின் மனதுருக்கத்தால் அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்தது (மாற்.7:35). நூற்றுபன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன் பிளாரென்ஸ் சுவைன்சன் என்ற மிஷனெரி அம்மையார் பாளையங்கோட்டையில் காதுகேளாதோர் சிறப்புப்பள்ளி நிறுவ ஆரம்ப முயற்சிகள் கொண்டபோது, அன்றைய சமுதாயத்தின் தனவந்தர்களும், உயர்குல மக்களும் அதை விரும்பவில்லை. அவர்களின் சிந்தனை என்றவென்றால் ஒருவன் முற்பிறவியில் செய்த 'அதர்மத்தின்' விளைவுதான் காதுகேளாமை என்றும் (Doctrine of Karama) காதுகேளாதோர் மறுவாழ்வு முயற்சி இறைவனின் திட்டத்திற்கு மாறானது என்றும் அமைந்திருந்தது. இத்தகைய கட்டுகள் அவிழ்க்கப்பட வேண்டியதாயிற்று. திருச்சபையிலும் காதுகேளாதோர் சம அங்கங்களாக எண்ணப்பட தடைகளாக உள்ள அநேக பாரம்பரிய சிந்தனையாகிய கட்டுகள் அவிழ்க்கப்பட வேண்டும். காதுகேளாதோருக்கான காணிக்கைகளை நாம் வழங்கும்போது, கணிக்கைப் பெறும் பிம்பங்களாக (objects of Charity) எண்ணும் நிலை மேலோங்குகிறது. அவர்கள் கிறிஸ்துவின் சரீரமான திருச்சபையில் சம கண்ணியம் (Equal Dignity) உள்ள அங்கங்கள் என்ற சிந்தனை குன்றிவிடுகிறது. அவர்களும் இறைசாயலில் உருவாக்கப்பட்டவர்கள் என்ற கண்ணோட்டத்தை குலைக்கும் வகையில் நம்மிடமுள்ள பாரம்பரிய கண்ணோட்டமாகிய கட்டுகளும் அவிழ்க்கப்பட்டு, அவர்களில் இறைவனின் சாயலைக் காணும் (மத்.25:40) பாக்கிய நிலையை நாம் பெற்றுக்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

3. அனைத்தும் செவ்வையாக்கப்பட வேண்டும் :

இயேசுவின் மனதுருக்கத்தால் அவன் செவ்வையாய்ப் பேச ஆரம்பித்தான் (மாற்.7:35). அவன் வாழ்வின் மாற்றத்தைக் கண்ட அநேகர், எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார் (மாற்.7:37) என்று அவரை மகிமைப்படுத்தினர். அவனுடைய சரீரம், ஆவி, ஆன்மா அனைத்திலும் மாற்றம் கண்டனர். அவன் வாழ்வு செவ்வையானது. எல்லாவற்றையும் நன்றாகச் செய்தார் என்னும் கூற்று ஆதியாகமம் முதலாம் அதிகாரம் முப்பதி ஒன்றாம் வசனம் கூறும் புதிய படைப்பின் காட்சியைத் தருகிறது. இதுதான் இறைஅரசின் காட்சி. ஏசா.35:5,6 ஆகிய வசனங்களில் சொல்லப்படும் இறையாட்சியின் அருள் காட்சி.

இன்று நமது திருமண்டலத்தில் நடைபெறும் காதுகேளாதோர் கல்வி பணி, மறுவாழ்வுப் பணி, ஆயத்துவப் பணி ஆகியவற்றின் மூலம் காதுகேளாதோர் வாழ்வு செவ்வையாக்கப்பட்டுக் கொண்டே வருகிறது. இப்பணிகளுக்காக நாம் ஜெபிக்கும்போது, கொடுக்கும் போது பங்கேற்கும்போது இறை அரசின் பத்திரங்களாக, அருள்நாதரின் கருவிகளாக நாம் திகழ்கிறோம் எனபதை உணர்ந்த நம்மை அர்ப்பணிப்போம்.

முடிவுரை :

காதுகேளாதோருக்காக நம் உள்ளங்கள், நம் திருச்சபையின் கதவுகள் திறக்கப்படட்டும், அவர்கள் சம உரிமைகள், சம வாய்ப்புகள், சம கண்ணியம் பெற்றுக் கொள்ள தடையாகத் தோன்றும் கட்டுகளை அவிழ்த்திட முற்படுவோம். காதுகேளாதோர் மறுவாழ்வு / முழு வாழ்வு பெற்று அதன் மூலம் அவர் நாமம் மகிமைப்பட நம்மை அர்ப்பணிப்போம். நம்மிடையே இறை ஆட்சியை நிலைநாட்டுவோம். பிதாவினால் ஆசீர்வதிக்கப் பட்டவர்களே (மத்.25:34) என்று அழைக்கப்படும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோம்.

அருள்திரு J.I.E. சுதர்சன்
திருமண்டல காதுகேளாதோர் திருப்பணி

01.09.2007

மாதத்தின் முதல் நாள்

பாடங்கள் : ஏசா.43:1-5; லூக்.8:22-25

வசனம் : *"நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினி ஜுவாலை உன்பேரில் பற்றாது" (ஏசா.43:2).*

முன்னுரை :

சென்ற மாதத்தில் நமது வாழ்வில் தான் எத்தனை எத்தனை ஏமாற்றங்கள், போராட்டங்கள், ஓய்வு இல்லா வாழ்க்கை முறை, உடைந்துபோன உறவு முறைகள், தள்ளிபோகும் தேவ ஆசீர்வாதங்கள், உணர்ச்சிகளின் மீறுதல்கள், குடும்ப மற்றும் பிள்ளைகளால் வரும் துயரங்கள், நோய்கள் மற்றும் மரணங்கள், தேவ சிட்சை போன்றவை நமது விசுவாசத்தை சோதித்து பார்ப்பதை நாம் அனுபவித்து கொண்டிருந்தோம். யோவா.16:33இல் இயேசு சொல்கின்றார், 'உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்! என்கிறார். பிரச்சனைக்களுக்கான காரணங்களையும் மேற்கொள்ளும் வழிகளையும் தேவன் இம்மாதத்தில் முதல் நாளிலே நமக்கு போதிக்கின்றார்.

சாத்தானின் நோக்கங்கள் :

பரிசுத்தவான்களை ஒடுக்க நினைக்கின்றான் சாத்தான் (தானி.7:25). அவனுடைய தந்திரங்கள் நமக்கு தெரியாதவைகள் அல்லவே என பவுல் சொல்கின்றார் (2கொரி.2:11). கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோவென வகை தேடி சுற்றித் திரிகின்றான் (1பேது.5:8).

அது மாத்திரமல்ல நமது வாயை சீண்டி, உணர்ச்சிகளை தூண்டி, தீய செயல்களை செய்ய நம்மை ஊக்கப்படுத்துகின்றான். அதை நியாயமென வாதாட செய்கின்றான். ஆனால் இயேசு அதுபோன்ற சோதனைகளை முறியடித்தார். பவுல் பல்வேறு ஆயுதங்களை தரித்து அவற்றை எதிர்கொள்ள ஆலோசனை சொல்கின்றார் (எபே.6:13-17).

நாம் வாசிக்கக் கேட்ட நற்செய்தி பகுதியிலும்கூட சீடர்களை சுழல்காற்றை கொண்டு மிரட்டுகின்றான். அவர்கள் பயஉணர்வை தூண்டி விடுகிறான். நமது வாழ்விலும் எத்தனைமுறை இச்சாத்தானின் நோக்கங்களுக்கு செவிமடுத்திடுகிறோம் என்பதை நினைத்துபார்ப்போம்.

விசுவாச கேடகத்தை மேலுயர்த்துவோம் :

முதலாவது விசுவாசத்தின் மூலத்தை (Source) நாம் அறிந்து கொள்ள வேண்டும். இயேசுவே விசுவாசத்தை துவக்குகிறவர், முடிக்கிறவர் என்பதை உணர்ந்து கொள்ளுதல் மிகவும் அவசியம் (எபி.12:1). நம்மால் தாங்க கூடாத, தீர்க்கதூடாத பிரச்சனைகள் நம்மை தாக்கும்போது மோசேயை போல புலம்பாமல், சோர்ந்து போகாமல் (எண்.11:11-15) தேவனுக்காக காத்திருந்து புது பெலன் அடைய தேவன் நம்மை அழைக்கிறார். நாம் ஓடினாலும் இளைபடையோம். நடந்தாலும் சோர்ந்து போகோம் (ஏசா.40:31). தண்ணீர்கள் கடக்கும்போது அவர் நம்மோடு கூட இருப்பார், ஆறுகள் நம்மேல் புரளாமல் பாதுகாப்பார் (ஏசா.43:1,2).

எனவே சீஷர்கள் சரியாக விசுவாச மூலவரின் உதவியை நாடினார்கள் (லூக்.8:24மு). உதவியை நாடின சீடர்களின் கதறலை கேட்ட ஆண்டவர் சத்திய வார்த்தையினாலே இயற்கையயை கட்டுக்குளாக்கினார். சங்கீதக்காரன் சங்.119:24,25இல் "ஆண்டவரது சாட்சிகள் என "ஆலோசனைகாரன்" என்று சொல்கின்றார். இயேசுகிறிஸ்துவும் சோதனைகாரனின் சோதனைகள் தேவனின் சத்திய வார்த்தைகளை கொண்டு சாத்தானை வெற்றி கொண்டார் (லூக்.4:4,8,12). பவுல் அப்போஸ்தலனும் ரோ.10:17இல் 'விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்' என்கிறார்.

எனவே தேவனுடைய சித்தத்தை அறிந்த மக்களாக "எல்லாம் நன்மைக்கே" (ரோ.8:28) என்றுணர்ந்து நமக்கு வரும் துன்பங்களிலே மேன்மை பாராட்டி (ரோ.5:3,4) (யாக்.1:2-4) உற்சாகம் கொள்வோம். போதுமென்ற மனதுடனே வாழ்வோம் (பிலி.4:11-13). தேவன் நம் குறைவுகளையெல்லாம் நிறைவாக்குவார் (பிலி.4:19).

முடிவுரை :

அற்புதங்களை செய்கின்ற ஆண்டவர் நம்மிடம் கேட்கும் கேள்வி என்னவென்றால் "உங்கள் விசுவாசம் எங்கே?" ஆகவே நமக்குவரும் விசுவாச கேள்விகளில் சோர்ந்து போகாமல் நம்பிக்கையின் தேவனை நோக்கிப் பார்த்து, அவரை சார்ந்து கொள்வோம். சோர்புகள், பிரச்சனைகளின் மத்தியில் விசுவாசம் கொள்வோம். "தளர்ந்து போகாதிருப்போம். ஏற்றக் காலத்தில் அறுப்போம்" (கலா.6:9).

"யோர்தான் புரண்டு வரும்போல்
எண்ணற்ற பாரங்களோ
எலியாவின் தேவன் எங்கே
உந்தன் விசுவாச சோதனையில்"

திரு. B. டேவிட் அன்பு பிரபாகரன்
அழகியபாண்டியபுரம்

02.09.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 14ஆம் ஞாயிறு
(திரித்துவ 13)

பொருள் : **நற்செய்தியின் மாண்பு**

பாடங்கள் : 2இராஜா.23:1-11; எபே.4:25-5:14; மத்.11:12-18

வசனம் : *"நீங்கள் போய் கனிகொடுக்கவும், உங்கள் கனி நிலைத்திருக்கவும், நான் உங்களை ஏற்படுத்தினேன்" யோவான் 15:16பி*

1. **சுவிசேஷம் திருச்சபையை சுத்திகரிக்கிறது :**
(Gospel Purifies the Church)

யோசியா ராஜா கர்த்தருடைய வார்த்தையை கண்டுபிடித்து, ஜனங்கள் அதை வாசிக்க செவி கொடுத்த போது சுத்திகரிப்பு நிகழ்ந்தது.

சுவிசேஷம் தனிவாழ்வை (Personal) சுத்திகரிக்கிறது. 2இராஜா.22:11.

சுவிசேஷம் திருச்சபையை (Congregation) சுத்திகரிக்கிறது. 2இராஜா.23:1-3

சுவிசேஷம் சமுதாயத்தை (Society) சுத்திகரிக்கிறது 2இராஜா.23:4-20

சுவிசேஷத்தின் முக்கியத்துவம் தனி, குடும்பம், குழு, சபை சமுதாய வாழ்வில் பெருகும்போது உத்தமம் பெருகும் (Truthfulness) 2இராஜா.22:7

ஆராதனை பெருகும் (Worship) 2இராஜா.23:21,23

ஆசீர்வாதம் பெருகும் (Blessing) 2இராஜா.22:20

2. **சுவிசேஷம் நடக்கையை சுத்திகரிக்கிறது :**
(Gospel Purifies Conduct)

சுவிசேஷம் அனுபவமாக மாறும்போது பூரண மாற்றத்திற்கு (Full transformation) வாய்ப்பு உள்ளது.

அழைப்பு நிறைந்த நடக்கை (Walking legitimately / loyally) எபே.4:1

அன்பு நிறைந்த நடக்கை (Walking in love) எபே.5:2

அனலான நடக்கை (Walking in light) எபே.5:8

அக்கறையான நடக்கை (Walking in life) எபே.5:15

சுவிசேஷ அனுபவம் நம்மை சுவிசேஷமாக மாற்றுகிறது (2கொரி.2:15, எபே.2:10).

3. சுவிசேஷம் நோக்கத்தை சுத்திகரிக்கிறது :
(Gospel purifies Motives)

மனிதன் உலகில் வாழ அனுமதிக்கப்பட்டிருப்பது தேவனுக்காக கனிகொடுத்து வாழவே!

கனியுள்ள வாழ்க்கை (Fruit filled life) மாற்.11:13

மிகுந்த கனி வாழ்க்கை (More Fruit) யோவா.15:8

பெருக்கும் கனி வாழ்க்கை (Multiplied fruit) யோவா.15:16

விவரணங்கள் :

1. பிரான்சிஸ் அசிசி ஒருமுறை ஒரு புதிய சீஷனோடு சுவிசேஷ ஊழியம் சென்றார். வீடு திரும்பியதும் புதிய சீஷன் கேட்டான் : சுவிசேஷப் பணிக்கு சென்றோம், சுவிசேஷம் சொல்லவில்லையே என்றான். அசிசி பதில் சொன்னார் : உண்மைதான், ஆனால் தெருவில் சென்றபோது பலர் நமது வாழ்க்கையை, நடக்கையை கவனித்தார்களே! என்றார்.

2. மாவீரன் அலெக்சாண்டர், இரவில் பாதுகாவலில் தூங்கிக் கொண்டிருந்த ராணுவ வீரனைப் பார்த்து விட்டார். அவன் பெயர் அலெக்சாண்டர் என்று தெரிந்ததும் அவர் கூறியது : ஒன்று நடக்கையை மாற்று அல்லது பெயரை மாற்று! (Either Change your name or change your conduct).

அருள்திரு P. பிரடெரிக் சத்திய சாமுவேல்
நற்செய்தி அருட்பணித்துறை



09.09.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 15ஆம் ஞாயிறு
(நற்செய்திப்பணி ஞாயிறு – திரித்துவ 14)

பொருள் : **நற்செய்திப் பணி**

பாடங்கள் : 2இராஜா.7:3-10; அப்.8:1-8; மத்.4:23-25

வசனம் : *2இராஜாக்கள் 7:9.*

முன்னுரை :

திருச்சபையின் உயிரோட்டமும் கிறிஸ்தவர்களின் தலையாய் கடனுமாக அமைந்திருப்பது நற்செய்திப்பணி, கிறிஸ்தவன் நற்செய்திப் பணியாற்றவில்லையெனில் அவன் வாழ்வில் எங்கேயோ பழுது காணப்படுகிறது என்பது தான் பொருள். திருச்சபையின் விரிவாக்கமும், வளர்ச்சியும் நற்செய்திப் பணியினாலேயே நடைபெறுகின்றன. Gospel என்ற ஆங்கில வார்த்தை அருளுரை, நற்செய்தி கொண்டு செல்லுதல், நற்செய்திகளைப் பேசுதல் ஆகிய பல பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒட்டு மொத்தமாக மற்றவர்களுக்கு நல்ல செய்தியைக் கூறுதல் எனலாம்.

Gospel என்ற இந்தச் சொல்லை God-Spell என்று இரண்டாகப் பிரிக்கலாம். God Story (இறைச் செய்தி) என்று இதற்குப் பொருள்.

கிறிஸ்தவர்களைப் பொறுத்தமட்டில் நற்செய்தி என்பது இயேசு கிறிஸ்து ஆகும். இயேசு கிறிஸ்துவின் வாழ்வும், பணியும் மற்றவர்களுக்கு கூறி அறிவிக்கப்பட வேண்டும். இயேசு கிறிஸ்துவின் பிறப்பு முதல் உயிர்த்தெழுதல் வரை அவர் செய்த மீட்பின் செய்கைகளை விளக்குவதும், அவர் ஆள் தன்மையில் அடங்கியிருந்த இறைத் தன்மையையும், வெளிப்பாட்டையும் அறிவிப்பதும் கிறிஸ்தவ நற்செய்தின் சாரமாயிற்று. இயேசு கிறிஸ்து தந்தையாகிய கடவுளால் உலகத்திற்கு அனுப்பப்பட்டார். அது போன்று உயிர்பெற்ற ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் தமது அடியவரின் திருக்கூட்டத்தை (சபை) இவ்வுலகிற்கு வாழ்வளிக்க அனுப்புகிறார் (யோவா.3:16,17; 17:18; 20:21)

ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு நற்செய்தியாளனே. ஆதித் திருச்சபையிலுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும் நற்செய்திப் பணியில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதை அப்போஸ்தலர் நடபடிகளில் காண்கிறோம். இவ்விதமாக நற்செய்திப்பணி அனுப்புதலின் பணியாக, விடுதலைப் பணியாக அமைக்கப்பட்டுள்ளது. திருச்சபை தான் எங்கே அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை புரிந்துக் கொள்ள வேண்டும். தமிழ் நாட்டிலுள்ள திருச்சபை தமிழ் நாட்டிற்குள் அனுப்பப்பட்டிருக்கிறது என்ற உணர்வை முதற்கண் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த உண்மை நற்செய்திப்பணியின் மூலம் உள்ளூர் திருச்சபைக்குள் நிரூபிக்கப்பட்டபின் உலகத்திற்குள் அனுப்பப்படும் உன்னத திட்டத்திற்கு உட்பட வேண்டும். நீங்கள் உலகம் எங்கும் போய் எல்லா படைப்புகளுக்கும் நற்செய்தியை எடுத்துக் கூறுங்கள் என்பது ஆண்டவர் நமக்கிட்ட கட்டளையாகும். இந்த உலகத்திலேயே பல உலகங்கள் இருக்கின்றன. "எங்கும்" என்ற சொல் இந்த உலகங்களை யெல்லாம் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது. பொருளதரம், கலை, வேதாந்தம், சித்தாந்தம், அறிவியல், வாணிபம், உழவு, கைத்தொழில், ஏழைகள் ஆகியவையெல்லாம் இவ்வுலகில் பற்பலவிதமான பரிமாணங்களாகும். தூய ஆவியானவர் நற்செய்திப்பணியின் நாயகரும், இயக்குநருமாக இருப்பதால் அவரே எல்லா சூழல்களையும், தேவைகளையும் நமக்கு உணர்த்துகிறவர். உழைப்பின் களத்திற்கு நமக்கு முன்னே உயிர் பெற்ற கிறிஸ்து சென்றிருக்கிறார். (மாற்.16:7) அவருடைய உயிருள்ள பிரசன்னம் என்றும் அவரது அடியவரின் அருட்பணியுடன் இருக்கிறது (மத்.28:20).

திருமறைப்பகுதிகள் தரும் இசைவு நிலை :

நற்செய்திப்பணி என்னும் பொருளுக்கான மேற்குறித்த மூன்று திருமறைப் பகுதிகளும் தரும் இசைவு நிலை என்ன? பழைய ஏற்பாட்டுப் பகுதியில் எலிசா தீர்க்கனின் உரைகேட்டும் இறைநம்பிக்கை இழந்த மன்னர், தலைவர்கள் ஆகியோர் அமைந்த சூழலில் நான்கு தொழு நோயாளிகள் நற்செய்தியாளராக மாறினார்கள். நற்செய்தி கேட்டு விரைந்து சென்ற மேய்ப்பர்கள் போன்று துணிகரமாக (adventurous) செயலாற்றினார்கள். வாழ்வோ, சாவோ எதுவானாலும் சரி என்ற தீர்மானத்துடன் எதிரிகளின் பாளையம் சென்றார்கள் (கிறிஸ்துவின் சாட்சியாக உயிர் நீத்த இரத்த சாட்சிகளின் துணிவும் இதுதானே) சீரியப்படை பின் வாங்கினதைக் கண்டார்கள். வயிராறப் புசித்தார்கள். அதன்பின் இந்த நற்செய்தியை அறிவிக்க ஓடோடி வந்தார்கள். அதன் விளைவாக நகரம் காக்கப்பட்டது. இது நற்செய்தியின் உடனடித் தேவை (Urgency of Evangelism) பற்றி உணர்வு நிலைக்கு சிறந்த எடுத்துக் காட்டன்றோ?

ஆதித் திருச்சபையின் நற்செய்தியாளர்களில் பிலிப்புவின் சமகாலத்தவர்களாக, சிதறடிக்கப்பட்ட மக்கள் சென்ற இடமெல்லாம் நற்செய்தி அறிவித்தார்கள். ஸ்தேவானின் மரணம் திருச்சபைக்கு நேரிட்ட தோல்வி போன்று தோன்றினும் அதுவே நற்செய்தியின் வெற்றியாயிற்று. ஸ்தேவானின் மரணமே தமது மனம் மாறுதலுக்கு பெரிதும் வழி வகுத்ததைக் குறித்து பவுல் சான்று பகிர்கிறார். (அப்.22:20) திருச்சபையின் வாழ்வில் வரும் துன்பங்கள் பகிர்ந்துக் கொள்ளும் நற்செய்தியின் மூலம் இன்பமாக மாறுகிறது.

மத்தேயுவின் நற்செய்தியின்படி (மத்.4:23-25) இயேசு கிறிஸ்து பகிர்ந்துக் கொண்ட இறையாட்சியின் நற்செய்தியின் விடுதலை, நம்பிக்கை, சமாதானம், நிலையான வாழ்வு ஆகியவை சிறப்பிடம் பெற்றிருந்தன. அவருடைய நற்செய்தியை கேட்டு யூதர்கள் மட்டுமன்றி பிற இனத்தவரும் தூரமான இடங்களிலிருந்து வந்தார்கள். கிறிஸ்துவின் போதனை பணிகள் விடுதலை பணியையும் அடங்கியிருந்தது. அது மனிதனுக்குரிய முழு வாழ்வின் பணியாயிற்று.

நற்செய்தி பணியின் இன்றைய நிலையும், திருச்சபைக்கான அறைகூவலும் :

திருச்சபை வாழ்மக்கள் நற்செய்தி பணியின் உடன் பங்காளிகளாக இருக்கிறார்கள். (பிலி.1:5) அப்போஸ்தலர் நடபடிகளின்படி திருச்சபை நற்பணியின் மையமாக இருந்தது இயேசுவை தேவன் எழுப்பினார். இதற்கு நாங்கள் எல்லாரும் சாட்சிகளாய் இருக்கிறோம் - இதுவே சபை உயிர்பெற்றுள்ளது என்பதற்கு சிறந்த சான்றாகும். திருச்சபை இயக்கமாக இருந்து நற்செய்தி பணியாளர்களை அனுப்பியதை ஆதித் திருச்சபை வரலாற்றில் காண்கிறோம். எனினும் தனி நபர் பணியும் (Individual Evangelism - by Dialogue) ஆதித் திருச்சபையின் நற்செய்தி பணித் திட்டத்தில் அமைந்திருந்தது. கந்தாகே மந்திரியிடம் பிலிப்பு நடத்திய உரையாடல் இதற்கு உதாரணம். (அப்.8:26-40) இன்றைய இந்திய சமூக சூழ்நிலையில் புதிய வாழ்க்கைக்கு அறைகூவி அழைக்க நற்செய்தி பணி துணை செய்ய வேண்டும். புதிய மதத்தை தழுவ கட்டாயப்படுத்தும் நெறி திருமறையை சார்ந்தது அல்ல, எனினும் நற்செய்தியை ஏற்று கிறிஸ்துவின் அன்பை வருவோர் பழக்க வழக்கங்களிலும் வழிபாடு, கூட்டுறவு ஆகியவற்றில் மாற்றம் பெறுவதை தவிர்க்க முடியாதது. இறுதியாக, நற்செய்தியை பகிர்ந்து கொள்ளும் முறைகளை நோக்கின் அது காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவாறு மாறுதல் பெறுகிறது. சூழ்நிலைக்கு தகுந்தவாறு நற்செய்தியை எடுத்துக்கூற பவுல் தனித்திறன் பெற்றிருந்தார் (அப்.14; அப்.17 விளக்கம் காண்க).

நற்செய்தியாளர்களின் வாழ்க்கையே நற்செய்தியாக அமைவது (Life Sharing Method) நற்செய்தி பணியின் அடிப்படையாக அமைந்திருக்கிறது. எல்லாரும் வாசித்து அறியும்படி நற்செய்தியாளனின் வாழ்வு கடிதங்களாக அமைய வேண்டும் (2கொரி.3:1-3). இயேசுவின் அச்ச அடையாளங்களை நமது உடலில் சுமந்துக் கொண்டிருக்க அழைக்கப்படுகிறோம் (கலா.6:17).

அருள்திரு அறிவர் ஞா. ஸ்டீபன் லயணல்
பாளையங்கோட்டை

* * * * * *

16.09.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 16ஆம் ஞாயிறு
(திரித்துவ 15)

பொருள் : ஜெபம்

பாடங்கள் : எரே.29:1-7; 1தீமோ.2:1-7; மத்.6:5-15

வசனம் : *"நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்".*

முன்னுரை :

ஜெபம் என்பது கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒரு பெரிய சலுகையாகும். "தேவனோடு தொடர்பு கொள்ள நேரத்தைச் செலவிடாத ஒரு விசுவாசி தனது பூரண சந்தோஷத்தையும், வெற்றியையும் அனுபவிக்கமுடியாது என்பதுதான் உண்மை" ஜெபம் என்பது "அறிவோடும் உண்மையோடும், அன்போடும், இறைவனிடம் கிறிஸ்துவின் மூலம் பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு அவர் வாக்கு பண்ணின காரியங்களுக்காக, அவரின் வார்த்தைப்படி, திருச்சபையின் நன்மைக்காக, தனி நபருக்காக அல்லது பல்வேறு காரணங்களுக்காக விசுவாசத்தில் நம் சித்தத்தை கடவுளது சித்தத்திற்கு கீழ்ப்படுத்தி நம் இதயத்தை அல்லது ஆத்துமாவை ஊற்றிவிடுவதாகும்" என்று ஜான் பனியன் ஜெபத்தை பற்றி கூறுகிறார். ஆகவே ஆண்டவரின் பிள்ளைகளாகிய நாம் எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும். மேலும் ஜெபிப்பதில் இயேசுகிறிஸ்துவின் மாதிரியே நமக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

1. தனித்திருந்து ஜெபிக்கும் அனுபவம் :

உலகின் இரட்சகரான இயேசுகிறிஸ்து வனாந்திரத்திலும், மலைகளிலும் சென்று தனிமையாக ஜெபித்தார் என வேதத்தில் வாசிக்கின்றோம். பொதுவாக நாம் தனிமையாக ஜெபிக்கின்றபொழுது இறைவனிடம் உண்மையோடு, உரிமையோடு, உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேசுகின்றோம். இயேசுவானவரும் பிதாவிடம் உரிமையோடு அவருக்குள்ள ஐக்கியத்தை பலப்படுத்தி ஜெபிக்கிறதை காணலாம். மேலும் தனித்திருந்து ஜெபிக்கும்போது போராடி ஜெபிக்கிற அனுபவமும் நமக்கு கிடைக்கிறது. இயேசு கெத்சமனே தோட்டத்தில் போராடி ஜெபித்தார். மேலும் இயேசு தனிமையாய் விழித்திருந்து ஜெபித்தார் என்பதையும் காண்கிறோம். அவர்தம்

தந்தையின் பிரசன்னத்திற்காய் ஒவ்வொரு நாளும் தனிமையாய் அவரோடு ஜெபிக்கிறதை வழக்கமாய் கொண்டிருந்தார் (லூக்.5:15,16). அன்றாட வேலையை ஆரம்பிக்கும் முன் பிதாவுடன் தனித்திருக்கச் சென்றார். திரும்பிவரும்போது வல்லமையுடன் காணப்பட்டார் (மாற்.1:32,39). மிகவும் முக்கியமான தீர்மானங்களைச் செய்யுமுன் பிதாவிடம் ஆலோசனை பெற அவருடன் தனித்திருந்தார் (லூக்.6:12; லூக்.9:28-31; லூக்.22:41). மேலும் இயேசு தனித்திருந்து சீஷர்களுக்காகவும், திருச்சபைக்காகவும் ஜெபித்தார் (யோவா.17). ஏன் வனாந்திரத்திற்கும் மலைகளுக்கும் அதிகாலையில் சென்று ஜெபித்தார்? அமைதி செறிந்த அவ்வேளையே தமது பிதாவுடன் தனித்து உரையாட உறவாட ஏற்ற நேரம், இடம் என அறிந்து ஜெபிக்கச் சென்றார். ஆகவே மத்.6:6 வசனத்தில் இயேசு தன்னுடைய மலைபிரசங்கத்தில் ஜெபிக்க கற்றுக் கொடுக்கும்போது "நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரகத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு" என்றார். உண்மையான மாய்மாலமற்ற ஜெபத்தை எப்படி செய்ய வேண்டும் என கற்றுக் கொடுக்கிறார்.

பொதுவாக யூத மத தலைவர்கள் தினமும் 9a.m., 12p.m., 3.p.m. என மூன்றுவேளை ஜெபிக்கிற வழக்கம் வைத்திருந்தனர். குறிப்பிட்ட நேரம் வந்தவுடன் அவர்கள் நிற்கிற இடங்களில் சந்தைவெளி, தெருக்கள் மற்றும் ஆலய வாசல்களில் நின்று மக்கள் காணும்படியாக மாய்மாலமாக நீண்ட அங்கிகளுடன் தலையை குனிந்து கைகளை விரித்து ஜெபித்தனர். ஆனால் அவர்கள் உள்ளமோ கேடுபாட்டினால் நிறைந்திருந்தது. ஆகவே இயேசு அதை தவறு என்று கூறி நாம் ஜெபிக்கும்போது உலகத்தின் பந்தங்கள், ஆசாபாசங்களினின்று ஒதுங்கி கடவுளை தனித்து சந்தித்து அவரோடு ஒன்றித்து விடுதல் ஜெபமாகும். வெளிப்பகட்டும் ஆரவாரமும் ஜெபத்திற்கு சிறிதும் தேவையில்லை. இன்று தெருக்களிலும் மேடைகளிலும், மீடியாக்களிலும் மனிதர் காண வேண்டும் என ஜெபிக்கிற ஊழியர்கள் பெருகி விட்டனர். ஆனால் நாம் இயேசுவின் மாதிரியை பின்பற்றுவோம். பதில் பெருவோம்.

"உன் சிருஷ்டிகரை நீ உதயத்தில் எண்ணு
உள்ளங்கனிந்து தனி ஜெபம் பண்ணு"

2. குடும்பமாக அமர்ந்து ஜெபிக்கும் அனுபவம் :

"குடும்ப ஜெபம் இல்லா வீடு கூரை இல்லாத வீடு" என்ற சொல்லை நாம் அடிக்கடி கேட்கின்றோம். அது உண்மைதான். குடும்பமாக நாம் ஜெபிக்கின்ற ஜெபம் கடவுளின் பாதுகாப்பை, ஆசீர்வாதத்தை கூரையாக நின்று தருகின்றது. யோசுவா 24:15இல் யோசுவா நாங்கள் குடும்பமாக தேவனிடத்தில் ஜெபிப்போம் என கூறுகிறார். குடும்ப தலைவன், தலைவி,

பிள்ளைகள் யாவரும் இணைந்து ஒன்றுபட்டு ஓரிடத்தில் கூடி கைகளை தட்டி (இசைகருவிகளை மீட்டி) பாடல்பாடி, வேதம் வாசித்து ஜெபம் செய்வது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் நமக்கு. அப்படி செய்யும்போது குடும்ப சமாதானத்தை ஒவ்வொருநாளும் நாம் அனுபவிக்கலாம். எரே.29:5-7ஆம் வசனத்தில் குடும்ப ஆசீர்வாதத்தையும், சமாதானத்திற்காக குடும்பமாக ஏறெடுக்க வேண்டிய விண்ணப்பத்தையும் குறித்து எரேமியா பேசுகிறதை காணலாம். மேலும் மத்.6:11 கர்த்தருடைய ஜெபத்தில் வரும் "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்ற பதம் குடும்ப ஜெபத்தில் செய்ய வேண்டிய ஜெபமாகவே வருகிறது. மேலும் திருச்சபையின் பிள்ளைகள் வருடத்திற்கு ஒருமுறையாயினும் தங்கள் வீடுகளில் ஜெபக் கூட்டங்கள் சபைகுரு மூலம் நடத்தி ஜெபிக்க வேண்டும். அப்பொழுது ஆண்டவருடைய ஆசீர்வாதத்தை நம்முடைய குடும்பத்தில் நாம் அனுபவிக்கலாம்.

3. திருச்சபையாக கூடி ஜெபிக்கும் அனுபவம் :

எங்கே இரண்டுபேர் மூன்றுபேர் என் நாமத்தினால் ஒருமனப்பட்டு கூடிவருகிறீர்களோ அங்கே அவர்கள் மத்தியில் இருப்பேன் அவர்கள் ஜெபத்தை கேட்டு பதில் செய்வேன் என்றார் நம் ஆண்டவராகிய இயேசு. பொதுவாக நாம் திருச்சபையாக தேவனுடைய ஆலயத்தில் கூடி ஆராதனை வேளைகளில் ஊக்கமாக ஜெபிக்கின்ற பழக்கம் உடையவராக இருத்தல் அவசியம். சங்.12:5 "பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள்" என வேதத்தில் காண்கிறோம். திருச்சபையாக ஊக்கத்தோடே ஜெபிக்கிற அனுபவம் நம்முடைய திருச்சபையிலும் நமக்கும் தேவை. ஆதித் திருச்சபையில் சபையார் கூடி ஜெபித்து அற்புதங்களை கண்டனர். அப்.1:13,14ஆம் வசனத்தில் சீஷர்களும், இயேசுவின் தாயார், சகோதரர்கள் மற்றும் சில ஸ்திரீகள் மற்றும் சபையாராக "ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்" என காண்கிறோம். ஜெபத்தின் மூலம் ஆதித்திருச்சபை வேகமாக வளர்ந்தது. ஜாண் வெஸ்லி, சார்லஸ் வெஸ்லி மற்றும் ஒயிட்பீல்ட் போன்றோர் கூடி ஜெபித்ததினால் 19ம் நூற்றாண்டில் அநேக திருச்சபைகள் (மெத்தடிஸ்ட்) உலகெங்கும் உருவானது. மேலும் மக்கள் கூடி ஜெபித்ததின் விளைவாக பல மிஷனெரி இயக்கங்கள் உருவாகி திருச்சபைகள் வளர்க்கப்பட்டது.

முகவுரை :

நாமும் தனியாக, குடும்பமாக, திருச்சபையாக ஜெபிக்கின்றோமா. இந்த அனுபவம் நமக்கு நிச்சயம் தேவை.

Dn J. பர்னபாஸ் அப்பாத்துரை
பாளையங்கோட்டை

21.09.2007

புனித மத்தேயு திருநாள்

பாடங்கள் : ஏசா.33:13-17; 2கொரி.4:1-6; மத்.9:9-13

முன்னுரை :

மத்தேயு 12 அப்போஸ்தலர்களில் ஒருவர். கலிலேயாவிலுள்ள கப்பர்நகூம் ஊரானாகிய இந்த மத்தேயு ஒரு ஆயக்காரன். இவருடைய முதற்பெயர் லேவி. அவருடைய தகப்பனாரின் பெயர் அல்பேயு. ஏரோதுக்காக பட்டணத்துக்கு வரத்துப்போக்குச் செய்தவர்களிடம் தீர்வையை வசூலித்துக் கொண்டிருந்தான். இயேசு இவனை சீஷனாக வரும்படி அழைத்தவுடன் தன் வேலையை விட்டுவிட்டு அவரை பின்சென்றான். இயேசுவுக்காக வாழ்ந்த புனித மத்தேயுவையும், அவரது பணிகளையும் கீழேயுள்ள குறிப்புகளால் சிலவற்றை அறியலாம்.

பாழாக்கும் வாழ்வு (ஏசாயா 33:15)

ஏசாயா தீர்க்கத்தரிசியின் மூலம் தமது ஜனத்திற்கு கொடுக்கப்பட்ட கட்டளை என்னவென்றால், நீதியாய் நடந்து, செம்மையானவைகளைப் பேசி, இடுக்கண் செய்வதால் வரும் ஆதாயத்தை வெறுத்து, பரிதானங்களை வாங்காதபடிக்குத் தன் கைகளை உதரவேண்டும்.

மத்தேயு ஆண்டவரின் கட்டளையை மறந்து, அந்நிய அரசாங்கத்திற்கு தன் சொந்த ஜனத்திடமே, அநியாயமான முறையில் வரி வசூல் செய்து கொண்டிருந்தான்.

உலகம் மட்டுமே தன்னுடைய வாழ்வு என்று நினைத்து ஆண்டவரை விட்டு வழிவிலகி சென்றவனாய் இருந்தவன், தன் சொந்த ஜனத்தின் அன்பை இழந்து வெறுப்பை சம்பாதித்துக் கொண்டு பாழாக்கும் வாழ்வை வாழ்ந்தான்.

நம் வாழ்வு எப்படிப்பட்டது? ஆண்டவரையும், அவருடைய பிள்ளையும் வேதனைப்படுத்துவதா? சிந்திப்போம்.

பரனோடுள்ள வாழ்வு : (மத்தேயு 9:9பி)

இயேசு, மத்தேயு என்னும் ஒரு மனுஷனைக் கண்டு எனக்கு பின்சென்றுவா என்றார்; அவன் எழுந்து அவருக்கு பின் சென்றான்.

(மத்.9:10பி) மத்தேயு தன் வீட்டில் இயேசுவோடும், அவர் சீஷரோடுங்கூட பந்தியிருந்தான்.

ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயுவை, இயேசு தன்னோடு வாழ அழைக்கிறார். அவன், உடனடியாக இயேசுவுக்கு பின்செல்ல, அழைப்பை

ஏற்றுக் கொள்கிறான். தன்னுடைய வேலை அவனுக்கு தடையாக இருக்கவில்லை. வேலையை, தன்னுடைய எல்லாவற்றையும் இழந்து, இயேசுவோடு வாழ்கின்ற, தங்குகின்ற, புசிக்கின்ற, ஊழியம் செய்கின்ற வாழ்வை அமைத்துக் கொள்கிறான்.

இவ்வுலக வாழ்க்கையில் ஆண்டவரின் அழைப்பை, வாய்ப்பாக ஏற்றுக் கொள்கிறோமா? இல்லை உதாசினம் செய்கிறோமா சிந்திப்போம்.

பயனுள்ள வாழ்க்கை (2கொரி.4:5)

நாங்கள் எங்களையே பிரசங்கியாமல் கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்.

தான் பெற்ற இன்பத்தை இவ்வுலகமும் பெறவேண்டும் என நினைத்தார் மத்தேயு. எனவே மத்.9:9 ஒரு பெரிய விருந்து செய்து தன்னுடைய சினேகிதரும் இயேசுவைச் சந்திக்கும்படி செய்தான்.

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குபின் எருசலேமில் தங்கியிருந்த வர்களில் இவனும் ஒருவன். சுமார் 25 ஆண்டுகளுக்கு பின்னர் மத்தேயு சுவிசேஷத்தை எழுதினார்.

யூத ஜனம் எதிர்பார்த்த மேசியா இயேசுதான் என்பதை உலகிற்கு தெளிவாக எடுத்துரைத்தார். இவருடைய சுவிசேஷம் யூதமார்க்கத்திலிருந்து கிறிஸ்தவர்களாய் வந்தவர்களுக்காக எழுதப்பட்டபடியால், அவர்கள் பேசின 'அரமேக்' பாஷையில் எழுதப்பட்டது.

இதன்பின் பார்சியா, மேதியா தேசங்களில் சுவிசேஷ ஊழியம் செய்து, கடைசியாக இரத்த சாட்சியாக மரித்தார். அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான் என்ற வார்த்தையின்படி புனித மத்தேயு அவருடைய நூலின் மூலம் நம்முடன் பேசுகிறார்.

நாம் யாருக்காக வாழ்கிறோம்? கிறிஸ்துவுக்காக செய்வது எதுவோ? அது நிலைத்திருக்கும், பயனுள்ளதாய் இருக்கும்.

கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாரக

அருள்திரு R. ஜாண்சன் ஆசீர்வாதம்
மாஞ்சோலை

23.09.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 17ஆம் ஞாயிறு
(தென் இந்திய திருச்சபை ஞாயிறு – திரித்துவ 16)

பொருள் : **பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை**

பாடங்கள் : **சகரியா 14:16-21; கொலோ.3:12-17; லூக்கா 19:1-10**

வசனம் : *எபேசியர் 2:7*

முன்னுரை :

நாம் இந்த உலகத்தில் தான் வாழ்கிறோம். ஆனால் உலகத்தின் வேஷங்கள், ஆசை இச்சைகள், பாரம்பரியங்கள் நமக்குள் வந்துவிடக் கூடாது. இப்பிரபஞ்சத்திற்குரிய வேஷத்தை தரித்து விடக் கூடாது. நாம் இந்த உலகத்திற்கு அந்நியரும், பரதேசிகளுமாய் கடந்து செல்ல வேண்டும். நம்முடைய குடியிருப்பு இந்த உலகத்தில் அல்ல. பரலோகத்தில் இருக்கிறது. ஒரு மீன் உப்பு நிறைந்த கடலில் வாழ்ந்தாலும், உப்பு தன் சரீரத்திற்குள் புகாதவாறு போராடி தன்னை பாதுகாத்துக் கொள்கிறது. கப்பல் தண்ணீரிலே மிதக்கிறது. ஆனால் தண்ணீர் அதற்குள் புகுந்து விட இடம் கொடுத்து விட்டால், கப்பல் அமிழ்ந்து போகும். ஆகவே இவ்வுலகில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட (கொலோ.3:12) நாம் எவ்வித வாழ்வுக்கென பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறோம்?

1. பரம வாழ்வுக்கென பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறோம் :

பிலி.3:20 நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் இருக்கிறது. நாம் பரம கானானை நோக்கி நடந்து செல்லுகிற மோட்சப் பிரயாணிகள். இந்த உலகில் நாம் வாழும்போது, மேலுலகில் நாம் வாழ எவைகளை செய்ய வேண்டுமோ, அவைகளைச் செய்து, நம்மை பரம வாழ்வுக்குத் தகுதியுள்ளவர்களாய் மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம். (மத்.6:19,20) நாம் இவ்வுலகில் வாழுகின்ற வீடு எவ்வளவு அழகான, விலையுயர்ந்த அல்லது எளிமையான வீடாய் இருந்தாலும், அது நாம் பரதேசியாய் தங்குகிற வீடுதான். அதில் நிரந்தரமாய் தங்கி விட முடியாது. ஆனால் இயேசு நமக்காக உருவாக்குகிற நித்திய வீடோ அவருடைய மணவாட்டியாகிய நம்மை எண்ணி இரண்டாயிரம் ஆண்டுகளாக கட்டி எழுப்புகிற புதிய எருசலேம். (யோவா.14:2,3) இந்த பூமியிலே கொஞ்ச கால வாழ்க்கையிலே, நம்முடைய இருதயமாகிய வீட்டை கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுத்தால், நாம் தங்கியிருக்கிற வீட்டிலே அவருக்கு இடம் கொடுத்தால், நித்திய நித்தியமாய் பரலோக வீட்டிலே நமக்கு அவர் இடம் தருவார் (சங்.23:6).

2. பரிசுத்த வாழ்வுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறோம்:

நாம் பரிசுத்த ஜீவியம் செய்வதற்கும், உலகத்தால் நம்மை கறைபடாமல் பாதுகாத்துக் கொள்வதற்கும் "நாம் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறோம்" என்கிற உணர்வு நமக்கு மிகவும் அவசியம் (1கொரி.3:16,17). பரிசுத்தம் என்பது கிறிஸ்தவ வாழ்க்கையின் முதுகெலும்பு என்பதை மறந்து விடக்கூடாது. "பரிசுத்தமில்லாமல் ஒருபோதும், ஒரு மனுஷனாலும் தேவனைப் பார்க்கவே முடியாது" (எபி.12:14). பரிசுத்தமில்லாமல் பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கவும் முடியாது. அழுக்கடைந்த வஸ்திரங்களோடு ஒரு ராஜாவின் அரண்மனைக்குள் பிரவேசிக்க முடியுமா? அப்படியானால் பரலோகமாகிய ஒளிமயமான தேசத்திலே நாம் பிரவேசிப்பதற்கும், தேவாதி தேவனுடைய பரிசுத்த முகத்தை தரிசிப்பதற்கும், நமக்கு பரிசுத்தம் எவ்வளவு அவசியம்! (மத்.5:8). யோசேப்பு, தானியேலைப் போல (தானி.1:8). எந்தச் சூழ்நிலையிலும் பரிசுத்தத்தை காத்துக் கொள்வோம்.

3. பரமனைப் போல வாழ பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறோம்:

1பேதுரு 2:21 "நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் ... மாதிரியைப் பின வைத்துப் போனார்"

ஆண்டவருடைய அடிச்சுவடுகள் இந்த பூமியாகிய உலகத்தில் பதிந்திருக்கின்றன. நாம் பின்பற்றி வரும்படி அவருடைய பாதங்களின் அடிச்சுவடுகளை சரித்திரத்தில் பதித்து வைத்திருக்கிறார். அவர் நடந்த பாதையை வேதாகமத்திலே நாம் வாசிக்கிறோம். அவை நமக்கு முன் மாதிரியாய் இருக்கிறது. அவை பரிசுத்தமான அடிச்சுவடுகள் (லேவி.11:45). ஆகவேதான் யோவான் அப்போஸ்தலன் "அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும் (1யோவா.2:6). யோபு பக்தன் பழைய ஏற்பாட்டின் காலத்திலே வாழ்ந்திருந்தாலும் அவர் ஒரு ஆச்சரியமான வார்த்தையை கூறுகிறார். "என் கால்கள் அவர் அடிகளைப் பற்றிப் பிடித்தது. அவருடைய நெறியை விட்டு நான் சாயாமல் அதை கைக்கொண்டேன்" (யோபு 23:11). இயேசுவின் அடிச்சுவடுகள் பிதாவினுடைய குணாதிசயங்களை வெளிப்படுத்துமானால், நம்முடைய அடிச்சுவடுகள் கிறிஸ்துவை வெளிப்படுத்த வேண்டும் அல்லவா!

முடிவுரை:

கிறிஸ்தவர்களாகிய நாம் இவ்வுலகில் வாழும் காலங்களில் உலகம் நமக்குள் வாழ ஒருபோதும் இடம் கொடுக்கக் கூடாது. இன்றை உலகம் சீர்கெட்டதாய் மாறிக் கொண்டு வருகிறது. "நாம் உலகத்திலிருந்தாலும் உலகத்தாரல்ல" (1யோவா.2:15) என்பதின்படி பரமனைப் போல, பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து, பரம கானானை நோக்கி ஓட நம்மை அர்ப்பணிப்போம்!

அருள்திரு. B. ஜெபராஜ் ஞானசுவாமி, தாழையூத்து

27.09.2007

தென் இந்திய திருச்சபை தோன்றிய தினம்

பாடங்கள் : ஆதி. 37:15-28; எபே. 4:1-16; யோவா. 17:20-26

முன்னுரை :

இரண்டாவது பெந்தெகொஸ்தே" என அழைக்கப்பெறும் நமது தென் இந்தியத் திருச்சபை செப்டம்பர் 27, 2007 அன்று தனது அறுபதாவது (60th) பிறந்தநாளை காண்கிறது. இந்த மகிழ்ச்சியான நேரத்தில், சபைகளின் ஒருங்கிணைப்பிற்காக அயராது பாடுபட்ட பெரியோர்களை நினைவு கூறுவோம். அனேகமாயிரம் கிறிஸ்தவர்களின் கனவை நனவாக்கிய தேவனை பணிவோடும் பயத்தோடும் ஸ்தோத்தரிப்போம்.

வரலாற்றுப் பின்னணி :

1947ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலங்களில் அநேக மிஷனெரிகள், ஐரோப்பா, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து வந்து, நமது இந்தியாவின் தென்பகுதியில் ஆத்தும ஆதாயப் பணியில் ஈடுபட்டனர். அவர்கள் முறையே The L.M.S. S.P.C.K., S.P.G., C.M.S., லுத்தரன்ஸ், மெதடிஸ்ட் போன்ற பல சங்கங்கள் மூலம் பணி செய்து வந்தனர். "அவர்களெல்லாம் ஒன்றாயிருக்கவும்" (யோவா. 17:21) என்ற கிறிஸ்துவின் மாபெரும் சிறந்த ஜெபம் தலைவர்களில் உள்ளத்தில் கிரியை செய்தது.

1919ஆம் ஆண்டு தரங்கம்பாடியில் ஒரு ஐக்கிய மாநாட்டில் பேராயர் V.S. அசரியா அவர்கள் ஒழுங்கு செய்தார்கள். அங்கு உருவான அறிக்கையில் "சபைகளின் ஒருங்கிணைப்பு" என்பது ஒரு முக்கிய பங்கு வகித்தது. பின்னர் முறையே மற்றும் 1945ஆம் ஆண்டுகளில் மெதடிஸ்டு சபை மற்றும் ஆங்கிலிக்கன் சபை இதனை ஏற்றுக் கொண்டது. தலைவர்களின் 40 ஆண்டுகால விடாமுயற்சி வெற்றியடைந்தது. பிறகு தென் இந்தியத் திருச்சபை, 1947 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27ஆம் நாள் பிரகடனம் செய்யப்பட்டது. சென்னை செயின்ட் ஜார்ஜ் கதீட்ரலில் வைத்து இந்த வைபவம் நடைபெற்றது. 14 திருமண்டலங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட தென் இந்தியா திருச்சபை இன்று 22 திருமண்டலங்களுடன் சிறப்பாக தேவ பணியாற்றிக் கொண்டுள்ளது. "அவர்களெல்லாம் ஒன்றாயிருக்கவும்" (That they may be one) என்பது தென் இந்தியத் திருச்சபையின் முழக்கமாகும்.

இந்த மாபெரும் ஐக்கியத்தில் ஒரு பங்காயிருக்கிற நமது இன்றைய நிலை என்ன?

கிறிஸ்துவின் ஜெபமாகிய "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும்" என்ற கூற்றிற்கு உண்மையுள்ளவர்களாக, நோமையுடையவர்களாக. நமது

வாழ்க்கையின் அதன் அர்த்தத்தை பிரதிபலிக்கிறவர்களாக இருக்கிறோமா? சற்று அதனை சிந்திப்போம்.

ஜாதிகளை ஒன்றாக்கும் தேவன் :

எசே.38:22ஆம் வசனத்தில் தேவன் "ஒரே ஜாதியாக்குவேன்" என்று கூறுகிறதைப் பார்க்கிறோம். 23ஆம் வசனம் அவர்கள் விக்கிரகங்களுக்கு அடிமைப்பட்டுகிடந்த அவர்களின் முன் நிலைமையைக் காட்டுகிறது. இன்றைய கிறிஸ்தவர்கள் பலவிதங்களில் வேறுபட்டுக் கிடக்கிறோம். ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன், படித்தவன், பழக்காதவன் இப்படி பல. மட்டுமல்ல ஆவிக்குரிய வாழ்விலும் பலவித கொள்கை வேறுபாடுகள். தேவன் விரும்புகிற பாதையை விட்டு, விலகி விலகிச் செல்கிற அனுபவம். அதினிமித்தம் சுவிசேஷம் எல்லா இடங்களிலும் பரவத்தடை ஏற்பட்டுள்ளது. நாம் நிற்கிற இந்த இடதிலேயே நின்று, தேவனை நோக்கிப் பார்த்து அவருடைய ஐக்கியத்துக்கு நம்மை ஒப்புக் கொடுப்போம்.

நாம் என்ன செய்ய வேண்டும்?

எபேசியர் 4:1-16 வசனங்கள் இன்றையத் திருச்சபை மக்களுக்கு பவுலின் ஆலோசனைகளைப் பார்க்கிறோம்.

நமது இன்றைய அத்தியாவசிய தேவை ஒருவருக்கொருவர் தாழ்மை, சாந்தம், நீடிய பொறுமை, மனதுருக்கம், மென்மையான இதயம், கரிசனை, மனதாபிமானம், பிறர் நலனைக் கவனித்தல், ஆறுதல் அளிக்கும் மனோபாவம் உடையவர்களாய் இருக்க வேண்டும்.

சபை - கிறிஸ்துவின் சரீரம், நாமனைவரும் அவரது சரீரத்தில் இசைவாய் கூட்டி இணைக்கப்பட்டு, தேவநாமத்தை மகிமைப்படுத்த நம்மை ஒப்புக் கொடுப்போம்.

முடிவுரை :

நமக்குள்ள வேறுபாடுகளை களைந்துவிட்டு ஒருமனதோடு எழும்புவோம், கட்டுவோம், திருச்சபைகளை சபைகளின் ஒருங்கிணைப்பில் மையமாக காணப்படும் சத்தியம் யாதெனில் இயேசுவே தேவன் திருச்சபையின் ஆண், பெண் யாவரும் மனந்திரும்பி, கிறிஸ்தவ விசுவாசத்தில் ஏற்றுக்கொண்டு பரிசுத்த ஆவியின் வல்லமை பெற்றுக் கொள்வதேயாகும். நமது முக்கிய நோக்கம் பூலோகத்தில் தேவனின் இராஜ்யம் விருத்தியடைய வேண்டும்.

டீக்கன் A.B. ஜாண் கென்னடி
மேல இலந்தைகுளம்

29.09.2007

தூய மிகாவேல் முதலான சகல தேவதூதர்களின் திருநாள்

பாடங்கள் : தானி.10:10-19; வெளி.12:7-12; மத்.18:1-10

முன்னுரை :

தேவதூதர்களின் திருநாளாகிய இன்று வேதத்தின் அடிப்படையில் தூதர்களைப்பற்றி அறிந்து கொள்வது மிக அவசியம். "தூதர்கள்" தேவனால் படைக்கப்பட்ட பரலோகவாசிகள், மட்டுமல்ல தேவனுடைய கட்டளையை ஏற்று மனிதர்களுக்கு உதவி செய்பவர்கள் பரலோகத்திற்கும், பூலோகத்திற்கு மிடையே பாலமாக செயல்படுகிறவர்கள் (மத்.18:10). "மிகாவேல்" தூதனை 'தூதர்களில் பிரதானமானவர்" என்று யூதர்கள் கருதுகின்றனர் (யூதா 9). மேலும் மிகாவேல் "தூதர்கள் ராஜ்யத்தில் போர்த்தளபதி" என்றும் 'இஸ்ரவேலின் பாதுகாவலன்" என்றும் வேதத்தில் (தானி.10:13,21; 12:1இல் பார்க்கலாம். மத்தேயு 18:10இன் படி நம் ஒவ்வொருக்கும் தேவதூதர்கள் உண்டு. அவர்கள் நமது பணிவிடை ஆவிகள் அவர்கள் நமக்கு எவ்வாறு உதவியாயிருக்கிறார்கள் என்று சிறிது நேரம் தியானிப்போம்.

ஆபத்தில் - தூதனின் ஆவி

ஆதி.19:1-22 வசனங்களில் லோத்து குடும்பத்துக்கு வர இருந்த பேராபத்தைக் குறித்தும், தூதர்கள் எவ்வாறு அவர்களை தப்புவித்தார்கள் என்பது பற்றியும் பார்க்கிறோம். நாமும் பலவேளைகளில் லோத்து குடும்பத்தாரைப் போல் வரப்போகும் ஆபத்தை உணராதபடி அசட்டையாக இருக்கிறோம். ஜெபத்திற்கு வேதவாசிப்பிற்கு நேரம் கொடுக்காதபடி உலகத்திற்கு அதிகம் கொடுத்து விடுகிறோம். விளைவு சமாதானமற்ற குடும்ப வாழ்க்கை, பிள்ளைகள் வாழ்க்கையில் ஆசீர்வாதமில்லை, இன்னும் பல பிரச்சனைகள். சாத்தானால் உங்கள் குடும்பத்துக்கு ஆபத்து. அருமையான தேவனுடைய பிள்ளைகளே சங்.34:7இன் படி நீங்கள் கர்த்தருக்கு பயந்து, நீங்கள் போய்க் கொண்டிருக்கும் பாதையிலிருந்து இயேசுவை நோக்கிப் பார்த்தால், உங்கள் ஆபத்திலிருந்து உங்களை வெளியே தூக்கிக் கொண்டுவர தேவன் தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார். உங்களை காப்பாற்றுவார் பயப்படாதீர்கள்.

தவறு செய்யும்போது எச்சரிக்கும் தூதன்

பல நேரங்களில் சாத்தானால் இழுக்கப்பட்டு நாம் தவறு செய்துவிடுகிறோம். நம்மை நேசிக்கும் தேவன் அந்த பாவத்திலிருந்து, நம்மை விடுவிக்க விரும்புகிறார். அந்த பாவத்தை நாம் திரும்ப செய்யாமலிருக்க விரும்புகிறார். அந்த சமயங்களில் தமது தூதர்களை

அனுப்பி நம்மை எச்சரிக்கிறார். (எண்.22:21-34) (தூதர்களின் மூலமாய் செயலாற்றும் தேவன்) வசனங்களில் பிலேயாம் தீர்க்கதரிசி தேவனை கோபமூட்டதக்கதான ஒரு காரியத்தை செய்ய முற்பட்டதையும், கர்த்தருடைய தூதனானவர் அதை எவ்வாறு தடுத்து நிறுத்தினார் என்றும் பார்க்கிறோம், வசனம் 34இல் பிலேயாமின் கீழ்ப்படிதலைக் காணலாம். அன்பானவர்களே வேத வசனங்களுக்கு விரோதமாக, தேவனுக்கு கோபம் வரும்படியாக நாம் செயல்படும்போது, "எச்சரிக்கப்பட்டால் கவனம்" கீழ்ப்படியுங்கள், மனந்திரும்புங்கள், அசட்டையாக, கவலையீனமாய் இருக்க வேண்டாம். தேவ கோபம் நம்மேல் வரும். 2சாமு.24:17இன்படி தவறு செய்கிறவர்களை 'உபாதிக்கும் தூதன்' உண்டு எனப் பார்க்கிறோம். ஆகவே தேவ கற்பனைகளின்படி நடப்போம். வரங்களையும், வல்லமையையும் பெற்றுக் கொள்வோம்.

தேவ அழைப்பில் நம்மை நடத்தும் தூதன்

நாம் ஒவ்வொருவரும், ஒவ்வொரு விதமாக தேவனுக்கு பணிசெய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம். நமது அழைப்பை நாம் புரிந்து கொள்ளாமல், அறிந்து கொள்ளாமலிருக்கும்போது கர்த்தருடைய தூதனானவர் நம்மை தேவ அழைப்பில் நடத்துகிறார். யாத்.3:2இல் மோசேயின் அழைப்பைக் காணலாம். தூதன் மூலமாக தமது வார்த்தைகளை அனுப்புவதைக் காணலாம். அப்.12:8இல் கர்த்தருடைய தூதன் பேதுருவை ஊழியத்தில் பாதையில் அழைத்துச் செல்வதைக் காணலாம். நம்மை சரியான பாதையில் நடத்த தேவன் சித்தம் கொண்டுள்ளார். நமது பாதையைக் குறித்து நாம் கலங்க வேண்டிய அவசியமில்லை. தேவனுடைய கரத்தில் அர்ப்பணித்து ஜெபிப்பது அவசியம். பொறுமையாக அவருடைய நடத்துதலுக்காய் காத்திருப்பது அவசியம். நமது வாழ்க்கையின் எந்தக் காரியத்திலும் அவசரம் கூடாது. தேவனுடைய பதிலை அறியாமல், சுயத்தில் செயல்படக்கூடாது. அது வீண் மன உளைச்சலைத் தரும். கர்த்தர் என்ன சொல்லுகிறாரோ அதன் படி செய்வோம். சந்தோஷம் பெறுவோம்.

முடிவுரை :

நம்மிடையே கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள் பெருகிக் கொண்டிருக்கிறார்கள் 2கொரி.11:14ஆம் வசனம், சாத்தான் ஒளியின் தூதன் வேஷத்தைத் தரித்துக் கொள்வானே என்று பார்க்கிறோம். வெளி.12:9(பி)இன்படி சாத்தானும் அவனுடைய தூதர்களும் தள்ளப் படுவார்கள். நாம் ஜெபத்தில் தரித்திருந்து "தூதர்களின் பணிவிடைகளை" அனுபவிப்போம். தூதர்கள் மூலமாய் செயலாற்றும் தேவனை ஸ்தோத்தரிப்போம்.

திருமதி D. நிக்ஸி கென்னடி
மேல இலந்தைகுளம்

30.09.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 18ஆம் ஞாயிறு

(திரித்துவ 17)

பொருள் : முதியோரை அன்புடன் கவனித்தல்

பாடங்கள் : ஆதி.46:28-47; 1தீமோ.5:1-10; மாற்.7:6-16

வசனம் : *"பிள்ளைகளின் பிள்ளைகள் முதியோருக்குக் கிரீடம் பிள்ளைகளின் மேன்மை அவர்கள் பிதாக்களே" (நீதி.17:6).*

முன்னுரை :

"Old is Gold" என்பது பழமொழி. இப்பழமொழி மனிதனைத் தவிர அனைத்து ஜடப் பொருட்களுக்கு மாத்திரம் பொருந்துவது வேதனையான ஒரு காரியம். நரை பயிரை மாத்திரமல்ல, நரைத்த மனிதனையும் விரும்பாத உலகில் நாம் வாழ்ந்து வருகிறோம். பத்து மாதங்கள் தன்னை கருவில் காத்த தாயை, தன்னை வளர்த்து ஆளாக்கிய தந்தையை கடைசி காலத்தில் காப்பாற்ற பிள்ளைகள் மறுப்பது உறவுகளின் வீழ்ச்சி என கூறலாம். இக்கால சூழ்நிலையில் முதியோரை அன்புடன் கவனித்தலைப் பற்றி வேதம் நமக்கு கற்றுத் தருகிறது.

1. விசாரிக்கும் அன்பு : (1தீமோ.5:8) (Providing love)

"ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால் அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும் அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்".

ஒரு குடும்பத் தலைவனின் பணி தன் வீட்டாரை விசாரிக்க வேண்டும். தனது வீட்டார் எனும்போது தன்னை பெற்று ஆளாக்கிய தாய் தந்தையரே முதலிடத்தில் வருகின்றனர். திருமணமாகி தனிக் குடித்தனம் சென்றாலும் தொப்புள் கொடி உறவை அறுத்துவிட வேதம் சொல்லவில்லை. இங்கு விசாரித்தல் என்பது 'Provide' என்கிற பதத்தில் வருகிற தேவைகளை சந்தித்தல் என சொல்லலாம். ஆகவே தாய் தந்தையர் முதுமையடைந்து வலுவிழந்து நம் தயவை எதிர்பார்க்கும் தருணத்தில் அவர்கள் பசியாற்றி, பாதுகாப்பான வீட்டில் வைத்து, நோய் நொடியில் விழும்போது மருத்துவம் பார்த்து அவர்களை அன்புடன் காப்பாற்றுவது விசாரிக்கும் அன்பாகும். இந்த விசாரிக்கும் அன்பை செலுத்த தவறும் போது நாம் இயேசுவை மறுதலித்தவர்களாகவும் அவிசுவாசிகளிலும் கெட்டவர்களாக மாறுகிறோம்.

2. கனப்படுத்தும் அன்பு (யாத்.20:12)

"Honouring Love"

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.

பெற்றோரை முதிர் வயதில் விசாரிப்பது நம் தலையாய கடமை. அதே சமயத்தில் அவர்களுக்குரிய கனத்தையும் நாம் கொடுக்க வேண்டும். செல்லப் பிராணிகளை கூண்டில் போட்டு வளர்ப்பதைப் போல, வேளாவேளைக்கு உணவு கொடுப்பது போல் நம் பெற்றோருக்கு உணவு கொடுப்பதோடு நமது கடமை முடிந்தது என எண்ணக் கூடாது. அவர்களின் 'Self respect' பாதிக்காத வகையில் குடும்பத்தின் முக்கியமான விழாக்களில் அவர்களை முன்னிலைப்படுத்துதல், முக்கியமான முடிவுகளை எடுக்கும்போது கலந்து ஆலோசித்தல், மற்றும் புதிய பொருட்கள், சொத்துக்கள் வாங்கும்போது அவர்களிடம் ஆசீர் பெறுதல் ஆகியவற்றின் மூலம் அவர்களை கனப்படுத்த வேண்டும்.

தாய் தந்தையரை கெட்ட வார்த்தையினால் ஏசாமலும், பழித்து பேசாமலும், அடிக்காமலும் இருத்தல் கனப்படுத்துதலின் வழிகளாகும். நம் தாய் தகப்பனை கனவீனம் செய்வது சாபத்திற்கு வழி வகுக்கும். (Ex. ஏசா தனது மனைவிகள் மூலமாக தன் தாய்க்கு நேர்ந்த துன்பத்தை துடைக்காத காரணத்தால் (ஆதி.26:35) ஈசாக்கு ஆசீர்வாதம் கொடுக்க விரும்பியும் ஏசாவினால் அந்த ஆசீர்வாதத்தை பெற இயலவில்லை (ஆதி.29:32-39).

3. பாதுகாக்கும் அன்பு (ஆதி.47:12) :

(Protecting Love)

யோசேப்பு தன் தகப்பனையும் தன் சகோதரரையும் தன் தகப்பனுடைய குடும்பத்தார் அனைவரையும் அவரவர்கள் குடும்பத்திற்கு தக்கதாய் ஆகாரம் கொடுத்து ஆதரித்து வந்தான்.

தேவைகள் அதிகம் நிறைந்த இக்கால வாழ்க்கையில் ஒவ்வொரு தனி மனிதனும் தன் குடும்பத்தை பராமரிப்பதில் திணறுவதைப் பார்க்கிறோம். வேலை வேலை என ஓடும் மனிதனுக்கு தன்னை கவனிக்கவே நேரமில்லை.

நம் வீட்டுச் சூழல் நம் முதிய தாய் தகப்பனுக்கு பாதுகாப்பாக, திருப்தியளிக்காத பட்சத்தில் முதியோர் இல்லத்திலோ அல்லது அவர்களை அன்புடன் பராமரிக்கும் மற்ற சகோதர சகோதரிகள்

இல்லத்தில் வைத்து பராமரிப்பதோ சாலச் சிறந்தது. அதே நேரத்தில் பண உதவி, பொருள் உதவியை நாம் செய்ய வேண்டும். யோசேப்பு தன் தகப்பனாகிய யாக்கோபை கோசேன் நாட்டில் வைத்து பராமரித்தான் (ஆதி.47:12) இயேசு கிறிஸ்து தன் தாயாகிய மரியாளை யோவானிடம் ஒப்படைத்தார் (யோவா.19:26-27).

நடைமுறைச் சிந்தனைகள் :

வளர்ந்த நாடுகளில் முதியோரை அரசாங்கமே பொறுப்பெடுத்துக் கொள்கிறது. முதியோரும் அதை ஏற்றுக் கொள்கின்றனர். நமது இந்திய சூழலில் கூட்டுக்குடும்ப முறை சிதைந்து தனிக் குடும்பமாய் மாறி வரும் நேரத்தில் பெற்றோரும் தன் பிள்ளைகளின் பிரச்சனைகளை, இயலாமைகளை கருத்தில் கொள்ள வேண்டும். பழங்கால பெருமைகளைப் பேசி பிள்ளைகளை சிறுமைப்படுத்துதல், தரக்குறைவாக பேசி பொது இடங்களில் அவமானப்படுத்துதல், ஒரு மகனையோ, மகளையோ மாத்திரம் அதிகம் அன்பு செலுத்தி அவர்களை சார்ந்திருத்தல், சொத்துக்களை சமமாக பகிர்ந்தளிக்காமல் ஓர வஞ்சனை செய்தல் ஆகியவை பிள்ளைகள் மத்தியில் வெறுப்பை உண்டாக்கி பழி வாங்கும் உணர்ச்சியைத் தூண்டுகின்றன.

ஆகவே பெற்றோரும் தம் பிள்ளைகளின் சமூக பொருளாதார நிலையை புரிந்து கொண்டு அதற்கேற்றார் போல் அனுசரித்து வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

"முதியோர் இல்லங்கள்
நவீன மிருக காட்சிச் சாலைகள்
பால் குடித்த மிருகங்கள் சில சமயம்
பார்த்துச் செல்லும்",

என்னும் நிலைமாறி அவை அன்பு இல்லங்களாக விளங்குவதாக.

இயன்றவரை நம் பெற்றோரை நம் இல்லத்தில் வைத்து பராமரிப்போம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

அருள்திரு B.E. வில்சன்
சாந்தபுரம்

01.10.2007

மாதத்தின் முதல் நாள்

வசனம் : *"புதியவைகளையும் நானே அறிவிக்கிறேன்" ஏசா.42:9.*

முன்னுரை :

நவநாகரீகமான இவ்வுலகில் மக்கள் நாள்தோறும் நவமானதையே விரும்புகின்றார்கள். நடை, உடை, பாவனை, சொல், செயல் அனைத்திலும் புதுமையை விரும்புகின்றார்கள். பொதுவாக, காய்கள், கனிகள், பண்டங்கள் எவற்றை வாங்கினாலும் புதியவற்றையே விரும்பி வாங்குகிறார்கள். இதுமட்டுமல்ல புது ஆடை, புது வீடு, புது மணம், மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியவை புதியது பற்றித் திருமறையிலும் பேசப்படுகிறது. புதிய வானம், புதிய பூமி (ஏசா.65:17); புதிய நாமம் (வெளி.2:17); புதுப்பாட்டு (சங்.96:1); புது உடன்படிக்கை (லூக்.22:30); புதிய கட்டளை (யோவா.13:34); சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர் இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார் (வெளி.21:5).

1) புது சிருஷ்டி :

ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின (2கொரி.5:17).

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்கிறது நன்னூல்.

ஆலமரத்திலுள்ள பல்லிக்கு அதன்பட்டையின் நிறமும், பனையிலுள்ள பல்லிக்கு பனையின் நிறமும் இயற்கையாகவே வந்து விடுகிறது. அடுப்புக்கரி அக்கினிக்குளிருக்கையில் அக்கினிமயமாகி விடுகிறது. தரையிலே ஊர்ந்து திரிகிற ஒரு புழுவை பிள்ளைக் குழவி தன் மண் கூட்டிற்குள் சிலகாலம் அடைத்து வைக்கவே அது ஆகாயத்தில் பறந்து உயரத்தில் உலாவக் கூடிய ஒரு புதுச் சிருஷ்டியாகிறது.

இந்த மாதத்தில் பிரவேசிக்கிற நாமும் புதுச் சிருஷ்டியாயிருக்க வேண்டுமென்று நம் சிருஷ்டி கர்த்தர் வாஞ்சிக்கிறார். எத்தியோப்பியன் தன் தோலை மாற்ற முடியாது, சிவிங்கி தன் புள்ளியை அழிக்க இயலாது. அப்படியே தீமை செய்யப்பழகின நாமும் நம் பழைய குணத்தை நம் கிரியைகளினாலாவது, தீர்மானத்திலாவது, சுய புண்ணியத்தினாலாவது மாற்றவே முடியாது. இந்நாளில் இவ்வேளையில் மீட்பரின் அன்பின் சத்தம் தொனிக்கிறது. இதோ! நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்கிறார் (வெளி.21:5) அவரிடம் பிரவேசிக்க நம் இதயக்கதவைத் திறக்க வேண்டும். அவர் கரம் தொட பாவக் குஷ்டம் நீங்கும் அவர் ஆடையின் ஓரத்தைத் தொட 12 வருஷ இரத்தப் போக்கு நோய் நீங்கும். ஒருவன் கிறிஸ்துவுக்குள்

இருந்தால் புதுச் சிருஷ்டியாயிருப்பான். பழைய பாவங்கள் சூரியனைக் கண்ட பனிபோல பறந்துவிடும். ஒளியைக் கண்ட இருள்போல் ஓடிவிடும்; முன்னே குருடனாக இருந்தவன் இப்பொழுது திறக்கப்பட்டவன் ஆவான்.

2) புது இருதயம் :

உங்களுக்கு நலமான இருதயத்தைக் கொடுத்து உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்ட கல்லான இருதயத்தை உங்கள் மாமிசத்திலிருந்து எடுத்துப் போட்டு சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். (எசே.36:26).

நம் வீட்டை நாள்தோறும் சுத்தம் செய்கிறோம். சரீரத்தையும் பிரயாசப்பட்டுப் புதுப்பிக்கிறோம். ஆனால் நம் இருதயம் புதிதாகவில்லை. பிள்ளைகள் தேர்வில் வெற்றி பெற்றால் பெற்றோர் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆனால் பிள்ளைகள் இருதயம் புதுப்பிக்கப்பட, மனம் புதிதாக மாற கவலைப்படுவோரையும் கண்ணீர் விடுவோரையும் காண்பது அரிது. இந்தவேளையில் இறைவன் அருமையான வாக்குத்தத்தம் தருகிறார். கல்லான இருதயத்தை எடுத்துப் போட்டு சதையான இருதயத்தைத் தருவேன் என்கிறார். இது இலவசமான ஈவு. புதிய இருதயம் வேண்டுமென்று கெஞ்சுகிறவன் எவனும் பெற்றுக் கொள்கிறான். விண்ணப்பம் பண்ணாததினாலேயே பெறமுடியாது. இந்த வாக்கை உறுதியாகப் பற்றிக் கொண்டு புதிய இருதயத்தை தாரும் சுவாமி என்று கெஞ்சுவோமா.

3) புதிதான கட்டளை :

'நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்' நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன் (யோவா.13:31).

இந்த மாதத்தில் முதல் நாளில் கர்த்தராகிய இயேசு கொடுக்கிற இந்தப் புதிய கட்டளையை கைக்கொள்வோமாக! பதிலுக்குப் பதில் செய்ய வேண்டுமென்கிற பழைய கற்பனையை அல்ல. கிறிஸ்துவின் இந்தப் புதிய கட்டளையை ஏற்றுக் கொள்வோம். துன்பம் செய்தவர்களுக்கும் நன்மை செய்துவிட வேண்டும் என்பது வள்ளுவர் வாக்கு.

கிறிஸ்துவின் சிந்தையே நம் உள்ளத்தில் உருவாக வேண்டும், அப்படி உருவாகும்போது இறைவன் நமக்குப் புதுவாழ்வு தருவார். சகலத்தையும் புதிதாக்கி, புதிய காரியங்களை உங்களுக்குத் தருவேன் என்று வாக்குப் பண்ணியிருக்கிற அன்பின் ஆண்டவர் தாமே, இந்தப் புதிய மாதத்தில் உங்களைப் புதுப்படைப்பாக்கி உங்கள் இருதயத்தைப் புதிதாக்கிச் சந்தோஷமும் சமாதானமும் தந்து அவரது புதிய கட்டளையாகிய அன்பின் வழிநடக்க அருள்புரிவாராக ஆமென்.

அறிவர் ஆர்.ஆர். சுவாமிதாஸ், பாளையங்கோட்டை

07.10.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 19ஆம் ஞாயிறு

(போலியோ ஞாயிறு – திரித்துவ 18)

பொருள் : தெய்வீக அறிவில் வளருதல்

பாடங்கள் : நீதி.2:1-11; அப்.16:6-18; லூக்.1:1-4

வசனம் : *நீதிமொழிகள் 2:5*

முன்னுரை :

கடவுள் மனுக்குலத்தைப் படைத்ததின் நோக்கத்தை அறிந்து, அதற்கான முயற்சியில் வாழ்வதற்கான தேடலே தெய்வீக அறிவில் வளருதலாகும். ஞானம், அறிவு கடவுளிடமிருந்தே தோன்றுகிறது. கடவுளின் அறிவு முழுமையானது. நிறைவுள்ளது. அவருடைய அறிவிக்குப் புறம்பானது ஒன்றுமில்லை (நீதி.5:21; 15:3; 24:12) இன்று மனிதன் கல்வியிலே உயரலாம். வாழ்விலே மேம்பாடு அடையலாம். விஞ்ஞானத்தில் அரிய காரியங்களைச் சாதிக்கலாம். ஆனாலும் ஒருவருடைய வாழ்க்கைக்குத் தேவையான முழுமையான ஞானத்தையும், அறிவையும் கொடுக்கிறவர் ஆண்டவர் மட்டுமே (யாக்.1:17; கொலோ.2:3).

"ஆத்துமா அறிவில்லாமல் இருப்பது நல்லதல்ல" (நீதி.19:2) என்ற வார்த்தையின்படி எல்லா கல்வித்தகுதியும் இருந்தும் கடவுளைப்பற்றி அறிகிற அறிவு இல்லையென்றால் எல்லாம் பிரயோஜனமற்றது (மத்.16:26; நீதி.4:7).

தெய்வீக அறிவும் - உலக அறிவும் :

இந்த உலகில் இரண்டு விதமான அறிவை நாம் உணரலாம்.

1) உலக அறிவு (அ) உடலியல்பான அறிவு, 2) தெய்வீக அறிவு

உலக அறிவை கடவுளின் ஞானத்தோடு ஒப்பிடும்போது மிகவும் குறைவுள்ளதாயிருக்கிறது. உலக ஞானத்தைக் குறித்து பெருமை கொள்பவர்கள் கடவுள் முன் வெட்கப்படுவர் (1கொரி.1:19) அறிவீனராகவும் விளங்குவர் (1கொரி.3:9).

தெய்வீக அறிவே சிறந்தது என்பதை மனிதர் ஒப்புக்கொள்ளாமல் இருந்தாலும் இறுதியில் இதுவே வெற்றியுறும்.

எடுத்துக்காட்டாக,"உலகப் புகழ்ப்பெற்ற கிரேக்க தத்துவ மேதைகளான சாக்ரடீஸ், பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்றோர் 130 ஆண்டுகளாக அறிவுக் கோட்பாடுகளை உலகிற்கு எடுத்துக் கூறியும் அது உலகை அசைக்கவில்லை. ஆனால் 3½ ஆண்டுகள் மட்டுமே பணி செய்த நமது ஆண்டவராகிய இயேசுவின் ஞானம் இன்று உலகையே அசைத்துக் கொண்டிருக்கிறது". இது ஓர் இரகசியம். மறைபொருள் (1கொரி.2:7)

நம் அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் எட்டாதது (ரோ.11:33) இந்த அறிவிற்கு முன் உலக அறிவு பைத்தியமே (1கொரி.1:23).

தெய்வீக அறிவின் சாராம்சம் :

கடவுளின் திருநோக்கத்தில் ஞானமும், அறிவும் முக்கிய இடம் பெற்றுள்ளன. இவ்விரண்டையும் கடவுள் நமக்களிக்கிறார் (1கொரி.12:8). "இயேசு கிறிஸ்துவின் மூலமாய் கடவுள் நமக்கு அருளும் மீட்பை அறிவதே தெய்வீக அறிவாகும். இயேசுவை நம்பும் போது கடவுளை அறிகிற அறிவு உண்டாகிறது. இயேசுவை நம்புவதென்றால் அவருக்கு கீழ்ப்படிவதாகும்" (யோவா.8:43). எல்லா ஞானமும், அறிவையும் உடைய கடவுளாகிய இயேசுகிறிஸ்துவை அறிக்கையிடுவதும், சாட்சியாய் வாழ்வதுமே தெய்வீக அறிவில் வளருதலாகும் (கொலோ.2:2-3).

எங்கே சென்று கொண்டிருக்கிறோம்?

நம்முடைய அறிவு, வளர்ச்சி தெய்வீக அறிவைச் சார்ந்தது தானா? என்பதை கண்டறிய யாக்கோபு 3:11-18இல் தெளிவாக விளக்குகிறார்.

கசப்பான வைராக்கியம், விரோதம், பெருமை, பொய்சொல்லுதல், மாறுபாடு, கலகம், துர்செய்கைகள் போன்ற இவைகள் மனிதஇயல்பை, மண்ணுலகை, பேய்த்தன்மையை சார்ந்தது என்று கூறுகிறார். நமது தெய்வீக அறிவின் வளர்ச்சிக்கு இவைகள் பெரும் தடைகள் என்று சுட்டிக் காட்டுகிறார். இதோடு நமது அறிவின் வளர்ச்சியை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம் எந்தப் பாதையில் செல்லுகிறோம் என்பது தெளிவாக விளங்கும்.

தெய்வீக அறிவில் வளர்ந்து கொண்டிருக்கிறோமா?

ஒரு மனிதனோ, திருச்சபையோ, சமுதாயமோ, தெய்வீக அறிவில் வளர நான்கு நிலைகள் தேவையென்பதையும் புனிதர் யாக்கோபு சுட்டிக் காட்டுகிறார் (யாக்.3:17).

1) தூய்மை - இது தலையாய பண்பு, 2) அமைதி, பொறுமை, இணக்கம், 3) இரக்கம், நற்செயல், 4) நடுநிலை தவறாதிருத்தல், வெளிவேடமற்ற நிலை

"தெய்வீக அறிவில் வளர்ந்து கொண்டிருக்கிறோமா? - சிந்திப்போம்.

நிறைவாக :

தெய்வீக அறிவில் நாம் மேலும் வளர . . .

கர்த்தருக்குப் பயப்படுதல் (நீதி.1:7), கடவுளின் வார்த்தைக்கு கீழ்ப்படிதல் (மத்.7:21-29), குறைகளை கடவுளிடம் தெரிவித்தல் (யாக்.1:17).

இயேசுகிறிஸ்து என்ற அழியாத அறிவில் நிறைவாய் வளர்ந்து பிறரும் இந்த தெய்வீக அறிவை அறிந்து கொள்ளச் செய்வோம். "ஞானமே முக்கியம். ஞானத்தைச் சம்பாதி. என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக் கொள் (நீதி.4:7).

அருள்திரு K. டேனியல் ஸ்டீபன்ராஜ், பரப்பாடி

14.10.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 20ஆம் ஞாயிறு

(மருத்துவமனைகள் ஞாயிறு – திரித்துவ 19)

பொருள் : **குணமாக்கும் திருப்பணி**

பாடங்கள் : **2இராஜா.20:1-11; 1தீமோ.1:12-17; மத்.8:1-10**

வசனம் : *சங்கீதம் 107:20.*

முன்னுரை :

வேதத்தின் அடிப்படையில் "குணமாக்கும் திருப்பணி"யைக் குறித்து சிந்திக்கும் போது இருவகையான சுகமாக்குதலைப் பற்றி நாம் அறிந்து கொள்ள முடிகிறது. "ஆத்தும சுகம்" மற்றும் "சரீர சுகம்" ஆகிய இருவகையான சுகங்களே அவை. சங்.107:20இல் வாசிக்கிறபடி இவ்விருவகை சுகங்களும் ஆண்டவருடைய வார்த்தையின் மூலமாகவே கிடைக்கிறது என்பதை அறிந்து கொள்கிறோம்.

லூக்.9:2இல், இயேசு கிறிஸ்து தன்னுடைய சீஷர்களுக்கு கொடுத்த இரண்டு பிரதான கட்டளைகளைக் குறித்து வாசிக்கிறோம். தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிப்பதும், பிணியாளிகளைச் சுகமாக்குவதுமே அவ்விரு கட்டளைகள். சுவிசேஷ ஊழியமும், மருத்துவ (குணமாக்கும்) ஊழியமும் இணைந்தே செல்வதை பரிசுத்த வேதாகமத்தின் பல பகுதிகளில் நாம் காண்கிறோம்.

பழைய ஏற்பாட்டின் நாட்களில், ஏசாயா என்னும் தேவஊழியன் எசேக்கியா ராஜா வியாதிப்பட்டிருந்தபோது, அத்திப்பழத்து அடையைக் கொண்டு வந்து பற்றுப்போட, எசேக்கியா ராஜா சுகம் பெற்றார். புதிய ஏற்பாட்டிலே, லூக்கா என்னும் மருத்துவர் இயேசுவின் சீஷரோடு இணைந்து தேவ ஊழியம் செய்ததைக் காண்கிறோம். ஆகவே சுவிசேஷ ஊழியமும், குணமாக்கும் திருப்பணியும் இணைந்தே செல்வதை வேதம் முழுவதிலும் காண்கிறோம். நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் தான் சென்ற எவ்விடத்திலும் தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிப்பதையும், பிணியாளிகளைக் குணமாக்குவதையும் நாம் நற்செய்தி நூல்களில் வாசிக்கிறோம். நம்முடைய ஆத்துமாவிலும், சரீரத்திலும் பரிபூரண சுகத்தைப் பெற்றுக் கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை வேதத்தின் அடிப்படையில் காண்போம்.

1. ஜெபமும் குணமாகுதலும் :

நம்முடைய முழு இருதயத்தோடும் (நம்மை சுற்றி இருக்கும் சூழ்நிலைகளைப் பாராமல்) ஆண்டவரிடம் விண்ணப்பம் பண்ண வேண்டும்

(2இராஜா.20:1-11). எசேக்கியா ராஜா வியாதிப்படுக்கையில் இருந்தபோது, "நீர் பிழைக்கமாட்டீர்" என்று தீர்க்கதரிசியின் மூலமாக கர்த்தரே சொன்னபிறகும், அவர் ஆண்டவரைத் தேட தன் இருதயத்தை ஒருமைப்படுத்தி சுவர்புறமாகத் திரும்பி கண்ணீரோடே விண்ணப்பம் செய்தபோது, கர்த்தர் அவரது ஜெபத்தைக் கேட்டார். ஒருவேளை அவரது உறவினர்களும், நெருங்கிய நண்பர்களும் படுக்கையின் அருகிலிருந்து அழுது கொண்டிருந்திருக்கக் கூடும்; அவர்களது முகத்தைப் பார்த்தால் தனக்கு அவிசுவாசம் வந்துவிடக் கூடும் என்பதற்காக சுவர்புறமாகத் திரும்பி தன்னுடைய முழுஇருதயத்தோடு ஆண்டவரைத் தேடியபோது, சுகத்தைப் பெற்றுக் கொண்டார்.

2. பாவ அறிக்கையும் குணமாகுதலும் :

நம்முடைய அபாத்திரந நிலையையும், நாம் ஒரு பாவிதான் என்பதையும் ஒத்துக்கொண்டு, ஆண்டவரிடம் அறிக்கை செய்ய வேண்டும் (1தீமோ.1:12-17). பவுல், இயேசுகிறிஸ்துவின் பிரதான அப்போஸ்தலரில் ஒருவராயிருந்தாலும், தான் ஒரு பிரதான பாவி என்பதை ஒத்துக் கொண்டு அறிக்கை செய்வதையும், அதன்மூலம் அவர் தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக் கொண்டதையும் நாம் 1தீமோத்தேயு முதலாம் அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

3. விசுவாசமும் குணமாகுதலும் :

இயேசு கிறிஸ்துவால் நம்மை குணமாக்க முடியும் என்று நாம் விசுவாசிக்க வேண்டும் (மத்.8:1-10). மத்தேயு 8ஆம் அதிகாரத்தில் குஷ்டரோகி ஒருவன் விசுவாசத்தோடு இயேசுகிறிஸ்துவை வேண்டிய போது, சுகத்தைப் பெற்றுக் கொண்டதை வாசிக்கிறோம். அதே அதிகாரத்தில் இயேசுகிறிஸ்துவிடம் வந்த நூற்றுக்கு அதிபதியிடம் மேற்கண்ட மூன்று குணாதிசயங்களும் இருப்பதைக் காணமுடிகிறது. வியாதியாயிருந்த தன்னுடைய வேலைக்காரனுக்காக இயேசுவிடம் முழு இருதயத்தோடும் வேண்டுதல் செய்த அவர் தான் ஒரு அபாத்திரன் என்பதையும், இயேசுகிறிஸ்துவால் தன்னுடைய வேலைக்காரனை சுகப்படுத்த முடியும் என்பதையும் அறிக்கை செய்வதைக் காணமுடிகிறது.

திருச்சபையில், சுவிசேஷ ஊழியத்தையும், குணமாக்கும் திருப்பணியையும் இணைத்து செயல்படுத்தும்போது, திருச்சபை பலமடங்கு வளர்ந்து பெருகும் என்பதில் ஐயமில்லை. நமது திருச்சபை சரித்திரத்தில், மிஷனெரிமார்கள் அதைத்தானே செய்திருக்கிறார்கள்! நாமும் சபையாக சுவிசேஷ ஊழியத்தையும், குணமாக்கும் திருப்பணியையும் இணைந்து செயல்படுத்துவோம். சபை வளர்ந்து பெருகட்டும் தேவனுடைய பரிசுத்த நாமம் மகிமைப்படட்டும்.

Dr. டி. கிளாட்வின், பாளையங்கோட்டை

18.10.2007

புனிதர் லூக்கா திருநாள்

பாடங்கள் : *ஏசா.35:1-10; அப்.16:6-18; லூக்.1:1-4*

முன்னுரை :

புனிதர் லூக்காவின் திருநாளாகிய இன்று, நாம் நமது ஆத்துமாவிலும், சரீரத்திலும் குணப்படவும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருசிந்தைகள் நம் வாழ்வில் பரிணமிக்கவும் நம்மை நாமே மறு அர்ப்பணம் செய்வோமாக.

புனிதர் லூக்காவைப் பற்றி, இவர் வைத்தியர் என்றும், பரிசுத் பவுலுடன் உடன் ஊழியம் செய்தவர் என்றும் திருமறை நமக்கு விளக்குகிறது. இவர் சீரியாவிலுள்ள அந்தியோகியாவிலே பிறந்தவர்; ஆனால் இவர் எப்படி குணப்பட்டார் என்றும், கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் கடந்து வந்தார் என்றும், எந்த ஒரு குறிப்பும் திருமறையில் நமக்கு தரப்படவில்லை. புதிய ஏற்பாட்டில் மூன்றாவது நற்செய்தி நூலையும், திரித்துவர் பணிகள் என்ற புத்தகத்தையும் இவர் எழுதினார். இவ்விரு புத்தகங்களும் இரோமாபுரியில், முக்கியமான பணியில் இருந்த தியோபில் என்ற கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது என்பதை நாம் இவ்விரு புத்தகங்களின் முன்னுரையிலே நாம் அறிந்து கொள்கிறோம். இந்நாளிலும் ஆண்டவர் நம்மிடம் எதை எதிர்பார்க்கிறார் என்பதை புனிதர் லூக்காவின் நற்செய்தியில் இருந்து நாம் தியானிப்போம். ஆண்டவர் நம்முடன் பேசுவாராக.

1. ஒடுக்கப்பட்டோருடன் உறவு :

லூக்.5:29 இவ்வாறாக சொல்கிறது. நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து ஆயக்காரரோடும், பாவிகளோடும் லேவி என்ற ஆயக்காரனின் வீட்டிலே விருந்துண்டார். இதற்கு வேதபாரகரும் பரிசேயரும் மிகவும் கடுமையான எதிர்ப்பு தெரிவித்தனர். அன்பானவர்களே, யூத சமுதாயத்திலே ஆயக்காரர் பாவிகளாகவும் அசுத்தமானவர்களாகவும் கருதப்பட்டனர். யூத சமயத்தை சார்ந்தவர்களாயிருந்தாலும் மற்ற யூதர்கள் அவர்களோடு உறவு வைத்துக் கொள்வதில்லை. அவர்களை தீண்டத்தகாதவர் என்றும் 'தொட்டால் தீட்டு', 'பார்த்தால் பாவம்' என்ற சிந்தனையிலும் வேதபாரகர் பரிசேயர் மற்றும் யூத மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் ஆயக்காரரை ஒதுக்கி வெறுக்க காரணம்.

1) ஆயக்காரர் ரோம அரசின் பணியாளர்கள். ரோமர்கள் புறசாதியார் மற்றும் அசுத்தமானவர்கள் என்றும் யூதர்களால் சொல்லப்பட்டவர்கள் (Gentiles & uncleaned People).

2) அன்னிய அரசில் அவர்கள் பணி செய்ததால் தேசப்பற்று இல்லாதவர்கள். எனவே யூதர்கள் ஆயக்காரரை வெறுத்து சமுக சமய

வாழ்விலே அவர்களை ஒதுக்கி வைத்திருந்தனர். ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோ, இம்மக்களின் சிந்தனைகளை உடைத்து, சமுக சமய பாரம்பரியங்களை கடந்து புறக்கணிக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட நிலையிலே வாழ்ந்து கொண்டிருந்த ஆயக்காரரோடும் பாவிகளோடும் விருந்துண்பது அவர்களது வாழ்வில் ஒரு புது மறுமலர்ச்சியை உண்டாக்குகிறது. இந்த புதிய உறவு அவர்களது வாழ்விலே நாமும் இறைவனின் பிள்ளைகள் என்றும், கடவுள் நம்மீதும் அன்புள்ளவராய் இருக்கிறார் என்பதையும் புரிந்து கொள்ள உதவிற்று.

2. தரித்திரர் மேல் தயவு :

லூக்.16:19-31 வரையுள்ள திருவசனங்களில் நமதாண்டவர் தமது திருவாய் திறந்து கூறின ஐசுவரியவான் லாசரு உவமையை நாம் வாசிக்கிறோம். ஐசுவரியவான் வீட்டின் வாசலருகே தரித்திரனாகிய லாசரு பட்டினியாய் கிடக்கிறான். மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் இவையனைத்தும் ஐசுவரியவானுக்கோ தேவைக்கு அதிகமாக உள்ளது. ஆனால் தரித்திரனாகிய லாசருக்கோ ஐசுரியவானின் வீட்டு வாசலே அவனது கதி. கந்தையே அவனது ஆடை. பசியை போக்கவோ உணவு கிடைக்காத நிலை. ஆனால் பணக்காரனோ விதவிதமாய் உடுத்துகிறான். உண்டு மகிழ்கிறான். அவனது பார்வையிலே தரித்திரனாகிய லாசரு நாள்தோறும் தென்படுகிறான். அவனுக்கு இரக்கம் காட்ட, தயவு காட்ட ஐசுவரியவானுக்கோ மனமில்லை. வேதனையோடு தனது வாழ்நாளை கழிக்கிறான் லாசரு. ஐசுவரியவான் நினைத்திருந்தால் லாசருவின் வாழ்க்கை நிலையை மாற்றியிருக்க முடியும். அவல நிலையை துடைத்திருக்க முடியும். ஆனால் கல்நெஞ்சனாக வாழ்கிறான். ஏழைக்கு இரங்குவது ஈசனுக்கு கொடுப்பதற்கு சமம் என்பது அவனது மனதில்படவில்லை (நீதி.19:17). ஆனால் லாசருவின் வறுமையோ அவனை கலங்கப்பண்ணுகிறது (நீதி.10:15). இப்படியாக லாசரு வாழ்கிறான். இருவரும் மரணமடைகின்றனர். அதற்குப்பின் நித்திய நிலையான வாழ்விலே பணக்காரன் பாதாளத்திலே இருக்கிறான். தரித்திரனோ ஆபிரகாமின் மடியிலே இருக்கிறான். இம்மையே வாழ்வு என்று எண்ணி வாழ்ந்த ஐசுவரியவான், மறுமையை பற்றி நினைக்காதபடியினாலே பாதாளத்திலே வேதனைப்படுகிறான்.

அன்பானவர்களே நாம் ஐசுவரியவான்களாக இயேசு தரித்திரர் ஆனாரே. அவருடைய ஆசீர்வாதம் நம்மை ஐசுவரியவான்களாக மாற்றியிருக்கிறது. ஐசுவரியத்தை சம்பாதிப்பதற்கான பெலனை அருளுகிறவர் அவரல்லவா? ஆனால் நாம் எப்படி நமது பணத்தை செலவு செய்கிறோம். நமக்காக மட்டும்தானா? அல்லது பிறருக்காகவுமா? நமது நாட்டிலே 60% மேலான

மக்கள் வறுமை கோட்டிற்கு கீழே வாழ்கிறார்கள். ஆப்பிரிக்கா தேசத்திலே சத்துக் குறைவினாலே, உணவு கிடைக்காமல் பசியினால் 40 கோடி குழந்தைகள் ஆண்டுதோறும் இறக்கிறார்கள். ஆண்டவர் உன்னையும் என்னையும் உயர்த்தி யிருப்பதன் நோக்கம் என்ன. தரித்திரத்திலே இருக்கும் மக்களிடம் கடவுளின் தயவை காட்டுவதற்காக அல்லவோ! தன்னைப் போல் பிறனை நேசி என்ற நமதாண்டவரின் திருச்சட்டம் உன் தாதில் தொனிக்கவில்லையோ? மண்டியிட்டு மறு அர்ப்பணம் செய். மனம் கடினம் எனில், மறுப்பாய் எனில் பாதாளமே உனது பங்கு.

3. தாழ்மையின் உயர்வு :

லூக்.18:9-14 திருவசனங்களில் நமதாண்டவர் சொன்ன உவமையில் பரிசேயன் தன்னைக் குறித்தும் தனது சமய வாழ்வைக் குறித்தும் கடவுளின் சமுகத்தில் ஜெபிக்கிறான். அதோடு அவன் நின்று விடாமல் அவனைப் போலவே கடவுளிடம் வேண்டுதல் செய்ய வந்திருந்த ஆயக்காரனோடு தன்னை ஒப்பிட்டு, ஆயக்காரனை இழிவாகவும் அற்பமாகவும் அவனது செயல்களை விமர்சித்து, தன்னை உயர்த்துகிறான். கடவுளின் அற்பமாகவும் அவனது செயல்களை விமர்சித்து, தன்னை உயர்த்துகிறான். கடவுளின் சமுகத்திற்கு வருகின்றவன் தன்னை உணர வேண்டும், தனது பாவங்களை அறிக்கையிட வேண்டும். பிறரது தேவைகளுக்காகவும் தனக்காகவும் வேண்டுதல் செய்ய வேண்டும். இதைவிட்டுவிட்டு மற்றவரோடு ஒப்பிட்டு சொல்வது ஜெபமல்ல. ஆனால் ஆயக்காரனோ தன்னை மிகவும் தாழ்த்தி, தன் வாழ்வின் அவல பாவநிலையை உணர்ந்து உள்ளத்தின் ஆழத்திலிருந்து கடவுளின் இரக்கத்தை வேண்டுகிறான். கடவுளும் இரங்குகிறார். தன்னைத் தாழ்த்திய ஆயக்காரன் உயர்வடைகிறான். பாவியாய் வந்தவன் பாவம் நீங்கினவனாய் செல்கிறான். நீதிமான் என நினைத்து வந்தவன் பாவத்தை பெருக்கிக் கொண்டு செல்கிறான்.

அன்பானவர்களே, நமது வாழ்வில் பெருமை உண்டா? நம்மை நாமே மேன்மையானவர்களாக உயர்ந்தவர்களாக எண்ணுகிறோமா? கடவுள் சொல்கிறார் "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்குகோ கிருபையளிக்கிறார் (யாக்.4:6; 1பேது.5:5). தேவ கிருபையைப் பெற்றுக்கொள்ள நம்மை அர்ப்பணிப்போமாக ஆமென்.

டீக்கன் T. விக்டர் ஆரோக்கியராஜ் தனசிங்
திப் மீனாட்சிபுரம்

* * * * *

21.10.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 21ஆம் ஞாயிறு

(திரித்துவ 20)

பொருள் : **நீதியும் சமாதானமும்**

பாடங்கள் : எரே.23:5-8; பிலி.2:1-11; லூக்.10:21-24

வசனம் : *சங்கீதம் 85:10*

முன்னுரை :

இஸ்ரவேலர்களுக்கு எரேமியா தீர்க்கதரிசி நீதியுள்ளராஜாவாக சமாதான பிரபுவாக தாவீதின் வம்சத்தில் இருந்து இஸ்ரவேலர்களை இரட்சிப்பதற்கு ஒருவர் எழும்புவார். அவர் பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார். அவருக்கு இடும் நாம் நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே என்றும் கூறுகிறார். இஸ்ரவேலர் கடவுள் பெயரே நீதியென்றும், சமாதான பிரபு என்றும் சொல்லி மகிழ்ந்தனர். மனிதனிடத்திலே நீதி இருந்தால் அவனை நீதிமான் என்று திருமறை அழைக்கிறது. எனவே மனிதன் உலகிலே நீதியுள்ள வாழ்வு வாழ்ந்து நீதிமானாக விளங்க வேண்டும் என்று கடவுள் எதிர்பார்க்கிறார்.

நீதியுள்ள கடவுள் :

பழைய ஏற்பாட்டில் கடவுள் நீதிசெய்கிறவராகவும், நீதியை நிலைநாட்டுகிறவராகவும் காணப்படுகிறார். நீதியுள்ள தேவனாக அறியப்படுவதால் அநீதி நடக்கின்றபொழுது அதற்கு எதிர்த்து நிற்கிறார். மனிதன் நீதியுள்ளவனாக இந்த உலகில் வாழாவிட்டால் கடவுள் அவனை அழிக்க விரும்புவார். இதை வேதத்திலே சோதோம் கொமோரா மக்கள் வாழ்விலிருந்து அறிந்து கொள்ளுகிறோம். சோதோமை அழிப்பதற்கு தூதர்கள் புறப்பட்டு விட்டனர். அவர்களை ஆபிரகாம் சந்திக்கிறார். (ஆதி.18:20-33) தூதர்களிடத்திலே ஆபிரகாம் துன்மார்க்கரோடே நீதிமானையும் அழிப்பீரோ? என்று கேட்கிறார். ஐம்பது நீதிமான்கள் என்று ஆரம்பித்து 10 நீதிமான்கள் இருந்தால் அழிக்கமாட்டீரல்லவா என்று கேட்கிறார். தூதர்கள் பத்து நீதிமான்கள் நிமித்தம் அதை அழிப்பதில்லை என்று சொல்லி புறப்பட்டுச் சென்றனர். இந்த வரலாற்றில் கடவுள் நீதிமான்களைப் பாதுகாப்பார், அழிக்கமாட்டார் என்பதைச் சுட்டிக்காட்டவே சோதோமில் இருந்த லோத்துவின் குடும்பம் பாதுகாக்கப்பட்டது.

நியாயந்தீர்க்கிற கடவுள் :

கடவுள் நீதியுள்ளவராகவும் மட்டுமல்ல நியாயாதிபதியாகவும் வந்து நம்மை நியாயம் விசாரிக்கப் போகிறார். உலகிலுள்ள மனிதர்கள் துன்மார்க்கமாய் வாழ்ந்தால் அழிவு நிச்சயம் என்ற எச்சரிப்பையும் ஆண்டவர் இந்த வரலாறு மூலம் எச்சரிக்கிறார். எனவே கடவுள் பார்வையில் நீதிமான்களாக வாழ்ந்து ஆண்டவருடைய பாதுகாப்பை பெற்றுக் கொள்வது நமது கடமை ஆகும். இஸ்ரவேல் மக்களுக்கு தீர்க்கதரிசிகளின் எச்சரிப்பு நீதி நியாயத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதே ஆகும். ஆமோஸ் தீர்க்கதரிசி இஸ்ரவேல் மக்களைப் பார்த்து "நியாயம் தண்ணீரைப் போலவும் நீதி வற்றாத நதியைப் போலவும் புரண்டுவரக்கடவது" (ஆமோஸ் 5:24) என்கிறார்.

நீதி என்பதற்குப் பயன்படுத்தப்பட்ட எபிரெயச் சொற்கள் இரண்டு 1) யாசார், 2) சாதிச் சாதி என்ற சொல் ஆதியாகமம் 7:1இல் ஆரம்பித்து பழைய ஏற்பாடு முழுவதும் 300 முறை பயன்பட்டுள்ளது. ஆபிரகாம் தூதர்களிடம் சோதோம் கொமாராவில் 50 நீதிமான்கள் இருந்தால் அழிப்பீரோ (ஆதி.18:24) என்று கேட்டதற்கும் இச்சொல்லே நீதிமான்கள் என்பதற்குப் பயன்பட்டுள்ளது. யாசார் என்ற சொல்ல உபாகம நூலில் (23:10) ஒரு முறையும் யோபு நூலில் இரண்டு இடங்களிலும் (4:7; 23:7) சங்கீத புத்தகத்தில் 1 இடத்திலும் (சங்.107:42) நீதிமொழிகளில் 5 இடங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. கடவுள் நீதியுள்ள நியாயாதிபதியாக இந்த உலகிற்கு வரும்போது நாம் நீதிமான்களாக காணப்பட நம்மைத் திடபடுத்திக் கொண்டிருப்பது நமது கடமையாகும்.

ஏனென்றால் இயேசு கிறிஸ்து நீதிமான்களை அல்ல பாவிகளையே இரட்சிக்க வந்தேன் என்று பாவிகளுக்கே முதல் இடத்தை கொடுத்து அவர்களை இரட்சிப்பின் வழிக்கு நடத்தினார். நல்ல ஒரு உவமையை இயேசு கிறிஸ்து சொல்லி இருக்கிறார் (லூக்.18:9-14). இயேசு ஆலயத்திற்குச் சென்ற இரண்டு பேரைப் பற்றி சுட்டிக் காட்டுகிறார். ஒருவன் பரிசேயன் என்று முதலாவதாக சொல்லுகிறார் மற்றவன் ஆயக்காரன் தூரத்திலே நின்று "தன் மார்பிலே அடித்துக் கொண்டு தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான்". இவனே நீதிமானாக்கப்பட்டு தன் வீட்டுக்குப் போனான் என்கிறார். எனவே இயேசு பாவிகளை நீதிமான்களாக்கிப் பார்த்து மகிழவே விரும்புகிறார்.

சமாதானத்தைத் தரும் கடவுள் :

அடுத்தப்படியாக, நீதியோடு தொடர்புடைய சமாதானம் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். நீதி இருக்கின்ற இடத்திலே சமாதானம் இருக்கும் என்பதே உண்மை. இயேசு கிறிஸ்து தன்னுடைய சீடர்களுக்கு கடைசியாக கொடுத்த ஆசி "உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக" யோவா.20:21 என்பதாகும். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் பிறந்தபொழுதே உன்னதத்தில் இருந்த மகிமையும், சமாதானமும் இந்த பூமிக்கு வந்து விட்டது (மத்.2:14) என தூதர்கள் துதித்து விட்டார்கள். எனவே கடவுளின் சமாதானம் நமக்கு இயேசு மூலமாக கிடைத்து விட்டது. சமாதானம் என்பதற்கும் எபிரேயர்கள் இரண்டு சொற்களைப் பயன்படுத்தி இருக்கின்றனர்.

1) சலூவா :

இது வேதத்திலே ஒரே இடத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. தானி.8:25. இங்கே "நிர்விசாரத்தோடு இருக்கிற மக்கள்" என்று குறிக்கப்படுகின்றனர்.

2) சாலோம் :

இச்சொல்லுக்கு முழுமை, சமாதானம் என்று பொருள் கூறப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் 250 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏசாயா, எரேமியா தீர்க்கதரிசன நூல்களில் அதிகமாக (45 முறை) பயன்படுத்தப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டின் 30 புத்தகங்களில் இச்சொல் பயன்பட்டு இருப்பது சிறப்பான ஒன்றாகும். புதிய ஏற்பாட்டில் இதற்குப் பயன்படுத்தப்பட்ட கிரேக்கச் சொல் "எய்ரேனே" என்பதாகும். புதிய ஏற்பாடு முழுவதும் 100 முறை இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. லூக்கா நற்செய்தியாளன் மட்டும் அதிகமாக இச்சொல்லைப் பயன்படுத்தி இருக்கிறார். நாள்தோறும் சமாதான பிரபுவாகிய இயேசுவிடம் இந்த உலகம் தரக்கூடாத சமாதானத்தைப் பெற்றுச் செல்வோம். ஆண்டவர் நம்மை ஆசி செய்வாராக.

அருள்திரு AHL பில்லி
வடக்கு வாகைக்குளம்

28.10.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 22ஆம் ஞாயிறு
(திரித்துவ 21)

பொருள் : திருச்சபையில் ஆண்கள்

பாடங்கள் : தானி.1:1-21; 1தெச.5:11-28; மாற்.2:1-12

வசனம் : *1கொரிந்தியர் 16:13*

முன்னுரை :

1986ஆம் ஆண்டு பாரீஸ் நகரத்தில் ஒரு வேடிக்கையான ஆனால் வேதனையானப் போராட்டம் ஒன்று நடைபெற்றது. அந்தப் போராட்டத்தின் கருப்பொருள் "ஆண் ஆதீக்கத்தை வீழ்த்திடுவோம்" என்பதுதான். அதாவது ஆண்களுக்கு பெண்களாகிய நாங்கள் சரிசமம் மட்டுமல்ல, ஆண்களை விடவும் எல்லா வகையிலும் நாங்கள் உயர்ந்தவர்கள் என்று ஆயிரக் கணக்கானப் பெண்கள் கூடி இந்தப் போராட்டத்தை நடத்தினர். அதன் நிறைவாகக் கூடிய பொதுமேடைப் பேச்சில் "ஆண்கள் தங்கள் நிலையை, மகிமையை இழந்துவிட்டனர்" என்றும் குறிப்பிடப்பட்டது. ஆனால் இது ஒரு மாயத்தோற்றமே எனினும், இந்தக் கோட்பாட்டில் உண்மையில்லாமலில்லை எனலாம். ஏனெனில் ஆன்மீக வாழ்விலும், உலக வாழ்விலும் சற்று தளர்ச்சியடைந்திருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

இதனை முன்னரே உணர்ந்துதான் தூய பவுல் அடிகளார் "புருஷராயிருங்கள்" என்று அறிவுரை அல்ல எச்சரிக்கை எழுப்பியுள்ளார்.

1. விழித்திருங்கள் (Be Watch ful)

பொதுவாக விழித்திருப்பது என்பது இரவில் உறங்காமல் விழித்திருத்தல் (Give up a night sleep) என்பதே சாதாரணப் பொருளாகும். ஆனால் திருமறையில் விழித்திருங்கள் என்ற பதம் காவல் காப்பது, எதிர்காலத்திற்காக காத்திருப்பது, இரவில் விழித்திருப்பது என்று மூன்று நிலைகளில் விளக்கப்பட்டுள்ளது. திருமறையில் 70க்கும் மேற்பட்டு இந்த "விழித்திருங்கள்" பதம் வருகின்றது. ஆனால் திருமறை "உலக விழிப்பாக" இதைக் கொள்ளாமல் "உள்ள விழிப்பாக" இதனைக் கொள்ள நம்மை ஏவுகின்றது. எதற்காக விழித்திருக்க வேண்டுமெனில் :

1) பாவத்திற்கும் சோதனைக்கும் எதிராக
(Against Sin and Temptation) மத்.26:41; 1கொரி.10:12

2) ஆண்டவரின் வருகைக்காக
(Coming of the Lord) மத்.25:13; மத்.24:12; மாற்.13:33

2. இரண்டாவது கோட்பாடாக : விசுவாசத்திலே நிலைத்திருங்கள்

விசுவாசம் கிறிஸ்தவ வாழ்வின் சுவாசம். ஒவ்வொரு ஆண் மகனும் விழித்திருந்தால் மட்டும் போதாது, விசுவாசத்திலே நிலைத்திருக்கும் காரியங்களில் ஈடுபடல் வேண்டும். விசுவாசத்திலே நிலைப்பது எதற்காக? சாத்தானை எதிர்த்து நிற்க. எப்பொழுது பாவ வாழ்விற்கு எதிர்த்து நிற்கும் ஆற்றல் குறைகின்றதோ அப்போது நாம் தாழ்ந்தும், வீழ்ந்தும், மாய்ந்தும் போகின்றோம். இந்த விசுவாசத்திலே நிலைத்திருக்கும்போது கீழ்க்கண்ட ஆற்றலை நாம் பெற முடிகின்றது.

1. இடம் கொடாத எதிர்ப்பு : யோபு 11:14; 1பேதுரு.5:9
   பாவத்திற்கு இடம் கொடாத எதிர்ப்பு - யோசேப்பை போன்று
2. இடைவிடாத எதிர்ப்பு : கலா.6:9; யோவா.15:9; எபி.12:1

திருச்சபையின் ஒவ்வொரு ஆண் மகனும் விழித்திருந்து, விசுவாசத்திலே நிலைத்திருந்தால் தான் புருஷராயிருக்க முடியும்.

3. புருஷராயிருங்கள் (Manliness)

திருச்சபை ஈடுபாடுகளில் ஆண்களின் பங்கேற்பு குறைந்து வருவது கண்கூடு. ஆனால் ஆண்டவர், தன்னால் படைப்பின் மகுடமாகப் படைக்கப்பட்ட ஆண்மகனை, தலைமைத்துவம் கொண்டவனை "நீ புருஷனாயிரு" என்று அறைகூவல் விடுக்கின்றார். "நீ புருஷனாயிரு" என்று இங்கு கூறப்படும் வார்த்தை "பெண்களை அடிமைப்படுத்து" என்பது அல்ல! நீ பாவத்திற்கு அடிமையாகாதே என்பது தான் பொருள். ஆதாம் புருஷனாயிருந்தான். ஏவாளின் பாவச் செயலுக்கு உடன்பட்டதால் "ஆதாம் என்கின்ற புருஷத் தன்மையை இழந்தான். சிம்சோன் ஒரு விபச்சாரியிடம் தெய்வ ரகசியத்தை சொன்னதினிமித்தம் மகா பலசாலிப் புருஷனான அவன் தன் மகிமையான பலத்தை இழந்தான். எனவேதான் ஆண்டவர் கூறுகின்றார் "என் மகனே புருஷனாயிரு" மகிமையை இழக்காமல், என்னோடுள்ள உறவினை இழக்காமல், திருமறை, உபவாசம், திருப்பணி, ஆகியவற்றில் பின்னடைவு கொள்ளாமல் இடைக்கட்டப்பட்ட புருஷர்களாயிருங்கள். நீங்கள் இடைக்கட்டினால், இமயம் முதல் குமரி வரை மட்டுமல்ல, இந்த பூகோள உருண்டையையே சிலுவையின் அடியில், இயேசுவின் மடியில் படைக்கும் நேரம் வந்து விடுமல்லவா. எனவே, புருஷரைப் போல அரைக்கட்டிக்கொள்ளுங்கள் (யோபு 40:7). புருஷனைப்போல இடைக்கட்டிக் கொள்ளுங்கள் (யோபு 38:3). விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன் கொள்ளுங்கள்.

ஆண்டவர்தாமே இந்த மகா வல்லமையை உங்கள் ஒவ்வொருவருக்கும் அருள்வாராக.

அறிவர் சாம் டி. ஜெபராஜ், ஆண்கள் ஐக்கிய சங்கம்

28.10.2007

புனிதர்கள் சீமோன், யூதா திருநாள்

பாடங்கள் : எரே.3:14-19; யூதா 1-8; யோவா.15:17-27

வசனம் : *"கடவுளின் அன்பில் உங்களைக் காத்துக் கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெற எதிர்நோக்கியிருங்கள்" யூதா 21.*

முன்னுரை :

புனிதர்கள் சீமோன், யூதா ஆகிய இருவரும் இயேசுவின் சகோதரர்களாவர். இயேசுவின் போதனையில் ஈர்க்கப்பட்டு அவரது சீடர்களாயினர். இவ்விருவரில் யூதா மாத்திரம் நிருபம் எழுதியுள்ளார். இந்நிருபம் அரமேய மொழி இலக்கணத்தைப் பிரதிபலிப்பதாக உள்ளது. கி.பி.70-80களில் எழுதப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது. கடவுளின் இரட்சிப்பு என்பதே இந்நிருபத்தின் மையக் கருத்தாகும்.

1. கடவுளின் அன்பு (Love of God)

கடவுளின் அன்பில் உங்களைக் காத்துக் கொள்ளுங்கள் என்று கூறுகிறார். யோவா.15:18இல் உள்ளபடி இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு மனுவுருவாக வந்தார். அவரது இனத்தவரோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. உலகம் உங்களைப் பகைக்கும் முன்னே என்னை பகைத்து விட்டது என்று வரப்போகும் ஆபத்தை முன்னறிவிக்கிறதை நாம் காண்கிறோம். கிறிஸ்துவின் அன்பு அற்றுப் போவதற்குக் காரணம் யூதா 4இல் சிலர் கள்ள வழியாய் நுழைந்து விட்டார்களே. தேவபக்தியற்றவர்களாய், வேதத்தைப் புரட்டி சுய நலத்திற்காக செயல்படுகிறார்கள். யோவா.15:13இல் ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் பெரிதான அன்பு யாரிடத்திலுமில்லை என்கிற கிறிஸ்துவின் அன்பின் வார்த்தை யோவா.3:16இல் நிறைவேறுகிறதை நாம் காண்கிறோம்.

2. கடவுளின் தெரிந்தெடுப்பு (Choosen from God)

இயேசுவால் நாம் நேசிக்கப்பட வேண்டும். அவரது அன்பு நம்மை பாவத்திலிருந்து பாதுகாக்க உதவுகிறது. யோவா.15:16இல் நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை. நான் உங்களைத்

தெரிந்து கொண்டேன். யூதா.5இல் கர்த்தர் தமது மக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வந்து இரட்சித்தார் என்று கூறப்பட்டுள்ளது. இஸ்ரவேலே நீ என் ஜனம் என்று மக்களை அரவணைத்து பாதுகாக்கவே தெரிந்தெடுத்திருக்கிறார். காரணம், நீ கொஞ்ச ஜனம், என்று வேற்றினத்தவரால் சிறுமைப்படுத்தப் பட்டிருக்கிறார். எனவே நான் உன்னைத் தெரிந்தெடுத்திருக்கிறேன் என்கிறார்.

3. கடவுளின் இரட்சிப்பு (Righteousness of God)

யூதா 21இல் கடவுளின் இரட்சிப்பைப்பெற எதிர்நோக்கியிருங்கள் என்கிறார். இக்கடைசி காலத்தில் கடவுளின் இரட்சிப்பை வியாபாரமாக்கித் தங்களைத் தாங்களே போஷித்துக் கொள்கிறார்கள். வச.12இல் கடைசிக் காலம் எவ்வாறு இருக்குமென்று கூறப்படுகின்றது. வச.19இல் பிரிவினைக்காரர்கள், ஜென்ம சுபாவமுள்ளவர்கள், ஆவியில்லாதவர்கள். தோன்றி கடவுளின் இலவச இரட்சிப்பை தேவ பக்தியற்றதாக்கி விடுவார்கள். எரே.3:13இன்படி தெய்வ பயமின்றி கடவுளின் செழிப்பான நிலைகளின் மத்தியில் தீட்டான காரியங்களைச் செய்வார்கள். எனவே, நிர்விசாரமான வாழ்க்கை வாழாமல் கடவுளின் அன்பினால் தெரிந்தெடுக்கப்பட்ட நாம் கடவுளின் இரட்சிப்பை சொந்தமாக்கிக் கொள்ள நம்மை முதலாவது அர்ப்பணிப்போம். போலியான வாழ்க்கையாக வெளிப்பிரகாரமாக வாழாமல் புனிதர்கள் சீமோனும், யூதாவும் தங்களையே அர்ப்பணித்ததைப் போல நாமும் சாட்சிகளாய் தனிப்பட்ட வாழ்விலும், திருச்சபையாகவும் வாழ்ந்து காட்டுவோம்.

அருள்திரு G. திரவியம் ஜெசுதாசன்
சிவகிரி

01.11.2007

மாதத்தின் முதல் நாள்

பாடங்கள் : *எரே.17:1-8*

வசனம் : *"கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து கர்த்தரைத் தன் நம்பிக்கை யாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (எரே.17:7).*
"Blessed are those who trust in the Lord whose trust is the Lord"

முன்னுரை :

இந்த மாதம் ஆண்டவர் நமக்கு தந்து இருக்கின்ற இவ்வசனம் பாக்கிய வசனமாக அமைந்துள்ளது. நமது திருமறையின் மத்திப வசனம் எதுவென்றால் சங்.118:8இன்படி "கர்த்தர்பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்" (It is better to take refuge in the Lord"). வேதத்தின் மையகரு, கடவுளை நம்புகிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். (Those who are believed the Lord thy will blessed) கடவுளை நம்பாததினால்தான் அநேக வேளையில் பரலோக ஆசீர்வாதத்தை இழந்து விடுகின்றோம். இயேசு மத்.17:20இல் இவ்விதமாக சொன்னார் "கடுகளவு விசுவாசம் இருந்தால் . . .", நாம் என்ன நினைக்கிறோமோ அதை ஆண்டவர் தந்தருளுவார். நமது திருமறையில் அநேக தேவ தாசர்கள் கடவுள் மேல் வைத்த நம்பிக்கையினால் மேலானவை களை சாதித்தார்கள். இஸ்ரவேல் மக்கள் வரலாற்றிலும் அநேக வேதனையான வரலாற்று திருப்பங்கள், சம்பவங்கள் நடப்பதற்கு காரணம் இறைமக்களாகிய இஸ்ரவேலர் கடவுளை நம்பாதது தான். (உ.ம்) பிளவுப்பட்ட அரசாட்சி உருவாகுவதற்கும், யூதா, இஸ்ரவேல், எருசலேம் ஆலயம் அழிவதற்கு காரணம் கடவுளை நம்பாததுதான். கடவுள் தனி மனித வாழ்க்கையில் மட்டுமின்றி, வரலாற்றிலும் செயல்படுகின்றவராக இருக்கின்றார்.

இந்த மாதத்திலும் மீண்டும் நம் நம்பிக்கையை கூர்மையாக்கிக் கொள்ள ஆண்டவர் விரும்புகின்றார். அதோடு மாத்திரம் அல்ல. கடவுளை நம்புகிறவர்கள் இன்னவிதமான ஆசீர்வாதமான வாழ்க்கை அனுபவத்தை பெறுவார்கள் என்பதை இதே அதிகாரம் வச.8இல் உள்ளபடி சிந்தித்து அதன் ஆசீர்வாதங்களை பெறுவோம்.

1. தண்ணீரண்டையில் நடப்பட்ட மரம் :
(Like a tree planted by water)

கோடைகாலத்தில் நம் வீட்டிலுள்ள மரங்கள் அனைத்தும் மொட்டையாக அழகற்று பரிதாபமாக காணப்படும். ஆனால் மழை பெய்தவுடன் அதே மரம் எவ்வளவு அழகாக துளிர்விட்டு காணப்படுகிறது. இதே போல்தான் எரேமியா தீர்க்கதரிசி சொல்கிறார். கர்த்தரை நம்புகிறவர்கள் தண்ணீரண்டையில் நடப்பட்ட மரம் போல் இருப்பார்கள். எப்போதும் புதுபொழிவுடன்,

துளிர்விட்டு, காண்பார்கள். கண்களுக்கு குளிர்ச்சியாக அழகாக காணப்படுவார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் அழகுரியவர்கள். கர்த்தரை நம்புகிற குடும்பம் அலங்கரிக்கப்பட குடும்பமாக இருக்கும். நம் குடும்பத்தின் கீழ் இளைப்பாற போக்குவரத்துமாய் இருப்பர். இந்த ஆசீர்வாதத்தை ஆண்டவர் இந்த மாதம் நமக்குத் தந்தருளுவார்.

2. **உஷ்ணத்தை கண்டு பயப்படாது :**
(It shall not Fear when heat comes)

"உஷ்ணம்" என்பது எப்படி புரிந்து கொள்ளலாம் என்றால் "சத்துரு தருகின்ற வேதனை". வாழ்க்கையில் வருகின்ற ஏற்ற தாழ்வுகள், இழப்புகள், வேதனைகள், பிரச்சனைகள் வராது என்பதல்ல மாறாக வரும். ஆனால் அதைக்குறித்து கர்த்தரை நம்புகிற பிள்ளைகள் பயப்பட போவதில்லை. "Campus Crusade for Christ" ஊழியத்தின் Founder, அவர்களுக்கு தீராத வியாதி, அந்த வியாதிக்கு உலகில் மருந்தே கிடையாது. ஆனால் அந்த மனிதர் தன் புத்தகத்தில் இதைக்குறித்து எழுதும் போது" இது எனக்கு பெரிதல்ல இங்கே இருந்து என் ஆண்டவரோடு பறக்க போகிறேன்" என்று தான் கூறினார். இதற்கு நாம் என்றால் அழுது ஊரையே அழைத்து புலம்பியிருப்போம். ஆண்டவரே ஏன் எனக்கு இந்த வியாதி காரணம் என்னவென்றால் நாம் கடவுளை அல்ல உலகத்தையே அதிக நம்புகின்றோம். ஆனால் இவரோ கடவுளையே தன் நம்பிக்கையாக கொண்டிருந்தார். இது நமக்கு ஒரு சவால். இந்த மாதம் நம் வாழ்க்கையில் எந்தவிதமான "உஷ்ணம்" நம்மை தாக்கினாலும் ஆண்டவரையே நம்புவோம் அவர் நம்மை பெலப்படுத்துவார்.

3. **தப்பாமல் கனி கொடுக்கும் :**
(It doesnot cease to bear fruit)

ஒரு மரம் அதினதின் காலத்தில் கனி கொடுக்கவில்லை என்றால் அது நமக்கு பிரயோஜனமற்ற மரமாகி விடும். இதைதான் "Season Fruit" என்று அழைப்போம். அந்தந்த Seasonக்கு அதினதின் கனியை கொடுக்க வேண்டும். இது நமது எதிர்பார்ப்பு. சமுசாரிகள் இப்படி சொல்வார்கள். சரியாக மழையில்லை ஆகவே இந்த வருடம் மகசூல் குறைவு என்பார்கள். ஆனால் கர்த்தரையே தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷனுக்கு இது தலைகீழ். அவனுக்கு மழை பெய்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி, தேவன் அவர்களுக்குரிய ஆசீர்வாதத்தை ஏற்ற காலத்தில் குறிப்பாக தந்தருளுவார்.

எரேமியா 17:7,8இன்படி இந்த வருடத்தில் குறிப்பாக இந்த மாதத்தில் ஆண்டவர் நமக்கு மேற்குறிப்பிட்ட ஆசியை தந்து நம்மை பெலப்படுத்தி வழிநடத்துவாராக ஆமென்.

திரு. P.S.D. நவமணி
கோமதிமுத்துபுரம்

01.11.2007

சகல பரிசுத்தவான்களின் திருநாள்

பாடங்கள் :: எரே.31:3-34; வெளி.7:9-17; மத்.5:1-12

வசனம் : *"அவர்கள் மகா சத்தமிட்டு : இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள் (வெளி.7:10).*

முன்னுரை :

பரலோகத்தில் ஓர் காட்சி, பரிசுத்தவான்களின் திரள்சேனை, வெண்வஸ்திரம் தரித்து, கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, இரட்சிப்பின் தேவனுக்கு மகிமையைச் செலுத்தினார்கள். சிங்காசனத்தில் மேல் வீற்றிருக்கிற தேவனுக்கும், ஆட்டுக்குட்டி யானவருக்கும் மகிமை உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள். தேவதூதர்களின் திரள் சேனையும் சிங்காசனத்திற்கு முன்பாக முகங்குப்புற விழுந்து தேவனை பின்வருமாறு பாடித் தொழுதார்கள்.

"ஆமென் எங்கள் தேவனுக்கு துதிமகிமை ஞானமுடன்
தேமதுரத் தோத்திரமும் கனம் மகிமை பெலனோடு
நாமிருக்கும் காலமெல்லாம் நித்தியமும் உண்டாக
ஆமென் எனத் துதியெடுப்போம் அண்டர் குழாமொடு
சேர்ந்து"

1. பரிசுத்தவான்கள் யார்?

உலகத்தை விட்டுக் கடந்து சென்ற அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், இரத்தசாட்சிகள் ஆகிய இவர்களே பரிசுத்தவான்கள் ஆவர். 1கொரி.6:11இல் "உங்களில் சிலர் இப்படிப்பட்டவர் களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தி னாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்" என்று வாசிக்கிறோம். பரி.பவுல் தனது நிருபங்களில் விசுவாசிகள், பரிசுத்தவான்கள், நீதிமான்கள் என்று அடிக்கடி எழுதுகிறார். சுருங்கக்கூறின், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டவர்களே பரிசுத்தவான்கள் என்பது பொருள்.

சக.3:4 பின்வருமாறு கூறுகிறது; அவர் தமக்கு முன்பாக நிற்கிறவர்களை நோக்கி; இவன் மேல் இருக்கிற அழுக்கு வஸ்திரங்களை களைந்து போடுங்கள் என்றார்; பின்பு அவனை

நோக்கி; பார் நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச் செய்து உனக்குச் சிறந்த வஸ்திரங்களை தரிப்பித்தேன் என்றார். அக்கிரமங்கள் நீங்கப் பெற்றவனே பாக்கியவான் ஆவான்.

நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும் அப்பொழுது நான் சுத்தமாவேன். என்னைக் கழுவியருளும்; அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன். (சங்.51:7) என தாவீது கூறுகிறார். உங்கள் பாவங்கல் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும். அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும் (ஏசா.1:18).

பரிசுத்த வாழ்க்கை ஆற்றுவதற்கு உண்மையில் தேவகிருபை தேவை. நம் மாம்ச பெலத்தால் சாத்தானின் சூழ்ச்சிகளை மேற்கொள்ள முடியாது. ஆனால் அவற்றில் நாம் வெற்றி பெற தேவன் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார். 2கொரி.7:1 சூரிய வெளிச்சத்தின் கதிர் நம் அறைக்குள் தோன்றும்பொழுது ஆயிரமாயிரமான தூசி, துகள்கள் காற்றில் மிதப்பதைக் காணலாம். அவ்விதமாகவே பாவமாகிய மாசுகள் நம்மை அறியாமலேயே நம் இருதயத்தில் படிந்து விடுகின்றன. கிறிஸ்துவின் இரத்தம் தான் வெளியேற்ற வேண்டும்.

2. எங்கேயிருந்து வந்தவர்கள்?

இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள். வெளி7:14(மு) உபத்திரவங்கள் இல்லாமல் பரிசுத்த வாழ்வில் முன்னேறவே முடியாது. வில்லியம் பூத் என்ற இரட்சண்ய சபை ஸ்தாபகர் ஒரு முறை இயேசுவின் உருக்கமான அன்பைப் பற்றி பிரசங்கித்துக் கொண்டிருந்தார். தன் இளம் வயதில் மனைவியை இழந்த ஒருவர் குறுக்கிட்டு நிறுத்தும் என்னைப் போன்று உபத்திரவத்தை அனுபவிக்கிறவர்களுக்குத் தான் தெரியும் என்று கோபம் அடைந்தாராம். சில வாரங்கள் கழித்து வில்லியம் பூத்தின் மனைவி கார் விபத்தில் அகப்பட்டடு, மரித்துப் போனார்கள். அடக்க ஆராதனைக்கு அந்த மனிதரும் சென்றிருந்து பூத் அவர்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டார்.

இவர்கள் அதாவது பரிசுத்தவான்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தில் தோய்த்து வெளுத்தவர்கள் (வெளி.7:14பி) எபிரேயர்களுடைய எண்ணத்தின்படி இரத்தமே உயிர் என்பது ஆனால் புதிய ஏற்பாட்டின் கருத்துப்படி, இரத்தம் என்பது ஜீவனையும் மரணத்தையும் உள்ளக்குகிறது. (Life and Death Jesus Christ)

தோய்க்க தோய்க்க வெளுமை ஏற்படுகிறது. ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் வெண்வஸ்திரம் தரிக்கிறார்கள். கிறிஸ்துவுக்குள் புது வாழ்வை பெற்றுக் கொண்டதை எடுத்துரைக்கிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது.

3. மரித்தோர் எங்கே சென்றுள்ளனர்?

"இன்றைக்கு நீ என்னுடனேக் கூடப் பரதீசிலிருப்பாய் என்பதே மனந்திரும்பிய கள்ளனுக்கு தேவன் அருளிய அருள்வாக்கு. பரதீசுக்குச் சென்றுள்ளவர்கள் மரித்துப்போன பரிசுத்தவான்கள். மரித்துப்போன பாவிகள் ஆதீசுக்கு (பாதாளத்துக்கு) சென்றுள்ளார்கள். ஒரு காலத்தில் பரதீசும், ஆதீசும் பூமியின் தாழ்வான இடங்களில் இருந்ததாம். ஏறினார் என்பதனாலே அவர் அதற்கு முன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறதல்லவா? எபே.4:9 அவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு பாதாளத்தில் இறங்கினார் என்று விசுவாச அறிக்கையை சமர்ப்பிக்கிறோம். இயேசுகிறிஸ்து உயிர்தெழுந்த பின் பரதீஸ் உன்னதத்திற்குச் சென்றதாகவும் வேத பண்டிதர்கள் பின்கண்ட வேத வசனத்தின்படி நம்புகிறார்கள். ஆதலால் அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார். இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார் (எபே.4:8,10).

இயேசுவுக்காக இரு கண்டங்களை அதிர வைத்த D.L. மூடி அவர்கள் தனது மரண வேளையில் "பூமி விலகிச் செல்லுகிறது; மோட்சம் திறந்துள்ளது இயேசு என்னை அழைக்கிறார்" என்றார். அதே போன்று ஜாண்நாக்ஸ் அவர்கள் அதாவது ஸ்காட்லாந்து சீர்திருத்தவாதியான அவர்கள் "இயேசுவே வாரும்; நான் இருக்கப்போகும் மோட்சத்தின் மகிழ்ச்சியை இப்பொழுதே ருசித்தேன்; அது இப்பொழுதே வந்துவிட்டது" என்றார்களாம்.

தொகுப்பு :

அருள்திரு P.V. வீரசிங்
புதுக்கேட்டை

* * * * *

02.11.2007

சகல ஆத்துமாக்களின் திருநாள்

பாடங்கள் : யோவா.11:21-27; 2கொரி.5:1-10

வசனம் : *"நீங்கள் மன உறுதியோடு இருந்து உங்கள் வாழ்வைக் (ஆத்துமாவை) காத்துக் கொள்ளுங்கள்"* (லூக்.21:19).

முன்னுரை :

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே எல்லாரையும் இரட்சிக்க வந்த இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். வேதத்தில் ஆத்துமா என்றால் உயிர் என்றும், ஒரு நபர் என்றும் மற்றும் அறிவு, உணர்வு, குணம் சார்ந்தது என்றும் கூறப்படுகிறது.

எசேக்கியல் 18:4இன்படி பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும் என்று ஆண்டவர் கூறுகின்றார். சங்.121இல் ஆத்துமாவை காக்கிறவர் ஆண்டவர் என்று பார்க்கலாம்.

மரித்தவர்களுக்காக கலங்க வேண்டாம் (Don't dismay for the Dead)

பிரியமானவர்களே மரித்துப் போன உங்கள் தாய் தகப்பன், கணவன் மனைவி, பிள்ளைகளுக்காக கலங்க வேண்டாம். அவர்களுடைய ஸ்தானத்தை யார் எடுத்து என் குடும்பத்தில் எனக்கு உதவி செய்வார்கள் யார்? என்று கேட்கிறீர்களா, உங்கள் குடும்பத்தின் எல்லாக் காரியங்களையும் கவனிக்கும்படி "உலகத்தின் முடிவு பரியந்தம் சதா காலங்களிலும் உங்களோடு இருக்கிறேன்" என்று சொன்ன இயேசுவானவர் உங்களோடிருக்கிறார். "நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன்" "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" என்று வாக்குரைத்த கிருபையின் ஆண்டவர் நம்மோடிருக்கிறார்.

இவ்வுலகம் நிலையற்றது (This world is not Eternal)

நாம் வாழும் உலகம் ஒரு நாள் அழிந்து போகும். இந்த உலகத்தில் காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள் (2கொரி.5:1). ஒருவேளை இந்த உலகம் ஆண்டவரின் வருகை வரும்வரை காக்கப்பட்டாலும் நாம் இந்த பொய் உலகத்தில் வாழும் வாழ்க்கை நிலையானதன்று. இந்த உலகத்தில் நாம் சம்பாதித்த எல்லாவற்றையும் விட்டுத்தான் போக வேண்டும்.

நிலையான வீடு பரலோகம் :

தூய பவுல் "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்று கூறுகிறார். காணப்படாத மாம்சீக கண்களால் கற்பனை பண்ணி கிரகித்து

பார்க்க முடியாத பரலோகம் நித்தியமானது (2கொரி.5:1). நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது (பிலி.3:20). பரலோகம் நமது சுயதேசம் (எபி.11:14). பரலோகம் மேன்மையான பரமதேசம் (எபி.11:16). யோவா.14:2இல் உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ண போகிறேன். பரலோகம் தாய்வீடு. பரலோகத்தில் பளிங்கைப் போல் தெளிவான ஜீவத் தண்ணீருள்ள சுத்தமான நதி உண்டு. அங்கே கண்ணாடிக் கடல் இருக்கிறது. மத்தியில் நகரம் இருக்கிறது. நகரத்தின் மதில்கள் விலையுயர்ந்த இரத்தினக் கற்களால் ஆனது. இந்த உலகத்தில் எவையெல்லாம் விலையேறப்பெற்றவைகளாக இருக்கின்றதோ அவைகள் எல்லாம் நமது காலடிபடும் தளமாக இருக்குமாம்.

எல்லாரும் இரட்சிக்கப்பட்டு பரலோகம் போக வேண்டும் :

இந்தச் சிறியரில் ஒருவனும் கெட்டுப்போவது பிதாவின் சித்தமல்ல என்றார் இயேசு. எல்லாரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் கடவுள் சித்தமாயிருக்கிறார் (1தீமோ.2:4). ஆண்டவர் பாதாளத்தை (நரகம்) பிசாசுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணியிருக்கிறாரே தவிர மனுக்குலத்திற்கல்ல. இயேசு தேவகுமாரனாக வந்ததே "எல்லாரையும் இரட்சிக்கத்தான்" இயேசு என்றால் இரட்சகர் என்று அர்த்தம்தான்.

நாம் நியாயசனத்திற்கு முன் நியாயந்தீர்க்கபட வேண்டும் :

2கொரி.5:10இல் "சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்". ஒரு தரம் மரிப்பதும் பின்பு நியாயதீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. பவுல் சொல்லுகிறார் நான் தைரியமாக இருக்கிறேன். எதற்கும் ஆயத்தம் என்று. அருமையானவர்களே சாவை நியாதீர்ப்பை அனுகுவதற்கு நாம் தயாராக இருக்கிறோமா. பவுலைப் போல வாழ்ந்து ஊழியம் செய்தால் நாமும் சொல்லலாம் (2கொரி.5:8).

அருள்திரு M. டேனியல் சாலமோன்
புதுச்சுரண்டை

04.11.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 23ஆம் ஞாயிறு
(பெண்குழந்தைகள் ஞாயிறு – நீந்துவ 22)

பொருள் : **பெண் குழந்தைகளின் நலன்**

பாடங்கள் : **2இராஜா.5:1-15; எபி.5:1-10; மாற்.5:35-43**

வசனம் : *ஏசாயா 62:3*

முன்னுரை :

இன்றைய காலக் கட்டத்தில் பெண்களின் நிலையை பேண வேண்டுவது மிக அவசியமாகும். ஏனென்றால் ஒரு ஆங்கில பண்டிதன் தான் எழுதிய கதையில் பெண் பிள்ளைகளின் வாழ்க்கையை இவ்வாறாக சித்தரித்துள்ளான். "ஒரு பெண் பிள்ளையானவள், ஒரு குறிப்பிட்ட நிலையை அடைந்தவுடன் அவர்களுக்கும் அவர்கள் பெற்றோர்களுக்கும் எந்த தொடர்பும் கிடையாது, தங்களுடைய வாழ்க்கையை தாங்களே அமைத்துக் கொள்ள வேண்டும்" இவ்வாறாக பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பற்ற வாழ்க்கையை, ஒரு கைவிடப்பட்ட வாழ்க்கையைக் காண்கிறோம். சிறு வயதிலே சிறு பிள்ளைகளை வேலைக்கு அனுப்பி அவர்கள் மேல் கரிசனை இல்லாமல் வாழும் மக்களை நாம் பார்க்கிறோம். ஆனால் வேதத்தில் தேவனானவர் இயேசு கிறிஸ்து பெண் பிள்ளைகளை நேசிப்பது அவர்களுக்கு கொடுக்கும் மதிப்பை வேதத்தில் உள்ள ஒரு சில வார்த்தைகள் மூலம் சிந்திக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

1. பெண்களை மகிமைப்படுத்தும் தேவன் :

முதலாவதாக ஏசா.62:3யை வாசித்தோமானால் தேவன் அங்கு ஒரு ஆசீர்வாதமான வார்த்தையைக் கொடுத்து, ஒரு தேசத்தைப் பெண்ணாகப் பாவித்து அல்லது மகிமைப்படுத்திக் கூறுவதைப் பார்க்கலாம். பின்னால் வரும் வார்த்தைகளை வாசிப்போமானால் எருசலேம் தேசத்தை தேவன் ஒரு பெண்ணை மகிமைப்படுத்துவதுபோலக் கூறுகிறார். நாம் கூட நம் தேசத்தை பற்றி சொல்லும்போது இந்திய தாயே, தமிழ் தாயே என்று கூறுகிறோம். ஆனால் நம் தேசத்திலுள்ள, நமது சமுதாயத்திலுள்ள பெண் குழந்தைகளுக்கு உரிய மதிப்பு கொடுக்காமல் அவர்களை மகிமைப்படுத்த தவறி விடுகிறோம். ஆனால் தேவன் பெண்களை மகிமைப்படுத்த வேண்டும் என்பதற்காக, ஒரு தேசத்தையே பெண்ணாக பாவித்து மகிமைப்படுத்துவதைப் பார்க்கிறோம்.

2. பெண் குழந்தைகளின் வார்த்தையை மதித்தல் :

இரண்டாவதாக நாம் 2இராஜா.5:1-15 வசனங்களை நாம் வாசிப்போமானால், ஒரு சிறு பெண்ணின் வார்த்தை மூலமாக தேவன் செய்த

அற்புதத்தை நாம் வாசிக்கலாம். ஒருவேளை இந்த நாகமான் நான் தான் பெரியப் படைத் தலைவன், நான் அடிமையாகக் கொண்டுவந்த இந்த பெண் சொல்லி நான் அங்கு செல்ல வேண்டுமோ என்று நினைத்திருப்பானேயாகில், அவர் அடைய வேண்டிய ஆசீர்வாதத்தை இழந்திருப்பான். ஒரு தாய் தகப்பன்மார் இவ்வாறாக தன்னுடையச் சாட்சியில் கூறினார் "என் குடும்பத்தில் என் பெண் குழந்தை ஒரு வார்த்தை சொன்னால் அதில் ஒரு வல்லமை, ஒரு உண்மை இருக்கும் என்று சொன்னார்கள்" நமது குடும்பத்தில், நமது சமுதாயத்தில் சிறு பெண்களின் பேச்சுக்கு, வார்த்தைக்கு நாம் மதிப்பு கொடுக்க வேண்டும். நாகமான் சிறுபெண்ணின் வார்த்தையை மதித்து நடந்தது போல நாமும் சிறு பிள்ளைகளின் வார்த்தைகளுக்கு மதிப்பு கொடுக்கும்போது தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்.

3. சம உரிமை கொடுக்க வேண்டும் :

மூன்றாவதாக நாம் பெண் குழந்தைக்கு சம உரிமை கொடுக்க வேண்டும். வேதத்தில் தேவன் அதைக் குறித்து எபி.5:9 வசனத்தில் குறிப்பிடும்போது "தமக்கு கீழ்படிகிற யாவரும்" அவருக்கு கீழ்படிகிற யாராயிருந்தாலும் சரி, ஆணோ, பெண்ணோ யாராயிருந்தாலும் அவர்களுக்கு சம உரிமை, சம ஆசீர்வாதத்தை அளிக்கிறவர் நம் தேவன். நாமும் நம்முடைய பெண் குழந்தைகளுக்கு சம உரிமையைக் கொடுத்து நம்முடைய சமுதாயத்தில் அவர்கள் நிலைமையை உயர்த்தி அருள வேண்டுவதற்கு நாம் கடமைப் பட்டுள்ளோம். இந்தக் காரியத்தை தேவனிடமிருந்து நாம் கற்றுக் கொள்வோம்.

4. இரக்கம் செய்ய முன் வர வேண்டும் :

மாற்.5:35-43 வரை வாசித்தோமானால் யவீருவின் மகள் இறந்து விட்டாள். இனி இயேசுவை வருத்த வேண்டாம் என்று அவன் வீட்டில் உள்ளவர்கள் கூறுவதைப் பார்க்கிறோம். ஆனால் இயேசு அச்சிறு பெண் மீது கொண்ட அளவில்லாத கரிசனையினால் அவளுக்கு இரங்க (இரக்கம் செய்ய) வேண்டும் என்று, அச்சிறு பெண்ணை கிடத்தி இருந்த வீட்டுக்குச் செல்கிறார். அது மட்டும் அல்லாமல் அச்சிறு பெண்ணுக்கு அவர் காட்டிய இரக்கம், அவள் மேல் வைத்த அன்பு அவளுக்கு உயிர் கொடுக்க வேண்டும் என்று தூண்டியது. இந்த நாளில் நாமும் நமக்கு எதிராக காண்கிற, கஷ்டப்படுகிற, துயரப்படுகிற, வருத்தப்பட்டு கலங்கி கொண்டிருக்கும் பெண் குழந்தைகளுக்கு இரக்கம் செய்ய முன் வரவேண்டும்.

நாம் பார்த்த நான்கு காரியங்களையும் திருச்சபையாகிய நாம் மனதில் வைத்து, பெண் குழந்தைகளின் நலனைப் பேணுவதில் நாம் அக்கறைக் கொண்டு செயல்படும்போது தேவன் நம்மையும், நம்முடைய குடும்பத்தையும், நமது பெண் குழந்தைகளின் வாழ்க்கையையும் தேவன் ஆசீர்வதிப்பாராக ஆமென்.

அருள்திரு T.B. சுவாமிதாசன், மேலச்செவல்

11.11.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 24ஆம் ஞாயிறு

(திரித்துவ 23)

பொருள் : **ஒரே மேய்ப்பன் ஒரே மந்தை**

பாடங்கள் : **எசே.37:15-23; 1கொரி.12:12-20; யோவா.10:7-18**

வசனம் : *எசேக்கியேல் 34:23*

முன்னுரை :

திருச்சபை பிரிந்து தங்களுக்கென்று மேய்ப்பர்களை ஏற்படுத்தி மக்களை சரியான வழியில் நடத்தாமல் தங்களுக்கென்று வாழும் சுயநல மேய்ப்பர்கள் வாழும் சூழ்நிலையில் ஒரே மேய்ப்பன் ஒரே மந்தை என்ற கருத்து ஒன்றிணைந்த திருச்சபையை உருவாக்க ஏவுகிறது.

1. ஒரே மேய்ப்பன் - மந்தையை ஒன்றார்குகிறவர்

எசே.34:11 "இதோ நான் நானே என் ஆடுகளை விசாரித்து அவைகளைத் தேடிப் பார்ப்பேன்".

ஆண்டவர் மிகவும் கரிசனையுள்ளவரும் காணாமல் போன ஆடுகளைத் தேடுகிறவர் என்பதை எசே.34:16இல் தெளிவாகக் காணலாம். எலும்பு முறிந்ததை காயங்கட்டி, நசல் கொண்டதை திடப்படுத்தி நியாயத்துக்குதக்கதாய் அவைகளை மேய்ப்பேன் என்கிறார். லூக்கா 15ஆம் அதிகாரம் 2ம் வசன முதல் 7ஆம் வசனம் முடிய கூறிய காணாமல் போன ஆடு குறித்த உவமையில் ஒரே மேய்பபன் காணாமல் போனதைத் தேடவும், கரிசனையுடையவருமாக இருக்கிறார் என்பதை தெளிவாகக் காட்டுகிறது.

2. ஒரே மேய்ப்பன் - திருச்சபையின் தலைவர் :

1கொரி.12:12 சரீரம் ஒன்று அதற்கு அவயவங்கள் அநேகம். ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றாகவே இருக்கிறது. அந்தப் பிரகாரமாக கிறிஸ்துவும் இருக்கிறார். கிறிஸ்து திருச்சபையின் தலை. திருச்சபை அவரது சரீரம், திருச்சபை மக்கள் சரீரத்தின் அவயவங்கள், கிறிஸ்துவின் சரீரமாகி திருச்சபைக்குள்ளே ஐக்கியம் ஏற்படுத்துகிறார். ரோ.12:5இல் அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாக இருக்க ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். நான் பவுலைச் சேர்ந்தவன், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன், நான் கேபாவைச் சேர்ந்தவன் என்று கூறும் பிரிவினைவாதிகளுக்கு பவுல் அப்போஸ்தலர் சரியான பாடம் புகட்டுகிறார். நானா உங்களுக்காக

சிலுவையில் அறையப்பட்டேன். இயேசு கிறிஸ்துவே உங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டார் என்று கூறுகிறார். இக்கால மந்தைகளில் மேய்ப்பர்கள் சிலர் பிரிவினைவாதங்களோடு "நான் செய்தேன்" "நான் குணமாக்குகிறேன்" என்று தங்கள் சுய மகிமையை விளம்பரபடுத்துவதற்காக திருச்சபைக்குள் பிரிவினைகளை உண்டாக்க எண்ணுகின்றனர். அவர்கள் தேவன் வயிறு என்று கூறுவது போல், பணத்துக்காக பொருளுக்காக வசதிக்காக வாழ்வுக்காக தங்களுக்கென்று ஒரு பிரிவினை கூட்டத்தை உருவாக்க எண்ணுகின்றனர். ஒரே மேய்ப்பனாகிய கிறிஸ்து ஒரே மந்தையாக்குகிறார். கள்ள மேய்ப்பர்கள், திருடுகிறவர்கள் நிலைமை பரிதாபமாகி விடும். நாம் யாவரும் ஒரே திருச்சபை, ஒரே சரீரம், நமக்குத் தலை கிறிஸ்து என்ற எண்ணத்தோடு வாழுவோம்.

3. ஒரே மேய்ப்பன் ஜீவனைக் கொடுக்கிறவர் :

யோவா.10:11 நானே நல்ல மேய்ப்பன், நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறான் என்றார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நானே வாசல் என்றார். அவரது வழியில், வராமல் வசலாகிய அவரது பாதையில் நடவாமல் இருக்கும் கள்ளரும் கொள்ளைக்காரரான மேய்ப்பர்களை எச்சரிக்கிறார். கூலிக்காக மாறடிப்பவர்கள். ஒரே மேய்ப்பனாகிய இயேசு கிறிஸ்து வழியாய் பிரவேசிக்கும்போது இரட்சிப்பின் அனுபவத்தை பெற முடிகிறது (யோவா.10:7) ஆடுகளுக்காக, திருச்சபையின் மக்களுக்காக கவலைப்படாத சுயநலவாதிகள் தங்கள் வசதிக்காகவே மந்தைகளை பயன்படுத்துகிறார்கள். ஆடுகள் அழிவதைக் குறித்து கவலைப்பட மாட்டார்கள். இயேசு கிறிஸ்து நல்ல மேய்ப்பன், நமக்கு முன் மாதிரி, மாதிரியை முன்வைத்து போகிறேன் என்றார். அவரது மாதிரியைப் பின்பற்றி மேய்ப்பர்கள் நமக்கு மேலே ஒரே மேய்ப்பனாகிய பிரதான மேய்ப்பன் இருக்கிறார் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். ஒரே மேய்ப்பன் இயேசு தான் என்ற எண்ணத்தை உருவாக்க சிந்துபூந்துறை திருச்சபையும், உடையார்பட்டி கத்தோலிக்க திருச்சபையும் 2006 கிறிஸ்மஸ் கீத ஆராதனை இணைந்து நடத்துகிறோம். எதிர்காலத்தில் குருத்தோலை, பவனி மற்றும் நிகழ்ச்சிகள் இணைந்து செய்யத் தீர்மானித்துள்ளோம். எப்படியாயினும் நாம் கிறிஸ்தவர்கள், ஒரே மேய்ப்பனாகிய இயேசுகிறிஸ்துவின் ஒரே மந்தை என்பதை நினைத்து செயல்பட வேண்டும். அப்போது நாம் யாவருக்கும் ஆசீர்வாதம்.

அருள்திரு D. எபநேசர்
திருநெல்வேலி சந்திப்பு

18.11.2007

பெந்தெகொஸ்தே திருநாளுக்குப் பின்வரும் 25ஆம் ஞாயிறு
(மனவளர்ச்சி குன்றியோர் ஞாயிறு – திரித்துவ 24)

பொருள் : மனவளர்ச்சி குன்றியோர் மீது கரிசனை

பாடங்கள் : ஏசா.54:7-17; வெளி.21:1-7; மாற்.9:17-27

வசனம் : *சங்கீதம் 41:1*

முன்னுரை :

வேதாகமம் சிறுமைப்பட்டவர்களுக்கு ஆதாரமானது ஆகும். வேதாகமத்தின் ஆண்டவரும் சிறுமைப்பட்டவர்களுக்கு ஆதரவானவர் ஆவார். ஆகவே சிறுமைப்பட்டவர்களுக்கு ஆதரவாகவே மீட்பின் திட்டமும் இருப்பதையும், இறைமக்கள் சிறுமைப்பட்டவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்பதை வேதாகமம் வலியுறுத்துவதை நாம் வாசிக்கிறோம். இவ்வருளுரையில் மனவளர்ச்சி குன்றியோர் ஏன் சமுதாயத்தில் இருக்கிறார்கள்? என்றும் அவர்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமை என்ன? என்றும் நாம் சிந்திப்போம்.

1. ஏன் மனவளர்ச்சி குன்றியோர்?

பல நேரங்களில் இறைவனுடைய படைப்பில் ஏன்? என்ற கேள்வி எழுவதுண்டு. அதில் ஒன்றுதான் ஏன் மனவளர்ச்சி குன்றியோர்? என்ற கேள்வியுமாகும். வேதாகம ரீதியாகவும், மருத்துவ ரீதியாகவும், சமுதாய ரீதியாகவும் ஏன் மனவளர்ச்சி குன்றியோர் என்ற கேள்விக்கு விடை காண்போம்.

அ) வேதாகமத்தின் பதில் : பழைய ஏற்பாட்டின் தேவன் சிறுமைப்பட்டவர்களுக்கு ஆதரவானவர். ஆகவே அவர் விளைவின் பலனை எடுக்கச் செல்லும் போது அதை சிறுமைப்பட்டவர்களுக்காக விட்டுவிட வேண்டும் என்று கட்டளையிடுகிறார் (லேவி.25:6,7) மேலும் மோசே நான் திக்குவாயன் மந்த நாவுள்ளவன் என்று சொன்னபோது கர்த்தர் "ஊமையனையும் செவிடனையும் பார்வையுள்ளவனையும், குருடனையும் உண்டாக்கியவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா?" (யாத்.4:11) என்கிறார். ஆகவே மனவளர்ச்சி குன்றியோர் இறைவனால் படைக்கப்பட்டவர்கள் என்றும், அவர்களை ஆதரிக்க வேண்டும் என்றும் நாம் அறிகிறோம்.

ஆ) மருத்துவத்தின் பதில் : மருத்துவ விஞ்ஞானத்தின்படி மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகள் உருவாவதற்கு பெற்றோரிடம் காணப்படும் மதுப்பழக்கமும் காரணங்களில் ஒன்று என்று அறிகிறோம். மதுபானம் அருந்துவதைத் தவிர்த்தால் ஞானத்திலும் வளர்த்தியிலும் (லூக்.2:52) விருத்தியடையக் கூடிய பிள்ளைகளைப் பெற்றெடுக்கலாம்.

2. ஆண்டவர் இயேசுவின் பணி :

ஆண்டவர் இயேசுவின் பணி முழு வளர்ச்சியை, முழுமையான நல்வாழ்வை மனுக்குலத்திற்கு கொடுப்பதாகவே அமைந்தது. அதில் நாம் நற்செய்தியாக வாசிக்கக் கேட்ட மாற்.9:17-27 பகுதியில் சந்திரரோகியைக் குணமாக்கியதை வாசிக்கிறோம். சந்திரரோகம் என்று சொல்லும்போது சந்திரனால் வரும் வியாதி என்று அது மனநோயே என்றும் அறிகிறோம். அம்மனிதனைக் குணமாக்கியதினிமித்தம் இயேசு மனநோயால் பாதிக்கப் பட்டவர்களுக்கு கரிசனையைக் காண்பிக்கிறார் என்பது தெளிவாகிறது.

3. நம் பங்கு :

நம் திருண்டலத்தில் பேராயர் சார்ஜென்ட் ஆசிரியப் பள்ளி வளாகத்தில் ஒரு மனவளர்ச்சி குன்றியோர் பாடசாலை அமைந்துள்ளது.

நாம் நம்மால் இயன்ற உதவியாகிய

1) ஒரு பிள்ளையைத் தத்து எடுத்து அப்பிள்ளைக்காகும் மாதச் செலவை நன்கொடையாக வழங்கலாம். 2) பிறந்தநாள், திருமண நாளின்போது நமது ஒருநாள் உணவை மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு வழங்கலாம். 3) அவர்களுக்குச் சீருடை வழங்கலாம். 4) நாமே நேரடியாக அவர்களைச் சந்தித்து அவர்களுக்காக ஜெபிக்கலாம்.

4. சிறுமைப்பட்டவர்மேல் சிந்தையுள்ளவருக்கான வாக்கு :

இவ்விதமாக மனவளர்ச்சிகுன்றியோருக்கு நாம் உதவிசெய்யும்போது நாம் "பாக்கியவான்" என்ற ஆசீர்வதிக்கப்பட்ட நிலையை அடைகிறோம். இதை ஆண்டவரும் தமக்கே செய்த உதவியாகக் கருதி (நீதி.19:17; மத்.25:31-37) இவ்வுலகில் நமக்குத் திரும்பக் கொடுத்து, உலகம் உண்டானது முதல் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராஜ்ஜியத்தைச் சுதந்தரிக்கச் (மத்.25:34) செய்வார்.

நம் வாழ்வில் இதேபோல் சிறுமை வரும்போது கர்த்தர் அவ்விதமான சிறுமையிலிருந்து விடுவிப்பார்.

முடிவுரை :

படைப்பில் வினோதமான மனவளர்ச்சி குன்றியோருக்கு நம்மால் இயன்ற உதவியைச் செய்வோம். ஆண்டவரின் ஆசீர்வாதத்தையும், பரலோக பாக்கியத்தையும் பெறுவோம்.

நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை
நீசரை நாம் உயர்த்திடுவோம்
பொருக்க வொண்ணா கஷ்டத்துக்குள்
நிஷ்டூருத்துக்குள் படுகுளிக்குள் விழுந்தனரே - தாசரே

அருள்திரு D. ஆண்ட்ரூ கிறிஸ்டோபர், நெடுங்குளம்

25.11.2007

அட்வெந்து நாட்களுக்கு முன்வரும் ஞாயிறு

பொருள் : ஆயத்த நிலை

பாடங்கள் : மல்.3:13-4:2; 1தெச.5:1-11; மாற்.13:28-37

வசனம் : *"கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள். அவாந்தர வெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வை பண்ணுங்கள்" (ஏசா.40:3).*

முன்னுரை :

இன்றைய உலகில் வாழும் மனிதன் எந்த ஒரு காரியத்திற்கும் முன்கூட்டியே ஆயத்தம் செய்கின்றான். ஏனென்றால் ஆயத்தம் என்பது மிகவும் இன்றியமையாத ஒன்று. 1980ஆம் ஆண்டில் நான் இறையியல் கல்வியின் போது இடைக்கால பயிற்சிக்காக (Internship) கோவைப் புறநகர் பகுதியில் நான்கு மாதங்கள் தங்கியிருந்தேன். மிகவும் சொற்ப வாகனங்களே ஓடிக்கொண்டிருக்கும் அந்த சாலையில் ஒரு நாள் வாகனங்கள் அங்கும் இங்குமாகப் பறந்து கொண்டிருந்தன. சாலையை சரிசெய்யும் பணிகளும் அசுர வேகத்தில் சில நாட்கள் நடைபெற்றன என்னவென்று விசாரித்தேன். மந்திரி அந்தப் பகுதிக்கு வரப்போகிறார் என்று குறிப்பிட்டார்கள். பிறிதொரு நாள் பார்க்கும்பொழுது அரசு அதிகாரிகளின் வாகனங்கள் சீறிப்பாய்ந்தன. விசாரித்தபோது, மறுநாளிலே மந்திரி அந்த வழியிலே செல்கிறார். எனவே அதற்கான ஒத்திகை நடைபெறுகிறது என்று குறிப்பிட்டார்கள்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! நாசியில் சுவாசமுடைய ஒரு அரசியல்வாதிக்காக செய்யப்பட்ட ஆயத்தங்கள்தான் எத்தனை! எத்தனை நாட்கள் செய்யப்படுகின்றன. அப்படியானால் யாவருக்கும் ஜீவனைக் கொடுக்கிற சர்வலோக ராஜாவின் வருகைக்கு எந்த அளவுக்கு நாம் ஆயத்தம் செய்திருக்கிறோம் என்று சிந்தித்துப் பார்க்க நாம் அழைக்கப்படுகிறோம்.

1. கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்
2. தேவனுக்குப் பாதையை செவ்வைபண்ணுங்கள்

1. கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள் :

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்த உலகத்தில் பாவத்தில் வீழ்ந்து போன மனுக்குடும்பத்தை மீட்டுக்கொள்ளும்படியாக இம்மண்ணுலகிற்கு மீட்பராக வந்த ஏசு பரத்திற்கு எழுந்தருளிச் சென்றபொழுது "இதோ சீக்கிரமாய் வருகிறேன்", என்று கூறிச் சென்றுள்ளார். (வெளி.22:7; 12,13,20) முற்காலங்களில் கிராமங்களில் யாராவது பெரியவர்களோ, புதியவர்களோ

வரும்பொழுது வழியில் மாற்று விரித்து தோரணங்கள் கட்டி மாலை மரியாதையுடன் அழைத்துச் செல்வது வழக்கம். அது மக்களுடைய ஆயத்தத்தைக் காட்டுகிறது (எபே.6:15) சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும் நில்லுங்கள், புத்தியுள்ள கன்னிகைகள் (மத்.25:1-21).

2. விழித்திருங்கள் (மத்.25:13)

மனுஷகுமாரன் வரும் நாளையாவது, நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள். கடமை உணர்வோடு பணியாற்றுகிறவன் விழித்திருக்க வேண்டியது மிகவும் அவசியம் (எபே.5:14) தூங்குகிற நீ விழித்து மரித்தோரை விட்டு எழுந்திரு. அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார் என்று சொல்லியிருக்கிறார். (அப்.20:9) ஐத்திகு என்பவன் மிகுந்த தூக்கமடைந்து நித்திரை மயக்கத்தினால் சாய்ந்து மரித்தவனாய் எடுக்கப்பட்டான்.

விழுத்தெழு விசுவாசியே நீ
விழித்து கண்களை ஏறிட்டுப் பார்
எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்றே
எழுந்து கட்டிட வா - 2

3. வஞ்சிக்கப்படாதிருங்கள் (கொலோ.2:19)

தன் மாமிச சிந்தையினாலே வீணாய் இறுமாப்பு கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப் பொருளை நீங்கள் இழந்து போகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள்.

ஓர் இளவரசி தனக்குக் கணவனாக வருபவர் தன்னை ஓட்டப்பந்தயத்தில் ஜெயிக்க வேண்டும் என்று நிபந்தனை போட்டாள். பலர் அவளுடன் ஓடித் தோற்றனர். கடைசியில் ஒரு மெலிந்த இளைஞர் வந்தான். அரசன் அவனை நீ ஓட முடியாது என்று கூறி அனுப்பி விட்டார். அவன் ஒருவாரம் தவணை கேட்டான். கடவுளிடம் ஜெபித்தான். மூன்று தங்க ஆப்பிள்கள் செய்து ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொண்டான். ஓட்டப்பந்தயம் நடக்கும்போது, ஒவ்வொரு ஆப்பிளாக உருட்டி விட்டான். முந்தி ஓடிக் கொண்டிருந்த இளவரசி இரண்டு ஆப்பிள்களை எடுத்து ஓடினாள். ஆனால் மூன்றாவது ஆப்பிள் வரும்போது அதை எடுக்கப் போகையில், அந்த இளைஞன் முந்தி வெற்றி பெற்று விட்டான். அவள் தங்க ஆப்பிளால் வஞ்சிக்கப்பட்டு, தோல்வியைத் தழுவினாள். "ஒன்று செய்கிறேன், பின்னானவைகள மறந்து, முன்னானவைகளை நாடுகிறேன்" (பிலி.3:13).

அருள்திரு GSA பாக்கியநாதன்
பணகுடி

30.11.2007

புனிதர் அந்திரேயா திருநாள்

பாடங்கள் : ஆமோ.7:10-15; பிலி.1:1-11; யோவா.12:20-26

வசனம் : *"அந்திரேயா முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு : மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான். மேசியா என்பதற்கு கிறிஸ்து என்று அர்த்தமாம்" யோவா.1:41.*

முன்னுரை :

எல்லாம் வல்ல கடவுளே, அப்போஸ்தலனாகிய பரி.அந்திரேயா, உமது மைந்தனான இயேசு கிறிஸ்துவின் அழைப்பிற்குக் கால தாமதமின்றி, இணங்கவும், மற்றவர்களை ஆண்டவரிடம் அழைத்து வரவும் அவருக்கு அருள் செய்தீர். உமது திருச்செய்தியின் மூலம் அழைப்புப் பெற்றுள்ள நாங்கள் அனைவரும் எங்கள் மீட்பரான இயேசு கிறிஸ்துவுக்கு உண்மையான சீடரும் சாட்சிகளுமாக விளங்க அருள்புரியும். எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு தாழ்மையாய் வேண்டுகிறோம் நல்ல பிதாவே, ஆமென்.

இன்று பரி. அந்திரேயாவின் திருநாள். அந்திரேயா என்றால் தைரியசாலி அல்லது துணிந்தவர் (He is Manly) என்று பொருள்படும். அந்திரேயா இயேசுவின் சீஷர்களில் ஒருவர். பெத்சாயிதா பட்டணத்தைச் சேர்ந்தவர். சீமோன் பேதுருவின் சகோதரர். ஆரம்ப காலத்தில் பரி.யோவான் ஸ்நானகனுடைய சீஷர்களில் ஒருவராக இருந்தார். பிற்காலத்தில் இயேசுவின் அழைப்பைப் பெற்று கீழ்ப்படிந்து இயேசுவுக்கு சீடரானார்.

இயேசு பரத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு இயேசுவின் சீஷர்கள் இயேசுகொடுத்த அதிகாரத்தின்படி ஊழியம் செய்தார்கள். பரி.அந்திரேயா நம் இயேசுவுக்காக ஊழியம் செய்தார். அந்திரேயாவே முதல் உள்நாட்டு, வெளிநாட்டு மிஷனெரி என்கிறார் ஒரு அறிஞர். அந்திரேயா எதையும் அறியும் ஆற்றல் உள்ளவர். அறிந்து கொள்ளும் ஆற்றல் உள்ளவர்.

1. இயேசுவை பின்பற்றின அந்திரேயா :

பரி. மத்தேயு 4:19 இயேசு. என் பின்னே வாருங்கள் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்.

மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சீஷர்கள் இயேசுவின் அழைப்பை ஏற்று உடனே இயேசுவுக்கு கீழ்ப்படிந்தார்கள். இந்த ஊழிய பாதையில் அந்திரேயாவுக்கு இயேசுவோடு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. யோவான்ஸ்நானகனுடைய ஊழியத்தில் ஏற்பட்ட தொடர்பு பார்க்கிலும் மேலான நிலையில் இயேசுவிடம் உறவு இருந்தது. சங்கீதம்

2:12 அவரை அண்டிக் கொண்ட யாவரும் பாக்கியவான்கள். பரி.அந்திரேயாவும் அந்த நிலையில் பாக்கியவானாக காணப்பட்டார்.

சாதுசுந்தர்சிங் ஆண்டவருக்கு கீழ்படிந்து அவரைப் பின்பற்றியதால் பாக்கியம் பெற்றேன். அவருக்கு கீழ்படிவதால் மகிழ்ச்சி அடைந்தேன் என்கிறார். அவரைப் பின்பிற்றி வருவேன் என்றவர்கள் எல்லாரும் முடிவுபரியந்தம் பின்பற்றவில்லை. அவரைப் பின்பற்றி வருகிறவர்களுக்கு என்ன கிடைக்கும்.

பரி.மத்தேயு 19:27-30; பரி.லூக்.22:30

1) என்னைப் பற்றின நீங்கள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந் தீர்க்கிறவர்களாகப் பன்னிரெண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள்.

2) நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளுவான்

3) என் ராஜியத்தில் என் பந்தியில் போஜனபானம் பண்ணுவீர்கள் (யோவா.16:33; எபே.6:12).

2. இயேசுவிடம் அழைத்துக் கொண்டு வந்த அந்திரேயா

ஆண்டவருடைய பணியில் இரண்டு விசேஷித்த ஊழியம் உண்டு.

1. தனித்தாள் ஊழியம் (Personel Evangelism)
2. குழு ஊழியம் (Group Evangelism)

பரி.அந்திரேயா தனித்தாள் ஊழியம் செய்வதில் வல்லவர்.

பரி.லூக்கா 22:32 இயேசு பேதுருவிடம் நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரனை ஸ்திரப்படுத்து.

1) முதலாவது தன் சகோதரனாகிய சீமோன் பேதுருவை இயேசுவிடம் அழைத்து வந்தான்.

2) பரி.யோவா.6:8,9 இதோ ஓர் பையன் இருக்கிறான். அவனிடம் 5 அப்பம், 2 மீன்கள் உண்டு. அவனை இயேசுவிடம் அழைத்து வந்தான்.

3) பரி.யோவா.12:21 ஐயா, நாங்கள் இயேசுவைக் காண விரும்புகிறோம். என்ற கிரேக்கர்களை இயேசுவிடம் வழிநடத்தினார்.

இயேசுவிடம் அறிமுகம் வைப்பதிலும் அவரிடம் அழைத்து வருவதிலும் அந்திரேயா சிறப்புமிக்கவர்.

உலகில் ஓர் சிறந்த பணி உண்டு என்றால், ஆத்தும ஆதாயம் செய்வதே சிறந்த பணி. அந்திரேயா ஆத்தும தாகம் கொண்டவர்.

பரி.பேதுரு, பரி.பவுல் என்ற ஊழியக்காரர்கள் தனது பேச்சு, பிரசங்கங்களினால், ஆயிரமாயிரம் பேர்களை இயேசுவிடம் கொண்டு

வந்தார்கள். பரி.அந்திரேயாவிடம் அப்படிப்பட்ட தாலந்து இல்லாவிட்டாலும், ஒவ்வொருவராக இயேசுவிடம் அழைத்து கொண்டுவரும் தாலந்து இருந்தது.

3. இயேசுவுக்காக பாடுபட்ட அந்திரேயா

1பேது.3:17 தீமை செய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால் நன்மை செய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்.

பரி.அந்திரேயா, கடைசி காலங்களில் பாடுகள் நிறைந்தவராக காணப்பட்டார்.

தற்போதைய ரஷ்யா ஜியார்ஜியா மாவட்டம் சாக்கஸ் மலையடிவாரத்தில் ஊழியம் செய்தார். பைசாண்டியம் என்ற பகுதியில் சபைகளை நிறுவினார். ஸ்டாகிட்ஸ் என்ற ஊழியரை பேராயராக அபிஷேகம் செய்தார். இந்த ஊழியத்தின்போது பலமுறை சிறையில் அடைக்கப்பட்டார். கல்லால் எறிந்து விடப்பட்டார். இறுதியாக கிரீஸ் நாட்டில் திரேஸ், மாசிடோனியா பகுதியில் ஊழியம் செய்தார். இங்கு அதிபராக இருந்த ஏஜியேடிஸ் என்பவரின் மனைவி மேக்ஸி மில்லா மனம் மாறி இயேசுவை ஏற்றுக் கொண்டு தன்னை ஆண்டவருக்கு அற்பணித்தாள். கோபம் கொண்ட அதிபர் அந்திரேயாவை சித்ரவதை செய்ய போவதாக கூறி பயமுறுத்தினார். அந்திரேயாவோ அதிபரையும் மனம் மாற்றம் செய்ய முயற்சி செய்தார். கடுங்கோபம் கொண்ட அதிபர், அந்திரேயாவை சிலுவையில் அறைந்து கொல்லும்படி கட்டளையிட்டார். அந்திரேயாவை பெருக்கல் வடிவ சிலுவையில் அறைந்தனர். இரண்டு நாட்கள் சிலுவையில் தொங்கி வேதனையை அனுபவித்த போதிலும் அங்கு வந்தவர்களிடம் சிலுவையைப் பற்றி சாட்சி பகர்ந்தார்.

என்னை ஏற்றுக் கொள்ளும் இயேசுவே. உம்மை நான் பார்த்தேன். உம்மை நான் நேசித்தேன். உம்மில் நான் இருக்கிறேன். உமது நித்திய ஆளுகையின் சமாதானத்தில் என் ஆவியை ஏற்றுக் கொள்ளும் என்று ஜெபித்து தனது ஆவியை விட்டார் அந்திரேயா.

இங்கிலாந்து நாட்டு தேசிய கொடியில் புனித அந்திரேயாவின் சிலுவை என்றழைக்கப்படும் X வடிவ சிலுவைக் குறி காணப்படுகிறது.

பரி.யோவா.12:24 கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்.

பரி.அந்திரேயா தனது கடைசி மூச்சு இருக்கும் வரை இயேசுவுக்காக வாழ்ந்து இரத்த சாட்சியாக மரித்தார். நாமும் அந்திரேயாவைப் போல உண்மை ஊழியக்காரர்களாய் வாழ ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக.

அருள்திரு Z. ஸ்டீபன் அற்புதராஜ்
டோனாவூர்

01.12.2007

மாதத்தின் முதல் நாள்

வசனம் : *"தாவீது நாளுக்கு நாள் விருத்தியடைந்தான். சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடேகூட இருந்தார்" (2சாமு.5:10).*

முன்னுரை :

ஒரு பட்டணத்திலே இராஜாவாக பட்டம் பெறப் போகிறவரை எல்லா ஆயுதங்களையும் கொடுத்து அடர்ந்த காட்டுக்குள் அனுப்புவது வழக்கமாக இருந்தது. ஒருமுறை இராஜாவின் மகன் முறை வந்தது. அவன் மிகுந்த பயத்தோடு காட்டைக் கடந்து சென்று கொண்டிருந்தான். திடீரென்று அவனுக்குப் பின்னால் காலடி சத்தம் கேட்டது. அவன் திருப்பிப் பார்த்தபொழுது, இராஜா அவனைப் பின்தொடர்ந்து வருவதை அறிந்து கொண்டான். இளவரசன் தன்னைப் பாதுகாக்கவே அவனுடைய தகப்பன் தனக்குப் பின்னாகத் தொடர்ந்து வந்ததை அறிந்து கொண்டு மகிழ்ச்சியடைந்தான். அதுபோலவே தாவீதோடுகூட தேவனாகிய கர்த்தர் கூட இருந்தார். தாவீதின் வாழ்க்கையில் காணப்பட்ட இரண்டு முக்கியமான காரியங்களைச் சிந்திப்போம்.

1) கர்த்தருடைய சித்தத்தின்படியெல்லாம் செய்தான் (அப்.13:22,36)

கர்த்தர் தாவீதைக் குறித்துச் சாட்சி கொடுத்தார். தன் இருதயத்திற்கு ஏற்றவன் என்றும், தனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வான் என்றும் சொன்னார். சவுல் தாவீதைக் கொல்லும்படிக்கு துரத்திக்கொண்டே சென்றதினால் அவனுக்குப் பயந்து கொண்டே இருந்தான். தாவீது மிகவும் நெருக்கப்பட்ட வேளையிலும் சோர்ந்து போகாமல் தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக் கொண்டான் (1சாமு.30:6). தாவீது ஓர் யுத்த வீரன். ஆனாலும் கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டினார் (சங்.20:7பி). தன்னுடைய சுயபெலன், சுய ஞானம் இவற்றை நம்பவேயில்லை. என்னைப் பலத்தால் இடைகட்டி, என் வழியைச் செவ்வைப்படுத்துகிறவர் தேவனே (சங்.18:32). ஒருமுறை அமலேக்கியர் வந்து தாவீது மற்றும் அவனோடிருந்த யாவருடைய மனைவிகளையும், குமாரரையும், குமாரத்திகளையும் சிறைப்பிடித்துக் கொண்டுபோன சூழ்நிலையிலுங்கூட தாவீது கர்த்தருடைய ஆலோசனையைப் பெற்று, அதைச் செயல்படுத்தி எல்லாவற்றையும் திருப்பிக் கொண்டான். தாவீது தன் வாழ்நாள் முழுவதும் தேவனையே துணையாகக் கொண்டு தேவசித்தத்தை அறிந்து கொண்டு அதையே செய்து வந்தான் என்பதில் சந்தேகமில்லை (சங்.40:4,5; 146:5).

2) தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடந்து கொண்டான் (1சாமு.18:14,15)

தாவீது மகா புத்திமானாய் நடக்கிறதை சவுல் கண்டு அவனுக்குப் பயந்திருந்தான். தாவீது சவுல் தன்னை அனுப்புகிற எவ்விடத்திற்கும் போய் புத்தியாய் காரியத்தை நடப்பித்ததினால், சவுல் அவனை யுத்த மனுஷரின் மேல் அதிகாரியாக்கினான். நீடிய சாந்தமுள்ளவன் மகா புத்திமான் (நீதி.14:29மு). சாந்த குணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாய் இருப்பார்கள் (சங்.37:1). சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்த குணமுள்ளவர்களுக்குத் தமது வழியை போதிக்கிறார் (சங்.25:9). தாவீது தன்னைக் கொலை செய்யும்படி தன்னைப் பின்தொடர்ந்து துரத்திக் கொண்டு வந்த தன்னுடைய எதிரியான சவுல் அரசனைக் கொல்ல தனக்கு சந்தர்ப்பம் கிடைத்தபொழுது தப்பவிட்டு புத்தியாய் நடந்து கொண்டது அவரது சாந்தகுணத்திற்கு ஓர் எடுத்துக் காட்டு அன்றோ? நமது ஆண்டவர் இயேசுவும் சாந்தகுணமுள்ளவராய் விளங்கினார். பவுல் அப்போஸ்தலனும் பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில் 'உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக என்று எழுதினார் அல்லவா? (மத்.11:29; பிலி.4:5). தாவீது இஸ்ரவேல் அனைத்தின் மேலும் அரசனாக உயர்த்தப்பட்டதற்கு அவனுடைய செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடந்து கொண்டதும், தேவனை நம்பி அவரையே உறுதியாய்ப் பற்றிக் கொண்டதும், தன்னுடைய எதிரிகளிடத்திலும் சாந்தகுணத்தோடு நடந்து கொண்டதும் காரணங்களாகும்.

முடிவுரை :

இந்த உலகத்திலே நாம் வெற்றியோடும் விடுதலையோடும் வாழ, கர்த்தர் நம்மோடு இருக்க வேண்டும். அதற்கு நாம் நம்மை அவருடைய பாதத்திலே முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும். தாவீதைப் போன்று தேவ சித்தத்தை அறிந்து மகா புத்திமானாய் சாந்த குணத்தோடு வாழ ஆண்டவர் நிச்சயம் உதவி செய்வார்.

திரு. பன்னன் சாலமோன்
குலவணிகர்புரம்

02.12.2007

கிறிஸ்து பிறந்த திருநாளுக்கு முன்வரும் 4ஆம் ஞாயிறு

(அட்வெந்து 1)

பொருள் : **இறையாட்சியின் நற்செய்தி**

பாடங்கள் : ஆதி.33:1-17; 1தெச.3:6-13; லூக்.1:39-45

வசனம் : *ஏசாயா 65:25*

முன்னுரை :

கிறிஸ்து பிறப்பின் திருநாளுக்கு முன் 4ஆம் ஞாயிறு வருகையின் முதலாம் ஞாயிறு ஆகும். தூய அந்திரேயாவின் திருநாளை ஒட்டி வருகின்ற 4 வாரங்களை அட்வெந்து காலம் என அழைக்கிறோம். 'அட்வெந்துஸ்' என்ற இலத்தீன் வார்த்தையின் பொருள் 'வருதல்' என்பதாகும். 'அட்வெந்துஸ்', 'எப்பிபானியா' 'நாடாலே' ஆகிய சொற்கல் அனைத்தும் ஒத்த பொருளை அடக்கி நிற்கின்றன. கிறிஸ்துவின் வருகையைக் குறித்துத் திருமறையில், ' பரூசியா' ன்ெற கிறிஸ்துவின் வருகையைக் குறித்துத் திருமறையில், 'பரூசியா' என்ற கிரேக்க வார்த்தையின் மூலம் 'நேரடிப் பிரசன்னம்' அல்லது 'வந்து சேர்தல் என்ற பொருளில் எதிர் நோக்குடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. இறைமைந்தன் இயேசுகிறிஸ்து உலகில் மானிடனாக அவதரித்ததால் இறைவனின் முதல் வருகை திகழ்ந்துள்ளது. அதையே நாம் கிறிஸ்து பிறப்பின் பண்டிகையாக ஆசரிக்கிறோம். கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எவ்வேளையில் நிகழும் என்பதை மக்கள் அரியாததினால் கிறிஸ்தவர்கள் எப்போதும் ஆயத்தமுள்ள கன்னிகைகள் போல ஆயத்தமாயிருக்க வேண்டுமெனத் திருமறை நமக்குப் போதிக்கிறது.

1) இறையரசின் வருகையும், மாற்றமும் :

நமக்கு பிரசங்க வாக்கியமாகத் தரப்பட்டுள்ள ஏசா.65:25ஆம் வசனம் புது யுகத்தின் ஒரு சிறப்பான காட்சியை கிறிஸ்துவின் வருகைக்கென ஆயத்தப்படும் நமக்குத் தெளிவிக்கிறது. கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாராக வாழ்வதற்கு இத்தரிசனம் நம்மைத் தூண்டுகிறது. 'ஓநாயும் ஆட்டுக் குட்டியும் ஒருமித்து மேயும்; சிங்கம் மாட்டைப் போல் வைக்கோலைத் தின்னும் என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்கு செய்வதுமில்லை, கேடுண்டாக்குவதுமில்லை" என்ற காட்சியை நம் மனக்கண் முன் கொண்டு வருகிறார். ஏசாயா தீர்க்கன் எதிரும் புதிருமான மிருகங்கள் கூடி மேய்தல் ஓர் மாறுபட்ட காட்சியே. இதே போன்ற காட்சியை வலியுறுத்தும் ஏசாயா தீர்க்கனின் முந்திய அதிகாரங்களில் 'ஈசா' என்னும் அடிமரத்திலிருந்து துளிர்தோன்றி, அதின் வேர்களிலிருந்து 'கிளை' எழும்பிச்

செழிக்கும் இறையாட்சியின் மாட்சி வெளிப்படுகிறது. அதை ஏசா.11:5-10 வசனங்கள் நமக்கு தெளிவாக்குகின்றன. "அப்பொழுது ஓநாய் ஆடுகளைப் பீறி, அவைகளைச் சிதறடிக்கும் என அறிகிறோம். வேட்டையாட முற்படுகிற போது சிதறடிக்கப்படுதலும் இரையாதலும் வாடிக்கைதான். இவ்வுலகில் ஆதிக்க அதிகார வர்க்கம் ஏழைகளையும் எளியவர்களையும் வேட்டையாடி சிதறடித்து சீரழிப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். தீர்க்கதரிசியின் இக்காட்சி நம்மை வேறுபட்டுச் சிந்திக்கத் தூண்டுகிறது. இறையரசின் வருகை அல்லது இறையாட்சியின் மாட்சி பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதைத் தெரிவிக்கிறது. கொடூர குணம் கொண்ட மிருகம் காட்டில் மிருக அரசனாம். சிங்கம் மாட்டைப் போல வைக்கோல் தின்னும். என்பதிலிருந்து அவைகளின் குணநலன்கள் கூட மாறிவிடுகின்றன எனக் கூறுகிறார்.

"தீயவர் திருடரும் திருக்குள்ள நெஞ்சரும்
இயேவில் மாற்றம் பெற்றார்
மாறிய மனதுடன் மங்கள வாழ்விற்கு
அழைக்கிறார் ஓடியே வா"

எனப்படும்போது பொங்கிவரும் இறை அருள் பிரசன்னம் மனிதரை மாற்றுகிறது என்று அறிகிறோம். சண்டை குணம் படைத்த மனிதர்கள், நாடுகள், வீடுகள் நாசமடைந்து நலிவுவதிலிருந்து இறையரசாட்சியின் வருகையால் மாற்றம் பெற்று இறை அரசின் பிரசன்னத்தில் மகிழ்வுற்று நம்பிக்கையுடனும் ஆசியுடனும் வாழ்வதும் எத்தனை பெரிதான இரட்சிப்பு என்பதைப் பாருங்கள். "நீதி அவருக்கு அரைக்கட்டும் சத்தியம் அவருக்கு இடைக்கட்டுமாயிருக்கும்" (ஏசா.11:5) இறைவனின் நீதி அவைகள் தீங்குகளைத் தீங்கு செய்ய அனுமதிப்பதில்லை, செய்வதுமில்லை, கேடுண்டாக்குவதுமில்லை என ஏசா.65:25லும் ஏசா.11:9 வசனத்திலும் இக்கருத்து வலியுறுத்தப்படுவதால் கேடுகள், தீமைகள் நீங்கி, மன்னிப்பு மீட்பு, அன்பு, வாழ்த்து ஏற்பு, இறை ஆசீர் போன்ற நற்பண்புகள் இறையரசின் நற்செய்தியாகத் தரப்பட்டுள்ளன.

2) இறையாட்சி வருகையும், பரிசுத்தமும் :

நமக்கு இன்று திருமறைப் பாடங்களாக குறிக்கப்பட்ட திருமறைப் பகுதிகள் இறையாட்சி நற்செய்தியின் சாட்சிகளை நமக்குத் தெளிவிக்கின்றன. ஏசா, யாக்கோபு சகோதரர்கள். யாக்கோபு தனது அண்ணனின் ஆசீர்வாதத்தை அபகரித்து தந்தையையும் ஏமாற்றிப் பெற்றுச் செல்கிறான். அதனால் சகோதரனோடு மனம் ஒத்து மகிழ்ச்சியாக வாழ முடியவில்லை. சகோதரர் தன்னை கொன்று போடுவான் எனப் பயந்து சீரியா தேசத்தானாகிய லாபானிடத்திற்குச் சென்றான். பின்னர் பெனியேல் என்ற இடத்தில் இறைத் தரிசனம் பெற்று போராடி மேற்கொண்டு இறைவனின்

அருளைப் பெருகின்றான். தனது சகோதரனைச் சந்திக்கின்ற சம்பவம் ஆதி.33:1-17 வசனங்களில் விளக்கப்படுகிறது. தனது எத்து நிறைந்த பாவ பெயராகிய யாக்கோபுவை விட்டு 'இஸ்ரவேல்' என்றும் புதிய நாமம் இறையருளால் பெற்று ஆசீர்வாதம் பெற்றவனாகத் தன் அண்ணனைச் சந்திக்கிறான். இருவரின் சந்திப்பினாலும் இருவருடைய தீய குணங்களும் நீங்கப்பெற்று பிரியமாகச் சந்தித்துக் கொள்வதால் தேவனுடைய முகத்தைக் கண்டதுபோல் இருக்கிறது என்று யாக்கோபு கூறுகிறான். ஆதி.33:1இல் "நீர் என் மேல் பிரியமானீர். நான் உம்முடைய முகத்தைக் கண்டது தேவனுடைய முகத்தைக் கண்டதுபோல இருக்கிறது" என்றான். 1தெச.3:12ஆம் வசனத்தில் "நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்திலும் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்களோடு வரும்போது நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தவான்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக" ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்து, அவரது வருகையின்போது பிழையற்றவர்களாயிருக்க நமக்குப் போதிக்கிறது. கிறிஸ்துவின் வருகை நம்மை எதிர்கால நம்பிக்கை உடையவர்களாக வாழ அழைக்கிறது.

3) இறையரசின் வருகையும், ஆசீர்வாதங்களும் :

கன்னி மரியாளும் எலிசபெத்தும் சந்திக்கின்ற நிகழ்ச்சி லூக்.1:39-45 வசனங்களில் சொல்லப்பட்டுள்ளது. கன்னி மரியாள் 'இதோ ஆண்டவருக்கு அடிமை என்று தன்னை ஆண்டவருக்கு அர்ப்பணித்து ஒப்புக் கொடுக்கிறாள். பரிசுத்த ஆவியரின் செயலாற்றலினால் தேவனுடைய குமாரனை, இறைமைந்தனை கர்ப்பமுற்று ஆண்டவரின் தாயாக மாறுகிறாள். தான் கருவுற்ற காலத்தில் ஏற்படும் அவமானங்களையும் இடர்களையும் எண்ணாமல் தனது உறவினரான எலிசபெத்து முதிர் வயதில் கர்ப்பமுற்றதை அறிந்து மலைகள் கடந்து யூதேயாவின் பட்டணத்திற்குள் தீவிரமாய்ப் போய் சகரியாவின் வீட்டுக்குள் பிரவேசித்து எலிசபெத்தை வாழ்த்தினாள் (லூக்.1:40). "நீ ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றும்" 'என் ஆண்டவரின் தாயார் எனவும்' ஒருவரையொருவர் நேசித்து அன்புகூர்ந்து, அங்கீகரித்து வாழ்த்துக்களைப் பரிமாறி ஆசீர்வதிப்பது இறையரசின் பண்பாளர்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. ஒருவரில்ஒருவர் அன்பு கூர்ந்து, அங்கீகரித்து ஆசீர்வதிப்பதால் தீமைகள் மாறி நன்மைகள் பிறக்கின்றன. இறையாட்சியின் நற்செய்தியின் சாட்சிகளாக வாழ வழி வகுக்கப்படுகிறது.

அருள்திரு அறிவர் G. வேதநாயகம்
நல்லூர்

09-12-2007

கிறிஸ்து பிறந்த திருநாளுக்கு முன்வரும் 3ஆம் ஞாயிறு

(அட்வெந்து 2)

பொருள் : **திருமறை**

பாடங்கள் : **ஆதி.1:1-2:4; எபி.4:10-13; லூக்.24:25-36**

வசனம் : *"வேதம் என்னிலிருந்து வெளிப்படும்; என் பிரமாணத்தை ஜனங்களின் வெளிச்சமாக ஸ்தாபிப்பேன்" (ஏசா.51:4).*

முன்னுரை :

கர்த்தரிடமிருந்து வெளிப்படும் வேதம் அவர் விரும்புகிறதைச் செய்து அவர் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். அதாவது தேவன் நமது நோக்கத்தை மனுஷரைக் கொண்டு நடப்பிக்கிறார் என்பதைக் காட்டுகிறது. இங்கே தேவனுடைய வார்த்தையை தூது கொண்டுபோகும் ஒரு ஆள்போலவும், அவர்களுக்கு வழிகாட்டும் விளக்கைப் போலவும் நிலைநிறுத்துவார். எரேமியா பின்வருமாறு கர்த்தருடைய வார்த்தையை விளம்புகிறார். அவருடயை வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப் போல் என் இருதயத்தில் இருந்தது (எரே.20:9பி). வால்ட்டர் என்ற நாத்திகன் பின்வருமாறு சபதம் செய்தான். "இயேசுவும், அவரது அடியாரும் 1800 வருடங்களாகப் பரப்பின இந்தக் கிறிஸ்தவத்தை நான் சில ஆண்டுகளில் ஒழித்து விடுவேன்". ஆனால் முடிந்ததா? அவர் வசித்துவந்த அறை இன்று வேதாகமம் அச்சடிக்கும் அச்சுக்கூடமாயுள்ளது.

1. வாழ்வு அளிக்கும் திருமறை :

இயேசுவின் சுவிசேஷம் யூத இனத்தவருக்கு மட்டுமே உண்டென யூதர் நினைத்தனர். பேதுருவும் இதற்கு விலக்கானவர் அல்ல; தேவ தரிசனத்தால் கொர்நேலியுவின் வீட்டுக்கு அனுப்பப்பட்ட பின்புதான் கர்த்தரின் வசனம் எல்லா இனத்தவருக்கும் உரியது என்று அறிந்தார். உன் ஆகாரத்தை தண்ணீர்கள்மேல் போடு; அநேக நாட்களுக்குப்பின்பு அதின் பலனைக் காண்பாய் (பிர.11:1) என்பது மெய்யானது.

லூக்.7:14 வாலிபனே எழுந்திரு; லூக்.8:54 பிள்ளையே எழுந்திரு; யோவா.11:43 லாசருவே வெளியே வா என அழைத்து இவற்றின் மூலம் கர்த்தரின் வார்த்தை வாழ்வு அளித்தது எனவும், மரித்தோரையும் உயிரோடெழுப்பியதையும் நாம் அறிவோம். அவர் தமது வார்த்தையை பூமியிலே அனுப்புகிறார். அவருடைய சொல் மகா தீவிரமாய்ச் சொல்லுகிறது. (சங்.147:15) செய்தியாளர் தேவனுடைய வார்த்தையை எடுத்துச்

செல்லுகிறார். அதினால் தேவசித்தம் வெகுசீக்கிரம் நிறைவேறும் என்பதை உணர்த்துகிறது. அது (அந்த வார்த்தை) உனக்கு மிகவும் சமீபமாயும், உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது. (உபா.3:14) மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று இயேசு கூறிய வார்த்தையை நாம் மறக்கலாகாது.

பரி.பவுல் அடிகளார் இந்த வார்த்தை விசுவாசத்தின் வார்த்தை என்றும், இயேசுவை விசுவாசிப்பதினாலேயே இரட்சிப்பு உண்டென்றும் குறிப்பிடுகிறார். (ரோ.10:8,9) பரி.யோவான் சுவிசேஷத்தில் ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்த வார்த்தை தேவனாய் இருந்தது. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று, அந்த வார்த்தை மாம்சமாகி, நமக்குள் வாசம் பண்ணினார். (பரி.யோவா.1:1-14) இங்கே வார்த்தை என்பது கடவுளாயிருந்து மனுஷ அவதாரம் எடுத்த இயேசு கிறிஸ்துவையே குறிக்கிறது. மேலும் யோவான் அவரை ஜீவவார்த்தை என்கிறார். (யோவா.1:1) இயேசு கிறிஸ்துவுக்குள் பாவ மன்னிப்பாகிய மீட்பை பெற்று, நாம் நித்திய ஜீவனுக்குள் செல்லும் பாக்கியத்தைப் பெற்றுக் கொள்ள தேவனுடைய அருள் நமக்கு அவசியமே.

2. வல்லமையை பொழியும் திருமறை :

கிறிஸ்து தேவ பெலனும் தேவஞானமுமாயிருக்கிறார் (1கொரி.1:24) பேதுரு, கொர்நேலியு, அவனைச் சார்ந்தவர்கள் மத்தியில் பேசிக் கொண்டிருக்கையில், வசனத்தைக் கேட்ட யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். (அப்.10:44) சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு (2தீமோ.4:2).

கர்த்தருடைய வார்த்தையில் வல்லமை உண்டு, (எரே.23:29) என் வார்த்தை கன்மலையை நொறுக்கும் சம்மட்டி, எபி.1:3இல் சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவர் என்று சொல்லியிருக்கிறது. 2பேது.3:5,7 பூர்வத்திலே தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும் பூமியும் உண்டாயின. அந்த உலகம் ஜலத்தினாலே அழிந்தது. இப்பொழுது இருக்கிற வானமும் பூமியும் அந்த வார்த்தையினாலே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறியிருக்கிறது. லூக்.4:36 அசுத்த ஆவிகளும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறதே என்று எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்.

வில்லியம் டிண்டேல் முழு வேதாகமத்தையும் ஆங்கிலத்தில் 15,000 பிரதிகள் அச்சடித்து விநியோகித்தார். அச்சு இயந்திரத்தோடு அவர்

துரத்தப்பட்டார். ஜெர்மனிக்கு வந்து இங்கிலாந்தில் உள்ளவர்களுக்கு துணிகள், மற்றப் பொருட்கள் மூலம் வேதாகமப் பிரதிகளை வைத்து அனுப்பினார். இவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. தன் சரீரம் சுட்டெரிக்கப்படுவதற்கு முன் ஜெபித்தார். ஆண்டவரே! இங்கிலாந்து தேச மன்னனின் கண்கள் திறக்கப்பட வேண்டும். அதேபோல் ஓராண்டிற்குள் மன்னன் மனந்திரும்பி அதிகார பூர்வமாக திருமறையை உபயோகிக்க உரிமையளித்தான்.

3. வழிநடத்தும் திருமறை :

நான் உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன் என்கிறார் நம் தேவன். தேவன் மலடியாய் இருந்த சாராளுக்கு குழந்தை பாக்கியத்தைத் தந்தார். தேவன் மனிதனோடு பேசினார். மேலும் அவர் நோவாவைப் பேழையிலிருந்து பாதுகாத்தார். ஆபிரகாம் பேர் சொல்லி அழைத்தார். மோசேயை உயர்த்தினார். இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுதலையாக்கினார். நம் பாவங்களுக்காக மரித்த இயேசு உயிரோடு எழும்பினார். பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியை ஊற்றினார். இவற்றையெல்லாம் நாம் வாசிக்கும்போது தேவன் எவ்வளவு ஞானமாக மனிதனை வழிநடத்தி, மனிதனுக்காகச் செல்படுகிறார் என்பதை எண்ணி நம் விசுவாசத்திலே நாம் பலப்படுவோம்.

முடிவுரை :

திருச்சபையின் இருண்டகாலம் என்று அழைக்கப்படும் சில மத்திய கால நூற்றாண்டுகளில் கர்த்தருடைய வார்த்தை பொதுமக்களிடம் வழங்கப்படாமல் மக்கள் புரிந்துகொள்ள முடியாத மூல பாஷைகளில் இருந்தது. இன்றோ உலகின் முக்கியமொழிகள் அனைத்திலும் பரிசுத்த வேதாகமம் கிடைக்கிறது. இன்றும் பல இன மொழிகளிலும் வேதத்தின் பகுதிகள் மொழியாக்கம் செய்யப்படுகின்றன. இப்பணியில் வேதாகம சங்கங்களும், மிஷனெரி இயக்கங்களும் இணைந்து செயல்படுவது வரவேற்கப்படத்தக்கதாகும். தேவ வசனமோ கட்டப்பட்டிருக்கலாகாது. அது எல்லா மக்களுக்கும் உரியது. எல்லாருக்கும் அவரவர் மொழியில் வழங்கப்பட வேண்டுமென்ற புத்துணர்ச்சி திருச்சபை சீர்திருத்தத்தின் விளைவே எனலாம்.

அருள்திரு P.V. வீரசிங்
ஆலங்குளம்

* * * * *

16.12.2007

கிறிஸ்து பிறந்த திருநாளுக்கு முன்வரும் 2ஆம் ஞாயிறு

(அட்வெந்து 3)

பொருள் : **இறைவன் நம்முடன்**

பாடங்கள் : ஏசா.11:1-10; ரோ.1:1-8; மத்.1:18-23

வசனம் : *எபிரெயர் 13:5பி.*

முன்னுரை :

பலவித முறையிலும் பல்வேறு வகையிலும் முற்காலத்தில் தீர்க்கதரிசிகள் மூலமாக நம் முன்னோரிடம் கடவுள் பேசினார் (எபி.1:1). கடவுள் தாமாக முன்வந்து தம்மக்களுடன் பேசுகின்றார். நம்மிடம் அன்பு கூர்ந்து அழைக்கிறார். உலகைப் படைத்து ஆளுகை செய்யும் இறைவன் இறைமக்கள் தங்களுக்கு தம்மை வெளிப்படுத்தினார் என்பதில் மகிழ்ந்தனர். "தம் ஊழியர்களாகிய தீர்க்கத்தரிசிகளுக்கு தம் மறைபொருளை வெளிப்படுத்தாமல் ஆண்டவர் ஏதும் செய்வதில்லை" ஆமோ.3:7.

இவ்வாறு பங்குபங்காகவும், வகைவகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின தேவன் இக்கடைசி காலத்தில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார் (எபி.1:1). இறைவன் எப்படி நம்மோடு இருக்கிறார் என்பதை கொடுக்கப்பட்ட வேதபகுதி மூலம் சிந்திப்போம்.

1. பின்னணியம் :

அருளுரை வசனமாக கொடுக்கப்பட்டுள்ள வசனத்தில் கடவுளின் நீங்கா பிரசன்னம் எப்போதும் நம்மோடிருப்பதை உணர்த்துகிறது.

"நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை; நான் உன்னை கைவிடுவதுமில்லை" எப்போது?

a) ஐந்து முக்கிய கிறிஸ்தவ பண்புகளை ஆக்கியோன் குறிப்பிடுகிறார். சகோதர சிநேகம், உபசரணை, துன்பப்படுகிறவர்கள் மீது பரிவு, பரிசுத்தம், பண ஆசையின்மை.

கிறிஸ்தவர்கள் இப்பண்புகளை கைக்கொண்டு பண ஆசையில்லாத வர்களாயிருந்து, இருப்பது போதுமென்ற திருப்தி நிலையில் வாழும்போது, கடவுளின் தொடர் பிரசன்னம் அதாவது இறைவன் நம்முடன் இருக்கிறார் என்பதை உணர முடியும் (யோசு.1:5).

இவ்விதமான ஆண்டவர் நம்மோடிருக்கும்போது நாம் யாருக்கும் எதற்கும் பயப்படத்தேவையில்லை. நம்மோடிருக்கும் ஆண்டவர் நமக்கு சகலத்தையும் செய்ய வல்லவர்.

இவ்வளவு வல்லமை நிறைந்த, காணக்கூடாத கடவுளின் தன்மையை, உண்மையை (Truth), மனுக்குலத்திற்கு அறிய வைத்தது இயேசுவின் பிறப்பு ஆகும். இயேசுவானவர் இறைவனின் திட்டங்களையெல்லாம் நிறைவேற்று கிறார். வரலாற்றில் செயலாற்றும் கடவுளின் வெளிப்பாட்டின் உச்சக்கட்டம் இயேசுவின் வாழ்க்கையில் நடந்தது, பிறப்பில் நடந்தது எனலாம்.

கடவுள் நம்முடன் இருக்கிறார் (மத்.1:18-25)

நாசரேத்தூரில் யோசேப்பிற்கு தூதன் தோன்றி இயேசுவானவர் பரிசுத்தாவியினால் உற்பவித்துப் பிறப்பார் என்று கூறி மூன்று முக்கிய காரியங்களை வெளிப்படுத்துகிறார்.

a) மரியாளிடத்தில் உற்பத்தியாயிருப்பது பரிசுத்தாவியினால் உண்டானது, b) அவருக்கு இயேசு என்று பெயரிடு, c) அவர் பாவங்களை மன்னிப்பவர். இயேசு என்பது எபிரெய வார்த்தையாகிய யோசுவாவிலிருந்து வந்தது. பொருள் யெகோவாவாகிய கர்த்தர் மீட்பர் என்பதாகும். வெகுகாலமுன்னே சங்கீதக்காரன் கேட்ட குரல் நிறைவாகிறது (சங்.130:8). தனக்காக அவர் வரவில்லை மனிதர்களுக்காகவும், நம்மை இரட்சிக்கவுமே அவர் வந்தார்.

a) பரிசுத்தாவியின் செயல்பாடு :

இதன் மூலம் இறைவன் மக்களோடு இருக்கிறார். இயேசுவின் பிறப்பு பரிசுத்தாவியின் செயல்பாடு "Mary was found to be with child of the Holy Spirit" என்பதாகும்.

யூதச் சிந்தனையின்படி பரிசுத்தாவி என்பவர் மனிதர்களுக்கு கடவுளின் உண்மைகளை கொண்டு வருகிறவறாகவும், தீர்க்கதரிசிகளுக்கு அவர்கள் என்ன சொல்ல வேண்டும் என்று போதிக்கிறவராகவும், கடவுளின் மனிதர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும், கடவுளின் உண்மைகளை தலைமுறைதோறும் கொடுக்கிறவராகவும், பரிசுத்தாவியின் செயல்பாடுகள் புரிந்து கொள்ளப்பட்டது.

இயேசுவானவர் கடவுளின் தன்மை என்ன என்பதையும் கடவுள் எப்படிபட்டவராக நமக்கு இருக்க வேண்டும் என்பதையும் வெளிப்படுத்துகிறார் (Jesus is the person who can tell us what God is like and What God means us to be). மேலும் மனிதன் எப்படி சமுதாயத்தில் வாழ வேண்டும் என்பதையும் இயேசுவின் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது. இயேசுவின் வருகைக்கு முன் கடவுள் என்பவர் ஒரு தெளிவற்ற

உருவமையில்லாத மற்றும் ஒரு புரியாத நிலையாகவே இருந்தது. இயேசு சொன்னார் என்னை காண்கிறவன் பிதாவை கண்டான் (மத்.14:9). இயேசுவில் தான் அன்பு, பரிவு, இரக்கம், மனதுருக்கம், கடவுளின் பரிசுத்தம் ஆகிய இவைகளை காணமுடிகிறது. 'இம்மானுவேலராக' ஆண்டவர் இயேசுவின் உருவில் நம்மிடையே வந்துதித்ததினால் தான் புரிந்து கொள்ள முடியாமல் இருந்த கடவுளை நம்மால் அறிந்து கொள்ள முடிந்தது. இயேசுவில் மட்டுமே மனித நேயம், நற்பண்புகள், கீழ்படிதல் போன்றவை காணப்படுகிறது. ஆகவே இயேசு இம்மானுவேலராக கடவுள் பற்றிய உண்மைகளையும் மனிதர்களை பற்றிய உண்மைகளையும் வெளிப் படுத்தவே வந்தார்.

கடவுளை பற்றிய உண்மைகளையும் மனிதனை பற்றிய உண்மைகளையும் வெளிப்படுத்த மட்டும் அல்ல அந்த உண்மைகளை பார்க்கும்போது அதை புரிந்து செயல்படவும் பரிசுத்த ஆவியானவர் வழி நடத்துகிறார். ஆகவே பரிசுத்த ஆவியானவர் நம் கண்களை திறந்தால்தான் நாம் இறைவன் நம்முடன் இருப்பதை காண முடியும். ஒரு நாவல் ஆசிரியர் உலகிலுள்ள பொருட்களையும், படங்களையும் அதிகமாய் நேசிக்கிற ஒரு பெண் பற்றி குறிப்பிடும்பொழுது அப்பெண் வாழ்வின் பாதி காலத்தையும் பெரும் செல்வத்தையும் அதற்காகவே செலவிட்டாள் என்றும், ஆனால் அது ஒன்றுமே அவளுக்கு திருப்தியில்லாமல் சலிப்படைகிறாள். அப்பொழுது ஒரு அறிவுள்ள, அறிவுடைய, அழகை ஆராதிக்கக்கூடிய பிரெஞ்சு தேச மனிதன் ஒருவன் அந்தப் பெண் பார்த்த அதே பொருட்களை அந்தப் பெண்ணோடு பார்த்தபொழுது அந்தப் பொருட்களின் கலை நயம் வேலைப்பாடு போன்றவற்றை விளக்கியபோது அந்தப் பெண் மிகவும் வியப்படைந்தாள். தான் பார்த்த அதே பொருட்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை புரிந்து கொண்டார். உலகில் வந்த இறைவனை சரியாக அறிந்து கொள்ளும்போது இறைவனை நம்மால் சரியாக புரிந்து கொள்ள முடியும். இம்மானுவேலராக நம்மில் வெளிப்பட்ட தேவனை அறிந்து கொள்ள நம்மால் முடியும். மேலும் அவரைப் போல மனிதனை மனிதனாக பார்த்து சேவை செய்ய முடியும் என்பது உறுதி.

அருள்திரு M. இராஜசேகரன்
பாளையங்கோட்டை

21.12.2007

புனிதர் தோமா திருநாள்

பாடங்கள் : ஏசா.49:8-13; யோவா.20:24-29; 1தீமோ.6:1-10

வசனம் : *"அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு" யோவா.20:27.*

முன்னுரை :

இயேசுவின் பன்னிரெண்டு சீடர்களில் ஒருவனாகிய தோமா கலிலேயாக் கடலில் மீனவனாக இருந்தவன் திதிமு என்னப்பட்ட தோமா, திதிமு என்பது கிரேக்கம்; தோமா என்பது எபிரெயம். இரட்டை என்பது இதன்பொருள் எதிலும் ஒருமனமின்றி இரட்டை மனதோடு அணுகுபவன் இந்தத் தோமா.

தோமாவின் நடபடிகளை யோவான் நற்செய்தி நூலில் மட்டும் காண்கிறோம். இருமனமுள்ளவன் தன் வழிகளில் எல்லாம் நிலையற்றவனாய் இருக்கிறான். இருமனமுள்ளவன் விசுவாசத்தில் உறுதியாய் நிற்பது கூடாத காரியம்.

அவிசுவாசம் :

"அவரோடே கூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள்" யோவா.11:16.

உயிர்த்தெழுதலைக் காண்போம் வாருங்கள் எனச் சொல்ல வேண்டியவன், மரிப்போம் வாருங்கள் என்று சொல்வது அவிசுவாச வார்த்தைகளே! இயேசு லாசருவை எழுப்பப் போகிறேன் என்கிறார். ஆனால், தோமாவோ இயேசுவை யூதர்கள் கொலை செய்து விடுவார்கள், நாமும் மரிக்க வேண்டியது தான் என்ற அவநம்பிக்கையோடு சொல்கிறான்.

"தோமா அவரை நோக்கி : ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றான்" யோவா.14:5.

இயேசு தான் போகிற இடத்தையும், வழியையும் ஏற்கெனவே பலமுறை தெளிவாக சொல்லி இருந்தும் அவர் பரலோகத்திலிருந்து வந்தவர் யோவா.3:13, பிதாவினிடத்திலிருந்து வந்தவர். முன் இருந்த இடத்திற்கே ஏறிப் போகிறவர் பரி.யோவா.6:62, தம்மை அனுப்பினவரிடத்திற்கே திரும்பிப் போகிறவர் பரி.யோவா.7:33, பிதாவின் வீட்டுக்குப் போகிறவர் என்பதை அறிந்திருந்தும், அறியோமே என்று கேட்பது அவிசுவாசத்தின் அடையாளம்.

இயேசு தோமாவே, நீ என்னைக் கண்டதினால் விசுவாசித்தாய், காணாதிருந்தும், விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார் (பரி.யோவா.20:29).

உயிர்த்தெழுந்த பிறகு இயேசுவின் சீடர்களுக்கு ஆண்டவர் காட்சி கொடுக்கிறார். சீடர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலைக் கண்டார்கள், தரிசித்தார்கள். ஆனால், தோமாவோ அச்சமயம் அங்கு இல்லை. மற்ற சீடர்கள் கூறியதைக் கேட்ட தோமா சீடர்களின் வார்த்தைகளையும், இயேசுவின் வல்லமையையும் விசுவாசிக்கவில்லை.

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" எபி.11:1.

தரித்து நடவாமல், விசுவாசித்து நடக்க வேண்டும். அற்புதங்களையும், அடையாளங்களையும் கண்டு விசுவாசிப்பது அவிசுவாசத்தை உறுதிப்படுத்துகிறது.

அவிசுவாசம் வேண்டாம் :

"ஆமை புகுந்த வீடும், ஆமினா புகுந்த வீடும் தேறாது" என்பது பழமொழி. அதுபோல அவிசுவாசம் புகுந்த வீடு கண்டிப்பாக தேறாது. ஆதாமும், ஏவாளும் இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடித்து விசுவாசிகளாக வாழ்ந்தபொழுது இறைவனைச் சந்திக்க, இறைவனோடு பேச, இறைவனோடு இருக்க வாய்ப்பு இருந்தது (ஆதி.3:6). ஆனால், அவர்கள் இறைவனை விட்டு விலகி, சாத்தானின் சத்தத்திற்கு இடம் கொடுத்தபோது அவிசுவாசிகள் ஆயினர். ஜீவனுள்ள தேவனின் பிசன்னத்திலிருந்து விலகி தங்களை மறைத்துக் கொண்டனர்.

அவிசுவாசம் (சந்தேகம்) குடும்பத்தில், சமுதாயத்தில், திருச்சபைகளில் மிகுதியான கேடு விளைவிக்கின்றது. கணவன், மனைவி ஒருவரையொருவர் சந்தேகிப்பதால் குடும்பத்தில் குழப்பம். சமுதாயத்தில் மக்கள் ஒருவரையொருவர் நம்பாததால், சமுதாயத்தில் குழப்பம். திருச்சபைகளிலே குழப்பத்திற்குக் காரணம் அவிசுவாசமே!

"ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்" (எபி.3:12).

அருள்திரு G. ஜீவராஜ்
ஆழ்வாநேரி

23.12.2007

கிறிஸ்து பிறந்த திருநாளுக்கு முன்வரும் ஞாயிறு

(அட்வெந்து 4)

பொருள் : கிறிஸ்து வருகையின் மகிழ்ச்சி

பாடங்கள் : மீகா.4:1-5; 1யோவா.4:7-21; லூக்.1:46-56

வசனம் : *1யோவான்.4:14*

முன்னுரை :

பரி.யோவான் தனது முதல் நிருபத்தில் கூறும்போது கிறிஸ்து உலக ரட்சகர் என்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம் எனக் கூறுகிறார். கிறிஸ்து ஒரு தனி மனிதராக ஒரு சமுதாயத்தில் பிறந்து ஒரு குறிப்பிட்ட நாட்டவராக கருதப்பட்டவர். ஆனால் அவரின் சிந்தனை, நோக்கம், வாழ்வு, பிறர்பால் கொண்ட அக்கறை, அன்பு, பாவக்கறையற்ற வாழ்வு, பிதாவின் சித்தம் நிறைவேற்றல், பாவமன்னிப்பு போன்ற காரியங்கள், அவரை உலக ரட்சகராக மாற்றியது. இதை பவுல் அடிகளார் கூறும்போது 1தீமோ.2:15இல் "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது" என்கிறார்.

1. உலகின் விடுதலை கிறிஸ்து : (மகிழ்ச்சி)

உலகில் விடுதலை கிறிஸ்துவினால் உண்டாகிறதினால் மனுமக்களுக்கு அவரின் வருகை மகிழ்ச்சியளித்தது. அவரின் பிறப்பின்போது தூதனின் கூற்று லூக்.2:10இல் "இதோ எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" இக்கூற்று அன்றைய மனித குலத்திற்கு மிகவும் மகிழ்ச்சியை அளித்தது. ஆனால் அதிகார வர்க்கம் கொண்டவருக்கு கலக்கத்தை உண்டு பண்ணியது (மத்.2:3).

கிறிஸ்துவின் வருகையை குறித்து லூக்காவில் வாசிக்கும்போது "இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தை பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார்" (லூக்.4:18,19) என்று கிறிஸ்து தான் வந்த நோக்கத்தை அறை கூவலாக சொல்லும்போது அவர் உலகின் விடுதலைக்கு வந்த நோக்கம் புரிகிறது. கிறிஸ்து பிறப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் அவரை உலக ரட்சகராக அறிவிக்கிறது. இவர்களை விடுதலையாக்கும் பணியை கிறிஸ்து நிறைவேற்றுகிறார். "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவா.14:6). யோவா.8:32இல் "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" யோவா.8:36இல் "குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே

விடுதலையாவீர்கள்" என்று தான் செய்யும் பாவ விமோசன பணியை கூறுகிறார். இதைப் பின்பற்றிய பவுல் சாட்சியாக கூறும்போது ரோ.8:2 "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம், என்னைப் பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கின்றே.

எபிரேய ஆக்கியோன் கிறிஸ்துவைக் குறித்து சொல்லும்போது "கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு கையினால் செய்யப்பட்டதாகிய இந்த சிருஷ்டி சம்பந்தமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும், ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து நித்திய மீட்பை உண்டு பண்ணினார்" எபி.9:11,12.

ஆகவே உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் வருகை உலகம் முழுவதிலும் மகிழ்ச்சியை கொடுக்கிறது.

2. உலகின் சமத்துவம் கிறிஸ்து (மகிழ்ச்சி) :

ஏசாயா, மீகா காலங்களில் சமூக, பொருளாதார சீர்குலைவுகள் அதிகம் காணப்பட்டது மக்கள் பராமரிப்பு சமத்துவம். பாதுகாப்பு இல்லாமல், வாழ்ந்து வந்தார்கள், அவர்களின் எதிர்பார்ப்பு மேசியா ஒருவர் வருவார் எங்களை நீதியாய் நியாயம் தீர்ப்பார் என்று எண்ணினார்கள். அவர்களின் எதிர்பார்ப்பு கிறிஸ்துவில் நிறைவேறியது. மீகா.4:4இல் கூறும்போது "அவனவன் தன்,தன் திராட்சச் செடியின் நிழலிலும், தன்,தன் அத்திமரத்தின் நிழலிலும் பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான்" என்றும் மீகா.4:3இல் "ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதிபட்டயம் எடுப்பதில்லை. இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை" என்ற வாக்கியங்கள் கிறிஸ்துவின் வருகை ஒரு பராமரிப்பும் அடைக்கலம் நிறைந்த பாதுகாப்புமாய் தோன்றுகிறது. இதை சங்கீதக்காரன் கூறும்போது சங்.30:11இல் "என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப் பண்ணினீர் என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும் படியாக நீர் என் இரட்டைக் களைந்து போட்டு மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைக் கட்டினீர்" என்று கூறுகிறான். ஏசாயாவில் கிறிஸ்துவின் வருகை கூறப்பட்டுள்ளது ஏசா.61:3 "சீயோனிலே துயரப்பட்டவர்களை சீர்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும் ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும் அவர் என்னை அனுப்பினார்" கிறிஸ்துவின் வருகை ஒடுக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பும், பராமரிப்பும் கொடுப்பதால் அவர்கள் ஆண்டவரின் வருகையால் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

3. உலக நம்பிக்கையின் வாசல் கிறிஸ்து : (மகிழ்ச்சி)

உலகில் வாழும் மக்கள் வருங்காலத்தை குறித்து நம்பிக்கை அற்றவர்களாக வாழ்கிறார்கள். அவர்களுக்கு வருங்காலத்தை குறித்து நம்பிக்கையை கொடுப்பவர் கிறிஸ்து. நம்பிக்கையற்ற நிலையில் வாழ்ந்த ஓசியா காலத்து மக்களுக்கு தீர்க்கன் கூறும் நம்பிக்கை ஓசியா 2:15இல் "அவ்விடத்திலிருந்து அவளுக்கு அவளுடைய திராட்சத் தோட்டங்களையும் நம்பிக்கையின் வாசலாக ஆகோரின் பள்ளத்தாக்கையும் கொடுப்பேன்.

அப்பொழுது அவள் அங்கே தன் இளவயதின் நாட்களிலும் தான் எகிப்து தேசத்தில் இருந்து வந்த நாட்களிலும் பாடினது போல் பாடுவாள் இங்கு புதுவாழ்வு கொடுக்கப்படுவதை பார்க்கிறோம். ஆண்டவரின் தாய் மரியாள் தன்னைக் குறித்துச் சொல்லும்போது லூக்.1:48இல் "அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார்; இதோ இது முதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்" என்கிறார் தான் அடிமை, ஒன்று மற்ற ஏழை, எனது எதிர்காலம் எப்படி ஆகுமோ? என்ற அச்சம் நிறைந்த உள்ளத்தில் ஒரு நம்பிக்கையை துளிர்க்கச் செய்தது, கிறிஸ்துவின் வருகை. பயத்தோடு வாழும் உலக மக்களுக்கு 1யோவா.4:18இல் "அன்பிலே பயம் இல்லை, பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும். பயமானது வேதனையுள்ளது. பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல" என்கிற வார்த்தை அன்பில் பூரணப்பட வேண்டும் என்ற நம்பிக்கையை உண்டாக்குகிறது. 1யோவா.4:20 "தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூறாமலிருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூறுவான்" என்ற வாக்கியம், சகோதரனிடம் அன்பு கூற வேண்டும், அப்போது தான் கடவுளிடமும் அன்பு கூற முடியும் என்ற நம்பிக்கையை தூண்டுகிறது. உலகின் நம்பிக்கை கிறிஸ்துவாக இருப்பதால் உலக மக்களுக்கு கிறிஸ்துவின் வருகை மகிழ்ச்சியைத் தருகிறது.

முடிவுரை :

கிறிஸ்துவின் வருகை அவரை பின்பற்றுகிற மக்களுக்கு மட்டுமல்ல, உலகில் வாழும் அனைத்து மக்களுக்கும், எல்லா சிருஷ்டிகளுக்கும் மகிழ்ச்சியைத் தருவதாகும். பவுல், "எல்லாவற்றிலும் மனரம்மியமாக இருக்கக் கற்று கொண்டேன்" என்பது போல நாமும் கிறிஸ்துவின் வருகைக்காக எல்லாவற்றிலும் ஆயத்தமாக இருப்போம். "இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்" இது ஏசாயாவின் கூற்று "உலகில் வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளி" இது யோவானின் கூற்று அந்த ஒளி உலகை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆற்றுகிறது. "மகிழ்ச்சியாய் இருப்பதும் நலமானதைச் செய்வதும் அல்லாமல் கர்த்தர் உன்னிடத்தில் வேறு எதை எதிர்பார்க்கிறார்". ஆமென்.

அருள்திரு W. சற்குணம், மேலப்பாளையம்

25.12.2007

கிறிஸ்து பிறந்த திருநாள்

பாடங்கள் : ஏசா.9; லூக்.2:15-20;

முன்னுரை :

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பாலஸ்தீன நாட்டில் வயல்வெளியில் தங்கள் மந்தையை காத்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது தேவ தூதன் ஒருவன் தோன்றினான். மேய்ப்பர்கள் பயந்தனர். தூதன் மேய்ப்பர்களைப் பார்த்து, 'பயப்படாதிருங்கள்' இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் என்றான். உடனே பரமசேனையின் திரள் தோன்றி முதல் கிறிஸ்தவ கீதத்தை பாடினர். உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்பதாகும். தூதர்கள் சென்றபின் மேய்ப்பர்கள் ஒருவரையொருவர் நடந்ததாக அறிவிக்கப்பட்ட இந்த காரியத்தைப்பார்ப்போம் என்று சொல்லி :

1. தீவிரமாய் போனார்கள் (went with haste)

தங்களுக்கு உலக இரட்சகர் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார் என்ற செய்தியை கேட்டு அப்படியே சும்மா இருந்து விடவில்லை. உலக ரட்சகரைப் பார்க்க தீவிரமாய் போனார்கள். இயேசு பிறந்த தினத்தை கிறிஸ்மஸ் பண்டிகையாக கொண்டாடுகிறோம். புத்தாடைகள் அணிந்து பலகாரங்கள் பரிசுகள் வழங்கி, பெற்று கொண்டாடுகிறோம். ஆனால் அந்த இயேசுவை நம் வாழ்வில் கண்டு மகிழ தீவிரப்பட்டிருக்கிறோமா. அவரைக் கண்டு நம் வாழ்வை அவருக்கு அர்ப்பணித்து வாழ்கிறோமா? இல்லையென்றால் நமது வாழ்வில் தீவிரப்படுவோம்.

2. எப்படிப்பட்டவர் என கண்டனர் (வச.16)

மரியாளையும், யோசேப்பையும் முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள். இயேசு பாலகனைக் கண்டு மகிழ்ந்தார்கள். அவரை கண்டிருப்பவர்கள் தங்கள் வாழ்வை அர்ப்பணித்து அவரது கற்பனைகளின்படி நடக்கிறார்கள். அநேகர் அவரைக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் வாழ்வில் காணாதவராயிருக்கிறார்கள். காணாவிட்டால் அவருடைய மகிழ்ச்சியை எப்படி பெற முடியும். நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்வில் அவர் எப்படிப்பட்டவர் என்பதைக் காண வேண்டும். லூக்.19:1-9 சகேயு, இயேசுவைக்காண ஆசையாக இருந்தான். பிரயாசப்பட்டான். இயேசு அவன் நினைவைக் கண்டு சகேயுவே இறங்கிவா, இன்றைகு நான் வீட்டில் தங்க வேண்டும் என்றார். பாவ அறிக்கை செய்தான். அவனும் அவர் வீட்டாரனைவரும் இரட்சிப்படைந்தார்கள். இயேசுவை காணாவிட்டால் நாம் ஆவிக்குரிய வாழ்வில் விழி இழந்தோர் ஆவர்.

ஒரு மனிதன் ஒரு கண்பார்வையற்ற மனிதரிடம் ஒரு குழந்தை, "பால்" தொண்டையில் விக்கி மரித்து போனது என்றாராம். குருடர் அவரிடம் பால் எப்படி இருக்கும் என்று கேட்டார். பால் கொக்கு போல் வெண்மையாக இருக்கும் என்றார். குருடர் கொக்கு எப்படி இருக்கும் என்றார். அதற்கு அவர் தன வலது முன் கையை உயர்த்தி ஐந்து விரல்களையும் மடக்கி வைத்து பார்வையற்றவரிடம் கையைத் தடவிபார்க்கச் சொல்லி காண்பித்து, கொக்கு இப்படித்தான் இருக்கும் என்றாராம். அப்படியா, கொக்குவைப் போல் பால் இருக்குமால் குழந்தை பால் விக்கி இதுபோலதான் அநேகர் ஆண்டவரை சரியாக கண்டு அறிந்து வாழ முடியாதவர்களாக காணப்படுகிறார்கள். நம் மிஷனெரிமார்கள் இயேசுவைக் கண்டதினால் அவரை அறிந்து அவரை நம்மிடத்தில் சாட்சியாக அறிவித்தனர்.

3. தீவிரமாய் பிரசித்தம் பண்ணினார்கள் (வச.17)

இயேசுவைப் பற்றி சொல்லப்பட்ட செய்தியை, கண்ட காட்சியை மற்றவர்களுக்கு பிரசித்தம் பண்ணினார்கள். தங்களுக்குள்ளே அடக்கி வைக்கவில்லை. உயிர்த்த இயேசுவைக் கண்ட அப்போஸ்தலர்கள் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியைப் பெற்ற பின்பு யூதர்மத்தியில், நீங்கள் ஜீவாதிபதியை கொலை செய்தீர்கள். தேவன் அவரை உயிர்த்தெழச் செய்து இரட்சகராக உயர்த்தினார். நாங்கள் அதற்கு சாட்சிகள் என்று கூறி அறிவித்தார்கள். அந்த இயேசு நம் உள்ளத்தில் பிறக்கவும், நாம் அவரை பறைசாற்றவும் நம்மை அர்ப்பணம் செய்வோம்.

அநேக ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வாலிபன் ஒருநாள் காலையில் இரயிலில் சென்னைக்கு பிரயாணம் பண்ணிக் கொண்டிருந்தான். அவனருகில் ஒரு வயதான பாட்டியும் அமர்ந்து பயணம் செய்தார்கள். அந்த வாலிபன் பி.எஸ்.சி. இறுதி ஆண்டு பரீட்சை எழுதி விட்டு தேர்வு முடிவுக்காக காத்துக் கொண்டிருந்தான். அந்த நேரத்தில் செய்தி தாளில் தேர்வு முடிவை பார்த்துக் கொண்டிருந்தான். II Classஇல் தன் பெயரைப் பார்த்தான். அவர் பெயர் இல்லை. III Class இல் பார்த்தான் அவன் பெயர் இல்லை. கலக்கம் அடைந்தான். சற்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு Ist Classஇல் பார்த்தான் அவன் பெயர் இருந்தது. மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். தனக்குள்ளே மகிழ்ச்சியை அடக்கி வைக்க முடியவில்லை. பாட்டியம்மாவிடம் பாட்டியம்மா நான் Ist Classஇல் தேர்ச்சி பெற்று விட்டேன் என்று சொல்லி மகிழ்ந்தான் அந்த பாட்டியும் மகிழ்ச்சி அடைந்தார்கள். இதைப்போல் மேய்ப்பர்களும் அதைச் செய்தனர்.

நாம் அந்த உலக இரட்சகரை நம் வாழ்வில் காண தீவிரமாய் பிரயாசப்பட வேண்டும், கண்டு மற்றவர்களுக்கு அவரை அறிவித்து மகிழ வேண்டும். அதற்கு நம்மை அர்ப்பணிப்போம்.

அருள்திரு D. அருமைநாயகம் பிச்சைமணி, இட்டமொழி

26.12.2007

புனிதர் ஸ்தேவான் திருநாள்

பாடங்கள் : 2நாளா.24:20-22; அப்.7:55-60; மத்.10:16-22

முன்னுரை :

சீஷர்கள் 12 பேரும் இறைப்பணியோடு கூடவே கைவிடப்பட்டவர்கள், விதவைகள் என வாழ்வில் கஷ்டப்படுவோருக்கு திருச்சபையின் மூலமாக உணவு வழங்கி பராமரித்து வரும் சமுகப்பணியும் செய்து வந்தனர். அதில் பாரபட்சம் காட்டப்படுவதாகவும், சரியாக செய்யப்படவில்லை என கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட கிரேக்கர்கள் கூறினர். அதைச் சரிப்படுத்த 12 சீஷர்களும் இந்த நல்லப் பணிக்கென்று 7 பேர் கொண்ட ஒரு குழுவை நியமித்து அவர்களை அபிஷேகித்து இந்த சமுகப் பணியினை அவர்கள் வசம் ஒப்படைத்தனர். அந்த ஏழுபேரில் தலைசிறந்தவராக ஸ்தேவான் காணப்பட்டார். அப்.6:8 "ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்" என திருமறை கூறுகிறது. நம்முடைய சிந்தனைக்காக அப்.7:59,60 ஆகிய வசனங்களை நாம் எடுத்துக் கொள்வோம்.

1. கடவுளை சார்ந்து இருந்தான் :

அப்.7:59 "கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக் கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள்". தங்களுக்கு ஆபத்து வருகின்றபோது அநேகர் செய்கிற காரியம் தங்களையும் தங்களது சொந்த பந்தங்களையும், உறவினர்களையும் நம்பியிருப்பதாகும். சிலர் மட்டுமே இறைவனைச் சார்ந்து கொள்வர். அந்த வரிசையில் திருமறையில் நாம் பார்க்கும்போது முதலில் தாவீது அரசன், அடுத்து இயேசு நாதர், பின்னர் ஸ்தேவான் ஆவார். அதற்காக திருமறை வசனங்கள் உண்டு. சங்.31:5 "உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" எதிரிகள் தாவீதுக்கு விரோதமாக எழும்பினபோது அவர்ஏறெடுத்த ஜெபம். லூக்.23:46 "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" சிலுவையில் தொங்கினவராக மரிக்க இருந்தவேளை இயேசு இதைக் கூறினார்.

அப்.7ஆம் அதிகாரத்தில் நாம் பார்க்கும்போது ஸ்தேவானை தண்டிக்க ஆலோசனை சங்கம் கூடியிருக்கிறது. பொய் சாட்சிகளும் ஸ்தேவானுக்கு விரோதமாக நிறுத்தப்பட்டு இருக்கிறது (அப்.6:12,13). அந்த நிலமையிலே உயிருக்கு பயம் இல்லாதவராக முற்பிதாவாகிய ஆபிரகாம் முதல் பரலோகத்தில் வீற்றிருக்கும் இயேசுநாதர் வரை நடந்த ஒவ்வொன்றையும் பட்டியலிட்டு உரையாற்றுகிறார். அதோடு மட்டும் இல்லாமல் வணங்கா கழுத்துள்ளவர்கள் இருதயத்திலும், செவிகளிலும் விருத்தசேதனம்

பெறாதவர்கள் பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நிற்கிறவர்கள், கொலை பாதகர்கள், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாதவர்கள் என அடுக்கடுக்காக தைரியமாக அவர்கள் தவறுகளை சுட்டிக்காட்டுகிறார் (அப்.7:51-53). இந்த செயல் ஊழியர்கள் உயிருக்குப் பயப்படாமல் சமுதாயத்திலும், திருச்சபையிலும் நடைபெறும் தவறுகளை சுட்டிகாட்டி கடவுளைமட்டும் சார்ந்து இருக்க வேண்டும் என்பதை ஸ்தேவான் மூலமாக நமக்கு கற்று தருகிறது.

2. எதிரிகளுக்காக மன்றாடினான் :

அப்.7:60மு "அவனோ, முழங்கால்படியிட்டு: ஆண்டவரே, இவர்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்". ஸ்தேவானுடைய செயல்பாடுகளைப்பார்க்கும்போது இயேசுநாதர் மரிக்கும் தருவாயில் செய்ததை அப்படியே கடைப்பிடிப்பதுபோல் உள்ளது. ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவைப் பின்பற்றி வாழவே அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதைத்தான் ஸ்தேவான் செய்து காட்டியுள்ளார்.

இயேசு சொன்னது மத்.5:44 "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நித்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர் களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்". இயேசு செய்தது : லூக்.23:34 "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்".

3. இரத்த சாட்சியாக மரித்தான் :

அப்.7:60பி "நித்திரையடைந்தான்" முதுமையினிமித்தமோ, நோய்வாய்ப்பட்டு மரிப்பதோ இயல்பு, ஆனால் ஸ்தேவான் கல்லெறியப்பட்டு இரத்தசாட்சியாக ஆண்டவருக்கென்று மரித்திருப்பது பெருமைக்குரிய காரியமாகும். இரத்த சாட்சியாக மரித்த அநேக அப்போஸ்தலர்கள் உண்டு, அவர்களுக்கு மரணம் நேர்ந்தவிதம் திருமறையில் கூறப்படவில்லை. ஆனால் அதே நேரத்தில் ஸ்தேவானுடைய மரணம், அவர் கல்லெறியப்பட்டு மரித்த விதம் திருமறையில் இடம்பெற்றிருப்பது அவருடைய ஊழியத்திற்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம் என்றே நாம் கூறமுடியும்.

கல்லெறிந்துகொள்வது பழைய ஏற்பாட்டு முறை, யாருக்கு இந்த தண்டனையென்றால் - லேவி.24:13-16 கர்த்தருடைய நாமத்தை, நிந்திக்கிற மற்றும் தூஷிக்கிறவர்களுக்கு - உபா.17:3-7 விக்கிரகத்தை வழிபடுகிறவர்களுக்கு பொய்யான குற்றம் சாட்டப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தான். ரோ.8:38,39 "மரணமானாலும், ஜீவனானாலும் கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மை பிரிக்க முடியாது" என பவுல் கூறுகிறது போல உறுதியாக ஆண்டவருக்காக வாழ்வோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக.

அருள்திரு A. பால் ஜெபராஜ், தென்காசி

27.12.2007

புனிதர் யோவான் திருநாள்

பாடங்கள் : யாத்.39:18-23; 1யோவா.1:1-4; யோவா.21:20-25

முன்னுரை :

தூய யோவான் கலிலேயா கடல் பகுதியில் மீன் பிடிதொழில் செய்த செபெதேயுவின் மகன், இவருடைய தாய் இயேசுவுக்கு பணி செய்த சலோமி; சகோதரன் இயேசுவின் சீஷரில் ஒருவரான யாக்கோபு. இவர் யோவான்ஸ்நானகனின் சாட்சியைக் கேட்டு இயேசுவின் அழைப்பினால் அவருக்கு சீஷரானார். இயேசு இவரையும் யாக்கோபுவையும் அழைத்த போது அப்படியே வலைகளை விட்டு அவரைப் பின்சென்றார். இயேசுவுக்கு பிரியமானவர் சீஷர்களில் இளைஞருமானவர். இயேசுகிறிஸ்து இவரையும் யாக்கோபையும் இடிமுழக்கத்தின் மக்களென்ற பெயரை சூட்டினார் (மாற்.3:17) இவர் யோவான் நற்செய்தியில் 1,2,3 நிருபங்களையும் வெளிப்படுத்தின விசேஷம் என்னும் தரிசன புத்தகத்தையும் எழுதினார்.

யோவானைக் குறித்த ஏழு காரியங்கள் வேதத்தில் காணலாம்

1) இயேசுவுக்கு அன்பாய் இருந்தவர், 2) இயேசு சிலுவையில் மரிக்கும்போது கூடவே இருந்தவர், 3) கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு சாட்சியாய் இருந்தவர், 4) எருசலேமில் சபையின் தூணாயிருந்தவர், 5) எபேசு சபையின் தலைவராக இருந்தவர், 6) ரோம அரசர் கொதிக்கும் கொப்பரையிலிட்டு கொல்ல முயற்சித்தும் எச்சேதமுமின்றி தப்பி பிழைத்தவர், 7) சிறைசாலையிலிருந்து விடுதலை பெற்றபின் எபேசு சபையில் ஊழியம் செய்து இயற்கையாக தம் நூற்று ஒரு வயதில் மரணமடைந்தார்.

பரிசுத்த யோவானின் விசுவாசமும், செய்தியும்

இவருடைய நற்செய்தியில் இயேசுவே இரட்சிப்பு, சத்தியம், வழி, வாய்மை, வாழ்வு, ஐக்கியம், வெளிச்சம், அப்பம், திராட்சை செடி என்று இயேசு தம் வாயினால் சொல்லிய வார்த்தைகளை 1,2,3 யோவான் நிருபத்தில் மிகத் தெளிவாகவும், அழுத்தமாகவும் கண்களால் கண்டது, உற்றுப் பார்த்தது, தொட்டது என்று வலியுறுத்தி எழுதுவது, அவருக்கு ஆண்டவரில் இருந்த நெருக்கமான உறவையும் விசுவாசத்தையும் நமக்கு காட்டுகிறது. நற்செய்தி அவரின் அனுபவத்தையும், நிருபங்கள் அவருடைய உள்ள எழுச்சி செய்தியாகவும், தரிசன புத்தகம் கர்த்தர் அவரை உயர்த்திய கர்த்தரின் கிருபையையும் காட்டுகிறது. யோவான் என்றால் கடவுளின் அருள் பெற்றவர் என்பது "தமக்கு பயந்து, தமது கிருபைக்கு காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாய் இருக்கிறார்.

யோவானின் ஊழியத்தில் அன்பு :

"தேவன் அன்பாய் இருக்கிறார்" நம் பிதா அன்புள்ளவராய் இருக்கிறது போல, அவரின் பிள்ளைகளாகிய நாமும் அன்புள்ளவர்களாய் இருத்தல் அவசியம். நம் பரம தகப்பனை போல் நாமும் இருக்க வேண்டாமா? நம் கிறிஸ்து மார்க்கத்தின் சாரம் "அன்பு" என்னும் மூன்று எழுத்தில் தொகையாயிருக்கிறது. அவருடைய வசனத்தை கைக்கொள்ளுகிறவனிடத்தில் அன்பு பூரணப்பட்டிருக்கும். அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும். 1யோவா.2:5-6 தன் சகோதரனிடத்தில் அன்பு கூருகிறவன் ஒளியிலே பிதாவின் . . . அன்பில்லை (1யோவா.2:10,15) இவரின் ஜீவியத்தில் வேறொரு சம்பவமும் அன்பை அறிவிக்கும் எபேசு சபையில் ஓர் விசுவாசி அங்குள்ள கள்ளர் கூட்டத்தில் சேர்ந்து விடவே இதைக் கேள்விப்பட்ட அவர் கொடிய வியாதியுள்ளவராய் இருந்தும், உடனே அவனிடம் சென்று அவனுக்கு புத்தி சொல்லி, அவனை மனம்மாற செய்தார். இழந்து போனதை தேடவும் இரட்சிக்கவும் பரலோகம் விட்டு இப்பூமி வந்த இயேசுவின் அன்பு யோவானிடம் காணப்பட்டதால் தவறிப் போன ஆத்துமாவை மலைப்பிரதேசம் சென்று மந்தையில் மறுபடியும் சேர்ந்தது இவரது அன்பின் ஊழியமாய் திகழ்கின்றது.

இயேசுவின் மார்பில் சாய்ந்து கொண்டிருந்த சீஷன் :

மகா துக்கமும் சஞ்சலமுமான சமயம், ஆண்டவர் தங்களை விட்டு பிரிந்து போகும் நேரம் சமீபமாயிற்று (யோவா.12:23) சீடர்கள் அவர்கள் மேல் கொண்ட எண்ணமும், நம்பிக்கையும் அகன்று போகும் சமயம்; அந்த துக்ககரமான வேளையில் யோவான் காணப்பட்ட இடம் அருமை ஆண்டவர் இயேசுவின் மார்பில்; அன்பும், உருக்கமும் நிறைந்த அவர் மார்பில் சாய்ந்து கொண்டிருந்தார். தேவ வல்லமை நம் பலவீனங்களில் நம்மை தாங்குகிறது. அன்பு நிறைந்த தேவ வல்லமை எவ்வளவு மேலானது! திகிலும், தீவிரமும் நிறைந்த இக்காலத்தில் நம் கவலைகள், துக்கங்கள், பாவபாரங்கள் அனைத்தையும் அவர் மேல் போட்டுவிட ஆசைப்படுகிறார். அவர் தம் பாரங்களையும் சுமக்கிறவராயிருக்கிறார் (மத்.11:28-30).

இவரிடம் நாம் கற்றுக்கொள்ளும் பாடம் :

இயேசுவை மெய்யாய் நேசிக்கும் அன்பனாய் இரு, உன் அன்பு நீ அவருக்கு செய்யும் ஊழியத்தில் நிறைவேறட்டும். "கிரியை இல்லாத விசுவாசம் செத்ததாய் இருக்கிறது". உன் கவலைகளையும், பாவ பாரத்தையும் சுமக்கும் சுமை தாங்கியாய் அன்பர் இயேசு உன்னோடிருப்பார் ஆமென்.

அருள்திரு V. காந்தையா
புதுப்பேட்டை

28.12.2007

குற்றமில்லா பாலகரின் திருநாள்

பாடங்கள் : ஆதி.37:13-20; வெளி.14:1-5; மத்.2:13-18

குற்றமற்றவர்கள் துன்பப்படுவது ஏன் என்ற கேள்வி வேத புத்தகத்தில் பல பகுதிகளில் காணப்படுகிறது. குறிப்பாக சங்கீத புத்தகத்திலும், யோபு நூலிலும் இதைப் பார்க்கிறோம். குறிப்பாக பாலகர்கள் சிறுபிள்ளைகள் துன்பங்களை அனுபவிப்பது மிகவும் வேதனையான செயலாகும். சிறுபிள்ளைகளுக்கு நேரிடும் துன்பங்கள், அவர்களை உயர்த்த நமக்குள்ள வாய்ப்புகள் ஆகியவற்றை இச்செய்தியில் காணலாம்.

1. குற்றமில்லா பாலகராகக் கொல்லப்பட்டவர்கள் :

இயேசுவை அழிக்கும் நோக்கத்தோடு பெத்தலகேமிலும் அதன் சுற்றுப்புறங் களிலுமுள்ள இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் பிள்ளைகளை ஏரோது கொலை செய்கிறான் (மத்.2:16). ஆனால் இந்த ஏரோது மாத்திரமல்ல வரலாற்றின் அநேக காலகட்டங்களில் பிள்ளைகள் கொலை செய்யப்பட்டது வரலாற்றில் களங்கமாகும்.

அவற்றில் சில தற்கால உதாரணங்கள் :

1) நமது நாட்டின் சூத்திரன், தாழ்த்தப்பட்டவனின் பிள்ளைகள் படிக்கக்கூடாது என்ற நிலை ஆதிக்கச் சமுதாயத்தினரால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

2) ஆப்கானிய தாலிபான்கள் பெண் பிள்ளைகள் எவருமே படிக்கக் கூடாது என்று சட்டம் இயற்றியிருந்தனர்.

3) நமது நாட்டில் கூலி வேலைகளுக்கு சிறுபிள்ளைகளை வைத்துக் கொள்வதின் மூலம் அவர்களின் கல்வி, முன்னேற்றம் பாழாக்கப்படுகிறது.

4) பிறந்த பெண் குழந்தைகளை ஒரு சில நாட்களில் கொல்வதும், கருவில் பெண் பிள்ளை என தெரிந்தால் அழிப்பதும் ஏரோதின் செயல்தானே!

2. குற்றமில்லாப் பாலகராக உயர்த்தப்பட்டவன் :

ஆதியாகமம் 37ஆம் அதிகாரம் முதல் 50ஆம் அதிகாரம் வரையுள்ள யோசேப்பின் வரலாற்றில் குற்றமில்லாதிருந்தாலும் தன் சகோதரராலும், போத்திபாரின் மனைவியாலும் குற்றம்சாட்டப்பட்டு அடிமைத்தனத்தையும், சிறைச்சாலையையும் அனுபவித்ததைப் பார்க்கிறோம். ஆனாலும் கடவுள் அவனோடிருந்தபடியால் அவன் காரியம் வாய்த்தது; அவன் உயர்த்தப்பட்டான் (ஆதி.39:2; 41:38-40) அவன் உயர்விலும் பானபாத்திரக் காரனின் பங்கு இருந்தது (ஆதி.41:9-13) இதே போன்று இன்றும் சமுதாயத்திலிருக்கிறது.

முடிவுரை :

குற்றமில்லா சிறு பிள்ளைகளுக்கு இடறல் உண்டாக்காமலிருப் போமாக! அவர்கள் உயர்த்தப்பட மனிதாபிமானத்தோடு நற்பணி செய்வோமாக! ஏரோதைப் போன்ற அரக்க மனநிலைமையைத் தவிர்த்து தாயுள்ளத்தோடு சிறுவர்களுக்காக ஜெபிக்க, உழைக்க நம்மை அர்ப்பணிப்போம்.

அருள்திரு J.P.M. வசந்தகுமார், மகாராஜநகர்

30.12.2007

கிறிஸ்து பிறந்த திருநாளுக்குப் பின்வரும் 1ஆம் ஞாயிறு

(ஸ்தோத்திர ஞாயிறு)

பொருள் : **கர்த்தருக்கு ஸ்தோத்திரம்**

பாடங்கள் : **யாத்.33:12-33; 2கொரி.9:6-15; லூக்.17:12-19**

வசனம் : *சங்கீதம் 66:20*

முன்னுரை :

எண்ணில் அடங்கா ஸ்தோத்திரம் - தேவா
என்றென்றும் நான் பாடுவேன்
இந்நாள் வரை என் வாழ்விலே
நீர் செய்த நன்மைக்கே

2007ஆம் ஆண்டின் இறுதிநாட்களில் இருக்கின்ற நமக்கு மேற்கண்ட பாடல் வரிகள் எவ்வளவு அர்த்தமுடையவனாக இருக்கின்றன. நாம் பெற்ற நன்மைகளுக்காக கர்த்தருக்கு எண்ணிக்கைக்கு அடங்காத ஸ்தோத்திரங்களை ஏறெடுக்க கடமைப்பட்டுள்ளோம். சிலர் யோசித்துப் பார்க்கலாம் அப்படியென்ன பெரிய நன்மைகளை ஆண்டவர் செய்தார்? உறவினர்கள், என் நண்பர்கள், அருகிலுள்ளவர்கள் பெற்றுக் கொண்ட நன்மையளவுக்கு நான் பெறவில்லையே. நானும் ஆண்டவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டுமா? என்றெல்லாம் யோசிக்கலாம். ஏன், எதற்கு, ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும் என்று யோசிக்கிறோமோ? அதனைக் குறித்து சிந்திப்போம்.

1. இயற்கை சூழல் :

'பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது'. அநேக நேரங்களில் நாம் இதனை மறந்து விடுகிறோம். இயற்கைச் செல்வங்கள், காற்று, நீர், நிலம் எல்லாம் நமக்கு கையளிக்கப்பட்டது என்று எண்ணுகிறோம். அதே நேரத்தில் இயற்கை கொந்தளிப்புகள் வரும்போது ஆண்டவரை நோக்கிப் பார்க்கிறோம். எனவே கடந்த ஆண்டு முழுவதுமாக இயற்கையை நமக்கு சாதகமாக அமைத்துத் தந்து நம்முடைய ஜீவனை நமக்கு பரிசாக அளித்திருக்கின்ற ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். பூமியின் நற்பலன்களை தந்த கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். இயற்கை சீற்றங்கள் இல்லாமல் நம்மை பாதுகாத்த ஆண்டவருக்கு நன்றி செல்லுவோம்.

2. கர்த்தரின் கிருபைகள் :

"என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்" (யாத்.33:14) என்று திருவுளம் பற்றின ஆண்டவர் அவருடைய அளவில்லாத கிருபையினால்

அவருடைய பிரசன்னத்தை நம்மோடு வைத்திருந்து கடந்த ஆண்டு முழுவதுமாக நம்மை கண்மணிபோல வழிநடத்தினார் அல்லவா! ஆண்டவருக்கு நன்றி சொல்லுவோம். மீண்டும் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் "எவன்மேல் கிருபையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன் மேல் கிருபையாயிருப்பேன்; எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன் மேல் இரக்கமாயிருப்பேன்" (யாத்.33:19). ஆண்டவர் இந்த 2007ஆம் ஆண்டில் நம்மீது கிருபையாயிருந்தாரா ஆம். இல்லை என்றால் நிர்மூலமாகியிருப்போம். அவர் நம்மீது கிருபையாயிருந்ததற்கு காரணம் உண்டு என்ன காரணம் தெரியுமா? "நாம் அவருக்கு விசேஷித்தவர்கள்" (யாத்.33:16). எனவே தான் அவர் நம்மீது இரக்கம் காட்டி இந்த ஆண்டு முழுவதும் நம்மை வழிநடத்தினார். இம்மாபெரும் செயலை எண்ணி கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்.

3. வேண்டுதலுக்கு - பதில் கொடுத்ததால் :

பத்து தொழுநோயாளிகள் இயேசுவை சந்தித்து தங்களுக்கு இரங்கும்படியாக விண்ணப்பம் பண்ணினார்கள் (லூக்.17:12,13). ஆண்டவரும் இரங்கி அவர்களை குணப்படுத்தினார். குணமானவர்களில் ஒருவன் மட்டும் ஓடி வந்து "ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான்" (லூக்.17:16) என்று அறிகிறோம். இன்று நாமும் ஆண்டவரிடம் கணக்கிலடங்கா விண்ணப்பங்களை வைக்கிறோம். கிருபை நிறைந்த தேவன் நம் விண்ணப்பங்களை கேட்டு நமக்கு எண்ணிலடங்கா நன்மை களை அருளுகிறார். உலகம் தரக்கூடாத சரீர சுகத்தை, சமாதானத்தை நமக்கு ஆண்டவர் அளிக்கிறார். நன்மைகளை பெற்ற நாம் "அவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து", அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்த வேண்டுமல்லவா.

முடிவுரை :

இயற்கை சீற்றங்களிலிருந்து பாதுகாப்பு, தம்முடைய அளவில்லா கிருபையினால் சரீர சுகம், நம்முடைய பணிகளில் தந்த ஆசீர்வாதம், நம்முடைய குடும்ப வாழ்வில் ஆண்டவர் அருளின நன்மைகள், நம்முடைய வேண்டுதலை கேட்டு ஆண்டவர் கொடுத்த ஆசீர்வாதங்கள் இப்படியாக, ஆண்டவர் செய்த நன்மைகளை எண்ணிப் பார்க்கும்போது நம்மை அறியாமலேயே

"எண்ணிலடங்கா ஸ்தோத்திரம் தேவா"

என்று நம்முடைய உள்ளம் ஸ்தோத்திர கவிபாடுகிறதல்லவா! ஆண்டவரைப் போற்றிப் பாடி அளவில்லா நன்மைகளை பெற்றுக்கொள்ள ஆண்டவர் அருள்புரிவாராக.

அருள்திரு A. ராஜா கிறிஸ்டோபர்
Bishop's Chaplain

அறுப்பின் பண்டிகை

பாடங்கள் : உபா.26:1-11; 2கொரி.9:6-15; லூக்.21:1-4

முன்னுரை :

திருச்சபையில் நாம் முக்கியமான பண்டிகைகளை ஆசரித்து வருகிறோம். இயேசு கிறிஸ்து உலகத்தில் ஓர் மனிதனாக அவதரித்து விட்டார் என்ற நிறைவு பெற்ற நிகழ்வைக் கொண்டாடுகிறோம். இதுபோல, இயேசு கிறிஸ்து உயிர்த்து எழுந்து விட்டார் என்ற நிறைவு பெற்றதை நினைத்து ஈஸ்டர் பண்டிகையை நாம் ஆசரிக்கின்றோம். ஆனால் அறுப்பின் பண்டிகை ஆசரிக்க வேண்டும் என்பதை வேதம் நமக்கு கற்பிக்கிறது. யாத்.23:16இல் அறுப்புக்காலம் முடிந்தபின் அறுப்புக்கால பண்டிகையும், சேர்ப்பு காலம் முடிந்தவுடன் சேர்ப்புக் காலப் பண்டிகையையும் ஆசரிப்பாயாக என்று நமக்கு கட்டளையிடுகிறது. இது முடிவுபெறாத வருஷந்தோறும் கொண்டாடவேண்டிய பண்டிகையாக ஆசரிக்கிறோம்.

1. கர்த்தர் கட்டளையிட்ட ஆசரிப்பு (உபா.26:1-11)

இதை நாம் எப்படி ஆசரிக்க வேண்டும் என்பதை கற்பிக்கும் பகுதி உன்னை உன் அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து வனாந்திர வழியாக வழிநடத்தி இந்த பாலும் தேனும் ஓடும் கானான் தேசத்தில் கொண்டு வந்த கர்த்தரை மறவாமல் இருந்து நீ வந்த தேசத்தில் நல்ல வீடுகளை கட்டி குடியிருந்து உன் நிலத்தில் பயிரிடும் நிலத்தின் கனிகளின் முதல் பலனை எடுத்து ஒரு கூடையிலே வைத்து தேவன் தெரிந்து கொண்டிருக்கும் ஸ்தானத்திற்கு போய் அங்கே இருக்கிற ஆசாரியன் கையிலே கொடு அதை வாங்கி உன்னை ஆசீர்வதிப்பான். உன் சரித்திர வரலாறை. எண்ணி நீயும் ஆசாரியனும் லேவியனும் எல்லோரும் சந்தோஷப்படுங்கள். கர்த்தருக்குள் அருமையானவர்களே நாம் வருடந்தோறும் இதை பண்டிகையை ஆசரித்து சந்தோஷப்படுவோம். என் கைப்பலனும் சாமர்த்தியமும் இதை எனக்கு தரவில்லை. கர்த்தரே தந்தார் என்று மகிழ்ந்து துதிப்போமாக.

2. கர்த்தருக்கு காணிக்கை படைக்கும் நாள் (2கொரி.9:6-15)

தேவன் தம்முடைய குமாரனையே நம்மை மீட்கும்படி காணிக்கையாக தந்தார். மேலே காட்டிய வேதபகுதியில் மக்கத்தோனியோ சபையைப்பற்றி படிக்கிறோம். இவர்கள் மிகுந்த உபத்திரவத்தினால் சோதிக்கப்படுகையில் கொடிய தரித்திரம்

உடையவராய் இருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினால் மிகுந்த உதாரத்துவமாய் கொடுத்தார்கள். திராணிக்கு மேலாகவும் திராணிக்கு மிஞ்சியும் கொடுத்தார்கள். அவசரமாக கட்டாயமாக அல்ல விசனமாயும் இல்லை. தன் மனதில் நியமித்தபடி உற்சாகமாக கொடுக்கக்கடவன். உற்சாகமாக கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். மக்கதோனியா சபையைப் போல நாமும் உற்சாகமாக கொடுத்தால் தேவன் நம்மேல் பிரியமாயிருந்து நம்மையும் ஆசீர்வதிப்பார்.

3. நம்மை அர்ப்பணிப்பதே சிறந்த காணிக்கை (லூக்.21:1-4)

தம்மையே நமக்காக அர்ப்பணித்த ஆண்டவருக்கு எல்லாவற்றை பார்க்கிலும் நம்மை அவருக்கு கொடுப்பதே சிறந்த காணிக்கை. லூக்.21:1-4இல் ஆண்டவர் சுட்டிக் காண்பித்த வசனங்களில் இதை தெரிந்து கொள்ளுகிறோம். ஆண்டவர் தமது ஆலயத்தில் இருக்கிறார். அதிலும் காணிக்கை பெட்டி அருகே உட்கார்ந்து காணிக்கை போடுவதை காண்கிறார். ஏழை விதவை காணிக்கை பெட்டியில் காணிக்கை போடுவதையும் கண்டார். மற்ற எல்லாரையும் விட இவள் அதிகம் போட்டாள். தன் ஜீவனத்திற்கு வைத்திருந்த எல்லாவற்றையும் போட்டு விட்டாள் என்று மெச்சிக் கொண்டார். மனிதன் தன்னை முழுவதுமாக அர்ப்பணிப்பதை விரும்புகிறார். ஓர் பெரிய அறுப்பின் பண்டிகை ஆராதனையில் ஒரு சிறுவன் வந்து தன்னைத் தன்னையாக காணிக்கை படைத்து குருவானவரின் ஆசீர்வாதம் பெற்றான். ஆராதனைக்குப்பின் அவனைக் கேட்டபோது என் வீட்டில் ஒருவரும் பண்டிகைக்கு வரவில்லை. நான் மட்டும் வந்தேன். என்னிடமே கொடுத்து அனுப்பி விட்டார்கள் என்று குறிப்பிட்டான். நமது காணிக்கையைக் காட்டிலும் கர்த்தர் நம்மையே விரும்புகிறார்.

என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசமபாகங்களையெல்லாம் பண்டகசாலையில் கொண்டு வாருங்கள். அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளை திறந்து இடம் கொள்ளாமல் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கப் பண்ணுவேனோ என்று என்னை சோதித்து பாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (மல்.3:10).

கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்.

அருள்திரு ஞா. ஜெபமணி சாமுவேல்
ஆனைகுடி

ஆலயப் பிரதிஷ்டை பண்டிகை

பாடங்கள் : 1இராஜா.8:22-30; 2கொரி.3:9-17; மத்.21:12-16

முன்னுரை :

ஆலயம் என்ற சொல் நமக்குள்ளே பரிசுத்த உணர்வையும், பக்தி விநயத்தையும் ஏற்படுத்தும் ஒரு ஸ்தலமாக எண்ணத் தூண்டுகிறது. ஆலயம் ஓர் பரிசுத்த ஸ்தலம், தேவனுடைய வீடு, இது வானத்தின் வாசல் (சங்.11:4). கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார். பரிசுத்த தேவன் தங்கும் ஸ்தலம் ஆலயம். சங்.84:1 சேனைகளின் கர்த்தாவே, உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள்.

இன்று திருச்சபைகளிலே ஆலயப் பிரதிஷ்டை பண்டிகை மிக விமரிசையாக தானதர்மம் (அசனம்) ஏழைகளை பராமரித்தல் (இலவச வேஷ்டி, சேலைகள் கொடுத்தல்) போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளோடு ஆசரிக்கப்படுவதை காண்கிறோம்.

ஆலயப் பிரதிஷ்டை நாள் (பண்டிகை) இத்தனை விமரிசையுடன் ஆசரிப்பதற்கான காரணங்கள் ஆராய்வோமா. பரிசுத்த ஆலயத்தில் வீற்றிருக்கும் தேவன், ஆலயத்தை நேசிக்கிற தம்முடைய ஜனத்தை அதிகமதிகமாய் ஆசீர்வதித்ததினால் அல்லவா?

பரிசுத்த ஆலயத்தில் இருக்கிற தேவன் எவ்விதங்களில் தமது ஜனத்தை ஆசீர்வதிக்கிறார் என்று சிந்தனை செய்வோம்.

1. ஆலயத்திலே தமது ஜனங்கள் செய்யும் ஜெபத்தைக் கேட்டு அவர்களை ஆசீர்வதிக்கிறார் (1இராஜா.8:28-30)

ஆலயத்தில் வீற்றிருக்கும் தேவன், ஜெபத்தைக் கேட்கிறார். ஆலயப் பிரதிஷ்டை ஜெபத்தில் மன்னன் சாலமோன் ஜெபத்தை கேட்டருளும், அதை நீர் கேட்பீராக. கேட்டு மன்னிப்பீராக என்று விண்ணப்பம் செய்கிறார் (ஏசா.59:1). கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. தாவீது அரசன் சங்.65:2இல் ஜெபத்தை கேட்கிறவரே, என்று நம் தேவனை அழைப்பதை காண்கிறோம். நம் தேவன் ஜெபத்தை கேட்கிறவர். கேட்டு பதிலளிப்பவர், உதவி செய்பவர், விடுதலை அளிப்பவர் ஆசீர்வதிப்பவர்.

1சாமு.1:16இல் அன்னாள் நான் மிகுதியான விசாரத்தினாலும், கிலேசத்தினாலும், இந்நேர மட்டும் விண்ணப்பம் பண்ணினேன்

என்றாள். அன்னாளின் ஜெபத்தை கேட்டார் (1சாமு.1:18). அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை (1சாமு.1:19). கர்த்தர் அவளை நினைத்தருளினார் (1சாமு.1:20). அன்னாள் ஒரு குமாரனைப் பெற்றாள் (1சாமு.1:27) இந்தப் பிள்ளைக்காக விண்ணப்பம் பண்ணினேன். எனக்கு கட்டளையிட்டார் (1சாமு.2:1). என் இருதயம் கர்த்தருக்குள் களி கூருகிறது. என் கொம்பு கர்த்தருக்குள் உயர்ந்திருக்கிறது என்று அன்னாள் களிகூர்ந்ததுபோல, இன்று திருச்சபையிலே திரளான குடும்பங்கள் கர்ப்பத்தின் கனியாகிய நன்மையை ஆலயத்தின் மூலமாய் பெற்று மகிழவில்லையா? உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பேன். நீங்கள் பலுகிப் பெருகுங்கள். உன்னை வர்த்திக்கப் பண்ணுவேன் (சங்.115:14) கர்த்தர் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப் பண்ணுவார். திருச்சபையின் மக்கள் வளர்ந்து பெருக கர்த்தர் கிருபை புரிவாராக.

2. நெருக்கத்திலே உதவி செய்கிற தேவன் ஆலயத்தில் இருந்து நம் ஜெபத்தைக் கேட்டு உதவி செய்கிறார் (2கொரி.4:8)

மன்னன் தாவீதுடைய அனுபவம் இதுவன்றோ? இந்த ஏழை கூப்பிட்டான். கர்த்தர் கேட்டு அவனை அவன் இருக்கண்களுக் கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார் (சங்.34:6). இது என்னுடைய, நம்முடைய உங்களுடைய அனுபவமும் அல்லவா?

அசீரியா தேசத்து ராஜா இவன் அரசனாகிய எசேக்கியாவுக்கு விரோதமாய் வந்தான். எசேக்கியாவுக்கு நிந்தையான ஒரு கடிதத்தை எழுதினான். அவன் கடிதத்தை வாங்கி தேவனுக்கு முன் விரித்து வைத்து ஜெபித்தான் (2இராஜா.19:19). தேவன் தமது தூதனை அனுப்பி 1,85,000 அசீரியரை சங்கரித்தார். அவன் திரும்பி தன் தேசத்திற்கு போனபோது தனது குமாரனால் வெட்டிப் போடப்பட்டான்.

3. ஆலயத்தை நேசிக்கிறவர்களை மகிழ்ச்சியால் நிரப்பி ஆசீர்வதிக்கிறார் :

ஒருவருடைய மகிழ்ச்சியான வாழ்வுக்கு நற்சுகம், பெலன், சமாதானம் இன்றியமையாததாகும். ஆலய வழிபாடுகளில், ஆலய பணிகளில் முழு பிரியத்தோடு பங்கு கொள்ளுகிறவர்களுக்கு, சுக வாழ்வு உண்டு. என்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக (சங்.122:6). ஆலயத்தை நேசிக்கிறவர்களுக்கு புது பெலன்

அருளுவார். உம்மில் பலங்கொள்ளுகிற மனுஷன் பாக்கியவான். கர்த்தருக்கு காத்திருக்கிறவர்கள் புதுப்பெலன் அடைவார்கள். ஆலயத்தை நேசிக்கிறவர்களுக்கு சமாதானம் உண்டு. மனதினிலே சமாதானம் உண்டு. குடும்பத்திலே சமாதானம் உண்டு (சங்.122:7,8). ஆலயத்தை நேசிக்கிறவர்களை நன்மையினால் நிரப்புகிறார் (சங்.122:9).

4. தேவன் தமது ஜனத்தை பரிசுத்தப்படுத்தி ஆசீர்வதிக்கிறார் :

நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி. உன் கால்களில் இருக்கிற பாதரட்சையை கழற்றி போடு. ஆலயம் மனிதனை பரிசுத்தப்படுத்துகிற இடம். தனி மனிதன் தன்னை தேவனுக்கு முன் நிறுத்தி தற்பரிசோதனை செய்யும் இடம். ஆயக்காரன் தன்னை தேவனுக்கு முன் நிறுத்தி தேவனே பாவியாகிய என் மீது கிருபையாய் இரும் என தாழ்த்தி ஜெபித்து நீதிமானாக்கப்பட்டான்.

தேவன் பரிசுத்தர், பரிசுத்த ஆலயத்தில் இருக்கிற தேவன் தாமே தமது ஜனத்தை பரிசுத்தமாக்குகிறார். எல்லாரும் பாவிகள் (ரோ.3:23). நீதிமான் ஒருவனாகிலும் இல்லை (ரோ.3:10). நம்மை பரிசுத்தப்படுத்துகிற தேவன் ஒருவரே. அவர் நம்மை பரிசுத்தப்படுத்தி தமது ஆலயமாக்கி நம்மில் வாசம் பண்ண விரும்புகிறார். அவர் தங்கும் ஸ்தலமாக நம்மில் அவருக்கு இடம் கொடுப்போமா?

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து . . . சுத்திகரிக்கிறார் (1யோவா.1:9). என்னை சுத்திகரியும். என்னை கழுவியருளும் . . . அப்பொழுது சுத்தமாவேன். என நம்மை தாழ்த்தி ஜெபிப்போம்.

உசியா, தேவாலயத்தில் ஐயோ, அதமானேன். நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன் என தன்னை அர்ப்பணித்த வண்ணமாய் நாம் நம்மை அர்ப்பணம் செய்வோம். தேவன் நம்மில் தங்கி நம்மை தம்முடைய பரிசுத்த ஆலயமாக்கி நம்மை மகிழப்பண்ணுவாராக.

நீங்களே அந்த ஆலயம் (1கொரி.3:17). தேவனுடைய ஆலயப் பிரதிஷ்டையைச் சந்தோஷமாய் கொண்டாடினார்கள் (எஸ்றா 6:16).

அருள்திரு சி. பொன்மனுவேல்

* * * * *

எக்காளப் பண்டிகை

பாடம் : 2இராஜா.7:1-16

முன்னுரை :

ஒவ்வொரு சமயத்தவருக்கும் வாழ்க்கையில் இன்றியமையாத கடமைகள் உண்டு. கிறிஸ்தவர்களைப் பொறுத்த வரையில் நற்செய்திப் பணியே அவர்களின் தலையாயக் கடமை. நற்செய்தி என்னும் அஸ்திப்பாரத்தில் தான் திருச்சபை நிற்கிறது. திருச்சபையின் வளர்ச்சியும் விரிவாக்கமும், நற்செய்தியை அறிவிப்பதிலேயே அடங்கி இருக்கிறது. இயேசுகிறிஸ்து நமக்கு கொடுத்த கட்டளையும் அதுதான். நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் (மாற்.16:15). இந்தக் கட்டளை ஒரு சிலருக்கு மட்டுமல்ல. எல்லாருக்கும் ஆண்டவர் கொடுத்த கட்டளை. ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஒரு நற்செய்தியாளராக செயல்பட அழைக்கப்பட்டிருக்கிறோம்.

கொடுக்கப்பட்டிருக்கின்ற திருமறைப்பகுதி நற்செய்தி அறிவித்தலின் முக்கியத்துவத்தை விளக்குகிறது. சீரிய ராஜாவாகிய பெனாதாத் சமாரியாவை முற்றுகையிட்டான். (2இராஜா.6:24) இதனால் நாட்டில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. சொந்தக் குழந்தைகளை சமைத்து சாப்பிடுகின்ற அளவுக்கு நாட்டில் பஞ்சம் தலை விரித்தாடியது. ராஜா மிகவும் கலங்கினான். எப்படி தன்னையும், தன் நாட்டு மக்களையும் காப்பாற்றுவது என்று எண்ணினான். அந்நேரத்தில் எலிசா நாளை இந்நேரத்தில் சமாரியாவின் வாசலிலே ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும், இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் விற்கப்படும் என்றான். அச்சமயத்தில் குஷ்டரோகிகளான நான்கு பேர் ஒலிமுகவாசலில் இருந்தார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி நாம் இங்கே இருந்து சாகவேண்டியது என்ன? பட்டணத்திற்குள் போவோமென்றாலும் பட்டணத்தில் பஞ்சம் உண்டாயிருக்கிறதினால் அங்கே சாவோம். நாம் இங்கே இருந்தாலும் சாவோம். ஆகையால் நாம் சீரியருடைய இராணுவத்திற்குள் போவோம் என தீர்மானம் பண்ணி சென்றார்கள். சீரியருடைய பாளயத்தின் முன்னணியில் வந்தபோது அங்கே ஒருவரும் இல்லை, ஆண்டவர் சீரியரின் இராணுவத்தையும் வீரர்களையும் பிராணன் மாத்திரம் தப்பும்படி ஓடச் செய்தார். தங்கள் கூடாரங்களையும், கழுதைகளையும், குதிரைகளையும், தங்கள் பாளயத்தையும் அப்படியே விட்டுச் சென்றார்கள், குஷ்டரோகிகள் நான்கு பேரும் பாளயத்தின் முன்னணியில் உள்ள ஒரு கூடாரத்திற்குள் பிரவேசித்து புசித்துக் குடித்து அதிலிருந்த வெள்ளியையும், பொன்னையும் வஸ்திரங்களையும் எடுத்துக்

கொண்டு போய் ஒளித்து வைத்தார்கள். பின்பு அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி நாம் செய்கிறது நியாயமல்ல. இந்நாள் நற்செய்தி அறிவிக்கும்நாள் நாளைபொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும் என்று சொல்லி இருட்டோடு புறப்பட்டு இராஜாவின் அரமணையாருக்குச் சென்று தாங்கள் கண்ட நற்செய்தியை அறிவித்தார்கள்.

1. நற்செய்தி ஏன் அறிவிக்கப்பட வேண்டும் :

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக பாவத்தில் வாழ்ந்த மனிதன் பரிசுத்தமான வாழ்வு பெற வேண்டும் என்பதற்காக இறைமைந்தன் இயேசு கிறிஸ்து தன்னை கல்வாரிச் சிலுவையில் பலியாக ஒப்புக் கொடுத்தார். அவரின் அன்பு கட்டளை நற்செய்தி அறிவிப்பது. எனவே இந்நாட்களில் அவருடைய அன்பினால் தெரிந்தெடுக்கப்பட்ட நாம் உன்னத பணிக்காக தெரிந்தெடுக்கப்பட்ட நாம் நற்செய்தி பணி செய்ய அழைக்கப் பட்டிருக்கிறோம். ஆதிகால மிஷனெரிகள் பலருடைய தியாக சிந்தையால் கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொண்ட நாம் அறியாத மக்களுக்கு அறிவிக்கும் பணியைச் செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோம். நம் இந்திய நாட்டில் எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள் ஒவ்வொரு நாளும் இருளின் பாதைக்கு சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஒளியின் பாதைக்கு அழைத்து வர இயேசு கிறிஸ்துவின் அன்பினால் மட்டுமே முடியும். எனவே அந்த மக்களும் இயேசுவின் அன்பை அறிந்து கொள்ள நற்செய்தி அவசியமாகிறது. வில்லியம் கேரி அவர்கள் இழ்விதமாக சொல்கிறார். "ஒவ்வொரு கிறிஸ்தவனும் இரவு படுக்கைக்கு செல்வதற்கு முன் நான் இந்த நாளில் எத்தனை பேருக்கு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்தேன்" என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கூறுகிறார். பவுல் சொல்கிறார் "சுவிசேஷத்தை பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ! அது என் மேல் விழுந்த கடமை" என்கிறார் (1கொரி.9:16). இன்றைய காலத்தில் நற்செய்தி அறிவிப்பது அவசியமானதாகும். நற்செய்தி பணிக்காக அழைக்கப்பட்டிருக்கிறோம்.

2. நற்செய்தி அறிவிப்பதில் நமது பங்கு :

ஏசாய தீர்க்கதரிசி சொல்லுகிறார். "யாரை நான் அனுப்புவேன் யார் எனது காரியமாய் போவார், என்ற ஆண்டவரின் அறைகூவலுக்கு ஏசாயா தீர்க்கதரிசி என்னை அனுப்பும். இதோ, அடியேன் போகிறேன்" என்று சொல்லி தன்னை அர்ப்பணித்தார் (ஏசா.7:8). இங்கிலாந்து நாட்டிலே சிறந்த செல்வக் குடும்பத்தில் பிறந்து இங்கிலாந்து கேம்பிரிட்ச் பல்கலைக் கழகத்தில் முதல் மாணவனாக தேர்வு பெற்ற கனம் ரேக்லண்ட் துரை அவர்கள் தமிழ்நாட்டில்

சிவகாசியின் மக்கள் இயேசுவின் நற்செய்தியை அறிந்திட காரணமாயிருந்தார். நமது வாழ்க்கையை சிந்தித்துப் பார்ப்போம்? கிறிஸ்துவின் நற்செய்தி பணிக்காக நான் என்ன செய்திருக்கிறேன்? சிந்திப்போம். ஆண்டவர் நமது வாழ்விலும் ஒவ்வொரு நோக்கத்திற்காக அழைத்து இருக்கிறார். அவரின் அன்பு கட்டளையாகிய நற்செய்தி அறிவிப்பது நமது தலையாய கடமையாகும். இதற்காகவே நாம் அழைக்கப்பட்டு இருக்கிறோம்? பரி.பவுல் சொல்கிறார் ஆண்டவரின் நற்செய்தி பணிக்காக எல்லாவற்றையும் நிறைவேற்றி முடித்தவராய் மகிழ்ச்சியோடு தன் வாழ்வின் இறுதியில் சொல்கிறார் "நல்ல போராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" என்பதாக சொல்கிறார். நமது வாழ்வில் ஆண்டவர் எதிர்பார்க்கும் நற்செய்திப் பணியில் நம்முடைய பங்கை நிறைவேற்றியிருக்கிறோமா? சிந்திப்போம். நற்செய்தி பணி அறிவிக்க நம்மை அர்ப்பணிப்போம். அழைப்பை நிறைவேற்றுவோம்.

முடிவுரை :

ஆதி கால மிஷனெரிமார்களின் தியாகத்தால் இயேசுவின் அன்பை அறிந்து கொண்ட நாம் அறியாத பிற மக்களுக்கு அறிவிக்கும் பணி செய்ய அழைக்கப்பட்டு இருக்கிறோம். பரி.மத்.10:32இல் இவ்விதமாக சொல்லப்படுகிறது. மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவுக்கு முன்பாக அறிக்கை பண்ணுவேன்" என்பதாக ஆண்டவர் சொல்லுகிறார். அந்த நான்கு குஷ்டரோகிகளும் தங்களது சுய நலத்தை பெரிதாக எண்ணாமல் தங்கள் கண்ட நற்செய்தியை நாட்டிலுள்ள அனைவரும் அறிந்து பயனடைய காரணமாயிருந்தார்கள். அதுபோல நாமும் நம் மூலம் ஆண்டவரின் நாமம் பரசிமைப்பட நற்செய்தி பணியை அறிவிக்க அர்ப்பணிப்போம். பாவத்தில் வாழ்கின்ற மக்கள் பரிசுத்தமாய் வாழ வழி செய்வோம். ஆண்டவர் நம்மில் எதிர்பார்க்கும் அவரின் அன்பு கட்டளையாகிய நற்செய்தியை அறிவிப்பது நமது வாழ்வின் இலட்சியமாக வைத்து செயல்படுவோம். அழிந்து போகின்ற ஆத்துமாக்களை கிறிஸ்துவின் மந்தையில் சேர பணி செய்வோம், இந்தியாவை இயேசுவுக்கு சொந்தமாக மாற்றுவோமாக!

அருள்திரு A. சாமுவேல்
யாக்கோபுபுரம்

* * * * *

இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து
என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும்,
.... நித்தியஜீவனை அடையும்படியாகவும்,
இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.

யோவான் 20:31

DIOCESAN OFFSET PRESS, Palai. Ph : 2573182